

'பெரியவர்'
பி.ஏ.எஸ். நினைவு மலர்
(22-01-2013)
புன்செய்ப் புளியம்பட்டி
வெளியீடு
பி.ஏ.எஸ். அறக்கட்டளை, புன்செய்ப் புளியம்பட்டி



'சாதனைச் செம்மல்' பெரியவர் **பி.ஏ. சாமிநாதன்** Ex.M.P.,



‘பெரியவர்’

பி.ஏ.எஸ். நினைவு மலர்

(22-01-2013)

புன்செய்ப் புளியம்பட்டி

தொடர்பு முகவரி :

பி.ஏ.எஸ். நினைவு மலர்க்குழு

12/3, மறைமலையடிகள் தெரு

புன்செய்ப் புளியம்பட்டி - *638 459*

ஈரோடு மாவட்டம்.

அலைபேசி : ***99421 56935***

அன்புடன்
A. சோமசுந்தரன்,
புன்செய்புளியம்பட்டி

பெரியவர் பி.ஏ.எஸ். நினைவு மலர்

22-01-2013
புன்செய்ப் புளியம்பட்டி

மலர் வடிவமைப்பு

புலவர் கி. தங்கவேலு எம்.ஏ.,எம்.எட்.,எம்.பில்.,
ஜீனோ ப. நடராசன், புளியம்பட்டி

மலர்க்குழு

தலைவர் :

புலவர் கி. தங்கவேலு எம்.ஏ.,எம்.எட்.,எம்.பில்.,

உறுப்பினர்கள் :

பு.சா. அன்பு பி.எஸ்.,எம்.பி.ஏ.,
புலவர் கா. இளமுருகன் எம்.ஏ.,எம்.எட்.,
புலவர் செ.கி. இளங்கோவன் எம்.ஏ.,எம்.எட்.,எம்.பில்.,
புலவர் இராம. சுப்பிரமணியன் எம்.ஏ.,எம்.எட்.,

கணினி வரைகலையும், தட்டச்சும்

ஜீனோ ப. நடராசன், புளியம்பட்டி

அச்சாக்கம்

சௌமி அச்சகம், சரவணம்பட்டி - கோவை

வெளியீடு

பி.ஏ.எஸ். அறக்கட்டளை, புளியம்பட்டி



‘சாதனைச் செம்மல்’ சாமிநாதன்...

“தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று” (திருக்குறள் -236)

என்னும் திருவள்ளுவப் பெருந்தகையின் பொய்யா மொழிக்கேற்பப் புகழொடு தோன்றிய புண்ணியன் புளியம்பட்டி சாமிநாதன்.

நாம் பெற்றபேற்றின் பயனால், நம் நகர்ப் பிறந்த நல்லோன்.

நாம் பெற்றபேற்றின் பயனால், தந்தை ஆறுமுகனார்க்கும் தாயார் அரங்கத்தம்மைக்கும் தனியொரு மகனாகத் தோன்றினார்.

மகன் தன்னைச் சான்றோனெனக் கேட்டுவந்தாள் தாய் அரங்கத்தம்மை. மகனை, அவையத்து முந்தியிருத்தித் தம்மினும் உயர்ந்தோனாக்கி மகிழ்ந்தார் தந்தை ஆறுமுகனார்.

தமிழ்க்குலம் தழைக்க வந்த தலைமகன் எங்கள் தலைவன், ஒருங்கிணைந்த கோவை மாவட்டத்துக் கோபி வட்டத்தில், 15-01-1932-இல் புன்செய்ப் புளியம்பட்டியில் நம் அண்ணன் பிறந்து வளர்ந்தார்.

நாடாளுமன்றம் காண வந்த சீராளச் செல்வனுக்குச் சாமிநாதனெனும் பெயர் சூட்டி அழைத்து மகிழ்ந்தனர் பெற்றோரும் மற்றோரும்.

கருவிலே திருவுடைய செல்வன் பள்ளியிறுதி வகுப்பு வரை படித்துத் தேறினன். படிக்கும் நாளிலேயே பேரும் புகழும் பெற்று, அண்ணாவின் இனிய இசை மொழி கேட்டு, அன்றே அவர்பால் தனையீந்தான்.

பைந்தமிழ் நாட்டின் பாட்டுடைத் தலைவன் பாசமிகு அண்ணனின் ஆசைமிகு தம்பியாயினன்.

நாட்டுணர்வும், மொழியுணர்வும் நாளும் வளர்ந்தது.



இடையில் 1950-1951-இல் கோ-ஆப் டெக்க' என்னும் கூட்டுறவு நிறுவனத்தில் பணியில் அமர்ந்தார்.

இதனால், தடைபடுமோ தன் மொழியுணர்வு என விடைகொடுத்தார் அவ்வேலைக்கே.

நாடு தழுவிய வேளாண் போராட்டம் நடந்த காலத்திலே, அண்ணனின் அறிவார்ந்த துணிவுக்கு ஒரு சான்று - எங்கள் நகரிலே நடந்தது. சுற்றுப் புறத்திலுள்ள பல்வேறு கிராமங்களைச் சேர்ந்த உழவர்கள் ஆயிரக்கணக்கில் திரண்டு மிகப் பெரிய ஊர்வலமாக நகரின் முக்கிய வீதிக்கு வந்து விட்டனர்.

நகர் முழுவதும் தடைச் சட்டம்; காவல் துறையினர், வந்த ஊர்வலத்தைத் தடுத்து நிறுத்தினர்; அவர்கள் தடையை மீறிச் செல்ல முனைந்தனர்.

கண்ணீர்ப் புகை, துப்பாக்கிச் சூடு நடைபெற்றிருந்தாலும் வியப்படைவதற்கில்லை!

அந்தச் சூழ்நிலையில் நாங்களெல்லாம் தடுத்தும், நம் தானைத் தலைவன் நடுக் கூட்டத்தில், அஃதாவது ஊர்வலத்தார் ஒரு புறமும் காவல் துறையினர் ஒரு புறமும் நிற்கும் கூட்டத்தின் நடுவில் நின்று கொண்டு, அதிகாரிளையும், உழவர்களையும் சமரசப்படுத்தி, அமைதியாக ஊர்வலம் நடத்த அதிகாரிகளிடம் இசைவும் வாங்கித் தந்தார்.

எதிர்பாராமல் ஏதாவது நடந்திருந்தால் நிலைமை என்னவாகியிருக்கும் என்பதை இன்று நினைக்கினும் நெஞ்சம் நடுங்குகிறது. அமைதியோடு அண்ணன் செய்த திறமிக்க செயல் என்றும் நினைக்கற் பாலது.

கோபி வட்டத்துச் செயலாளராக இருந்த அண்ணன், கழகத்தின் நீண்ட நாளைய பொதுக்குழு உறுப்பினர்; பிறகு கோவை மாவட்டத்துச் செயலாளராகப் பொறுப் பேற்றுக் கழகப் பணியைக் கண்ணெனப் போற்றிக் கடமையாற்றிவர்.

அண்ணனின் அரும்புகழ், பெருமைகளையெல்லாம் சிறப்புடன் கூறிடும் இந்நன்னாளில், ஆருயிர்த் தலைவனின் இன்ப துன்பங்கள் அத்தனைக்கும் தோன்றாத் துணையாய் நின்றிலங்கும் எங்கள் அன்புத் தெய்வம், தமிழ்க்குலம் தழைக்க வந்த தாய்க்குல மணிவிளக்கு அண்ணியார் சம்பூரணம் அவர்களை நினைவுகூர்ந்து போற்றிப் பாராட்டுதல் எங்கள் கடமையாகும்.

"குடநீர் அட் டுண்ணும் இடுக்கட் பொழுதும்
கடல்நீர் அறவுண்ணும் கேளிர் வரினும்
கடன் நீர்மை கையாறாக் கொள்ளும் மடமொழி
மாதர் மனையாட்டி யாள்"

என்னும் நாலடியாரின் அருள்வாக்கின் திருவுருவாயமைந்த சம்பூரண அண்ணியார் எங்கள் கழகத் தாய்வீடாம் அண்ணனின் தன் வீடு காக்க வந்த தமிழ் மகள்.



அவர்கள் தலைமையில் திருமணம் இருவர்க்கும் இனிதே நடந்தது.

அன்பும் அறனுமுடைத்தான இவர்கள் இல்வாழ்க்கையெனும் மலர்ச் சோலையில் மலர்ந்த நன் மலர்கள் நால்வர். இராணி, வெற்றிச்செல்வி, மணிமேகலை, அன்பு யெனக் கனிமுத்துச் செல்வங்கள் அன்புருவாய இணையர் பெற்ற அருஞ்செல்வங்கள் நால்வர்.

அமிழ்தினுமினிய மழலை பயிற்றிடும் தங்கங்கள், எதிர்வரும் நாள்களிலும் இவர் புகழ் பரப்பி உலகம் உவப்ப வாழ்வாங்கு வாழ்வா ரென்பது திண்ணம்.

"இன்ன றுங்கனிச் சோலைகள் செய்தல்
இனிய நீர்த்தண் சுனைகள் இயற்றல்
அன்னச் சத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம்பதி னாயிரம் நாட்டல்
பின்ன ருள்ள தருமங்கள் யாவும்
பெயர்வி ளங்கி யொளிர நிறுத்தல்
அன்ன யாவினும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக் கெழுத்தறி வித்தல்"

என்ற 'பாட்டுக்கொரு புலவன்' பாரதியின் கனவுப் பாடலுக்கு, நனவாகிக் காட்சிதரும் நம் அண்ணன் கழகத்தோழர் நாராயணசாமி அவர்களின் மகன் சம்பத்து அவர்களை, தன் சொந்தச் செலவில், ஈரோடு வாசவி கலைக்கல்லூரியிற் சேர்த்து, புகுமுக வகுப்பு வரை, கல்லூரியில் படிக்க வைத்ததும், கூட்டுறவு மேற்பார்வையாளர் பயிற்சியில் (இராமலிங்கக் கூட்டுறவுப் பயிற்சிக்கூடம்) கோவையிற் சேர்த்துப் படிக்க வைத்தும், நகரிலுள்ள கைத்தறிக் கூட்டுறவுச் சங்கத்தில் வேலையும் வாங்கித் தந்துள்ளார்.

கழகத் தோழர் அங்காமி அவர்களின் மகள் செல்வி இராதாமணியை, ஆசிரியைப் பயிற்சிப் பள்ளியில் படித்துத் தேறப் பல வகையில் உதவி புரிந்துள்ளார்.

கழகத் தோழர் திம்மையன் அவர்களின் மகன் பழனிச்சாமி அவர்களை, கோபி கலைக் கல்லூரியிற் சேர்த்து, புகுமுக வகுப்பில் படிக்க வைத்துக் கோவைக் கலைக் கல்லூரியில் பட்ட வகுப்பிற் சேர்த்துப் படிக்க வைத்தவர்.

இவர், கழகத்து ஏழைக் குடும்பங்களுக்கும், மாணவச் செல்வங்கட்கும் கணக்கிலடங்கா உதவிகளைக் கைம்மாறு கருதாமல் செய்து ஈத்துவக்கும் இன்பங்கண்டவர்.

இவர்தம் ஆற்றலும் திறனும் தெரிந்த கழகத் தலைவர் கலைஞர் 1975 டிசம்பரில் தாம் ஆட்சிக்கு வந்த பிறகு - நல்லதோர் எழுச்சிமிக்க 5-ஆம் மாநில மாநாட்டினை நடத்த - ஈரோடு பிரியாத கோவை மாவட்டச் செயலாளராக இருக்கும் பொழுது வாய்ப்புத் தந்தார். இது கழகம் ஆட்சிக்கு வந்த பிறகு, கலைஞர் முதல்வராக இருக்கும் பொழுது நடைபெற்ற முதல் மாநில மாநாடு.

இம் மாநாட்டினை ... மூன்று மாதங்கள் நன்கு திட்டமிடப்பட்டு எங்கும் யாரும் காணாத வகையில் - மூன்று மாதங்கள் நன்கு திட்டமிடப்பட்டு பசிபாராமல் - கண்துஞ்சாமல் உழைத்துச் செயல்படுத்தியதுடன் - இம்மாநாட்டுக்கு சிறந்தோர் வரவேற்புரையினையும் நல்கினார். இம் மாநாட்டின் எழுச்சிக்கு பிறகுதான் புளியம்பட்டி என்றால் 'பெரியவர்' பி.ஏ.எஸ். என்னும் நிலை உருவானது என்பதே உண்மை!

இம்மலரில் 10-ஆம் பக்கத்தில் தம் வாழ்த்துரையில் கழகப் பொது செயலாளர் க. அன்பழகன் அவர்கள் 'புளியம்பட்டிச் சாமிநாதன்' என்று பேரறிஞர் அண்ணா அவர்களால் பாசத்தோடு அழைக்கப்பெற்ற அன்பு நண்பர் என்று தலைவரின் உள்ளன்பு நிலையினைச் சுட்டியுள்ளார்.

இம்மலரில், தம் வாழ்த்துரையில் சென்னை அண்ணாநகர் இரா. செழியன் அவர்கள், பெரியவர் பி.ஏ.எஸ். அவர்கள் ஒருங்கிணைந்த கோவை மாவட்டச் செயலாளராக இருந்து ஆற்றிய பணிகளை நினைவுகூர்ந்து - எந்தச் செயலை எடுத்துக் கொண்டாலும் செப்பமாகச் செய்து முடிக்கும் தனித்திறன் பெற்றவர் என்றும் புன்செய்ப் புளியம்பட்டி உள்ளளவும் இவர் பெயர் நிலைபெறும் என்றும் உண்மை நிலையினைச் சுட்டியுள்ளார்.

இந்தியக் கம்யூனிஸ்ட் (மார்க்ஸிஸ்ட்) கட்சியின் சத்தி வட்டச் செயலர் க.இரா.திருத்தணிகாசலம் அவர்கள் தம் கட்டுரையில் பெரியவர் பி.ஏ.எஸ். அவர்கள், மிசாக் கைதியாகக் கோவை சிறையிலிருந்த காலத்தில் - அவர்தம் துணைவியார் சம்பூர்ணம் சாமிநாதன் அவர்கள் கட்சியினர் குடும்பத்தை நம் குடும்பம்போல் கவனித்துக் கொண்டு, கொங்கு மண்டலத் தி.மு.கழகத்தின் இதயமாகச் செயல்பட்டதைத் தலைவர் கலைஞர் அவர்களே வியந்து போற்றியதைச் சுட்டியுள்ளார்கள்.

சம்பூர்ணம் சாமிநாதன் அவர்கள் இம்மலர்க் கட்டுரையாளர்களில் பலரும் சுட்டாத - தன் கணவரும், தானும் கண்டு கேட்டுணர்ந்த பல செய்திகளை விரிவாக விளக்கியுள்ளமை இம்மலரின் தனிச் சிறப்பாகும். மிசாக் காலத்தில் எப்படியெல்லாம் இன்னல்களைச் சந்தித்து - எதிர்நீச்சலிட்டோம் என்பதை நெஞ்சம் தொடும் வகையில் செப்பமாகச் சுட்டியுள்ளார்.

'கொங்கு மண்டலத் தளபதி' என்னும் தலைப்பில் கோவை - மு. இராமநாதன் அவர்கள் மிக விரிவாகப் பல்வகையில் நினைவு கூர்ந்துள்ளார்கள். அவர்தம் பேச்சுப் போலவே 'தென்றலாக'ப் பல இடங்களில் இரண்டறக் கலந்துகொண்டு இறுதிக் காலத்திலும் நாளும் மருத்துவமனைக்குச் சென்று துன்பிலும் பங்குகொண்ட நண்பின் மேன்மையை நினைவு கூர்ந்துள்ளார்.

மேலும் கவிதை வடிவில் 15 பேர் நெஞ்சங்கலந்து தம் உணர்வுகளைப் பகிர்ந்து கொண்டதில் புலவர் சம்மு அவர்களும், சகுந்தலை சண்முகம், ...

கொள்ளை கொள்ளுமாறு யாத்துள்ளனர்.

மேலும் இம்மலரின் மணிமகுடமாக - இமயச் சிகரமாகச் - சிறப்புப் பகுதியாக இறுதியில் அமைந்துள்ள பகுதி - பெரியவர் பி.ஏ. சாமிநாதன் - திருமதி. சம்பூர்ணம் சாமிநாதன் அவர்களின் மணிவிழாவின்போது (1992-இல்), புலவர் பண்ணன் அவர்களால் எழுதி வெளியிடப்பெற்ற **"தொண்டின் வடிவம் எங்கள் சாமி"** என்னும் அரிய நூலிலிருந்து தொகுக்கப்பெற்ற 67 பக்கங்கள் - இந்நினைவு மலர் என்றும் புலராது நின்று அலர்ந்து நாளும் மணம் வீசும் நீர்மையவாம்.

இந்நினைவு மலர், சிறப்புக்கருதி வெளி விளம்பரங்கள் ஏதுமில்லாமல் மணக்கும் நன் மலராகும்! இத்தகைய அற்புத நன்மலரின் இதழ்களை, மலர்க் குழுவினர் அரிதின்முயன்று தொகுத்துள்ளனர். தவிரப் பி.ஏ.எஸ். அவர்களின் 60 ஆண்டுகால உழைப்பினை, நிழல் உருவமாகவும் காட்டும் வகையில், 25 பக்கங்களில் விளக்கங்களுடன் கூடிய நிழற்படங்களையும் அமைத்துள்ளோம்.

இத்தகைய அரியமலர் மணக்கும் வகையில் அவ்வப்பொழுது உறுதுணையாக இருந்து மெய்ப்புப் (Proof) பார்த்தும், மலர் வடிவமைப்பு முறையில் சிறக்கவும், வடவள்ளி திருமிகு. மு.கு. நடராசன், திருமிகு. ந. செந்தில்பிரபு மற்றும் புதுச்சூரிபாளையம் **புலவர் சண்முகம்** ஆகியோர் மலர்க்குழுவினருடன் நன்கு ஒத்துழைப்பு நல்கினமைக்கும், தட்டச்சிலும், கணினி வரைகலையிலும், முழுமையாக - உறுதுணையாக நின்றுழைத்த புளியம்பட்டி **ஜீனோ ப. நடராசன்** அவர்களுக்கும் நெஞ்சம் நெகிழ்ந்த அன்பு!

மேற்காண் அன்பர்களின் சிறந்த ஊழப்பில் உருவான இத்தகைய அற்புத மலரை, எங்களின் எண்ணங்கட்கு ஏற்ப, கோவை - சர்வோதயம் - **வி.பி. தண்டாயுதம்** அவர்களின் வழிகாட்டுதலில் அச்சிட்டுக் கொடுத்த கோவை - சரவணம்பட்டி - **சௌமி அச்சகத்தார்க்கும்** எங்களின் நெஞ்சார்ந்த அன்பு!

எந்நிலை வந்தாலும், ஏதிடர்ப்பட்டாலும் பெரியவர் பி.ஏ.எஸ். **அவர்களின் நினைவுகளே** எங்களின் குறிக்கோள் என்று நீளநினைந்து, என்றும் அவரின் நினைவுகளைச் செயலாக்குவதே **அன்புருவாம் அண்ணனுக்கு** நாம் செய்யும் கைம்மாறாகும்.

நாளும் வளர்க அவர்தம் சாதனை நினைவுகள்!

வாழ்க அவர்தம் புகழ்!

22-01-2013
புன்செய்ப் புளியம்பட்டி

நினைவு மலர்
வெளியீட்டுக் குழுவினர்




1.	மலர் முகம்	மலர்க் குழுவினர்
2.	வாழ்த்துகள்	க. அன்பழகன்
		இரா. செழியன்
		மு. கண்ணப்பன்
	அன்பர்கள் நெஞ்சில் பி.ஏ.எஸ்.	
3.	சமூகத் தொண்டால் உயர்ந்த பி.ஏ.எஸ்.	க. அன்பழகன்
4.	[illegible]	சி. சிட்டிபாபு
5.	நன்றிக் கடன்	க.இரா. திருத்தணிகாசலம்
6.	புளியம்பட்டி - சாமிநாதன்	செ. அரங்கநாயகம்
7.	வாழ்க பி.ஏ.எஸ். புகழ்	பரமத்தி சண்முகம்
8.	தி.மு.கழக 5-ஆவது பொது மாநில மாநாடு	பி.ஏ.எஸ். வரவேற்புரை
9.	பி.ஏ.எஸ். - சம்பூரணம் - குடும்ப வரலாறு	சம்பூரணம் சாமிநாதன்
10.	பெரியவர் 'பி.ஏ.எஸ்.' ஒரு சகாப்தம்	பி.எஸ். அன்பு
11.	'கொள்கை வீரர்' புளியம்பட்டி சாமிநாதன்	பேராசிரியர் முனைவர் [illegible]
12.	வாழ்வுதந்த வள்ளலுக்கு எங்கள் நினைவு அஞ்சலி	டாக்டர் ப. சண்முகம்
13.	பெரியவர் பு.ஆ. சாமிநாதனும் மறைமலையடிகள் மன்றமும்	மறைமலையடிகள் மன்றம்
14.	பேரறிஞர் அண்ணாவைக் கவர்ந்த சாதனைச் செம்மல்	புலவர் கி. தங்கவேலு
15.	A Legend of the Dravidian Movement	Prof. T.K. ராஜா
16.	My Dear Grandpa	R. Keerthana
17.	நினைவுகள்...	பி.எஸ். சீத்தாராமன்
18.	எளியவரின் ஒளிவிளக்கு	ந. விசுவநாதன்
19.	'கொங்கு மண்டலத் தளபதி' பி.ஏ. சாமிநாதன்	கோவை மு. இராமநாதன்
20.	அண்ணன்	ஓ. ஆறுமுகசாமி
21.	அவருக்கு நிகர் அவரே	பி.எஸ். ரங்கசாமி
22.	செயல்வீரர் பி.ஏ.எஸ். அவர்கள்	விஜயா இளங்கோவன்
23.	இளவல் பி.ஏ.எஸ். அவர்களின் நீங்கா நினைவுகள்	பி.கே. வெள்ளியங்கிரி
24.	[illegible] ஒரு சகாப்தம்	சம்பா (எ) எஸ்.ஆர். கிருட்டிணமூர்த்தி
25.	தூய தொண்டர்	கருப்பூர் மு. அண்ணாமலை
26.	நன்றி பாராட்டும் நினைவு மலர் வணக்கம்	மா. கார்த்தியாயினி
27.	புளியம்பட்டியும் பெரியவர் பி.ஏ.எஸ். அவர்களும்	முனைவர் கே.ஆர். [illegible]
28.	சாதனையாளர் [illegible]	மா. சுப்பிரமணியன்
29.	மறக்க முடியுமா?	அ. வெற்றிவேல்
30.	நட்பின் இலக்கணம் பி.ஏ.எஸ்.	காடம்பட்டி கந்தசாமி

மலரின் இதழ்கள்

31.	மச்சான்	டாக்டர் எம். செந்தில்நாதன்	137
32.	பன்முகப் பகுத்தறிவாளர் திரு. பி.ஏ.எஸ்.	சொ. கொண்டப்பன்	139
33.	அரசூர்ப் பகுதியில் பி.ஏ.எஸ். ஆற்றிய அரும்பணிகள்	அரசூர்ப் பொதுமக்கள்	142
34.	பொதுநலத் தொண்டர் பி.ஏ.எஸ்.	கே. சோமசுந்தரம்	144
35.	பி.ஏ. சாமிநாதன் அவர்களின் கல்விப்பணிகள்	தமிழன்னை கல்வி அறக்கட்டளை	146
36.	மனிதன் என்பவன் தெய்வமாகலாம்	மரு. சாமிநாதன் ராணி	149
37.	அன்பின் உருவம் எங்கள் அப்பா!	மணிமேகலை முருகேசன்	150
38.	நினைவலைகள்...	புலவர் கிருட்டிணன்	152
39.	பெரியார், அண்ணா வழியில் பெரியவர் பி.ஏ.எஸ்.	வெ. குமாரராஜா	155
40.	உண்மைத் தொண்டன்	வீ. செந்தில்வேல்	160
41.	புதிய பாதை	மு.மா. சண்முகசுந்தரம்	161
42.	அண்ணன் சாமிநாதன் புகழ் ஓங்குக!	கோவை எம். வீரகோபால்	165
43.	வளர்க பெரியவரின் நெடும்புகழ்!	பி.எஸ். ஜெயராமன்	168
44.	போற்றுதலுக்குரிய பெரியவர்	கி. சிவலிங்கம்	170
45.	நான் கண்ட பெரியவர்	பு.கா. அலாவுதீன்	172
கவிதைகள்			
46.	கண்ணில்லாக் கடுங்கூற்றே!	சகுந்தலை சண்முகம்	175
47.	என்று காண்போம் இனி?	புலவர் சம்மு	176
48.	முத்திரைகள் எத்தனையோ!	செ.சு. பழனிசாமி	178
49.	வண்ணமிகு உன் வாய்மை கண்டு	முனைவர் பு.ரா. இராமசாமி	180
50.	அன்பின் மறுவடிவம்	மாணிக்கம் அர்த்தனாரி	181
51.	என்றும் வாழ்வார்	இரா. காளியண்ணன்	182
52.	தங்கக் கலசம்	புலவர் அ. கணேசன்	184
53.	சாமிநாதன் ஆற்றுப்படை	புலவர் சம்மு	185
54.	கண்ணீர்ப் பூக்களால் இதய அஞ்சலி!	அ. அம்பலவாணன், அ. தெய்வநாயகி	188
55.	தண்ணீர் தந்த தலைவனுக்குக் கண்ணீர் அஞ்சலி!	கௌசல்யா ராஜகாந்தன்	190
56.	அன்புருவாம் எந்தை	வெற்றிச் செல்வி	192
57.	அன்புள்ள தாத்தாவுக்கு	மு. யாமினி	194
58.	வாழ்த்துப்பா	காந்திநகர் பொதுமக்கள்	195
59.	சாதனையின் சங்கமே! சரித்திர நாயகனே! வாழியவே!	கோவை ப.கோ. குமார்	197
60.	மறைந்தும் மறையாத மண்ணின் மைந்தன்	கவிஞர் தூரிகை	199
		புலவர் பண்ணன்	202
	'தொண்டின் வடிவம் எங்கள் சாமி' – தொகுப்பு	மலர்க் குழுவினர்	270
	சாதனைச் செம்மல் – பெரியவர் 'பி.ஏ.எஸ்.' வாழ்க்கைக் குறிப்பு		274
	பி.ஏ.எஸ். அறக்கட்டளை சார்பில் கல்வி நிதியுதவு பெற்றவர்கள்		287
	புகைப்படங்கள்		

க. அன்பழகன்
கழகப் பொதுச் செயலாளர்
திராவிட முன்னேற்றக் கழகம்



வாழ்த்துரை

பேரன்பு கெழுமிய என் இனிய நண்பர் **சாமிநாதன்** அவர்களின் பொது வாழ்க்கையின் சிறப்பினைப் போற்றிப் பாராட்டும் வகையில் வெளிவரும் இந்நினைவு மலர் எல்லாச் சிறப்புகளும் பெற்றுச் சிறந்தொளிர என் உளங்கனிந்த வாழ்த்துக்கள்.

திராவிட முன்னேற்றக் கழகம், ஒருங்கிணைந்த கோவை மாவட்டத்தில் வளம் பெற்றுச் சிறப்புற்றுத் திகழக் காரணமானவர்களில் முதன்மையானவர் **நண்பர் சாமிநாதன்** என்றால் அது மிகையாகாது. கழகத்திற்காக இவர் தன்னை முழுமையாக ஒப்படைத்து, அன்று முதல் இன்று வரை இவர் ஆற்றிய பணிகள் எண்ணிலடங்கா. கோபி நாடாளுமன்றத் தொகுதியில் இருமுறை போட்டியிட்டு, ஒரு முறை மத்திய அமைச்சர் சி. **சுப்பிரமணியம்** அவர்களையும், மறுமுறை, தோழர் **சம்பத்** அவர்களையும் பெருவாரியான வாக்குகளில் தோற்கடித்துச் சிறப்புப் பெற்றவர்.


கோவையில் **1975**-இல் நடைபெற்ற கழகத்தின் ஐந்தாவது மாநில மாநாட்டின் **வரவேற்புக்குழுத் தலைவராகப்** பொறுப்பேற்று, எழுச்சிமிக்க மாநில மாநாட்டினை நடாத்தி, அம்மாநாட்டின் **வரவேற்புரையினையும்** நல்கி எங்களின் பாராட்டுக்களைப் பெற்றவர்.

புளியம்பட்டிச் சாமிநாதன் என்று பேரறிஞர் அண்ணா அவர்களால் பாசத்தோடு அழைக்கப் பெற்ற அன்பு நண்பர், கழகத் தலைவர் கலைஞர் அவர்களின் பேரன்பினையும் பெற்றுத் திகழ்ந்தவர். இவ்வினிய **'நினைவுமலர்'** வெளியீட்டு விழாவிற் கலந்து கொண்டு கடந்த காலப் பசுமை நினைவுகளைப் பெறச் செய்தமைக்கு அகமிக மகிழ்கின்றேன்.

வாழ்க சாமிநாதன் புகழ்! வளர்க அவர்தம் நீங்கா நினைவுகள்!

அன்புள்ள,

க. அன்பழகன்



இரா. செழியன்
32, 33, அண்ணாநகர் மேற்கு
சென்னை

வாழ்த்துரை

தெளிந்த அறிவாற்றல், கொண்ட கொள்கையின் பிடிப்பு, இடையறா உழைப்பு இவைகளின் மொத்த உருவமே நம் அருமை நண்பர் சாமிநாதன்! இவரின் சீரான பணிகளைச் சிறப்பிக்க வரும் சிறப்பு நினைவு மலர் எழிலும் ஏற்றமும் பெற்றுத் திகழ வாழ்த்துகிறேன்.

ஒருங்கிணைந்த கோவை மாவட்டச் செயலாளராக அனைவரும் பாராட்டும் வகையில் பணியாற்றியவர். எந்தச் செயலை எடுத்தாலும் செப்பமாகச் செய்து முடிக்கும் செயல்திறம் மிக்கவர் சாமிநாதன். சிற்றூராய்க் கிடந்த தான்பிறந்த ஊரினை, இன்று ஓர் பேரெழில் கொஞ்சும் பெரு நகரமாக்கிப் பெரும் புகழ் பெற்றுத் திகழ்ந்தவர். புன்செய்ப் புளியம்பட்டி உள்ளளவும் இவர் பெயர் நிலைத்துத் திகழும். பிறந்த ஊருக்கு மட்டுமின்றி, கோபி நாடாளுமன்றத் தொகுதியில் பல்வேறு வளர்ச்சிப் பணிகள் உருவாகியுள்ளதற்கும் இவரது உழைப்பும் - செயல் திறனுமே காரணமாகும்.

மூவேந்தர் வழி முத்தமிழ் காக்கும் முன்னேற்றக் கழகத்தின் போர்ப் பரணியில் தன்னையும் ஓர் படைக்கலமாக்கிப் பணியாற்றிய அன்பு நண்பர் சாமிநாதன் புகழ் வாழ்க! வளர்க! என வாழ்த்துகின்றேன்.


நாளும் தழைக்கட்டும் அவர்தம் புகழ்!

நாளும் தொடரட்டும் அவர்தம் தூய நினைவுகள்!


அன்புள்ள,

இரா. செழியன்

அண்ணாநகர்
17-01-2012



மு. கண்ணப்பன்
மேனாள் அமைச்சர்



சாதனைச் செம்மல் செழும்புகழ் வாழ்க!


சாதனைச் செம்மல் சாமிநாதன் பெயரில் வெளிவரும் இந்த நினைவு மலர் பல்லாற்றானும் சிறப்பமைந்து எழிலும் ஏற்றமும் பெற்றுத் திகழ என் இனிய நல்வாழ்த்துக்களை உரித்தாக்குகிறேன்.

நாடாளுமன்ற உறுப்பினராகவும், கொங்குச் சீமையாம் கோவை மாவட்டத்துச் செயலாளராகவும் அரும்பணியாற்றிய என் கெழுதகை நண்பர் திரு. பி.ஏ. சாமிநாதன் அவர்களின் சாதனைக்குச் சரித்திரம் படைக்கும் இம் மலர், தமிழக வரலாற்றுக் கருத்தோவியங்களில் ஓர் எழில் கொஞ்சும் வண்ண ஓவியமாகத் திகழுமென்பதிற் சிறிதும் ஐயமில்லை.

ஒப்புயர்வற்ற இவர்தம் பணிகளில் எதைச் சொல்ல? எதைத் தள்ள? கண் துஞ்சாது, பசி நோக்காது, கொண்ட கொள்கையிற் சிறிதும் பிறழாது, கழகத்திற்கு இவர் ஆற்றிய பணிகள் எண்ணிலடங்கா. தன் வாழ்வையே இந்த இயக்கத்திற்கு அர்ப்பணித்துச் செயலாற்றியவர். **1975** டிசம்பர் **25,26,27,28**-இல் கோவையில் நடைபெற்ற **ஐந்தாவது** பொது மாநில மாநாட்டின் சிறப்புக்களுக்கெல்லாம் இவர் தம் சீரியசெயல்திறமே காரணமாகும். நானிலம் போற்ற அமைந்த இம்மாநில மாநாடு தந்த வெற்றி - இவர் தம் புகழ் முடியில் ஓர் அழகு மணி என்பது திண்ணம்.

நாடு வாழ, நந்தமிழ் மொழி தழைத்திட, நலிவு நீங்கி ஏற்றமும் எழுச்சியும் மிக்க சமுதாயம் அமைத்திட எங்களை நாங்கள் இப் பொதுவாழ்க்கையில் ஈடுபடுத்திக் கொண்டபோது, இத்தனைப் பொறுப்புக்களையும் ஏற்போம் என்றெண்ணி வரவில்லை. பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களின் அன்பில் வளர்ந்த நாங்கள் தாங்கிக் கொண்ட துன்பங்களும், சோதனைகளும் வாழ்ந்த சிறைக் காலமும், பட்ட துயரங்களும் ஏராளம்.

நாடாளுமன்ற உறுப்பினராக இரு முறையிருந்த நண்பர் திரு.சாமிநாதன் அவர்கள் ஈரோடு பிரியாத மாவட்டத்திற்கும், கோபி நாடாளுமன்றத் தொகுதிக்கும் தான் பிறந்த மண்ணாகிய புன்செய்ப் புளியம்பட்டி நகருக்கும் ஆற்றியுள்ள பணிகளைப் போல், வேறெவரும் செய்ததில்லை எனக் கூறினால் அது மிகையாகாது.



கழகம் எதிர்க்கட்சியாக இருந்த காலத்திலேயே புளியம்பட்டி நகரில் (13/13) பதின்மூன்று இடங்களிலும் கழகத்தவரே வெற்றிபெறச் செய்து, அறிஞர் அண்ணா அவர்களாலேயே **'சுறுசுறுப்பு மிக்க செயல் வீரர்'** எனப் பாராட்டப் பெற்றவர்.

- இவரின் உழைப்பிற்கு உயர்வு கூறி உயர்ந்து நிற்கிறது **பேரூராட்சி அலுவலகக் கட்டிடம்!**
- பெறற்கரிய சாதனைக்குப் பெருமை கூட்டுகிறது **பேரறிஞர் அண்ணா பேருந்து நிலையம்!**
- சிறப்பு மிக்க செயல் திறனைக் கூறுகிறது **அறிஞர் அண்ணா சீரணிக் கலையரங்கம்!**
- வாடிய பயிர் கண்டு வாடிய வடலூர் வள்ளல் பெருமானை நினைவூட்டுகிறது **குடிநீர் வழங்கிய திட்டம்!**
- கல்வி பயிலும் மாணவர்க்குக் கவலை தீர்க்கும் **ஆடவர், மகளிர், பவானி மேனிலைப் பள்ளிகள்! அய்யன் திருவள்ளுவர் கலை அறிவியல் கல்லூரி.**
- நல்ல சாலை - அழகுச் சோலை - **அண்ணன் சிலை - அண்ணல் காந்தியடிகட்கும் சிலை!** என்ன இல்லை இவ்வூரில்?
- பிணியுற்ற மக்களுக்கும், நோயுற்ற கால் நடைகளுக்கும் தனித்தனி **மருத்துவமனைகள்!**
- அரிசன மக்கட்கு அண்ணனின் பெயரிலும் அவர் தம்பி கலைஞரின் பெயரிலும் **நவீனக் குடியிருப்புக்கள்!**
- காமாட்சியம்மையின் பெயருக்கும், கலைஞரின் பெயருக்கும் கலை கொஞ்சும் **திருமண மண்டபங்கள்!**
- **வீடு கட்டும் சங்கம், வேளாண்மைக் கிடங்கு, நிலவள வங்கி** இப்படி இவர் பணி சொல்லிக்கொண்டே போயின் ஏட்டில் இடம் போதாது.

தான் பிறந்த பொன்னாட்டிற்கும், கழகத்திற்கும் நற்பணிகள் நாளும் செய்த, **நண்பர் சாமிநாதனின்** நினைவுமலர் மென்மேலும் சிறக்க நல்வாழ்த்துக்கள்!

இன்னணம்,

மு. கண்ணப்பன்



அன்பர்கள் நெஞ்சில்

பெரியவர் **பி.ஏ.எஸ்.**





க. அன்பழகன்
கழகப் பொதுச் செயலாளர்
திராவிட முன்னேற்றக் கழகம்




சமூகத் தொண்டினால் உயர்ந்த பி.ஏ.எஸ்.


புன்செய்ப் புளியம்பட்டி சாமிநாதன் அவர்களை 1967-ஆம் ஆண்டு நாடாளுமன்ற உறுப்பினராக நாங்கள் இருவரும் தேர்ந்தெடுக்கப்பட்ட காலம் முதல் அறிந்திடவும், பழகி, நட்பாடவும் வாய்ப்புப் பெற்றவன் நான்.

பள்ளிப் பருவத்திலேயே தந்தை பெரியாரின் தன்மானப் பகுத்தறிவு இயக்கக் கொள்கைப் பற்றுடையவராகி, அறிஞர் அண்ணாவின் பேச்சிலும், எழுத்திலும் கட்டுண்டவராகி, திராவிட இயக்கப் பணியில் ஆர்வம் கொண்டவரானார்.

கொங்கு வேளாளர் சமூகம் பெரும்பான்மையாகவும், செல்வாக்கு மிக்கதாகவும் இருந்ததுடன் அவர்களுள் நீதிக்கட்சியில் இருந்த பழையகோட்டை பட்டக்காரரைத் தவிர, பிற மிட்டா மிராசுகள் பலரும் காங்கிரசுக் கட்சியில் இடம் பெற்றுப் பல பதவிகளையும் அலங்கரித்த காலம், நாட்டின் விடுதலையைத் தொடர்ந்து வந்த காலம். அந்நிலையில், திராவிடர் இயக்கம் கொங்கு மண்டலத்தில் காலூன்றுவதும், வளருவதும் இயலாத சூழல். ஆயினும், தமிழ் இனத்தின் வரலாற்றுப் பெருமையையும், ஆரியத்தின் வைதீக ஆதிக்கத்தால் தமிழினம் உருக்குலைந்து போனதையும் உணர்ந்தும், உண்மையைத் தெளிந்தும், அவர்தம் உரிமை வாழ்வை நிலை நாட்டுதற்கான கொள்கைப் பரப்பும் போராட்டத்தில் ஈடுபடத் துணிந்த இளைஞர்கள் கொங்கு மண்ணில் இல்லாமலில்லை.

அப்படிப்பட்ட உறுதிமிக்க தோழர்கள்தான் திருப்பூர் எஸ்.ஆர். சுப்பிரமணியம், கோபி ராஜு, பொள்ளாச்சி இராமானுசம், பல்லடம் பொன்னுச்சாமி, ஈரோடு சுப்பையன், பழையகோட்டை அர்ச்சுனன், கோவை எஸ்.ஏ. இராசமாணிக்கம், பி.எஸ். ஜானகிராமன், தேவசகாயம் முதலானோர். ஆயினும், கோமான்கள் கோட்டைவாசலில், கழகக் கொடியை உயர்த்திக் கட்டிய வீரராகத் திகழ்ந்தவர், தி.மு.க.வின் கோவை மாவட்டக் கழகத்தின் முதல் செயலாளராக விளங்கிய உடுமலை நாராயணன் ஆவார்.





[illegible]


* * *

அண்ணாவின் நாணயம் எத்தகையது என்பதற்கு அவருடைய அரசியல் வரலாற்றில் எத்தனையோ கட்டங்கள் உண்டு. எத்தனையோ நிகழ்வுகள் உண்டு. அவர் அரசியலிலே கடைப்பிடித்த நாணயத்திற்கு உதாரணம் சொல்லவேண்டுமேயானால் எங்கள் அருமைத் தந்தை பெரியார் அவர்களோடு சிறு கருத்து வேறுபாடு ஏற்பட்டு, விலக வேண்டிய சூழ்நிலை உருவானபோது, சிலர் அண்ணாவிற்கு அரிய யோசனை என்று கருதிக்கொண்டு சில யோசனைகளைச் சொன்னதுண்டு. அஃது என்ன யோசனை என்றால், "நீங்கள் விலகினால் போதாது. பெரியாருடைய தலைமையிலே உள்ள திராவிடர் கழகத்தையே கைப்பற்ற வேண்டும்" என்று சொன்னார்கள். அப்போது அண்ணா அவர்கள் காட்டிய பெருந்தன்மைதான் ஈடு இணையற்ற அரசியல் நாணயம் ஆகும்.

அண்ணா சொன்னார்கள். "நீங்கள் சொல்வதைக் கேட்டால் திராவிடர் கழகத்தாரும், நாம் தொடங்குகின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்களும் சண்டை போட்டுக் கொண்டு வாழ்நாள் முழுவதும் போராட்டக் களத்திலே இருக்கத்தான் நேரிடும். இப்போது இரண்டு கழகங்களும் தனித்தனியே பணியாற்றும் இரட்டைக் குழல் துப்பாக்கியாக, திராவிடர் கழகமும், திராவிட முன்னேற்றக் கழகமும் இருக்கு"மென்று சொன்னார்.



- கலைஞர்



சி. சிட்டிபாபு M.P.,
MISA
சென்னை மத்திய சிறை
சென்னை

அவர்கள், கோவை - மத்திய சிறையில் இருந்த


பி.ஏ. சாமிநாதன் M.P.,
MISA
கோவை மத்திய சிறை
கோவை

அவர்களுக்கு 15-10-1976 அன்று எழுதிய மடல்

அன்புள்ள சாமிக்கு,

நலம். அதுபோல அங்குள்ள அனைவருக்கும் என் வணக்கங்கள். இங்கு அனைவரும் நலம். தம்பி ஸ்டாலினுக்கு வயிற்றுவலி காரணமாக அறுவை மருத்துவம் நடைபெற்றது. அரசு மருத்துவமனையில் நலமாக உள்ளார். ராஜூ நலமாக உள்ளார். சிறந்த நண்பா ஜி.என். ராஜூ மரணம் எனக்குப் பெரும் வேதனை தந்துள்ளது. அவரது பிரிவால் வாடும் நமது கோவைத் தோழர்களுக்கு எனது அனுதாபத்தைத் தெரிவிக்கவும். மற்றபடி சம்பூர்ணம், குழந்தைகள் நலமா? ஏன் நீண்ட நாள்களாக ஒரு மடலும் அனுப்பவில்லை? தாங்கள் உடல்மெலிய, உணவுக் கட்டுப்பாடு கொண்டிருப்பதாகச் சொன்னார்கள். நல்ல செயல்தான். என் உடல்நலம்தான், அடிக்கடி பாதிக்கிறது. மனஉறுதியுடன் இருப்பதால் எதையும் தாங்க முடிகிறது. மற்றபடி கழகச்செயல்கள் நல்லமுறையில் நடைபெறுகின்றன. அனைவருக்கும் விரைவில் விடுதலை கிடைக்கும்.

அன்பன்,
சி. சிட்டிபாபு



க. இரா.
இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்ஸிஸ்ட்)
சத்தி வட்டச் செயலாளர், சத்தி


நன்றிக் கடன்!

பெரியவருக்கு நினைவு மலர் வெளியிடுவது நல்ல முயற்சி. மலர் நல்ல முறையில் அமைந்து அனைவரிடமும் சேரட்டும். 22.01.2011 ஈடுசெய்ய முடியாத பேரிழப்பு நாள். பெரியவர் பி.ஏ.எஸ். அவர்கள் ஒரு உன்னதமான மனிதர். அவருடைய மறைவு இன்றும்கூட நம்பமுடியாத ஒன்றாக - மனதில் ஏற்க முடியாததாக இருக்கிறது.

அவரைப் போன்றவர்கள் வாழ்ந்த காலத்தில் நாமும் வாழ்ந்து அவருடன் பழகிப் பேசி அவருடன் சேர்ந்து போராட்டங்களில் கலந்துகொண்டு, போராடி அவருடன் கோவைச் சிறையில் இருந்து இப்படியெல்லாம் ஏற்பட்ட அனுபவங்கள் நமக்கென்று கிடைத்த அரிய வாய்ப்புகள் என்றே சொல்லலாம். தேர்தல் பணிகளில், விலைவாசிக்கெதிரான ஆர்ப்பாட்டம், உண்ணாவிரதங்களில் திராவிட முன்னேற்றக் கழகம் சார்பில் அவரும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நானும் தலைமையேற்றுக் கலந்துகொண்டதெல்லாம் பெருமைக்குரிய அனுபவங்களாகும்.

ஒன்றைச் சொல்ல வேண்டும் - புளியம்பட்டிப் பகுதியில் எத்தனையோ பெரியவர்கள் இருக்கலாம். பெயர் சொல்லாமலே அப்பகுதி மக்களிடம் **'பெரியவர்'** இருப்பாரா? பார்க்க முடியுமா? என்றால் போதும் யாரும் அவரைத்தான் என்று கருதி அவரைப் பற்றிய பதில் கூறுவார்கள். வேறு யாருக்கும் இப்படி இயல்பாய்ப் **'பெரியவர்'** என்று அங்கீகரிக்கப்பட்ட அடையாளம் நானறியக் கிடையாது.

1975-ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஐந்தாவது பொது மாநில மாநாடு, கோவையில் அதன் ஏற்பாடுகளைப் பொறுப்பேற்று இவர் செய்திருக்கிறார். லட்சக்கணக்கில் மக்கள், வழியெங்கும் பனைமரங்களில் பெரிய கொடிகள்!, மாநாடென்றால் இப்படியும் ஏற்பாடு இருக்குமா என மக்கள் வியந்தனர். ஈரோடு, திருப்பூர் உள்ளிட்ட கோவை மாவட்டச் செயலாளர், இவர் சொல்வதை அறிந்து கொள்ளத் தமிழக மக்கள் மற்றும் மாநிலத் தலைமை ஆவலுடன் இருக்கும். ஓர் ஓய்வறியாத உழைப்பாளி.



தாக்குதல்களைச் சந்தித்த ... சிறந்த
பகுத்தறிவுவாதி. தன் வாழ்வில் கற்பனைகளுக்கும், அற்புதங்களுக்கும் பக்தியை இணைக்கும் எதையும் ஏற்காத கடவுள் மறுப்பாளர். ஆனால் பக்தர்கள் மற்றும் கோவில் நிர்வாகிகள் தன்னிடம் உதவி கேட்டு வரும்போது அவர்களது மனம் மகிழும் வகையில் உதவிகள் செய்வார். இது மனித நேயத்துக்காக என்பார்.

ஒரு பாரபட்சமற்ற ஜனநாயகவாதி. எல்லாக் கட்சிக்காரர்களிடமும் மனம் திறந்து பேசுவார். ஒரு கூட்டான பொதுக்கூட்டமென்றால் அது சின்னக் கட்சியோ, பெரிய கட்சியோ, வயதில் சிறியவரானாலும், எதிர்பார்க்காத அளவு மரியாதை தந்து அவரது கருத்துக்களைப் பேச வைப்பார். அவரிடம் தயக்கமே இல்லாமல் நாம் குறைபட்டுக் கொண்டாலோ விமர்சனம் செய்தாலோகூட சங்கடம் ஏதுமில்லாமல் ஏற்றுக் கொண்டு, தன்னுடைய கருத்தையும் நிதானமாகச் சொல்வார். தன்னுடைய கட்சியின் பிரசுரங்களின் வார்த்தைகளைப் - பொருளை மீண்டும் மீண்டும் சரிபார்த்துத் திருந்திய பிறகே அச்சகத்தில் கொடுப்பார். அதேபோல எங்களைப் போன்றவர்களது துண்டுப் பிரசுரங்கள் பற்றியும், கருத்துக்கள் வார்த்தைகளைப் பார்த்து விமர்சனங்கள் - ஆலோசனைகள் சொல்வார்.

பொதுவாக இன்றைய சமூகச் சூழலில் பொருள் முக்கியமுள்ளதாய்க் கருதப்படும் காலம். ஆனால் அவர் மக்களுக்கான நிலைத்து நிற்கும் காரியங்கள் எதுவென்று பார்த்து, அதற்காகவே பெரும் முயற்சி எடுத்துச் செய்து முடிப்பார்.

வீடோ, அலுவலகமோ, நண்பர்களது நிகழ்ச்சியோ எங்கும் பிரச்சனைகள் - கோரிக்கைகள் - உதவிகள் என்று அவரிடம் மக்கள் சூழ்ந்து இருப்பதைப் பார்க்கலாம். இயல்பாக நடமாட முடியாத போதும் அவர் மற்றவர்களின் உதவியால் எழுந்து நடக்கும் போதும்கூட நல்ல திடகாத்திரமான - ஆரோக்கியமான மனிதர்களே கூடச் சலித்துக்கொள்ளும் வேலைகளைக் கூடச் சலிக்காமல் செய்துகொண்டே இருப்பார். மனிதர்கள் யாராக இருந்தாலும் அவர் மனதார நேசிப்பார். எனக்கு இருதய அறுவை முடிந்த பிறகு வீட்டுக்கே நான்குமுறை வந்தார். ஒரு போன் செய்தால் நான் வருவேனே என்றேன். அது சரியில்லை நான்தான் வந்து பார்க்க வேண்டும் என்றார். மலைவாழ் மக்கள் சங்கத் தலைவர் மார்க்சிஸ்ட் மூத்த தலைவர் தோழர். எம்.ஏ. காதர் இறந்த நிகழ்வில் கலந்துகொண்டு மக்கள் அழுது புரண்டதை எல்லாரிடமும் பேசுவார்.

முதல்நாள் தனக்குக் கெடுதல் செய்து, கேவலப்படச் செய்த எதிரி எனினும் அண்ணா எனக்கு இனி நீங்கள்தான் என்று சொல்லிவிட்டால் போதும் அனைத்தையும் மறந்து அவருக்குத் தனி அக்கறையுடன் உதவுவார். இது இவர் இயல்பு.




சென்னீர்கள் கூட்டம். சொந்தக் கட்சிக்காரர்கள் முரண்பாடு விமர்சித்துப் பேசுகிறார்கள். அவர்களைச் சமாதானம் செய்ய இவர் பழமுறையில் வேண்டுகிறார். வேட்பாளர் அண்ணா, நீங்கள் இப்படிச் செல்லலாம் பேசிக் கேட்டு நாம் வெற்றி பெறுவோமா? இவ்வளவு தூரம் இறங்கிப் பேசுகிறீர்கள் என்று சமூத்து போகிறார். அந்தக்கா வேட்பாளர் என்றாலும் பணம் ஒன்றிச் செலவிடக் கூடியவரானார். பணம் பண்ணுவதற்கென்று பலர் திட்டமிட்டுச் செய்வார்கள். அவர்கள் மத்தியில் திட்டமிட்ட காரியங்களை நிறைவேற்றவே இவர் பணத்தைப் பயன்படுத்துவார்.

உதாரணமாகத் தன்இடத்துக்குப் பக்கத்தில் பஸ் நிலையம், அரசு அலுவலகம், மார்க்கெட், வியாபார ஸ்தலம் என்று வந்தால் தன் நிலத்தின் மதிப்புக் கூடிப் பணம் கூடுதலாகும் என்று செய்வார்கள். ஆனால் இவரோ, தனது தோட்டத்தருகில் ஒரு மயானத்தை உண்டாக்கினார். அதற்கான சாலை வசதி ஏற்பாடு செய்தார்.

பல ஊர்களில் சாதிக்கொரு மயானம், பகுதிக்கொரு மயானம் என்று உள்ள நிலையில் இவர் நகரில் உள்ள எல்லாச் சாதி மக்களுக்கும் ஒரே பொது மயானம் என்று செய்திருக்கிறார். புளியம்பட்டிப் பகுதி வறண்டுபோய்த் தண்ணீர் இல்லாமல் தவித்த மக்களுக்கு ஒரு பெரிய திட்டம் மூலம் தண்ணீர்ப் பிரச்சனையைத் தீர்த்து வைத்தார். புளியம்பட்டி நகரத்தின் வளர்ச்சிக்கே அதுவே அடிப்படையாய் அமைந்தது. ரோடு, தண்ணீர், மண்டபம், சமுதாயக்கூடம், கழிப்பறை மூச்சு என்று ஒவ்வொன்றிலும் இவரது முயற்சி - பங்களிப்பு எல்லாவற்றிலும் இருக்கும். ஒரு தேர்தல் என்றால் எத்தனை வாக்குச் சாவடி, எத்தனை வாக்கு என்னுடையவர்கள், எத்தனை பேர் தேர்தல் பணி செய்பவர்கள், அவர்களுக்கு உணவு, டிபன், டீ, தேர்தலுக்கான பொருள்கள் என்று பட்டியலிட்டு அதைத் தேர்தல் பணிக்குழு முன்பு சொல்லிச் செயல்படுத்துவார். இவைகளில் அவருக்கு நிகர் அவரேயாவார்.

நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம் என்றான் ஒரு கவிஞன். இவரைப் பார்த்து - இவரது குடும்பத்தைப் பார்த்துச் சொல்லி இருப்பான் போலும்! அவரை நிலை, அவர் சிறையில் அவரது துணைவியார் சம்பூர்ணம் அம்மையார் அவர்கள் குடும்பத்தையும், குழந்தைகளையும் பராமரித்துக் கொண்டதுடன் நில்லாமல் அந்தச் சிரமமான காலத்தில் கொங்கு மண்டலத் திராவிட முன்னேற்றக் கழகத்தின் இதயமாகச் செயல்பட்டுச் சாதனை புரிந்தார்.

பெரியவர் வீட்டுக்கே யாரும் போகலாம். அவரது படுக்கை மீது கூடத் தடையில்லாமல் அமரலாம். சொந்தக் கோரிக்கையோ, பொதுக் கோரிக்கையோ எதற்காகச் சென்றாலும், டீயோ, டிபனோ சாப்பிடச் செய்து உபசரிக்காமல் அனுப்பமாட்டார்கள். அவர் இயற்கை எய்திய உடல் இருக்கும்போதும் கூட எல்லோரையும் வற்புறுத்திச் சாப்பிட வைத்தார்களே!



சுழற்றிப் பேசிக் கொண்டே இருக்கிறார். அவருக்குத்தான் எத்தனை பேரு... நேரடித் தொடர்பு. எத்தனை ஞாபக சக்தி. நான் வியந்துபோய் நின்றிருந்தே... அரியப்பம்பாளையம் தலைவர் ஏ. கந்தசாமி அவர்கள் உட்படப் பலரையும் ... உட்காருங்கள் என்று பலமுறை சொல்லுகிறார். சரிங்க என்று சொல்லிக்கொண்... அவர் மீதுள்ள மரியாதையால் எவரும் உட்காரவே இல்லை!.

அரிசன மக்களது குழந்தைகளின் படிப்பில், வேலை வாய்ப்பில் அவர் எவ்வள... உதவிகளைச் செய்துள்ளார். உயர்ந்த வசதிக்காரர்கள், அதிகாரிகள், படிப்பாளிக... உடனும் - வருமானமற்ற - அதிகாரமற்ற - சொன்னால் சரியாகப் புரி... கொள்ளக்கூட முடியாத மக்களையும் **அவர் பிரித்துப் பார்க்காமல்** ஒன்றே போ... நேசித்தார்.


காவல் நிலையம், நீதிமன்றம் ஆகியவற்றில் தீர்வுகாண முடியா... பிரச்சனைகளுக்கும் கூட இவரிடம் தீர்வு காணமுடியும் என்ற நம்பிக்கையை அ... இறுதிவரை நிறைவேற்றினார். புன்செய்ப் புளியம்பட்டிப் பகுதியில் யாரானாலு... நியாய விரோதக் காரியங்களுக்கு அவர் இறுதிவரை இடங்கொடாமல் நியாய... செய்தார். **அந்த இடத்தை இனி யார் நிரப்புவார்களோ!**

தீண்டாமை, சாதி வெறி, சாதிய அணுகுமுறைகளுக்கு அப்பாற்பட்டு நின்ற... மேலும் அவருடைய நெருங்கிய நண்பர்கள், உறவினர்கள் என்றாலு... அவர்களுடைய சாதிய அணுகுமுறைகளையும் கண்டித்துத் திருத்துவா... ஒப்புக்கொள்ளவே மாட்டார். அவர் மிகப்பெரிய படிப்பாளியாக, பட்டதாரியா... நான் அறியவில்லை. ஆனால் அவர் ஏராளமான புத்தகங்களைக் கேட்டுக் கேட்டு... தேடித் தேடிப் படித்தார். மக்கள் சேவை என்ற நீண்டகால அனுபவப் படிப்... அவருக்கு வேறு யாரையும் விட அதிகமாய்க் கிடைத்தது.

தங்கள் தேவைகளையும் வேலைகளையும் முன்னிட்டுக் கட்சிக்காரர்களை... பார்க்காமல், வறுமையில் உள்ள ஒய்ந்து போயுள்ள முன்னாள் தோழர்களு... குடும்பங்களைத் தேடிக் கண்டுபிடித்து 2,000, 5,000, 10,000 என்று ... லட்சங்களைக் கொடுத்து மனநிறைவு கொள்வார். இதற்கெல்லாம் அவ... குடும்பமே ஒத்துழைப்புத் தரும்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆரம்பகாலச் செயல்பாடுகள் போல... தற்போது இல்லை என்றும், பகுத்தறிவு எண்ணங்கள் வெகுவாகக் குறைந்து... போனதாயும் மிகுந்த வேதனைப்பட்டுப் பேசுவார்.

'கற்பிப்பவன் செயல்படும் இடம் கல்விக்கூடம்' என்பது போல அவர் எங்... இருந்தாலும், இருந்த இடமெல்லாம் அலுவல்கள் நடந்து கொண்டே இரு... அலுவலகமாகும். அவர் அதன் செயலாளராய் இருப்பார்.



"காதல் இனைய வாழ்க்கை அதுவல்லது
ஊறுவ தில்லை உயிர்க்கு" - என்றார் திருவள்ளுவர்

நீதி, உயர்ந்த மதி, கல்வி, அன்பு நிறைய உடையவர்கள் பெரியோர் என்றார் பாரதி. இவரது வாக்குகளையும் இவர் பிரகாசிக்கச் செய்தார். ஒரு மாபெரும் மனிதனை இழந்தோம். அவருக்கு நன்றிக் கடன்பட்டு மக்கள் சாதி, மதம், கட்சி என்ற எல்லைகளைக் கடந்து வீடுகளில் அவரை நினைவு கூற வேண்டும். அவரைப் பற்றிய வரலாறுகள் **இளைய தலைமுறைக்கு உணர்த்தப்பட** வேண்டும். அவரது நினைவு மலர் வெளிவருவது காலத்தின் தேவை. அவரை அறிந்த, நேசித்த அனைவரது எதிர்பார்ப்பு.

அவரது செயல், சேவை, பண்பு, பாசம் கொண்ட **அவரது** வாழ்வு அனைவருக்கும் வழிகாட்டுவதாய் அமையட்டும்! **அவரது புகழ் காலங்களைக்** கடந்து நிற்கட்டும்! **அவரது நினைவு** நீடுழி வாழட்டும்!






தந்தை பெரியார் காங்கிரசில் மிகவும் பெருமைக்குரிய புகழ் வாய்ந்த தலைவராக இருந்த காலகட்டத்தில் 1922-இல் திருப்பூரில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டிலேயே மனுதர்மத்தையும், இராமாயணத்தையும் தீயிட்டுக் கொளுத்த வேண்டும் என்று போர்க்குரல் கொடுத்தார்.

அண்ணா அவர்கள் அய்யாவின் கருத்துகளை நெஞ்சில் ஏந்தித் தனது தேன் சிந்தும் அடுக்குச் சொற்களால் கருத்துக் கற்கண்டுகளாக மக்கள் மத்தியில் வாரி வாரி வழங்கினார்.

தமிழ்நாட்டில் கம்ப இராமாயணத்தில் கை வைப்பதா? தீ வைக்க வேண்டும் என்று ஓங்கிக் குரல் கொடுப்பதா? என்று தமிழறிஞர்கள் பலரும் சண்டைக்கு வந்தார்கள். அவர்களை எல்லாம் அய்யாவின் அருமைச் சீடரான அண்ணா; வாதுக்கு அழைத்தார். கருத்துப் போர் புரிவோம் வாருங்கள் என்று அறைகூவலிட்டார்.

சென்னை சட்டக்கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற கருத்துப் போரில் அறிஞர் அண்ணாவுடன் வாதிட ஆர்.பி. சேதுப்பிள்ளை முன்வந்தார் (9-2-1943). அதேபோல நாவலர் சோமசுந்தர பாரதியாரும் இதே கருத்துக்காக அண்ணா அவர்களுடன் சேலத்தில் மோதினார் (14-03-1943)

திராவிடக் கலை வேறு; ஆரியக் கலை வேறு. ஆரியக்கலை நம்போனாக் கருத்துகளும் ஆபாசமும் நிரம்பியதுடன், திராவிட இனத்தை அடக்கவும், பண்பை அழிக்கவும் பயன்பட்டுப் பாமரனின் மனத்தைப் பாழாக்குகிறது என்பதற்கான காரணங்களை அடுக்கினார் அண்ணா. எதிர்த்தரப்பில் வாதிட்டவர்கள் கடைசி வரை இருந்து அண்ணாவின் பதிலைச் சந்திக்க இயலாதவர்களாக இடையிலே விடை பெற்றனர்.



புளியம்பட்டி - சாமிநாதன்

திராவிட முன்னேற்றக் கழகம் பேரறிஞர் அண்ணா அவர்கள் தொடங்கிய நேரத்தில் அதில் தங்களை இணைத்துக் கொண்டவர்கள் பல்லாயிரம்பேர்.


தந்தை பெரியார் அவர்களோடு கருத்து வேறுபாடு கொண்டு கண்ணீருடன் வெளியேறியவர் **அண்ணா** அவர்கள். அதனாலே அவரைக் கண்ணீர்த்துளியென்று "விடுதலை" கேலி செய்தது. அவரைத் தொடர்ந்து வெளியேறியவர் பட்டியலை அண்ணா அவர்கள் "*கண்ணீர்த் துளிகள்*" என்ற பெயரிட்டு வெளியிட்டார்.

கோவை மாவட்டத்தில் வெளியேறியவர்களில் மிக முக்கியமானவர்கள் **ஈ.வெ.கி.சம்பத், கோவைச் செழியன், கோவை ராஜமாணிக்கம், உடுமலை நாராயணன், புளியம்பட்டி சாமிநாதன், சி.டி.தண்டபாணி** ஆகியோராவார்கள்.

1949-இல் கழகம் தொடங்கிய நேரத்தில், கோவை அரசு கலைக் கல்லூரியில் யான் இளங்கலைப் பட்டப்படிப்புப் படித்து வந்தேன். அதே கல்லூரியில் இண்டர் மீடியேட் வகுப்பில் கோவைச் செழியனும் சி.டி. தண்டபாணியும் படித்து வந்தனர். நண்பர் புளியம்பட்டி சாமிநாதன் பீளமேடு **பி.எஸ்.ஜி. கல்லூரியில்** இண்டர் மீடியேட் வகுப்பில் படித்துவந்தார்.

தொடக்கத்தில் இயக்கப் பற்றுடையவர்கள், இயக்கத் தலைவர்கள் பெயரில் மன்றங்களும், நூலகங்களும் நடத்தி, கொள்கைகளைப் பரப்பி வந்தனர். சுதந்திரமாகச் செயல்பட்டனர். ஒரு கிளைக்கு 25 பேர் வேண்டும். அதற்காக நேரத்தைச் செலவழித்து 25 பேரை இணைத்துக் கிளைகள் தொடங்கப்பட்டன. தொடக்க விழா நிகழ்ச்சிகளும், கொடியேற்ற விழாக்களும் எழுச்சியுடன் நடத்தப்பெற்றன.

கோவை - பெரியகடை வீதியில் கோவை ராஜமாணிக்கம், கோவைச் செழியன், சி.டி. தண்டபாணி, சி.எஸ். சின்னதுரை, ஏ.எஸ். நடராஜன்,



ஏ.எஸ். இளங்கோ... என்ற பெயரில் ஒரு ... கொள்கை, லட்சியம் பற்றி
நடராசன் படிப்பகம்' ... பேசத் தெரிந்தவர்கள்.
அனைவரும் கூட்டத்தில் பேசத் தெரிந்தவர்கள். ... என்பது. அந்தச்
விவாதிக்கத் தெரிந்தவர்கள்.

இலட்சியமே திராவிட நாடு தனி நாடாக வேண்டும் என்பது. அந்தச் சமயத்தில் பணியின் காரணமாகத் தலைவர் கலைஞரும், நாவலரும் கோவையில் தங்கியிருந்து இயக்கப் பணிகள் செய்து வந்தனர். ஒவ்வொரு கூட்டமும் இன உணர்வை வளர்த்து வந்தது. ஒலிபெருக்கியில்லாமல் கூட்டங்கள் நடக்கும். வசதிக்கேற்ப ஒலிபெருக்கி வைப்பதுண்டு. அப்போது விளம்பரத் தட்டியில் ஒலிபெருக்கிப் படம் வரைந்து ஒலிபெருக்கி உண்டு என்று எழுதுவதுமுண்டு.

நண்பர் சாமிநாதன் அவர்கள் கல்லூரியை முடித்துக் கொண்டு படிப்பகத்திற்கு வருவார், தான் நடத்தும் நிகழ்ச்சிகளுக்குப் பேச்சாளர்களை அழைத்துச் செல்வார். அப்போதெல்லாம் பெரும்பான்மைச் சாதியினர் காங்கிரசை ஆதரித்து வந்தனர். அவர்களது எதிர்ப்பையும் மீறித் தேர்தல் பணிகளை 1967-இல் செய்யவேண்டி வந்தது.

கோபி நாடாளுமன்றத் தொகுதியில் **சாமிநாதன்** போட்டியிட்டபோது கோபியிலே கொடி கட்ட முடியவில்லை. கோபி ஜி.என். ராசு போன்றவர்கள் கூட்டங்களில் பேசும்போது ஜாதி ஆதிக்கத்தைக் கடுமையாக எதிர்த்துப் பேசுவார். அப்படியெல்லாம் வளர்க்கப்பட்டதுதான் தி.மு.க.

1967-இல் பொதுத் தேர்தலில் கோபி நாடாளுமன்றத் தொகுதியில் சாமிநாதன் போட்டியிட்டபோது, ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு பண்ணையார் ஆதிக்கம் செலுத்தி வந்தனர். அவர்களை எதிர்த்து அண்ணா அவர்கள் பேசினார்கள். பேச்சை முடிக்கும்போது விடிந்துவிட்டது. **"உதயசூரியன் உதித்து விட்டான் உதயசூரியனுக்கே வாக்களியுங்கள்"** என்று சொல்லிப் பேச்சை முடிப்பார்.

1967 தேர்தலில் பெருந்தலைவர் காமராஜர் வேட்பாளரை நிறுத்திய விதமே வித்தியாசமானது. கட்சிக்காக உழைத்தவர்களை, தியாகம் செய்தவர்களை நிறுத்தவில்லை. ஒரு தொகுதியில் எந்தச் ஜாதி பெரியது அதில் யார் அதிகப் பணம் உள்ளவர்கள் அவர்கள்தான் வேட்பாளர்கள்.

அண்ணா அவர்களோ ஜாதியைப் பார்க்கவில்லை, பணத்தையும் பார்க்கவில்லை. யாருக்கு தொண்டர்கள் செல்வாக்கும், மக்கள் செல்வாக்கும் இருக்கிறதோ அப்படிப்பட்ட கழகத் தோழர்களையே வேட்பாளராக நிறுத்தி வெற்றி பெற்றார்கள்.

பெரிய ஜாதிகளை நம்பிய காங்கிரஸ் 1967-இல் தோற்றது. பிறகு இன்றுவரை எழுந்திருக்கவே முடியவில்லை. தனித்து நின்று ஆட்சியைக் கைப்பற்ற முடியவில்லை. எதிரியான ராஜாஜியோடு கூட்டு வைத்து நம்மோடு 1971-இல் போட்டியிட்டபோதும் காமராஜரால் காங்கிரஸ் ஆட்சியைக் கொண்டு வரமுடியவில்லை.



ஜாதியினருடைய ஆதரவும் தமிழ்நாடு முழுவதும் சராசரியாக இருந்ததுதான். கோவை ராஜமாணிக்கம், உடுமலை நாராயணன், புளியம்பட்டி சாமிநாதன் ஆகியோர் மறைவிற்குப் பிறகு எல்லாச் ஜாதியினரின் நம்பிக்கையைப் பெற முடியவில்லை. தோல்விகளைச் சந்திக்க நேரிட்டது. இதற்குத் தனிப்பட்ட முறையில் யாரையும் குறை சொல்ல முடியாது. நிர்வாகக் குறைபாடுகள்தான் காரணம்.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலின்போது தொண்டாமுத்தூர்ப் பகுதியில் ஒரு இளைஞர் கழகச் செயலாளர் கழகக் கொடியையும், கவுண்டர் கட்சிக் கொடியையும் சேர்த்து வீட்டில் ஏற்றி வைத்தார். அவரை நம்மால் திருத்த முடியவில்லை. இத்தகைய பிரச்சனைகளில் மாவட்டச் செயலாளர்களால் ஒன்றும் செய்ய முடியவில்லை. அவர்கள் மீது எந்தக் குறையும் இல்லை. அதனாலே விளைவு என்ன ஆயிற்று?

நாடாளுமன்றத் தேர்தலில் தி.மு.க., அ.தி.மு.க., கவுண்டர் கட்சி மூன்றும் போட்டியிடுகின்றது. அ.தி.மு.க. வெற்றி பெறுகிறது. தி.மு.க. ஆதரவு கவுண்டர் வாக்குகள் கவுண்டர் கட்சிக்குப் போய்விட்டது. கவுண்டர் கட்சிக்கு விழுந்த ஒரு லட்சம் வாக்குகள் தி.மு.க. வாக்குகளே. அதே நேரத்தில் அ.தி.மு.க.வை ஆதரிக்கும் கவுண்டர்கள் யாரும் கவுண்டர் கட்சிக்கு வாக்களிக்கவில்லை. அ.தி.மு.க.விற்கே வாக்களித்தவர். நமது தோல்விக்குக் காரணம் ஜாதி உணர்வே.

இப்படிப்பட்ட நேரங்களில் நண்பர் சாமிநாதன் போன்றோரின் நினைவுகள் நமக்கு வருகிறது. **"நீங்களெல்லாம் பொறுப்பேற்றுக் கட்சியை நடத்தியபோது தி.மு.க. வெற்றி பெற்றது, உங்களைப் போன்றோர் இல்லாததால் தோல்வியைச் சந்திக்க வேண்டியுள்ளது"** என்று சொல்லத் தோன்றுகிறது.


பழைய கோவை மாவட்டத்தில் தி.மு.க. பலம் பொருந்திய கட்சியாக வளர்ந்ததில் கோவை ராஜமாணிக்கம், உடுமலை நாராயணன், புளியம்பட்டி சாமிநாதன் ஆகியோர் வரலாறு படைத்தவர்கள்.



காலம்

தசரதன் வீட்டில் டெலிபோன் இருந்ததில்லை. ஸ்ரீராமர் ரேடியோ கேட்டதில்லை. சிபி சினிமா பார்த்ததில்லை. ஆனால் நம் காலத்தில் இவைகள் அத்தனையும் இருக்கின்றன. ஆனாலும் சிலர் கூறுகின்றனர், காலம் கெட்டு விட்டதென்று. கூறலாமா?

-அண்ணா



பரமத்தி சண்முகம்
கொள்கைப் பரப்பு இணைச் செயலாளர்
திராவிட முன்னேற்றக் கழகம்



வாழ்க பி.ஏ.எஸ். புகழ்!


மறைந்த பெரியவர் பி.ஏ.எஸ். கொங்குச் சீமை தந்த கொள்கைச் சிங்கம். என் அன்புக்கும் மரியாதைக்கும் உரிய அண்ணன் பி.ஏ. சாமிநாதன் அவர்கள் மறைவு, திராவிட முன்னேற்றக் கழகத்திற்குப் பெரும் இழப்பு.

மாணவப் பருவந்தொட்டுப் பெரியார், அண்ணாவால் இயக்கத்திற்கு ஈர்க்கப்பட்டுக் கலைஞர் அவர்களின் அன்புத் தம்பியாய் மாவட்டத் தி.மு.க. - செயலாளர் பொறுப்பைத் தாங்கிக் கோவை மாவட்டத்தில் கழகம் வளர்த்தவர்! கோபம், கடுப்பு, எரிச்சல் என்ற முக்குணங்கள் நெருங்காக் கொள்கைக் குணக்குன்று.

கழகத் தோழர்களைத் தாய்போல் அன்புகாட்டி அரவணைத்து வளர்த்தவர். என்னுடைய அறிமுகம் 1973, 74-இல் கிடைத்தது. கணியூரில், நமது பொதுச்செயலாளர் இனமானப் பேராசிரியர் அவர்கள் கலந்துகொண்ட பொதுக்கூட்டத்தில் ஏற்பட்டது.

அதன்பிறகு தாரை வட்டத்தில் அறிஞர் அண்ணா அவர்களின் சுற்றுப் பயணத்தின்போது தொடர்ந்தது, தன்னோடு சுற்றுப் பயணம் முழுவதும் தொடரும்படி அன்புக் கட்டளையிட்டார். தவிர்க்க இயலவில்லை, காரணம் அப்போதெல்லாம் பொதுக்கூட்டங்கள் தொடங்கும் முன் கழகத் தோழர்கள் இயக்கப் பாடல்கள் பாடுவர். கூட்டம் சேர்ந்துவிடும். அப்படிப் பாடுவதில் நானும் ஒருவன். பாடிவிட்டுப் பேசவும் தொடங்கி விடுவேன். அதனால் என்மீது தனிப்பட்ட அன்பும் பாசமும் ஏற்பட்டுவிட்டது.

1975-ஆம் ஆண்டு நடைபெற்ற மாநில மாநாட்டைக் கோவையில் நடத்தி வெற்றி கண்டார். கழக வரலாற்றில் அது பெரியபுரட்சி அத்தியாயத்தைப் படைத்தது. அகில இந்திய அளவில் அதன் தாக்கம் மத்திய அரசை ஈர்த்தது. மாநாடு நடந்து கொண்டிருந்தபோது, அவரைக் கைது செய்வதற்கான முயற்சியும், மாநாடு நடக்கும் போதே மிரட்டல்களும் வந்து கொண்டிருந்தன, என்றாலும் மாநாட்டை வெற்றிகரமாக நடத்தி முடித்தார். கழகத் தலைவர் கலைஞர் அவர்களின் பாராட்டைப் பெற்றார்.



அத்தகைய செயல் மறவர், [illegible] பணியின் சி[illegible] இன்று இல்லையே என்ற வேதனை இலட்சக்கணக்கான கழகத் தோழர் மத்தியில் மட்டுமல்ல பொது மக்களிடமும் இருக்கத்தான் செய்கிறது.

"நெருநல்உளன் ஒருவன் இன்றில்லை என்னும்
பெருமையு டைத்திவ் வுலகு"

என்ற திருவள்ளுவனின் குறளுக்கு இலக்கணமாகிவிட்டார். வாழ்க பி.ஏ. எஸ். புகழ்




அழியாத் தமிழ் மொழியே!

ஆரியத்தால் ஆங்கிலத்தால் அழிந்தாயில்லை!
ஆர்த்தெழுந்த பெருங்கடலால் அழிந்தாயில்லை!
சிறிவந்த மதப்போரால் அழிந்தாயில்லை!
சிறுமதியர் புறக்கணிப்பால் அழிந்தாயில்லை!
பாரினிலே பலமொழியை ஈன்றும், உன்றன்
பண்புநிறை கன்னிமையில் குறைந்தாயில்லை!
வீரமுடன் வேற்றுமொழி கலந்திட்டாலும்
விளங்குகின்றாய் இன்றும் நீ தனித்தே நின்று!

முக்கழகங் கண்டிட்டாய் தமிழே! மூவர்
முடியரசர் மடிதனிலே தவழ்ந்தாய் நீயே!
மெச்சும் வகை வளர்ந்திட்டாய் தமிழே அன்று!
உன் மேன்மைகெட விடுவாரா கலைஞர் இன்று!
துச்சமென உனையெண்ணி எவர் வந்தாலும்!
தாய் தமிழே! உனையழிக்க முனைந்திட்டாலும்
அச்சமின்றி எதிர்த்திடுவோம்! அடங்கி நில்லோம்!
அருட்செல்வர் ஆணையினால் பகைமை வெல்வோம்!

- பெரு. தமிழ்வேந்தன்



தி.மு.கழக 5-ஆவது பொது மாநில மாநாடு!

1975 - திசம்பர் - 25, 26, 27, 28

வரவேற்புக்குழுத் தலைவர்

பி.ஏ. சாமிநாதன் எம்.பி., அவர்கள் ஆற்றிய வரவேற்புரை

"செந்தமிழே! உயிரே! நறுந்தேனே!
செயலினை மூச்சினை உனக்களித்தேனே!
நைந்தாலெனின் நைந்துபோம் என்வாழ்வு
நந்நிலை உனக்கெனில் எனக்கது தானே!"

பேரன்பு கொண்டோரே! பெரியோரே! எமைப்பெற்ற தாய்மாரே! நல்லிளம்சிங்கங்காள்!

சீரிய சிந்தனைப் பெருஞ்சுனை! யாருக்கும் என்றைக்கும், எதற்கும் அஞ்சாது முழங்கிய அரிமா! அரை நூற்றாண்டு காலம் தெளிவோடும், துணிவோடும் எழுதி எழுதித் தன்மான உணர்வூட்டிய அறிவுக் கருவூலம், கொடுமை கண்டு கொதித்தெழும் எரிமலை, சாதிக் கொடுமையைச் சாடிச்சாடி மாய்ந்து வந்த வீரமாமலை; முடை நாற்றம் வீசுகிற மூடக்கொள்கைகளைச் சுட்டெரித்த பேரொளி! தன்மானத் தலைவன்; பகுத்தறிவுப் பகலவன்; சுயமரியாதைச் சூறாவளி, புரட்சிப் புயல், பண்பாட்டின் பெருமலை; வைதிகத்தின் வெடிகுண்டு, சனாதனத்தின் எதிரி, சாதிகளின் வைரி எனப் போற்றிப் புகழப்பட்ட வெண்தாடி வேந்தன், தந்தை பெரியார் பிறந்த மண்ணிலே, தி.மு.கழக ஐந்தாவது பொது மாநில மாநாடு கோவை மாநகரில் எழிலோடும் பொலிவோடும் நடைபெறுகின்றது.

பல நூற்றாண்டு காலம் பண்டிதர்களால் பதுக்கிவைக்கப்பட்டிருந்த பழந்தமிழை, நாவாடி, நாவாடி நற்றமிழர் மேடைகளில் நடமாடவிட்டதொரு **"தமிழகத்து மோயீசன்"**.

பழம்பாட்டு, பழங்கணக்கு என்றெல்லாம் பறையறைந்து பாழாகிப் போனவரின் முக்காட்டு முகத்திரையைக் கிழித்தெறிந்த புரட்சிப்புயல், புத்துலகப் புதுவார்ப்பு, **"தமிழகத்து இங்கர்சால்"**.

தொடுத்த "தமிழகத்து டெமாஸ்தனிஸ்".

நாடகத் தமிழெங்கே வாழ்கிறது? நலிந்து நாளும் சாகிறது என்ற நிலைமா கண்ணாரத்தமிழெடுத்து கனகமணிச்சரம் தொடுத்த "தமிழகத்து பெர்னாட்சா".

கொள்கை வேறுபட்டவனின் குதிங்கால் நரம்பையறு என அரசியல் நடாத் கொண்டிருந்தவர்கள் மத்தியில், 'மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மண உண்டு' என்று சொன்ன "மகாத்மா" இன்று நம்பிடையே இல்லை! சிங்கா சென்னையிலே, வங்கக் கடலோரம், சந்தனப் பேழையிலே துயில் கொள்கின்ற நமது இதய தெய்வம் பேரறிஞர் அண்ணா அவர்களை நாம் இழந்துவிட்டதற் பின்னாலே, நடத்துகிற முதல் மாநில மாநாடு.

அன்று... தமிழக அரசியலில் தனிவரலாறு படைத்த விருகம்பாக் மாநாட்டுக்குப்பின், இன்று கோவை மாநகரில் அமைந்துள்ள பாடிவீடு. எதிர்க்கட் என்ற நிலையிலிருந்து ஆளுங்கட்சியாக ஆனபிறகு, தி.மு.கழகம் நடத்துகி சரித்திரப் புகழ் படைக்கும் மாநாடு இன்று நடைபெறுகிறது.

1967-ஆம் ஆண்டுவரை, சாதி, மதபேதம் ஒழியவேண்டும்; அன்னை தமிழுக்கு அரியணை வேண்டும்; இந்தி ஆதிக்கம் ஒழிய வேண்டும்; சமத் சமுதாயம் மலர வேண்டும்; அரசியலில் அடக்கி ஆளும் அடிமைத்தனம் ஒ வேண்டும் என்றெல்லாம் கோரிக்கைகளை எழுப்பிக்கொண்டிருந்த நமது கழக சாதனைகளைக் குவித்துக்காட்டிய பெருமையோடு நடத்துகிற மாந இவ்வைந்தாம் மாநில மாநாடு.

இந்த இயக்கம் வாழுமா? வளருமா? எனக்கேள்விக்கணை தொடுத்தவர்களெல்லாம் வெட்கித் தலைகுனியும்வண்ணம் வீறுநடை போ வளர்ந்த கழகத்தின், ஆற்றல்மிகு அடலேறுகள் குழுமியுள்ள மாநில மா இன்றைய மாநாடு. ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே, அரசியலுக்கு இலக்க கூறப்போந்த வள்ளுவப் பெருந்தகை,

"அஞ்சாமை ஈகை அறிவூக்கம் இந்நான்கும்
எஞ்சாமை வேந்தர்க்கு இயல்பு" (தமிழ்மறை - 382)

என்னும் திருவள்ளுவரின் வாக்கிற்கு இலக்கணமாய்த் திகழ்கின்ற, முத்த காவலர், முத்துவேலர் பிள்ளை! அஞ்சாத சிங்கம் அஞ்சுகத்தின் த போராட்டக்களம் நோக்கிப் புறப்படு தம்பீ! என அண் ஆணையிட்டபோதெல்லாம், விதிவிலக்குத் தாருங்கள் எனக் கேட்க போராட்டக்களம் நோக்கிப் புயலெனப் பாய்ந்த புலி, தமிழன் தன்மானம் க



தண்டவாளத்திலே தலை வைத்துப்படுத்த ... தங்கம்! கொக்கோடி அடைகாக்கும், குருகோடி பாளையிலே தனிமைச் சிறையேற்ற தங்கம்! கொக்கோடி அடைகாக்கும், குருகோடி

வினையாடும் பொன்னிநதித் தீரன்! தைக்கோடிப் பிறைபோலத் தமிழ்க்கோடி மாந்தர் வாழத் தனைத்தந்த உதாரன்! எக்கோடி தந்தாலும், முப்பத்து முக்கோடி தேவரே வந்தாலும் தான் கொண்ட கொள்கையை மாற்றத் துணியாத இலட்சியத் திருமகன்! மீசை அரும்பாத நாள் முதலே தமிழ்த் தேசத்திற்காய்த் தன்னை அர்ப்பணித்துக்கொண்ட மாவீரன்!

"தமிழுண்டு தமிழ் மக்களுண்டு - இன்பத்
தமிழுக்கு நாளும் செய்வோம் நல்ல தொண்டு
தமிழ் என்று தோள்தட்டி ஆடு - நல்ல
தமிழ் வெல்க வெல்க என்றே தினம் பாடு"

என்னும் புரட்சிக்கவி பாரதிதாசனின் கனவை நனவாக்கிய ஏந்தல்! மாண்பிழந்த தமிழகத்தை - மண்புதைத்த தமிழினத்தை - வான் காட்டும் நிலவாக்கி வகை கூட்டி நிற்பவன்!

"எத்திக்கும் புகழ்மணக்க - தித்திக்கும் தமிழ் முழங்க - எழிலார்ந்த ஆட்சி கண்டார் அண்ணன் வழி வந்தோர்" என்று நாடும் ஏடும் போற்ற நல்லவரெல்லாம் வாழ்த்த - நாடாளும் நம் கலைஞர் இம்மாநாட்டுக்குத் தலைமையேற்கிறார். அண்ணனின் மறைவுக்குப் பின், அவர் அடியொற்றி நடைபோடும் நம் அருமைக் கலைஞர் தலைமையேற்கிற முதல் மாநில மாநாடு! சிறப்புப் பெற்றிடும் இம்மாநாட்டின் தலைமையேற்று, தெளிவுற்ற கருத்துக்களை, இந்நாட்டின் நலிவு நீக்கத் தருகின்ற, தென்பொதிகைப் பூங்காற்றே! திருநாட்டின் எழில் விளக்கே! நாடாளும் தங்களை, நாடாளுமன்ற உறுப்பினன் நான், கைகுவித்து வணங்குகிறேன். கழகத் தலைவா! அழகுத் தமிழே! வருக! வருக!

தீந்தமிழ்ப்புலவன் - தெள்ளுதமிழ்ப் பேச்சாளன் - தி.மு.கழகத்தின் பொதுச் செயலாளன் - நற்றமிழ்க் காவியம்! நடமாடும் பல்கலைக்கழகம்! என்று ஆருயிர் அண்ணனால் அழைக்கப்பெற்றவர்! தன்னை 'இழுவையச்சு' என மாற்றார் இகழ்ந்துரைத்த போதும், நான் கொண்ட கொள்கையினின்று நழுவேன்! நழுவேன்! எனச் சூளுரைத்த நாவலர், வேங்கை நிகர்த்த உரு - வேலின் பாய்ச்சல் கண்டு இமை கொட்டாத எஃகு நெஞ்சம், அடக்கத்தின் கருவூலம் - சிந்துபாடும் அருவியெனச் சிந்தனைக்கும் வேலைதரும் செந்தமிழ்ப் பேருரையாற்றுவார் எனக் கலைஞர் உடன்பிறப்புக்கு மடல் எழுதிப் பாராட்டிய எங்கள் நாவலரே 'தம்பி வா! தலைமையேற்க வா! உன் ஆணைக்குக் கட்டுப்பட்டு நடக்கிறோம்... வா! தம்பி வா! என அண்ணன் செவ்வாய் மலர்ந்தழைத்த சிறுத்தை, டாக்டர் நாவலர் அவர்கள்! இந்தச் சீரிய மாநாட்டினைத் திறந்து வைக்கின்றார்; பள்ளியில்லா ஊரில்லை என்ற வண்ணம்; கல்விக் கூடங்களைத் திறந்த நாவலர் அவர்களே! இன்று மாநாடு திறக்க வந்தீர்! மனமுவந்து வரவேற்கிறேன் வருக! வருக!



பேச்சு, 'பகைவரின் தாள் நோக்குகிற துரோகத்தைத் தூளாக்கும் வாள்வீச்சு' என்பதனை நாமறிவோம்.

"காலத்தால் மூத்தமொழிபெற்ற பிள்ளை,
ஞாலத்தைத் தொழில் கேட்கவைத்த
கோலச்சொல் அறிஞர்க்கு வாய்த்த தம்பி,
ஆலமரக் கழகத்தின் ஆணிவேர்,
தொண்டர்க்குத் தோழன்,
ஓலமிடும் எதிர்ப்புதனை ஒடுக்குகின்ற - உடன்பிறப்பு!
சீலமிகு பேராசான் அன்பழகன்..."

என்று கவிவரியால் நம் காவியத்தலைவனிடம் வாழ்த்துப்பெற்ற, கழகப் பொருளா இப்புவியை வாழ்விக்க வந்துதித்த முப்பெரும் தலைவர்களிலே ஒருவரா பேராசிரியர் அவர்களே! பெருமை பொங்க அழைக்கின்றேன்! வருக! வருக!!


"நட்பிற்கு வீற்றுருக்கை யாதெனில் கொட்பின்றி
ஒல்லும் வாய் ஊன்றும் நிலை" (பொதுமறை -789)

என்னும் குறளோவியத்துக்குச் சான்றுபகரும் நிலையில், எங்களது இலட்சிய பயணத்தில் துணைவருகின்ற, தோழமைக் கட்சித் தலைவர்களே!

"சலுகை போனால் போகட்டும் - என்
அலுவல் போனால் போகட்டும்
தலைமுறை ஒரு கோடி கண்ட
தமிழ் விடுதலையாகட்டும்"

என்று இலட்சிய வீர முழக்கமிட்டுப் பேரறிஞர் அண்ணா உருவாக்கித் அமைச்சரவையிலே இடம் பெற்றுச் சிறப்பித்து வருகின்ற மாண்பமை அமை பெருமக்களே!

கழகம் ஆணையிட்டால், போர்க்களமாயினும் தேர்தல் களமாயினும், கழ பணிக்களமாயினும் வெட்டி வா! என்றால் கட்டிவரும் கழகத்தின் கண்களெ திகழும் தலைமைக் கழகச் செயலாளர்களே! நாடாளுமன்ற, சட்டமன்றப் பேர மேலவை உறுப்பினர்களே! நகர் மன்றத் தலைவர்களே! தி.மு.கழகத்தை எதிர்நே வந்த சோதனைகள் அனைத்தையும் தத்தம் மாவட்டங்களில் வென்று காட்டிய மறவர்களாம் மாவட்டச் செயலாளர்களே! ஒன்றியக் கழக - நகரக் கழக - உட்கி ளைக்கிளை - சார்பு மன்றச் செயல் வீரர்களே!



வைக்க வந்துள்ள சான்றோரே! எத்திக்கும் முத்தமிழின் பெருமை கூறும் வகையில், ஏற்றவுரை தருவதற்கு வந்துள்ள, கழகத்தின் இடிமுழக்கப் பேச்சாளர்களே! இசை விருந்தளிக்க வந்துள்ள இசை நிகழ்ச்சி விற்பன்னர்களே! கலைநிகழ்ச்சிக் கலைஞர்களே! நாட்டுக்கு நலம் பயக்கும் நல்ல கருத்துக்களை நாடகமாக்கித் தந்துதவ வந்துள்ள நாடகக் குழுவினரே!

கொள்கை மறவர் கூடுகின்றார் கோவையிலே! கொடியேந்திப் படைதிரட்டிக் குரல் கொடுக்க வாரீர்! எள்போட இடமின்றி இணைந்துவரும் கூட்டம் - அதில் கள் உண்ட வேங்கை போல் காளையர் நடமாட்டம்!


இல்லாளை, குழந்தைகளை உடன் அழைத்து வாரீர்! இருளகலப் பல விளக்கம் தெளிவுறவே வாரீர்! நல்லாட்சி நிலைத்திடவே நம் பணிகள் என்ன? நம் கலைஞர் அறிவிப்பார்! நாம் அதனை ஏற்போம் - என்ற கழகக்குரல் முரசொலிக்கக் கேட்டு,

"பற்றி விடாஅ இடும்பைகள் பற்றினைப்
பற்றி விடாஅ தவர்க்கு" (துறவு - 347)

எனத் துறவுக்கு இலக்கணம் வகுத்தார் திருவள்ளுவர். பற்றற்று வாழ்கின்ற துறவிகட்கும், மொழிப்பற்று, இலக்கியப்பற்று, இனப்பற்று, இறைப்பற்று உண்டென்பதை உணர்ந்து ஆண்டிகள் கூடிடுவோம் - திருவோடுடன் வருக - சரித்திரத்துப் பேர்வழிகள் - காவியுகு நீர் உலர - சிவசிவா என்றிராமல் - பற்றற்ற துறவாயினும் - என்றெல்லாம் தலைப்பிட்டு, உடன்பிறப்புக்குக் கலைஞர் எழுதிய மடல்கண்டு, வங்கக் கடலே இங்கு வந்து குடிகொண்டு விட்டதோ என ஐயுறும் வண்ணம், இங்கே அண்ணனின் வடிவில், அண்ணன் உயிலில் குறிப்பிட்ட உயிர் இலட்சியத்தை முழங்க வந்துள்ள இலட்சோப லட்ச, கழகக் காளையரே! இளையோரே! வளையோரே!! உங்கள் அத்தனை பேரையும் தலை தாழ்த்திக் கை குவித்துக் கனிவுடன் வருக! வருக!! என அழைக்கின்றேன்.

ஒரு புத்தகத்தைப் படிக்கத் தொடங்குமுன் பொருளடக்கத்தை நோக்குவது மரபு. அந்த அடிப்படையில் இன்றைய அரசியல் நிலைமைகளைத் தொட்டுக் காட்டுவது என்னுடைய தலையாய கடமை; கோவைப் பெருநகரில் செக்கிழுத்த செம்மலாம் சிதம்பரனார் பூங்காவில், கொள்கைக்குன்று என்.வி.நடராசன் பந்தலில், உழைப்பின் உருவம், கொங்குச் சீமையில் எங்கள் அரசியல் ஆசான் அண்ணன் உடுமலை நாராயணன் அரங்கிலே இந்த மாநாடு நடைபெறுகிறது. நீங்கள் எல்லாம் இங்கே சிங்கமுழக்க உரையினைக் கேட்க இருக்கிறீர்கள்.

1967-ஆம் ஆண்டில் நடைபெற்ற பொதுத் தேர்தலின்போது இந்தியத் துணைக் கண்டத்தில் பல்வேறு மாநிலங்களில் காங்கிரசல்லாத அரசுகள் தோன்றின. இந்தியாவில் ஜனநாயக விளக்குகள் - கார்த்திகைத் தீபம்போல் தோன்றிவிட்டன - என்று உலகத்திலுள்ள ஜனநாயகவாதிகள் பெருமைப்பட்டனர்.




சில; ஊதி அணைக்கப்பட... ...முகத்து
அணையாமல் - ஆடாமல் - அசையாமல் - ஒளிவிடும் ஒரே ஒரு விளக்கு
அணையாவிளக்கு - நந்தாவிளக்காக இருப்பது தி.மு.கழக ஆட்சியே!

அதை ஊதி அணைக்கச் சிலர் முயன்றார்கள்; அவர்களது உதடுகள்தா கருகின; அதை உடைக்கச் சிலர் வந்தார்கள் - அவர்களது கைதான் முறிபட்ட இத்தகைய அறிவு விளக்கை நமக்குத் தந்தது நமது அண்ணன் பேரறிஞர் அண்ணா அவர்கள்.

இருண்டு கிடக்கும் இப்போதைய இந்தியாவில் ஒளிவிடும் ஒரே ஒ ஜனநாயகச் சுடர்விளக்கைத் தாங்கி நிற்பவர் நமது தானைத் தலைவர் - தண்டமி காவலன் - டாக்டர் கலைஞர் அவர்கள்தான். ஏனெனில், ஜனநாயகத்தைப் பற் நாங்கள் அறிஞர் அண்ணா அவர்களிடம் பயிற்சி பெற்றவர்கள்.

"வேட்டுமுறை வேண்டாம் தம்பி - ஓட்டுமுறைதான்
உயர்ந்தது!" என்று போதித்தவர் அவர்.

"ஒரு ஜனநாயக நாட்டில் ஒரு தலைவனின் சிலையை இன்னொரு தலைவ திறக்கிறான். ஒரு சர்வாதிகார நாட்டில் ஒரு தலைவனை இன்னொரு தலைவ சிறைக்கு அனுப்புகிறான் அல்லது சவக்குழிக்கு அனுப்புகிறான்" என்று கூறிய அறிஞர் அண்ணா.

"ஜனநாயகம்... தாங்கள் ஆட்சியிலிருக்கும்வரை சிலருக்குப் பிடிக்கு  தங்களை ஆட்சியிலிருந்து இறக்குவார்கள் மக்கள் என்று தெரிந்ததும், ஜனநாயக அவர்களுக்குப் பிடிக்காது!" என்று தீர்க்கதரிசனத்தோடு கூறியவர் அண்ணா.

ஜனநாயகம் என்பது மக்களின் எண்ணங்களை - அந்த எண்ணங்கள் தரு சூட்டை - நீராவியை வெளியேற்றும் ஒரு கருவி. அதை வெளியேற்றாமல் அடை விடுவீர்களானால் - சூட்டை, நீராவியை வெளியேற்றத் தவறினீர்களானால் - அ என்ஜினே வெடித்துவிடும்.

"ஜனநாயகம் என்பது, மக்களுக்காக - மக்களால் - மக்களைக் கொண் ஆளப்படும் ஆட்சி என்பதுதான்" என்று **ஆபிரகாம் லிங்கன்** சொன்னா அவ்வாறன்றி ஆளப்படும் ஆட்சி அஃது எங்கு நடப்பினும் ஜனநாயக ஆட் ஆகாது. அத்தகைய ஆட்சிகள் பொதுவுடமை அல்லது சோசலிச நாடுகள் நடைபெறலாம். ஆனால் அங்கே, முதலாளிகளை ஒழித்துவிட்டு - நிலப் பிரபுக்கள ஒழித்துவிட்டு மக்களுக்கு அனைத்தும் உடைமை என்ற நிலையை ஏற்படுத்திவிட் அதைச் செய்வார்கள்.

ஆனால் இங்கே என்ன நடக்கிறது? டாட்டாவும் இருக்கிறார். பிர்லா இருக்கிறார். நிலப்பிரபுக்களும் இருக்கிறார்கள்; அதாவது மக்களைச் சுரண்டு

யந்திரம் அப்படியே இருக்கிறது. ஆனால் ஆட்சியில் மட்டும் கடுமையான சட்டங்கள். இன்றைக்கு இந்தியாவின் நிலைமை என்ன?

தொழிலாளி - வேலை நிறுத்தம் செய்யக் கூடாது; உரிமை கோரக்கூடாது; திடீர் திடீரென வெளியேற்றும் படலங்கள்; வேலைப்பளு! ஆனால் தொழிலாளியைச் சுரண்டும் முதலாளிகளுக்கு எதிராகச் சட்டங்கள் - திட்டங்கள்? எதுவுமே இல்லை. அதாவது சுரண்டல் யந்திரம் வெகுவேகமாக - பயங்கரமாகச் சுழல்கிறது. சுரண்டுவோன் கொழுக்கிறான்; சுரண்டப்படுவோன் மீது நிமிடத்திற்கு ஒரு சட்டம் பாய்கிறது.

மத்திய அரசின் சட்டங்கள்படி கம்பெனி 'ஆக்ட்' என்பதே பித்தலாட்டம்; முதலாளிகளுக்குச் சாதகம்; சில லட்சங்கள் மூலதனம் போட்டு வங்கியில் நிதியுதவி பெற்றும் பங்குதாரர்களிடம் பணம் பெற்றும் கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள கம்பெனிகளுக்கு, சிலர் அதிபதிகள் ஆகிறார்கள். இப்படி உருவான குறிப்பிட்ட சிலபேரிடம் ரூ. 500 கோடி, ரூ. 600 கோடி லாபம் வரும் தொழில்கள் சிக்கியிருக்கின்றன. இவர்கள் இந்திய நாட்டின் பொருளாதாரத்தையே ஆட்டிப்படைக்கிறார்கள். அவசர காலச்சட்டம் இன்னும் இவர்கள் பக்கம் நெருங்க அஞ்சுகிறது. அதனால்தான் டாட்டாவும், பிர்லாவும் முதல் மாலை எடுத்துக்கொண்டு ஓடுகிறார்கள்.

தொழிலாள வர்க்கமே! எண்ணிப்பார்! பல்லாண்டுகளாகப் போராடிப்பெற்ற உரிமைகளை, முதலாளியின் சுரண்டல் யந்திரத்திற்குக் காவு கொடுக்க உதவும் கூட்டத்தை நம்பப்போகிறாயா? இன்றைக்கு இந்தியத் துணைக்கண்டத்தில் ஏற்பட்டிருக்கிறநிலை - பழங்காலந்தொட்டு அவர்கள் கையாண்டு வந்திருக்கிற முறைதான். தங்களது ஆட்சிக்கு இடையூறு ஏற்படுகிறது என்றால் - அடுத்த தேர்தலில் தாங்கள் வெற்றிபெற முடியாது என்று தெரிந்தால் இப்படிப்பட்ட அதிர்ச்சி வைத்தியங்களைக் கொடுத்துத் தங்களைக் காத்துக்கொள்வது அவர்கள் கையாண்டு வந்த அரிய கலை.

'வெளிநாட்டுப் படையெடுப்பு! வெளிநாட்டுப் படையெடுப்பு!! என்று சொல்வார்கள். நெருக்கடி நிலையைப் பிரகடனப்படுத்துவார்கள். போர் நிகழ்த்துவார்கள். உடனே தேர்தல் வைப்பார்கள். வெற்றிபெறுவார்கள் - இஃது ஒரு முறை.

ஆனால் இந்தமுறை - தேர்தல் வருவதற்கு வெகு நாள்களுக்கு முன்பே வடக்கே ஆட்டம்காணத் தொடங்கியது. உடனே பழைய பல்லவியைப் பாட முடியவில்லை. புதுப்பல்லவி வந்தது. அதுதான் உள்நாட்டு அபாயம்! அந்த உள்நாட்டு அபாயம் தோன்றிய கதை என்ன? குஜராத் மாநிலத்தில் தேர்தல் வந்தபோது ஜெயப்பிரகாசரும், மொரார்ஜியும் சேர்ந்து இந்திரா காங்கிரசை வீழ்த்தினார்கள். அதன்பிறகு அலகாபாத் தீர்ப்பு. அதன்பிறகு இந்தியாவில் உள்நாட்டு நெருக்கடி நிலைப் பிரகடனம்; பத்திரிக்கைத் தணிக்கை முறை; கைதுகள்; கெடுபிடிகள்.

பகுதிகளிலிருந்து குரல் எழுந்தது. இந்த... பிரிட்டிஷ் தொழிற்கட்சி முதியவர்கள் பலரு முதன்முதலாகக் குரல் எழுப்பிய பிரிட்டிஷ் தொழிற்கட்சி முதியவர்கள் பலரு கூறினார்கள். இந்தியாவில் ஜனநாயகம் இல்லையா? இங்கே நான்கு மாநிலங்களி எதிர்க்கட்சி அரசுகள் நடைபெறுகின்றன. இங்கேயா ஜனநாயகம் இல்லை? என்று கேட்கிறார்கள்!


ஆம்... இந்தியாவில் நான்கு காங்கிரசல்லாத அரசுகள் நடைபெறுகின்றன.

ஒன்று கேரளத்தில் அச்சுத மேனனின் ஆட்சி நடக்கிறது. அந்த ஆட்சி இந்திரா காங்கிரஸின் ஆதரவோடு - இந்திரா கட்சியின் திட்டங்களை நிறைவேற்றும் அரசு. வெளிப்படையாகச் சொல்ல வேண்டுமானால் அஃது இந்திரா காங்கிரஸின் நிழல் ஆட்சி (Shadow Government). இன்னொன்று காஷ்மீரத்தில் நடக்கும் சேக் அப்துல்லாவின் ஆட்சி. அவரைப் 14 ஆண்டுகள் சிறையிலிட்டுப் பார்த்தார்கள். அவரது கட்சியான தேசியக் கட்சியைத் தடை செய்தும் பார்த்தார்கள். ஆனால் அவர் கேட்டது அனைத்தையும் கொடுத்துவிட்டுத்தான் அங்கே ஒரு ஆட்சியை சேக் அப்துல்லாவை முதல்வராகக் கொண்டு அமைத்திருக்கிறார்கள். அப்போதும் பிரச்சனை தீரவில்லை!. ஆனால் இவ்வளவு சோதனைகளுக்கும் இந்திராகாந்தி அம்மையார் இறங்கிவந்து தயாரானது எந்தச் சூழ்நிலையில், 1[illegible] ஆண்டுகளாகத் தடை செய்யப்பட்ட தனது நேசனல் கான்ப்ரன்ஸ் பார்டியை முதல்வ[illegible] ஆனவுடன் புதுப்பித்துக் கொண்டார். அம்மையார் இந்திராவின் கோரிக்கையை நிராகரித்து லட்சக்கணக்கான மக்கள் முன்பு தானும் உறுப்பினராகி வீரகர்ஜனை புரிந்த காட்சியைப் பார்க்கிறோம். அம்மையார் இந்திராவின் எண்ணம் காஷ்மீரைப் பொறுத்தவரை தோல்வியாக முடிந்துள்ளது.

மற்றொரு ஆட்சி குஜராத்திலே நடக்கிறது. அங்கே ஒரு கட்சி ஆட்சி இல்லை. ஜனதா கட்சி என்ற பல கொள்கைகள் கொண்ட பல கட்சிகளின் கூட்டணி ஆட்சி.

ஆனால் தமிழகத்தில்தான் ஒரேஒரு கட்சியின் ஆட்சி. ஒரே ஒரு கொள்கையின் ஆட்சி! ஒரே ஒரு ஜனநாயகப் பாசறையான தி.மு.கழகத்தின் ஆட்சி.

இங்கே ஒரு ஆட்சி இப்படி நடக்கிறது என்றால்... அதற்குக் காரணம் டில்லியின் ஜனநாயகப் பெருந்தன்மை அல்ல! அங்கிருப்போரின் கருணையால் போனால் போகிறது என்று போட்ட **பிச்சை அல்ல**. இந்த ஆட்சி நிலைத்திருக்கிறது என்றால் அதற்குக் காரணம்... ஆயிரம் **சாணக்கியர்** வந்தாலும், அறுபதினாயிரம் **மாக்கியவல்லிகள்** வந்தாலும், ஆறுகோடி **சகுனிகள் - குடிலர்கள்** வந்தாலும் அவர்களின் சதித்திட்டத்தை ஒரே ஒரு புன்னகையால் படுசூரணமாக்கும் எங்கள் படைத் தலைவன் **கலைஞரின் ராஜதந்திரம்** தான்.



களம்புகவும் - கடும்போர் நிகழ்த்தவும் ... தயார் தயார் எனத் தோள்தட்டியபடி என் எதிரே தண்டனை தந்தாலும் உட்கார்ந்திருக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் இலட்சோபலட்ச வீரர்கள்தாம்!

வரலாற்று ஆசிரியர்களுக்குக் கூறிக்கொள்வோம். வெளிநாட்டு அபாயத்தால் ஒரு நெருக்கடி; உள்நாட்டு அபாயத்தால் ஒரு நெருக்கடி ஆகிய இரண்டு நெருக்கடி நிலைகள் இப்போது இங்கே இருக்கின்றன.


ஆனால் இரண்டல்ல; இன்னும் இருநூறு சட்டங்களைக் கொண்டு வாருங்கள் அப்போதும் தி.மு.கழகம் வாழும், அப்போதும் தி.மு.கழகக் கொடி பறக்கும். அப்போதும் தி.மு.கழக ஆட்சியே நடக்கும். ஏனெனில், எங்களை எந்த நெருக்கடியிலும் வழிநடத்த ராஜதந்திரத் தலைவர்கள் இதோ இங்கே வீற்றிருக்கிறார்கள். கழகத்தைக் காத்திட எந்தத் தியாகத்தையும் செய்யும் வீரர்கள் இதோ எதிரே அமர்ந்திருக்கிறார்கள்.

நெருக்கடி நிலை பற்றி விளக்கி நாம் பேசக்கூடாது. மத்திய அரசு ஆணை. ஆனால் அதற்கு அப்பாலிருந்து பேசுகிறோம். நெருக்கடி நிலைபற்றி விளக்க யாருக்கும் உரிமை இல்லை. ஆனால் இங்கே என்ன நடக்கிறது? நெருக்கடி நிலை ஏன் கொண்டு வரப்பட்டது; யார்? யார்? அரசுக்கு எதிராக இருந்தார்கள். என்ன பேசினார்கள்? என்ன செய்தார்கள்? என்பது மட்டுமன்று. அதற்கு அப்பாலும் வரன்முறை மீறி இந்திரா காங்கிரஸ்காரர்களும் அவர்களது தோழமைக் கட்சிகளும் விளக்குகிறார்கள். அந்த விளக்கம் பத்திரிக்கைகளில் வெளியிடப்படுகிறது.

ஆனால், இதற்கு மாறுபட்ட கருத்தைச் சொல்ல யாருக்கும் உரிமை கிடையாது. அவர்கள் அப்படிப் பேசினால் கூடப் பத்திரிக்கைகள் வெளியிடுவதில்லை. விமர்சனம் என்பது சார்ந்து பேசலாம்; எதிர்த்தும் பேசலாம். இரண்டுமே கூடாது என்பதுதான் சட்டம்.

ஆனால் இங்கே சார்ந்து பேசுவதற்கு அனுமதிக்கிறார்கள், எதிர்த்துப் பேச உரிமை இல்லை. இந்தப் பாரபட்சப்போக்கு மாற்றி அமைக்கப்பட வேண்டும் என்று இந்த மாநாட்டின் வாயிலாய் மத்திய அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

பத்திரிக்கைத் தணிக்கை முறையைப் பற்றியும் நாம் ஒரு கருத்தைச் சொல்லியாகவேண்டும். நமது இதயகீதமான மாநில சுயாட்சி என்ற சொல்லே பத்திரிக்கைகளில் வராமல் தடைசெய்யப்படுகிறது. ஆனால் நமது இலட்சியத்தைக் கேலி பேசுபவர்களின் பேச்சு மட்டும் அனுமதிக்கப்படுகிறது. இந்த மாநாட்டின் வாயிலாக மத்திய அரசைக் கேட்டுக்கொள்கிறோம். இந்த ஒரு சார்புத் தன்மையிலிருந்து விடுபடுங்கள். தி.மு.கழகத்தின் வேண்டுகோள்கள் இப்போது புறக்கணிக்கப்படலாம்; புறம் தள்ளப்படலாம். ஆனால்... எதிர்காலத்தில் அவை வெற்றிபெறும் என்பது திண்ணம்.




ஏனெனில், தி.மு.கழகம் இந்த நாட்டிற்காகப் பேசுகிறது. இந்த மண்ணிற்காகப் பேசுகிறது. இந்த நாட்டு மொழிக்காக - கலைக்காக - பண்பாட்டிற்காக - இந்த நாட்டு ஏழை மக்களின் நல்வாழ்விற்காகப் பேசுகிறது. பேசுவது மட்டுமன்று ஏராளமான சாதனைகளைச் செய்திருக்கிறது. இந்தியத் துணைக்கண்டத்தில், இந்தி மொழி ஆதிக்கத்தை முறியடித்துத் தாய் மொழிக்கு ஏற்றம் கொடுத்துள்ள ஒரே மாநிலம் நம் தமிழகம் தான். தாய்மொழியாம் தமிழ் - ஆங்கிலம் என்கிற இரு மொழிக் கொள்கையை அமுல்படுத்தியுள்ளது.

நமது கழக அரசு செய்திருக்கிற சாதனைகளை இந்நாட்டு மக்கள் பசுமரத்தாணி போல் மனதில் பதிய வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

தொழுநோய் இரவலருக்கு மறுவாழ்வு - கண்ணில்லா மாந்தருக்கு இலவசக் கண்ணொளி - கை ரிக்சா ஒழித்து சைக்கிள் ரிக்சா வழங்குதல் - சுயமரியாதைத் திருமணச் சட்டம் - கைம்பெண்களுக்கு மறுவாழ்வு- கருணை இல்லங்கள் - ஏழை எளியோருக்கு வீட்டுமனை - நலப்பட்டா, விவசாயத் தொழிலாளர்க்குக் குடியிருப்பு மனைச்சட்டம் - தாழ்த்தப்பட்டோருக்கு ஓர் இலட்சம் வீடுகள் வழங்கும் திட்டம் - குடிசை மாற்று வாரியம், குடிநீர் வடிகால் வாரியம் - அரசு ஊழியர் குடும்பப் பாதுகாப்புத் திட்டம்; விவசாயிகளுக்குக் கடன் நிவாரணம், பசுமைப்புரட்சித் திட்டம், பேருந்து நாட்டுரிமை; பூம்புகார் போக்குவரத்துக் கழகம், ஓய்வுபெற்ற இராணுவ வீரர்களுக்கு உதவி- தமிழ்நாடு பொருள் போக்குவரத்துக் கழகம்... இப்படி எண்ணற்ற சாதனைகளை நாம் செய்திருக்கிறோம். இதைக் கேலி பேசுபவர்கள் இருக்கலாம்.

ஆனால் இப்போது எண்ணிப்பாருங்கள். மக்கள் அமைதியாக அமர்ந்து பழையவற்றை அசைபோட்டுப் பார்க்கிறார்கள். இந்த அரசு செய்த சாதனைகளை எண்ணிப் பார்க்கிறார்கள். இதுவன்றோ 'நல்ல அரசு' என்று முடிவுக்கு வந்திருக்கிறார்கள். ஆனால், இந்த நல்லரசைக் கவிழ்க்கச் சிலர் துடியாய்த் துடிக்கிறார்கள்.

நம்மை அழிப்பதாகக் கருதிக்கொண்டு சிலர், நாங்கள் தான் அண்ணாவின் உண்மைத் தம்பிகள் என்கிறார்கள். நீங்கள் கேட்பது எனக்குப் புரிகிறது. குயிலின் குரல் எடுத்துக் கோட்டான்கள் கூவிட முடியுமா? மயிலின் தோகை விரித்துக் காட்டுக் கோழிகள் ஆட்டம் போட முடியுமா? என்கிறீர்கள். ஆனால் அத்தகைய விந்தையான அரசியல் விளையாட்டுகள் இந்தச் செந்தமிழ்த் திருநாட்டில் அவ்வப்போது சிலர் செய்து பார்க்கிறார்கள். முள்ளம் பன்றிகள் முயல் வேடம் போட்டால் நாட்டு மக்களுக்குத் தெரியாதா? வல்லூறுகள் வண்ணப் புறாக்களாய் நடித்தால் தெரியாமல் போய்விடுமா? இலட்சியத்தின் அடிப்படையில் கட்டப்பட்ட கற்கோட்டை இது. அலைகள் ஓராயிரம் ஒன்று சேர்ந்து தாக்கினாலும் கற்பாறைகள் என்றும் கரைவதில்லை.



இருப்பதிலே பெருமைப்படுகின்றவர்கள் நாம்.


இயேசு பிறப்பதற்கு முன்னாலே, கரத்திலே வாளேந்திப் புரட்சிக்கொடி உயர்த்தினான் ஸ்பார்டகஸ் என்பவன். அவன்தான் உலகத்தின் முதல் புரட்சிவாதி என்று சரித்திர ஆசிரியர்கள் சொல்கின்றனர்.

அதே கிரேக்கத்தில் தோன்றி, எதையும் ஏன்? எதற்கு? என்று கேள்வி கேட்டு அறிவுப்புரட்சி உண்டாக்கினான் சாக்ரட்டீஸ்; அயர்லாந்திலே டிவேலரா மொழிப்புரட்சி நடத்தினான். துருக்கியிலே கமால்பாட்சா மொழிப் புரட்சி நடத்தினான். ஆனால் அங்கெல்லாம் மொழிக்காகத் தீக்குளித்தவர்கள் யாருமில்லை. இந்திக்கு இந்நாட்டில் ஆதிக்கமா? எம்மனோரே சிந்திப்பீர்! என்ற முழக்கம் கேட்டு, மொழிக்காகத் தீக்குளித்து 8 பேர் செத்த வரலாறு தமிழகத்தில் தான்.

அத்தகைய வரலாற்றுக்குச் சொந்தக்காரர்கள் நாம். கொங்கு மண்டலமே இதுவரை காணாத மாபெரும் ஊர்வலத்தை நாம் நடத்தி, இம்மாநாட்டு முகப்பில் டாக்டர் கலைஞர் அவர்கள் கொடியேற்றினார்கள். இந்த இருவண்ணக் கொடி இரவோடு இரவாக அவசரத்தில் உருவாக்கப்பட்டதல்ல... தமிழ் - தமிழினம் - தமிழகம் நல்வாழ்வு பெற்றிட உருவாக்கப்பட்ட இந்தக்கொடியிலிருக்கும் கருப்பு வண்ணம் எங்கே மங்கி விடுமோ என்று கருதித்தான், திருச்சி சின்னசாமி, சத்தியமங்கலம் முத்து, கீரனூர் முத்து, மாணவன் சாரங்கபாணி, அரங்கநாதன் போன்ற தியாகச் செம்மல்கள், தங்கள் பொன்னிற மேனியைத் தீக்கிரையாக்கி, உடலை கருக்கிக் கருப்பு வண்ணத்திற்கு மெருகூட்டியிருக்கிறார்கள். இந்தக் கொடியிலிருக்கிற சிவப்பு வண்ணம் எங்கே மங்கி விடுமோ என்றுதான், தூத்துக்குடி தீரன் கே.வி.கே.சாமி, கொங்கு மண்டலத்துக் கொள்கை வீரன் ஆரோக்கியசாமி, திருப்பூர் கணேசன், இராமபட்டணம் லத்தீப், பொள்ளாச்சி இராமசாமி, மாணவன் இராசேந்திரன் போன்ற எண்ணற்ற தியாகச் செம்மல்கள் கொட்டிய குருதிதான் சிவப்பு வண்ணத்தை மெருகேற்றிக் கொண்டிருக்கிறது.

இத்தகைய இலட்சியவாதிகளைத் - தியாகிகளைப் பெற்ற பெருமை தி.மு.கழகத்திற்குத்தான் உண்டு. அண்ணன் உருவாக்கிய தி.மு.கழகமே எங்கள் இலட்சியப் பாசறை! அண்ணன் உருவாக்கிய கொடியே எங்கள் கொடி! அண்ணன் தந்த உதயசூரியன் சின்னமே எங்கள் சின்னம்.

பதவிகள் கிடைக்கும், பட்டங்கள் கிடைக்கும், பகட்டாக வாழ்வோம் என இந்தக் கட்சிக்கு வந்தவர்கள் அல்லர் நாம். சிறைச்சாலை என்றாலும், சிம்மாசனம் என்றாலும் ஒன்றெனக் கருதுபவர்கள் நாம்! அண்ணாவின் அறிவார்ந்த பேச்சிலே உணர்வுபெற்று வந்தவர்கள் நாம்! அந்த அண்ணனின் உயிர்மூச்சே மாநிலத்தில் சுயாட்சி! மத்தியிலே கூட்டாட்சி!!




தேர்தலும், தமிழகத்தில் சட்டமன்றத் தேர்தலும் 1976 பிப்ரவரியிலே நடைபெற வேண்டும். தேர்தல் நடக்குமா என்பது ஒரு கேள்விக்குறி. நடந்தாலும் நாடாளுமன்றத் தேர்தலும், சட்டமன்றத் தேர்தலும் இணைந்து நடக்குமா என்பது இன்னொரு கேள்விக்குறி. இதற்கு ஒரு முற்றுப்புள்ளி வையுங்கள் என்று என் படைத் தலைவரை கேட்டுக் கொள்கிறேன். கழகம் ஜனநாயகத்தை மதிக்கின்ற கட்சி; நடாளுமன்றத்துக்கும், சட்டமன்றத்துக்கும் பிப்ரவரி 76-இல் தேர்தல் வைத்தாக வேண்டும் என்பதுதான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கோரிக்கை. அந்தச் ஜனநாயக முறைப்படி வரும் தேர்தலுக்குத் தி.மு.கழகம் தயார் என்று நம் தலைவர் கலைஞர் அறைகூவல் விடுத்துவிட்டார்.

பதவிக்காகத் தொடங்கிய இயக்கம் அல்ல தி.மு.க. நமது இலட்சியத்திற்காகப் போராடவும், சிறைக்கோட்டம் செல்லவும், ரத்தம் சிந்தவும், குண்டடிபடவும், பல பாளையங்கோட்டைகளைச் சந்திக்கவும் தொடங்கிய கழகம்தான் தி.மு.கழகம். 1967க்குப் பின் இந்த ஒன்பது ஆண்டுகாலம் ஆட்சிப் பொறுப்பு என்ற நிழலில் போர்க்களத்தில் இருந்து ஓய்வு கண்டோம் என்று கருதுவோம். மீண்டும் முன்னைவிட வேகமாகக் **காந்தி - அண்ணா** வழியில் நம்முடைய போர் முறைகளை அறிவிக்கும் மாநாடே இந்த மாநாடு.


தமிழகத்தில் தி.மு.கழக அரசுக்கு எதிராகச் ஜனாதிபதி ஆட்சி என்ற சதித்திட்டம் வருமேயானால், நாடாளுமன்ற உறுப்பினர்களான நாங்கள் மட்டும் பதவிசுகம் தேடுவோம் என்று யாரும் கருத வேண்டாம். கழகத்தின் மூலம் நாடாளுமன்ற உறுப்பினர்களாகவும், நாடாளுமன்ற மேலவை உறுப்பினர்களாகவும் உள்ள நாங்கள் பதவியைத் தூக்கி எறிந்துவிட்டு உண்மையான கழகத் தொண்டர்கள் என்பதை நீங்கள் ஆணையிடும் போர்க் களத்தில் மெய்ப்பித்துக் காட்டுவோம். அதற்கான வாய்ப்பினை **டாக்டர் கலைஞர் அவர்களே!** தாருங்கள்! தாருங்கள்! என்று கேட்டு, மாநாட்டு வரவேற்புக் குழுவின் சார்பில் உங்களையெல்லாம் மீண்டும் வரவேற்று என் நெஞ்சார்ந்த வரவேற்பைக் கூறி நிறைவு செய்கிறேன். நன்றி வணக்கம்.






கழகத்தின் ஆற்றல்

கழகத்தின் ஆற்றல் தேக்கி வைக்கப்பட்டிருக்கின்ற மின்சாரம் போன்றது. தேக்கி வைக்கப்பட்டிருக்கிற மின்சாரம் எப்படி விளக்கு எரிக்கவும், விசிறி சுற்றுவதற்கும் பயன்படுகிறதோ, அதேபோல் நம்முடைய சக்தியைத் தேக்கிவைத்து, கழகத் தோழர்கள் உரிய வழிகளில் பயன்படுத்த வேண்டும்.





பி.ஏ.எஸ். - சம்பூரணம் - குடும்ப வரலாறு


என் தாயார் : **பாப்பா**
என் தந்தையார் : **கே.ஏ. பொன்னுசாமி**
என் தாத்தா : **எஸ்.பி. பழனிச்சாமி**
என் பாட்டி : **அம்மணியம்மாள்**

என் பாட்டியின் மருமகன் தாத்தா, பாட்டிக்குக் குழந்தை இல்லாததால் என் அம்மாவின் அம்மாவை, அதாவது தன் தங்கையின் மகனை வளர்த்தார். அவரின் மகள்தான் என் அம்மா பாப்பா. என் தாத்தாவுக்குத் தன் மகளைக் கொடுத்து, வீட்டோடு வைத்துக் கொண்டார்கள். அதேபோன்று என் அம்மாவையும் தந்தைக்குத் திருமணம் செய்துவித்து வீட்டோடு வைத்துக் கொண்டார்கள். தாத்தா, பாட்டி, தந்தை மூவரும் 3 விதமான குணங்களைக் கொண்டவர்கள்.

பாட்டி - கடின உழைப்பாளி. சந்தையில் மிளகாய் வணிகம். வீட்டிலும் எல்லா வேலைகளையும் சுத்தமாகச் செய்வார். வீடு சுத்தம் செய்வது, சாணம் அள்ளித் தட்டுவது, விறகு பொறுக்கி வருவது, பாத்திரம் துலக்குவது, சமைப்பது என்று அனைத்து வேலைகளையும் செய்வதோடு எங்களையும் பயிற்றுவித்தார். அனைத்து வேலைகளையும் நாங்களும் செய்வோம். மற்றவர்களுக்கு நெருப்புப் போன்ற தோற்றம் கொண்ட புனிதமானவர்.

தாத்தாவும் கடின உழைப்பாளி. மிளகாய், புகையிலை வணிகம் செய்தார். புகையிலை வாங்கிக் கட்டி, மூட்டை கட்டி, அண்டை மாநிலங்களுக்கு அனுப்புவார். தோட்ட வேலை திறம்படச் செய்வார். எங்களின் வளர்ப்பில், கண்டிப்பும், அக்கறையும் காட்டி, நெறிப்படுத்தியவர்.

அப்பா - இவரை **நாயினா** என்றுதான் அழைப்போம். பாட்டியை **அம்மா** என்றும், **தாத்தாவை அண்ணா** என்றும், அம்மாவைப் பாப்பா என்றும்தான் அழைப்போம். அப்பாவும் தாத்தாவிற்கு உதவியாகப் புகையிலை வணிகமும், கிராமங்களில் சென்று வரவு செலவு பார்ப்பதும் வழக்கம்.



இவரிடம் அதிகமாக எதுவும் கேட்க மாட்டோம்.

என் தாய் - எங்களின் தெய்வத்தாய், எனக்குப் பிறகு சில குழந்தைகளை பெற்றார். சிலர் இறந்தனர். எஞ்சியவர்தான் நாங்கள் ஐவர். சம்பூரணம், தங்கைகள் ராஜாத்தி, கனகராணி, விஜயலட்சுமி, தம்பி சந்திரசேகரன் ஆக ஐவர். அம்மாவை பொறுத்தவரை குழந்தைப்பேற்றால் உடல் நலிவுற்ற நிலையிலும், எங்களை பார்த்துக்கொண்டு, தாத்தாவிற்கு ஏற்ப அவரையும் அனுசரித்து, பாட்டியை பார்த்துக் கொண்டு, அவருக்கும் அனுசரணையாக இருப்பார். அப்பாவிற்கு தேவையானதைச் செய்து அவரையும் கவனித்துக் கொள்வார்.

என் தாய், அமைதியின் திருவுருவம். அன்பின் வடிவம். பொறுமையின் பிறப்பிடம். கற்புக்கரசியாய் விளங்கியவர். எங்கள் அனைவருக்குமே அந்த நல்லியல்புகளை ஊட்டியவர். ஒருமுறை என் தந்தையார் கூட, நீங்கள் உங்கள் அம்மாவைப் போல, **'கவரிமான்'** போன்று இருக்க வேண்டும் என்பார். நான் மட்டும் அல்ல, நாங்கள் ஐவருமே என் அன்னையின் பெயரைக் காப்பாற்றுவோம் என்று சொல்லியுள்ளேன். நீண்ட நாள் தாயுடன் வாழக் கொடுத்து வைக்காதவர்கள் ஆகிவிட்டோம். எனக்குப் 14 வயது, அடுத்து 12, 8, 6, 4 என்ற வயதில் நாங்கள் தாயை இழந்தோம். பாட்டி, தாத்தா, அப்பா பராமரிப்பில் வளர்ந்தோம். அவர்களும், எங்களுக்கு எந்தக் குறையும் வைக்காமல், கண் இமைபோல் காத்தனர்.

என் தாயின் பிரிவைத் தாங்கிக் கொள்ள முடியாத நிலையில், எந்தைபா எங்களைப் பார்த்து அழுது கொண்டே இருப்பார். இதனைத் தவிர்க்க **கொத்தமங்கலம் - பண்ணாரி** அருகில் உள்ள காட்டில், வேளாண்மை செய்ய சென்றார். கல் தோண்டி, பாறை தோண்டி, கடின உழைப்பால் கவலை மறந்து தோட்டம் உருவாக்கினார். நாங்களும் ஓரளவு படித்தோம். எஸ்.எஸ்.எல்.சி. தேறி நானும், மருத்துவப் படிப்புக்குப் படிக்க ஆயத்தமானேன். அப்பொழுது என் தந்தை, நம் பாப்பாவைப் போல நானும் போய்விட்டால், உன்னுடைய படிப்பு மற்ற பிள்ளைகளுடைய வாழ்க்கை என்னாவது? 7 ஆண்டுகள் முடித்து வரும்வரை எப்படி இருப்பது? என்று அழுதார்.

மருத்துவப் படிப்பு நம் குடும்பத்தில் ஒருவர் படிக்க, நீ உதவி செய்யவா என்றார். சரியான மருத்துவம் முறையாகக் கிடைக்காத காரணத்தால்தான் நாங்கள் தாயை இழக்க நேரிட்டது. எனவேதான் அப்படிப்பில் நாட்டம் ஏற்பட்டது. அதன் காரணமாகவே என் தங்கை **கனகராணி** மருத்துவப் படிப்புப் பயின்றார்.

என்னுடன் படித்த எல்லாருமே ஓரளவு மேற்படிப்புக்குச் சென்றுவிட்ட காரணத்தாலும், எனது விருப்பப்படியும், உதகமண்டலம் பெத்தலஹேம் ஆசிரிய பயிற்சி நிறுவனத்தில் சேர்ந்து படித்து, ஆசிரியை ஆனேன். இருப்பினும்

திருமணத்திற்குப் பிறகு எனது துணைவரின் பொதுப்பணி, அரசியல் பணி காரணமாக வேலைக்குச் செல்ல இயலவில்லை. எனக்குத் திருமணம் செய்து வைக்கப் பெற்றோர் முயன்றனர். நானும் வேண்டாம் என்று மறுத்து வந்தேன். எனக்கு அடுத்த பிள்ளைகளை நல்ல முறையில் படிக்க வைத்து, அவர்களை நல்ல நிலைக்குக் கொண்டு வரவேண்டும் என்ற நம்பிக்கையில் இருந்தேன். அதுவரை என்னை ஒரு பையனாகப் பாவித்துக் கொள்ளுங்கள் என்று கெஞ்சினேன்; அழுதேன். ஆனாலும் தாத்தா, பாட்டியின் வற்புறுத்தல் காரணமாக உள்ளூரிலேயே மாப்பிள்ளை அமைவதால் தந்துவிடலாம் என்று தீர்மானித்தார்கள்.

மாப்பிள்ளை **தி.மு.க;** எங்கள் அப்பா வீட்டார் **காங்கிரஸ்** என்று, அப்பா தரப்பில் மறுப்பு ஏற்பட்டது. அன்றைய நாள்களில் **தி.மு.க.காரர் என்றால் சாதி மறுப்பாளர், இறை மறுப்பாளர்** என்று பெண் தருவதற்குத் தயங்குவார்கள். அப்படிப்பட்ட சூழலில், என் பாட்டி - தாத்தாவை மீறி என் அப்பாவால் எதுவும் செய்ய முடியவில்லை.

இருப்பினும் என் பாட்டியைப் பொறுத்தவரை நேரில் மாப்பிள்ளையைச் சந்தித்து, இவள் அப்பா மறுப்பதற்குக் காரணம் நீ வேறு கட்சி அவர்கள் வேறு கட்சி. நாளைக்கு மகளை வீட்டுக்கு வராமல் செய்து விட்டால், என்ன செய்வது? அடுத்த பிள்ளைகள், இவள் ஏக்கத்தால் ஏங்கிப் போவார்கள். இந்த மாதிரி ஏற்படுவதாக இருப்பின் **இந்தச் சம்பந்தமே வேண்டாம்,** என்று சொல்லியுள்ளார். அதற்குப் **பி.ஏ.எஸ்.** அவர்களும், அப்படி நினைக்க வேண்டாம்அம்மா, அவர்கள் ஐவரையும் என் பிள்ளைகள்போல் பார்த்துக் கொள்வேன். உங்கள் வீட்டிற்கு எப்பொழுதும் போகலாம் வரலாம், எந்தத் தடையும் இருக்காது என்று உறுதியளித்துள்ளார். அதே போன்றுதான் இறுதிவரையிலும் இருந்தார் என்ற மன நிறைவு உண்டு. அதுமட்டுமல்ல இவரை வளர்த்த இவரின் **அத்தை பார்வதி அம்மாள்** இவருக்கு உறுதுணையாக இருந்தவர். என் திருமணத்திற்குப் பிறகு அங்கு வீட்டிற்குச் சென்ற பொழுது, தாயில்லாத பெண் இவள், கண்ணில் தண்ணீர் வரச் செய்து விடாதே என்று எச்சரித்தார். அதோடு, தானும் எனக்குத் தாயாக இருந்தார். நானும் மகள் போன்று பராமரித்து வந்தேன். இவருடன் குடும்பம் நடத்த வேண்டும் என்றால் அரசியல் வாழ்வுக்கு நீயும் உடன் இருக்க வேண்டும். பொதுப்பணியிலும் பங்குகொள்ள வேண்டும். வீட்டைப் பொறுத்தவரை நான் பார்த்துக் கொள்கிறேன். தம்பியைப் பொறுத்தவரை, நீ உடன் இருக்க வேண்டும் என்றார்.

இவரின் **தங்கை மாணிக்கம்,** தாய்மாமாவுக்குத் திருமணம் செய்வித்துக் **கீரணத்தம் புதுப்பாளையத்தில்** இருந்தார்கள். இவருக்கு 7 வயது, இவர் அண்ணனுக்கு 13 வயதாக இருக்கும் பொழுதே, இவர்களின் தாயாரும் இறந்துவிட்டார்கள். சிறுவயது முதற்கொண்டே இருவரும் மிகவும் பாசமாக


இருந்தவர்கள். தான் பெற்ற பிள்ளைகளைப் போல் இவர்கள் இருவரையும், அந்த பார்வதியம்மாள் வளர்த்தார்கள். இவர் தாயார் அரங்கசத்தநாள். தந்தையார் ஆறுமு முதலியார். சந்தை வியாபாரத்திலிருந்து மளிகைக் கடை நடத்தி வந்தார். உட னிலுற்ற நிலையிலிருந்தால் தன் மகன் அரசியல், பொதுப்பணி என்று இருந்த காரணத்தால், தனது அண்ணன் மகன் வெள்ளியங்கிரி அவர்களிடம் பாரதி ஸ்டோர்ஸ் மளிகைக் கடையை நடத்தும் பொறுப்பை ஒப்படைத்தார். அன்றுமுதல் இன்றுவரை பாரதி ஸ்டோர்ஸ் சுமார் 60 ஆண்டுகளுக்கு மேலாக நடந்து வருகிறது. இன்றும் இதனை நாங்கள் சிறப்பாக நடத்தி வருகிறோம்.

எங்கள் திருமணம் வி.ஆர்.டி. மில்லில் நடந்தது. பேரறிஞர் அண்ணா தலைமையில் நடப்பதாக இருந்தது. அன்று சென்னையில் தி.மு.க. முதல் முதல் மேயர் தேர்தலுக்குத் தயாரானது. 28.11.1960-இல் தேர்தல். அதனால் அன்று தினம் எங்கள் திருமணத்திற்கு அண்ணா அவர்கள் திரு. ஈ.வி.கே. சம்பத் அவர்களை அனுப்பி வைத்தார்கள். மாலை 5.30 மணிவரை கூட்டம் நிறைந்து, நிகழ்ச்சி நடைபெற்றது. 2 மாதத்தில் அண்ணா அவர்கள் எங்கள் இல்லம் வந்திருந்தார். சுற்றுப்புறக் கிராமங்களில் கூட்டங்கள் ஏற்பாடு செய்தால், எங்கள் இல்லத்தில் தங்கித்தான் நிகழ்ச்சிகளுக்குச் செல்வார்.

அதற்கு முன்புகூட, எங்கள் திருமணத்திற்கு முன் புன்செய்ப் புளியம்பட்டி ஊராட்சி மன்றத்தில் இவர் ஊராட்சி மன்றத் தலைவர் என்ற முறையில் தீர்மான நிறைவேற்றி, பேருந்து நிலையத்தில் **மகாத்மா காந்தி சிலையை,** அண்ணா அவர்கள் திறந்து வைத்தார். அதில் **பேரறிஞர் அண்ணா,** ஈ.வி.கே. சம்ப **பொன்னம்பலனார்,** ஈரோடு **சேது பாஸ்கரன்** போன்றோர் கலந்து கொண்டுள்ளன பிறகு எங்கள் இல்லம் வந்த அண்ணா அவர்களிடம் சென்று வாழ்த்துப்பெ நின்றேன். அப்பொழுது அண்ணா சொன்னார் **'உன் துணைவர், நல்ல** செய **வீரர். இந்தப் பகுதியில் செல்வாக்குள்ளவர். மக்களின் நலனுக்குப் பாடுபட கூடியவர். அவருக்கு உறுதுணையாக இருக்க வேண்டும்'** என்றார். அன்றை காலங்களில் நான் வெளியாரிடம் பேசக் கூச்சப்படுபவள்.

அப்படியிருப்பினும், **"நீங்கள் சொல்வதுபோல் நடந்து கொள்கிறேன்** அய்ய என்று அவரிடம் உறுதியளித்தேன். அவர் உட்கார்ந்து சொன்ன நிலையும், நானு அவரும் நின்ற நிலையில் அவரிடம் வாழ்த்துப் பெற்றதும் இன்ற பசுமரத்தாணிபோல் என் மனதில் பதிந்துள்ளது.

எத்தனை சோதனைகள் ஏற்பட்டாலும் அந்த நேரத்திலும், இந்தச் சொல் மனதில் நிறுத்தி என்னை நானே தைரியப்படுத்திக் கொள்வேன். அந்த நேரத் எனது துணைவர் கூடவே அவர் செயல்பாட்டுக்கு உறுதுணையாக இருந்தே அறிஞர் அண்ணா அவர்களின் காஞ்சி இல்லத்திற்கும் சென்றோம். அங்கு, பங்க



அம்மையார் அவர்களையும் பார்த்து ஆசிபெற்றோம். அவர் மருமகள் விஜயா, நிலக்கோலன் அவர்கள் இன்றைக்கும் எங்களிடம் பழகி வருகின்ற குடும்ப உறவுடன் உள்ளனர்.

பங்காரு அம்மையார் தோத்தா என்கிற ராஜாமணி அம்மையார் மறைவுக்கும் சென்று வந்தோம். ஊராட்சிமன்ற அலுவல்கள் குறித்தும் அவர் செய்கின்ற நற்செயல்கள் குறித்தும் அண்ணா அவர்கள் நம்நாடு இதழ் மூலம் எழுதி பாராட்டுவார். 62 தேர்தல் என்று நினைக்கிறேன். சட்டப் பேரவைக்கு வேட்பாளராக நின்றார். எங்களின் பெரிய பெண் இராணி கைக்குழந்தை. வீட்டில் தொட்டில் போடக்கூட இடமில்லாத அளவில் கூட்டம் கூடிவிடும். வந்தவர்களுக்கு எங்கள் இல்லத்தில்தான் எல்லா உதவிகளும் செய்யப்படும். வெளியிடங்களில் அதிகம் தங்கவைக்க வசதிகள் கிடையாது. அண்ணா அவர்களே வந்தால்கூட எங்கள் இல்லத்தில் தங்க வைத்துத்தான் வெளியூர்க் கூட்டங்களுக்கு அழைத்துச் செல்வார். மற்றவர்களும் அவ்வாறே.

அவர் தேர்தலில் நின்ற நேரத்தில் இந்தப் பகுதியில் தி.மு.க. என்றாலே ஒருவித அதிருப்தி. அதற்கு ஏற்றாற்போலச் சுற்று வட்டாரத்திலுள்ள முக்கியப் பிரமுகர்கள், காங்கிரஸில் பதிவிலால் கவுண்டர், முத்து வேலப்ப கவுண்டர், சிதம்பரநாத கவுண்டர், கொளந்தாக் கவுண்டர் போன்றோரின் ஆதிக்கம். அன்றைய மேடைகளில், அண்ணா அவர்கள் குறிப்பிட்டது போல ஆண்டான் - அடிமை, மிட்டா - மிராசு, பண்ணையார் - அடியான் என்ற மனப்போக்கு, சாதிவெறி நிறைந்த காலகட்டம்! திராவிடக் கட்சிகளில் பலதரப்பட்ட மக்கள், பல சாதியினர், சமயத்தினர், சிறுபான்மை மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள் என்றுதான் இருந்தனர். அவர்களும் அச்சமின்றி வாழ இயலாத நிலை.

தேர்தல் நேரத்தில் கிராமங்களில் வேலை செய்யச் செல்லும் தொண்டர்களுக்குக் குடிக்கத் தண்ணீர் தரமாட்டார்கள். சாப்பிடக் கடைகளில் எதுவும் தரக்கூடாது என்ற கட்டுப்பாடு! எனவே போகும் பொழுதே சாப்பிடவும், குடிக்கத் தண்ணீர் போன்றவை கொண்டு செல்ல வேண்டும். என்னையும் தேர்தல் பிரச்சாரத்திற்கு அனுப்பி வைப்பார். உயிருக்குத் துணிந்துதான் செல்ல வேண்டும்.


தி.மு.கழகக் கொடிக் கம்பத்தில் கொடியேற்றும் பொழுது எங்கிருந்தோ வந்த கல் என் நெற்றியில் பட்டு ரத்தம் கொட்டிய நிலையில் கொடியேற்றினோம். வடத்தூர் நடராஜ், சிதம்பரம், சானார்பாளையம் ராஜூ போன்றவர்கள் உடன் இருந்து அழைத்துச் சென்றனர். அந்த நண்பர்களோடு சேர்ந்து கட்சிப் பணியாற்றிய தொண்டர்கள் மீது அடிதடி, கொலை, கொள்ளை போன்ற வழக்குகள் போடப்பட்டு, துன்பம் அனுபவித்தனர். ஒரு கட்டத்தில் ஊரைவிட்டே செல்ல வேண்டிய நிலையில், எனது துணைவர் பி.ஏ.எஸ். அவர்கள் ஆதரவினால் பராமரிக்கப்பட்டு அந்த வழக்குகளிலிருந்து நீதிமன்றம் மூலம் வெளியே வந்தார்கள்.

அவர்களை ஊரில் கொண்டு போய்விடப் புளியம்பட்டியிலிருந்து உணவுப் பொருள்கள் தயாரித்துக் கொண்டு, அரிசிமாவு போன்றவைகளை அரைத்துச் சென்று ஒரு வாரம் வரை 20 கார்களில் ஆட்களும், லாரி, டெம்போவில் மற்ற சாமான்களும் ஏற்றிச் சென்று அவர்களோடு நாங்களும் உடன் இருந்து அவர்கள் சமநிலைக்கு வந்து தங்கள் பணிகளைத் தொடங்கினார்கள். அவர்களும் நிறைய இழப்பினைச் சந்திக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. அப்படிப்பட்ட ஆதிக்கத்தை எதிர்த்துப் பாடுபட்டோம். அந்தத் தேர்தலில் வெற்றிபெறாவிடினும் கழகத்தின் வளர்ச்சிக்கு, சாதாரண சிறுபான்மை மக்களுக்கு உறுதுணையாகக் கழகம் இருக்கும், என்ற உணர்வினை உருவாக்கியது. சொந்தப் பணத்தை வைத்துத்தான் தேர்தலைச் சந்தித்தோமே தவிர, இயக்கமோ மற்ற உதவிகளோ கூடக் கிடைக்காத காலகட்டம்! கட்சி அறிமுகத்திற்கு எனக்கு இந்தத் தேர்தல் பயன்பட்டது. தோல்வியைப் பற்றிக்கூட நான் கவலைப்படவில்லை என்பார்.

ஊராட்சி ஒன்றியத் தேர்தல்கள் :

நம்பியூர் ஒன்றியத்தில் புன்செய்ப் புளியம்பட்டி இருந்த நேரத்தில் புளியம்பட்டி ஊராட்சி மன்றத் தலைவர் பொறுப்பில் இவர் இருந்தார். நானும் பெண் உறுப்பினர் என்ற முறையில் நியமிக்கப்பட்டேன். எங்கள் ஊரைச் சேர்ந்த தாழ்த்தப்பட்ட **பாப்பாடன்** ஓர் உறுப்பினர். ஒன்றியத் தலைவர் பொறுப்பிற்கு இவர் நின்ற நேரத்தில் இவரைக் கொலை செய்யும் முயற்சியில் இறங்கினார். **புளியம்பட்டியிலிருந்து** போகும் வழியில் கற்களைப் போட்டுத் தடைகள் ஏற்படுத்தித் தடங்கல் ஏற்படுத்தினர். இதனை முன்கூட்டியே தெரிந்த காரணத்தால் அடியாள்களுடன் வருகின்ற அவர்களை எதிர்த்து முன்னேற, எங்கள் தரப்பிலும் நாங்கள் 5 பேர் காரிலும், முன்னாலும், எங்களைப் பின்தொடர்ந்தும் தொண்டர்களும் பயணித்துவரப், புறப்பட்டோம்! மீறி நம்பியூர் சென்றதும் இவரைக் கைது செய்ய முயற்சி செய்துள்ளனர். இந்தத் தகவல் அறிந்த கோபி வழக்கறிஞர் திரு. **கே.எஸ். ஆனந்தன்** அவர்கள் இவருக்கு முன் ஜாமீன் வாங்கித் தயாராக இருந்தார். பிறகுதான் உள்ளே சென்று தேர்தலில் ஈடுபட்டோம்.

ஊராட்சி மன்றத் தலைவர்களை மிரட்டிப் பயமுறுத்தி பால்தந்து சத்தியம் வாங்கிக் கூட்டிவந்து உள்ளனர். அவர்கள் யாருமே எங்களைப் பார்க்கவே தயங்குவது, நன்றாகவே தெரிந்தது. அந்தத் தேர்தலில் **ஓர் ஓட்டில்** இவர் ஒன்றியத் தலைவர் தேர்தலில் தோல்வி கண்டார். 2 முறை தேர்தலிலும் ஓர் ஓட்டு வேறுபாட்டில் தோற்றார். அதற்குப் பிறகு நடந்த **துணைத் தலைவர்** தேர்தலில் என்னை நிறுத்தினார். அதே தலைவர்கள்தான் வாக்காளர்கள். நாங்கள் நிற்போம் என்று தெரியாத நிலையில் அவர்களை யாரும் வற்புறுத்தாத காரணத்தால் போனமுறை பி.ஏ.எஸ். அவர்களுக்கு நாம் ஆதரவு தர முடியவில்லை. இம்முறை அவர் பொருட்டு அவர் துணைவிக்குப் போடலாம் என்று எனக்கு வாக்களித்தனர்.




3 ஓட்டுகள் அதிகம் பெற்று வெற்றிபெறச் செய்தனர். எங்கள் ஊரில் அவர் தவிர மற்றவர் நிற்கத் தயங்கினர். 'பாப்பாட்டன்' கூடத் தயங்கினபொழுது, கோவிந்தரும் என்ற எண்ணித்தான் தயங்குகிறார்கள் போலும் என்று வெற்றி தோல்வி ஏதானாலும் நான் நிற்கிறேன் என்று சொல்லித்தான் புறப்பட்டுச் சென்றோம்.

கோபி நகராட்சி மன்றத் தேர்தலில் தி.மு.க. ஈடுபட்டது. இந்தத் தேர்தலில் ஜெயம் முனியாண்டி 2 கவுன்சிலர் வெற்றி பெறுவதற்குள் இல்லை உண்டு இல்லை என்று ஆகி விட்டனர். இதையும் விட்டு கோபியில் நுழைந்துவிட்டார்கள் என்ற கோபம் அன்று அவர்கள் செய்கை அராஜகம் சொல்லுந்தரமற்றது.

புளியம்பட்டி வந்து தேர்தலைச் சந்திக்கிறோம் என்றனர். அதற்குக்கூட தி.மு.க. அவர்கள் "எங்கள் ஊருக்கு நீங்கள் வந்தால் உங்களை வரவேற்று உபசரிப்போமே ஒழிய வேறு விதமாக நடத்து கொள்ளமாட்டோம்" என்று கோபி மேடையிலேயே சொல்லி வந்துள்ளார். 1963-ம் ஆண்டு நடந்த அந்தத் தேர்தலில் 15 வார்டுகளிலும் நேரடிப் போட்டி. காங்கிரசும், தி.மு.க.வும் நிற்கிறது. 13 வார்டுகளிலும் தி.மு.க. வெற்றி பெற்றது. இதனைப் பேரறிஞர் அண்ணா அவர்கள் தனது இதழில் வெளியிட்டார். இதில் இடையில் 2 இடங்கள் இருவர் இயற்கை எய்திய காரணத்தால் ஏற்பட்டது. ஆரோக்கியமான அரசியல் நடக்க, ஜனநாயக ரீதியாக எதிர்கட்சிகளும் தேவை. எனவே இந்த இடத்திற்குக் காங்கிரசிற்கே இடம் கொடுத்து அவர்கள் பொறுப்புக்கு வர பி.ஏ.எஸ். ஏற்பாடு செய்தார். இதனைப் பாராட்டி, அண்ணா அவர்கள், "பி.ஏ.எஸ். அவர்கள் புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி மன்றத்தில் நல்லதொரு முன் மாதிரியினை ஏற்படுத்தி ஜனநாயகவாதி எப்படி இருக்க வேண்டும் என்பதை எடுத்துக் காட்டியுள்ளார்" என்று 'நம்நாடு' இதழில் குறிப்பிட்டுள்ளார்.

தொடக்கம் முதலே இவரைத் தன் பிள்ளையாகப் போற்றியவர், அவ்வப்போது நகராட்சி மன்றப் பணிகளைப் பாராட்டி ஊக்கம் தந்தவர், குடிநீர்ப் பிரச்சினை புளியம்பட்டியில் கடுமையான நிலையில் இருந்த காலம், இந்த ஊருக்குப் பெண் தரவே தயக்கம் காட்டுவார்கள். கிணற்றில் தண்ணீர் சேந்தியே பெண்கள் நொந்துநூலாய்ப் போவார்கள் என்ற எண்ணம்தான். பேரறிஞர் அண்ணா அவர்களும், கலைஞர் அவர்களும் வண்டிப்பேட்டைத் திடலில் நடந்த கூட்டத்தில்தான் 1963-ல் எங்கள் 2-வது பெண்ணுக்கு வெற்றிச்செல்வி என்று பெயரிட்டார். அந்தக் கூட்டத்தில்தான் இருவரும் புளியம்பட்டிக் குடிநீர்ப் பஞ்சம் பற்றித் தெரிந்து கொண்டோம். எங்கள் வீட்டில், குடிப்பதற்கு என்று ஒரு தண்ணீர், கை கழுவ என்று ஒரு தண்ணீர் தந்தபொழுதுதான், இதன் காரணம் அவர்களுக்குத் தெரிந்தது. தோட்டம் தோட்டமாகச் சென்று குடங்களில் சுமந்துவந்து குடிக்கவும், கிணற்று நீர் பிற பயன்பாட்டிற்கும் பயன்படுத்துவோம்.



அல்லல்படுவதை எடுத்துச் சொன்னோம். "நாங்கள் பொறுப்பிற்கு வரும் வாய்ப்புக் கிடைத்தால், முதல்முதல் புளியம்பட்டிக்குத் தண்ணீர் தருவோம் என்றார். அதேபோன்று அண்ணா அவர் முதல்வர் பொறுப்பேற்றதும், முதல் கோப்பிலேயே புளியம்பட்டிக் கூட்டு திட்டத்திற்குக் கையொப்பம் இட்டார் என்பதை நாங்களும் இந்த ஊர் மக்களு இன்றைக்கும் நெஞ்சார வாழ்த்துகிறோம்". அதேபோன்று, கலைஞர் அவர்க இரண்டாவது குடிநீர்த் திட்டமும் கொண்டு வரப்பட்டு, புன்செய்யாக இரு எங்கள் ஊர் நன்செய்யாக மாறியதையும் எங்கள் மக்கள் மறக்கவில்லை. எந் நீருக்குப் பஞ்சம் ஏற்பட்டாலும் எங்கள் ஊருக்கு வற்றாத ஜீவநதியாக உள்ள இதற்கு எனது துணைவர் எடுத்துக்கொண்ட முயற்சியை யாரும் மறக்க முடியா அளவில், மக்கள் மனதில் நிறைந்துள்ளார் என்பது மறுக்க முடியாத உண்மையாகு

நம்பியூர் ஊராட்சி ஒன்றியத்தில் இருந்தபொழுது, புளியம்பட்டிச் சந் வருமானத்தில் 10% -லிருந்து 30% இருந்ததை 90% என்று புளியம்பட்டிக்கு கிடைக்க வாதாடிப் பெற்றோம். கோவை மாவட்டம் ஒன்றாக இருந்த நேரத்தி தமிழகத்திலேயே 2-வது பெரிய சந்தை என்ற பெயரும் உண்டு. அ வருமானத்தைக் கொண்டு இந்த ஊர் நல்ல திட்டங்களைப் பெற முடிந்தது. 1958-ல் இவர் ஊராட்சி மன்றத் தலைவராக வந்தபொழுது ஊராட்சி மன்றம் வாடகை கட்டிடத்தில் இயங்கி வந்தது. அன்றைய வருமானம் வெறும் 48,000/- மட்டு கோவை சென்றுதான் பொறியாளர், அதிகாரிகளை அழைத்து வரவேண்டு மன்றத்தில் செலவிட வேண்டுமானால், இயலாத நிலைதான். கோவை செ வாடகை 22 ரூபாய்.

சொந்தச் செலவில்தான் இவையெல்லாம் செய்தாரே ஒழிய, ஊராட்சி மன்ற பணம் அல்ல. அப்படியெல்லாம் பாடுபட்டு ஊராட்சி மன்றத்திற்கு வருமானத் உருவாக்கி அதன்மூலம் தான் நகராட்சி மன்றம் போல அன்றைய நாளிலே எங்குமில்லாத நிலையில் ஊராட்சிமன்றக் கட்டிடம், கல்யாண மண்டபம் க நிலம் வாங்கி மண்டபம் கட்டப்பட்டது.


வருவாய்த்துறை இடத்தை நீதிமன்றம் மூலம் ஊராட்சிக்குச் சொந்தமா அதில் கடைகளைக் கட்டி, ஊராட்சிக்கு வருமானத்துக்கு வழி செய்தார். பேருந் நிலையம் உருவாக்கிப் "பேரறிஞர் அண்ணா பேருந்து நிலையம்" என் பெயரிட்டார். பேருந்து நிலையத்தில் அண்ணல் காந்தியடிகள் திருவுரு சிலையைப் பேரறிஞர் அண்ணாவைக் கொண்டே திறந்து வைத்தார்.



தொடர்ச்சியாக 13 நாள்கள் இந்த மாவட்டத்தில் அண்ணா அவர்களையும் அதேபோல் கலைஞர் அவர்களையும் சுற்றுப் பயணம் மேற்கொள்ளச் செய்து இயக்க வளர்ச்சிக்குப் பயன்படுத்தியுள்ளார். **1967-இல் நடைபெற்ற தேர்தலில்** இந்தக் கூட்டத்தினை முடித்துச் சென்னை செல்லும் பொழுது நாடாளுமன்றத் தேர்தலில் **கோபிசெட்டிபாளையம் தொகுதியில் பி.ஏ.சாமிநாதன் நிற்பார் என்று அண்ணா அறிவித்துவிட்டுச் சென்றார்.** அதேபோன்று நிறுத்தப்பட்டு அன்றைய மத்திய அமைச்சர் **சி. சுப்பிரமணியம் அவர்களை வென்றார்.** அன்றைய காலகட்டத்தில் கட்சிப் பொறுப்பில் ஒருவர் ஒரு பொறுப்புக்குமேல் இருக்கக் கூடாது என்பதற்குக் கட்டுப்பட்டுத் தனது ஊராட்சி மன்றத் தலைவர் பொறுப்பிலிருந்து விடுபட்டுத் திரு. **சீத்தாராமன்** அவர்களை ஊராட்சி மன்றத் தலைவராக்கினார். அடுத்துத் திரு. **பு.கா.ஆறுமுகம்** அவர்கள் தலைவரானார்.

இந்தக் காலத்தில் சுடுகாடு இல்லை என்ற குறையைப் போக்க அதற்கு என்று பெரிதும் முயன்று இடம் வாங்கி, அதை அனைத்துச் சாதியினருக்கும் பொதுவாக உருவாக்கினார். வார்டுகள் தோறும் தனிக்கவனம் செலுத்தினார். மின் விளக்கு வசதிகள், தெரு வசதிகள், சாக்கடை வசதிகள் என்று செய்ய முடிந்தன. காந்திநகர் குடியிருப்புகளை உருவாக்க அதற்கென இடம் கையகப்படுத்தித் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீட்டுமனை இடம் வழங்கினார். அத்துடன் தன் சொந்தச் செலவில் **காந்திநகரில் திருமண மண்டபம்** கட்டுவித்துப் பேராசிரியர் திரு. **அன்பழகன்** அவர்களைக் கொண்டு திறந்து வைத்தார். அந்த மக்கள் இவரைத் தெய்வமாக வழிபடும் நிலையினைப் பார்த்து மனம் நெகிழாதவர் யாரும் இல்லை!

நாடாளுமன்றத்திற்குச் சென்றுவிட்டாலும் தொகுதிப் பணிக்கு அழைத்தால் ஓடோடி வந்துவிடுவார். எல்லாருமே எந்நேரமும் தொடர்பு கொள்ளக் கூடியவராகச் செயல்பட்டார். **1970 என்று ஞாபகம்.** 90 ஆண்டுகளாகப் பெய்யாத பெருமழை. அதனால் வெள்ளம் ஏற்பட்டு, ஊருக்குள் புகுந்தபொழுது, பள்ளமான பகுதிகளில் வசித்தோர்களைப் பாதுகாப்பான இடங்களுக்கு அழைத்துவந்து உறவினர் இல்லங்களில் தங்கவைத்து, உணவு, இருப்பிடம் தந்து அவர்களைப் பாதுகாத்து, தண்ணீர் வடிந்து, இயல்புநிலை வந்தபிறகு அவரவர் இல்லங்களுக்கு அனுப்பி வைத்து, அவர்களுக்குரிய உதவிகளையும் பெற்றுத் தந்தார். எங்கள் தோட்டத்திலேயே வைக்கோல்போர் உட்பட நிறையப் பொருட்களை வெள்ளம் அடித்துச் சென்றது. தோட்டக்காரர் நிறையப் பாதிப்புக்கு ஆளாயினர். அந்த நேரம் வெள்ளக் காடாகக் காட்சியளித்தது. தக்க தருணத்தில் உதவியதால் உயிர்ச்சேதம் தவிர்க்கப்பட்டது. தொகுதி முழுவதும் சுற்றிவந்து அந்தச் சேதம் பாதித்த இடங்களிலெல்லாம் தக்க பணிகளை மேற்கொண்டார். **தாளவாடி, குத்தியாலத்தூர்ப் பகுதிகள், சத்தி, பவானிசாகர், பவானி, கோபி, நூக்கநாயக்கன்- பாளையம்** உட்பட கோபி நாடாளுமன்றத் தொகுதி முழுவதும் சிறந்த பணியாற்றினார்.



அடுத்தமுறை கோபித் தொகுதியில் திரு. கவி. கே. சம்பத் அவர்களை எதிர்த்து போட்டியிடும் நிலை உருவானது. அவர் எங்கள் திருமணத்தை நடத்தி தேர்தல் நேரத்தில் என்னைச் சந்தித்து எங்களையும் குழந்தைகளையும் விசாரித்தார். அன்று அரசியல் சூழ்நிலை ஆரோக்கியமாக இருந்ததால் போட்டி நேர்மையான முறையில் சந்தித்து வெற்றி பெற்றார். 10 ஆண்டுகள் விடு... என்று பாராமல் தொகுதி மக்கள், ஊர் மக்கள், அவரவர் கூட்டும் செயல்களுக்கு ஒத்துழைப்புத் தந்து நிறைவேற்றியுள்ளார். மலைப் பகுதிகளிலும் கவனம் செலுத்தி கல்விக் கூடங்கள், சாலை வசதிகள், பாலங்கள், சமுதாயப் பணிகளை நிறைவேற்றினார். இதே கோபித் தொகுதியில் அடுத்தடுத்துப் பலர் எம்.பி.யாக வந்தாலும் இவரைத்தான் "எம்.பி." எனப் பொதுமக்கள் கூறுகின்ற அளவில் இறுதிவரை, தனது வாழ்நாளை நிறைவு செய்தார்.

அதேபோல், புளியம்பட்டியில் தேவாங்க சமூகத்தார் வழிபடக்கூடிய சவுடம்மன் கோயில் உருவாக்க விரும்பினர். முன்னாள் ஊராட்சி மன்ற உறுப்பினர் கதிர்செட்டியார் அவர்கள் கோரிக்கைக்கு ஏற்ப, அவர்கள் வைத்திருந்த ரூ. 4,000 மட்டும் தந்தனர். அதற்காகத் தானேமுன்னின்று சவுடேசுவரி அம்மை திருக்கோயில் இடத்தை விலைக்கு வாங்கி, ஒப்பந்தம் செய்தார். பதிவு செய்யும் நேரத்தில் மிசாவில் இருந்த காரணத்தால் திரு மு. அங்குசாமி அவர்கள் ஒத்துழைப்போடு மீதிப்பணம் செலுத்தி வேண்டுவன செய்ய என்னைப் பணித்தார்.

காமாட்சியம்மன் கோயில், திருமண மண்டபம் போன்ற செயல்களும், அந்த சமூகத்தார் வேண்டுகைக்கு ஏற்ப முயன்றார். அன்றைய அறங்காவல் துறை அமைச்சர் திரு. கண்ணப்பன் அவர்கள் மூலம் பண்ணாரியம்மன் கோயில், பழனி திருக்கோயில் போன்ற கோயில்களின் உதவியால் இந்த அறப்பணிகளை செய்வித்தார். பண்ணாடி சமூகத்தினருக்காக நிலம் தேர்வு செய்து அவர்களுக்கு அண்ணாநகர் உருவாக்கித் தந்தார். நிலமற்ற ஏழை மக்களுக்கு 'மறைமலை (வேதகிரி மலை)ப் பகுதியில் - புளியம்பட்டிக் கரட்டுப் பகுதியில் குடியிருப்புகள் ஏற்படுத்தித் தந்தார். கூடை முடைவோர் தொழில் செய்யவும், குடியிருக்கவும் சந்தைப்பேட்டைப் பகுதியில் நிலம் விலைக்கு வாங்கி அந்த மக்களை குடியமர்த்தினார். கணக்கரசம்பாளையம் பகுதியில் தாழ்த்தப்பட்ட மக்களுக்காக ஏக்கர் நிலம் வாங்கிக் 'கலைஞர் நகர்' உருவாக்கிக் குடிதண்ணீர் உட்பட வசதிகள் செய்து தந்தார். முஸ்லீம் பெருமக்களில் அடித்தட்டில் உள்ளவர் குடியிருப்புக்கு 'முல்லை நகர்' என்ற பகுதி அமைய உதவினார். மற்ற பகுதிகளில் இதுபோன்ற பணிகளை, அந்தந்தப் பகுதி மக்கள் கேட்ட நேரத்தில் அரசு உதவியுடன் செய்ய ஆவன செய்துள்ளார்.

ஊராட்சி மன்றத்தின் பணிகளைப் பாராட்டி, நடுவணரசு தமிழ்நாட்டில் சில ஊராட்சி மன்றங்களைத் தேர்ந்தெடுத்தது. மத்திய அரசு நம் புளியம்பட்டி ஊராட்சியைத் தேர்வு செய்து இரண்டு கோடி ரூபாய் வழங்கிச் சிறப்புச் செய்தது.

அதன் காரணமாகத்தான் மற்ற வணிக வளாகங்களைக் கட்டி முடித்தார். அன்று இந்தியாவில் நம் ஊராட்சி, தனிச் சிறப்புடன் விளங்கியது. நம் ஊர்க் குடிநீர் சிக்கல் பேசப்பட்ட போது பொருளாதாரச் சிக்கல் காரணமாக அது சாத்தியமில்லை என்ற நிலை ஏற்பட்டது. எல்.ஐ.சி.யில் ஏற்பாடு செய்து செய்யலாம் என்ற நோக்கில் கடன் பெற்றால் கடனை அடைக்க இந்த ஊராட்சியால் முடியுமா? என்ற கேள்வி எழுந்தது. ஊர் மக்களிடம் நிலைமையைச் சொல்லி, அவர்கள் ஒப்புதலோடு கடன்பெற முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

எப்படிக் கடனைத் திருப்பிச் செலுத்த முடியும் என்று அரசு தரப்பும் விளக்கம் கேட்டது. அப்பொழுது ஊர் மக்களும் குடிநீர் இணைப்புக் கட்டணம் மூலம் கட்ட முடியும் என்ற நிலையினை எடுத்துச் சொல்லியும், புள்ளி விபரமாக இவ்வளவு இணைப்புகள் வரும் என்று கேட்டுச் சொன்ன பிறகுதான் இதற்கு உத்தரவு வாங்க முடிந்தது. அன்றைய காலகட்டத்தில் எப்படி இருந்திருக்கும் என்று இன்று எண்ணிப் பார்த்தாலும் மலைப்பாக இருக்கிறது. அதே போன்றுதான் 2-வது குடிநீர்த் திட்டமும். மத்திய அரசும் மாநில அரசும் சேர்ந்து 95% மானியமும், ஊராட்சி மன்றம் 5% மட்டும் என்ற அளவில் நிறைவேற்றப்பட்டது. இதற்காக இவர் எடுத்துக்கொண்ட முயற்சிகள் சொல்லில் அடங்கா.

ஒவ்வொரு திட்டத்திலும் தனக்கு என்ன லாபம் கிடைக்கும் என்று நினைக்கிற அரசியல்வாதிகள் நிறைந்த காலகட்டம் இது. தன்னால் இந்த ஊராட்சிக்குச் சொந்தச் செலவினைச் செய்து பெற்றுத் தந்தார் என்பதை நினைக்கும் பொழுது, இன்றைய அரசியல்வாதிகள் மத்தியில் மலையாக உயர்ந்து நிற்கிறார் என்றால் மிகையாகாது.

சிறு ஊராட்சி மன்றம் - ஊராட்சி மன்றமாக, தேர்வுநிலை ஊராட்சி - பேரூராட்சி என்று படிப்படியாக உயர்ந்து இன்று நகராட்சித் தகுதி அடைந்தது என்றால், இன்றைய நிலைக்கு ஊராட்சி வருமானம் படிப்படியாக உயர்ந்து இன்று நல்ல நிலையில் இருப்பதற்கு இவரின் அயராத உழைப்புத்தான் காரணம். எங்கள் மகன் அன்பு பேரூராட்சி மன்றத் தலைவராக இருந்தபொழுது, காற்றாலை மின்சக்தி ஒன்றினை உருவாக்கி இந்தப் பஞ்சாயத்துக்குப் பயன்படுத்தலாம் என்ற கோரிக்கையை வைத்து, டெல்லி வரை சென்று போராடினார். ஆனாலும் இந்தத் திட்டம் தமிழ்நாட்டில் இல்லை என்று நிராகரித்துவிட்ட காரணத்தால், அத்திட்டம் நின்றுபோக நேர்ந்தது. இன்று (2011) மீண்டும் நகராட்சித் தலைவராக வந்துள்ளார். ஷி திட்டம் I.O.B. வங்கித் துணையுடன் அமைய முயன்று வருகிறார்.

1958-லிருந்து இன்றுவரை தி.மு.கழகத்தின் சார்பில் மன்றம் இயங்கி வர எனது துணைவர் பி.ஏ.எஸ். அவர்கள் தூணாக இருந்துள்ளார். ஆனால், இன்றைய நிலை எவ்வாறுள்ளது? என்பதை இந்த ஊர்மக்களும், இப்பகுதி மக்களும் அறியாதவர்கள் அல்லர். அறிஞர் அண்ணா சிரணிக் கலையரங்கம், கல்விபெறும் மாணவர்க்கு

கவலை தீர்க்கும் திரு பெரும் ஆடவர், மகளிர் மேல்நிலைப் பள்ளிகள், பின்... மக்களுக்கும், நோயுற்ற கால்நடைகளுக்கும் தனித்தனி மருத்துவமனை... விடுகட்டும் சங்கம், வேளாண்மைக் கிடங்கு, நிலவளவங்கி போன்ற அ... திட்டங்களை இவ்வூருக்குப் பெற்றுத் தந்தவர் பி.ஏ.எஸ். ஆவார்.

கோயில்புதூர் அருகில் பெரிய பள்ளத்தின் குறுக்கே பெரிய குளம் ஒ... சுமார் 7 லட்சம் ரூபாயில் உருவாக்கி, 72-ஆம் ஆண்டு பணி நிறைவுபெ... அப்பகுதி மக்களின் நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலம் பாசன வசதி... உறுதுணையானார். பேரூராட்சித் துப்புரவுப் பணியாளர்களுக்கு 71-ஆம் ஆண்... குடியிருப்புகள் கட்டித் தந்தார். பவானிசாகர் நீர்த்தேக்கப் பகுதியில் ஏழை எளிய... வாழ நிலம் குத்தகைக்கு வாங்கித் தர அதற்கெனத் தனிக்குழு அமைத்து அதன்மூ... இரண்டாயிரம் குடும்பங்கள் வாழ வழி செய்தார். பவானிசாகர் நகரியத்து... உட்பட்ட கல்லாங்குத்து ஊருக்கே பட்டா இல்லாததால் காலி செய்ய அ... உத்தரவு பிறப்பித்தது. இதை எதிர்த்துப் போராடி அந்த ஊருக்கே பட்டா வாங்... தந்தார். அந்த மக்களும் அந்த ஊருக்கு "சாமிநாதபுரம்" என்றே பெயர் சூ... அழைத்து மகிழ்ந்தனர். தேவாங்கபுரம், தொட்டம்பாளையம் இரண்டு சிற்றூ... பட்டா இல்லாதிருந்தது. அதற்கும் அரும்பாடுபட்டுத் தன்அயராத உழைப்பு மூ... பட்டா பெற்றுத் தந்தார்.

அந்தியூர்த் தொகுதியிலே வரட்டுப்பள்ளம் அணைத் திட்டம், ச... தொகுதியிலே குண்டேரிப் பள்ளம் அணைத் திட்டம், கோபியிலே ஒரு கல்லூரி... ஈரோட்டிலே ஒரு கல்லூரியும், விண்ணப்பள்ளியிலே தொழுநோயாளிகளு... மருத்துவமனையும் அமைய ஆவன செய்தார். கோவை மாவட்டத்திலும், கோ... வட்டத்திலும் நிலமற்ற ஏழை எளிய உழவர் பெருமக்களுக்கு நிலப்பட்டா... மனைப்பட்டாவும் வழங்க அரசின் மூலம் ஆவன செய்தார்.

வனத்துறையினரிடமிருந்து, வேளாண்மை செய்யக்கூடிய நிலங்களை... பெருமுயற்சி எடுத்துப் பெற்றது, பனையம்பள்ளி, கொத்தமங்கலம், அந்தி... பகுதியிலுள்ள நிலங்களைப் பெற்று சுமார் 600 குடும்பங்களுக்கு மேல் தலா 3 ஏ... வீதம் கிடைக்க ஆவன செய்தார். கோபி நாடாளுமன்றத் தொகுதியிலுள்ள தாளவா... மலைப் பகுதியில் தனிக்கவனம் செலுத்தி, மிகவும் பின்தங்கியுள்ள நிலையினை... மாற்றிப் பேருந்து செல்லக்கூடிய அளவில் நல்ல சாலைகள் அமைத்தும், வீடு, நி... பட்டாக்கள் வழங்கியும், குளங்கள் பல வெட்டி, மின் இணைப்புப் பெற்றுத் த... இணைப்புச் சாலைகள் அமைத்து மிகவும் முன்னேற்றமடையச் செய்தார்.

இவரது தலைக்கு விலைபேசிய கொடியவர்களிடமிருந்தும், மாற்றி... கட்சிக்காரர்கள் சுட்ட துப்பாக்கிக் குண்டுகளிலிருந்தும், வழியில் கட்டை வண்டி... நிறுத்திப் பாதையை மறித்து இவரைத் தீர்க்கக்கட்டத் து...

குழிபறிக்கும் கயவர்களிடமிருந்தும், தன்னிடமே உதவிபெற்றுப் பதவியை அடைந்து, தன்னையே வீழ்த்திடத் துடிக்கும் நயவஞ்சகர்களிடமிருந்தும் எதிர்நீச்சல் போட்டு, நாடுபோற்றும் தலைவராகத் திகழ்ந்தார்.

மாற்றுக் கட்சியாரின் அவதூறுப் பேச்சுக்களையும் தூற்றுதல்களையும் தாங்கிக்கொண்டு, கூடவே நல்லவர்போல் நடித்துச் சதிவேலைகள் செய்து, அவர் நெஞ்சினைத் துளைத்த எட்டப்பர்கள் மத்தியிலும், கொண்ட கொள்கை பிசகாமல், அண்ணாவின் தாரக மந்திரமான கடமை, கண்ணியம், கட்டுப்பாடு காத்து இறுதி மூச்சு உள்ளவரை நேர்மையின் திருஉருவாய், நம்பிக்கையின் நாயகனாய், ஏழை எளிய, தாழ்த்தப்பட்ட மக்களின் உற்ற துணைவனாய் வாழ்ந்து மறைந்த மாமனிதர் 'பெரியவர்' இவர் என்றால் மிகையாகாது.

1975-ம் ஆண்டு திசம்பரில் கோவையில் 5-வது மாநில மாநாடு, வரவேற்புச் செயலாளராக இருந்து நடத்தினார். இதுவரை யாருமே செய்தது இல்லை என்று சொல்லத்தக்க அளவு மிகவும் சிறப்பான முறையில் அமைந்தது. 3 மாதங்கள் இரவு பகல் பாராமல் அனைவரின் ஒத்துழைப்புடன் செயல்பட்டார். எவ்வளவு தூரம் உழைத்தார் என்பதை நேரிடையாகப் பார்த்தவர்கள் நாங்கள். கோவையே திருவிழாக் கோலம் பூண்டிருந்தது. அனைத்துத் தரப்பினரும் கட்சி வேறுபாடின்றி உளப்பூர்வமாய்ப் பாராட்டினரார்கள். 'இவர் பெயரைச் சொன்னாலே' இந்த மாநாட்டின் சிறப்பைப் பற்றிப் பேசுவர்.

வீரதீரமாகப் பேசியவர்கள் நிறையப் பேர். இவர் செய்த பணியின் காரணமாக, பேசிப்பேசியே எல்லாரிடமும் வேலை வாங்கியவர். மாநாட்டில் கூட வரவேற்புரையைப் பேச இயலாதபடி தொண்டை கம்மிய காரணத்தால் கோவைத் தென்றல் மு. இராமநாதன் அவர்களைப் படிக்கவைத்தார். இந்த மாநாட்டில், தி.மு.கழகத்திற்கு ஏற்பட்ட வரவேற்பு மத்திய அரசைக் கூர்ந்து பார்க்க வைத்தது. அதன் விளைவு இந்தஇயக்கத்தை ஒடுக்கியாக வேண்டும் என்று மத்திய அரசும் முயன்றது. அதற்குப் பிறகு நெருக்கடி நிலைமையினை அமுல்படுத்தியது மத்திய அரசு. தேசவிரோதச் செயல்களில் ஈடுபடுகிறார்கள் என்ற காரணம் காட்டி அவர்கள் பட்டியலில் உள்ளவர்கள் மீது அடக்கு முறையை ஏவிவிட்டனர். நாடாளுமன்றக் கூட்டத்திற்குச் சென்ற இடத்தில் இவரைக் கைது செய்தனர். கைது செய்யப்பட்ட அவரை டெல்லியிலிருந்து கோவை ரயிலில் அழைத்து வருகிறார்கள். இந்திய பாதுகாப்புச் (MISA) சட்டத்தின் மூலம் கைது ஆகிறார். கோவை ரயில் நிலையத்திற்குச் சென்றோம். அங்கும் எங்களைப் பேச அனுமதிக்கவில்லை! அங்குவந்த அதிகாரியிடம் கெஞ்சி விளக்கம் மட்டும் கேட்டுக் கொள்கிறேன் என்றேன். நான் அழுவதைப் பார்த்து 5 நிமிடம் அனுமதித்தார். பிளாட்பாரத்திலேயே நின்று பேசிவிட்டு, பார்க்க வேண்டியிருப்பின் கலெக்டரிடம் சென்று அனுமதி பெற்றுச்சிறைக்கு வரச் சொல்லிச் சென்றார்.

நாங்களும் குழந்தைகளை அழைத்துக் கொண்டு கலெக்டர் அலுவலகம் சென்றோம். அங்கு திரு. இலட்சுமிகாந்தன் பாரதி என்பவர் இருந்தார். ஐ.ஏ.எஸ். அவர்களைப் பற்றியும், இவர் செயல்பாடுகள் பற்றியும் நன்கு அறிந்தவர். ஐ.ஏ.எஸ். மேல் நல்ல எண்ணம் கொண்டவர். என்னைப் பார்த்து வருத்தப்பட்டார். தன்னால் எதுவும் செய்ய முடியவில்லையே என்று வருத்தப்பட்டார். தனக்குச் செய்ய அதிகாரம் இல்லை என்று சொன்னார். மிகவும் வேதனையோடு பார்க்க இயலாமல் திரும்பினோம். கைது செய்யப்பட்ட பிறகு ஒரு மாதம் கழித்துத்தான் இவரைப் பார்க்க அனுமதி கிடைத்தது. இதேபோல்தான் தமிழ்நாடு முழுவதிலும் கைது செய்யப்பட்டார்கள். சிறையில் பார்க்க வாரம் ஒருமுறை செவ்வாய்க்கிழமை நாங்கள் பார்க்கும் நாள். இதேபோல் கோவைச் சிறையில் இருந்த 50 பேரும் குடும்பத்தினரைப் பார்க்க அனுமதிக்கப்பட்டனர். முதல்முதலில் பார்க்கச் சென்றபொழுது நானும், குழந்தைகள், மாணிக்கம்அக்கா மட்டுமே அனுமதிக்கப்பட்டனர். சுமார் 3 பேர் என்ற அளவில் குடும்ப நபர்கள் ஒவ்வொருவரைச் சேர்த்து அழைத்துப் போவோம்.

50 பேருக்குத் தேவையான சாமான்கள் ஒரு வாரத்திற்குரியது கொண்டுவரச் சொல்வார். அவர் சொல்லும் பொருட்களைக் கொண்டுபோய்ச் சேர்ப்போம். நெருக்கடி நிலையில் பத்திரிகைச் சுதந்திரம் பறிப்பு, செயல்கள் இருட்டடிப்பு, பேச்சுரிமை, ஜனநாயக விதிகளுக்குப் புறம்பாக நடந்தது. அந்த நேரத்தில், ஒருசில தலைவர்கள் கலைஞர் உட்பட இயக்கத்தினை வழிநடத்தினார். ஆங்காங்கே கூட்டங்கள் போடுவதுகூடத் தடைசெய்யப்பட்டது. கழகக் கூட்டங்களுக்கு அனுமதி இல்லை. ஒலிபெருக்கி கூடப் பயன்படுத்தக் கூடாது.


கலைஞர் அவர்கள்கூட, கல்யாணம், கருமாதி என்று இரு நிகழ்ச்சிகளில் மட்டும் பங்கேற்கலாம் என்ற நிலை ஏற்பட்டது. அவர் பேசும்பேச்சு முழுமையாகப் பத்திரிகைகளில் வெளிவருவது இல்லை என்ற நிலை! அதுபோன்ற நேரத்தில் அந்தப் பேச்சுகளை முழுமையாக எழுதிப் போகும்பொழுது நேரில் கொண்டு சேர்ப்பேன். அவர்கள் 50 பேரும் சொல்லும் கருத்துக்களைத் தலைமைக்குத் தைரியம் சொல்லி எழுதித்தரும் தகவல்களைத் தலைமையிடத்தில் சேர்க்கச் சொல்வார். நானும் மாணிக்கம் அக்காவும் சென்னைக்குச் சென்று, தலைவர் இல்லத்திலேயே அதைச் சேர்த்து வருவோம். அன்பகத்திற்குச் சென்றும் கொடுத்து வருவோம். அதேபோல் மிசாவில், கோவையிலுள்ள 50 பேரின் குடும்பப் பிரச்சினைகளைச் சொல்லி அவர்களை நேரில் சென்று பார்க்கச் சொல்வார். அப்படியே நானும் 50 பேர்களின் குடும்பத்திற்கும் சென்று வந்தேன். அவர்கள் பற்றிய பிரச்சினைகளை இவரிடம் போய்ச் சொன்னபிறகு, அதற்குச் செய்யவேண்டிய தீர்வு, பண உதவிகளைச் செய்யச் சொல்வார். அதன்படி செய்து வந்தேன். கோவை, ஈரோடு, உதகை என்று 3 மாவட்டத்திற்கும் பொறுப்பாக இருந்து செயல்பட வேண்டும் என்று என்னை

தூண்டினார். அதன்படி **ஒன்றியவாரியாக, கிளைவாரியாக, மாவட்டவாரியாக அனைவரையும்** சந்தித்து, **துணிந்து** இயக்கப்பணி ஆற்றினேன். இவரும் என்னிடம் வேடிக்கையாகக் குறிப்பிட்டுச் சொல்வார் **"நீ இந்த மிசா நேரத்தில் 7777 எண்ணுள்ள பியட் காரில் சுற்றி அனைவரையும் பார்த்து வருவதால், உன்னையும் கைது செய்தாலும் செய்யக்கூடும்"** என்பார். நானும் 'வந்து விடுகிறேன்' என்று சொல்வேன்.

அந்த நேரத்தில்தான் கலைஞர் அவர்களை, ஒருநிகழ்ச்சிக்கு அழைக்கச் சொன்னார். திருமணத்திற்கு ஏற்பாடு செய்யச் சொன்னார். அதேபோன்று இவரின் பெரியப்பா மகள் **கன்னியாத்தக்கா,** அவர்கள் மகன் **நடராஜன் - சுசீலா** இருவரின் திருமணம் செய்ய ஏற்பாடு செய்யச் சொன்னார். இங்கும் இருவீட்டாரிடமும் பேசி ஏற்பாடு செய்தோம். சென்னை சென்று கலைஞர் அவர்களிடமும் நாள்வாங்கி வந்தோம். புளியம்பட்டியில் **கலைஞர் திருமண மண்டபத்தில்** ஏற்பாடு செய்தோம். மாநாட்டுத் தூண்களை ஆங்காங்கே பயன்படுத்தினோம். ஊர் முழுவதும் விழாக்கோலம், மாநாடு போலக் காணப்பட்டது. **கண்ணப்பன் அவர்கள் காரோட்டி வர, கலைஞர் அவர்களும் திருமணத்திற்கு வந்தார்.**

சிறுமுகையில் பணியாற்றிய திரு. **ஆறுமுகம்,** திரு. **பழனிவேல்** மற்றும் **அவரது நண்பர்களும்** சேர்ந்துதான், இந்தச் சிறப்பான ஏற்பாடுகளைச் செய்தனர். இதைப் பார்த்துக் **கலைஞர் அவர்களே வியந்து போனார்.** ஒலிபெருக்கியும் அவர்களால்தான் அமைக்கப்பட்டன. கலைஞர் திருமணத்தை நடத்தி வைத்தார். ஒரு சிலர் வாழ்த்துரை வழங்கிய பிறகு நான் நன்றியுரை ஆற்றிய பிறகு, கலைஞர் வாழ்த்துரை வழங்குவதாகச் சொன்னார்கள். **நான் பேச எழுந்தபோது திருமணத்திற்கு வந்திருந்த அத்துணை பேருமே கண்ணில் நீர்விட ஆரம்பித்தனர்.** நானும் **தழுதழுத்துக் கொண்டே "தலைவர் கலைஞர் அவர்களே!** மற்றும் வந்துள்ள சான்றோர்களே! திருமண வீட்டார்களே, உற்றார் உறவினர்களே மற்றும் வருகை தந்துள்ள பெரியோர்களே, தாய்மார்களே அனைவருக்கும் எனது நன்றிகலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்" என்று சொல்லி, இந்த நிகழ்ச்சிகள் இப்படித்தான் சிறப்பாக நடைபெற வேண்டும் என்று மானசிகமாக எண்ணிக் கொண்டிருக்கும் எனது துணைவர் அவர்களும், அவருடன் உள்ள அனைவரும் என்று சொன்னவுடன், **என்னையறியாமல் அழுகை வர ஆரம்பித்தது.** உடனே அடக்கிக்கொண்டு மேலே பேச ஆரம்பித்தேன். இதைப் பார்த்த மேடையிலுள்ள **கலைஞர் உட்பட, கண்ணப்பன் மற்றுமுள்ளோர் அனைவருமே அழுதுவிட்டனர்.** நான்பேசும் பொழுது, கண்ணப்பன் அவர்களிடம் கலைஞர், சம்பூரணம் 'என்ன படித்துள்ளார்' என்று கேட்டிருக்கிறார். இவரும் ஆசிரியப் பயிற்சி முடித்துள்ளதாகச் சொல்லியுள்ளார்.

கலைஞர் அவர்கள் பேசிமுடித்ததும், **ஒலிபெருக்கி பறிமுதல்** செய்யப்பட்டுத் திரு. ஆறுமுகம், திரு. பழனிவேலு மற்றும் சிலர் பேரில் வழக்கும் தொடுத்தனர்.



இந்த நிகழ்ச்சி முடிந்தது. வெள்ளாங்கோவில் **வி.பி. சண்முகசுந்தரம் கனகாம்பரம்** திருமணம் ஏற்பாடு செய்து இருந்தோம். அதற்கும் கலைஞ அவர்களுடன் நாங்களும் புறப்பட்டோம். எங்களிடமிருந்த ஒ ஒலிபெருக்கியையும் எடுத்துச் சென்றேன். வெள்ளாங்கோவில் திருமணத்தி ஒலிபெருக்கி இல்லாததால் கை ஒலிபெருக்கி மூலம் கையில் மாட்டிக்கொண் கலைஞர் பேசினார். **நடராஜன் - கமலா** திருமண நிகழ்ச்சி முழுவதும் நடந்த நடந்தவாறே அப்படியே படம் பிடித்தது போல, இவையனைத்தையும் எழுதி சிறையில் கொண்டுபோய்ச் சேர்த்தேன். 50 பேருமே **செவ்வாய்க்கிழமை** நாங் வருவதைப் பெரிதும் எதிர்பார்ப்பார்கள். நாங்கள் கொண்டுசெல்லும் உணவு பண்டங்களைக் காட்டிலும் எழுதி அனுப்பும் செய்திகள் தமிழ்நாட்டில் நடப்பு உட்பட அந்தக் கடிதத்தைத்தான் எதிர்பார்ப்பார்களாம். சுற்றிலும் உட்கார்ந்து படிக்கக் கேட்பார்களாம். இன்றும்கூட **இரா. மோகன்** அவர்கள் என்னைப் பார்க்கு நேரங்களிலெல்லாம் சொல்வார். இந்த நிகழ்ச்சி முடிந்ததும், சென்னை சென்ற பிறகு அடுத்த நாள்களில் முரசொலியில் கலைஞர் அவர்கள் இந்த நிகழ்ச்சிகளை குறிப்பிட்டு **"இந்த நேரத்தில் தமிழ்நாட்டிலுள்ள அசாதாரண நிலையிலும் ஒ சம்பூர்ணம் செயல்படுவது போல தமிழ்நாடு முழுவதும் 10 சம்பூர்ணம் இருந்தா எனக்கு ஆறுதலாக இருக்கும்"** என்று எழுதியுள்ளார். இதனைப் பார்த்தும், அன்றை காலகட்டங்களில் ஆண்கள் கூடப் பயந்த காலத்தில் பெண் ஒருத்தி துணிச்சலா செயல்படுகிறாளே என்று அனைவரும் பாராட்டினார்கள்.

சிறையிலிருந்த 50 பேரும் இந்தச் செய்தியைக் கேட்டதும் **'எங்களுக்கெல்லா மிகவும் பெருமையாக உள்ளது'** என்று மனதாரப் பாராட்டினார்கள். இப்படியே காலம் ஓடிக் கொண்டிருந்தது. என் துணைவர் அவர்கள் இந்தநேரத்தி சிறையிலேயே நடைப்பயிற்சி, அளவான உணவு போன்ற பயிற்சிகளை கடைப்பிடித்து மெலிந்த உடம்புடன் ஓர் ஆண்டு கழித்து வெளிவந்த நேரத்தி மிகவும் மெலிந்து காணப்பட்டார். மீண்டும் தன் பணிகளில் ஈடுபட்டுத் தொடர்ந்து கொண்டுதான் இருந்தார். மாநாடு நடத்துவதற்குச் சிலமாதங்கள் முன்னால்தா **எனது தங்கை கனகராணி - திரு. டி. ஆர். ராமசாமி திருமணம் பேராசிரியர் அன்பழக தலைமையில் நடைபெற்றது. அன்றே காமாட்சியம்மை திருமண மண்டபம் திறப் விழா, எங்கள் ராஜவீதி வீடு திறப்பு விழா, பேராசிரியர் அவர்களால் நடத்தப்பெற்றத 75-ஆம் ஆண்டு சிறைப்பட்டு 76-இல், ஓர் ஆண்டு கழிந்து வெளிவந்தார்.**

1977-இல் மீண்டும் தேர்தல் வந்தது. சட்டமன்றத் தேர்தலில் என்னை நிறுத்தினார்கள். நல்ல நிலைமை இருந்துங்கூட, எங்களுடன் இருந்தவர்களே துரோகிகளாக மாறிய காரணத்தால் **1427** வாக்குகள் வேறுபாட்டில் தோல்விய தழுவினேன். **1980**-இலும் போட்டியிட்டேன்.

இந்தத் தேர்தலிலும் சிறுபான்மைச் சமூகம் என்ற காரணமும், சேர்ந்ததாலும், நாயக்கர் சமூகத்தினர் எதிர்ப்புக் காரணமாகப் 10,000 ஓட்டில் தோல்வியைத் தழுவினேன். இயக்கத்தின் வளர்ச்சிக்காக அன்றைய சூழ்நிலையில் சொந்தச் சொத்துக்களை விற்றுத்தான் தேர்தலைச் சந்தித்தோம். அன்றைய காலகட்டங்களில் இயக்கத்திலிருந்து எந்தப் பணஉதவியும் கிடையாது. விளம்பரப் போஸ்டர் நோட்டீசு, தலைமை மூலம் எல்லாத் தொகுதிகளுக்கும் அனுப்பும் சுற்றறிக்கை தான் கிடைக்கப் பெற்றோம். எனவே அடுத்தடுத்துச் சிக்கல் ஏற்படவே செய்தது. அடுத்தடுத்துத் தோல்வி ஏற்பட்டாலும் இயக்கத்திற்கு நல்ல வளர்ச்சி ஏற்படுகிறதே என்று கூறுவார்.

"கட்சி என்ன செய்தது தனக்கு என்று எண்ணுபவர் மத்தியில், கட்சிக்கு நாம் என்ன செய்தோம் என்பதுதான் எனது கொள்கை" என்பார் பி.ஏ.எஸ். நான் எதையும் எதிர்பார்த்துக் கட்சியில் சேரவில்லை - வளர்க்கவில்லை என்பார். அதேபோல் எனக்கு எழுதிய மடலிலும் குறிப்பிட்டுள்ளார்.


01.12.1986-இல் இந்திய அரசு தமிழர்களிடம் இந்தியைத் திணிக்கிறது. அதை நாங்கள் வன்மையாக எதிர்க்கிறோம் என்று கூறி நாங்களும் 25 பேரும் (1. சம்பூர்ணம் சாமிநாதன் 2. நஞ்சம்மாள் 3. பண்ணாரி 4. நமச்சிவாயம் 5. கோவிந்தராஜ் 6. ஆறுமுகம் 7. செல்லப்பன் 8. சொக்கப்பன் 9. கருப்புசாமி 10. கருப்பன் 11. கருப்புசாமி 12. ரங்கசாமி 13. நிஜாம் 14. அழகுதுரைசாமி 15. ராமசாமி 16. என். ராமசாமி 17. சுந்தரம் 18. கொண்டப்பன் 19. வெங்கிடு 20. நஞ்சப்பன் 21. ரத்தினம் 22. சோமசுந்தரம் 23. முகமது உசேன் 24. நல்லப்பன் 25. பெரியசாமி 26. அருணாசலம்) என்தலைமையில் வி.ஆர்.டி. விசுவநாதன் மனைவி நஞ்சம்மாள் இருவரும் பெண்கள். மற்றவர்கள் 24 பேர். எனக்குத் துணையாக அவசியம் நாங்களும் வருகிறோம் என்று கூறி வந்தனர். நாங்கள் எல்லாரும் இந்திதான் இந்தியாவின் அதிகாரபூர்வமான ஆட்சி மொழி என்று கூறப்பட்ட அரசியல் சட்டத்தின் பகுதியை எரிக்கப் போகிறோம் என்றோம். *The official language of the Union shall be in Hindi - in Devanga Script* என்று வரிவடிவத்தில் உள்ள இந்திதான், இந்தியாவின் ஆட்சி மொழி என்ற அரசியல் சாசனத்தின் சட்டப் பிரிவை மெழுகுவர்த்தி கொண்டு எரித்தோம். இதனால் நாங்கள் அனைவரும் கைது செய்யப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டோம். 47 நாள்கள் சிறைத் தண்டனை அடைந்தோம்.

எனது துணைவர் பி.ஏ.எஸ். அவர்கள்தான் இந்தப் போராட்டத்தில் ஈடுபடுவதாக இருந்தது. நான்தான் உங்களோடு அரசியல் ரீதியாக எல்லா நிலைகளிலும் உடன் வந்துள்ளேன். இந்த மாதிரியான போராட்டத்தில் இதுவரை ஈடுபடவில்லை. இதற்கு ஒரு வாய்ப்புத் தாருங்கள் என்று வற்புறுத்திக் கேட்டுத்தான் இந்தப் போராட்டத்தில் நான் ஈடுபட்டேன்.

இதற்கு ஒரு நல்லுதாரணம் தந்து [illegible] பொறுப்பேற்றதால் தந்தையைச் சென்னைக்கு [illegible] முழுவதும் [illegible] இவர் துணைவர் வி.ஆர்.டி. விசுவநாதன் [illegible] முழு [illegible] உறுதுணையாக இருந்தார். [illegible] மறைவுக்குப் பிறகு விசுவநாதன் அவர்களுடன் இன்றும் அதே நட்புடன் [illegible] வருகிறோம். இதற்குப் பிறகு 1969-இல் தேர்தல் [illegible] சட்டமன்றத்திற்கு நின்றார். [illegible] தொடர்பினைத் துறவில்லை. [illegible] வரை விடக்கூடாது' என்ற உணர்வு இயக்கத்தினர் மத்தியில் [illegible] நிலைமை ஏற்பட்டது. எதையும் தாங்கும் இதயத்தோடு இதையும் தாங்கிக் கொண்டோம்.

பேராசிரியர் அண்ணா இறந்த காலங்களில் தனது சொந்தப் [illegible] போக்குதான் [illegible]. இன்றைக்கும் அண்ணா குறிப்பிடும் [illegible] வருகிறது என்றால், அண்ணாவின் பின்னர் பேராசிரியர் இருந்த நிலைதான் காரணம். தலைமையையும் கண்டு கொள்ளாமல் [illegible] காட்டிய காரணத்தால் [illegible] மனப்போக்கினைப் பார்த்து மனம் வெதும்பிப் பேசியவர். அண்ணா [illegible] பேரவை என்ற அமைப்பினை உருவாக்கிச் செயல்பட்டார். இதனைப் [illegible] 3 மாவட்டத்திற்கும் முடிசூடா மன்னனாக இருந்தவரை சற்று [illegible] நிலையில் எந்த அதிகாரத்தை [illegible] [illegible] தொண்டர்களை எதிர்த்து இந்த இயக்கத்தை வளர்த்தாரோ. இயக்கத்தைப் பற்றிய வரலாறு கூட தெரியாத கட்சியில் பணிசெய்ய அனுபவம் இல்லாத மற்றவர்களை [illegible] அராஜகம் செய்கின்ற நபர்களிடம் இந்த இயக்கம் சிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இதை மறுக்கவும் முடியாது. மறைக்கவும் முடியாது. இதையும் மீறி இவரின் பொதுப்பணி தொடர்ந்தது.

திருவள்ளுவர் ஆண்டு 2023 கன்னி (புரட்டாசித்) திங்கள் 9-ஆம் நாள் (25.09.1992) எங்களின் மணிவிழா ஏற்பாடுகளைச் செய்தார்கள். விழாக் குழுவினர் பேராசிரியர் அண்ணா குடும்பத்தார் மணிவிழாவில் கலந்து கொள்ளவும் என்று சொன்னதைக் கருத்தில் கொண்டு, அண்ணா அவர்கள் இன்று நம்மிடையே இல்லை என்றாலும், அண்ணாவின் துணைவியார் இராணி அம்மையாரை அழைத்து செய்யலாம் என்று முடிவு எடுத்தோம். அதன்படி இராணி அம்மையார், மகன் டாக்டர் பரிமளம், மருமகள் சரோஜா ஆகியோரை அழைத்து வந்தார்கள். ஆசிரியர் கி. வீரமணி அவர்களும், புலவர் புலமைப்பித்தன் அவர்களும், திருமதி. இரா. [illegible] அவர்களும், [illegible] திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்களும், பண்ருட்டி எஸ். இராமச்சந்திரன் அவர்களும் கலந்துகொண்டனர். கலைஞர் திருமண மண்டபத்தில் மணிவிழா நிகழ்ச்சிகள் ஏற்பாடுகள் நடந்தன. கருத்தரங்கம் [illegible] சாந்திநகரில் திருமண மண்டப அடிக்கல் நாட்டும் விழா. பி.ஏ.எஸ். அரங்கேட்ட[illegible]



தொடக்க விழா, "தொண்டின் வடிவம் எங்கள் சாமி" நூல் வெளியீட்டு விழா, பி.ஏ.எஸ். இலவச நூல் நிலையம் திறப்பு விழா என்று பல்வேறு நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. அன்றைய நாளும் இந்த ஊர்மக்கள் அனைவரும் கலந்து கொண்டனர். பெரும்பாலானவர்கள் தங்கள் பணிகளிலிருந்து விடுப்பு எடுத்து, ஒருநாள் முழுவதும் பங்கு பெற்றனர். எங்களையும் ஊர்வலமாக அழைத்துச் சென்று திருமண மண்டபம் அமர்த்தினர். காலை முதல் மதியம் வரை எல்லா நிகழ்ச்சிகளும் சிறப்பாக நடைபெற்றன. மதியம் வரை "பி.ஏ.எஸ். அறக்கட்டளை" தொடக்கம் உட்பட அனைத்தும் நடைபெற்றன. மதியம் கருத்தரங்கம், பட்டிமன்றம் சிறப்பாக நடைபெற்றன. இவர்போல் பற்றும் பாசமும் கொண்ட உள்ளம் நண்பர்கள் அனைவரும் சிறப்பாகச் செயல்பட்டதே வெற்றிக்குக் காரணம்.

ஊரே விழாக்கோலம் பூண்டிருந்தது. நன்றியுரை கூறுகின்ற நேரத்தில் கூட, நான் ஒவ்வொருவருக்கும் தங்கள் இல்லத்தில் அண்ணனுக்கு நடைபெறுகின்ற விழா, தம்பிக்கு, தந்தைக்கு, தாத்தாவுக்கு நடைபெறுகிற குடும்ப விழாவாகவே ஊர்மக்கள் எடுத்துள்ளனர் என்று குறிப்பிட்டுச் சொன்னேன்.

1992-இல் தொடங்கிய அறக்கட்டளை மூலம் 1993 முதல் இன்றுவரை ஆண்டுதோறும் கல்விக்காக ஏழை எளிய மாணவர்களுக்கு உதவத் தொடங்கினார். மருத்துவம், பொறியியல் மற்ற மேற்படிப்புப் படிக்க இயலாத மாணவ மாணவியருக்கு, மிகவும் பின்தங்கிய - குறிப்பாகத் தாழ்த்தப்பட்ட மாணவ மாணவியர் பயன்பெற ஆவன செய்தார்.

1996-இல் நடந்த தேர்தலில், தி.மு.க. சார்பில் முஸ்லீம் உறுப்பினர் என்ற நிலையில் அக்பர் என்பவரை ஊராட்சி மன்றத் தலைவர் பொறுப்பிற்குத் தலைமை அறிவித்தது. அன்றாடம் செலவிற்கே தட்டுப்பாடு, பெரும்பான்மை விரும்பாவிட்டாலும், அறிவித்ததற்குப் பிறகு, எங்கள் குடும்பம், நாங்கள் நிற்பது போல எண்ணி வீடுவீடாகச் சென்று வாக்குச் சேகரித்தோம். சுவரொட்டி, நோட்டீசு, பிற அறிக்கைகளைப் பெரியவர், கோவை போகும் போதெல்லாம் வாங்கிக் குவித்து, வேண்டுவன செய்ததை அந்தச் சமயத்தில் மும்முறை பி.ஏ.எஸ். அவர்களுடன் கோவை சென்று வந்த முதுகலைத் தமிழாசிரியர் புலவர் கி. தங்கவேலு அவர்கள் நன்கறிவார்.

அப்படி வாக்குச் சேகரிக்கச் சென்ற நேரத்தில்தான் குழியில் கால் இடறி விழுந்து அவர் இடுப்பு எலும்பு அடிபட்டது. தாங்க முடியாத வலி காரணமாக எழுந்துகொள்ள முடியாத நிலையில் தூக்கி நாற்காலியில் அமர வைத்து மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றோம். கோவைக்குச் செல்ல வேண்டிய கட்டாயம். சென்னை 'MIOT'-இல் சேர்த்தோம். அவர்பட்ட வேதனை சொல்லுந் தரமன்று. 3 மாதம் வரை ஓய்வு பெற்ற பின்புதான் ஓரளவு நடமாட முடிந்தது.

மீண்டும் தனது பணிகளைத் தொடர்ந்து செய்து கொண்டுதான் இருந்தார். ஆண்டுதோறும் அறக்கட்டளை மூலம் கல்வி உதவி, நலிந்தோர் உதவி, மருத்துவ

உதவிகளைத் தொடர்ந்து செய்து வந்தார். இடுப்பு ஒடிந்த நிலையில் இன்னும் இவ்விதம் செயல்படுகிறாரே என்பதைப் பொறுக்காத சில உள்ளங்கள்செய்த சூழ்ச்சிகள் அவ்வப்போது தலையெடுத்தன. அவற்றையும் முறியடித்து வந்தார். இன்றைய அரசியல்வாதிகளின் டாம்பீகம், ஆடம்பரம், ஆர்ப்பாட்டம் எதிலும் ஆதாயமில்லாமல் எதற்கும் பயன்படாதவர்கள் என்ற நிலையிலுள்ளவர்கள் மத்தியில் அமைதியாக, எளிமையாக, பண்பாகத் தன்மைக்காக மூலம் அடுத்தவர்க்கு உதவிடும் பண்பாளராக, குடும்பத்தின் வருவாயில் மட்டும் தன்னுடைய வாழ்க்கையை நடத்திக் கொண்டிருக்கும் இவரைப் போன்றவர்களும் உள்ளார்கள் என்பதற்கு எடுத்துக்காட்டு இவரே.

தொகுதி மக்களுக்கும் தன்னாலான பணியினைச் செய்துவிட்டேன். இந்த ஊருக்கும் மன நிறைவாக 1958-லிருந்து இன்றுவரை எல்லாத் திட்டங்களையும் நிறைவேற வேண்டும் அதாவது, "கட்சி நமக்கு என்ன செய்தது என்று எண்ணுவோர் மத்தியில், கட்சிக்காக நாம் என்ன செய்தோம்" என்று நினைக்கிறவராக இருந்த காரணத்தால்தான், அவர் எண்ணப்படி தன்னுடைய சொந்தச் செலவில் கட்சிக்கு ஒரு கட்டிடம் வாங்கி வைக்க வேண்டும் என்றார். அதன்படி தங்கசாலைத் தெருவில் ஆரம்பகால பால்ய நண்பர்கள் இயக்கத்தை இந்த ஊருக்கு அறிமுகப்படுத்தியவர்களில் ஒருவரான பாலசுப்பிரமணியம் (பாலு) தங்கை சரோஜினி கணவர் ராஜூ அவர்களின் வீட்டை வாங்க எண்ணினார்.

அவரும் சில பொருளாதாரச் சிக்கல் காரணமாக இதை விற்க வேண்டியகட்டம் ஏற்பட்டது. இவரிடம் வந்து 'என்னுடைய கடன்தாரர்களை அழைத்துப்பேசி இதனை ஒழுங்கு செய்து தாருங்கள்' என்றார். அதன்படி ஏற்பாடு செய்தார். ஒவ்வொரு நிலையிலும் தாமதம் ஏற்பட்டது. ஒரு சில கோர்ட் நடவடிக்கை மூலம் மீட்க வேண்டியதாயிற்று. எனவேதான் நினைத்த காலத்தில் எழுதித் த முடியவில்லையே என்ற வருத்தம் உண்டு. இதற்கிடையில் 'நேற்று முளைத்த காளான்கள்', பக்குவம் இல்லாத கத்துக் குட்டிகள் சொன்னதைக் கேட்டு மேலிடமும் இவரை வற்புறுத்தியது. இதுவரையும் தி.மு.க. கோட்டையாக அமைதிப் பூங்காவாக இருந்த கழகத்தைப் புல்லுருவிகள் சிலர் இயக்கத்திற்குள்ளேயே சதிவேலைகளில் ஈடுபட்டனர். தேர்தலிலும் சொன்னதைச் செய்யாமல் நியாயத்திற்குப் புறம்பாகச் செயல்பட்டு, நம்பிக்கைத் துரோகிகளாகமாறி மக்கள் அன்புவைத் தோற்கடித்தனர். இதில் மனம் நொந்த அவர், மிகவும் வேதனைப்பட்டார். நகரக் கழகம் பேராசிரியர் படிப்பகம், கலைஞர் அரங்கம் பெரியார் - அண்ணா மாளிகை என்று பெயரிட்டு, செயல்பட்டுக் கொண்டு இருந்தா இவர்கள் பொறுப்பிற்கு வந்தபிறகு இந்த அலுவலகத்திலேயே வந்து செயல்படுமாறு சொல்லி அனுப்பினார். அங்கிருந்து வந்தபதில் முறையற்ற முறையில் அதாவது அதில் வந்து இருக்க மாட்டோம். 'புல்டோசர்' விட்டு இடித்துவிட்டு திரும் புதியதாகக் கட்டித்தான் அங்கு வருவோம் என்றார்களாம். எப்படிப்பட்டவர்கள்

தலைமையிடம் ஒப்படைப்பதில் குறியாக இருந்தார். அண்ணா பிறந்த நாள் விழாவிற்குள் இதனையும் எழுதி வைத்துவிட்டு, விழாவையும் கொண்டாடிவிட்டு அறக்கட்டளை உதவிகளையும் செய்து முடித்து விட்டுத்தான் மருத்துவமனை சென்று வைத்தியம் பார்ப்பேன் என்றார். அதன்படியே இந்தப் பணிகளை முடித்துவிட்டு 20-09-2010-ஆம் நாள் மருத்துவமனைக்குச் சென்றார். அதற்கு முன்பாகவே தங்கசாலை வீதியில் தன் பெயரில் வாங்கிய கட்டடத்தை தி.மு.கழகத்திற்குப் பேராசிரியர் அவர்கள் பெயரில் பதிவு செய்து, அதிகாரப் பூர்வமாக எடுத்துச் சென்றார். அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. இவரை மருத்துவமனையில் பார்க்கவந்த பொதுச் செயலாளர் பேராசிரியர் அவர்களிடம் ஒப்படைத்தார். அங்கு நடந்த சம்பவங்களைப் புகாராக எழுதி அனுப்புமாறு அன்புவிடம் சொல்லிச் சென்றார். அனுப்பின புகாருக்கும் எந்தவிதமான பதிலும் வரவில்லை. சென்னை மருத்துவமனை சிகிச்சை முடிந்து ஊர் வந்தோம்.

வீட்டில் சிரமத்தோடு மெதுவாக வாக்கரில் நடந்து வந்தார். 15 நாள்களுக்குப் பிறகு திடீரென்று மூச்சுத் திணறல் ஏற்பட்டது. மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சுமார் 10 நாள்கள் இருந்தோம். பிறகு ஊர் வந்தோம். அடுத்த நாளே மீண்டும் இராமகிருஷ்ணா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று திரும்பவும் ஊர் வந்ததும் நல்ல முறையில் குணம் பெற முடியவில்லை. மீண்டும் மருத்துவமனைக்குச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது. நாளுக்கு நாள் குணமாவதற்கு வழியே தெரியவில்லை. எல்லா மருத்துவமும் பலன் இன்றி 22-01-2011-ஆம் நாள் சனிக்கிழமை எங்களையெல்லாம் துயரத்தில் ஆழ்த்தி மீளாத்துயில் கொண்டார். மருத்துவமனையிலிருந்து வீட்டிற்கு எடுத்து வந்தோம். வந்தது முதலே கட்டுக்கடங்காத கூட்டம். அனைவரும் அழுது புலம்பும் காட்சியைத் தவிர எதையும் பார்க்க முடியவில்லை. எங்கள் ஊர் முழுவதும் கடையடைப்பு. இரண்டு நாள்களும் ஊரே இங்குக் கூடி இருந்து அஞ்சலி செலுத்தினர். தமிழ்நாடு முழுவதுமிருந்து இவரை அறிந்த அத்துணை பேரும் வந்திருந்து அஞ்சலி செலுத்தினார்கள். இரு நாள்களும் வந்திருந்தவர். பசியாற ஏற்பாடு செய்யப்பட்டது. இவர் இருக்கும் காலத்திலும் யார் வீட்டுக்கு வந்தாலும் சாப்பிடாமல் அனுப்பமாட்டார்.


இன்றும் வந்தவர் எல்லோரும் பசியாறிப் போகட்டும் என்று எல்லோரும் அந்த பொறுப்பினை ஏற்றுக் கொண்டனர். மேடையில் இவரின் பெரிய படம் வைக்கப்பட்டு, வந்தவர்கள் அனைவரும் வரிசையாக வந்து மலர் அஞ்சலி செலுத்தினர். இரண்டு நாள்களும் இடைவிடாத வரிசை சென்று கொண்டு இருந்தது. எனது துணைவர் அவர்கள் எந்தச் சடங்கும் செய்யக் கூடாது. கருமாதி சடங்கு கூடாது. 16-ஆம் நாள் என்றெல்லாம் செய்ய வேண்டாம். எங்கள் தோட்டத்தில் அவரே முன்பே குறிப்பிட்டுச் சொன்ன இடத்தில் நல்லடக்கம் செய்யச் சொன்னார். அதன்படி, தேக்கினால் பெட்டி செய்து

[illegible] அதனுள் பெட்டியில் வைத்து அடக்கம் செய்தோம். 3 [illegible] நினைவுச் சின்னம் கட்டவும் முடிவு செய்யப்பட்டது. எங்கள் இல்லத்தில் இருந்து இவரின் இறுதி ஊர்வலம் புறப்பட்டு, கல்தூண் பாதையில் சென்று திருவிக நிலையை அடைந்து, நகராட்சி மன்றம் சென்று, மீண்டும் ஜவஹர் [illegible] வீதி வழியாக வந்து, அருணாசலம் மருத்துவமனை வழி ராஜவீதி, தம்பியூர்ப் பாதையில் திரும்பிச் சென்றது. வரும் வழியில் முன்னால் இரு வரிசையில் தண்ணீர் நிறைந்துவர இருமருங்கிலும் ஆண்களும் பெண்களும் சாரி சாரியாக அணிவகுத்துவர, தம்பியூர்ப் பாதை வரை ஆங்காங்கே நிறுத்தி மக்கள் தரிசனம் செய்த காட்சியைப் பற்றிச் சொன்னபோது மெய் சிலிர்த்தது. காந்திநகர் வாழும் மக்கள் தங்கள் தங்கத் தலைவனுக்குப் பூரண கும்ப மரியாதையுடன் மாலைகள் அணிவித்து மலர்தூவி, கற்பூர ஆராத்தி எடுத்துத் தாங்கொணா வேதனையோடு அஞ்சலி செலுத்தினர். அம்மக்களுக்காக அவர் பாடுபட்டதை அம்மக்கள் காட்டிய செயல்களால் தெளிவாகத் தெரிந்தது. இதனைப் பார்த்து அனைவருமே நெக்குருகி நின்றனர். ஆங்காங்கே அவர்கள் நிறுத்தி மரியாதை செய்த காரணத்தால் தோட்டம் சென்றடையத் தாமதம் ஏற்பட்டது. அவர் சொன்னவாறே அங்கு அனைத்து நிகழ்வுகளும் நடந்தேறின.


அவர் இல்லாமலே, இவரின் நிகழ்வுகள் அவர் நினைத்த எண்ணப்படியே நிறைவேறின. **"மக்களால் மக்களுக்காக மக்களே ஆள்கின்ற ஆட்சி என்பது மக்களால் மக்களுக்காக அந்த மக்களே எடுத்த நிகழ்வுகள்தான் என்றால் மிகையாகாது".** நல்லடக்கம் முடிந்து, இரங்கல் கூட்டம் நடைபெற்றது. அவரவர் கருத்துக்களை இவர் ஆற்றிய பணிகள், போராட்டங்கள், செய்த தியாகங்கள், ஊருக்குச் செய்த நன்மைகள், தொகுதிக்குச் செய்தவைகள் இவர் இயக்கத்திற்காகப் பட்ட பாடுகள் பற்றியெல்லாம் பேசப்பட்டன. சர்வ கட்சியினருக்கும் சொந்தமானவராகச் சித்தரித்தார்கள். இந்த உணர்வுகளின் கட்டுரைகளை நினைவு மலராக வெளியிட அன்றே எண்ணினோம். இரவு 11 மணி சுமாருக்கு அனைவரும் திரும்பி இல்லம் வந்து சேர்ந்தோம். எங்கள் தலைவனைத் தனியே விட்டு நாங்கள் மட்டும் மீதி நாள்களைக் கழிக்க வேண்டிய கட்டாயத்திற்கு ஆளானோம். எப்படி வாழப் போகிறோம்? மனதில் 'வெறுமை' குடிகொண்டு விட்டது. எப்படித் தேறுவது? அவரை எப்படி நினைக்காமல் இருக்கப் போகிறோம்? என்று புரியாத நிலையில் தவித்துக் கொண்டுள்ளோம்.

அவர் விட்ட பணிகளை - செய்யச் சொன்ன செயல்களைச் செய்ய முயல்வது காலத்தின் கட்டாயம். 'நினைத்தலும் செய்தலோடு ஒக்கும்' என்னும் [illegible] [illegible] தூய உளக்கருத்தினை நீள்நினைந்து ஒன்றும் [illegible] எண்ணங்களைச் செயலாக்குவோம்!

சாதனைச் செம்மலின் செழும் புகழ் வாழ்க!



P.A.S. அன்பு B.Sc.,M.B.A.
நகராட்சித் தலைவர்
புன்செய்ப் புளியம்பட்டி
செல் : 98422 61600



'பெரியவர்' P.A.S. ஒரு சகாப்தம்

அன்னையைப் போல் ஒரு தெய்வம் இல்லை என்பது பொதுமறை
என் தந்தை போல் ஒரு மனிதரில்லை இந்நாளில் நான் கண்டவரை


நம் பெரியவர் P.A.S. அவர்கள், அவர் கருவாக உருவாகும்போதே பொதுமக்களின் தொண்டனாக உருவெடுத்து, தன் 81-ஆவது வயதில் உயிர் துறக்கும் வரையிலும் பொதுத் தொண்டாற்றிய 'சாதனைச் செம்மல்', என்றும் M.P.-யாகவே 'Man for the People' என்கிற அடைமொழியோடு வாழ்ந்துகாட்டிய மாமனிதர்.

புன்செய்ப் புளியம்பட்டி என்றாலே தமிழகம் முழுவதும் நினைவில் நின்று சொல்லும் சொல் பெரியவர் P.A.S. ஊர்தானே. **வாழ்ந்தவர் கோடி, மறைந்தவர் கோடி, மக்களின் மனதில் நிற்பவர் யார்?** என்ற கேள்விக்கு 100% பதிலாக வாழ்ந்து காட்டியவர் பெரியவர் P.A.S. அவர்கள்.

ஜாதி, மத, இனப் பாகுபாடின்றி, கட்சிப் பாகுபாடின்றி அனைத்துத் தரப்பு மக்களின் நெஞ்சங்களில் சிம்மாசனமிட்டுக் கொண்டிருப்பவர், **'பெரியவர்'** என்று அனைவராலும் அன்போடும், பாசத்தோடும் அழைக்கப்படுபவர் **என் அப்பா** P.A.S. அவர்கள்.

என் வாழ்நாளில், நான் என் அப்பா பெரியவர் P.A.S. அவர்களோடு இருந்த காலம் மிகமிகக் குறைவு. அவர் 1967-இல் M.P.-யான பிறகு ஓராண்டு கழித்து நான் பிறந்தேன். என் தாய் **சம்பூரணம் சாமிநாதன்** அவர்கள் 3 பெண் குழந்தைகளுக்குப் பிறகு, ஒரு ஆண் குழந்தை வேண்டுமென, டெல்லி காளி கோயிலில் வேண்டினால் நிச்சயம் பலன் கிடைக்கும் என நாடாளுமன்ற உறுப்பினர் திரு. **சிட்டிபாபு** அவர்களின் துணைவியார் திருமதி. **கங்காதேவி** அவர்களின் இடைவிடாத தூண்டுதலின்பேரில் இந்தியாவின் தலைநகர் டெல்லியில் உருவானவனாம் நான்.

3 வயதில் Hostel-க்குச் சென்றவன் M.B.A. முடியும் வரை, கோவை



மற்றும் சென்னையில் Hostel வாழ்க்கை. தாய், தந்தை, ராணி, வெற்றிச்செல்வி, பேபி ஆகிய மூன்று அக்காமார்களுடனும், உற்றார், உறவினர், நண்பர்களுடனும் ஆண்டிற்கு 3 அல்லது 4 முறை மட்டுமே சந்திப்பு. அதுவும் என் அப்பாவுடன் எதுவும் பேச வாய்ப்பு இல்லை.

என் திருமணத்திற்குப் பிறகுதான் என்அப்பா அவர்களுடன் சிறுசிறு பேச்சுக்களுடனும் உறவுகளுடனும் என் வாழ்வு தொடங்கியது. அடிக்கடி என்னைத் திட்டிக் கொண்டே இருப்பார். 'டேய் அன்பு எல்லா News Paper, புத்தகங்கள், நாட்டு நடப்பு படிடா, நுனிப்புல் மேயாதே' என்று அடிக்கடி சொல்லுவார். திராவிட இயக்க வரலாற்று நூல்கள், நீதிக்கட்சி வரலாறு, தி.மு.கழகத்தின் தொடக்கம், **பெரியார், அண்ணா, கலைஞர்** போன்ற தலைவர்களின் வாழ்வில் நடந்த நிகழ்வுகள் பற்றி நான் அவருடன் இருக்கும் வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் விடாது சொல்லுவது அவரின் இயல்பாகவே இருந்தது.

அன்று அது சிரமமாக இருந்தது. ஆனால் **இன்று நினைக்கும்போது என் உயிர்நாடிக்குச் சக்தி கொடுக்கின்ற உரமாகத் தோன்றுகிறது.** இன்று என்னைத் திட்டுவதற்குப் பெரியவர் என்அப்பா இல்லை. அடிக்கிற கைதான் அணைக்கும் என்பார்கள். உண்மைதான் என்பதை நான் அனுபவ ரீதியாக உணர்ந்திருக்கிறேன். **மாதா, பிதா, குரு, தெய்வம்** என்பார்கள். ஆனால், எங்கள் குடும்பத்தில் **பிதா, மாதா, குரு, தெய்வம்** என்பதுதான் உண்மை.

பெரியவர் என் அப்பாவுக்கு நல்லது, கெட்டது தெரியாது. நல்லவர் யார், கெட்டவர் யார், எதிரி யார் எனப் பிரித்துப் பார்க்கத் தெரியாது. கடன் வாங்கி தானம், தர்மம் எதிரிகளுக்கும் செய்வார் எனத் **தி.மு.கழகப் பொதுச் செயலாளர் பேராசிரியர்** அடிக்கடி சொல்லுவார்.


அவருக்கு, அவசரத் தேவைக்கு, யாருக்காவது தானம், தர்மம் செய்யவும், வீண் விரயம் செய்யவும் பணம் வேண்டுமெனில், என்னிடம் கேட்டால் அன்பு தரமாட்டான், போய் மருமகள் **ராணியிடம்** வாங்கி வாருங்கள் என்று சீட்டு எழுதிக் கொடுத்து அனுப்பி வைப்பார். என் மனைவியும் எனக்குத் தெரியாமல் மாமனார் மனம் போற்றும்வண்ணம் நடந்து கொள்வார் - என்னிடம் திட்டு வாங்கிக் கொண்டே.

நீர் இன்றி அமையாது உலகு,

புன்செய் நகருக்குக் குடிநீர் தந்ததே உன் அழகு.

புன்செய்ப் புளியம்பட்டி நகர மக்கள் அனைவரும் ஏதாவது ஒரு உறவுடன், உரிமையுடன் பெரியவரிடம் உதவி பெற்றவராக நிச்சயம் இருப்பார்கள்.

தமிழகத்தில் அரசியல் அறிந்தவர்கள் நிச்சயம் பெரியவர் P.A.S. அவர்களை




நன்கு அறிவர். கொங்கு மண்டலத்தின் கோவை, திருப்பூர், நீலகிரி, ஈரோடு மாவட்டங்கள் மட்டுமின்றி தமிழகம் முழுவதிலும் உள்ள மூத்த முன்னோடிகள் பெரியவர் P.A.S. அவர்களின் மேல் நல்ல மரியாதையும், பாசமும், அன்பு கொண்டுள்ளவர்களாக இன்றளவும் இருக்கிறார்கள்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு உண்மைத் தொண்டனாக இருந்து அவர் ஆற்றிய பணிகள் சொல்லிலடங்கா. 1975-இல் கோவையில் நடைபெற்ற தி.மு.கழகத்தின் 5-ஆவது மாநில மாநாடு. இன்றளவும் அரசியல் சரித்திரத்தில் இதுபோன்றதொரு சிறப்புமிக்க மாநாடு நடத்தப்படவில்லை என்று அரசியல் ஆர்வலர்கள் கூறும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. மைசூர் தசரா திருவிழாவை விஞ்சும் வண்ணம் அமைக்கப்பட்டிருந்த ஒளி அமைப்புகள், அலங்கார வளைவுகள், மேடை, பந்தல் அமைப்புகள், மாநாட்டின் அனைத்து நாள்களிலும் திருவிழாப் போன்று கட்டுக்கடங்காத மக்கள் கூட்டம், சிறப்பான நிகழ்ச்சிகள் என அப்போதைய கோவை மாவட்டச் செயலாளராக இருந்த பெரியவர் P.A.S. அவர்கள், மாநாட்டிற்குச் சிறப்பானதொரு வரவேற்பை நிகழ்த்தி அனைவரின் ஒட்டுமொத்தப் பாராட்டையும் பெற்றது என் அப்பா P.A.S. அவர்களின் வாழ்நாள் சாதனையாகவே கருதலாம்.

என் அப்பா அவர்களின் வேண்டுகோளின்படி அவரின் மறைவிற்குப்பின் அவர் முன்பே சொல்லியிருந்தபடி, அவரது தோட்டத்தில் அவர் குறிப்பிட்டிருந்த இடத்தில் நல்லடக்கம் செய்யப்பெற்றுப் பெரியவர் P.A.S. அவர்களின் மணிமண்டபம் சிறப்பான முறையில் அமைக்கப்பெற்றுள்ளது. இச்சிறப்புமிகு மணிமண்டபம் உருவாகக் காரணமாக இருந்தவர்கள்,

கல்விக் கொடை வள்ளல் திரு. ஓ. ஆறுமுகசாமி அவர்களின் ஆலோசனை
என் தாய் திருமதி. சம்பூரணம் சாமிநாதன் அவர்கள்
மாமா சந்திரசேகரன் அவர்கள்
அத்தை திருமதி. மாணிக்கம் அர்த்தநாரி அவர்கள்
ஓய்வுபெற்ற தமிழாசிரியர் புலவர். கி. தங்கவேலு அவர்கள்
என் மனைவி திருமதி. ராணிலக்ஷ்மி அவர்களின் ஊக்கம் மற்றும்
கோவை கிரானைட்ஸ் திருமூர்த்தி, கார்த்தி, ரஜினி, ஜெயக்குமார்
தாளவாடி சத்தியமூர்த்தி
சிற்பி கும்பகோணம் சிவசுப்பிரமணியம்
பெரியவரின் உதவியாளர் கிருஷ்ணன்
தோட்டம் ரத்தினம், சுரேஷ், தேவி, அழகிரி
கார் குக்கக்காயன் பழனிச்சாமி, ஓட்டுநர் காஜா
உதவியாளர் அலாவுதீன்



பெயின்டர் அருள், UPS சந்துரு

பொறியாளர் மௌலி நடேசன், பொறியாளர் சிவா காளியப்பன்

பொறியாளர் வேலுச்சாமி, பொறியாளர் வெற்றி, பு. புளியம்பட்டி

மேஸ்திரி மணி & சன்ஸ்


என அனைவரையும் ஒருங்கிணைத்து என் அப்பா பெரியவர் P.A.S. அவர்களின் மணிமண்டபம் கட்டுவதற்கு என்வாழ்நாளில் எனக்குக் கிடைத்த பெரும் பாக்கியமாகக் கருதுகிறேன். என்னைப் பொறுத்தவரை பெரியவர் P.A.S. அவர்கள், P.A.S. மணிமண்டபத்தில் புதைக்கப்படவில்லை, நல்வித்தாக விதைக்கப்பட்டிருக்கிறார்!

இன்று இருக்கலாம் இப்புன்செய் நகருக்கு நான் 'நகரத் தந்தை'
ஆனால், என்றென்றும்
புன்செய் நகர் உள்ளவரை P.A.S. உங்கள் பெயர் சொல்லும்
'நம் மக்களின் தந்தை'

என்றும் பெரியவர் அவர்களின் இலட்சியப் பயணத்தில்,
அவரின் அடிச்சுவட்டை ஒன்றிப் பயணிக்கும்...

சம்பூரணம் சாமிநாதன்
மாணிக்கம் அர்த்தநாரி

P.A.S. அன்பு - மகன்
A. ராணி லக்ஷ்மி அன்பு - மருமகள்
P.A. அன்புச்செல்வன் - பேரன்
P.A. அபர்ணா ராணி - பேத்தி



பேராசிரியர் முனைவர் கா. அரங்கசாமி
கோபி



'கொள்கை வீரர்' புளியம்பட்டி சாமிநாதன்

முன்னுரை : பகுத்தறிவுப் பகலவனின் பற்றுமிக்க திருத்தொண்டர்; பேரறிஞர் பெருந்தகை அண்ணாவின் அன்புத் தம்பியார்; முத்தமிழ் வேந்தர் கலைஞரின் கருத்தில் நிறைந்தவர் அவரே புளியம்பட்டி தந்த சொல்வீரர் சாமிநாதன் அவர்கள். திராவிட இயக்கத்தின் தீரர் அவர். அவருக்குத் துணையென வாய்த்த சம்பூர்ணம் சாமிநாதனும் கொள்கை உரமிக்கவர். ஆதலால் அவர்களின் வாழ்க்கை - பயன்நிறைந்த வாழ்க்கையாக இலங்கியது. அவரோடு கடந்த நாற்பது ஆண்டுகள் பழகிய பாங்கால் அவரை நான் பார்த்தும் கேட்டும் அறிந்தவற்றைக் கீழே தந்துள்ளேன். மாமனிதர் என்போர், மக்கட் பணியாளராகவும் மொழியும் நாடும் தமது இருகண்களாகவும், கல்விப் பணியே தலைப் பணியாகவும், கொள்கைக் கோட்பாட்டில் உரமிக்கவராகவும்; கொண்டாடும் பண்பின் நிறைவாகவும், தான் பிறந்த குடியை உயர்த்தும் சான்றோராகவும், நல்லதமிழ் வளர்க்கும் நாவலராகவும் இலங்கிட வேண்டும். அப்படி விளங்கிய பெருமை இவர்க்குண்டு என்பதால் இவர்தம் சீரினை இங்குக் காண்போம்.

ஆளுமைமிக்க தீரர் : ஆளுமைத்திறன் என்பது அகப்புறத் தோற்றம், நாநலம், தனக்கென வாழாது பிறர்க்கென வாழும் அகம், பண்புநலம் போன்றவற்றால் கணிப்பது ஆகும். புளியம்பட்டி சாமிநாதன் அவர்களின் ஆளுமைத் திறனை அவர் வாழ்ந்த ஊரின் நலமே உணர்த்தும். **புளியம்பட்டியைப் பூதகராக வளர்த்தவர், பூமிபோற்றும் கோநகராக ஆக்கியவர் அவர். ஊராட்சி மன்றத் தலைவராகவும், நாடாளுமன்ற உறுப்பினராகவும், கட்சியின் மாவட்டச் செயலாளராகவும் மக்கள் நெஞ்சம் கவர்ந்தவராகவும் விளங்கியவர் அவர்.**

அவரால் பயன்பல பெற்றோர் எண்ணிலர். வளம் பெற்றோர் பலர். அவர்தம் செயலாண்மைத் திறத்தால், கொள்கை உரத்தால், அஞ்சா நெஞ்ச வீரத்தால், எளிமை இனிமை கொண்டு பழகும் பாங்கினால், அனைத்து மக்களும் அவர்க்கு உற்றார் உறவினர் ஆயினர். யாவரையும் ஒப்ப மதிக்கும் சிந்தனைத் திறத்தால் மக்கள் போற்றும் மாண்புடைய மாமனிதராக வலம் வந்தார். அதனால் அவர்தம் ஆளுமைத் திறத்தின் ஆற்றலை அறியலாம்.

கல்விப் பணியும் கருத்துப் பணியும் : பகுத்தறிவுச் சிந்தனையாளர், பகுத்தறிவியக்கம் போற்ற வாழ்ந்தவர் என்ற பெருமை என்றும் அவர்க்குண்டு. கொள்கை மாறுபாடு கொண்டோர் நெஞ்சம் புண்படாது பழகும் பாங்கினர் அவர். **மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு' என்ற அறிஞர் அண்ணாவின்** கூற்றுக்குச் சான்றாக வாழ்ந்து காட்டியவர். இவர்தம் கருத்து விளக்கத்தால் கொங்கு எங்கும் பகுத்திறிவுச் சிந்தனையாளர்கள் வலம் வந்தனர். திராவிட இயக்கம் வலிவும் பொலிவும் பெற்றுச் சிறந்தது. அசைக்க முடியாத எஃகுக் கோட்டையாகப் புளியம்பட்டி இலங்கியது. அதனால்தான் **மைய அரசே நாட்டின் நல்ல ஊராட்சிகளில் ஒன்றாகத் தேர்வு செய்து நகர் வளர்ச்சிக்குப் பல கோடிகளை வழங்கியது.** அத்துடன் நில்லாமல் நல்ல தமிழ்க்கல்வி வளம் பெற மேல்நிலைப் பள்ளியும்; அய்யன் திருவள்ளுவர் கலை அறிவியல் கல்லூரியும் கண்டவர். பலரின் அரிய பெரிய உழைப்பால் உருவாக்கம் பெற்ற இக்கல்வி நிறுவனங்கள் என்றும் அவர் புகழ்பாடும். அந்நிறுவனங்கள் நல்ல தமிழ் வளர்க்கும் நிறுவனமாக இலங்கிய பாங்கினைப் பன்முறை காணும் பேறு பெற்றவன்யான். நாநலம் மிக்க நல்லோர் பலரை உருவாக்கும் கலை நிலையமாக இலங்கிய பெருமையும் அந்நிலையங்கள் பெற்றுயர்ந்தன என்பதும் உண்மையேயாகும்.

அறிவை - அறிஞரைப் போற்றும் பாங்கினர் : எந்த நாடு அறிவை மதிக்கின்றதோ, அறிஞர்களைப் போற்றுகின்றதோ அந்த நாடே பீடுநடை போட்டுச் சிறக்கும். மூடத்தனத்தின் முடை நாற்றம் நீங்கிட; ஆற்றலும் அறிவும் பெருகி ஓங்கிட, அறியாமை இருள் விலகிட வேண்டும். பொய்மைச் சடங்குகளும் போலி வைதிகமும் புறந்தள்ள வேண்டும். **பகுத்தறிவுப் பகலவன் தந்தை** பெரியாரும், **அறிஞர் பெருந்தகை அண்ணாவும்** ஆற்றிய எழுஞாயிற்றுப் பணியில், எழுச்சிமிக்க ஏற்றம் மிக்க தொண்டர்களைப் படைத்ததால் தமிழகம் சிறிது தலை நிமிர்ந்தது. கொங்கு மண்ணில் அப்பணி நிறைந்திடச் சிறந்திட உழைத்தவர் நம் பி.ஏ. சாமிநாதன் அவர்களாவர். **சனாதனம், சாதீயம், வைதீகம்** கொடிகட்டி நாட்டை அழித்தது. அவற்றை தம் செயல் திறனால் நாவன்மையால் வென்ற அறிஞர் பலருண்டு. அவர்களையெல்லாம் போற்றிப் புரந்த பெருமை இவர்க்குண்டு. எனவே, **இம்மண்ணில் அறிவு வெளிச்சம்** பெருகிட உழைத்த பெருமை என்றும் இவர்க்குண்டு என்பதை நாம் அறிதல் வேண்டும்.

தொண்டர்சீர் பரவும் நல் உளத்தர் : திராவிட இயக்கத்தின் வலிமையே அதன் தன்னலம் கருதாத இயக்க உணர்வுமிக்க தொண்டர் படையாகும். செயலாண்மை மிக்க தீரர்களே தன் வெற்றிக்கு அடிமனையிட்டனர். அத்தகைய தொண்டர்தம் நெஞ்சகத்தில் இடம்பிடித்த பெருமை நம் **பி.ஏ.எஸ்.** அவர்கட்குண்டு. அவர் மறைந்தாலும் தொண்டர்தம் உள்ளத்தில் மறையாமல் வாழும் பெருமையர் அவர். எங்கெங்குக் காணினும், அவர்புகழ் பேசும் இயக்க உணர்வுமிக்க, கொள்கை **மறவர்களைக்** காணும்போது வியப்பின் விளிம்பில் நாம் நிற்கின்றோம்! என்றும்

தொண்டர்தம்மைப் போற்றும் தூய உள்ளம் அவர் உள்ளம் என்பதை இன்று அவர்தம் தொண்டர்படை மெய்ப்பிக்கும்.

முடிவுரை : மிகச் சாதாரணக் குடும்பத்தில் பிறந்தவர், மிகப் பெரி பட்டங்களைப் பெறும் கல்விதனைக் காணாதவர் ஆயினும், தம் உழைப்பா கொள்கைத் திறத்தால் - செயலாற்றலால் உயர்ந்தோங்கியவர் அவர். எனவே அவரது புகழ் உடல் என்றும் நின்று நிலவும். அவரால் பெற்ற நலன்களைக் கண்டோ போற்றிப் புகழ்வர். நலமும் வளமும் பெற்றவர் வாழ்த்துவர். அரசியல் வானில் அதிகார வலையில் வீழாமல் மக்கள் நெஞ்சில் வாழ்வோர் வெகு சிலரே! அவர்களு ஒருவர் இவர்தான் என்பதே பெருமை. எனவே என்றும் புகழ்மணக்கும் திராவி கொள்கை வீரராய் விளங்கும் இவரைப் போற்றும் நல்லோர் என்றும் இருப்பர். அவ புகழ் மக்கள் நெஞ்சகத்தில் என்றும் நிலைத்து வாழும்.



அண்ணா ஒரு முழு நிலவு

வகிடெடுத்த தலையினிலே ஏறி விட்ட
வாசமுள்ள ரோசாவைப் போல இந்த
அகிலத்தை வழி நடத்தும் கழகந் தன்னில்
அகிலானாய் ! மணக்கின்ற புகையே யானாய் !
முகிலினிடை சிரிக்கின்ற முழுநி லாவே !
முன்னேற்றக் கழகத்தின் தலைசிறந்து
புகழ் வார்த்த தொண்டன்நீ ! கழகம் காக்கப்
புகுந்த களம் ஏராளம், ஏடே கூறும் !
செந்தமிழை வளர்த்திட எழுதிப் பேசி
சாகும்வரை ஓயாமல் தொண்டு செய்தாய் !
நந்தமிழர் சமுதாயப் படைதிரட்டி
நானிலத்தில் உயர்ந்திடற்குத் திட்டம் வென்றாய் !
வந்தவரை வரவேற்று வாழ வைக்கும்
வண்டமிழர் கூட்டத்தின் தலைவா ! ஞானம்
தந்தவனே ! எழுந்தபெரும் அறிவுச் சோதி !
தலைதாழ்த்தித் தொழுகிறோம், வாழ்க ! நீடு !!



டாக்டர் ப. சண்முகம்
ஏ.வி. சேலம் அரசு மருத்துவக்கல்லூரி
மற்றும்
செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரி (ஓய்வு)
சேலம் - 16

டாக்டர் மு.வ. செந்தாமரை
பேராசிரியர், குழந்தைகள் மருத்துவத்துறை
விநாயகா மிஷன்ஸ்
கிருபானந்தவாரியார் மருத்துவக் கல்லூரி
சேலம்

'வாழ்வு தந்த வள்ளலுக்கு எங்களின் நினைவு அஞ்சலி'

எனக்குத் தந்தையாக, குருவாக, நண்பராக, வழிகாட்டியாக, வாழவைத்த வள்ளலாக மற்றும் தெய்வமாகத் திகழ்ந்தவர் எங்கள் குடும்பத்தலைவர் பெரியவர் அய்யா திரு. பி.எ. சாமிநாதன் அவர்கள்.

அவர் எங்களையெல்லாம் மீளாத்துயரில் ஆழ்த்தி விட்டு 22-01-2011-இல் எங்களை விட்டுச் சென்றுவிட்டார். அவர் நினைவாக வெளியிடப்படும் இந்த 'நினைவு மலர் அஞ்சலி'யில் ஓர் உன்னதமான தெய்வப்பிறவி - மாமனிதர் என்னிடம் காட்டிய அன்பு - பரிவு - பாசம் - அறிவுரைகள் மற்றும் ஆலோசனைகள் முதலானவைகளை நினைவுகூர்வதும், நன்றி மறவாமல் அவரைத் தெய்வமாகப் போற்றுவதும்தான் நாங்கள் அவருக்குச் செலுத்தும் அஞ்சலியாகும். நான் இந்த மகானுடன் வாழ்ந்த நாள்களில் நடந்தவைகளில் - கண்கூடாகப் பார்த்தவைகளில் சில!

தந்தை பெரியாரின் உண்மைத் தொண்டர்

அவர் தாம்வாழ்ந்த காலங்களில் பேச்சால் மட்டுமின்றித் தன் செயல்களாலும் 'பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார்' அவர்களின் உண்மையான சீடராக இறுதி மூச்சு வரை வாழ்ந்து காட்டியவர். சாதி மத பேதமின்றிப் பெண்கள் முன்னேற்றம், கல்வி, வேலைவாய்ப்புகள், சம உரிமை, பேச்சு, எழுத்துச் சுதந்திரம் ஆகியவைகளுக்கு ஊக்கமும் உதவியும் செய்து வந்துள்ளார். அவருடைய கொடையால் வாழ்வில் ஏற்றம் பெற்றவர் ஆயிரம்! ஆயிரம்!

அண்ணல் காந்தியடிகள் வழி நின்ற செம்மல்

அண்ணல் காந்தியடிகளுக்கு "மகாத்மா" என்ற பெயர் வருவதற்கு அவருடைய கொள்கைகள், வாழ்க்கையில் உண்மை நெறிதனைத் தவறாமல் கடைப்பிடித்துத் தாழ்த்தப்பட்ட ஏழை எளிய மக்களையும் தன்னுயிர் போன்று அவர்களையும் மனிதராய் மதித்து, அவர்களின் வாழ்க்கைத்தரம் உயர்வதற்கும், தனக்குரிய உரிமைகளை அவர்களும் பெறவேண்டும் - மதிக்கப்பட வேண்டும் என்பதற்காகத் தனது உயிர் உள்ளவரை உழைத்தவர்.

பெரியவர் பி.ஏ.எஸ். அவர்கள் அண்ணல் காந்தியடிகள் வாழ்வு முறைகளைத் தனது வாழ்க்கையிலும் நடைமுறைப்படுத்திக் காட்டியவர். திரு. பி.ஏ.எஸ். அவர்கள் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தின் முன்னேற்றத்திற்காகத் தனது வாழ்நாள் முழுவதும் பாடுபட்டவர். அவர் **'ஏழைகளின் விடிவெள்ளி'**. அதற்கு முதற்சான்று இன்று நான் பெற்ற வாழ்வும் வளமும் ஆகும்.

கொடைவள்ளல் திரு. பி.ஏ.எஸ். அவர்கள்

அதற்கும் நானே சான்று! ஏழை எளியவர் தன்னை நாடி வந்து உதவிகள் கேட்டால் இல்லையென்று சொல்லாமல் வாரி வழங்கும் வள்ளல் திரு. பி.ஏ.எஸ். அவர்கள். நான் மிகவும் தாழ்த்தப்பட்ட தேவேந்திரகுல வகுப்பைச் சேர்ந்தவன். என் தந்தையும் தாயும் விவசாயக் கூலிகள். எனது பள்ளி ஆசிரியர்கள் உயர்திரு இரா.ஆறுமுகம் மற்றும் திரு. கா. இளமுருகன், திரு. இளமுருகு ஆகியவர்கள் கல்வியில் எனது ஆர்வத்தை வளர்த்ததோடு அல்லாமல் பள்ளி இறுதித் தேர்வில் நல்ல மதிப்பெண்களைப் பெற்றதனால் என்னைப் 'P.U.C.' படிப்பதற்கு **மறைமலையடிகள் மன்றத்தின்** வழிப் பணஉதவி செய்து படிக்க வைத்தனர். அவர்களே நான் P.U.C.-இல் முதல் வகுப்பில் தேரியதால் மேற்கொண்டு கல்லூரியில் படிக்க வைக்க விரும்பினர். ஆனால் பொருளாதார வசதி யாரிடமும் இல்லை. எனவே **பெரியவர்** அப்பொழுது 1969-இல் கோபி நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவி வகித்து வந்தார். என்னை அவரிடம் அறிமுகப்படுத்தி வேலைக்கு (போஸ்டல் டிபார்ட்மெண்ட்) பரிந்துரைக் கடிதம் வாங்க அழைத்துச் சென்றனர். எனது குடும்பச் சூழலில் மேற்கல்வி கற்க இயலாததை எடுத்துரைத்து ஏதாவது ஓர் அரசு வேலைக்குப் பரிந்துரை செய்யும்படி கேட்டுக்கொண்டனர்.

எல்லாவற்றையும் பொறுமையுடன் கேட்டவர், அங்குள்ள அனைவரின் முன்னிலையிலும் திடீர் என்று **''இந்த மாணாக்கனை என் சொந்தச் செலவில் 'M.B.B.S.' டாக்டர் பட்டப்படிப்புப் படிக்க இடம் வாங்கிக் கொடுத்து, படிக்கத் தேவைப்படும் அனைத்துச் செலவுகளையும் நானே ஏற்றுக் கொள்கிறேன்''** என்று கூறி அங்குள்ள அனைவரையும் **இன்ப அதிர்ச்சியில்** மூழ்க வைத்தார். சொன்னதில் சிறிதளவும் மாறாமல் என்னை 'M.B.B.S.' படிக்க வைத்ததோடு மட்டுமல்லாமல் எனக்குத் தேவையான பணி, பணிமாறுதல்கள், பதவி உயர்வுகள் அனைத்திற்கும் அவரும் தெய்வத்திரு. ***T.R. ராமசாமி*** I.A.S., அவர்களும் துணை நின்றனர். சொந்த மகனுக்குச் செய்ய வேண்டியதற்கும் மேலாக அனைத்து உதவிகளையும் இருவரும் செய்தனர்.

எங்கள் குடும்ப விளக்கு

பெரியவர் எனக்குக் கலப்புமணம் செய்து மகிழ்ந்தார். என் துணைவியார் **டாக்டர் சொந்தாமரை M.D.,** குழந்தைகள் மருத்துவம் 'JIPMER'-இல் படித்து வந்தார். அவரும் நானும் காதல் திருமணம் செய்து ...

தாமரை முன்னின்று நடத்தியவர். டாக்டர் செந்தாமரை, மறைந்த 'கலைமாமணி' நுகைண்டியான் ப. கண்ணனாரின் பேத்தி என்று அறிந்ததும் பேராசிரியர் 4 ஆம் நகரத்தின் முன்னோடித் தலைவரின் மேல் உள்ள அன்பால் எங்கள் இருவரின் கல்யாணத் திருமணத்தை அவர்கள் வீட்டிலேயே, எங்களைத் தங்க வைத்து 21-03-1985 ஆம் நாளன்று புன்செய்ப் புளியம்பட்டி - கலைஞர் திருமண மண்டபத்தில் அவருடைய மனைவியின் திருக்கரக முன்னோடிகள், உறவினர்கள் முன்னிலையில் எங்கள் திருமணத்தை அவர் செலவில் சிறப்பாக நடத்திவைத்தார். எனது ஒவ்வொரு முன்னேற்றத்திற்கும் பின்னால் இருந்து மேலே கைதூக்கிவிட்டவர் எங்கள் அன்புத் தெய்வம் திரு. பி.ஏ.எஸ். அவர்கள், நாங்கள் பெற்ற அனைத்துக் கல்வியும் - பதவிகளும் - புகழ்களும் - பாராட்டுகளும் - நல்வாழ்வும் அவரால் கொடையாகக் கொடுக்கப்பட்டவையே! அனைத்தையும் அவர்களின் பொற்பாதங்களில் காணிக்கையாக்குகின்றோம்.

சாதிமத வேறுபாடு காணாத சிறந்த பண்பாளர்

எனது பத்து வயது முதல் அவர் இறக்கும் வரை எங்கள் வாழ்வு அவருடைய குடும்பத்தினருடன் அன்பாலும், பாசத்தாலும் பின்னிப்பிணைந்தது. பிரிக்கமுடியாத உறவுகள். அவர் எப்பொழுதும் என்னைத் தனது மூத்த மகனாகவே வளர்த்து வந்தார். 1970-1976 வரை நான் M.B.B.S., படிக்கும் காலங்களில் அவர் அரசியலில் மிகுந்த செல்வாக்கும் மரியாதையும் மிக்கவர். அவர் அடிக்கடி சென்னைக்கு அரசு மற்றும் அரசியல் நிகழ்வுகளுக்கு வரும்பொழுதெல்லாம் நான் அவரைக் காணச்செல்வேன். அவர் சாப்பிடும் பொழுது எல்லாருக்கும் உணவு வாங்கித் தருவார். ஆனால் என்னை அவர் சாப்பிடும் இலையிலேயே சேர்த்து ஒன்றாக உண்ண வைப்பார். இது மட்டும் அவர் சாப்பிடும் இலையிலேயே சேர்த்து ஒன்றாக உண்ண வைப்பார். இது போன்று எந்த ஓர் அரசியல்வாதியோ, மக்கள் தலைவரோ செய்ததில்லை. அன்னை சம்பூர்ணம் அவர்களும் அவர்களுடைய 4 குழந்தைகளுடன் சேர்த்து என்னையும் தங்களின் மூத்த மகனாகவே கருதி அன்பும் பாசமும் காட்டி, எங்களுக்குச் செய்ய வேண்டிய அனைத்து உதவிகளையும் சிறிதளவும் வேறுபாடு காட்டாமல் இன்றுவரை செய்து வருகிறார்கள். அவர் மற்றவர்களுக்கு உதவி செய்வதிலும், கழகப் பணிகளிலும் திரு. பி.ஏ.எஸ். அவர்களுக்கு உற்ற துணைவியாக இணைந்து பணியாற்றி வந்துள்ளார்.

திரு பி.ஏ.எஸ். அவர்கள், உயர்ந்தவர் - தாழ்ந்தவர், ஏழை - பணக்காரர் என்ற எந்தப் பாகுபாடும் பாராட்டாதவர். எல்லாரையும் சமமாக மதிக்கத் தெரிந்த மாமனிதர். குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவரிடமும் இன்முகத்துடன் பேசியும், அன்பு பாராட்டி அனைவரின் அன்பையும் - பாராட்டையும் - நன்மதிப்பையும் பெற்றவர்.

மகாகவி பாரதியார் அவர்களின் **"சாதிகள் இல்லையடி பாப்பா குலத்தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்"** என்ற வாக்கிற்கும் **"ஒன்றே குலம் ஒருவனே தேவன்"**, **"யாதும் ஊரே யாவரும் கேளிர்"** என்ற ஆன்றோர்களின் அமுத மொழிகளுக்கும் ஏற்ப

நடைமுறை வாழ்க்கையில் பின்பற்றி வாழ்ந்து காட்டி அந்த மொழிக்கு உண்மையிலேயே புகழ் சேர்த்த பெருமைக்குரியவர் பெரியவர் பி.ஏ.எஸ். அவர்கள்.

சிறந்த மக்கள் தொண்டர்

ஈரோடு, கோவை மாவட்டங்களில் உள்ள மக்களுக்கு ஏற்படும் அன்றாட சிக்கல்களையும், தேவைகளையும் தனது பெருமுயற்சியால் சரியான தீர்வு தேவையான அடிப்படை வசதிகளையும் போராடியும் தனக்கே உரிய திறமையால் அணுகு முறையிலும் அரசிடமிருந்து பெற்றுத்தந்தவர். கட்சிப் பாகுபாடு இல்லாமல் எந்தக் கட்சியினர் வந்து உதவி கேட்டாலும் அவர்களுக்கும் உதவிக்கரம் - நட்புக்கரம் நீட்டியவர். தன்னுடைய நண்பர்களிடமும் சகாக்களிடமும் மிகுந்த பாசத்துடனும் நட்புடனும் பழகி அவர்களையும் சமுதாயத்தில் உயர்நிலைக்குக் கைகொடுத்து உயரச்செய்தவர் திரு பி.ஏ.எஸ். அவர்கள்.

தலை சிறந்த திராவிடக் கழகப் போராளி

தனது பள்ளிப் பருவம் முதலே தன்னைத் தி.மு.கவுடன் இணைத்துக் கொண்டு சுறுசுறுப்பான, கோவை மாவட்டத்தில் **'அறிஞர் அண்ணா'** அவர்களின் தளபதியாக இருந்து கட்சியை வளர்த்தவர். கோவை மாவட்டத்தின் மாவட்டச் செயலாளராக அண்ணா அவர்களின் அன்பிற்கும் - பாராட்டிற்கும் உரியவராகத் திகழ்ந்தவர். இரண்டு முறை தி.மு.கழகத்தின் **கோபி நாடாளுமன்ற உறுப்பினராக** இருந்து மக்களுக்கு அரும் தொண்டாற்றியவர். தனக்கென ஒரு உயரிய நோக்கத்தை **"மக்கள் பணியே மகேசன் பணி"** என்று ஏழை-எளிய மக்களின் உயர்விற்காகத் தனது இறுதி மூச்சு உள்ளவரை உழைத்தவர். உயர்திரு. **பி.ஏ.எஸ். அவர்கள் 60 ஆண்டுகளுக்கு** மேலாக தி.மு.க வளர்ச்சிக்காகத் தன்னுடைய மனைவி மக்களைக் கூடப் பாராமல், இன்றைய அரசியல்வாதிகளைப் போலச் சொத்துச் சேர்க்காமல், கட்சிக்காகப் பாடுபட்டவர். கட்சி வளர்ச்சிக்காகத் தன் தந்தையார் சேர்த்து வைத்துச் சென்ற சொத்துக்களையெல்லாம் விற்றுச் செலவு செய்தவர். இன்று நம்மிடையே இல்லை. ஆனால் அவர் செய்த நற்செயல்கள் என்றும் நமது நினைவில் நிற்கும்.


மகாத்மா (உன்னதமான உயிர்) எங்கள் பாசமிகு தலைவர், தந்தை பி.ஏ.எஸ். அவர்கள்

கோவிலுக்குச் சென்று இறைவனை வணங்குவதில் நம்பிக்கை இல்லாதவராகப் பெரியாரின் பகுத்தறிவுக் கொள்கைச் செம்மலாக வாழ்ந்தாலும், கோவில் கட்டுவதற்கு நன்கொடைகளை வாரி வழங்கியவர். தனது கொள்கைகளை மற்றவர்கள் மீது கட்டாயமாகத் திணிக்காதவர். மனிதனை மனிதனாக மதிக்கத் தெரிந்தவர். அண்ணல் காந்தியடிகளின் வாழ்க்கை முறையைச் சத்தியசோதனை அடிப்படையில் பின்பற்றி வாழ்ந்து காட்டியவர். தந்தை பெரியாரின் எண்ணங்களுக்கும் - சொற்களுக்கும் விளக்கமாக வாழ்ந்து காட்டியவர். ஏழை - எளிய - பாமர - தாழ்த்தப்பட்ட மக்களின் முன்னேற்றத்திற்காகத் தன் இறுதி மூச்சு உள்ளவரை பாடுபட்டவரை மக்கள் 'மகாத்மா' என்று அழைக்காமல் ...

அவர் தனது 'பி.ஏ.எஸ். அறக்கட்டளை' மூலம் ஆண்டுதோறும் ஏழை - எளிய மாணாக்க - மாணாக்கியர்களுக்குக் கல்வி உதவித்தொகை வழங்கி வந்துள்ளார். என்னைப் போன்ற பல நூறு பேர்களுக்கு மேற்படிப்புப் படிக்கப் பணஉதவியும், வேலை வாய்ப்புகளைத் தனது முயற்சியால் பெற்றுத்தந்தும் வாழ்வில் விளக்கேற்றிய 'ஒளிவிளக்கு' எங்கள் தலைவர் பாசமிகு தெய்வம் உயர்திரு. பி.ஏ.எஸ். அவர்கள்.

அவர் மனிதரல்லர்! மனிதருள் மாணிக்கம்! என்றால் அது மிகையாகாது. ஆயிரம் ஆண்டுகளுக்கு ஒரு முறைதான் உயர்திரு. பி.ஏ.எஸ். அய்யா போன்ற மகான்கள், பிறப்பர். அவரின் நினைவுகளுடன் அவர் வழியினைப் பின்பற்றி அவர் விட்டுச்சென்ற பணிகளைத் தொடர்ந்து செய்வதே நாம் அவருக்குச் செலுத்தும் வணக்கம்!

வாழ்க பெரியவர் பி.ஏ.எஸ். அவர்கள் புகழ்!



மக்களின் நடவடிக்கைகள்

ஒரு மரத்தின் பலன் எப்படி அதன் கனியைப் பொறுத்து இருக்கிறதோ, அப்படித்தான், ஒரு மதத்தின் பலன் அதைப் பின்பற்றும் மக்களின் நடவடிக்கைகளைப் பொறுத்திருக்கிறது.

அதிகார மொழி

இது சரியா, இது முறையா என்ற கேள்விகளைக் கூட, எதிர்த்தா பேசுகிறாய், என்னிடமா கேள்வி என்ற அதிகார மொழிபேசி அடக்கப் பார்ப்பது அறிவுடைமையன்று, ஆண்மைத் தனமும் ஆகாது. அது, கேவலம், முட்டாள்தனம்.

நாட்டின் வேதனை

பருவமும் அழகும் இருந்தும் மணாளன் இல்லாமல் வாடும் விதவையைப் போல, இயற்கை எழில் இருந்தும் அழகைக் கவனிப்பார் இல்லாததால் இந்த நாடு வேதனைக் காடாக இருக்கிறது.

உண்மையை உரைத்திடு!

பொது வாழ்வு புனிதமான பூமி. அந்தத் தியாக பூமியில் உலவுவார், புகழுக்காகப் புளுகு மொழி பேசும் புலவர்களாக இருக்கக்கூடாது. ஊர் முழுவதும் எதிர்த்தாலும் உண்மையே உரைத்திடும் அஞ்சா நெஞ்சர்களாக இருக்கவேண்டும். ஆற்றல் வீரர்களாகத் திகழவேண்டும்.

- அறிஞர் அண்ணா



'பெரியவர்' சாதனைச் செம்மல் பு.ஆ. சாமிநாதன் அவர்களும், மறைமலையடிகள் மன்றமும்

மன்றத்தின் நோக்கங்கள்:

(அ) தமிழ்நாடு, தமிழ்மொழி, தமிழர் சமயநெறி ஆகிய மூன்றினையும் உடல், உயிர் எனக்கொண்டு பணிபுரிதல்;

(ஆ) தமிழ்க் கடல் மறைத்திரு மறைமலையடிகளாரின் நாடு - மொழி - சமயம் பற்றிய கொள்கைகள் முழுவதும் ஏற்றுப் பீடுபெறத் தொண்டாற்றுதல்;

(இ) பிறமொழி கலவாத் தூயதமிழ் யாண்டும் பரவ, வேண்டுவன செய்தல்; ஆகிய மூன்று கொள்கைகளே மன்றத்தின் இன்றியமையா நோக்கங்கள் ஆகும்.

பெரியவர் பு.ஆ.சாமி அவர்கள் பேரூராட்சித் தலைவராகப் பணியாற்றிய பொழுதும், இருமுறை நாடாளுமன்ற உறுப்பினராகப் பணிபுரிந்த காலங்களிலும் எம் மன்றக் கொள்கைகள் நிறைவேற, அவரைப் பெரிதும் பயன்படுத்திக் கொண்டோம்.

இவர் பேரூராட்சித் தலைவராக இருந்த பொழுது, இந்திய நாட்டின் சிறந்த பேரூராட்சிகளில் ஒன்றாகப் புளியம்பட்டிப் பேரூராட்சியை நடுவணரசு தேர்வு செய்து பலகோடிகளை வழங்க, அத்தொகையினை முறையாகப் பயன்படுத்தி வருமானத்தின் அடிப்படையில் நகராட்சியாக வளர அடிப்படை அமைத்த பெருந்தகையாளர். இப்பொழுது மறைமலையடிகள் தெருவாக இருக்கும் பகுதியும், அதற்கு மேற்குப் பகுதியும் 'இட்டேரி வீதி' என்னும் பெயரில் இருந்தது. அந்தப் பகுதியில் புதிய தெருக்களுக்குப் பெயர்வைக்க அறிஞர் பெருமக்களின் பெயர்களைத் தொகுத்துத் தருமாறு பெரியவர் எங்கள் மன்றத்தாரிடம் கேட்டுக் கொண்டார். மன்றமும் பாரதிதாசன், பாவாணர், நாவலர், திரு.வி.க., பாரதியார், இளங்கோ, ஔவையார், வ.உ.சி. முதலான பல பெயர்களை வைக்குமாறு கேட்டுக் கொண்டு மன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றிக் கொடுத்தோம். அவர் உடனே அதை நிறைவேற்றி

மேலும் இவரே தொடர்பாக எந்தவொரு முடிவுகளை எடுக்க வேண்டினும், எம் மன்றத் தலைவரையும் செயலாளரையும் அழைத்துப் பேசி அதன் பின்னரே முடிவெடுப்பார்.

பெரியவர் இறை மறுப்புக் கொள்கையாளராக இருப்பினும், ஊர் மக்கள் விருப்பத்திற்கேற்ப அருள்தரும் காசி விசுவநாதர் திருக்கோயிலையும், திருமண மண்டபத்தையும், பிற கோயில்களிடமிருந்து நன்கொடை பெற்றும், இவரே நன்கொடை திரட்டிக் கொடுத்தும் அப்பணி சிறக்கப் பெரிதும் துணைநின்றார்.

திருமண மண்டபத் திறப்பு விழாவின் போது, அஃது அரசு விழாவாக இருந்தும் மன்ற உறுப்பினர்களின் விருப்பத்தின்படி இறைவணக்கம், தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடித்தான் விழாத் தொடங்கியது.

எம் மன்றத்தின் சார்பில் அருள்மிகு அண்ணாமலையார் திருக்கோயிலைப் பொறுப்பாளர்களின் ஒத்துழைப்போடு கட்டி 1977-ஆம் ஆண்டு பேரூராதீனம் சிலத்திரு. இராமசாமி அடிகளார் கௌமார மடாலயம் சிலத்திரு. கந்தசாமி அடிகளார் ஆகியோர்களைக் கொண்டு, தெய்வ ஒண்தீந் தமிழ் கொண்டு திருக்குட நீராட்டு விழாவை நடாத்தினோம். இதன் நடைமுறைகளை மிகச் செம்மையாக அறிந்து பெரிதும் மகிழ்ந்த பு.ஆ.சாமி அவர்கள், மற்றவர்களிடம் மன்றத்தாரைப் பார்த்து கற்றுக் கொண்டு செயலாற்றுங்கள் என்று பலமுறை கூறியுள்ளார். இவர் பிற திருக்கோயில் குழுக்களின் அமைப்பாளராக இருந்து கூடும் கூட்டங்களில் எம்மன்றத்தாரையும் கலந்து கொள்ளச் செய்தார்.

கருத்து வேறுபாடு காரணமாகக் கழக முன்னணித் தலைவர்களில் ஒருவரான ஈ.வி.கே. சம்பத் அவர்கள் கட்சியினின்றும் விலகினார். நம் சாதனைச் செம்மலும் சம்பத் அவர்களுடன் விலகக்கூடும் எனக்கருதிப் பேரறிஞர் அண்ணா அவர்கள் திடீரென மேனாள் அமைச்சர் இராசாராம் அவர்களுடன் புளிசை பு.ஆ.சாமி இல்லத்திற்கு வந்திருந்தார். இரு நாள்கள் வீட்டில் தங்கி அவருடன் பேசிக் கொண்டிருந்தார்.

மன்றத்தின் சார்பில் மறைமலையடிகளாரின் பெயரை மன்றத்திற்குச் சூட்டக் காரணமாக இருந்த அண்ணாமலைப் பல்கலைக் கழக மாணாக்கராக இருந்த புளியம்பட்டி திரு. அ. அப்பாசாமி அவர்களும், மன்றத் தலைவர் இரா. ஆறுமுகனார், செயலாளர் கா. இளமுருகன், மன்ற உறுப்பினர் நா.த. ஆடலரசு ஆகியோர் பேரறிஞர் அண்ணா அவர்களைப் பெரியவர் இல்லத்தில் கண்டு மணிக்கணக்கில் உரையாடினோம். இதைப் பெரும் பேறாகவே கருதுகின்றோம்.

பெரியவர் பேரூராட்சி மன்றத் தலைவராகப் பணியாற்றியபொழுது எம் மன்றத்தின் ஆண்டு விழாவில் முத்தமிழ்க்காவலர் கி.ஆ.பெ. விசுவநாதனார் அவர்களும் பெரியவர் பு.ஆ.சாமி அவர்களும் சிறப்புரையாற்றினர். விழா நிறைவுற்று முத்தமிழ்க் காவலர் அவர்களை வழியனுப்ப அழைத்து வரும்போது, பெரியவர், தன்னை முத்தமிழ்க் காவலரிடம், அறிமுகப்படுத்துமாறு கேட்டுக் கொண்டார். அப்பொழுது மன்றச்


செயலாளர் முத்தமிழ்க் காவலரிடம் தமிழ்நாட்டு மேலவை 15-க்கு 15-பேர் வெற்றி பேருவகை மிக்க தலைவர் என அறிமுகப்படுத்தப்பெற்றார். இருவரும் அளவளாவி மகிழ்ந்தனர்.

தமிழ் மொழி, தமிழ் இனம், தமிழ்நாடு ஆகிய மூன்றும் முன்னேறத் தான் பதவியில் இருந்தபோதும், பதவியில் இல்லாதபோதும் பெரியவர் அரும்பாடுபட்டவர் என்பதில் ஐயம் இல்லை!

பெரியவர் மறைவு எங்களைப் போன்ற மொழி, இனம், நாடு முன்னேற இயக்க அன்பர்கட்குப் பேரிழப்பாகும். அவர் தம் இன்னுயிர் எல்லாம் வல்ல உண்ணாமுலையம்மை உடனாய அண்ணாமலையண்ணலின் திருவடிகளில் இன்புற வேண்டுகிறோம்.

ஓம்சிவம்.

யார் இந்த மறைமலையடிகள்?



மறைமலையடிகள் ஓர் கல்விக்கடல். தமிழ், ஆங்கிலம், வடமொழி மூன்றினையும் கற்றுத் துறைபோய மாபெரும் புலவர். அவருடைய வாழ்வு என்பது தமிழ் மறுமலர்ச்சியின் வரலாறாகும். அவர்தம் தமிழ், ஆங்கிலம், வடமொழிப் புலமையும் ஆராய்ச்சியும், பேச்சும், எழுத்தும், தொண்டும், தென்னாட்டை விழிக்கச் செய்தன. அடிகளால் தென்னாடு விழிப்புற்றது.

- முனைவர் சாரதா நம்பி ஆரூரன்

'அடிகளே தென்னாடு', 'தென்னாடே அடிகள்' என்று நாவாரப் பாராட்டுகின்றார் தமிழ்த் தென்றல் திரு.வி.க.

(மேலும் 'தன் குரு மறைமலையடிகளே' என்பதைப் பலரும் அறிய வேண்டும் என்னும் கருத்தில், பலரும் நிறைந்த ஒரு பெரிய கூட்டமேடையில், அடிகளாரே எதிர்பாராத நிலையில் அடிகளார் திருவடிகளில் கிடையாக வீழ்ந்து வணங்கிக் குருவணக்கம் செலுத்தியவரே திரு.வி.க அவர்கள்)

புலவர் கி. தங்கவேலு எம்.ஏ., எம்.எட்., எம்.ஃபில்.,
18, மறைமலையடிகள் தெரு
புன்செய்ப் புளியம்பட்டி



பேரறிஞர் அண்ணாவைக் கவர்ந்த 'சாதனைச் செம்மல்' பி.ஏ.எஸ்.

சேலம் - குமாரபாளையத்தில் கட்சியின் பொதுக்குழுக் கூட்டத்தில் கருத்துவேறுபாடு ஏற்பட்ட நிலையில் அமைதிவேண்டி அண்ணா, மதியழகன், பொன்னம்பலனார் ஆகிய மூவரும் அன்று இரவு 2-00 மணிக்குப் புளியம்பட்டி பி.ஏ.எஸ் வீட்டுக்கு வந்து மற்றவர் இருவரும் வண்டியினுள் இருக்க, மதியழகன் மட்டும் கதவைத் தட்டும் ஒலி கேட்டு, அயர்ந்துறங்கும் பி.ஏ.எஸ் அவர்கள் வந்து கதவினைத் திறக்கக் குள்ளமான உருவம் எதிரில் தென்பட, உடனே மதியழகன், "வண்டியினுள் அண்ணாவும் பொன்னம்பலனாரும் உள்ளனர்" என்று சொன்னதும், ஒரே தாவில் வண்டியின் கதவருகில் சென்று வண்டிக் கதவினைத் திறக்க, மலர்ந்த முகத்துடன் இருவரும் இறங்க, நால்வரும் அந்த எளிய வீட்டினுள் நுழைகின்றனர். அவர்கள் மூவரும் வந்துள்ள செய்தியை, உறக்கம் கலைந்து எழுந்துவந்த சம்பூரணத்திடம் சொல்ல, எதிர்பாராத இந்த இன்ப நிகழ்வில், என்ன செய்வதென்று தெரியாமல் இருவரும் வியப்புடன் கூடிய இன்பில் மூழ்கினர்.

உடனே, அண்ணாவே, 'நேரம் மிகவும் கடந்துவிட்டதால் எல்லாரும் சென்று உறங்குவோம். பிறவற்றைக் காலையில் பேசுவோம்' என்று கூறினார். அவ்வாறே வியந்த நிலையிலேயே சாமியும் சம்பூரணமும் உறங்கச் சென்றாலும் - உறக்கம்தான் வருமா? எப்படியோ இரவு கழிந்தது. மறுநாள் காலையில் மதியழகனும் பொன்னம்பலனாரும் சென்னை செல்ல - அண்ணா மட்டும் சாமி - சம்பூரணம் இல்லத்தில் இரு முழுநாள்கள் தங்கி ஓய்வெடுத்தார்.

அண்ணாவுக்குப் பலவகையிலும் மிகவும் நெருக்கமானவர் பலர் சேலம், பள்ளிபாளையம், குமாரபாளையம், ஈரோடு, கோபி ஆகிய ஊர்களில் இருந்தும், இவ்வளவு நீண்ட தொலைவுள்ள புளியம்பட்டியையும், சாமியையும் ஏன் தேர்வு செய்ய வேண்டும்? பேரறிஞரின் நெஞ்சார்ந்த [illegible] புளியம்பட்டியைத் தேர்வு செய்வாரா?

அப்போதைய பள்ளித் தலைமைக்கும் கருத்துவேறுபாடு. எனவே ஆளுங்கட்சி எம்.எல்.ஏ.வைச் சிறுமைப்படுத்த வேண்டும் என்ற கருத்தில் பின்விளைவுகளைச் சிறிதும் எண்ணிப்பார்க்காமல், பள்ளி இலக்கிய மன்ற விழாவுக்கு முழுக்கவே தொகுதி எம்.எல்.ஏ.வைத் தவிர்த்துவிட்டு, அன்றைய அரசியலில் முற்றிலும் மாறுபட்ட பி.ஏ.எஸ். அவர்களை விழாவுக்குத் தலைமைதாங்கத் தானே வீடு தேடிச் சென்று அழைத்துள்ளார். திரு. பி.ஏ.எஸ். அவர்கள், 1978-இல் அவ்வளவு பெரிய மேடையில், தன்னைச் சிறுமைப்படுத்திய முன்னைய நிகழ்வுகளையெல்லாம் இயல்பாக மறந்த பெருந்தன்மையில் வருவதாக ஒப்புக் கொண்டார். இவர்தான் தன்முதுகில் குத்தியவர்களையும் பாராட்டி உதவி செய்வாரேயல்லாமல், பகைமை பாராட்டாத பண்பாளர் என்பதற்கு ஒர் உண்மை நிகழ்வினையே எடுத்துக் காட்டினேன்.

இவர் தலைமை தாங்கும் நிகழ்வினைப் பள்ளி நடைமுறை ஏட்டில் தீர்மானமாக எழுதி, அக்குழுவில் உறுப்பினராக உள்ள என்னிடம் பள்ளி ஏவலர் வழி, பாடம் நடாத்திக் கொண்டிருந்தபோது கையொப்பத்திற்காக வந்தது. அதில் யான் கையொப்பமிட மறுத்து விட்டேன். மறுநாள் காலை 8-00 மணியளவில், யானும் தமிழாசிரியர் திரு. இரா. சுப்பிரமணியமும் பி.ஏ.எஸ். இல்லம் சென்றோம். முந்திய நாள்களில் நடைபெற்ற உண்மை நிகழ்வுகளை எடுத்துக்கூறிப் பள்ளிவிழாவுக்கு நீங்கள் அன்பும் - மதிப்பும் கரணியமாக அழைக்கப் பெறவில்லை! - தனக்கு வேண்டாதவர்களை - அவர் ஆளுங்கட்சி எம்.எல்.ஏ.வாக இருந்தாலும், அவரைத் தங்களைக் கொண்டு சிறுமைப்படுத்த வேண்டும் என்பதற்காகத் தங்களைக் கருவேப்பிலையாகவே பயன்படுத்தும் உண்மை நிகழ்வினை எடுத்துக் கூறினோம். உடனே அவர் இன்றைய நிலையில் பள்ளிச் சிக்கலில் யான் தலையிட விரும்பவில்லையென்று பெருந்தன்மையுடன் ஒதுங்கிக் கொண்டார். மறுநாள், இதனையறிந்த பள்ளித் தலைமை, அன்றைய முதல்வர் எம்.ஜி.ஆர். புரூக்ளின் மருத்துவமனையில் உள்ளார் என்ற கரணியத்தைப் பள்ளியின் இறைவணக்கக் கூட்டத்தில் கூறிப் பள்ளி விழாவை நிறுத்தி வைத்தார். இந்நிகழ்வு 'பகைவனுக் கருள்வாய்' என்னும் பாரதியின் வாக்கினை மெய்ப்பித்துக் காட்டியவர் திரு.பி.ஏ.எஸ். அவர்கள், என்பதினை உணர்த்துகின்றதல்லவா!

தம்கட்சியினர் எவ்வளவோ மாறுபட்டநிலையில், நேரடியாகவே எதிர்த்தவர்க்கும், பலர்முன் தன்னை அவமதிப்புச் செய்தவர்க்கும் உறுதுணையாகத்தான் இருந்துள்ளார். அப்பொழுது உடனிருந்த மற்றவர், அன்று பலர் முன் தங்களை இகழ்ந்துரைத்தவனுக்கா, இவ்வளவு பரிவும் உதவியும் என்று வெளிப்படையாகவே அவர் வீட்டிலேயே வினவியதை, யான் என் கண்ணாரப் பன்முறை கண்ட நிகழ்வுகளையே இங்குச் சுட்டுகின்றேன். இன்று பெரியவர் செய்த உதவியினால் இருக்க இடமும், உடுக்க உடையும், உண்ண உணவும் பெற்றுச் சிறப்பான வாழ்க்கை நடாத்துகின்றவர் கட்சியிலும் - பொதுநிலையிலும் பலர் உள்ளனர். இந்நிலையினை ஊரும் நாடும் நன்கறியும்!

சிலவாண்டுகட்கு முன்னர், உள்ளாட்சித் தேர்தலின் பொழுது புளியம்பட்டி பேரூராட்சியை, தம்கட்சியின் தலைமை, முஸ்லீம் கட்சிக்கு ஒதுக்கியது. இது பி.ஏ.எஸ். அவர்கட்குப் பெரிய பின்னடைவுதான். கட்சியின் மேலிட கட்டளையை என்றும் மதிப்பவர். எனவே அத்தேர்தலில் எல்லாவற்றையு பொறுத்துக்கொண்டு, கட்சியின் கட்டுப்பாட்டினை ஏற்றுப் பேரூராட்சியி தலைவராக நிற்கும் அந்த முகமதிய அன்பருக்காக, வாக்குத் திரட்ட புளியம்பட்டி வீதிகளில் வீடு வீடாகச் செல்லும் பொழுது, தெருவிலுள்ள குழியி இடறிவிழுந்து, கால் எலும்பு முறிந்து, சில மாதங்கள் முடக்கமானதை நாடறியு உரிய மருத்துவத்திற்குப் பிறகு முன்பு போல் இல்லாமல் ஓரளவு செயல்பட தொடங்கினார்.

அந்தச் சமயத்தில் என் இளையமகன் தாயுமானவனின் மேற்படிப்பு தொடர்பாகத் திரு.பி.ஏ.எஸ். அவர்களுடன் மூன்று நாள்கள் தொடர்ந்து கோவை செல்ல வேண்டியிருந்தது. மூன்று நாள்களிலும் முற்பகலில் கல்லூரி பணிகள் முடித்துப் பிற்பகலில் ஊர் திரும்பும் பொழுது, ஊராட்சித் தலைவ பதவிக்குப் போட்டியிடும் அந்த முகமதிய அன்பருக்குத் தேர்தலுக்குரி கொடிகள், சுவரொட்டிகள், பிறபொருள்களை மொத்தம் ரூபாய் 60 ஆயிர அளவில் வாங்கி வண்டியில் நிரப்பிக்கொண்டார். அவற்றைப் புளியம்பட்டியி சந்தையின் நடு நுழைவாயிலில் இருந்த கட்சி அலுவலகத்தில் இறக்கிவிட்டு நாங்கள் இருவரும் பி.ஏ.எஸ். வீடு நெருங்கும் பொழுது என்னிடம், "இவ்வள பெரிய தொகைக்குப் பொருள்கள் வாங்கியது குறித்துச் சம்பூரணத்திடம் எதுவு கூற வேண்டாம். யான் திட்டமிட்டதற்குப் பன்மடங்கு மேலாகவே, வாங்கியுள்ளே என்றார்". எப்படியும் கட்சி சார்பில் நிறுத்தப் பெற்றவர் வெற்றி பெறவேண்டு என்னும் தம் குறிக்கோளில் என்றும் குறியாகவே இருப்பார்.

அவர்தம் எண்ணப்படியே அந்த முகமதிய அன்பரே தலைவராகத் தே செய்யப் பெற்றார். ஆனால், அவர்தம் பதவிக்காலத்தில் 'பி.ஏ.எஸ். அவர்கள் செ செய்ந் நன்றியை மறந்தவராகத்தான் செயல்பட்டதாகக் கேள்வி. கேள்விப்பட்ட யான் நினைவு கூர்ந்து எழுதுகிறேன். இது போன்ற பல நிகழ்வுகளில் அவர்

"நன்றல்லதை அன்றே மறப்பது நன்று"

என்னும் தெய்வப் புலவர் திருவள்ளுவரின் வாய்மொழிக்கு இலக்கியமா திகழ்ந்தவர். அப்படி மறந்து செயல்பட்டமையால்தான் பி.ஏ.எஸ். "பெரிய ஆனார். இப்பெரியவரின் இடத்தை நிரப்ப இனியொருவர் இல்லையெ அவர்காலத்திற்குப் பின், கடந்த ஓராண்டுக் காலத்தில் பல நிகழ்வுகளில், பி.ஏ. இருந்திருந்தால் இச்சிக்கலுக்குத் தீர்வு கிடைத்திருக்குமே என்று பலரும் குறைபட் கொண்டதை யான் அறிவேன்.

வழிபாடு என்பது தெய்வப்புலவர் திருவள்ளுவரின் கருத்துப் படியும், அண்ணல் காந்தியடிகளின் கருத்துப்படியும் "மனத்துக் கண் மாசிலன் ஆதலே" அறவழிபாடாகும். அந்தவகையில் அரசியலிலும் மிகத்தூய்மை காத்து, எவர் மனமும் புண்படாமல் இறுதிவரை கடந்து வென்றவர் திரு. பி.ஏ.எஸ். அவர்களே! தான் புளியம்பட்டிப் பேரூராட்சியின் தலைவராகச் செயல்படும்பொழுது, இந்திய நாட்டின் சிறந்த பேரூராட்சிகளில் ஒன்றாகப் புளியம்பட்டிப் பேரூராட்சியை நடுவணரசு தேர்வு செய்து பல கோடிகளை வழங்க, அத்தொகையினை முறையாகப் பயன்படுத்தி வருமானத்தின் அடிப்படையில் நகராட்சியாக வளர அடிப்படை அமைத்த பெருந்தகையாளர். எனவேதான் எல்லாக் கட்சியினரும் இவரைப் பொதுநிலையில் "**பெரியவர்**" என்று போற்றுகின்றனர்.

தன் கைக்காசைக் கொண்டுதான் கட்சிவளர்ச்சிக்கும், உதவிநாடி வருவோர்க்கும் உறுதுணையாக நின்றார். ஒரு தேர்தலின் பொழுது வேறு வழியே தெரியாமல் தன் சொத்துக்களை விற்றார். மேலும் நெருக்கடி வரவே தன் தந்தையார் தொடங்கி **70 ஆண்டுகளாகியும்** இன்று வரை மேம்பாட்டுடன் வளர்முகத்தில் உள்ள - தன் அண்ணார் திரு. **பி.கே. வெள்ளியங்கிரி** அவர்களால் நல்ல பொறுப்பான ஆக்கமான முறையில் நடைபெற்றுக் கொண்டிருந்த பாரதி ஸ்டோரிலிருந்து பெரிய **தொகையினை எதிர்பார்த்து ஆள் அனுப்பியுள்ளார். அவரோ நன்கு சிந்தித்து, "யான் கடைப் பொறுப்பிலிருந்து விலகிக் கொள்கிறேன். இளவலும் - உரிமையாளருமான தாங்களே ஏற்று நடாத்துங்கள்"** என்று நனிநாகரிகமாகச் சொல்லியனுப்பியதைத் திரு. பி.ஏ.எஸ். அவர்களும், **நீளநினைந்து** நீண்டநாள் மிகச் சிறப்பாக நடைபெற்றுவந்த வணிகமும் **அரசியலால்** முடிந்துவிடும் என்பதையுணர்ந்து மேற்கொண்டு வற்புறுத்தவில்லை! பிறகு அண்ணார் திரு. **வெள்ளியங்கிரியும்** நாளதுவரை இக்கடையினை மிக நல்ல முறையில் ஆக்கமாகவே கொண்டு செலுத்தியதை ஊரறியும்! தனக்கு **மூன்று அறுவையின்** கரணியமாக முன்பு போலக் கவனிக்க முடியாமையாலும், அகவையும் **எண்பதைத் தாண்டியதாலும் 60** ஆண்டுகாலப் பொறுப்பிலிருந்து விலகித் '**தர்மம் தலைகாக்கும்**' என்னும் முதுமொழிக்கு இலக்கியமாகத் திகழும் அவர், இன்று முழுஓய்வில் உள்ளார்! **இதனை ஓய்வில்லாமல் அலையும் பலரும் உணர்ந்து** செயல்படுவது **நன்று. தன் இளைய மகன் பன்னீரும், அக்கா சம்பூரணம் சாமிநாதனுமே - நல்ல வளர்முகத்தில் - நல்ல நிருவாகத்தில் - நல்ல பாதையில்** பி.கே. வெள்ளியங்கிரி அவர்கள் வளர்த்து அமைத்துக் கொடுத்த நன்னெறியைப் பின்பற்றி, இன்றும் சிறப்பாகவே கொண்டு செலுத்துவது, திரு. பி.கே. வெள்ளியங்கிரியாருக்குக் கிடைத்த பெருமையாகவே ஊர்மக்கள் கருதுகின்றனர்.

வளர்க திரு. பி.கே. வெள்ளியங்கிரியாரின் புகழ்! - வெல்க 'சாதனைச் செம்மல்' பெரியவரின் எண்ணங்கள்!!

வழிபாடு என்பது தெய்வப்புலவர் திருவள்ளுவரின் கருத்துப் படியும், அண்ணல் காந்தியடிகளின் கருத்துப்படியும் "மனத்துக் கண் மாசிலன் ஆதலே" அறவழிபாடாகும். அந்தவகையில் அரசியலிலும் மிகத்தூய்மை காத்து, எவர் மனமும் புண்படாமல் இறுதிவரை கடந்து வென்றவர் திரு. பி.ஏ.எஸ். அவர்களே! தான் புளியம்பட்டிப் பேரூராட்சியின் தலைவராகச் செயல்படும்பொழுது, இந்திய நாட்டின் சிறந்த பேரூராட்சிகளில் ஒன்றாகப் புளியம்பட்டிப் பேரூராட்சியை நடுவணரசு தேர்வு செய்து பல கோடிகளை வழங்க, அத்தொகையினை முறையாகப் பயன்படுத்தி வருமானத்தின் அடிப்படையில் நகராட்சியாக வளர அடிப்படை அமைத்த பெருந்தகையாளர். எனவேதான் எல்லாக் கட்சியினரும் இவரைப் பொதுநிலையில் "**பெரியவர்**" என்று போற்றுகின்றனர்.

தன் கைக்காசைக் கொண்டுதான் கட்சிவளர்ச்சிக்கும், உதவிநாடி வருவோர்க்கும் உறுதுணையாக நின்றார். ஒரு தேர்தலின் பொழுது வேறு வழியே தெரியாமல் தன் சொத்துக்களை விற்றார். மேலும் நெருக்கடி வரவே தன் தந்தையார் தொடங்கி 70 ஆண்டுகளாகியும் இன்று வரை மேம்பாட்டுடன் வளர்முகத்தில் உள்ள - தன் அண்ணார் திரு. பி.கே. வெள்ளியங்கிரி அவர்களால் நல்ல பொறுப்பான ஆக்கமான முறையில் நடைபெற்றுக் கொண்டிருந்த பாரதி ஸ்டோரிலிருந்து பெரிய தொகையினை எதிர்பார்த்து ஆள் அனுப்பியுள்ளார். அவரோ நன்கு சிந்தித்து, "யான் கடைப் பொறுப்பிலிருந்து விலகிக் கொள்கிறேன். இளவலும் - உரிமையாளருமான தாங்களே ஏற்று நடாத்துங்கள்" என்று நனிநாகரிகமாகச் சொல்லியனுப்பியதைத் திரு. பி.ஏ.எஸ். அவர்களும், நீளநினைந்து நீண்டநாள் மிகச் சிறப்பாக நடைபெற்றுவந்த வணிகமும் அரசியலால் முடிந்துவிடும் என்பதையுணர்ந்து மேற்கொண்டு வற்புறுத்தவில்லை! பிறகு அண்ணார் திரு. வெள்ளியங்கிரியும் நாளதுவரை இக்கடையினை மிக நல்ல முறையில் ஆக்கமாகவே கொண்டு செலுத்தியதை ஊரறியும்! தனக்கு மூன்று அறுவையின் கரணியமாக முன்பு போலக் கவனிக்க முடியாமையாலும், அகவையும் எண்பதைத் தாண்டியதாலும் 60 ஆண்டுகாலப் பொறுப்பிலிருந்து விலகித் 'தர்மம் தலைகாக்கும்' என்னும் முதுமொழிக்கு இலக்கியமாகத் திகழும் அவர், இன்று முழுஓய்வில் உள்ளார்! இதனை ஓய்வில்லாமல் அலையும் பலரும் உணர்ந்து செயல்படுவது நன்று. தன் இளைய மகன் பன்னீரும், அக்கா சம்பூரணம் சாமிநாதனுமே - நல்ல வளர்முகத்தில் - நல்ல நிருவாகத்தில் - நல்ல பாதையில் பி.கே. வெள்ளியங்கிரி அவர்கள் வளர்த்து அமைத்துக் கொடுத்த நன்னெறியைப் பின்பற்றி, இன்றும் சிறப்பாகவே கொண்டு செலுத்துவது, திரு. பி.கே. வெள்ளியங்கிரியாருக்குக் கிடைத்த பெருமையாகவே ஊர்மக்கள் கருதுகின்றனர்.

வளர்க திரு. பி.கே. வெள்ளியங்கிரியாரின் புகழ்! - வெல்க 'சாதனைச் செம்மல்' பெரியவரின் எண்ணங்கள்!!

Prof. **T.K. RAJA,** Ph.D. F.R.C.S.,
9, Padma Nagar
Opp. Sankaranarayana Mahal
Bharathiar University Post, Coimbatore - 641 046



"A Legend of the Dravidian Movement"

Punjai Puliampatti Arumugam Swaminathan was born in an upper middle class family in the year 1929. From his young age he was attracted towards Dravidian Movement founded by Periyar EVR with whom he had close association. PAS started his political career as a social reformer under the legendary leadership of Periyar EVR. In the initial period PAS associated himself with Periyar and Anna in opposing caste oppression and feudalism in Erode and Gobichettipalayam area. In the process he had to meet the violence and thuggery of landlords who tried to eliminate him from the political scene. He was able to survive all attempts on his life with the unflinching support of the poor people for whom he tirelessly worked.

In politics, PAS never though of amassing wealth. In fact all immovable properties and wealth were inherited from his father. He did not hesitate to spend the income generated from his father's business and agriculture to the poor people of his area. This philanthropy earned him unassailable reputation and fame which never diminished. In the electoral politics PAS first became Panchayat President in 1958. This gave him an opportunity to expand his activities in social welfare which captured the attention of Anna and EVK Sampath. As panchayat president PAS was the first in Tamilnadu to start a Dispensary in Punjai puliampatti for expectant mothers and children to prevent maternal and child mortality in the area. This venture not only earned him fame among people of that area, but was admired and supported by Anna and EVK Sampath.

PAS founded the DMK Branch party in Punjai Puliampatti and was its Secretary. Then he was elected Secretary of Gobichettipalayam taluk DMK three times. During this period by his hard work to the party and poor people, PAS became a popular leader. At that time Udumalai P. Narayanan was the District Secretary of

Coimbatore district who groomed PAS to limelight in the district level.

At this juncture Coimbatore district DMK decided to hold the district conference at Gobichettipalayam, of which EVK Sampath was chairman with PAS as secretary. In spite of several organizational problems, PAS successfully conducted the conference and won the admiration of top leadership of the party including Anna and EVK Sampath. This event undoubtedly revealed the organizing capability of PAS and his friends. He never forgot that he should serve the DMK as a foot-soldier without expecting anything from the masses. This quality of PAS-entrenched him in the hearts of the people as mass leader of repute. He was not a leader who shined with the borrowed feather of the rank and file.

PAS was fond of introducing innovative ideas in party's functioning. He was the first person in the party to introduce the culture of wearing ***red and black bordered dhoties*** *and shoulder towels of DMK leaders and cadres. For all his success in politics his wife Sambooranam 's role is invaluable. As a dedicated wife, Sambooranam also became member of the party and participated in all struggles of the party devoutly. She is known for her hospitality and pleasing manners towards relatives, friends and party workers. DMK is a political party of thousands and thousands of dedicated cadres hailing from middle and lower middle class families. The leaders including Anna are also from same class. It is not surprising that PAS is one among them. He was living in a small tiled house in Punjai Puliampatti village. One day in 1961 somebody knocked the door of this small house at midnight. PAS woke up and opened the door to find Mr K.A Mathiazhagan at the door steps. Before pleasantries subsided, Mathiazhagan told PAS that Anna and Ponnambalanar have also come and they were sitting in the car. PAS was floating in the joy of receiving Anna and his friends to his small tiled house. Then Anna stayed in PAS' house for two days while Mathiazhagan and Ponnambalanar left for Madras next morning. This was the time a conspiracy was going on in the DMK to expel EVK Sampath and Anna was very much disturbed by the developments in the party. This incident struck a personal note of Anna in PAS' political career as foot-soldier of DMK.*

The first political struggle PAS participated was on 15-7-1953 for stopping the train at Karamadai as a part of Mummunai Poraattam, for which he was convicted and imprisoned for two months in Coimbatore central jail. At that time he was only 21 years old. Later during 1975-76 Emergency PAS spent one year as MISA detenu. He was an MP at that time. In between these two incidents PAS was imprisoned 30 times. Sambooranam also

spent 40 days in jail by participating in Anti Hindi Agitation.

It should be mentioned here that in Coimbatore district DMK there were only two DMK stalwarts who spearheaded all political struggles of the party: they are none other than Udumalai Narayanan and PAS. They were imprisoned and incarcerated number of times in the jail, but they never wavered from the cause of Dravidian ideology and the movement to which they were wedded.

PAS served as Member of Parliament for two terms between1967-77. During this period he successfully implemented several welfare schemes in his Gobi Parliamentary constituency, including the land distribution to 2000 landless poor families and endeared himself to the people's heart permanently. The 60 years of political career of PAS is a shining example of probity, selflessness, sacrifice and service in public life.

In 1975, PAS undertook the responsibility of organizing the DMK's state conference in Coimbatore in his capacity as District Secretary of the Party. This conference was a turning point in the history of the party. When the conference was on, Madurai Muthu, the veteran leader of the DMK switched to MGR's ADMK. It is an irony that the same Madurai Muthu was the inner party rivalry in the DMK in which veterans of the party in all districts were ignored and sidelined for various reasons.


After 1975 Emergency in which PAS was a MISA detenu, the DMK morphed into a party of casteist elements. There was a big gap between precepts and practices of the party ideology. It is well known that the edifice of DMK in Coimbatore district was built on the brick and mortar of sacrifice of its leaders and cadres who belonged to minority castes in the region. But due to short-sightedness and for reasons of short time political gains the DMK leadership sidelined these architects of the party including PAS. This was not only a disgusting political opportunism, but also a blatant travesty of the Dravidian ideology of Periyar and Anna.

Still PAS -a born crusader- did not accept this line of approach of the party for petty political and electoral gains. He started opposing this rank opportunism in the party forum with like- minded people. The reward for this was expulsion from the party. PAS was unperturbed. He started his own outfit called "Periyar Anna Sindhanaiyalar Peravai" along with his supporters, which later merged with Vaiko's MDMK. Later he left MDMK and rejoined DMK-his mother party.

and principles and never practiced sycophancy for petty personal gains. Though late MGR personally invited him to join ADMK in 1972, PAS stood steadfastly with DMK. Had he joined MGR, he would have easily become a minister in the MGR's cabinet. But PAS never aspired for ministerial berth and chose to remain with DMK in all its trials and tribulations including his incarceration in Coimbatore central jail as MISA detenu during Emergency. Even in his political wilderness, PAS remained with his people in Punjai Puliampatti and also remained loyal to DMK and Dravidian ideology.

It is unforitunate that thousands and thousands of party cadres and leaders like PAS with unblemished track record of sacrifice and service were ignored and sidelined. Sycophants and adulation mongers took control of the party and totally destroyed the gains of 60 years of glorious struggle and achievements of Dravidian movement. A political party alienated from the masses will never survive. This is what the recent election results of Tamilnadu and West Bengal prove. This is what happened in the international level in the Eastern Europe and erstwhile USSR in 1990s Again this is what happened in Tunisia and Egypt recently. We should not forget that history has always been a great teacher and manipulating the course history is impossible.

There is no doubt that PAS' life and service to DMK and Dravidian movement for the past 60 years will be cherished and remembered by the people of Punjai Puliampatti , his relatives and friends for ever. He will definitely remain as an icon in our hearts.



ஆங்கிலேய அரசு தமிழ் நாட்டாருக்குப் பட்டம்தர என்ன தகுதி உண்டு! மயிலுக்கு வான்கோழி பட்டம் தருவதா? கிளிக்கு கோட்டான் பட்டம் தருவதா? நாடாண்ட இனத்தானுக்கு சந்தையில் வியாபாரம் செய்ய வந்தவன் பட்டம் தருவதா? என்ற கேள்விக் கணைகளால் விடுதலை இந்தியாவைக் காண, சுயமரியாதை உணர்வு பொங்கவைத்த தங்கத் தலைவரல்லவோ நம் அண்ணா! 'துள்ளி வருகுது வேல் தூர விலகி நில்' என்று கூறி சர் பட்டம், ராவ் பகதூர் பட்டங்களைத் துறக்கச் செய்தவர் நம் அண்ணா! ... தொண்டன் என்ற பாகுபாட்டை நீக்கி ... பிணைந்து

Grand Daughter
R. Keerthana
Gobi.



"My Dear Grandpa"

I am not a great person to write about such a kind hearted person. Many people earned millions of money, but the only person who earned millions of people's heart to follow him even after his death is my dear grandpa.

"We miss you million times and we cried million times"
your absence is a measureless pain.

"If love could have saved you,
you never would have died
To the grave we travel,
the flowers are placed with care,
No one knows the heart ache
As we turn to leave you there
If tears could build a way
And heart aches could make a lane
We would walk a path to heaven
And we will bring you back"

I learnt and heared about many great people. But I am proud I lived with a great man for few years. My Grandpa is always unique and kind hearted to poor people.

After having my grandpa in farm, I refused to enter into his room. Because my heart is not that strong to accept that he is no more.

I will do the things what all you wanted me to do for poor people. I am doing as much as I can and also I will do it till my end.

Miss you grandpa, miss my well-wisher, guide, my favourite leader, politician. The world never gets a man like you with humanity and love.



பி.எஸ். சீத்தாராமன்
மேனாள் பேரூராட்சித் தலைவர்
புளியம்பட்டி

நினைவுகள்...

கோவை மாவட்டத் தி.மு.கழகச் செயலாளர் திருமிகு. பி.ஏ.சாமிநாதன், எம்.பி. அவர்களின் சமுதாய, அரசியல் பணிகளில் தொடக்க காலம் முதலே பங்குபெற்று, பணியாற்றி வருகிற நண்பர்களில் யானும் ஒருவன் என்பதில் ஏற்படும் மனநிறைவும் மகிழ்வும் கடந்த காலத்தை நினைவு கூறத் தூண்டியது.

பேரறிஞர் அண்ணா அவர்களால், கழகத்தில் உருவாக்கப்பெற்ற குடும்பப் பாச உணர்வுகளுடன் கழக உடன் பிறப்புகளோடு கடந்த 25 ஆண்டு காலமாக, கடமையாற்றிவிட்ட மன நிறைவோடும் நான் இதனைப் படைக்கிறேன்.

புன்செய்ப் புளியம்பட்டியில் **1949** வரை எதிர்க்கட்சியின்றி, எதிர்ப்பாரின்றி இருந்த ஆதிக்க அரசியலில் விழிப்புணர்ச்சி ஏற்படும் அளவில், **நண்பர் சாமிநாதனும்** மற்றைய நண்பர்களும் தமிழ் மன்றம் என்ற அமைப்பினை உருவாக்கி, **நூலகம் ஒன்றும்** நடத்தினோம். அதன் மூலம் இந்நகரத்தில் எதிர்க்கட்சி என்ற நிலை நல்லதொரு விறுவிறுப்போடு இயங்கத் தொடங்கியது. நாங்கள் வயதிலும் - அளவிலும் சிறியவர்களாயினும், உணர்ச்சி மிக்க வாலிபர்களாக - **பெற்றவர்களின் எதிர்ப்புக்கும் இடையில்** - செயலாற்றிய போது, மக்களின் ஆதரவு சிறுகச் சிறுகப் பெற்ற நிலை, எங்களை மேலும் பொதுவாழ்வில் நீடிக்க உணர்வூட்டியது. ***11-04-51*-இல் இவ்வூரில் தி.மு. கழகம் தொடங்கப்பட்டது** முதல், அரசியல் இயக்கமாக எங்களை மாற்றிக் கொண்ட அன்றைய நண்பர்களில் என்றும் நினைவு கூறத்தக்கவர் மறைந்த **திரு. பி. எஸ். பாலசுப்பிரமணியம்** அவர்கள். **1953-இல்** கோவை மாவட்டக் கழக உறுப்பினர் தேர்தலில், நண்பர் **பாலு** அவர்கள் தந்த ஊக்கமும், **ஒத்துழைப்பின் மூலமும் தான் சாமிநாதன் அவர்கள் போட்டியிட முன் வந்தார்.** அந்த நிகழ்ச்சிதான், சாமிநாதன் அவர்கள் இன்று பெற்றிருக்கும் அரசியல் செல்வாக்கிற்கு **ஒரு திருப்பு முனையாகும்.** அந்தத் தேர்தலில் தோல்வி ஏற்பட்ட போதிலும், பிற்காலத்தில் ஏற்பட்ட பல வெற்றிகளுக்கும் அதுவே அடித்தளமாகும். அன்று முதல் தி.மு.கழகம் ஆணையிட்ட போராட்டங்கள், … பங்கேற்று, சிறைபுகுந்து, கழக வரலாற்று … தனக்கென்று ஒரு தனி இடத்தை

உறுப்பினர்க் [illegible] 1952-இல் புளியம்பட்டிப் பேரூராட்சி மன்றத் தேர்[illegible] [illegible] நாங்கள் நான்கு பேர் மட்டுமே தேர்ந்தெடுக்கப்[illegible] [illegible] திட்டத்தின் மூலம் சாமிநாதன் தலை[illegible] [illegible] மாநில அரசுகள் காங்கிரசுக் கட்[illegible] [illegible] இந் நகருக்குச் சாதித்த சாதனைகள் பல [illegible] இவரை உணர்ந்து கொள்ளும் அளவிற்குப் பாரா[illegible] [illegible] 1965 பேரூராட்சி மன்றத் தேர்தலில் (13/13) அத்[illegible] [illegible] தேடித் தந்தது.

[illegible]

1967 பொதுத் தேர்தலில் சி. சுப்பிரமணியம் அவர்களை வெ[illegible] [illegible] தேர்ந்தெடுக்கப்பட்டார். தான் எம்.பி.யாகத் தேர்வு பெற்[illegible] [illegible] அமர்த்திவிட்டுத் தான் விலகிக் கொ[illegible] [illegible] வேண்டும் எனக் கருதினோர் - சிந்தித்துப் பின்பற்றத் தக்[illegible] [illegible]

இவரால் பதவியும், செல்வாக்கும் பெற்றவர்கள் ஏராளம். இவரிடம் சிறப்[illegible] [illegible] உண்டு. அஃதாவது தன்னை எதிர்ப்போருக்கும் நன்மை செய்து தன்பக்கம் சேர்த்துக் கொள்வது என்பது. ஆனால் இவரையே தொ[illegible] [illegible] உண்டு. இவரால் பதவியும் வசதியும் பெ[illegible] [illegible] திரிவது மட்டுமன்றி, முதுகிலே குத்துகின்ற தரங்கெ[illegible] [illegible] காணும்போது என் மனம் மிகுந்த வேதனையடைவதுண்டு. [illegible] அவர்களுக்கு ஊறு நினைக்காமல் நன்மை செய்து தன்பக்கம் சேர்த்துக் கொள்ளும் தன்மையுடையவர்.

புன்செய்ப் புளியம்பட்டி நகருக்குத் தேவையான அனைத்து வசதிகளும் செ[illegible] [illegible] நண்பர் சாமிநாதன் அவர்களுக்கு இந்நகர மக்[illegible] [illegible] ஆவர்.

தனது அரசியல் செல்வாக்கை - கழகத்திற்கும், கழகத்தவர்க்கும் பயன்பெ[illegible] [illegible] இவரின் பண்பு பாராட்டுக்குரியது.

"சாதனைச் செம்மல் சாமிநாதன்" மலரிலிருந்து தொகுத்[illegible]

(புளியை பெ.என். சீத்தாராமன் மகன்) முனைவர் சீ. பிரபு[illegible]

பெங்[illegible]

—

தமிழ் வளர்ச்சியடைய வேண்டும் என்பதெனில்
தமிழின் [illegible]
தமிழுக்கென [illegible] வேண்டும்

ந. விசுவநாதன்
நிர்வாகப் பங்குதாரர்
அம்மாருன் பவுண்டரீஸ் – கோவை



எளியவரின் ஒளிவிளக்கு

"ஐயா! நான் பள்ளிப் படிப்பை முடித்து உள்ளேன். கல்லூரிக்குச் சென்று பட்டப் படிப்புப் படிக்கும் அளவுக்கு எங்கள் குடும்பப் பொருளாதாரம் இல்லை. ஆனால், மேற்படிப்புப் படிக்கும் ஆவல் நிறைய உண்டு"

"அப்படியா! நான் ஒரு கடிதம் தருகிறேன். நீ இந்தக் கல்லூரியின் நிர்வாகத்தினரைச் சென்று பார்" எனக் கூறி உடனடியாக ஒரு கடிதத்தை எழுதி, வந்தவரிடம் கொடுப்பார். அந்த வாலிபரின் முகத்தில் நம்பிக்கை ஒளி தோன்ற, கடிதத்தில் குறிப்பிட்ட கல்லூரியின் நிர்வாகத்தினரைச் சென்று சந்திப்பார். 'இந்தக் கடிதம் கொண்டுவரும் நபர், கல்லூரியில் சேர்ந்து பட்டப் படிப்புப் படிக்க மிகவும் ஆவலாய் உள்ளார். ஆனால் அவர் மிகவும் ஏழ்மையான குடும்பத்தைச் சேர்ந்தவர். எனவே, தங்கள் கல்லூரியில் அனுமதித்து, கல்லூரிக்குச் செலுத்த வேண்டிய கட்டணத்தை முற்றிலும் இலவசமாகவோ அல்லது சலுகை அளித்தோ பட்டப் படிப்பு படிக்க உதவுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்' என்று அந்தக் கடிதத்தில் வேண்டப்பட்டிருக்கும். கல்லூரி நிர்வாகமும் அந்தக் கோரிக்கையைப் பரிவுடன் பரிசீலித்து அவர்களால் இயன்ற உதவியைச் செய்து அந்த ஏழை மாணவனின் விருப்பத்தை நிறைவேற்றும்.

"ஐயா நான் கல்லூரிப் படிப்பை முடித்துப் பட்டம் பெற்றுள்ளேன். ஏதாவது ஒரு நிறுவனத்தில் எனக்கு வேலை வாங்கித் தாருங்கள்" என இன்னொரு வாலிபர் கேட்பார்.

"நல்லது! இந்தக் கடிதத்தை எடுத்துச் சென்று இந்த நிறுவனத்தின் உரிமையாளரையோ அல்லது மேலாளரையோ பார்" எனக் கூறி ஒரு கடிதத்தை உடனே எழுதி வந்தவரிடம் கொடுப்பார். வந்தவர் அந்தக் கடிதத்தை மிகவும் நம்பிக்கையுடன் எடுத்துச் சென்று அந்த நிறுவனத்தின் நிர்வாகத்தினரைச் சந்திப்பார்.

"இந்தக் கடிதத்தைக் கொண்டு வருபவர் மிகவும் வசதியில்லாத

உதவும்படி கேட்டுக் கொள்கிறேன்” எனக் கடிதத்தில் எழுதப்பட்டிருக்கும். அ நபருக்கு அந்த நிறுவனத்தில் கண்டிப்பாகப் பணி நியமனம் கிடைக்கும்.

(இவ்வாறு சுமார் 10,000 பேருக்கு மேல், தான் வேலை பெற்றுத் தந்துள்ள பின்னாளில் ஒரு முறை பெரியவரே என்னிடம் தெரிவித்துள்ளார்)

“ஐயா! என் குழந்தைக்கு உடல் நிலை மிகவும் மோசமாக உள்ளது. நகரத்தி உள்ள மருத்துவமனைக்கு உடனே சென்றால்தான் குழந்தை பிழைக்கும் எ உள்ளூர் மருத்துவர்கள் கூறி விட்டார்கள்” என்று ஒரு தாய் அழுகையுடன் மன்றாடி கேட்டுக் கொள்வார். உடனே தொலைபேசி மூலம் தனக்குத் தெரிந்த பல்வே மருத்துவர்களில் யாராவது ஒருவருக்குக் குழந்தையின் நிலையை எடுத்துக் கூ உடனே உதவும்படி அன்புடன் கேட்டுக் கொள்வார் அல்லது மருத்துவரான தன மூத்த மகள் டாக்டர். இராணியிடம் உரிமையுடன் ஆணையிடுவார். அந்த ஏழை தாயிடம் தன்னால் இயன்ற பணத்தைக் கொடுத்து உடனே மருத்துவச் சிகிச்சை பெ அனுப்பி வைப்பார்.

“ஐயா! தந்தைக்கு இதயத்திலே ஏதோ கோளாறு இருப்பதாகவும் அதற் சிகிச்சை அளிக்க ரூபாய் ஒரு இலட்சம் வரை செலவு ஆகும் எனவும், சிகிச் அளிக்கக் காலம் கடத்தினால் உயிருக்கே ஆபத்து நேரிடலாம் என மருத்துவர்கள் கூறுகிறார்கள். நீங்கள்தான் எங்களுக்கு உதவ வேண்டும்” என கண்ணீர் மல்க ஒருவர் வேண்டுவார்.

“அப்படியா! கவலைப்பட வேண்டாம்” எனக் கூறிச் சில கடிதங்களை எழு அவர் கூறும் நபர்களை உடனே சென்று பார்க்குமாறு கூறுவார். மற்றும், தன்ன இயன்ற தொகையைக் கொடுத்து விட்டு, கடிதத்தில் குறிப்பிட்ட நபர்களை தொடர்பு கொண்டு அவர்களால் முடிந்த நிதி உதவியைச் செய்யுமாறு வேண் கேட்டுக் கொண்டு வந்தவரை மிகுந்த நம்பிக்கையுடன் அனுப்பி வைப்பார்.

மேற்கண்ட உதவிகளை எளியார்க்கு மனம் கோணாமல் செய் வேறுயாருமல்லர்! எல்லாராலும் அன்புடன் **‘பெரியவர்’** என் அழைக்கப்பெற்றவரும், எளியோர்க்கு **ஒளிவிளக்காய்த்** திகழ்ந்தவருமான தி **பி.ஏ.சாமிநாதன்** அவர்கள் தான் என்பது இந்தக் கட்டுரையின் முதல் பத்தி படிக்கும் போதே அனைவருக்கும் தெரிந்திருக்கும்.

ஒருமுறை பேரறிஞர் அண்ணா அவர்கள் எனது கிராமத்தில் நடந்த பொ கூட்டத்தில் பேச மாலை 5-00 மணிக்கு வருகிறார் என்றும், கால் தாமத சென்றால் அவரது மனங்கவரும் உரையை முழுமையாகக் கேட்க இயல போய்விடும் என்றும் தெரியவர, பள்ளி நேரம் முடிந்தவுடன் நே பொதுக்கூட்டம் நடக்கும் இடத்துக்குச் சென்றேன். ஆனால், எண்ணில

செல்லாமல் அண்ணனின் அருமையான பேச்சை நானும் எனது பள்ளித் தோழர்களும் கேட்டு மகிழ்ந்தோம்.

சுமார் 45 ஆண்டுகளுக்கு முன்னர் பேரறிஞர் அண்ணா அவர்களை எங்கள் கிராமத்திற்கு அழைத்து வந்த பெருமை திரு. பி.ஏ.எஸ். அவர்களையே சாரும். அதுபோன்ற பல அரசியல் கூட்டங்கள் எங்கள் கிராமத்திலே நடைபெற்ற தருணங்களில் திரு. பி.ஏ.எஸ். அவர்களைப் பார்த்திருக்கிறேனே ஒழிய 1984-ஆம் ஆண்டுவரை அவரைச் சந்திக்கவோ அல்லது அவருடன் பேசவோ எனக்கு வாய்ப்புக் கிடைக்கவில்லை.

“திரு. பி.ஏ.எஸ். அவர்களின் பாசமிகு தங்கை மாணிக்கத்தின் இளையமகள் செல்வி. **கலைச்செல்வியை** உனக்குத் திருமணம் செய்து வைக்க அவர்கள் வீட்டில் ஆலோசித்து வருகிறார்கள்” என்று ஒரு நாள் என் முக்கிய உறவினர்கள் என்னிடம் கூறினர். எனக்குச் சிறிதும் நம்பிக்கை இல்லாமல், அது நடக்கக் கூடியதா என்று எனது நம்பிக்கை இன்மையைக் கூறினேன். ஏனென்றால், நான் சாதாரண விவசாயக் குடும்பத்திலே ஐந்து குழந்தைகளில் ஒருவனாகப் பிறந்து, காவிலிபாளையம் அரசினர் உயர்நிலைப் பள்ளியிலே பயின்று இறுதியாகக் கோவையிலே ஒரு கல்லூரியிலே பட்டம் பயின்று ஒரு நிறுவனத்திலே பணியாற்றி வந்தேன். ஆனால் எனது விடா முயற்சியால் படிப்படியாக உயர்ந்து கோவையிலே ஒரு நிறுவனத்திலே சிறு வயதிலேயே மேலாளராகப் பணியாற்றியதால், இவனை நம்பி தனது அன்புத் தங்கையின் மகளைத் திருமணம் செய்து வைத்தால் கண்டிப்பாக அந்தப் பெண்ணை நல்ல நிலையில் வைத்துப் போற்றுவான் என முடிவு செய்து, தான் முடிவு செய்தால் அது மிகச்சரியாக இருக்கும், எனப் பெரிதும்நம்பும் தனது குடும்பத்தாரின் எதிர்பார்ப்பை இவன் கண்டிப்பாக நிறைவேற்றுவான் எனவும், முடிவு செய்து 1984-ஆம் ஆண்டு கோவையிலே எனக்கு மணம் முடித்துக் கொடுத்தார்.

எனது நெருங்கிய உறவினரின் திருமண நாள் 1982-ஆம் ஆண்டு சூன் திங்கள் மூன்றாம் நாள் ஆகும். எனவே அந்த நாளில் எங்கள் திருமணத்தையும் வைத்துக் கொள்ளலாம் என்று நாங்கள் முடிவு செய்து திரு. பி.ஏ.எஸ். அவர்களிடம் கூறினோம். அதற்கு அவர், ஒரு வாரம் முந்தின தினமும் நல்ல முகூர்த்த நாள் என்பதால் அன்றைய தினம் திருமணத்தை வைத்துக் கொள்ளலாமா? என்று எங்களிடம் ஆலோசனை கேட்டார். அதற்கு நாங்கள், “சூன் மூன்றாம் தேதி இவருக்குத் திருமண நாள். எனவே, அந்த நாளில் வைத்துக் கொண்டால் பொருத்தமாக இருக்கும்” என்று எங்கள் கருத்தைக் கூறினோம். உடனே திரு. பி.ஏ.எஸ். அவர்கள் சரி! உங்கள் விருப்பப்படியே சூன் மூன்றாம் தேதியே வைத்துக் கொள்ளலாம் என்று ஒப்புக் கொண்டார்.

குறிப்பிட்ட நாளிலே எங்கள் திருமணம் சிறப்பாக நடந்து முடிந்தது. உறவினர்களும் நண்பர்களும் எங்களுக்குப் பரிசளித்து வாழ்த்தினார்கள்.

கடையோகத் திரு. பி.ஏ.எஸ். அவர்கள் எங்களிடம் வந்து வாழ்த்தி வி
எங்களிடம் கூறினார். இன்று தலைவர் கலைஞர் அவர்களின் பிறந்த நாள். அ
குறிப்பாக அறுபதாவது பிறந்த நாள். ஒவ்வொரு பிறந்த நாள் அன்றும் தவறா
சென்னை சென்று கலைஞரைச் சந்தித்து ஆசி பெற்று வருவேன். எனவே, இன்
புறப்பட்டு, சென்னை சென்று வருகிறேன் என்றார். அந்த இனிய விழாவிலே
நான் சற்று மனம்வருந்தி, "இதை முன்னமே கூறி இருந்தால் எங்கள் திருமணத்
ஒரு வாரம் முன்னரே வைத்திருக்கலாமே" என்று கூறினேன். அதற்குத் தி
பி.ஏ.எஸ். அவர்கள், "பரவாயில்லை! நீங்கள் இந்த நாளை விரும்பிக் கே
கொண்டபடியால், எனக்கு மறுத்துக் கூற மனம் ஒப்பவில்லை." எ
பெருந்தன்மையுடன் கூறிவிட்டு, எங்களிடம் விடைபெற்றுச் சென்னை புறப்ப
சென்றார். அனைவரும் மனம் நிறைவு பெறும் முறையில், தான் நடந்து கொ
வேண்டும் என்ற அவரது உயரிய பண்பு எனக்கு அன்று தெளிவாகப் புரிந்தது.

இத்தகைய நல்ல பண்பும், எளியோர்க்கு முடிந்தவரை உதவும் மாண்பு
எவரையும் பகைத்துக் கொள்ளாத உயரிய குணமும், பொருள் ஈட்டும் விருப்
இல்லாதவரும், மொத்தத்தில் எளியோர்க்கு ஒளிவிளக்காய்த் திகழ்ந்தவரு
பெரியவர் பி.ஏ.எஸ். அவர்கள் இவ்வுலகை விட்டு மறைந்தாலும், அவ
நினைவுகள் நம்எல்லார் மனதைவிட்டு என்றும் அகலாமல் நிலைத்து நி
என்பதில் எள்ளளவும் ஐயம் இல்லை!


தமிழின் நீர்மைபோல் நிலைபெறுக அவர்தம் புகழ்!

எங்கே தேடுவோம் எங்கள் மாமாவை...?



ராஜாமணி சந்திரசேகரன்
கலைச்செல்வி விசுவநாதன்

கோவை மு. இராமநாதன் Ex.M.P.,
திமுகழக உயர்நிலைச் செயல் திட்டக்குழு உறுப்பினர்



கொங்கு மண்டலத் தளபதி 'பி.ஏ. சாமிநாதன்'

(நெஞ்சிருக்கும் வரை நினைவிருக்கும்)

கொங்கு மண்டலத்தில் ஒரு குறுநில மன்னனைப் போல, பொதுவாழ்வில் அடியெடுத்து வைத்த நாள் முதலாக, புளியம்பட்டியெனும் சிற்றூரில் பிறந்து வளர்ந்து, பள்ளிப் பருவம் முதல் திராவிட இயக்கத்தில் தன்னை இணைத்துக்கொண்டு, தனக்கென வாழாமல் பிறர்க்கென வாழ்ந்த பேருள்ளம் கொண்ட, அன்புக்குரிய பெரியவர் என்று மக்களால் போற்றப்பட்ட அண்ணன் பி.ஏ. சாமிநாதன் அவர்கள், கோவை இராமகிருஷ்ணா மருத்துவமனைக்குக் கடந்த 21-01-2011 அன்று ஆம்புலன்ஸ் வேனில் புறப்பட்ட பொழுது, அவரது 3009-ஆம் எண் அறையில் கண்டு அவருக்கு ஆறுதல் கூறினேன்.

அவரால் பேச முடியவில்லை! ஆனால் நல்ல நினைவுடன் இருந்தார். படுத்திருந்த நிலையிலும் என்னை அருகில் கையசைத்து அழைத்தார். எனது கையை ஒரு கையால் பற்றிக் கொண்டார்! ஏதோ சொல்ல நினைத்தார். சொல்ல முடியவில்லை! கடைக்கண்ணில் நீர் வழிந்தது!

விழிநீர் பெருக்கெடுத்ததால் அறையை விட்டு வெளியே வந்தேன். அன்புத் தங்கை சம்பூரணத்தை ஆற்றுப்படுத்த முடியவில்லை. நெஞ்சு கனத்தது.

22-01-2011 அன்று முற்பகல் 12 மணியளவில் கோபிச்செட்டிபாளையம் செந்தில்நாதன் மருத்துவமனையில் அருமை அண்ணன் பி.ஏ. சாமிநாதன் மறைந்து விட்டார் என்று செய்தி வந்தது.

அகவை 81-இல் அடியெடுத்து வைத்து கொங்கு மண்டலத்தில் கழகத்தைக் கட்டிக்காத்து வளர்த்திட்ட 'கொம்பன் யானை' வீழ்ந்து விட்டது.

60 ஆண்டுகாலப் பொதுவாழ்வுக்கு உரியவர் - 'பெரியவர்' என்று அனைவராலும் அழைக்கப்பட்டவர். கொங்கு மண்டலத்தின் ஓர் ஆலமரம் சாய்ந்துவிட்டது! வந்தோருக்கெல்லாம் விருந்து படைத்து மகிழ்ந்த புளியம்பட்டியில் வாழ்ந்த 'மன்னவன்' என் அண்ணன் நெடுந்துயிலில் போய்விட்டார்.

எப்போதும் நாலுபேர் இல்லாமல் தனியாக அவர் எங்கும் வந்ததில்லை. எங்குப் புறப்பட்டாலும் ஒரு பத்துப் பேர் புடைசூழப் புறப்பட்டு வருவார். **அவர் ஒரு தேனீ! கூட்டத்தோடுதான் வருவார்.**

எடுத்தக் காரியத்தை நிறைவேற்ற வேண்டும் என்ற **துணிவும், திறனும்** அவருக்கு உண்டு. அவருடைய அரும்பணி, மாவட்டம் முழுவதும் பரவியது. புளியம்பட்டியில் ஒரு பாளையக்காரன் படைதிரட்டி வருகின்ற செய்தி கழகத்தின் தலைவர்களுக்கும் தெரிந்தது. மாவட்டம் முழுவதும் உள்ள முன்னோடிகளுடன் பழகுகின்ற வாய்ப்பும் ஏற்பட்டது. அந்த வரிசையில் உடுமலை நாராயணன், எஸ்.ஏ. இராசமாணிக்கம், பி.எஸ். ஜானகிராமன், எம்.எஸ். தேவசகாயம், சி.டி. தண்டபாணி, பொங்கலூர் பழனிச்சாமி, கோவை செழியன், சு. ஆறுமுகம் போன்ற எங்களிடமும், எஸ்.ஜே.சாதிக்பாட்சா, கபிலன், ஜெகன்னாதன், பேரையன், கே.ஏ. மதியழகன், ஈ.வெ.கி.சம்பத், பொள்ளாச்சி மு.கண்ணப்பன், ஈரோடு என்.கே.கே. பெரியசாமி, மேட்டுப்பாளையம், காட்டூர், தாயனூர், மத்தம்பாளையம், கோயில்பாளையம் கிரணத்தம், அத்திப்பாளையம், விஜயமங்கலம், ஆலாம்பாளையம், திருப்பூர், பொள்ளாச்சி, ஆனைமலை, கோவை, ஈரோடு, வெள்ளக்கோவில், சென்னிமலை, கொடுமுடி, கொளாநெல்லி, குட்டப்பாளையம், நத்தக்காடையூர், மூலனூர், கன்னிவாடி சீரங்கவாயர், காதக்கோட்டை, காங்கேயம், ஆலாம்பாடி, படியூர், வரப்பாளையம், கொடுவாய், பொங்கலூர், தாராபுரம், தளவாய்ப்பட்டணம், மேடை வலசு, ரெங்கபாளையம், காரத்தொழுவு, மடத்துக்குளம், ஜல்லிப்பட்டி, போடிபட்டி, அங்கலக்குறிச்சி, கோட்டாம்பட்டி, நெகமம், சோழனூர், காந்திபுரம், இருகூர், புலியகுளம், சிங்காநல்லூர், சுண்டக்காமுத்தூர், தீத்திபாளையம், ஒண்டிப்புதூர், தோப்பூர், குனியமுத்தூர், சுந்தராபுரம், மாச்சம்பாளையம், போத்தனூர், வெள்ளலூர், செட்டிபாளையம், இடையர்பாளையம், தெலுங்குபாளையம், தொண்டாமுத்தூர், முத்திபாளையம், தாளியூர், மாதம்பட்டி, செம்மேடு, ஆலாந்துறை, நீலகிரி, கோத்தகிரியில் ஜக்கநாரை, ஊட்டி, காந்தல், உப்பட்டி, தேவர்சோலை, நடுவட்டம், பெங்கால்மட்டம், குந்தா, கொலக்கொம்பை, கூடலூர் ஆகிய ஊர்களில் பலரின் தொடர்புகிட்டி, ஒருங்கிணைந்து செயல்பட்டனர். ஒவ்வோர் ஊரிலும் துணைநின்ற அன்பர்களின் பெயர்களைத் தனித்தனியே சுட்ட நேரமும், மலரில் இடமும் இல்லாத ஏக்கம்! இவ்வாறு ஊருக்கு ஒருவர் அல்லது இருவர் என்றுதான் அன்றைய நாளில் கருஞ்சட்டைப் படையில் சேர்ந்தார்கள். மூத்த தலைமுறையினரின் பெயர் அவர்களது ஊரோடு இணைந்துதான் குடியரசு ஏட்டிலும், விடுதலை ஏட்டிலும் வரும்.

பொத்தாம்பாளையம் பழனிசாமி முதல் அன்பில் தருமலிங்கம், மன்னை நாராயணசாமி மதுரை முத்து, பூவாளூர் பொன்னம்பலனார், மூவலூர் இராமாமிர்தம், குடந்தை நீலமேகம், காஞ்சி கலியாண சுந்தரம், தூத்துக்குடி சிவசாமி, அருப்புக்கோட்டை இராமசாமி, உடுமலை நாராயணன், கோவை இராசமாணிக்கம், சேலம் சித்தையன், பேளுக்குறிச்சி சோமசுந்தரம், வேலூர் சாரதி,

கோவை திரு. ராஜு பல்லடம் சொன்னதுபோல், மொழியின் [illegible] இவ்வாறு வரிசையாக சேர்ந்து வந்த பெயர்களில் முன்னுதாரணமாக [illegible] என்ற பெயர் என்பதை நான் எண்ணிப் பார்க்கின்றேன். நெஞ்சம் விம்முகின்றது.

"சிதைவிடத்து ஒல்கார் உரவோர் புதையம்பின்

பட்டுப்பாடு ஊன்றும் களிறு" என்று

முப்பால் மொழிந்த வள்ளுவர் யானையைப் பற்றிச் சொல்லும்போது அஞ்சாமையைக் கூறியுள்ளார்.

போர்ப்படையில் ரத, கஜ, துரக, பதாதி என நான்குவகைப் படை [illegible] யானைப் படையைப் பற்றிச் சொல்லும் போது; எதிரிகளின் அம்புகளோ அம்புகளோ போர்க்களத்தில் பாய்ந்து வந்து தாக்கும் போது இந்தத் தாக்குதலைத் தாங்க முடியாமல், எந்தப் படைவரிசை, பின் வாங்கினாலும், யானை பின்வாங்காது. எதிரிகளின் அம்புகளால் யானையே புதைக்கப்பட்டு போகின்ற அளவு சரமாரியாக அம்புகள் பாய்ந்து வந்து தன் மீது குத்தினாலும், யானை அந்த அம்பு வரும் திசையை நோக்கி முன்னேறிச் செல்லுமேயல்லாமல், பின்வாங்காது. "புதையம்பின் பட்டுப்பாடு ஊன்றும் களிறு" என்ற முப்பாலுக்கு ஒப்பானவர் அண்ணன் [illegible] சாமிநாதன் என்றால் அது மிகையாகாது. அறிஞர் அண்ணா அவர்களின் பாசத்துக்குரிய படைத்தலைவனாக, முத்தமிழறிஞர் கலைஞரின் செயல்திறன் மிக்க உடன்பிறப்பாக இந்தக் கொங்குமண்டலத்தையே தனது அயராத உழைப்பால் கழகத்தின் கோட்டையாக மாற்றிக் காட்டிய தலைவனை – என் அண்ணனை நாம் இழந்து தவிக்கின்றோம்.

"நினைந்து நினைந்து நெஞ்சம் உருகுதே! நீங்கிடாத துன்பம் பெருகுதே" என கவியரசன் பாடியது போல எனது உள்ளம், நினைவு அலைகளால் துடிக்கின்றது.

கோவை மாவட்டத்தில் முதல் மாவட்ட மாநாடு கணியூரில் 1951-இல் நடந்ததைச் சொல்லவா? 1953-இல் 2-ஆவது மாநாடு மேட்டுப்பாளையத்தில் நடந்ததைச் சொல்லவா? கருப்பு சிவப்புக் கரை போட்ட வேட்டி - துண்டுகளை முதலாகத் தயாரித்து, அந்த மாநாட்டில் ஒரு கடை வைத்து, கலைஞரை அழைத்து வந்து திறப்பு விழா நடத்தியதைச் சொல்லவா? 1960-இல் கோவையில் ஈ.வெ.கி. சம்பத் அவர்களுடன் இணைந்து நடத்திய மாநாட்டின் சிறப்பைச் சொல்லவா? தமிழ்நாட்டு வரலாற்றில் முன் எப்போதும் யாரும், எந்தக் கட்சியும் நடத்திக் காட்டாத தி.மு.கழகத்தின் 5-ஆவது பொது மாநில மாநாட்டைக் கொண்டு மணி விழாக்கோலம் பூண்ட மகத்தான அந்த மாநாட்டை கோவை நகரில் 1970-இல் நடத்துவதற்கு எனது அண்ணன் கழன்று கழன்று இரவு பகலாக உழைத்த செயல்திறனைச் சொல்லவா? அப்படி 3 மாதங்கள் கண் துஞ்சாமல் உழைத்த காரணத்தால் குரல் ஓசையே இல்லை. மாநாட்டின் சிறந்த வரவேற்புரையை எழுதிக் கொண்டு படிக்க வைத்ததைச் சொல்லவா? என்னென்பேன் அவரை! அவருக்கு இணையான இன்னொரு செயல் வீரனைக் கோவை மாவட்டம் காண முடியுமா?

எதிர்ப்புச் சக்திகளை அங்குலம், அங்குலமாகச் சந்தித்து, எதிரிகளைத் துவம்சம் செய்த மறவன் நீ! புளியம்பட்டி என்னும் சிற்றூர் உன்னைப் படிப்படியாக வளர்த்து ஆளாக்கிப் பேரூராட்சித் தலைவனாக்கி 1967-இல் மக்களின் தலைவனாக உடுமலை மக்களவைக்குத் தேர்ந்தெடுத்த அந்த வரலாற்றுத் திருப்பத்தை எண்ணிப் பூரிக்கின்றேன். மெய் சிலிர்க்கின்றது.

திருப்புமுனை கண்ட அந்த 1967-ஆம் ஆண்டு பொதுத் தேர்தலுக்கு முன்பு, தேர்தல் நிதி திரட்டுவதற்குப் பேரறிஞர் அண்ணா அவர்களை அழைத்து வந்து 10 நாள்கள் தொடர்ந்து, கொங்கு மண்டலத்தில் அண்ணன் உடுமலை நாராயணன், மு.கண்ணப்பன், எம்.என். தேவசகாயம், ப.கோபால் உள்ளிட்ட இந்த மாவட்டத்தின் மற்ற தலைவர்களையும் இணைத்துக்கொண்டு, நீ பவனிவந்த காட்சியும், மக்களின் எழுச்சியும் அறிஞர் அண்ணாவை அடுத்து முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களையும், 10 நாள்கள் தொடர்ந்து சுற்றுப்பயணம் செய்யவைத்து தமிழ்நாட்டில் எந்த மாவட்டத்திலும் நடத்தாத ஒரு சூறாவளிச் சுற்றுப் பயணத்தை நடத்தி; அறிஞர் அண்ணா அவர்களிடம் **78,000 ரூபாயையும், கலைஞர் அவர்களிடம் 48,000 ரூபாயையும்** கொடுத்து, கொங்கு மண்டலத்தின் பெருமைக்கும், புகழுக்கும் முதன்மையாக இருந்த என் அண்ணனே! உன்னை எங்களால் மறக்க முடியுமா!

உண்ணாமல், உறங்காமல், ஓய்வெடுக்க நேரமின்றிப் பட்டி-தொட்டியெல்லாம், சிறூர், பேரூர், நகரம் எல்லாம் பேரறிஞர் அண்ணா அவர்களையும், பொருளாளரான முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களையும், நீலகிரி மலையிலே தொடங்கி வால்பாறை மலைவரை எட்டுத்திக்கிலும் **திக்விஜயம்** என்று சொல்வார்களே அந்த மகத்தான பணியை நிறைவேற்றிய ஞான வைராக்கியம் கொண்ட எங்கள் பாசத்திற்குரிய தலைவன் நீ! எதையும் தாங்கும் இதயம் கொண்ட மக்கள் தலைவனும் நீதான்! எத்தனை சோதனைகள்! எண்ணற்ற வேதனைகள்! அடுக்கடுக்கான போராட்டங்கள்! சதி வழக்குகள்! எத்தனை முறை சிறைச்சாலை! எண்ணிப்பார்க்கின்றேன்.

உன்னோடு பலமுறை சிறையில் இருந்துள்ளேன். ஆயினும், மிசாவில் கோவைச் சிறையில் கொங்கு மண்டலத்தின் கொள்கை மறவர்களுடன் நாம் இருந்த காலம் நெருக்கடியான காலம் மட்டுமல்ல, நண்பர்களை உய்த்துணர நமக்குக் கிடைத்த அரிய வாய்ப்புமாகும்.! ஓராண்டு உருண்டோடி. நீங்கள் சிறையில் இருந்து வெளியே வந்தீர்கள். நான் சென்னைச் சிறையிலிருந்து கடைசியாக வெளியே வந்தேன். உங்களைப் பார்த்தேன் உடல் மெலிந்து நீங்கள் இருந்த காட்சி கண்டு கண்ணீர் வடித்தேன்.

ஒருங்கிணைந்த கோவை மாவட்டத்தில் திராவிட இயக்கத்தின் வேர்களாகவும், விழுதுகளாகவும் இருந்து ஒவ்வொரு ஊரிலும் கிளைகளைத் தொடங்கி இந்த மாபெரும் இயக்கத்தை வளர்த்த **மறவர்களை - தியாகிகளை** எனது நினைவுக்கு எட்டியவரையில் ஒரு சிலரை நினைவு கூர்ந்து பார்க்க ஒரு வாய்ப்பாகவே கருதுகிறேன். பலருடைய

பெயர்கள் விடுபட்டிருக்கலாம். அவர்கள் என்னை மன்னிக்க வேண்டுமென கேட்டுக்கொள்கின்றேன்.

பெரியவர் பி.ஏ.சாமிநாதன் என்ற பெயர் ஒரு தனி மனிதன் பெயர் அன்று!


கொங்கு மண்டலத்தில் திராவிட இயக்கத்தை வளர்த்து ஆளாக்கிய படைத்தலைவனின் வரலாறு என்பதை இன்றைய புதிய தலைமுறை தெரிந்து கொள்ள வேண்டும்! என்பதை இங்குக் குறிப்பிட விரும்புகின்றேன்.

முந்தைய கோவை மாவட்டம், இப்போது கோவை, ஈரோடு, திருப்பூர், நீலகிரி என்று நான்கு மாவட்டங்களாக ஆகியுள்ளது. இந்த நான்கு மாவட்டங்களும் ஒன்றாக இருந்த காலத்தையும், அன்றைய நாளில் தி.மு.கழகம் என்ற அரசியல் கட்சி தொடங்கப்படாத காலத்தில், நமக்கு மூத்தவர்களாக - முன்னோடிகளாகத் தந்தை பெரியாரின் தன்மான இயக்கத்திலும், 1944-க்குப் பிறகு திராவிடர் கழகத்திலும் தங்களை இணைத்துக் கொண்டு, எதிர்ப்புச் சக்திகளின் எரிமலைக் குழம்புகளில் அந்த நெருப்பாற்றைக் கடந்து வந்து, அதில் வெந்து மாண்டவர்கள் போக, எத்தனை பேர் மீண்டார்கள் என்று எண்ணிப்பார்த்தால் தான், நமக்கு முந்தைய தலைமுறையின் தியாகமும், தந்தை பெரியாரின் கடுமையான உழைப்பும், எதிர்நீச்சல் போட்டு அவர் தன்மான இயக்கத்தை வளர்த்த நெஞ்சுரமும் - அஞ்சாமையும் இன்றைய புதிய தலைமுறைக்குத் தெரியவேண்டும் என்ற காரணத்தினால்தான் அதனை இங்கு எழுதியிருக்கின்றேன்.

நமக்கு முந்தைய தலைமுறை தந்தை பெரியாரின் தலைமுறையாகும். அந்தத் தலைமுறையில் தன்னை இணைத்துக் கொண்டு, தந்தை பெரியாரிடம் வந்து சேர்ந்த அறிஞர் அண்ணா நமக்கு இரண்டாவது தலைமுறையின் தளபதியாக வளர்ந்து நம்மை ஆளாக்கினார்.

முதல் தலைமுறை மறைந்து விட்டது. இரண்டாவது தலைமுறைக்குத் தலைமையேற்ற அறிஞர் அண்ணா, 18 ஆண்டுகளில் ஒரு அரசியல் மாற்றத்தை ஏற்படுத்தித் தமிழ் நாட்டின் ஆட்சியில் அமர்ந்து, அய்யா தந்தை பெரியாரின் கொள்கைகளுக்குச் சட்ட வடிவம் கொடுத்து, தன்மானம் காத்து, தாய் நாட்டிற்குத் 'தமிழ்நாடு' எனப் பெயர் சூட்டி ஏற்றமிகு பணிகளைச் செய்துவரும் வேளையில், புற்றுநோயொன்று பற்றிக் கொண்ட காரணத்தால் நம்மைப் பாதியிலே விட்டு விட்டுப் போய்விட்டார்! வாழக் கொடுத்து வைக்கவில்லை! தாயற்ற பிள்ளைகளாய் நாடு தவித்தது.

அறிஞர் அண்ணா மறைந்த பின்னர், அவர் விட்ட இடத்திலிருந்து தமிழ் நாட்டையும், தி.மு.கழகத்தையும் கட்டிக்காத்துவரும் கண்ணின் மணியாம் முத்தமிழறிஞர் கலைஞரும், இனமானம் காக்கும் செந்தமிழ்ச்செல்வர் பேராசிரியரும் நம்மை வழிநடத்தி வருகின்றார்கள்.





அறிஞர் அண்ணாவின் தலைமுறை இரண்டாவது தலைமுறை இன்று 80 வயதிற்கும் 90 வயதிற்கும் இடையில் இருக்கின்றது. நான்காவது தலைமுறை 40-க்கும் 60-க்கும் இடையில் உள்ளது. இருபதுக்கும், நாற்பதுக்கும் இடைப்பட்ட ஐந்தாவது தலைமுறை எந்தக் குறிக்கோளும் இல்லாமல், மானுடப் பிறப்பின் மகத்துவமும் தெரியாமல், நாடும் மொழியும் நற்றமிழர் பண்பாடும் அறியாது, எதையோ தேடி எங்கோ போய்கொண்டிருக்கின்றது.

குறிப்பாக 5-ஆவது தலைமுறை ஆலுக்கு விழுதாக இல்லாவிட்டாலும், வாழைக்குக் கன்றாக ஆகிவிடக்கூடாது என்பது என்போன்றவர்களின் கவலையாக இருக்கின்றது. 'சின்னஞ்சிறு கைகளை நம்பி ஒரு சரித்திரம் இருக்குது தம்பி' என்று பட்டுக்கோட்டையார் வடித்துத்தந்த பாட்டு வெறும் பாட்டல்ல! வருங்காலம் பற்றிய ஆழ்ந்த வேதனையுமாகும்.

தம்பி, இருப்பது ஒரே உயிர்? அது போகப் போவதும் ஒரே ஒரு முறைதான்! அப்படிப் போகும் உயிர் தமிழ் இனம் காக்க, தமிழ் மொழிகாக்க, தமிழ் இனத்தின் பண்பாட்டைக் காக்கப் போகட்டும் வா! என்று அழைத்த மாமேதை அறிஞர் அண்ணா இன்று இல்லை. புதிய தலைமுறைக்கு, முந்தைய நான்கு தலைமுறையின் வரலாற்றை நெஞ்சில் பதிக்க வேண்டாமா என்ற ஏக்கத்தை அண்ணன் பி.ஏ. சாமிநாதன் அவர்களின் நினைவு நாளில் பதிவு செய்ய விரும்புகின்றேன்.

கொளுத்துகின்ற வெயிலில் பயணம் செய்கின்றவர்கள், காரிலே போகின்றவர்கள் நெடுஞ்சாலைகளில் மரத்தடியில் இளநீர் விற்பதையறிந்து இளநீர் குடிப்பார்கள். இளநீரைச் சுவைத்து குடித்து விட்டு 'வெரி ஸ்வீட் கோக்னட் வாட்டர்' என்று கூறி இன்னும் நாலு வெட்டிக் கொடு என்று வாங்கிக் குடித்து விட்டு 'வெரி குட், வெரி குட்' என்று போய் விடுவார்கள். அப்படிச் சொல்லி விட்டுப் போகின்றவர்களுக்கு இந்த இளநீர் எங்கிருந்து விளைந்து வந்திருக்கின்றது என்பது தெரியாது. ஆனால் மரத்தடியிலே இளநீர்க்கடை போட்டிருப்பவருக்காவது இந்த இளநீர் எந்தத் தோப்பு இளநீர் என்று தெரியுமா? என்று கேட்டால், எந்த ஊரு, எந்தத் தோப்பு இளநீர் என்று தெரியாது. வழக்கமாக ஒருவன் டெம்போவிலே கொண்டு வந்து போட்டுவிட்டு எட்டு ரூபா விலைக்குக் கொடுத்துவிட்டுப் போவான் என்று சொல்லிவிடுவான்.

அந்த 'டெம்போ'வில் கொண்டு வருபவனுக்காவது அவன் இளநீர் வாங்கின்ற அந்தத் தென்னந்தோப்பு யாருக்குச் சொந்தம் என்று தெரியுமா? என்றால், தோப்புக்காரர் யாரென்று தெரியாது. நான் அந்தத் தோப்பை, குத்தகைக்குப் பார்க்கின்ற பெரியசாமியிடம் இளநீர் 6 ரூபாய் என்று வாங்கி வருகின்றேன் என்கின்றான்.

கடைசியிலே, 5000-க்கும் மேற்பட்ட தென்னை மரத்தோப்பை, தென்னம் பிள்ளையை நட்டு, எருப்போட்டு நீர் பாய்ச்சி, பூச்சிகள் தாக்காமல் மருந்தடிக்க, இரவு பகலாகக் காவல்காத்துப் பெற்ற குழந்தையைப் போல, தென்னந்தோப்பை வளர்த்து ஆளாக்கியவர், உரிமையாளர் யார்? என்று விசாரிக்கும் போது தெரியவந்தது. அவரு

அவருக்குப் பின்னாலே பல கை மாறிப் போயிடுச்சு என்று பக்கத்துத் தோப்புக்காரர் பச்சியப்பன் சொல்லி வருத்தப்பட்டது போல் நமது நிழலை நாம் மறந்து விடக் கூடாது.

பெரியவர் இராமசாமியின் தோப்பு இளநீர் எத்தனை கை மாறி மரத்தடிக்கு வந்திருக்கின்றது என்பதையும், மரத்தடியில் காரை நிறுத்திக் கோடையில் வெப்பத்தை தணிக்கக் குளிரானநீரை இருமுறை வாங்கிக் குடித்துவிட்டு, 'சுவீட் கோக்னட் வாட்டர்', 'வெரிகுட்! வெரிகுட்!' என்று காரிலே போகின்றவர்கள் சொல்லுகின்றார்கள்.

ஆனால் யாரும் இவ்வளவு பெரிய தென்னந்தோப்பை காடும், மேடும் திருத்தி ஆழ்கிணறு தோண்டி, நீர் பாய்ச்சிப் பிள்ளையை வளர்ப்பது போல தென்னம்பிள்ளையை வளர்த்துப் பாதுகாத்தவரை, குளிரான நீர்தரும் தோப்பை வளர்த்தவரை இளநீர் குடிக்கின்ற யாரும் எண்ணிப் பார்ப்பது இல்லை.

இன்றைய புதிய தலைமுறைக்கு, 'சுவீட் கோக்னட் வாட்டர்' மட்டுமே தெரிகின்றது! ஆனால் அவர்கள் அந்தத் தோப்பை நமக்காக உருவாக்கிய பெரியவரை அந்த இராமசாமியை ஒருகனம் எண்ணிப் பார்க்க வேண்டாமா? அந்தத் தோப்பில் பணிபுரிந்து வந்த எங்களின் நினைவைவிட்டு நீங்காத மாமனிதர் பெரியவர் **பி.ஏ.சாமிநாதன்** அவர்களையும் நெஞ்சில் நிறுத்திக் கொள்ள வேண்டாமா?

கண்ணீரும், செந்நீரும் விட்டு வளர்த்த கழகம் நமது திராவிடர் கழகமும், திராவிட முன்னேற்றக் கழகமும் ஆகும். நீதிக்கட்சியின் மகத்தான பணியையும், **பிட்டி தியாகராயர், டாக்டர் நடேசன், டி.எம்.நாயர், கே.வி.ரெட்டி நாயுடு, மூதறிஞர் முத்தையா முதலியார், சர்.ஏ.டி. முத்தையா முதலியார், சர். ஏ.டி.பன்னீர்ச்செல்வம், டபிள்யூ.பி.ஏ. சவுந்திரபாண்டியன், டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி** ஆகியவர்களின் அயராத உழைப்பை இன்றைய தலை முறைக்கு எப்படி உணர்த்துவது?

தந்தை பெரியாரின் சமுதாயப் புரட்சியை, அறிஞர் அண்ணாவின் எழுத்துப் புரட்சியை, முத்தமிழறிஞர் கலைஞரும், பேராசிரியர் பெருமகனாரும் இன்றளவு குன்றமென நிமிர்ந்து நின்று, தங்களின் எண்ணத்தாலும், எழுத்தாலும், பேச்சாலும் ஆட்சி அதிகாரத்திற்கு வந்த பின்னர், தாழ்ந்த தமிழகத்தைத் தலைநிமிரச் செய்வதற்கு ஆற்றியுள்ள பணிகளை - அடுக்கடுக்காக வந்திட்ட சோதனைகளை, எதையும் தாங்கும் இதயத்தோடு எதிர்த்து நின்று வெற்றி முரசு கொட்டிய தியாக வரலாற்றை புதிய தலைமுறைக்கு எடுத்துரைக்கத் தவறிவிட்டால், வேத காலமும்! வேதியர்களின் சாத்திரங்களும் சனாதனத் தருமநெறியும்! சதுர்வேதி மங்கலங்களின் பெருக்கமும் உத்தமதானபுரங்கள்! மகாதான புரங்கள் பெருகி "பூணூல்" ஆட்சி "மோகினி" அவதாரம் எடுத்துவரும்!

...ர்களின் ஆசிரமங்களும் பூலோகத்திற்கே வந்துவிடும்! இந்திர ஜாலங்கள் இக ...எல்லோருக்கும் கிடைக்கும்!

...தமிழ் நாட்டில் 11-ஆவது அவதாரம் பிரம்மனின் கர்ப்பத்தில் ...கொண்டிருப்பதாக அசரீரி சொல்லுகின்றது! விழி மூடி உறக்கத்தில் இருப்பவனே ...எழு புறப்பட்டு வெளியே வா!

...எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மாங்காத தமிழென்று சங்கே முழங்கு' என்ற ...மூச்சு 22-01-2011 அன்று நின்றுவிட்டது!

முதல் தலைமுறையின் விளியோசை கேட்டு, விழித்தெழுந்து கொங்கு ...மண்டலத்தில் இரவு பகல் பாராது உழைத்துவந்த புளியம்பட்டியின் காவல் ...தெய்வத்தின் விழிகள் மூடிக்கொண்டன!

பெரியவர் சாமிநாதன் நமது பக்கம் திரும்பிப் பார்க்கமாட்டாரா? என்று ...ஏங்கும் கூட்டம் எப்போதும் சூழ்ந்திருக்க, ஒரு மன்னனைப்போல அமர்ந்திருந்த ...பிள்ளை என் மனக்கண்ணால் பார்க்கின்றேன். கொண்டவனின் குறிப்பறிந்து, ...அது மனம் போலவே தன்னையும் பொது வாழ்க்கைக்கு ஒப்படைத்துக் கொண்ட ...த்துரசி எனது பாசத்திற்குரிய 'தங்கை சம்பூரணத்தின்' அயராத உழைப்பையும், ...தாங்கியாகவே தன்னைப் பக்குவப்படுத்திக்கொண்ட தியாக உள்ளத்தையும் ...என்னால் மறக்க முடியாது.

இல்லறம் என்ற நல்லறம் எனது தங்கையின் வாழ்வில் இன்பமும், துன்பமும் ...இரவும் பகலும் போல அமைந்துவிட்டது. கலகலப்பான காதல் வாழ்க்கை பொது ...வாழ்வில் உள்ளவர்களுக்கு அமைவதில்லை!

...எனவே இராணியும், வெற்றிச்செல்வியும், மணிமேகலையும், அன்பும் எனக் ...கடமையினால் மக்கள் பிறந்தார்கள் என்பது தான் உண்மையாகும். ஒரு காலகட்டத்தில் ...அண்ணன் சாமிநாதனிடம், தங்கை சம்பூரணம், டெல்லிக்கு ஒரு மடல் எழுதியுள்ளார். ...எம்.பி.-இன் சுற்றுப்பயணத்திற்கு, தொகுதியில் கழகத்தவர் தேதி கேட்பது ...போல நமக்கும் ஒரு தேதி வேண்டும். நமது குடும்பம், நமது மக்கள் ஆகியவற்றைப் ...பற்றிப் பேச வேண்டும் என்று எழுதிய காலத்தை எண்ணிப்பார்க்கின்றேன்.

கொங்கு மண்டலம் மகத்தான ஒரு சிற்றரசனை இழந்து விட்டது. புளியம்பட்டி ...ஒரு காவல் தெய்வத்தை இழந்து விட்டது? நான் 'தாயன்பு' கொண்ட என் ...அண்ணனை இழந்துவிட்டேன். அண்ணாவின் நினைவு நாளில் திராவிட இயக்கத்தின் ...தோழர்களே - தாய்மரத்தை மறந்துவிடாதீர்கள் என்று இரு கரம் கூப்பி ...வேண்டுகின்றேன்.

...புதிய தலைமுறையே எழுந்துவா! தமிழ்நாடு உன்கையில் இருக்கின்றது என்று ...கூப்பி வேண்டுகிறேன்...


ஓ. ஆறுமுகசாமி
செந்தில் குருப்ஸ்
கோவை



அண்ணன்

அண்ணா, என்று நான் அன்புடனும், உரிமையுடனும், அழைக்கும் திரு. சாமிநாதன் அவர்களை எனக்குக் கடந்த நாற்பது ஆண்டுகாலமாகப் பழக்கம். பழகுவதற்கு நல்ல மனிதராகவும், அரசியலில் நேர்மையாளராகவும், கல்விப் பணிகளில் நாட்டம் உள்ளவராகவும் வாழ்ந்தவர். திருவள்ளுவர் பெயரிலே அய்யன் திருவள்ளுவர் கல்லூரியையும் திறம்படச் செயல்படுத்தி வந்தவர். அவருடைய நட்பு, எனக்கு மிகுந்த நம்பிக்கையையும், தைரியத்தையும் அளித்தது. அவர் வாழ்ந்த காலத்தில், நானும் அவருடன் வாழ்ந்ததை மிகவும் பெருமையாகவும், கௌரவமாகவும் எண்ணுகிறேன். அண்ணாரது பிரிவு, எனக்கு மட்டுமல்லாமல் அவருடைய குடும்பத்தாருக்கும், புன்செய்ப் புளியம்பட்டிப் பகுதிவாழ் மக்களுக்கும் மிகுந்த இழப்பை ஏற்படுத்தியுள்ளது என்பதே உண்மை! அவருடைய இனிய ஆன்மா எல்லாருக்கும் என்றும் நல்வாழ்த்துக்களை நல்கட்டும்! அவர் வழியில் கல்விப் பணியும், அரசியல் பணியும் தொடர மனமார அவர் குடும்பத்ினரை வாழ்த்துகிறேன்.

வளர்க பெரியவரின் நீடுபுகழ்!



அரசாங்க அலுவலகங்களில் இருந்த கடவுள் படங்களை அகற்ற அண்ணா உத்தரவு போட்டார். மூட நம்பிக்கையில்லை என்பதைக் காட்டிக் கொண்டார். சுயமரியாதைத் திருமணத்தைச் சட்டமாக்கினார் - அதில் கடவுள், மதம் புகக்கூடாது என்பதற்கு வழி செய்தார். அவர் சிறந்த பகுத்தறிவுவாதி. அம்மேதை மறைந்த அன்று முப்பது இலட்சம் பேர் பின் தொடர்ந்தமை உலகில் எத்தலைவனுக்கும் இல்லாத சிறப்பு. இந்த நாட்டு மக்களை அவர் அவ்வளவு தூரத்திற்குப் பண்படுத்திவிட்டார் என்பதையே காட்டுகிறது.

- பெரியார்

P.S. ரங்கசாமி
பிரஸ்ஆர் சில்க் சாரீஸ்
கிராஸ்கட் ரோடு, கோவை



அவருக்கு நிகர் அவரே!

இந்தப் பூமியில் வாழும் மனிதர்கள் அனைவரும் தாங்கள் விருது வாங்கவேண்டும், பட்டம் பெற்றுப் புகழின் உச்சிக்குச் செல்ல வேண்டும், பொது மக்களின் இதயத்தில் நீங்கா இடம் பெற்று அவர்களைத் தங்கள் கட்டுக்குள் வைத்து ஆட்டிப்படைக்க வேண்டும் என்ற எண்ணத்தில்தான் தீவிரமாகப் பாடுபடுவார்கள். ஆனால், எங்களின் **அன்பிற்கும், பாசத்திற்கும், மரியாதைக்கும்** உரியவரும், மக்கள் அனைவராலும் **'சாதனைச் செம்மல்'** என்று அழைக்கும் அடைமொழிக்குச் சொந்தக்காரருமான பெரியவர் பி.ஏ.எஸ். அவர்கள் பிறவியிலேயே தனக்கென வாழாமல் பிறர்க்கென வாழ்ந்து, மெழுகுவர்த்தியைப் போல் தன்னை உருக்கிப் பிறர்க்கு ஒளி கொடுத்து வாழ்ந்து மறைந்தவர். அதனால்தான் மக்களிடத்தில் நீங்காத ஒளிவடிவமாக வாழ்ந்து வருகிறார்.

எனது சொந்த ஊரான சின்னபருசபாளையம், வேளாண்மை சூழ்ந்த உழவர்கட்கு மத்தியில், அறுபது வீடுகளைக் கொண்ட நெசவுத் தொழில் செய்து பிழைப்பு நடத்தும் மக்களைக் கொண்டது. தொடக்கத்தில் - அதாவது என்னுடைய 15-ஆவது அகவையில் யானும் என் நண்பர்கள் சிலரும் சேர்ந்து அடிக்கடி மாலை நேரச் சந்திப்புகளை மேற்கொள்வோம். அப்போது எங்களிடையே தோன்றியது, ஒரு புதிய இளைஞர் சங்கத்தை ஏற்படுத்திக் கிராமத்திற்குத் தேவையான பாதை, மின்சாரம், தண்ணீர் மற்றும் இதர வசதிகளை நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்டு செய்து தரும்படி கேட்பது என்று ஒருமையாக நினைத்தோம்.

அதன் பொருட்டு **1957-ஆம் ஆண்டு** இந்தச் சங்கத்தை எங்கள் கிராமத்திலே தொடங்கத் திட்டமிட்டு, அதற்கு 'இளைஞர் முன்னேற்றச் சங்கம்' என்ற பெயரும் இட்டோம். இதைத் தொடங்கி வைப்பதற்கும் எங்களைப் போன்ற வாலிபர்தான் வரவேண்டும் என்று நினைத்தபொழுது, எனது நண்பர் திரு. R. பாண்டுரங்கன் சிறிதும்யோசிக்காமல் **அண்ணன்** திரு.பி.ஏ.எஸ். அவர்களைக் குறிப்பிட்டார். அனைவரும் ஒப்புக்கொண்டு நேரில் சந்தித்துப் பேசப் புளியம்பட்டி பி.ஏ.எஸ். இல்லம் சென்றோம்.

குடும்பமே எங்களை மிகுந்த அன்புடனும், பாசத்துடனும் வரவேற்று இன்னும் என்நினைவில் நீங்காமல் இருக்கின்றது. ஒப்புக் கொண்ட அண்ணன் பி.ஏ.எஸ். அவர்கள், எங்கள் கிராமத்துச் சங்கத்தைக் தொடங்கி வைத்து, எங்கள் அனைவரையும் மிகுந்த மகிழ்ச்சி அடையச் செய்தார். அன்று முதல் எங்கள் கிராமத் தேவைகளைப் பூர்த்தி செய்வதாகட்டும், எங்கள் ஒவ்வொருவரின் குடும்ப நிகழ்ச்சிகளில் பங்கு கொள்வதாகட்டும் குறித்த நேரத்தில் வந்து ஆலோசனைகளை வழங்கி எங்களை ஆசுவாசப்படுத்தியதில் அவருக்கு நிகர் அவரே.


அண்ணன் பி.ஏ.எஸ். அவர்களின் துணைவியார் திருமதி. சம்பூர்ணம் சாமிநாதன் அவர்களும் கணவருக்கு எல்லாவகையிலும் உறுதுணையாக இருந்து அண்ணாரின் திட்டங்களையும், செயல்பாடுகளையும் அமைப்புகளையும், நடாத்தி வருவது தன்கணவர் மறைந்தாலும் அவரது சீரிய பணிகளைக் கைவிடாமல், இன்றும் தொடர்ச்சியாக நடாத்தி வருகிறார். அவருக்கு எனது பாராட்டுகளையும், வாழ்த்துக்களையும் உரித்தாக்குகின்றேன்.

அண்ணன் திரு. பி.ஏ.எஸ். நீடு புகழ் வாழ்க! வளர்க!





தமிழ்நாடு என்ற பெயரீட்டின் வரலாற்றை இன்றைய தலைமுறை அறியாதிருந்தாலும் அது தமிழக வரலாற்றில் எளிதாக நிகழ்ந்த ஒன்றன்று. ஏனெனில் சங்ககாலம் முதல் தமிழ் பேசும் இந்நிலப்பகுதி சேர நாடு, சோழ நாடு, பாண்டிய நாடு பிற குறுநில நாடுகளாகச் சங்க காலத்திலும், பின்னர் அப்பகுதிகள் பல்லவர் ஆட்சிக் காலத்திலும், பல்லவருக்குப் பின்பு சோழர் ஆட்சிக் காலத்திலும், சோழர் ஆட்சிக்குப் பின்பு பாண்டியர் ஆட்சிக் காலத்திலும், பாண்டியர் ஆட்சிக்குப் பின்பு நாயக்கர் ஆட்சிக் காலத்திலும், நாயக்கருக்குப் பின்பும் சமகாலத்தும் மராத்தியர் ஆட்சிக் காலத்திலும், ஐரோப்பியர் வரவு நேர்ந்த பின்பு அவர்கள் ஆட்சிக் காலத்திலும் தமிழ்நாடு என்ற ஒரு பெயரை எய்தியது இல்லை. சுதந்திரம் பெற்ற பின்னும் தமிழ்நாடு எனப் பெயரிடும் முயற்சியை ஆளும் காங்கிரஸ் கட்சி எதிர்த்தே வந்தது. ஆக, தமிழ் பேசும் மக்கள் நிறைந்திருக்கும் ஒரு குறிப்பிட்ட நிலப்பகுதி முதன்முதலாக தமிழ்நாடு எனப் பெயர் எய்தக் காரணமாக இருந்தவர் அறிஞர் **அண்ணாதான்**. இது மிகப் பெரும் வரலாற்று நிகழ்ச்சி.



விஜயா இளங்கோவன்
சென்னை



செயல்வீரர் பி.ஏ.எஸ். அவர்கள்


என் மாமா பேரறிஞர் அண்ணா அவர்களுடன் திரு. பி.ஏ.எஸ். அவர்கள் பழகிய நேரத்தில், நாங்களும் உடன் இருந்து பார்த்தவர்கள் என்ற நிலையில் எனக்குத் தெரிந்த நினைவுகளை எழுதுகிறேன்.

காஞ்சிபுரம் இல்லத்தில் நாங்கள் இருந்த காலகட்டங்களில் (சென்னை வரும் பொழுதெல்லாம்) இயக்கப் பணிகள் பொருட்டு, அண்ணா அவர்களைச் சந்திக்கப் பி.ஏ.எஸ். அவர்கள் வருவார். தொடக்கக் காலத்திலிருந்தே பி.ஏ.எஸ். அவர்களை எங்கள் குடும்பத்தில் ஒருவராகவே மாமா (அண்ணா) அவர்கள் வைத்திருந்தார். அதேபோல் எங்கள் வீட்டில் எல்லா நிகழ்வுகளிலும், பி.ஏ.எஸ். அவர்கள் கலந்து கொள்வார்கள். அவர்கள் குடும்ப நிகழ்வுகளிலும் நாங்கள் எங்கள் இல்லத்தின் சார்பில் கலந்து கொள்வோம். இதுவே இன்று வரையுள்ள நடைமுறை.

மாமா (அண்ணா) அவர்கள் சுற்றுப்பயணம் செல்லும் பொழுது, சிலசமயம் என் கணவர் இளங்கோவும் உடன் செல்வார். கோவை மாவட்டம், ஈரோடுப் பகுதியில் பி.ஏ.எஸ். அவர்கள் இல்லத்தில் தங்கித்தான் சுற்றுப்பயணப் பகுதிகளுக்குச் சென்று வருவார். இங்குள்ள நிகழ்ச்சிகள் விபரம் பற்றி இங்கு வந்து பேசும்பொழுது நானும் கேட்கும் வாய்ப்பினைப் பெற்றுள்ளேன்.

மாமா (அண்ணா) அவர்களோடு, தொடங்கிய இனிய உறவு, இன்றும் தொடர்ந்து வருகிறது. மாமா (அண்ணா) அவர்கள் இயற்கை எய்திய பிறகும் எங்கள் குடும்பத்தார் நடைமுறையில் மாற்றமில்லை. என் கணவர் திரு. இளங்கோவன் அவர்கள், உடல்நலம் குன்றிச் சரிவர இயங்க முடியாமல் இருந்த பொழுது, திரு.பி.ஏ.எஸ். அவர்கள் ஆறுதல் சொல்லிச் சென்று உள்ளார். புளியம்பட்டி செல்லவும் விரும்புவார். முடியாத நிலையிலும் அழைத்துச் செல்லவேண்டும் என்றும் சொல்லுவார்.

சென்றாண்டு நடந்த பி.ஏ.எஸ். பேரன் திருமணத்திலும் நாங்கள் அவசியம் வரவேண்டும் என்று விரும்பினார். அவரால் வரமுடியாத நிலையில் என்னை அனுப்பி வைத்தார். என் மூத்தார் திரு. பரிமளம் மகன்



கொண்டார்கள்.
செல்வன் மணிவண்ணன் மனைவியுடன் கலந்து செய்தியறிந்து என் கணவ
திரு. பி.ஏ.எஸ். அவர்கள் இயற்கை எய்திய மனைவி சம்பூரணத்திற்கு
என்னைப் புளியம்பட்டிக்கு. அண்ணாபி.ஏ.எஸ். நானும் புளியம்பட்டி வந்து
குழந்தைகட்கும் ஆறுதல் சொல்ல அனுப்பிவைத்தார். பார்த்துச் சென்றேன். சமீபத்தில்
திருமதி. சம்பூரணம் சாமிநாதன் அவர்களைப் செய்தியைக் கேட்டுச் சம்பூரணம் சென்னைக்கு
இயற்கை எய்திய என் கணவரின் சென்றார்கள்.
வந்து இரங்கல் தெரிவித்துச் சென்றார்கள்.

"இந்த இயக்கம் ஆலமலரம் போன்றது. அனைவரையும் ஒருதாய் பெ
முடியாது என்ற காரணத்தால், தனித்தனித் தாயால் ஈன்றெடுக்கப்பட்ட குடும்ப
பாசமிக்க இயக்கம்" என்று அண்ணா அவர்கள் குறிப்பிட்டதற்கு ஏற்பத் தகை
வாழ்நாள்களை அர்ப்பணித்த திரு. பி.ஏ.எஸ். அவர்கள், **அண்ணா** சொல்லுக்கு
எடுத்துக்காட்டாகத் திகழ்ந்தார். இன்றும், என்றும் எங்கள் காலம் உள்ளவரை
இந்தக் குடும்பப் பாச உணர்வு நீடிக்கும். இதுவே எங்கள் குடும்பம் சார்பில்
அவருக்குச் செலுத்தும் அஞ்சலியாகும்.



தமிழ்;
ரத்தத்தோடு
ரத்தமாகக்
கலந்துவிட்ட மொழி!
நாம்தான் அதை
மறந்தோமே தவிர,
தமிழ் நம்மை
மறக்கவில்லை!

- அண்ணா

அறிவாலும்
ஆற்றலாலும்
ஆகாத காரியம்
இல்லை.
அறிவும் ஆற்றலும்
சேர்ந்து உழைத்தால்
வெற்றி
நிச்சயம்!


- அண்ணா

கலை
என்பது
நெறிமுறை, வீரம்,
ஒழுக்கம், கற்பு,
காதல் என்னும்
பண்புகளைத்
தரக்கூடியதாக
இருத்தல் வேண்டும்.

- அண்ணா

சட்டம் ஓர் இருட்டறை;
அதிலே வக்கீலின் வாதம் ஒரு விளக்கு,
அந்தப் பிரகாசமான விளக்கை
ஏழையால் பெற முடியவில்லை!

- அண்ணா



[illegible] வெள்ளியங்கிரி
[illegible]
[illegible]



[illegible]வல் பி.ஏ.எஸ். அவர்களின் நீங்கா நினைவுகள்

[illegible] 'பி.ஏ.எஸ்.' அவர்களின் இளமைக்காலம்

[illegible] வயதிலேயே என் சின்னம்மா (பி.ஏ.எஸ். -இன் தாயார்) [illegible] குறைவால் இயற்கை எய்தினார். அப்பொழுது தம்பி பி.ஏ.எஸ். [illegible] அகவை 12, தங்கை மாணிக்கத்திற்கு அகவை 5 ஆகும்.

என் சிற்றப்பா **ஆறுமுக முதலியார்** பலர் எடுத்துக் கூறியும், மறுமணம் [illegible] மறுத்துவிட்டார். பி.ஏ.எஸ்.-இன் எதிர்வீடு எங்களுடையது. [illegible]டன் என் மூத்த அக்கா 5 குழந்தைகளுடன் இருந்த காரணத்தால், [illegible] மாணிக்கத்தை எங்கள் குழந்தையாகவே பாதுகாத்து வந்தோம். என் [illegible] சந்தை வணிகத்திற்குப் போய்விடுவர்.

[illegible] பி.ஏ.எஸ். 15 அகவையிலேயே "பொதுநல விரும்பியாக" [illegible]. என் சிற்றப்பா ஆறுமுக முதலியார், உடல் நலக்குறைவு [illegible] என்னிடம், **"பி.ஏ.எஸ். - மாணிக்கம் ஆகிய இருவரையும் உன் [illegible] விட்டுச் செல்கிறேன். நீதான் பார்த்துக் கொள்ளவேண்டும்"** [illegible] என்னிடம் கூறிவிட்டு அவரும் இயற்கையெய்தினார்.

[illegible]

[illegible] பி.ஏ. சாமிநாதன் அவர்கள் கோவை செயின்ட் மைக்கேல் [illegible] பள்ளியிறுதி வகுப்பை முடித்தார்.

[illegible]

[illegible] படிக்கும்போதே தந்தை பெரியார் அவர்களால் [illegible] அவருடைய திராவிடக் கழகத்தில் தன்னை இணைத்துக் [illegible]. அப்போது பெரியாருடன் அறிஞர் அண்ணாதுரை, [illegible], க. அன்பழகன், இரா. செழியன், மதியழகன், சி.பி. சிற்றரசு, [illegible], பொன்னம்பலனார், ஆசைத்தம்பி, மு.கருணாநிதி, [illegible] இன்னும் பல முதன்மையானவர்கள் இணைந்து [illegible].

திராவிட முன்னேற்றக்கழகம்

1949-ல் திராவிட முன்னேற்றக் கழகம் உதயமானது. இதில் மூத்த தலைவர்கள் எல்லாம் சேர்ந்துகொண்டார்கள். அறிஞர் அண்ணா தமிழ்நாடு முழுவதும் பொதுக்கூட்டங்கள் போட்டு, தமது பேச்சாற்றலால் மக்களைக் கவர்ந்து கொண்டார்கள். அதுமட்டுமல்ல தன்னுடன் இணைந்த அத்துணை தலைவர்களையும் தனது பேச்சாற்றலால் மிகச் சிறந்த பேச்சாளர்களை உருவாக்கினார்கள். அவர்களைக் கொண்டு கிராமங்கள், நகரங்கள் மற்றும் எல்லா இடங்களிலும் கூட்டம் போட்டுப் பேசவைத்து மக்களை வெகுவிரைவாக திராவிட முன்னேற்றக் கழகத்தில் ஈர்ப்புக் கொள்ளச் செய்தார்.

திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைதல்

பி.ஏ.சாமிநாதன் அவர்கள், திரு. ஈ.வி.கே. சம்பத் அவர்கள் மூலம் திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைந்து, அறிஞர் அண்ணாவின் அன்புக்கு நேரடியாக பாத்திரம் ஆனார்கள்.

கட்சிப்பணி

திரு. பி.ஏ. சாமிநாதன் அவர்கள் தொடர்ந்து கட்சிப்பணியிலே தன்னை ஈடுபடுத்திக் கொண்டார்கள். திரு. பி.ஏ.எஸ். அவர்கள் புளியம்பட்டி மற்றும் சுற்று வட்டாரக் கிராமங்களில் எல்லாம் பொதுக்கூட்டங்கள் போட்டுத் திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பெரிய அளவிலே வளர்ச்சி பெறச் செய்தார்கள்.

பேரூராட்சித் தேர்தல்

பு. புளியம்பட்டியில் பேரூராட்சித் தேர்தல் வந்தது. அதில் திராவிட முன்னேற்றக் கழகத்தினர் போட்டியிட்டு 13 வார்டுகளிலும் வெற்றிபெற்றார்கள். பேரூராட்சித் தலைவராகத் திரு. பி.ஏ. சாமிநாதன் அவர்கள் தேர்ந்தெடுக்கப் பெற்றார்கள்.

திருமணம்

திரு. பி.ஏ. சாமிநாதன் அவர்களுக்கும் திருமதி. சம்பூர்ணம் அவர்களுக்கும் திரு.ஈ.வி.கே. சம்பத் அவர்கள் தலைமையில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

குடும்பவாழ்க்கை

திருமதி. சம்பூர்ணம் அவர்களும், திரு. பி.ஏ.எஸ். அவர்களும் ஒருவருக்கொருவர் ஒற்றுமையுடனும், பாசத்துடனும் இல்வாழ்க்கை நடத்தினார்கள். திருமதி. சம்பூர்ணம் திரு. பி.ஏ. சாமிநாதனை அனுசரித்துக் கழகப் பணிகளில் ஈடுபட்டு கொண்டு உறுதுணையாக இருந்தார்கள்.

சட்டமன்றத் தேர்தல்

1967-ல் சட்டமன்றத் தேர்தல் வந்தது. அதில் திராவிட முன்னேற்றக் கழகம் பெருவாரியான ஓட்டு வித்தியாசத்தில் காங்கிரஸ் வசம் இருந்த ஆட்சியைக் கைப்பற்றியது.



அறிஞர் அண்ணாவின் ஆட்சி

தமிழகத்தின் முதல்வராக அறிஞர் அண்ணா பொறுப்பு ஏற்றுக் கொண்டார்கள். திரு மு.கருணாநிதி பொதுப் பணித்துறை மந்திரியானார்.

நாடாளுமன்றத் தேர்தல்

நாடாளுமன்றத் தேர்தல் வந்தது. அறிஞர் அண்ணா அவர்கள் கோபி நாடாளுமன்றத் தொகுதிக்குத் திரு. பி.ஏ. சாமிநாதனை நிறுத்தினார்கள். அவரை எதிர்த்துக் காங்கிரஸ் சார்பில் போட்டியிட்ட திரு. சி. சுப்பிரமணியம் அவர்களைப் பெருவாரியான ஓட்டுகள் வேறுபாட்டுடன் திரு.பி.ஏ. சாமிநாதன் வெற்றி பெற்றார்.

புளியம்பட்டிக்குக் குடிநீர்

திரு. பி.ஏ. சாமிநாதன் அவர்கள் அறிஞர் அண்ணாவை அணுகிப் பவானிசாகர் நீர்த்தேக்கத்திலிருந்து புளியம்பட்டிக்குக் குடிநீர் கொண்டுவர அனுமதி பெற்றார்கள். குடிநீர் கொண்டு வரும் வேலைகளை மிக வேகமாகச் செய்தார்கள்.

அறிஞர் அண்ணா மறைவு

அறிஞர் அண்ணா அவர்கள் நோய்வாய்ப்பட்டு இயற்கை எய்தினார்கள். சுமார் 1½ ஆண்டுகள் தமிழகத்தைச் சிறப்பாக ஆட்சி செய்தார்கள்.

கலைஞர் கருணாநிதி முதல்வர் ஆதல்

அறிஞர் அண்ணா மறைவுக்குப் பிறகு கலைஞர் கருணாநிதி அவர்கள் முதல்வராகப் பொறுப்பேற்றார்.

புளியம்பட்டியில் செய்த சாதனை


புளியம்பட்டியில் எல்லாத் தேவைகளையும் கலைஞர் கருணாநிதியைக் கொண்டு செய்துமுடித்துக் கலைஞர் கருணாநிதியை அழைத்து வந்து புளியம்பட்டிக் குடிநீர்த் திட்டத்தைத் தொடங்கிவைத்தார். மக்கள் குடிநீர் பெற்றுப் பெரிதும் மகிழ்ச்சியடைந்தனர். இரண்டாம் குடிநீர்த்தொட்டியையும் திறந்து குடிநீர்த்தேவையை முழுமையாகப் பூர்த்தி செய்தார்கள்.

பேரூராட்சி மன்றக் கட்டடம்

புளியம்பட்டி பழைய சந்தைக்கடையைப் புளியம்பட்டிப் பேரூராட்சிக்குப் பெற்றுப் பேரூராட்சிக்குச் சொந்தக் கட்டடத்தை நகராட்சி அலுவலகம் போலவே கட்டினார். ஊராட்சிப் பகுதியில் வணிகவளாகங்கள் கட்டி வாடகைக்கு விட்டு ஊராட்சி வருமானத்தைப் பெருக்கினார்.

புளியம்பட்டிக்குச் செய்த பிறபணிகள்

புளியம்பட்டியில் திருமண மண்டபம் இல்லாததை அறிந்து, கலைஞர் பெயரில் திருமண மண்டபம் பெரிய அளவில் கட்டி மக்களுக்குப் பயன்படும்படி செய்தார்.



மேலும் அருள்மிகு காமாட்சியம்மன் கோவிலைப் பெரி''அளவில் கட்ட வழிபாட்டினைச் சிறக்கச் செய்தார். திராவிட முன்னேற்றக் கழகத்திற்குச் சொந்தமா கட்டிடமும் வாங்கிக் கொடுத்தார். காந்திநகரில் அரிசன மக்கள் பயன்பெறு பொருட்டுப் பி.ஏ.எஸ். அறக்கட்டளை மூலம் ஒரு திருமண மண்டபம் கட்டி கொடுத்தார். பி.ஏ.எஸ். அறக்கட்டளை மூலம் நலிந்த மாணவர்களுக்கும், வருவா குறைந்த மாணவர்களுக்கும் கல்வி உதவிகளைத் தொடர்ந்து செய்து வருகின்றா நோய் வாய்பட்டுள்ள நலிந்த மக்களுக்குப் பண உதவிசெய்து நோய்களை குணமாக்கினார்கள். மேலும், வசதி குறைந்த மக்களுக்குத் திருமணத்திற்குப் பண உதவிசெய்து, முன்னின்று திருமணத்தை நடத்தி வைத்தார்கள். இராமநாதபுரத்தில் ஆழ்நிலைக் கிணறு தோண்டி, மக்கள் குடிநீர்த்தேவையைப் பூர்த்தி செய்தார்கள் வாரச்சந்தையில் வரும் வருமானத்தில் ஒரு பகுதியை ஊராட்சிக்கு பெற்றுத்தந்தார்.

மாநில மாநாடு

ஒருங்கிணைந்த கோவை மாவட்டச் செயலாளராகத் திரு. பி.ஏ. சாமிநாதன் இருந்தபோது, கோவையில் 1975-ல் மாநில மாநாடு, நாடே வியக்கும்வண்ண நடத்திச் **'சாதனைச் செம்மல் சாமிநாதன்'** என்ற சிறப்பினையும் பெற்றார்.

கல்விப் பணிகள்


புளியம்பட்டி ஆண்கள் மேல்நிலைப் பள்ளிக்குத் தேவையான உதவிகளை செய்து கொடுத்தார். இராமநாதபுரத்தில் உள்ள பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு தன்னால் இயன்ற அளவில் உதவி செய்து கூடுதல் கட்டிடங்களைக் கட்டி கொடுத்தார். இன்னும் ஏராளமாக பி.ஏ. சாமிநாதன் அவர்கள் புளியம்பட்டி மக்களுக்கும், அருகில் உள்ள கிராம மக்களுக்கும், தன்னை நாடிவரு பொதுமக்களுக்கும் உதவிகளைச் செய்து, மக்கள் மனதில் இடம் பெற்றார்.

அன்புச் சகோதரி திருமதி. மாணிக்கம்

திருமதி. மாணிக்கம் அவர்கள், அவரின் தங்கையாவார். அவர், திரு. பி.ஏ.எஸ் அவர்களிடம் மிகுந்த பாசத்துடன் நடந்து கொண்டார்கள். திருமதி. சம்பூரண அவர்களிடமும் மிகவும் பரிவோடும் பாசத்தோடும் நடந்து கொண்டார்கள்.

எனக்குச் செய்த உதவி

எனக்கு 30 ஆண்டுகளுக்கு முன் உடல் நிலை பாதிக்கப்பட்டது. சென்னையில் உள்ள ரங்கபாஷ்யம் ஆஸ்பத்திரியில் என்னைச் சேர்த்து முழுமையாகக் கவனித்து கொண்டார்கள். எனக்கு இரண்டு பெரிய அறுவைகள் செய்த பிறகு டாக்டர்க கைவிட்டு விட்டார்கள். உடனே திரு. பி.ஏ. சாமிநாதன் அவர்கள் கலைஞ அவர்களை அணுகி, கலைஞரை மருத்துவமனைக்கு அழைத்து வந்து மருத்துவரிட சொல்ல வைத்து மூன்றாவது அறுவைக்கு ஆவன செய்தார்கள்.



...சுமார் ... நடந்தது. உடல் ... இருந்தார்கள். அறுவை ... குணமாகி முடிந்த பிறகு கலைஞர் கருணாநிதி அவர்களுக்கு நன்றி தெரிவித்துவிட்டுப் புளியம்பட்டி வந்தோம். கலைஞர் அவர்கள் எனக்குப் 'பால்' கொடுத்து அனுப்பி வைத்தார்கள்.

முப்பது ஆண்டுகள் ஓடி விட்டன. இது தவிர ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் எனக்கு ஏற்பட்ட உடல்நலக் குறைவுக்குத் தக்கவாறு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று டாக்டரிடம் காட்டி, எனக்கு உதவி செய்துள்ளார்கள்.

திரு பி.ஏ. சாமிநாதன் உடல் நிலை

சுமார் பத்து அல்லது பனிரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் புளியம்பட்டி நகராட்சித் தேர்தலில் வாக்குச் சேகரிக்கச் சென்றபோது தெருவில் இடறி விழுந்து காலில் அறுவை செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது. கோவை மற்றும் சென்னை மருத்துவமனையில் சிகிச்சை பெற்று உடல் நலமடைந்தார். அதன்பின் சுமார் பத்து ஆண்டுகள் மக்களுக்காகச் செயல்பட்டு வந்தார்.

உடல்நிலை பாதிப்பும், மறைவும்


திடீரென உடல் நிலை பாதிக்கப்பட்டது. மீண்டும் சென்னை மற்றும் கோவை மருத்துவமனைகளில் மருத்துவம் பெற்றார். கோவை மெடிக்கல் சென்டரில் சிகிச்சை செய்து பலன்பெற்று, கோபி நண்பர் செந்தில் டாக்டர் ஆஸ்பத்திரிக்கு வெள்ளிக்கிழமை சென்றார். **22-01-2012 அன்று சனிக்கிழமை பகல் 1 மணியளவில் திரு பி.ஏ. சாமிநாதன் அவர்கள் உயிர்பிரிந்தது.**

மக்கள் அஞ்சலி

அன்று மதியம் அவர் உடல் புளியம்பட்டி அவர்தம் இல்லத்திற்குக் கொண்டு வரப்பட்டது. மக்கள் கூட்டம் கூட்டமாக வந்து அவர் உடலுக்கு அஞ்சலி செலுத்தினார்கள். ஞாயிறு மதியம் வரை மக்கள் சாரைசாரையாக வந்து அஞ்சலி செலுத்தினார்கள். **முன்னாள் அமைச்சர் கண்ணப்பன்,** சட்டமன்ற உறுப்பினர்கள், பொதுமக்கள் என எல்லாரும் கட்சிவேறுபாடின்றிக் கலந்து, அஞ்சலி செலுத்தினர். அன்று மாலை அவர் உடல் புளியம்பட்டி முதன்மையான வீதிகளில் கொண்டு செல்லப்பட்டு, அவருடைய தோட்டத்தில் அடக்கம் செய்யப்பட்டது. எல்லாக் கட்சித் தலைவர்களும், அமைச்சர்களும், சட்டமன்ற உறுப்பினர்களும் இரங்கல் கூட்டத்தில் 'சாதனைச் செம்மலின்' சாதனைகளைப் பற்றிக் கூறினார்கள்.

வேண்டுதல்

திரு. பி.ஏ. சாமிநாதன் அவர்கள் காலம் முடிந்தது. அவர் ஆன்மா சாந்தி அடைய இயற்கை அன்னையை வேண்டுகிறேன்.



சம்பா என்கிற
எஸ்.ஆர். கிருட்டிணமூர்த்தி
சென்னை



சாமண்ணன் ஒரு சகாப்தம்

தூங்கிக் கிடந்த தமிழர்களை எல்லாம் சாட்டை அடி கொடுத்துத் தட்டி எழுப்பியவர்தான் தந்தை பெரியார்!

சாதியும் மதமும் சனாதனமும் சாத்திரக் குப்பைகளும் கோலோச்சிக் கொண்டிருக்க, அறியாமை இருளில் மூழ்கிக் கிடந்தது தமிழகம்!

இந்த மண்ணுக்குரியோர் ஏமாளிகளாகவும், கோமாளிகளாகவும் எடுப்பார் கைப்பிள்ளைகளாகவுமே இருந்து வந்தனர்.

'வெந்ததைத் தின்பது - விதி வந்தால் சாவது' என்பதைத் தவிர எம் மக்களுக்கு வேறெதுவுமே தெரியாத நிலை!

'சுயசிந்தனை' என்பதையும் 'துணிவு' என்பதையும் அறவே இழந்திருந்தினர். தன்மானம் என்பது கிஞ்சிற்றும் இல்லை; இனமானம் என்றால் என்னவென்றே தெரியவில்லை. உழைக்கும் மக்களாகவே இருந்து ஓடாகி உருக்குலைந்து போயினர்.


ஏன்? எதற்கு? எப்படி? என்ற கேள்விகளைக் கேட்பதற்கே இவர்களுக்குத் தயக்கம்! கூச்சம்! வெட்கம்! 'கடவுள் கோபத்திற்கு ஆளாக நேரிடுமே' என்ற அச்சம்.

தயக்கம் காட்டாமல், கூச்சம் கொள்ளாமல், அச்சம் சிறிதுமின்றி ஈரோட்டில் ஒரு சிங்கம் பிடரியைச் சிலிர்த்து நின்று, பெரு முழக்கமிட்டுப் புறப்பட்டது. அந்த முழக்கம் தமிழகத்தின் மூலை முடுக்கெல்லாம் எதிரொலித்துக் கிளம்பிற்று.

வீர இளைஞர் பலர் அந்தச் சிங்கத்தின் பின்னே அணிவகுத்தனர். நாளுக்கு நாள் அப்படை கருஞ்சட்டைப் படையெனக் கடலாய் விரிந்தது. அறிஞர் அண்ணா தலைமைத் தளபதி ஆனார்.

அண்ணாவின் பேச்சும் எழுத்தும் ஆணித்தரமான வாதங்களும் மேலும் ஆயிரம் ஆயிரம் இளைஞர்களை அணிவகுக்கச் செய்தது.

இந்தப் பெரும்படை எந்த நாட்டையும் கைப்பற்றப் புறப்பட்ட பெரும்படை அன்று; எந்த மக்களையும் அடிமையாக்கப் புறப்பட்ட



...படை; ... எழுந்து சென்ற ... தப் புறப்பட்ட ... கொள்ளச் செய்யப் புறப்பட்ட தூசிப்படை. இந்தப் பெரும்படையிலே ... தம்மையும் ஒருவனாக இணைத்துக் கொண்டால், நாளைக்கு ஆட்சிக்கு ... அமைச்சர் ஆகலாம்; வசதிகளைப் பெருக்கிக் கொள்ளலாம்; ... அனுபவிக்கலாம் என்ற நோக்கம் எள்ளின் முனை அளவுகூட ... முழுக்க முழுக்கத் தமிழினம், தமிழ்மொழி, தமிழ்நாடு என்ற நோக்கையே ...ளாகக் கொண்டது என்பதில் கொஞ்சமேனும் ஐயமே இல்லை.

இப்படிப் பெரியாரால் தொடங்கப் பெற்று, அண்ணாவால் வழி நடத்தப் ... பெரும் படையில் தன்னல நோக்கம் சிறிதுமின்றிப் பொதுநல நோக்குடன் ...மையும் ஒரு போர் வீரனாக இணைத்துக் கொண்டு தொண்டாற்றிய தூயவர்தான் ... அண்ணன் பெரியவர் பி.ஏ.எஸ். அவர்கள்.

அண்ணாவின் தம்பியரில் ஒருவராக, அவரது பெரும்படையில் ஒரு போர் ...னாக என்றைக்குத் தம்மை இணைத்துக் கொண்டாரோ அன்று தொடங்கி இறுதி ...வரை, **கொண்ட கொள்கையில் மாறாதவராகத் தி.மு.க என்ற அந்த** ...எழுத்திற்கு **உரியவராகவே வாழ்ந்து வந்தார்.**

காற்று வீசும் திசையில் எல்லாம் கப்பலைச் செலுத்தி, வணிகம் செய்து, வயிறு ...ப்பது இன்றைக்கு நம்மவர்களுக்குக் கைவந்த கலையாகி விட்டது. ஆனால், ...அண்ணன் பி.ஏ.எஸ். அவர்கள் தாம் கண்டதும் கொண்டதும் தி.மு.க. தான். ...அண்ணன், **அண்ணாவிற்குப் பின் கலைஞர்** வேறு எந்தச் சீமானையோ ...சீமானையோ அவர் தலைவராக ஏற்றுக் கொள்ளத் துணியவே இல்லை.

அவரது கொள்கைப் பிடிப்பு ஆழமானது; அழுத்தமானது. தமிழின ...ஏற்றம் என்ற ஒன்றையே கொள்கையாகக் கொண்டவர்கள் இப்படித்தான் ...ப்பர் என்பதற்கு **அண்ணன் பி.ஏ.எஸ்.** அவர்கள் சிறந்த எடுத்துக்காட்டு.

எல்லாரிடத்திலும் இனிமையாகப் பேசுவார். வேண்டியவர், வேண்டாதவர் ...ற வேறுபாடே அவரிடத்தில் இருந்ததில்லை. விருந்து போற்றுவதில் அவருக்கு ... அவரே. அவரை நாடிச் செல்லும் எவரையும் வெறுக்கமாட்டார்; வேண்டா ...வெறுப்பாகப் பேசமாட்டார். வேண்டிய உதவிகளைச் செய்தே வழியனுப்பி ...வைப்பார். ஏழை பாழை என்ற இளக்காரம் அவரிடத்தில் ஏற்பட்டதில்லை. ...படைத்த செல்வர் என்பதற்காகப் பணிந்து தணிந்து, குனிந்து பேசுவதும் ...த்தில் இல்லாத பண்பு. எல்லாரையும் சம நோக்கில், சம அளவில் பார்ப்பது ... பழக்கம். **மக்கள் செல்வாக்கு என்ற மாபெரும் சொத்தைக் குவித்தவர்** என ... குறிப்பிடுவதில் **தவறில்லை.** புன்செய்ப் புளியம்பட்டி அல்லது ...ந்த கோவை மாவட்டம் முழுவதுமே அவரது பெயரைத் தெரியாத ... காண்பது இயலாது.

அவருக்கும் எஸ்.ஆர். கிருட்டிணமூர்த்தி என்ற எனக்கும் நீண்ட காலமாக தொடர்பு - நட்பு இருந்தது. எப்பொழுது தோன்றியது? - எப்படித் தோன்றியது? எவ்விடத்தில் தோன்றியது? - யாரால் தோன்றியது? என்பதை இப்போது என்னால் அறுதியிட்டுக் கூற முடியவில்லை. வயது தந்த மறதியே காரணம். ஆனால் அன்று தொடங்கிய எங்கள் நட்பு இறுதிவரை பசுமை மாறாமலே இருந்து வந்தது.

என்ன கிருஷ்ணமூர்த்தி? எப்படி இருக்கிறாய்? சாப்பிடு! என்றுதான் என்னைப் பார்த்த அவரது முதல் வார்த்தைகள் இருக்கும். என்மீது மிகுந்த பரிவு பற்றும் வைத்திருந்தவர் அவர். சென்னை வருகின்றபோது, யாருக்குத் தகவல் சொல்கிறாரோ இல்லையோ எனக்கு முதலிலேயே தெரிவித்து விடுவார். நாங்கள் எல்லாம் அவரைச் சாமண்ணா என்றுதான் அழைப்போம்.

அந்தச் சாமண்ணன் இன்று இல்லாமை என்னுள் குருதிக் கண்ணீர் கொப்பளித்துக் கிளம்புகிறது.


ஒருங்கிணைந்த கோவை மாவட்டச் செயலாளராக அவர் இருந்தபோது 1975-இல் ஐந்தாவது மாநில மாநாடு கோவையில் நடைபெற்றது. அப்போது மாநாட்டின் முக்கிய பொறுப்புக்களை என்னிடமும், அலி மெடிக்கல்ஸ் உரிமையாளர் திரு. அலி அவர்களிடமும் ஒப்படைத்திருந்தார். நான் இரண்டு மாதங்கள் மாநாட்டு அலுவலகத்திலேயே தங்கி இருந்து அவரிட்ட பணிகளை செம்மையுறச் செய்து முடித்தேன்.

தொண்டர்களை ஊக்குவிப்பதிலும், அவர்களிடத்தில் வேலை வாங்குவதிலும் சாமண்ணன் மிகவும் திறமையானவர் என்றே சொல்ல வேண்டும். வேலை வாங்குவதோடு விட்டுவிடமாட்டார். அவர்களது குறைகளை அக்கறையோடு கேட்டு ஒரு தாயைப் போல நீக்கம் செய்வதிலும் அவர் வல்லவர்! நல்லவர்!

இந்த நேரத்தில் எனக்கு மனக்குறை ஒன்று இருக்கிறது. அதை வெளிப்படுத்தாமலும் இருக்க இயலவில்லை. அந்த மனக்குறை என்பது என் தன்னலத்தின் பாற்பட்டதில்லை. கழகத்தின் நலனை உள்ளடக்கியதே ஆகும். ஆதலால், அதனை வெளிப்படுத்துவதிலும் தவறில்லை.

விருப்பு வெறுப்பின்றிக் கணக்கிட்டுப் பார்த்தால் ஒருங்கிணைந்த கோவை மாவட்டத்தைப் பொறுத்த அளவில் கழகத்தின் பலம் சற்றுக் குறைந்திருப்பதை ஒத்துக் கொள்ளத்தான் வேண்டும். இளைஞர்கள் பலர் இடம் மாறித் தடம் புரண்டு சென்று விட்டனர்; சென்று கொண்டிருக்கின்றனர். கழகத்தில் இருப்பவர்களும் வேதனைத் தீயில் வெந்து மூழ்குகின்றனர்.

மறைந்த எஸ்.ஏ. ராசமாணிக்கம், உடுமலை நாராயணன், சாமண்ணன் ஆகியோருக்குப் பின்னர் மாவட்டச் செயலாளர்களாக வந்தவர்கள் தொண்டர்களை மதிப்பதிலிருந்தும் அரவணைத்துச் செல்வதிலிருந்தும் தவறி விட்டார்கள் என்று சொல்லத் தோன்றுகிறது. இந்தத் தவறுதலே கழகத்தைப் பலவீனமாக்கி விட்



...விட்டது. ... சொல்ல வேண்டிய

... நலத்தைத் துறந்து, தமிழர் நலத்தையே பெரிதாக எண்ணிப் ... உறுதியாக மக்கள் நெஞ்சில் நிலையான இடத்தைப் பெற முடியும். ... புகழுக்கு உரிய இடமாகும். இந்தப் புகழே மனிதன் இறந்தும் ... நிற்கக் கூடியது. வள்ளுவர் இப்படித்தான் கூறுகிறார்.

... வாழ்ந்து காட்டி இருக்கிறார். புதிய தடம் பதித்திருக்கிறார். ... கட்டிக் காத்திருக்கிறார். அவர் ஒரு வழிகாட்டி; வாழ்க்கைச் சித்தர். இனி ... அவர் ஒரு பாடம். அவருக்குச் செலுத்தும் அஞ்சலி என்பது அவர் வழி ... கழகத்தைக் கட்டுக் கோப்பாகக் கட்டிக் காப்பதுவே ஆகும்.

... சாமண்ணன் தனி மனிதருமல்லர்; சாதாரணமானவரும் அல்லர். அவர் ... விருட்சம்! கடைசிக் கழகத் தொண்டன் இருக்கும் வரையில் அவரது புகழ் ...

... அவர் ஒரு சகாப்தம்! வாழ்க சாமண்ணனின் புகழ்!



... டெலிபோனும்
... மின்சாரமும்
... உண்டதால் வந்த
... அல்ல.
... அடி எடுத்துக் கொடுத்ததால்
... அற்புதங்களுமல்ல;
... அறிவாளிகளின்
... விளைந்த
... பொருள்கள் அவை.

- அண்ணா

அஞ்சாநெஞ்சு படைத்த இலட்சியவாதிகள்தாம் ஒரு நாட்டிற்குக் கிடைக்கக்கூடிய ஒப்பற்ற செல்வங்கள்.

ஏனெனில், பணம் வெறும் இரும்புப் பெட்டியில்தான் தூங்கும். ஆனால் இந்த இலட்சியவாதிகளோ மக்களின் இதயப் பெட்டிகள் தோறும் நடமாடுவார்கள்.

- அண்ணா

கட்டிடத்திற்குச் செங்கல்போல
வாழ்க்கை முன்னேற்றத்திற்குப்
படிப்புத் தேவை; திறமை தேவை; தேர்ச்சி தேவை!

- அண்ணா

கருப்பூர் மு. அண்ணாமலை
சென்னை



தூய தொண்டர்

'அரசியல் என்பது சூதாட்டம்' - கேள்விப்பட்டிருக்கிறோம். 'அரசியல் என்பது சாக்கடை' - படித்திருக்கிறோம். 'அரசியல் என்பது அயோக்கியர்களின் புகலிடம்' - எனச் சொல்வதை அறிந்திருக்கிறோம். ஆனால் இன்றைக்குத் தான் 'அரசியல் என்பது வியாபாரம்' என்பதைக் கண்கூடாகப் பார்த்து வருகிறோம்.

ஒரு பங்கு முதலீட்டில் ஒன்பது பங்கு இலாபம் பார்க்கும் தந்திரசாலிகள் ஆகிவிட்டனர் அரசியல்வாதிகள். என்ன செய்வது? இன்றைக்குத் தமிழகத்தின் தலையெழுத்து இப்படி ஆகிவிட்டது!

நாட்டு மக்களுக்குச் சேவை செய்திடவும், தொண்டாற்றிடவும் அறியாமையில் வீழ்ந்து கிடக்கும் அவர்களை அதிலிருந்து மீட்டெடுக்கவும் நாடு, மொழி, இனம் போன்றவற்றைக் காத்திடத் துடித்தெழுந்திடவும் இன்றைய அரசியல்வாதிகள் அக்கறை காட்டுவதில்லை; அதற்கான களமாக அரசியலும் இல்லை!

தன்பெண்டு, தன்பிள்ளை, தன்குடும்பம் வசதியாக வாழவும் பல்வேறு வகையான இன்பங்களை அனுபவிக்கவும், தமக்குக் கிடைத்த நல்வாய்ப்பாகவே அரசியலில் நுழைந்த அரசியல்வாதிகள் கருதுகின்றனர். எந்தக் கட்சிக்கு மவுசு அதிகம் இருக்கிறது என ஆரூடம் பார்த்து அந்தக் கட்சியில் திடீர் உறுப்பினராகி, பலப் பிரயோகம் செய்து, பதவிகளைப் பெற்று, வருமானத்தைச் சேர்த்துக் கொள்ளும் உத்திகள் பலவும் நம் அரசியல்வாதிகளுக்குக் கைவந்த கலையாகி விட்டது. இந்த 'உத்தமர்களைத்தான்' இன்றைய தினம் நாடெங்கும் பார்க்கிறோம்.

மரம் தேடி, பழந்தின்ன அலையும் இத்தகைய வவ்வால்களுக்கு நாடு, மொழி, இனம் என்பன பற்றிய கவலையே இல்லை! எஃது எக்கேடு கெட்டால் என்ன? யார் எக்கேடு கெட்டால் என்ன? தமது கையும் பையும் நிரம்பினால் போதும்!

சமூக அவலங்கள் நாட்டில் பெருகத் தொடங்கி விட்டன. அடுத்த தலைமுறையை அறிவாளியாக்கும் ஆசிரியர்கள் சோர்வடைந்துவிட்டனர்!



ந்த நோக்கும் விரிந்த அறிவும் அவர்களிடத்தில் இல்லை. கூலிக்கு மாரடிக்கும் ம்பலாக மாறிவிட்டனர்; தூய மனப்பான்மையும் இலட்சிய நோக்கும் அற்றுவிட்டன.

மாணவர்களோ கணிப்பொறியும் கையுமாக அலைகின்றனர். 'பேட்டிங்' - ட்டிங்' என்று பந்தயக் குதிரை வேகத்தில் பறக்கின்றனர். இந்தக் குதிரை ன்றைக்குக் குழியைத் தோண்டிக் குப்புறத் தள்ளப் போகிறதோ யாருக்குத் தெரியும்?

பெரும்பாலும் நூலகங்கள் எல்லாம் பூட்டியே கிடக்கின்றன. திறந்திருக்கும் ன்றிரண்டு நூலகங்களும் முதியவர்கள் உறங்கும் படுக்கை அறைகளாகப் பயன்பட்டு ரும் அவலம்! புத்தகங்களைப் புழுப் பூச்சிகள் மட்டுமே படித்துப் பதம் ார்க்கின்றன.


வீட்டிற்குள் வந்த தொலைக்காட்சி செய்யும் விபரீதங்களைச் சொல்லி மாளாது. வீதியில் திரிந்த 'சனியனை' வீட்டிற்கு அழைத்துவந்து விருந்து வைத்து விட்டோமோ என்று ஐயப்பட வேண்டி இருக்கிறது. இது தொலைக்காட்சி இல்லை. தமிழனுக்கு வாய்த்த தொல்லைக்காட்சி!

இளைஞர்கள் நிலையோ படுபரிதாபம்! விவரமும் இல்லை, விவஸ்தையும் இல்லை! யாருக்குக் கொடி பிடிக்க வேண்டும்; கோசம் போட வேண்டும். என்பதே தெரிவதில்லை. காசு கொடுத்தால் எவனுக்கும் கோசம் போடலாம்; என்ற அடிப்படைக் கொள்கையை அவர்கள் அசைக்க முடியாமல் வகுத்துக் கொண்டுள்ளனர். அரசியல்வாதிகள் அப்படி ஆக்கிவிட்டனர்.

ஓரளவு தெளிவு பெற்றிருக்கும் மனிதனைக் கூடச் சாமர்த்தியமாகக் குழப்புவதில் ஊடகங்களின் பங்கு மகத்தானது. குழம்பிய குட்டையில் மீன்பிடிக்கத் தூண்டில் போடுகின்றன. நாட்டு மக்களுக்கு ஒரு போதும் சுயசிந்தனை வந்து விடக் கூடாது என்பதற்காகவே திட்டமிட்டு திறக்கப்பட்ட மதுக்கடைகள். அப்போதைக்கப்போது நாகசாந்தி செய்து கொள்ள வசதியாக தெருவிற்கு நான்கு. இது போதாதென்று இப்போது வெளிநாட்டு மதுபானக் கடைகள் வரப்போகிறதாம். குடிமக்களை அரசு எப்படிக் காப்பாற்றுகிறது என்பதை எண்ணிப் பாருங்கள்!

நாட்டின் போக்கைக் கவனிக்கும் நமக்கு, நாம் எங்கே போகிறோம்? நாடு எங்கே போகிறது? என்பதைப் புரிந்து கொள்ளவே முடியவில்லை. ஆனால் ஒன்று மட்டும் தெளிவாய்ப் புரிகிறது. இதே நிலை, இன்னும் பத்துப் பதினைந்து ஆண்டுகளுக்குத் தொடர்ந்தால் இந்த நாடு பெரியார் காலத்திற்கு முன்பிருந்த நிலைக்குச் சென்று விடும் என்பதில் கொஞ்சமேனும் ஐயம் இல்லை.

பெரியார் பிறப்பதற்கு முன்பிருந்த தமிழகத்தின் நிலையை எண்ணிப் பார்க்கவே நெஞ்சம் துணுக்குறும். ஆண்டான் அடிமை பேதம் ஒருபுறம். சாதி மத பேதங்கள் இன்னொரு புறம். கடவுளின் பெயராலும், சாஸ்திரங்களின் பெயராலும், வேதங்களின் பெயராலும், புராணங்களின் பெயராலும் தமிழர்கள் அறியாமை இருளில் ஆழ்த்தப்பட்டுக் கிடந்தனர்.



ஓயாமல் உழைத்தும் ஒரு சாண் வயிற்றுக்கு உணவின்றிக் கிடைப்பதை விதி என்று கூறினார். 'தலை எழுத்து' என்று சமாதானப்படுத்திக் கொண்டனர்.

அடிமைகளாகவும், அடிமாடுகளாகவும் வீழ்ந்துகிடந்த தமிழனை எழுந்து நிற்கச் செய்தவர் ஈரோட்டுப் பெரியார்! அறியாமை போக்கி சுயமரியாதையை ஊட்டி வளர்த்தவர். நீயும் மனிதன்தான்; நீ எவனுக்கும் தாழ்ந்தவன் இல்லை என எழுச்சி ஊட்டி விழிப்படையச் செய்தவர் பெரியார்.

சிந்தித்துப் பார்த்தால் இந்தியாவிலேயே சாதிச் சண்டையும், சமயச் சண்டையும் இல்லாத மாநிலமாகத் தமிழகம் விளங்குகிறது என்றால் அதற்குக் காரணம் பெரியார் அவர்களின் அறுபதாண்டுக்கால அயராத உழைப்புத்தான். அவரது உழைப்பின் ஊற்றுக் கண்ணாகவும் - உறுதுணையாகவும் விளங்கியவரே பேறறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களே!

தமிழர்களின் அவல நிலையை எண்ணிப் பார்த்து இரத்தக் கண்ணீர் வடித்து, இதற்கு ஒரு வழிதேட வேண்டும் என்ற ஆர்வத்தில் தந்தை பெரியார், அறிஞர் அண்ணா ஆகியோரின் பின்னாலே அணிவகுத்துச் சென்ற தொண்டர்கள் பல்லாயிரம் பேர்.


இவர்கள் எந்தப் பிரதிபலனையும் எதிர்பாராதவர்கள். தமிழின மறுமலர்ச்சி ஒன்றை மட்டுமே குறிக்கோளாய்க் கொண்டவர்கள். இந்தக் குறிக்கோளுக்காக இவர்கள் கொடுத்த விலையோ கொஞ்ச நஞ்சமல்ல.

சொத்துக்களை இழந்தனர்; சுகத்தைத் துறந்தனர். பிள்ளை குட்டிகளை மறந்தனர். கல்லடியும் சொல்லடியும் பட்டனர். 'மிசாச்' சிறைகளில் அடைப்பட்டனர். சிரிப்பை இழந்து சித்திரவதைக்கு ஆட்பட்டனர்.

தூங்கிய தமிழினம் விழித்தெழ வேண்டும்; அவர்களது தமிழ்மொழி சீர்பெற வேண்டும்; தமிழகம் தலைநிமிர்ந்து நிற்க வேண்டும் என்ற சீரிய கோட்பாட்டை இதயத்தில் ஏந்தி அண்ணாவின் பின்னாலே அணிவகுத்துச் சென்ற கொங்கு மண்டல முன்னோடிகளில் ஒருவர்தான் அண்ணன் புன்செய்ப் புளியம்பட்டி சாமிநாதன் அவர்கள்.

சுறுசுறுப்பும் விறுவிறுப்பும் கொண்ட அண்ணன் பி.ஏ.எஸ். அவர்கள் கொங்கு மண்டலத்தைத் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கோட்டையாக மாற்றிட அரும்பாடுபட்டவர். யாரையும் வஞ்சிக்காதவர்; யாருக்கும் வணங்காதவர். உள்ளொன்று வைத்துப் புறம் ஒன்று பேசாதவர். சொல்வதைத் தெள்ளத் தெளிவாகத் திட்டவட்டமாக எடுத்துச் சொல்லும் தூயவர். பதவியைத் தேடிப் பயணிக்காத பண்பாளர். மாவட்டச் செயலாளர் பதவியும், நாடாளுமன்ற மக்களவைப் பணியும் இவரைத் தேடியே வந்தன.

பல்லாண்டு காலம் பொதுவாழ்வில் ஈடுபட்டு உயர்ந்த பதவிகளை வகித்த



போதிலும் கொங்கு மண்டலத்தில் எளிமைத் தோற்றத்தில் காட்சி அளித்தவர் இருவர். ஒருவர் மறைந்த உடுமலை நாராயணன் மற்றொருவர் நமது அண்ணன் பி.ஏ.எஸ். அவர்கள். ஒரு கட்சிக்காரன் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு எடுத்துக்காட்டாக விளங்கியவர் இவர்கள். தொண்டரோடு தொண்டனாக தொழிலாளியோடு தொழிலாளியாக எளியவரோடு எளியவராக வாழ்ந்து காட்டியவர்.

அண்ணனை எப்போதும் சென்று சந்திக்கலாம் எவரும் சென்று பார்க்கலாம்; தங்களது மனக் குறைகளைக் கொட்டலாம்; அவர் சொல்வதை மறுத்தும் பேசலாம்; என்பதற்கு இடம் அளித்துக் காட்சிக்கு எளியராய்க் கடுஞ்சொல் அற்றவராய் விளங்கியவர்.


புத்தகப் பதிப்பாளரும் விற்பனையாளருமான அருமை நண்பர் எஸ்.ஆர்.கிருட்டிணமூர்த்தி அவர்களின் அறிமுகத்தால் அண்ணன் பி.ஏ.எஸ். அவர்களின் நட்பு எனக்குக் கிட்டிற்று. அண்ணன் அவர்கள் சென்னை வருங்கால் பலமுறை சந்திக்கும் சந்தர்ப்பங்கள் வாய்த்தபோதும் இறுதியாகச் சந்தித்த அந்த வாய்ப்பேஎன்நெஞ்சை விட்டகலாது நிற்கிறது.

கோவையில் செம்மொழி மாநாடு நடைபெற்ற நேரம். நண்பர் கிருட்டிண மூர்த்தியும் நானும் புன்செய்ப் புளியம்பட்டி சென்று அண்ணனை அவரது இல்லத்திலேயே சந்தித்தோம். நீண்ட நேரம் இலக்கியம், அரசியல் தொடர்பாகப் பேசிக் கொண்டிருந்தோம்.

அவர் ஓர் அரசியல்வாதி. அவருக்கு இலக்கியத்தில் இருந்த ஈடுபாடும், அவர் எடுத்துவைத்த கருத்துக்களும் என்னை மெய்சிலிர்க்க வைத்தன. தமிழின் மீதும் தமிழ் இனத்தின் மீதும் அவர் கொண்டிருந்த பற்று அப்போதைக்கப்போது வெளிப்பட்டது. நூல் படிக்கும் பழக்கம் உடையவர் அவர். ஆங்கில நூற்களையும் தமிழ் நூற்களையும் தேடிப்பிடித்துப் படித்துச் சிந்திக்கும் ஆற்றலுடையவர்.

இன்றைய அரசியல்வாதிகளுக்கு நூல்களைப் படிப்பதும், அறிவை விரிவாக்கிக் கொள்வதும் வேப்பங்காய். கடமுடாவென்று காய்லாங்கடை அரசியல் பண்ணி கல்லாவை நிரப்பினாலே போதும் என்பது இன்றைய நிலை. ஆனால், பி.ஏ.எஸ். அவர்களோ கொள்கை அடிப்படையில் அரசியலுக்கு வந்தவர். அவருக்குள்ள இலட்சிய நோக்கும், அந்த இலட்சியத்தை நிறைவேற்ற வேண்டும் என்ற வெறியும் இருந்ததால் அரசியலைப் புனிதப் போராகக் கருதிச் செயல்பட்டார். ஆம் அரசியல்வாதிகளுக்குள் அவர் ஒரு வேறுபாடானவர். தனித்தன்மை பெற்றவர். இதனை அண்ணா அவர்கள் தொடக்க காலத்திலேயே உணர்ந்து ஊக்கமூட்டினார்.

எப்பொழுது பார்த்தாலும் மாறாப் புன்சிரிப்புடையவர். இனிமையாகப் பேசக்கூடியவர். இன்முகத்தொடு வரவேற்கக் கூடியவர்; விருந்து போற்றும் பண்பாளர். ஆடம்பரமற்ற அரசியல்வாதி; அடக்கம் மிகக் கொண்டவர்.



இவருடைய வாழ்க்கையிலிருந்து வருங்காலத் தலைமுறைகள் கற்றுக் கொள்ள வேண்டியவை நிரம்ப உள்ளன. இவர் ஒரு திறந்த புத்தகம்.

இவரது இழப்பு புன்செய்ப் புளியம்பட்டிக்கு மட்டும் அன்று; ஈரோடு மாவட்டத்திற்கு மட்டும் அன்று; இன்னும் சொல்லப்போனால் ஒட்டுமொத்த தமிழினத்திற்கே பேரிழப்பாகும். அவர் சென்ற வழிச் சென்று கழகத்தைக் காப்பதே நாம் அவருக்குச் செலுத்தும் அஞ்சலியாகும்.

காந்தி பிறந்ததால் போர்பந்தருக்குப் புகழ்!

அண்ணா பிறந்ததால் காஞ்சிக்குப் புகழ்!


கலைஞர் பிறந்ததால் திருக்குவளைக்குப் புகழ்!

சாமண்ணன் பிறந்ததால் புன்செய்ப் புளியம்பட்டிக்குப் புகழ்!

மறத்தற்கரிய மாமனிதராய் வாழ்ந்த புன்செய்ப் புளியம்பட்டிப் பெரியவரின் புகழ் என்றென்றும் மறையாது; மங்காது!

வாழ்க சாமண்ணன் தொண்டுநெறி! வளர்க அவர்தம் புகழ்!


அண்ணா பற்றித் திரு.வி.க.



ஈரோட்டில் திராவிடர் கழகத்தின் தனிச்சிறப்பு மாநாடும் குறள்நெறி மாநாடும் பெரியார் அவர்களால் நடத்தப்பட்டன. அண்ணா அவர்கள் தலைமை தாங்கினார். அந்த மாநாட்டின் சிறப்பினை எடுத்துக்கூற சென்னையில் ஐலண்டு மைதானத்தில் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது. பெரியாரும், திரு.வி.க. அவர்களும் கலந்துகொண்டு உரையாற்றினார்கள். அண்ணா அவர்கள் ஆற்றிய உரை திரு.வி.க. அவர்களைப் பெரிதும் கவர்ந்தது.

திரு.வி.க. அவர்கள் பேசும்போது "தமிழகத்தில் 'திரு.வி.க. நடை' 'திரு.வி.க. பாணி' 'திரு.வி.க. எழுத்து' என்று இன்று நிலவி வருவது மாறி இனி வருங்காலத்தில் **'அண்ணாதுரை நடை' 'அண்ணாதுரை பாணி' 'அண்ணாதுரை எழுத்து'** என்றுதான் வரப்போகிறது. வருங்காலத்தில் தமிழ்மொழி அழிந்து சிதைந்து விடுமோ, அதை யார் காப்பாற்றப் போகிறார்கள் என்று நான் ஐயப்பட்டுக் கொண்டிருந்தேன். ஆனால் இனி நான் நிம்மதியாகச் சாவேன். காரணம், அண்ணாதுரை தமிழின் உயர்விற்குச் சேவை செய்வதை என்னால் மறக்க முடியாது. அண்ணாதுரை ஓர் அரசியல்வாதி மட்டுமல்ல; அவர் தாய்நாட்டையும், தாய் மொழியையும் காக்கும் தமிழர் தளபதி" என்று கூறினார்.

மா. கார்த்தியாயினி
முன்னாள் தலைமையாசிரியை
கெ.ஓ.அ.ம.மே.நி.பள்ளி, புன்செய்ப் புளியம்பட்டி



நன்றி பாராட்டும் நினைவு மலர்வணக்கம்

**"சொலல்வல்லன் சோர்விலன் அஞ்சான் அவனை
இகல்வெல்லல் யார்க்கும் அரிது"** - என்கிற

உலகப் பொதுமறையின் உயர்ந்த மொழிகளை மெய்ப்பிக்கும் நாயகனாய், தொகுதி மக்களின் காவலனாய் விளங்கியவர் கோபி நாடாளுமன்றத் தொகுதியின் உறுப்பினராகப் பத்தாண்டுகள் கடமைபுரிந்த **பெரியவர் சாமிநாதன்** அவர்கள் என்றால் அது மிகையில்லை.


அரசியலிலும், பொது வாழ்விலும் நேர்மை என்ற அணிகலனுடன் மாமனிதராய் வலம்வந்து, செயற்கரிய செயல்களைச் செய்து, மக்களின் மனங்களில் இன்றும் வாழ்ந்து கொண்டிருப்பவர் **பெரியவர் சாமிநாதன்** எம்.பி. அவர்களே !

யான் புளியம்பட்டியில் அரசுப்பணி ஆற்றும்போது, அந்த மாமனிதரைச் சந்தித்தமை பற்றியும், புளியம்பட்டியிலுள்ள கெம்பண்ணா ஓதிமலை அரசு மகளிர் மேனிலைப் பள்ளியின் வளர்ச்சிக்காகப் பெரியவர் அவர்கள் , சிந்தித்தமை பற்றியும், இந்தப் புனித மலரில் நினைவுகூற விரும்புகிறேன்.

மதிப்புமிகு பெரியவர் அவர்களின் அருட்பார்வை, புளியம்பட்டி மகளிர் அரசுப்பள்ளி மீது படர்ந்த அந்த 1996-ஆம் ஆண்டினை எண்ணிப் பார்க்கிறேன். ஆம்! அப்போதுதான் யான், பள்ளியின் புதிய தலைமை ஆசிரியையாகப் புளியம்பட்டிக்கு வருகை தந்தேன்.

அடிப்படை வசதிகள் ஏதுமில்லாமல், ஏங்குவாரும் - தாங்குவாரும் இல்லாத அனாதைப் பிள்ளையாக அரசுப்பள்ளி என்னைப் பார்த்து நகைத்தது. மழையால் நனைந்தும், மண்சுவர்களில் சாய்ந்தும், ஓயாத வெய்யிலின் ஓட்டு வெம்மையில் காய்ந்தும், விதியை நொந்தபடியே படித்துக்கொண்டிருந்த மாணாக்கியர்க்கு விடிவுகாலம் பிறக்கக் காரணம், நமது பெரியவர் அவர்கள்தான் என்பதை யாராலும் மறுக்க முடியாது.

'பெரியவர்' அவர்கள், நோய்வாய்ப்பட்டு மருத்துவமனையில் உள்ளதையறிந்த பலரும், பெரியவர் விரைவில் நன்கு குணமாக வேண்டும்



என்று இறைவனை வேண்டியபடியே அவரைப் பார்க்க மருத்துவமனைக்கு அலைஅலையாக வந்து, பரிவுடன் பார்த்த காலம் அது. அங்கே நான் சென்று பெரியவரிடம் உடல் நலம் பற்றி விசாரித்தபோது, அந்த நிலையிலும் அவர்கள் புளியம்பட்டி மகளிர் மேல்நிலைப் பள்ளியின் மேம்பாட்டுக்கான ஏற்பாடுகள் பற்றியே எம்மிடம் பேசிக் கொண்டிருந்தார்கள்.

பெரியவர் அவர்களைக் காணச் சென்ற எல்லாரிடமும் கட்சிப்பாகுபா ஏதுமின்றி நிதிதிரட்டித் தந்து, பெற்றோர் ஆசிரியர் கழகத்தினர் மூல காற்றோட்டமான, அகலமான, 10 வகுப்பறைகளைக் கட்டித்தந்தவர் பெரியவ அதுமட்டுமன்றிச் சட்டமன்றத் தொகுதி வளர்ச்சிநிதி, நாடாளுமன்றத் தொகு மேம்பாட்டு நிதி, தமிழக அரசின் கல்வி வளர்ச்சி நிதி ஆகிய அனைத்தையும் மகளி பள்ளிக்குப் பெற்றுத்தந்து, இன்று 24 வகுப்பறைகளுடனும், நவீன அறிவியல் ஆய்வு கூடத்துடனும் புளியம்பட்டி அரசு மகளிர் மேனிலைப்பள்ளி, ஒரு கல்லூரி போ உயர்ந்து காட்சியளிக்கிறதே! இதற்குக் காரணம் பெரியவர்தான் என்பதை எல்லாரு அறிவர்.

புளியம்பட்டி மகளிர் அரசுப்பள்ளிக்கு நிலம் தந்து சிறப்பித்த வள்ளல்களா கெம்பண்ணா, ஓதிமலை ஆகியோரின் பெயர்களைப் பள்ளிக்குச் சூட்டிச் சாதன புரிந்தவரும் நமது பெரியவர் அவர்கள்தான்.

பெரியவரின் மேலான செயல்களினால் புளியம்பட்டியில் கெம்பண்ண ஓதிமலை அரசு மகளிர் மேனிலைப் பள்ளி சீரோடும் சிறப்போடும் இன்றும் கல்விப் பணியினைத் தொடர்கின்றது.


வருங்காலச் சந்ததிகளும் சிறந்த முறையில் கல்வி பயில வழிவகை செ "தியாகத் தீபமாகப்" பெரியவர் அவர்கள் ஒளிவீசிக் கொண்டு, நம்மை நடத்துகின்றார்கள் என நான் முழுமையாக நீள நினைக்கிறேன்.

சமூக சேவையில் அரசியல் வானில் ஒளி வீசிய துருவ நட்சத்திரமாக விள பெரியவர் அவர்களின் நினைவுமலர்வணக்க நாளில், அன்னாரின் அறப்பணி நீள நினைத்தபடியே, அந்த மாமனிதரின் ஆன்மாவைப் பணிந்து வணங்குகின்றே

அரசுப் பள்ளியின் புதிய கட்டடக் கால்கோள் விழாவுக்கு மட்டு அதனை விரைந்து செயலாக்கிப் பள்ளியின் புதிய கட்டடத் திறப்பு விழாவ அந்நாளைய கல்வி அமைச்சர் பெருமகனார் க. அன்பழகன் அவர்க அழைத்துவந்து சிறப்பித்த சரித்திர நாயகனாய் இன்றும் எங்கள் மனத்தில் வா "பெரியவர்" அவர்களே!

உமை மறக்க முடியாமல்

மக்கள் உனமெல்லாம் வாழுகின்றீர்! வளர்க உங்களின் மெய்க்கீர்த்தி!






முனைவர் கே.ஆர். சீதாலட்சுமி
அரசுத் தேர்வுகள் பண்டகத் துணை இயக்குனர் - ஓய்வு
சத்தியமங்கலம்

புளியம்பட்டியும் பெரியவர் பி.ஏ.எஸ். அவர்களும்

புன்செய்ப் புளியம்பட்டி ஆண்கள் பள்ளியில் (01-06-1959 ஆம் நாளன்று) கணித ஆசிரியராகப் பணியில் சேர்ந்தேன். அன்று அப்பள்ளி காவல் நிலையம் அடுத்துள்ள இடத்தில் செயல்பட்டு கொண்டிருந்தது (வசதியின்மை- இடம் பற்றாக்குறை). திரு கே.வி.கே., டாக்டர் சுப்பண்ணன், திரு. பி.ஏ.எஸ்., திரு. பி.எஸ். சீதாராமன், திரு. பு.கா. ஆறுமுகம் மற்றும் ஊர்மக்கள் உதவியுடன் தற்போது கே.வி.கே. மேல்நிலைப்பள்ளி இருக்கும் இடத்திற்கு நிலையாக மாற்றப்பட்டது. இன்று இப்பள்ளி நல்ல இடவசதியுடன் சிறப்பாக நடைபெறத் திரு. பி.ஏ.எஸ். அவர்கள் ஆற்றிய பணி பாராட்டிற்குரியது.

யான் தேவனூர்புதூர் மகளிர் பள்ளியில் தலைமை ஆசிரியையாகப் பணியாற்றி வந்தேன். அது பொள்ளாச்சி திரு. நா. மகாலிங்கத்தின் உறவினர் பள்ளி. திரு. என். மகாலிங்கத்தின் உதவியுடன் அதை ஒரு தனியார் பள்ளி போல எல்லா வசதியுடன் நடத்தி வந்தனர். நான் சத்திக்கு அருகாமையில் மாறுதல் கோரி விண்ணப்பித்தும், மாறுதல் கிடைக்கவில்லை. பள்ளி வேலை தொடர்பாக கோவைக்கு வரும்பொழுதெல்லாம் கோவை கோட்டக் கல்வி அதிகாரியாகப் (D.I) பணியாற்றி வந்த திரு. சம்பசிவம் அவர்களைப் பார்க்கச் செல்வேன். அவர் என் கையில் ஒரு உத்தரவைக் கொடுத்து நாளை புன்செய்ப் புளியம்பட்டியில் ஒரு மகளிர் பள்ளி திறக்க உள்ளோம். நான் நாளை அங்கு வருவேன். நீ இன்றே புன்செய்ப் புளியம்பட்டி சென்று பள்ளிக்குத் தேவையானதைச் செய்வாயாக என்று புன்செய்ப் புளியம்பட்டிக்கு அனுப்பினார். பெரியவர் திரு. பி.ஏ.எஸ். அப்பொழுது எம்.பி.யாக இருந்தது அப்பள்ளியைத் திறக்க அவருடைய முழு முயற்சி காரணமாக இருப்பது தெரிந்தது. காவல் நிலையம் அருகில் முன்பு ஆண்கள் பள்ளி நடந்த இடத்தில்தான் பெண்கள் பள்ளி நடைபெற இருந்தது. நான் கோவையிலிருந்து நேராகப் பள்ளிக்கு வந்தேன். திரு. பி.எஸ். சீதாராமன், திரு. பு.கா. ஆறுமுகம், திரு. அங்குசாமி, டாக்டர். பழனிச்சாமி ஆகியோர் அங்கு அமர்ந்த நாள




பணிநிறைவு விழாவிற்காகப் பணியாற்றிக் கொண்டிருந்தனர். 10 ஆண்டுகள் அப்பள்ளியில் தலைமை ஆசிரியையாகப் பணியாற்றினேன். பெரியவர் திரு. பி.ஏ.எஸ். அவர்கள் பெற்றோர் சங்கத் தலைவராகவும் இருந்து பள்ளி நல்லமுறையில் நடைபெற உதவி செய்தனர். திருமதி. லோகநாயகி, திருமதி. முத்துலட்சுமி, திருமதி. விஜயகுமாரி, திருமதி. கமலம், திருமதி. வேதவதி மற்றும் பலர் புளியம்பட்டியை சேர்ந்தவர்களாக இருந்தமையாலும், நன்கு உழைத்ததின் காரணமாகவும் 8 ஆண்டுகளும் பத்தாம் வகுப்பில் 100 சதவீதம் தேர்ச்சி பெற்றுக் கோபி கல்வி மாவட்டத்தில் முதன்மை இடம் பெற்று ஆண்டுதோறும் கோப்பை பெற்று எம்.பி.யாக பெரியவர் பி.ஏ.எஸ். இருந்த காரணத்தால், ஒவ்வொரு ஆண்டு விழாவிற்கும் இரண்டு அமைச்சர்கள் தவறாது பங்கு கொண்டு விழா முடியும் வரை இருந்து சென்றது பள்ளிக்கே பெருமையாக இருந்தது. பி.ஏ.எஸ். அவர்களின் முயற்சியின் காரணமாகக் கெம்பண்ணா ஓதிமலை அரசு மகளிர் பள்ளி கோவை பாதையில் புதிய இடத்தில் எல்லா வசதிகளுடன் இடமாற்றம் செய்யப் பெற்று மேனிலைப் பள்ளியாக ஆக்கப்பட்டவுடன் அதற்குத் தேவையான ஆய்வகம், நிறை வகுப்பறைகள் பெரியவர் பி.ஏ.எஸ். அவர்களின் முயற்சியால் கட்டித்தரப்பெற்றன.

01-06-1959 அன்று பணியில் சேர்ந்த பொழுது புன்செய்ப் புளியம்பட்டிக்கு பேருந்து நிலையம் கிடையாது. ஊராட்சிக்குக் கட்டிடம் கிடையாது. பள்ளிக்கு நிரந்தரக் கட்டிடம் கிடையாது. ஆண்கள் பள்ளி பெயர்ப் பலகையில் அதிக தலைமை ஆசிரியர்கள் பெயர்கள் இருக்கும். குடிக்கத் தண்ணீர் இல்லாத காரணத்தால் வெளியூரிலிருந்து வரும் தலைமை ஆசிரியர்கள் மாறுதல் பெற்றுச் சென்று விடுவர்.

பெரியவர் திரு. பி.ஏ.எஸ். அவர்களின் இடைவிடாத முயற்சியின் காரணமாக பவானிசாகரிலிருந்து ஆற்று நீர் புளியம்பட்டிக்கு வந்தது. அவ்வூர் மக்கள் ஒவ்வொரு குவளைத் தண்ணீர் குடிக்கும் போதும் அவரை நினைத்துக் கொள்ள வேண்டும். தற்சமயம் அழகிய பேருந்து நிலையம், அழகிய நகராட்சிக் கட்டிடம், ஆண்கள் மேனிலைப்பள்ளி, பெண்கள் மேனிலைப்பள்ளி, பவானி மேனிலைப்பள்ளி, ஆகிய அனைத்தும் அவரது பெருமுயற்சியால் புன்செய்ப் புளியம்பட்டிக்கு வந்துள்ளன.


நான் சேலம், தர்மபுரி மகளிர் பள்ளி ஆய்வாளராகப் பொறுப்பேற்பதற்கு முன்பு மீண்டும் கே.வி.கே. ஆண்கள் மேனிலைப் பள்ளியின் தலைமை ஆசிரியராக பணியாற்றும் போது அப்பள்ளிக்குப் பலவகையிலும் உதவி செய்துள்ளார். மாணவச் செல்வங்கள் விரும்பியதைச் செய்து உதவி உள்ளார்.

பெரியவர் பி.ஏ.எஸ். அவர்கள் வீட்டில் திருமதி. சம்பூரணம் அக்கா அவர்களின் சகோதரிகள், சகோதரர் திரு. சந்திரசேகர், மனைவி ராஜாமணி, ராணி, வெற்றி செல்வி, போஸ், அன்பு மனைவி ராணி, ஆகியவர்களும் படிப்பதற்காக இவர்கள் வீட்டிற்கு வந்து தங்கிப் படித்த குழந்தைகளும் எனது மாணவச் செல்வங்கள்



[illegible] ஆண்டுகளாக அக்குடும்பத்தாருடன் எங்கள் [illegible] நல்ல முறையில் இருந்து வருகிறது. திருமதி சம்பூரணம் அக்கா [illegible] விருந்து பாராட்டுவோம். அன்பு சிறுகுழந்தையாக [illegible] அவரை விட்டுவிட்டு கட்சிப்பணிகளுக்குச் சென்று விடுவார். [illegible] நடக்கும் [illegible] கட்சிக்காரர்கள் வீட்டில் நடக்கும் [illegible] அழைத்திருக்கும் முதல் ஆளாகச் சென்று விடுவார். இத்தனை [illegible] தான் ஒரு தலைவரின் மனைவி என்ற கர்வமே இல்லாமல் [illegible] இருந்துள்ளார். யார் சென்று உதவி கேட்டாலும், செய்து வரும் [illegible] பாராட்டுக்குரியது. இன்பத்திலும் துன்பத்திலும் பெரியவர் திரு. [illegible] அவர்களுக்கு உறுதுணையாகத் திருமதி. சம்பூரணம் அக்கா இருந்த [illegible] அவரும் புகழோடு திகழ்ந்தார். அவர்கள் வீடு ஒரு தர்மச் சத்திரமாகவே திகழ்ந்தது. அனைவரும் தைரியமாக நேரில் சென்று உதவி பெறும் வகையில் வாழ்ந்த ஒரு நல்ல மனிதரின் இழப்பு. புன்செய்ப் புளியம்பட்டி மக்களுக்கும், இம்மாவட்ட மக்களுக்கும் ஈடு செய்ய முடியாத இழப்பாகும்.

—❦—




சட்டத்தின் ஒப்புதல் பெற சுயமரியாதைத் திருமணம் அண்ணாவின் ஆட்சியில் 28-11-1967 அன்று தமிழக சட்டப் பேரவையில் சட்ட வடிவம் பெற்றது.



தமிழ்நாடு அரசுச் சின்னத்தில் தேவநாகரி எழுத்தில் "சத்தியமேவ ஜெயதே" என்று இருந்ததை, "வாய்மையே வெல்லும்" என்று தமிழில் மாற்றம் செய்து பேரறிஞர் அண்ணா ஆணையிட்டார்.



"தமிழ்நாடு அரசு தலைமைச் செயலகம்" எனும் பெயர்ப் பலகையை 14-04-1967 அன்று பேரறிஞர் அண்ணா திறந்து வைத்தார்.




ம.சி. சுப்பிரமணியன் B.A.,B.L.,Ex.M.L.A.
முன்னாள் தலைவர்
ஈரோடு நகர்மன்றம்

சாதனையாளர் சாமண்ணன்

திரு. பண்ணன் அவர்கள் எழுதிய "தொண்டின் வடிவம் எங்கள் சாமி" என்ற புத்தகம் ஒன்றை அண்ணியார் சம்பூரணம் அவர்கள் எனக்குத் தந்தார்கள். சாமண்ணனைப் பற்றிய. இல்லை இல்லை அவர்கள் சாதித்த சாதனைகளைப் பட்டியலிட்டு எழுதியிருந்தார்கள். ஒரு சாதாரண ஊராட்சி தலைவராக இருந்து அவர் சாதித்த சாதனைகளைப் பார்க்கும்போது வியப்பாக உள்ளது. எத்தனையோ சாதனைகள்.


அவற்றில் எனக்காக அவர் சாதித்த சாதனையை நினைவு கூறாவிட்டால் நான் நன்றி கொன்றவனாவேன். 1971-ஆம் ஆண்டு நாடாளுமன்றம், சட்டமன்றம் இரண்டிற்கும் ஒருசேரப் பொதுத் தேர்தல். கோபி நாடாளுமன்றத் தொகுதிக்குச் சாமண்ணன். ஆம் என்னைப் போன்றவர்களுக்குச் "சாமண்ணன்" திரு. பண்ணன் போன்றவர்களுக்குச் "சாமி" பலருக்குப் "பி.ஏ.எஸ்." மற்றும் பலருக்குப் "புன்செய்ப் புளியம்பட்டி - சாமிநாதன்". 1971 தேர்தல் அறிவிக்கப்பட்டவுடன் ஈரோட்டில் யார் என்ற பிரச்சனை எழுந்தது. அண்ணன் கல்லார் ராமசாமி, லட்சுமணா பிரிண்டிங்க்ஸ் மறைந்த அண்ணன் பாலு இப்படிப் பலபேர் விருப்பம் தெரிவித்தனர். அப்போது ஈரோட்டில் இரண்டு அணி. இந்த அணி ஒன்று. மற்றொன்று மறைந்த நண்பர் ப.க.விசுவநாதன் அவர்கள் ஓர் அணி. எங்கள் அணியிலேயே பலபேர் கேட்டபோது மறைந்த மு.சி. அவர்கள் இல்லத்தில் ஆலோசனை நடந்த நேரத்தில், வக்கீல்தான் நமது தரப்பு வேட்பாளர் என அடித்துக் கூறி எனக்காகத் தலைவரிடம் கேட்பது என்று முடிவெடுக்க [illegible] சாமண்ணன் அவர்கள் தான். அதுமட்டுமல்ல கடைசியாகத் தலைவர் முடிவெடுக்கும் நேரத்தில் ஈரோடு தொகுதிக்குச் சுப்பிரமணியத்திற்கு வாய்ப்புத் தந்தால் நான் நாடாளுமன்றத்திற்குப் போட்டியிடுவேன். இல்லை என்றால் நானும் போட்டியிலிருந்து விலகிக் கொள்கிறேன் என்று தலைவர் அவர்களிடத்திலே உறுதியாகச் சொல்லிவிட்ட காரணத்தால், எனக்கு வாய்ப்புக் கிடைத்தது. வெற்றிபெற்றுச் சட்டமன்ற உறுப்பினர் ஆனேன். சாமண்ணன் அவர்கள் அந்த முடிவு எடுக்காவிட்டால் இன்று [illegible] என்னைப் பலராலும் அழைக்கும் அளவிற்கு உருவாகி இருக்க மாட்டேன்.



அதன் வாய்ப்பாக 1975-ஆம் ஆண்டு
நடைபெற்ற தி.மு.க. மாநில மாநாட்டில் அதிக வசூல் செய்தமைக்காகக் கழகத் தலைவரின் கரத்தாலே கணையாழியும் அணிவிக்கப் பெற்றேன். இவற்றையெல்லாம் என் வாழ்நாள் உள்ளளவும் மறக்க முடியாதவை.

ஈரோடு என்றால், நேராக என்னுடைய இல்லத்திற்குத்தான் வருவார். என் மகள் அரசி சின்னஞ்சிறியவள். அண்ணன் வந்துவிட்டார் என்றவுடன் அவள் தாயாரிடம் "அம்மா சர்க்கரை இல்லாத காபி, வெங்காயம் இல்லாத சாம்பார்" என்று சத்தம் போட்டுக் கூறுவாள். சாமண்ணன் அவர்களுக்கு, வெங்காயம் என்றால் பயங்கர அலர்ஜி. அதைப் பார்க்கக்கூட மாட்டார். இதைச் சொல்வதற்குக் காரணம் அந்த அளவு எங்களிடத்திலே நெருங்கிய உறவு. 1976-ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 30-ஆம் நாள் ஈரோடு பெரியார் மன்றத்தில் மறைந்த நண்பர் E.A. மதார்சா அவர்களின் மகள் திருமணம். மேடையிலே வீற்றிருக்கும் போதே சாமண்ணன் அவர்களுக்குத் திடீர் மயக்கம் ஏற்பட்டது. உடனடியாக டாக்டர். பாலகிருஷ்ணன் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றதில் சர்க்கரையின் அளவு குறைந்து விட்டதால் மயக்கம் என்று சொல்லி உடனடியாகக் குளுகோஸ் கொடுத்துச் சரி செய்யப்பட்டது. மறுநாள் காலை சென்னை சென்று அண்ணனை ராயபுரத்தில் உள்ள விஜயா மருத்துவமனையில் சேர்ப்பதற்காகக் கோவையில் நானும் அண்ணனும் விமான நிலையத்தில் காத்திருந்தபோது மறைந்த அண்ணன் C.T. தண்டபாணி அவர்களும் அண்ணன் கோவை மு. ராமநாதன் அவர்களும் அங்கு வந்தார்கள். அப்போது விமான நிலையத்தில் சிறப்புக் காவல் படையினர் நிறையப்பேர் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தனர். அதைப் பார்த்தவுடனே நமது அரசு கலைக்கப்படும் என்று முடிவுக்கு வந்தோம்.


அதன்பிறகு, சாமண்ணனும் நானும் சென்னை விமான நிலையத்தில் வந்து இறங்கியதும் அன்றைய அமைச்சர் அண்ணன் கண்ணப்பன் அவர்களின் சொந்தக் காரில் அவரின் உதவியாளர் திரு. ரங்கநாதன் அவர்கள் வந்து எங்களை அழைத்துச் சென்றார். அண்ணனை விஜயா மருத்துவமனையில் சேர்த்துவிட்டுச் சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதியில் உள்ள எனது அறைக்கு வந்துவிட்டேன். சரியாக இரவு 1.30 மணிக்கு எனது அறைக்கதவு தட்டப்பட்டது. அப்போதே போலீசாரால் கைது செய்யப்பட்டு எக்மோரில் உள்ள ஆணையர் அலுவலகக் கூட்ட மன்றத்தில் கொண்டு விடப்பட்டேன். அன்று முழுவதும் சென்னையில் உள்ள தலைவர் அவர்களுக்கு நெருக்கமானவர்கள் திரு. ஆற்காடு வீராசாமியும், திரு. சிட்டிபாபு போன்றவர்களும் ஒவ்வொருவராகக் கைது செய்து கொண்டு வந்து சேர்த்தனர்.



[illegible] வந்த காரியும் [illegible] நான் கேட்க, விட்டுவிட்டார்கள். கோவையில் [illegible] எழுதித் தருங்கள் என நான் [illegible] அதுவரை கைது செய்ய அன்று பிற்பகல் 6.00 மணி அளவில் [illegible] சென்னை மத்திய [illegible] என்னைத் தவிர மற்ற [illegible] காவலர் வந்து சிறையில் அடைத்தனர். மறுநாள் காலை [illegible] 3-ஆம் தேதி காலை கொண்டு சேர்த்தனர்.

[illegible] நான் கூறுவதற்குக் காரணம், அதிலும் [illegible] அவர்கள் ஒரு சாதனை படைத்தார். அப்போது கைதானவர்கள் பற்றிய விபரம் [illegible] 'பலர் அறியத் தான் கைதாக வேண்டும்' என்று பிப்ரவரி 3-ஆம் தேதியன்று [illegible] வைக்கும்போது கைதாகி [illegible] பிப்ரவரி 4-ஆம் நாள் கோவை மத்திய சிறையில் எங்களோடு கொண்டுவந்து சேர்க்கப்பட்டார். சரியாக மூன்று மாதம் சிறையிலிருந்தோம். அப்படி சிறையில் இருந்த அந்தக் காலகட்டத்திலும் சிறையிலிருந்து கழகத் தொண்டர்கள் ஒவ்வொருவர் இல்லத்திற்கும் சென்று ஆறுதல் சொல்லியதோடு அவர்களுக்குத் தேவையான உதவிகளையும் செய்யச் சொல்லி அண்ணியார் சம்பூரணத்தை அனுப்பினார்கள். அந்த எமர்ஜென்சி நேரம் தலைவருக்குக் [illegible] காரணத்தினால் திரு. கண்ணப்பன் அவர்கள் கைது செய்யப்பட்டார்கள். கடுமையான சூழ்நிலை இருந்த அந்த நேரத்திலும் அண்ணியார் மூலம் கழகத் தோழர்களுக்கு உதவினார். பெரியவர் சிறையிலிருந்தபோதும் சம்பூரணம் மாவட்டச் செயலாளர் பணியாற்றி வந்தார் என்றால் அது மிகையல்ல.

எங்களுக்குக் கொடுக்கப்பட்ட வாரண்டில் நாங்கள் வெளியே இருப்பது உள்நாட்டுப் பாதுகாப்பிற்கு ஆபத்தானது Internal Security Act (MISA) என்று மட்டுமே இருந்தது. எங்களை என்ன குற்றத்திற்காகக் கைது செய்தார்கள்? தண்டனைக்காலம் எவ்வளவு? என்பது எங்களுக்கும் தெரியாது. சிறை அதிகாரிகளுக்குங்கூடத் தெரியாது. அந்தக் காலகட்டத்தில் எங்களின் நிலை என்ன? விடுவிக்கப்படுவோமா அல்லது சிறைக்குள்ளே ஆண்டுக்கணக்கில் அடைத்து வைக்கப்படுவோமா? என்பது எதுவும் தெரியாது. வாரம் ஒருநாள் எங்கள் குடும்பத்தாரை நேரில் காண வாய்ப்பளிக்கப்பட்டது. ஒவ்வொரு நாளிலும் 6 பேர் அல்லது 7 பேருக்குத்தான் அனுமதி வழங்கப்படும். நேர்காணலின்போது சிறைக்கைதிகளாகிய நாங்கள் ஒருபுறமும், நேர் எதிர்ப்புறத்தில் பார்வையாளர்களும் இருப்பார்கள். இடையிலே சிறை அதிகாரி ஒருவர் நாங்கள் பேசுவதைக் கண்காணித்துக் கொண்டிருப்பார். நலமாக இருக்கிறார்களா என்று மட்டும்தான் பேச முடியும். ஒவ்வொருவருக்கும் இரண்டு மூன்று பார்வையாளர்களுக்கு மட்டுமே அனுமதி.





அந்நாளில் கழகம் வளர்ச்சி பெற இவர்களைப் போன்றவர்களின் உழைப்பு மிக [illegible] என்று சொன்னால் அது மிகையாகாது. அவரின் குடும்பத்தில் [illegible] ஒரு பெரிய [illegible] [illegible].

சிறையில் இருக்கும்போது கழகத் தோழர்கள் 40 பேர் அடைக்கப்பட்டிருந்தோம். சிறையில் ஒதுக்குப்புறம் ஆக எங்களை அடைத்திருந்த இடத்தைச் சுற்றிலும் [illegible] சிறைக்குள்ளேயே எங்களை யாரும் பார்க்க முடியாதபடி வைத்து அடைத்திருந்தனர். அதேபோல் வெளியில் உள்ள சிறைக் கைதிகளைக்கூட நாங்கள் பார்க்க முடியாது. எங்கள் உணவிற்குப் பொருள்களைத் தந்துவிடுவார்கள். சிறையில் உள்ள மற்ற சாதாரணக் கைதிகளில் 4 பேர் எங்களுக்குச் சமையல் செய்து தந்துவிடுவார்கள்.

அண்ணன் மு. சாமுநாதன் அவர்கள் இந்தக் கைதிகளை வைத்துக் கொண்டு சமையல் பணி செய்வார்கள். எட்டு மாதங்கள் முடிவடைந்த நிலையில் அண்ணன் மு. சாமுநாதன் அவர்களை வேலூர்ச் சிறைக்கு மாற்றிவிட்டார்கள். அதற்குப்பிறகு சாமண்ணன் அவர்கள்தான் சமையல் பொறுப்பு. உள்ளே வரும்போது சாமண்ணன் அவர்களுக்கு சர்க்கரை மற்றும் கொழுப்புச் சத்து அதிகமாகவே இருந்தது. சிறைக்குள்ளே சாமண்ணன் அவர்களுக்கு உணவில் கட்டுப்பாடு வைத்து சர்க்கரையும், கொழுப்புச் சத்தும் முழுமையாக இல்லை என்றாகிவிட்டது.

ஒரு சாதாரண ஊராட்சித் தலைவராக மட்டுமே இருந்து கொண்டு, அவர் சாதித்த சாதனைகள். அதேபோல் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்து மாவட்ட அளவில் மட்டுமல்லாமல் புன்செய்ப் புளியம்பட்டியில் அவர் சாதித்திருக்கின்ற சாதனைகள் என்றென்றும் சாமண்ணன் பெயர் கூறும். புளியம்பட்டியில் பேருந்து நிலையம், அண்ணா கலையரங்கம், ஆடவர்க்கும் மகளிருக்கும் தனித்தனிப் பள்ளிகள், நோயுற்ற மக்களுக்கு மருத்துவமனை, அறிஞர் அண்ணாவிற்குச் சிலை, தேசத்தந்தை காந்தியாருக்கும் சிலை, ஊருக்குக் குடிநீர் வசதி, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு குடியிருப்புகள், கலைஞர் பெயரில் திருமண மண்டபம், இதுமட்டுமா சாலை வசதிகள், கழிவுநீர் வடிகால் வசதி இப்படி எண்ணற்ற காரியங்களை ஒரு சாதாரணக் குடும்பத்தில் பிறந்த சாமண்ணன் அவர்கள் சாதித்திருக்கிறார் என்றால் "சாதனைச் செம்மல் சாமண்ணன்" என்ற பெயர் சாமண்ணன் அவர்களைத் தவிர யாருக்குப் பொருந்தும்? வாழ்க சாமண்ணன் புகழ்! செழிக்க அவர்தம் குடும்பம்!



தன்னை வெல்வான்
தரணியை வெல்வான்!

- அண்ணா

[illegible]

மறக்க முடியுமா?

1954 பள்ளி இறுதிப் படிப்பு முடித்ததும் 1966 [illegible] இருந்தேன். அண்ணன் பி.ஏ.எஸ். [illegible] செயலாளராக இருந்தார். அவரைச் சந்தித்து தி.மு.க.வில் இணைந்தேன்.

அண்ணன் பி.ஏ.எஸ். புளியம்பட்டி பகுதியில் அரசியல் செல்வாக்கு [illegible] இருந்தார். தி.மு.கழகம் [illegible] இயக்கமாக இருந்த காலம். பேரறிஞர் அண்ணா தலைமையில் தமிழகத்தில் [illegible] ஆதிக்கசக்திகளின் [illegible] அண்ணன் பி.ஏ.எஸ். மக்கள் சக்தியைத் திரட்டி அப்போது கோபிசெட்டிபாளையத்தில் [illegible] ஆதிக்க சக்திகளின் தி.மு.கழகத்தினை அழித்திட நினைத்தார்கள். அவர்களை எல்லாம் தன்னுடைய திறமையால் தொண்டர்களின் துணையுடன் அடக்கி வெற்றிகண்டார்.

அண்ணன் பி.ஏ.எஸ்., வறுமையில்வாடிய தொண்டர்களைத் தன்னுடைய நிதியிலிருந்தும் வசூல் செய்தும் காப்பாற்றினார். மறைந்த [illegible] குடும்பநிதி [illegible] ஜீவாநிதியைத் திரட்டி நடத்தி அவர் குடும்பத்திற்கு வழங்கினார். கோபி நகரத் தி.மு.கழகச் செயலாளர் ஜி.ஆர். பழனியப்பன், தி.மு.கழகப் பேச்சாளர் ஜி.பி. வெங்கிடு Ex.M.L.A., துணைச் செயலாளர் திரு. செல்லப்பன் ஆகியோர் தொழில் நடத்த நிதி உதவிகளைச் செய்ததுடன் எங்களிடமும் தலா ரூ. 5,000/-ஐ வசூல் செய்து வழங்கினார். அதேபோல் அவரிடம் [illegible] வறுமையிலுள்ளோர் கோரிக்கை வைத்தால் உடனே உதவும் குணமுடையவர். உதாரணத்திற்குச் சேலம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் பேராசிரியராக இருக்கும் அருந்ததியர் இனத்தைச் சேர்ந்த பு. புளியம்பட்டி திரு. சண்முகம் அவர்களை மருத்துவராகப் படிக்க வைத்துச் சேலம் மாவட்டம் [illegible] பேச்சாளர் ப. கண்ணனின் மகளை டாக்டராக இருந்தவரைக் [illegible] திருமணம் செய்து வைத்தார். அவர்கள் இருவரும் இன்றும் இவரைக் காக்கும் கடவுளாக எண்ணி வணங்குகிறார்கள்.


இவர் பேரறிஞர் அண்ணாவின் 'ஏழையின் சிரிப்பில்' இறைவனை காண்போம் என்ற வாக்கின்படி. இவரால் ஆயிரக்கணக்கான தொண்டர்கள், இவ தாழ்த்தப்பட்ட சமுதாய மக்களுக்கு நிதி உதவி செய்து வாழ்வளித்தவ இவருடைய சிறந்த குணம். தொண்டர்களின் வேதனை துன்பங்களை அறிந் நாமே சென்று உதவும் குணமுடையவர். பல போராட்டங்களை முன்நி தலைமையேற்று நடத்திப் பலமுறை சிறைக்குச் சென்றுள்ளார்.

1967-இல் இந்தியாவின் நிதி அமைச்சராக இருந்த சி. சுப்பிரமணியத்தை எதிர்த்து, கோபிசெட்டிபாளையம் நாடாளுமன்றத்திற்குத் தலைமை அறிவி நாடாளுமன்ற வேட்பாளராக நின்று, தொகுதியில் ஓய்வறியாமல் அலைந்து வெற்றியடைந்தார். 1971-இல் தலைமை அறிவித்தபடி இதே தொகுதியில் நட திருமணத்தைத் தலைமையேற்று நடத்தி வைத்த ஈ.வி.கே.சம்பத் அவர்களை வென்றார். 1967 முதல் 1976 வரை நாடாளுமன்ற உறுப்பினராக பணியாற்றியபோது அவர் செய்த பணிகள் எண்ணிலடங்காதவை. ஆயிரக்கணக்கானவர்களுக்கு அரசுப் பணிகள், கோவையில் தொழி முன்னேற்றத்திற்குண்டான உதவிகள். இப்படி ஆயிரக்கணக்கான கழகத் தொண்டர்களுக்கு உதவிகள் செய்தார். தாழ்த்தப்பட்ட அருந்ததிய மக்களுக்கு சமுதாயக்கூடம் கட்டி வைத்தார். நூற்றுக்கணக்கான திருமணங்கள், கல்வி சலுகைகள் இவர் ஊரில் செய்துள்ளார். இவரை நம்பிக் கெட்டவர்கள் இல்லை. இவரால் நன்மை அடைந்தவர்கள் சிலபேர் இவருக்கு எதிராகப் போனாலும் அதைக்கூட அவர் பெரிதாக எண்ணாமல் அவர்கட்கும் நன்மையே செய்தார்.

1975-இல் அவசரக்கால அறிவிப்பின் மிசாக் கைதியாகக் கைது செய்யப்பட்டார். சிறைக் கொடுமையை எண்ணிப்பார்க்க முடியாது. இருந்தாலும் தன் துணைவியார் சம்பூர்ணத்திடம் கூறித் தி.மு கழகத்தைக் காப்பாற்றி இன்னல்படும் கழகக் குடும்பத்தைக் காப்பாற்றிடு. அது நமது கடமை என்று கூறியதைத் திருமதி. சம்பூர்ணம் இயக்கத்தையும் தொண்டர்களையும் அரவணைத்துக் காப்பாற்றியது கலைஞர் அவர்களுக்கே தெரியும். ஓராண்டு சிறைவாசத்திற்குப் பின் விடுதலையாகி மீண்டும் தி.மு.கழக வளர்ச்சிக்காக பாடுபட்டார்.

புன்செய்ப் புளியம்பட்டியைத் தி.மு.க. கோட்டை என முத்திரை பதித்தவர். இன்றுவரை உள்ளாட்சிகளில் தி.மு.க. தலைமையைத் தவிர யாரும் வென்றதில்லை. பேரூராட்சித் தலைவராக அண்ணன் பி.ஏ.எஸ்., சம்பூர்ணம், சீத்தாராமன், பு.கா.ஆறுமுகம், அக்பர், பி.எஸ். அன்பு என்று வரலாறு படைத்துத் தலைமை பொறுப்பேற்று நடத்தி உள்ளார்கள்.

திரு. அக்பர் பேரூராட்சித் தலைவர் வேட்பாளராகப் போட்டியிட்ட போது




...சேகரிக்கும்போது தவறிவிழுந்து இடுப்பு எலும்பு உடைந்து ...மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அந்த நிலையிலும் நிதி உதவிகளைச் ...ப்பி திமுகழக வேட்பாளரை வெற்றிபெறச் செய்தவர்.

அண்ணன் பி.ஏ.எஸ். அவர்கள் ஒருங்கிணைந்த கோவை மாவட்ட ...செயலாளராக இருந்தபோது 1975-இல் இந்தியாவே வியக்கும் அளவிற்கு மாநாடு ...நடத்தியவர். தன் சொந்த ஊரில் தி.மு.கழகத்திற்குச் சொந்தக் கட்டிடம் கட்டி ...அண்ணா மாளிகை என்று பெயர் வைத்தவர். புளியம்பட்டியில் பேரூராட்சி மன்றக் கட்டிடம், பேருந்து நிலையம், அண்ணல் காந்தியடிகள் சிலை, பேரறிஞர் அண்ணா சிலை, குடிநீர் வசதி, சாலை வசதி, மகளிர் மேல்நிலைப்பள்ளி ஆகியவை உருவாக்கிட பாடுபட்டவர். இவருடைய உழைப்பில் ஊரும், மக்களின் வாழ்வும் உயர்ந்தது. பி.ஏ.எஸ். அறக்கட்டளையின் சார்பாக, நோய்உள்ளவர்களுக்கு மருத்துவ உதவி, ஏழை மாணவர்களுக்குக் கல்வி வசதி ஆண்டாண்டு செய்து வந்தார். கையில் காசில்லாமல் இருந்தாலும் கடன் வாங்கிச் செய்தார்.

தோல்வியைக் கண்டு துவண்டவருமல்லர்; வெற்றியைக் கண்டு மகிழ்ந்தவரும் அல்லர். கழகத் தொண்டர்களுக்குக் காவலராக இருந்தவர், பேரறிஞர் அண்ணா, கலைஞர், பேராசிரியர் ஆகியோரிடம் நட்புக் கொண்டவர். உடுமலை நாராயணன் Ex.M.P., மு. இராமநாதன் Ex.M.P., முன்னாள் அமைச்சர் மு. கண்ணப்பன், இரா. ...ரசன் Ex.M.P., விடுதலைவிரும்பி, ப. கோபால் Ex.M.L.A., அமைச்சர் பொங்கலூர் - பழனிச்சாமி, கா.ரா. சுப்பையன் Ex.M.P., ஆகியோர் அண்ணனிடம் ஆலோசனை கேட்டுக் கோவை மாவட்டத் தி.மு.க. வளர்ச்சிக்கு அயராது உழைத்தவர்கள்.

56-ஆம் ஆண்டு முதல் தி.மு.க.வில் இருக்கும் நான் அண்ணன் பிரிவை எனது அரசியல் ஆசானின் மறைவை எண்ணி வேதனையடைந்தாலும் அவருடைய செயல்பாடு வெற்றிபெறத் தி.மு.கழகம் வளர்ந்திட அவரை நெஞ்சகத்தில் நினைத்து உழைத்திடுவேன்.

அண்ணன் பி.ஏ.எஸ். புகழ் வாழ்க! வளர்க!



"தமிழன் சுயமரியாதை உணர்ச்சி பெற்ற பிறகு, தமிழர்களை இழிவுபடுத்தி, கீழ்ச்சாதி மக்களாக்கிய ஆரியச் சின்னங்களையும், ஆரியக் கடவுள்கள் என்பதான உருவங்களையும், அழித்து ஒழிக்க வேண்டியது, சுத்த ரத்த ஓட்டமுள்ள தமிழனின் கடமையாகும்".

– ஈ.வெ. ராமசாமி


காட்டம்பட்டி - கந்தசாமி
சொத்துப் பாதுகாப்புக்குழு உறுப்பினர்
திராவிட முன்னேற்றக் கழகம்

நட்பின் இலக்கணம் 'பி.ஏ.எஸ்.'

தி.மு.கழகம் - தன்னிகரில்லாத் தன்னலமற்ற லட்சோபலட்ச தொண்டர்களை ஆணிவேராகக் கொண்ட, தமிழர்களுக்கு நிழல் தரும் ஆலமரம். அத்தகைய வேர்களின் தலையாய வேராகப் புன்செய் மண்ணில் உதித்த அன்புச் சகோதரராகச் சாமிநாதன் அவர்கள் திகழ்ந்தார். வாழ்விலும் தாழ்விலும் கழக வளர்ச்சி ஒன்றையே உயிர்மூச்சாகக் கொண்டு செயல்பட்டார். சிங்கத்தை அதன் குகையிலேயே சந்தித்து வெற்றி கண்டார். பதவியிலே இருந்தாலும், இல்லாவிட்டாலும் எளிமை அவர் உடன்பிறந்த நற்குணம். தொண்டர்களுக்குத் தொண்டு செய்யும் எளிய தொண்டர். எவரும் எந்த நேரத்திலும் எளிதில் அணுகக் கூடியவர். சோதனைகள் தொடர்ந்து வந்த காலத்திலும் சற்றும் மனம் தளராத உறுதிபடைத்தவர். மிசாக் காலத்துச் சிறைக் கொடுமைகளை இன்முகத்துடன் எதிர்கொண்டவர். மிசாவிலே கைதாகிச் சிறையினிலே அடைக்கப்பட்டார். எளிய தொண்டர் ஒருவர் அவரை நேரில் கண்டு, தனது வாழ்வாதாரமான விவசாய நிலம் வங்கிக் கடனுக்காக ஏலத்துக்கு வந்துவிட்டது. என்ன செய்வதென்று தெரியவில்லை என ஏக்கத்துடன் தெரிவிக்கிறார். சற்றும் யோசிக்கவில்லை. நேராக என்வீடு செல். என் மனைவி சம்பூர்ணத்திடம் நான் சொன்னதாகச் சொல்லித் தேவைப்படும் தொகையைப் பெற்றுக்கொள் என்றார். எப்படிப்பட்ட சூழ்நிலையில் இருந்தாலும் கழகத் தொண்டனைக் கலங்க விடக்கூடாது என்பதில் உறுதியாக இருந்த உத்தமர். இதுபோல் பல நிகழ்வுகளைச் சொல்ல முடியும். அவரது இழப்பு எனக்குத் தனிப்பட்ட முறையில் பேரிழப்பு. **கழகத்திற்கோ, ஈடுசெய்ய முடியாத இழப்பு. நட்பின் இலக்கணத்தின் புகழ் ஓங்குக!**



> **நெருப்பு அணைக்கப்பட வேண்டியது;**
> **அதைப்போலவே ஆதிக்கம் எதிர்க்கப்பட வேண்டியது!**
> — அண்ணா



Dr. M. செந்தில்நாதன் M.B.B.S., M.S.
[illegible]
[illegible]



மச்சான்

அன்றைய கோவை மாவட்டத்தில் எப்பக்கம் திரும்பினாலும் [illegible] எதிர்ப்பும் சூழ்ந்திருந்த காலத்தில் கழக வளர்ச்சியில் கண்ணும் [illegible] இருந்து தொல்லைகளையும் துயரங்களையும் தாங்கித் [illegible] அல்லும் பகலும் அயராது பாடுபட்டு அண்ணாவும் கலைஞரும் [illegible] வியந்து பாராட்டும்வண்ணம் கழகக் கோட்டையினை நம் [illegible] அமைத்தவர் என் மச்சான் 'சாதனைச் செம்மல்' பி.எ. சாமிநாதன் [illegible] ஆம். 1959-இல் சாமிநாதன் - சம்பூர்ணம் திருமணத்தை [illegible] எங்கள் குடும்பம். அன்றுமுதல் நான் அவரை 'மச்சான்' [illegible] அவர் என்னை அன்போடும் பாசத்தோடும் 'செந்தி' என்றும் [illegible] கொள்வோம். என்னை 'செந்தி' என்று அழைத்த ஒருவர் அவர் [illegible] அவரது கடைசி மூச்சு என் மடியில்! ஆம் எங்களின் [illegible]மனையில்தான். கடைசி மூச்சை என்னிடத்தில்தான் விடவேண்டும் [illegible] பலமுறை அவர் விரும்பிக் கேட்டதின் பேரில். அந்தத் துயரமான [illegible] என் மருத்துவமனையில் நடைபெற்றது. என்னைத் துன்பக் கடலில் [illegible] கொண்டே இருக்கிறது.

விருந்தோம்பலில் அவருக்கு நிகர் அவரே. நான் அருகில் இருந்தால் [illegible] சாப்பிடாமல் அவர் சாப்பிடுவதே இல்லை. ருசியானதை என்னைச் [illegible] வைத்து மகிழ்வார். இதை எழுதும்போதே கண்ணீர் வடிகிறது [illegible] அவரது நெஞ்சார்ந்த அன்பினை என்னவென்று சொல்வது!

எங்கள் உறவு - குடும்ப உறவு, அரசியலுக்கு அப்பாற்பட்டது. என் குடும்ப நிகழ்வுகள் அவர் குடும்பம் இல்லாமல் நடைபெறாது. அவரது குடும்ப நிகழ்வுகள் என் குடும்பம் இல்லாமல் நடைபெறாது. அவரது குடும்ப நடவடிக்கைகளைத் தட்டிக்கேட்கும் அதிகாரம் படைத்தவனாக நான் இருந்தேன். ஆற்காட்டார் என்னைப் பார்க்கும் போதெல்லாம் உங்கள் [illegible]' சாமி எப்படி இருக்கிறார்? என்றும், பேராசிரியர் 'சாமி' எப்படி இருக்கிறார் என்று மச்சானைப் பத்தி விசாரிப்பது இன்னும் ஒலித்துக்

கொண்டே இருக்கிறது எம்.ஜி.ஆர். அவர்கள் 'புரட்சியின்' என்றுதான்

நான் கேட்டதெல்லாம் கொடுக்க தோமியவில்லைவிட்டாலும், அவர் சொல்லேன் அவரைத் தெரிந்தவர்கள் என்னை அறியாமல் இருக்க அவர் எனக்குக் கொடுக்க இயலாதது கழக எம்.எல்.ஏ. எம்.பி. பதவி நான் எதிர்பார்க்கவில்லை முடியாமல் போனது அதுவொன்றே. ஆ பலமுறை முயன்றும் எனக்குக் கொடுக்க இயலாமல் போனதற்கு மக்கள் அவர்களே என் தொழில் பாதிப்படையக் கூடாது சிறப்புடைய சேவையும் குறைபட்டு விடக்கூடாது என்ற எண்ணம் அவருக்கு காரணத்தால் அவர் அதை எனக்குச் செய்ய முன்வரவில்லை. அதனா உறவு என்னையும் பாதிக்கவில்லை. மாறாக பலமடங்கு பலமாக காரணம் அவரது அந்த எண்ணமே இன்று கோபியில் ஒரு சிறந்த மருத்துவமனை உருவாகிக் கொண்டிருக்கிறது என்றால் அது மிகையாகாது. தொலைநோக்கு எண்ணம் என்னைப் பெருமிதப்படைய வைத்தது.

அவர் நினைவும், என் உடன்பிறவா அண்ணன் கோபி D.R. பல் P.R. நடராஜன் அவர்கள் நினைவும் எங்களை வாட்டி வதைத்துக் இருப்பதால், எங்கள் குடும்பம் சமூகநலச் சேவையில் சிறப்படைந்து வருகிறது என்பது உள்ளங்கை நெல்லிக்கனி போன்றதாகும்.

அவர்களது ஆன்மா சாந்தி அடைய இந்த 'நினைவு மலர்' மலர்ந்து பரப்ப நானும் வேண்டுகிறேன்.

'அண்ணாவின் தீர்மானங்கள்'




1944-ஆம் ஆண்டில் சேலம் மாநாட்டில் கொண்டுவந்த தீர்மானங்கள்.

முதல் தீர்மானம் : ஆங்கிலேய அரசாங்கம் வழங்கிய சின்னங்களாகக் கருதப்பட்ட ராவ்பகதூர், ராவ் சாகேப், சர், பகதூர் போன்ற பட்டங்களை விட்டொழிக்க வேண்டும்.

இரண்டாம் தீர்மானம் : ஆங்கிலேய ஆட்சியில் உள் ளாட்சி போன்ற அமைப்புகளில் பெற்றுள்ள கௌரவப் பதவிகளை கைவிட வேண்டும்.

மூன்றாம் தீர்மானம் : ஒவ்வொருவரும் தம்முடைய பெயருக்கு ஒட்டிவரும் சாதிப் பெயர்களை வெட்டி எறிந்திட வேண்டும்.

நான்காம் தீர்மானம் : தென்னிந்திய நல உரிமைச் சங்கம் அழைக்கப்பட்டுவந்த நீதிக் கட்சியின் பெயர் 'திராவிடர் கழகம்' மாற்றப்படுகிறது.



சொ. கொண்டப்பன்
[illegible] செயல் அலுவலர்
பு. புளியம்பட்டி




பன்முகப் பகுத்தறிவாளர் திரு. பி.ஏ.எஸ்.

"நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்
பண்பு பாராட்டும் உலகு"
- திருக்குறள்

திரு. பி.ஏ. சாமிநாதன் அவர்கள் அரசியல்வாதி, சிந்தனைவாதி, பகுத்தறிவுவாதி என்றுதான் பெரும்பாலானவர்களின் எண்ணத்தில் இடம் பெற்றுள்ளார். ஆனால் அவர் ஆன்மீகத் துறையிலும் தனது முத்திரையைப் பதித்துள்ளார் என்பதற்குப் பல எடுத்துக்காட்டுகள் உண்டு. ஆன்மீகப் பணியிலும் தன் செல்வாக்கைப் பயன்படுத்திப் பல நிகழ்வுகளில் பல ஊர்களில் கோவில்கள் கட்டியும், அதற்கான முயற்சிகளுக்கு ஊக்கமளித்தும் வாழ்ந்து பல நற்பணிகளைச் செய்து சமுதாயத்தின் அனைத்துத் தரப்பினரிடமும் நற்பெயர் ஈட்டியுள்ளார்.

திரு. பி.ஏ.எஸ். அவர்கள் மிகச் சாதாரணக் குடும்பத்திலே பிறந்தவர். பள்ளிப் பருவத்திலேயே சாதி, மதங்களுக்கு அப்பாற்பட்டுச் சடங்கு சம்பிரதாயங்களுக்கு எதிராகவும், போலி ஆன்மீகக் கருத்துகளுக்கு அடிமையாகாமல் தீவிரப் பகுத்தறிவுவாதியாகப் பழகியும், முன்மாதிரியாக நடந்தும் வந்தார். சுமார் 60 ஆண்டுகளுக்கு முன்பே புன்செய்ப் புளியம்பட்டி, பக்திநெறியில் வாழ்ந்து பழக்கப்பட்ட ஊர். அந்தக் காலகட்டத்தில் இவ்வூரில் செங்குந்த குலத்தைச் சேர்ந்தவர்களும், ஒக்கலிக கவுடர் வகுப்பைச் சேர்ந்தவர்களும் அதிகமாக வாழ்ந்து வந்தனர். செங்குந்த முதலியார் குலத்தைச் சேர்ந்தவர்களுக்கு மிகச்சிறிய அளவில் பிளேக் காமாட்சியம்மன் கோவிலும், ஒக்கலிக கவுடர் மக்களுக்கு பிளேக் மாரியம்மன் கோவிலும், ஒடுவேய்ந்த கட்டிடங்களில் வழிபாடு நடத்தி வந்தனர்.

திரு. பி.ஏ.எஸ். அவர்கள் தனக்குப் பிடிக்காத கொள்கைகளை யார் மீதும் திணிக்கவோ, ஆன்மீகத்துக்கு எதிராகவோ நடந்து கொண்டதில்லை. அவர் எல்லா மதத்தினரையும் - சாதியினரையும் - கட்சியினரையும் பாகுபடுத்திப் பேசுவதோ, மாறுபாடாக நடந்து கொண்டதோ கிடையாது.



[illegible] பெரியோர்களின் தலைமையுடன் 23.10.1977-ஆம் நாள் [illegible] விழாவையும் மிகவும் சிறப்பாக நடத்திக் கொடுத்தார். [illegible] புளியம்பட்டியில் பிற்காலத்தில் குடியேறிய தேவாங்க குல [illegible] கோவில் இல்லாமல் இருந்தது. அந்தச் சமுதாயமும் [illegible] புளியம்பட்டி மறைமலையடிகள் தெருவில் சுமார் ஒரு [illegible] குறைந்த விலைக்கு வாங்கிக் கொடுத்து உதவி செய்தார். பின்னர், [illegible] சௌடேஸ்வரியம்மன் கோவிலையும், சௌடேஸ்வரி [illegible] திருமண மண்டபத்தையும் மிகவும் எழிலுற அமைத்துக் கொள்ளப் பல [illegible] செய்து கொடுத்தார். இதனால் அக்குலத்தவர்களும் சிறப்போடு வாழ்ந்து [illegible] பெரியவர் பி.ஏ.எஸ். அவர்களை மனதார வாழ்த்தி வருகின்றனர். [illegible] அரங்கு, அரியப்பம்பாளையம் போன்ற பல ஊர்களில் பல ஆன்மீகப் [illegible] முன்நின்று நடத்திக் கொடுத்துள்ளார். எனவே திரு. பி.ஏ.எஸ். அவர்கள் [illegible]வாதியாகவும், பகுத்தறிவுவாதியாகவும், வாழ்ந்ததோடு அல்லாமல் [illegible] பக்தி நெறிகளுக்கும் பக்கபலமாகத் தொண்டு புரிந்துள்ளார் என்றால் [illegible] மிகையாகாது.

❦ ❦ ❦

இலக்கியவாதி அண்ணா

தந்தை பெரியாரோடு அண்ணா ஐக்கியமாகியவுடன் ஈரோடு வந்து விடுதலை இதழின் துணை ஆசிரியர் ஆனார். இதை அவரது பேனா முனைக்குக் கிடைத்த சிறந்த [illegible] என்றுதான் குறிப்பிட வேண்டும். அதில் ரிப்பன் கட்டிடத்துச் சீமான்கள் என்ற தலையங்கம் எழுதினார். யாரையும் அதிகம் பாராட்டி அறியாத பெரியார், தன் வீட்டு முதல் மாடியிலிருந்த அண்ணாவை, மூச்சிரைக்க மாடி ஏறி வந்து பாராட்டினார்.

அறிஞர் அண்ணா வாழ்நாள் முழுவதும் படிப்பார்வம் கொண்டவராக விளங்கினார். சிறந்த நாவன்மை படைத்தவர், கண்டி இழுக்கும் எழுத்தாளர் என குறிப்பிட்டிருந்தார், தாமரைத் திரு டாக்டர். நெ. து. சுந்தரவடிவேலு அவர்கள். அண்ணாவின் படைப்புகளைப் பட்டியலிடத் தேவையில்லை: கடிதம், கட்டுரை, சிறுகதை, கதை, குறும் புதினம், புதினம், நாடகம், திரைப்பட உரையாடல், திறனாய்வு, சொற்பொழிவு எனச் சுமார் பதினோரு இலக்கிய வடிவங்களில் கருத்துப் புரட்சி செய்தவர்.



பாரதிதாசன் பாடல்களை நாட்டுக் கவிகளைப் போல், [illegible] காலத்தின் கண்ணாடி ஆக்கினார். காலத்தையே [illegible]த்தார் என்பதோடு காலத்தையே மாற்றினார். காலத்தை [illegible]ந்தார் என்பது மட்டுமல்ல, மாறிய காலத்திற்குத் தமிழர்களை அழைத்துச் சென்றார். அழைத்துச் சென்றது மட்டுமல்லாமல், சமயம் கிடைக்கும்போது, முன்னேயும் [illegible]த்துத் தள்ளினார் என்று புகழாரம் அணிவித்து மகிழ்ந்தார்.

அரசூர்ப் பகுதியில் பி.ஏ.எஸ். ஆற்றிய அரும்பணிகள்

அரசூர்ப் பகுதிப் பொதுமக்களுக்குப் பி.ஏ.எஸ். அவர்கள் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த காலத்திலும் அதற்குப் பிறகும் செய்த பல நற்காரியங்கள்.

1. ஊர்ப் பொது இடம் 16 ஆண்டுகள் தனியார் ஆக்கிரமிப்பில் இருந்த இடத்தைப் பி.ஏ.எஸ். அவர்கள் தலையிட்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்குச் செய்து தந்துள்ளார்கள்.
2. கைத்தறி நெசவாளர்களுக்கு நூல் விலை உயர்வால் நெசவுத் தொழில் பாதிக்கப்பட்டு இருந்த நேரத்தில் சுமார் 500 கைத்தறி நெசவாளர்களுக்குத் தறி ஒன்றுக்கு ரூ. 100/ வீதம் அரசிடம் பெற்றுத் தந்துள்ளார்.
3. ஆற்று வெள்ளத்தாலும், மழை வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவித் தொகைகள் பெற்றுத் தந்துள்ளார்.
4. அரசூர் - புதூரில் உடைப்பு எடுத்துக் குடியிருப்பில் தண்ணீர் நிறைந்து நெசவாளர்கள் பாதிக்கப்பட்டிருந்த நேரத்தில், அரசூர் - புதூரில் தடுப்புச் சுவர் கட்டிக் கொடுத்து நெசவாளர்கள் துயர் துடைத்தார்.
5. இண்டியம்பாளையம் பஞ்சாயத்திற்குப் பஞ்சாயத்து அலுவலகம் நீண்ட காலமாகவே கட்ட முடியாத நிலையில் இருந்துவந்தது. ஏ.வி. முருகேசன் அவர்கள் தலைவர் ஆனபிறகு, பி.ஏ.எஸ். அவர்கள் தலையிட்டுப் பஞ்சாயத்து அலுவலகம் கட்டுவதற்கு அனைத்து உதவிகளையும் செய்தார். அலுவலகம் கட்டி முடிக்கப்பட்டு 06.06.1990 அன்று பி.ஏ.எஸ். தலைமையில் வேளாண்துறை அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.
6. இண்டியம்பாளையம் பஞ்சாயத்துத் தேர்தலில் ஆர். முருகேசன் அவர்களைத் தலைவர் பொறுப்பிற்கு நிற்க வைத்து அனைத்து உதவிகளையும் செய்து அவரை வெற்றிபெறச் செய்தார்.

அரசூர் - புதூரில் சாந்தாமணி என்ற பெண்ணுக்குக் நடைபெறக்க அறுவைச் சிகிச்சை பெற அனைத்து உதவிகளையும் செய்து தந்தார்.

அரசூர் - புதூரில் சிவகாமி என்ற பெண்ணுக்குச் செய்ய வேண்டிய பெரிய அறுவைச் சிகிச்சை ஒன்றுக்கு உண்டான அனைத்து உதவிகளையும் செய்துதந்தார்கள்.

அரசூர் கழகச் செயலாளர் ஏ. சுப்பிரமணியம் அவர்கள் நெசவாளர் சொசைட்டியில் தலைவராக இருந்தபோது நடந்த தவறுக்காகக் கைது செய்யப்பட்டுச் சிறையில் இருந்த சமயம், அவரின் ஜாமீனுக்காக ரூ.1,000/ செலுத்தி வெளிக்கொணர்ந்து, அவரின் கழகப்பணி மீண்டும் தொடர உதவினார்.

அரசூர் அ.பெ.மாரியப்பன் கழக நண்பர். அவர் உடல்நலக் குறைவால் மருத்துவமனையில் இருந்தபோது நிதியுதவி செய்து உதவினார்.

அரசூர் பஞ்சநாதன் என்பவர் பி.ஏ.எஸ். அவர்களால் பணி கிடைக்கப் பெற்று இன்று நல்ல நிலையில் உள்ளார்.

அரசூர் அருள்மிகு காமாட்சியம்மன் திருக்கோயில் திருப்பணிக்குப் பி.ஏ.எஸ். அவர்கள் ரூ. 10,000/ கொடுத்து உதவினார்கள்.

இவ்வண்ணம்,

அரசூர்ப் பொதுமக்கள்

ஏ.வி. காளியப்பன்	ஏ.ஏ. முருகேசன்
ஏ. சுப்பிரமணியன்	ஏ.வி. முருகேசன்
ஏ.எம். நாகலிங்கம்	கே. பழனிச்சாமி
ஏ. கந்தசாமி	ஆர். சென்னியப்பன்



கருத்தரங்குகளின் பணி

சிந்தனைகளைச் சேகரித்துக் கோவைப்படுத்தி விடுவதே கருத்தரங்குகளின் பணியாகும். தங்களையொத்த அறிஞர்களின் முன்னிலையில் தங்கள் அறிந்தவற்றை எடுத்துக்கூறி, எந்த அளவு தங்கள் கருத்து அவர்கள் கருத்தோடு ஒத்துப்போகிறது, எந்த அளவு வேறுபடுகிறது என்று அறிந்து, மேலும் அதுகுறித்த விவாதத்திற்கு வழி வகுத்து, இத்தகைய கருத்தரங்குகளிடமிருந்து நற்பலன்களை எதிர்பார்த்திடும் மக்கள்முன் கனிந்து உருவாகிய கருத்துக்களை வைத்திட வேண்டும்.

- அண்ணா


கே. சேரமசுந்தரம்
எலத்தூர் - செட்டிபாளையம்



பொதுநலத் தொண்டர் பி.ஏ.எஸ்.

புன்செய்ப் புளியம்பட்டிப் பெரியவர் திரு. பி.ஏ.எஸ். அவர்கள் 1967-ஆம் ஆண்டு கோபித் தொகுதி நாடாளுமன்ற வேட்பாளராகப் போட்டியிட்டபோது, எலத்தூர் - செட்டிபாளையத்துக்குத் தேர்தல் பிரச்சாரத்திற்கு வந்தபோதுதான் எனக்கு அறிமுகம் ஆனார். அப்போது முதல் அவருடன் எனக்குத் தொடர்பு உண்டு. 1967-ஆம் ஆண்டு தேர்தலில் ஆள்பலம், பணபலம் கொண்ட வேட்பாளரைத் தோல்வியுறச் செய்து நாடாளுமன்ற உறுப்பினர் ஆனார்.

கோவை, ஈரோடு, திருப்பூர் மாவட்டங்களில் திராவிட முன்னேற்றக் கழகத்தை வளர்த்த பெருமை திரு. பி.ஏ.எஸ். அவர்களைச் சாரும் என்றால் அது மிகையாகாது. திரு. பி.ஏ.எஸ். அவர்கள் நாடாளுமன்ற உறுப்பினராகவும், கோவை மாவட்டச் செயலாளராகவும் இருந்த நேரத்தில் பொதுமக்கள் சொல்லும் குறைகளைக் கேட்டுச் சம்பந்தப்பட்ட அதிகாரிகளைச் சந்தித்து உடனடியாகக் குறைகளை நீக்கம் செய்துள்ளார். பொதுமக்கள் எந்தக் கட்சியைச் சேர்ந்தவராக இருந்தாலும் குறைகளைத் திரு. பி.ஏ.எஸ். அவர்களிடம் சொன்னால் உடனடியாக நீக்க ஆவன செய்வார். உதாரணத்திற்கு, எங்கள் ஊருக்குச் செய்த உதவியைக் கூறக் கடமைப்பட்டுள்ளேன். எங்கள் ஊரில் திரு. சி.பி. கந்தசாமி முதலியார் கட்டிடத்தில் வாடகை இல்லாமல் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வந்தது. ஆரம்ப சுகாதார நிலையம் கட்ட இலவச நிலமும் பொதுமக்கள் மூலம் ரூபாய் 25,000/ வசூல் செய்து அரசுக்குச் செலுத்தும்படி உத்திரவு பிறப்பித்தார்கள். எங்கள் கிராமப் பொதுமக்கள் மூலம் ரூபாய் 25,000/ வசூல் செய்து அரசுக்குச் செலுத்தினோம். எங்கள் எலத்தூர் ஊராட்சி, நிலத்தை வழங்கியது. ஆனால் அரசு எங்கள் ஊரில் சுகாதார நிலையம் கட்ட எந்த முயற்சியும் எடுக்கவில்லை. சுமார் 10 ஆண்டுகளுக்கு முன் நானும், எங்கள் ஊரைச் சேர்ந்த 4 நபர்களும் புன்செய்ப் புளியம்பட்டி சென்று, பெரியவர் திரு. பி.ஏ.எஸ். அவர்களிடம் எங்கள் ஊரில் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் கட்டப் பணம் வசூல்



... கட்டியும் சுமார் 30 ஆண்டுகளாகக் கட்டித் தரவில்லை என்று கூறி சம்பந்தப்பட்ட ஆவணங்களையும் காண்பித்தோம். சுமார் ஒரு மாதத்திற்குள் சம்பந்தப்பட்ட அரசு அதிகாரிகளைச் சந்தித்து அரசு ஆரம்ப சுகாதார நிலையம் கட்ட அனுமதி வாங்கிக் கொடுத்து, மேற்படி ஆரம்ப சுகாதார நிலையம் கட்டும் பூமி பூஜைக்குத் தலைமை தாங்கி நடத்திக் கொடுத்தார். மேற்படி சுகாதார நிலையம் சுமார் 10 ஆண்டுகளாக நல்ல முறையில் செயல்பட்டுக் கொண்டுள்ளது. மேலும் ... ஊரில் மாரியம்மன் கோயில் திருப்பணி 1993-ஆம் ஆண்டு நடந்தது. மாரியம்மன் கோயில் குறிஞ்சி மண்டபம் கட்ட திரு. பி.ஏ.எஸ். அவர்கள் ரூபாய் 11,500/ நன்கொடை வழங்கியுள்ளார்கள். பெரியவர் திரு. பி.ஏ.எஸ். அவர்களின் மறைவு- கோவை, ஈரோடு, திருப்பூர் மாவட்ட மக்களுக்குப் பேரிழப்பாகும்.

அண்ணாவின் மாண்பு

அன்புள்ள தம்பிக்கு என்று அவர் எழுதிய கடிதம் வடிவிலான கட்டுரைகளும், தம்பி உடையான் படைக்கு அஞ்சான் என்று தனது மேடைப் பேச்சுக்களில் குறிப்பிடுவதன் மூலம் தனது கட்சித் தொண்டர்களை மனங்குலையாமல் உற்சாகத்தோடு அரவணைத்து அரசியல் வெற்றித் திக்கை நோக்கி அழைத்துச் சென்ற பாணியும் மகத்தானது.

அரசியலில் மாற்றுக் கருத்தை ஏற்பதிலும், நட்பிற்கு அரசியல் வேறுபாட்டை மறப்பதிலும் அறிஞர் அண்ணா இலக்கணமாய்த் திகழ்ந்தார். இந்தியத் திருநாடு விடுதலை பெற்றதை மகிழ்ச்சியோடு வரவேற்ற அவர், காங்கிரஸ் ஆட்சி மீது அன்றைய நாளில் சில கருத்து வேறுபாடுகளைக் கொண்டிருந்தாலும் தேசப்பிதா மகாத்மாகாந்தி அவர்களைப் போற்றி நூல் எழுதினார். அவரது திருவுருவச்சிலை திறந்தார். இவையெல்லாம் அண்ணாவின் உயர்ந்த அரசியல் பண்புகளாகும்.

பெருந்தலைவர் காமராஜர் இடைத் தேர்தலில் போட்டியிட்ட பொழுது, குணாளா, குலக்கொழுந்தே என்று வாழ்த்தியவர் அண்ணா. சென்னை மாநகராட்சி - தி.மு.க. வசமிருந்த நேரத்தில் பெருந்தலைவர் காமராஜருக்குப் பிரதமர் பண்டித நேருவின் திருக்கரத்தால் திருவுருவச் சிலை திறந்து வைக்க ஆவண செய்தவர்.

காங்கிரஸ் தலைவர்கள் குறித்தோ, ஆட்சி நிர்வாகத்தைக் குறித்தோ எதிர்க்கட்சித் தலைவர் என்ற நிலையிலிருந்து விமர்சனம் செய்கிற நேரங்களில் நாகரிகச் சொல்லையே பயன்படுத்திய பண்பிற்சிறந்த நாவுக்கரசர் அவர்.

இந்திய தேசியம்தான் மாநிலங்களின் வளத்திற்கும், நலத்திற்கும் பொதுக்காப்பு அரண் என்பதை ஏற்று, அதற்கேற்பத் தனது கட்சியின் கொள்கையை யொற்றி இந்திய ஒருமைப் பாட்டுணர்வோடு அரசியல் பணியை அமைத்துக் கொண்டவர் அண்ணா.

பி.ஏ. சாமிநாதன் அவர்களின் கல்விப் பணிகள்

தமிழன்னை கல்வி அறக்கட்டளை

செல்லப்பம்பாளையம், பு. புளியம்பட்டி

புளிசை மாநகரின் விடிவெள்ளியாய், உதிக்கின்ற செங்கதிரவனாய், தித்திக்கின்ற தேன்கனியாய்த் திகழ்ந்த நம் கொங்கு நாட்டின் சிலர் திருவாளர் பெரியவர் பி.ஏ. சாமிநாதன் அவர்களின் கல்விப் பணிகள் குறித்துச் சிறு துளிகள்.


நம் கிராமத்துச் சிட்டுகளும், காளைகளும் பட்டங்கள் ஆளவும் சட்டங்கள் செய்யவும் கல்லூரியே இல்லாத கிராமப் பகுதியில் கல்லூரிக் கல்வியை அளித்தவர் நம் பெரியவர் அவர்கள்.

அய்யன் திருவள்ளுவர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியானது அரசாணை எண். 91/08.03.2001-இல் தொடங்கப்பட்டது.

B.Com (CA) - 32 மாணவர்கள், B.C.A. - 27 மாணவர்கள், B.Sc. (CS) - 22 மாணவர்கள் ஆக 81 மாணவர்களுடன் தொடங்கப்பட்டு இப்போது 2010-2011 ஆம் கல்வியாண்டில் 228 மாணவர்களாக உய.ர்ந்துள்ளது.

Salient Features :

- Well qualified faculty members.
- Well equipped lab for all departments.
- Internet facility.
- Excellent results in University Examinations.
- Training and Placement cell.
- Loan facility for all students.
- Government Scholarship facilities for BC/MBC/SC/ST students.
- Campus Interview arrangements.
- Regular weekly test and feedback to the parents.



பவானி மேனிலைப்பள்ளி

நிப்பள்ளியானது பெரியவர் பி.ஏ. சாமிநாதன் அவர்களின் முயற்சியின் இ
...ம் வகுப்பு முதல் 12-ஆம் வகுப்பு வரை ஆங்கிலம் மற்றும் தமிழ் வழிக்
...ல்வி தொடங்கப்பட்டு இயங்கி வருகின்றது.

6-10 வரை அங்கீகார எண். நி.மு.எண். 108/94/2002 நாள் : 16.12.2002

11-12 வரை அங்கீகார எண். நி.மு.எண். 144854/12/2000 நாள் : 30.01.2001

...வர்களுக்கு வழங்கப்படும் சலுகைகள் :

...நில அளவில் முதலிடம் பெறுபவருக்கு 12-ஆம் வகுப்பு - ரூ. 1 லட்சமும், ...வகுப்பு - ரூ. 50,000 ம் வழங்கப்படும். மாவட்ட அளவில் முதலிடம் ...பவருக்கு 12-ஆம் வகுப்பு - 50,000 ரூபாயும், 10-வகுப்பு - 25,000 ரூபாயும் ...ங்கப்படும். 12-ஆம் வகுப்பில் 90% மேல் மதிப்பெண் பெறும் மாணவர்களுக்கு ரூ.10,000 உதவித்தொகை பெற்றுத்தரப்படும்.

...ரியவரின் கல்விப் பணியால் எங்களுக்குக் கிடைத்த விருதுகள் :

Indian Human Right Vigilance Organisation (Regd.)

National Integrity Cultural Academy இன் சார்பாக *"Indian Citizen Achievement Award"* என்ற விருதினை எங்கள் தாளாளர் திருமதி. சம்பூர்ணம் சாமிநாதன் அவர்களுக்கு வழங்கிச் சிறப்புச் செய்தது.

சந்திராயன் திட்ட இயக்குநர் திரு. **மயில்சாமி அண்ணாதுரை** அவர்கள் 11.01.2010 அன்று எங்கள் தமிழன்னை கல்வி அறக்கட்டளை நிறுவனங்களுக்கு வருகைபுரிந்து, பெரியவர் ஆற்றிய கல்விப் பணிகள் பற்றிச் சிறப்புரை ஆற்றினார்கள். இதுவும் பெரியவர் வாழ்வில் மறக்கமுடியாத பசுமையான நினைவேயாகும்.

2003-2004இல் 10-ஆம் வகுப்புப் பொதுத் தேர்வில் 100% தேர்ச்சி - **"விடியல் சாதனைப் பள்ளி விருது"**

2006-2007இல் 12-ஆம் வகுப்புப் பொதுத் தேர்வில் 100% தேர்ச்சி - **"விடியல் சாதனைப் பள்ளி விருது"** வழங்கியோர் - **விடியல் சமூகநல இயக்கம்.** இத்தகைய விருதுகளுக்கு **ஆணிவேராய்த் திகழ்ந்தவர் பெரியவர் பி.ஏ. சாமிநாதன்** அவர்களே. பெரியவர் பி.ஏ. சாமிநாதன் பல அல்லல் பட்டுச் சிகரங்களைத் தொட்டவர்.

> **வாலிபர் உள்ளம்**
>
> பகுத்தறிவு உன்னும் பகலவனால் எரிக்கப்பட்டு, தன்நலம் - தன்சுகம் ஆகிய நச்சுப்பூச்சிகளால் அழிக்கப்பட்ட தூய்மையானதோர் வட்டாரம், வாலிபர் உள்ளம்.
>
> \- அண்ணா

அன்னை காவேரி ஆசிரியர் பயிற்சி நிறுவனம்

நமது பகுதியில் நல்ல ஆசிரியர் உருவாக எங்கள் கல்வி அறக்கட்டளையின் தந்தை பெரியவர் பி.ஏ.எஸ். அவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சியால் அன்னை காவேரி ஆசிரியர் பயிற்சி நிறுவனம் சிறந்த ஆசிரியர் பயிற்சி நிறுவனமாக செயல்பட்டு வருகின்றது.

F SPO/NCTE/D.T.Ed./2006-2007-9676 CODE: APSO 3688

To be published in the gazette of India part III sec-4.

Were as terms of section 14(1) of the NCTE act 1993 Tamil Annai Educational & Charitable Trust, Coimbatore (Dt.), Tamilnadu has submitted an application to the southern regional committee NCTE for grant of recognition to Annai Kaveri Teacher Training Institute, Sellappampalayam (P.O.), P. Puliampatti (Via), Coimbatore (Dist.) - 638 459, Tamilnadu for Elementary (D.T.Ed.) Course of 2 Years duration with and annual intake of 50 (fifty) students.

நிறுவனர் பி.ஏ. சாமிநாதன் Ex.M.P., அவர்களால் தொடங்கப்பட்டது.

தொடக்க நாள் : 07.03.2007. DTERT Reg. No. RC3157/2007-832007

NCTE Reg. No.FSRO/NCE/DTED/200-07/9676


தேசிய ஆசிரியர் கல்விக் குழுமம் நாள் : 22.12.2006.

பி.ஏ. சாமிநாதன் அவர்களின் தனித்தன்மை :

பள்ளி, கல்லூரி மற்றும் ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில் பயிலும் மாணவர்களுக்குக் கட்டணச் சலுகை மற்றும் ஏழை எளிய மாணவர்களுக்கு பொருளுதவிகள் செய்தார். பல பொறியாளர்களையும், மருத்துவர்களையும் உருவாக்கிய செம்மல். புளிசை மாநகரின் மாணவர்களுக்குக் கல்விக்கண் திறந்தவர் **"தொண்டின் வடிவம் எங்கள் சாமி"** என்று திரு. **பண்ணன்** அவர்களால் போற்றப்பட்டவர். **வாழ்க அவர்தம் புகழ்!**



> **மக்களாட்சிக்கு வலிவு**
> **மாணவர்கள்தான்.**
>
> \- அண்ணா



[illegible]



மனிதன் என்பவன் தெய்வமாகலாம்!

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்"

[illegible] பள்ளி வாழ்க்கையில் [illegible] தன் மரணத்திலும் வாழ்ந்துகாட்டிய என் தந்தை [illegible]

புன்செய்ப் புளியம்பட்டி - கோவை வழிப்பாதை என நினைவு தெரிந்த நாளை நான் அறிந்தது. அன்று அப்பாதை எனக்குப் பழக்கமில்லாத [illegible] தோன்றியது. வாழ்க்கையில் உடன் நின்று வழிகாட்டிய [illegible] வழிப்பாதையிலும் உடன் நின்று வழி நடத்தி இருக்கிறார் என்ற உண்மை புலப்பட, அவரது அருமை கண்டு பெருமிதம் கொண்டது [illegible]

'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' என்னும் முதுமொழிக்குப் பொருள் உணரச் செய்து எங்களை அவைக்குள் முந்தியிருக்கச் செய்த உங்களுக்கு, மக்கள் தந்தைக்காற்றும் உதவியே எங்கள் வாழ்வு.

உங்களைத் தொலைத்துவிட்டு
உலகத்தில் தேட ஏதுமில்லை எங்களுக்கு.
நீர் காட்டிச் சென்ற வான்மழைபோல்
புன்செய்க்கு நீர்வார்த்து
நீர் காட்டிய இலக்கை அடைய
வழிகாட்டி மட்டுமே நாங்கள்.

என் முன் இரு எழுத்துக்களும், பின் இரு எழுத்துக்களும் நீங்களே பெற்றுத்தந்தது. 'அன்பு மகள் ராணிக்கு' என்கிற தங்களின் [illegible] நெஞ்சம் ஏந்திய கடிதமே எனக்கு வாழ்க்கை முறை சொல்லும் [illegible]

'கடமை, கண்ணியம், கட்டுப்பாடு' என்றுரைத்த பேரறிஞர் அண்ணாவின்பால் பேரன்பு கொண்ட நண்பர் நீங்கள் என்றும், அண்ணாவின் நெஞ்சில் மதிப்புமிகு இடம்பிடித்த நட்பின் இலக்கணம் நீங்கள் என்பதும் அனைவரும் அறிந்த ஒன்றே! காலத்திற்கும் செல்வமில்லை பண்பு என்று உணர்த்திய நும் வாழ்க்கையே எம் வழி.



அன்பு மகள்
மணிமேகலை முருகேசன்
பு. புளியம்பட்டி



அன்பின் உருவம் எங்கள் அப்பா!

அன்பே உருவான அப்பா, எங்கள் அப்பாரும், அப்பத்தாளும் எங்களுக்கென்று படைத்திட்ட அற்புதமான படைப்பப்பா நீங்கள்! பிள்ளைகளின் தேவையறிந்து கவனித்திட அம்மாவிற்கும் உங்களுக்கும் நேரமில்லாக் காரணத்தால் உடை, உணவு, பாதுகாப்பான உறைவிடம் நேரமறிந்து எங்களுக்குக் கிடைக்க மாணிக்கமான அத்தையை வழங்கிய அம்மை அப்பர் நீங்கள்!


இல்லையென்று உங்களை நாடி வந்தவர்க்கு இல்லையென்னாமல் கொடுத்த கர்ணன் நீங்கள்!

பகைவனுக்கும் அருளும் பண்பில் வள்ளலார்! நோயென்று வந்தவர்க்கு உதவிய தன்வந்திரி! உள்ளத்தில் ஒன்றையும் மறைத்து வைக்கத் தெரியாமல் உடைத்துப் போடுவதில் சிறு குழந்தை! பொதுத் தொண்டே பெரிதென்று இருந்த உங்களிடம் வீட்டிற்கு வந்திருந்த ஒருவர் (அரசியல்வாதி) யாரென்று நினைவில்லை, உங்களுக்கு எத்தனை குழந்தைகள்? என்று கேட்டதற்கு "இரண்டு பெண்கள் ஒரு பையன்" என்று சொன்னது மறந்திருக்கும்! குடும்பத்தின் உறுப்பினர்களைக்கூட மறந்துவிடும் அளவுக்குக் கழகத்திற்கு உறுப்பினர்களைச் சேர்த்த கடமை வீரர் நீங்கள்!

நீலகிரி, ஈரோடு, திருப்பூர், கோவை ஒருங்கிணைந்த மாவட்டத்தின் செயலாளராக இருந்து 1975-இல் மாபெரும் மாநாடு நடத்திக்காட்டி, தி.மு.க. கோட்டையாக்கி வைத்திருந்ததை யாரும் மறுக்க முடியாது.

இவ்வளவு நற்பண்புகள் கொண்ட உங்களுக்கு ஒருமுறையாவது மந்திரி பதவி வாய்க்கவில்லையே என்ற பெரிய ஆதங்கம் என் மனதில் இருந்தது. ஆனால், இப்போதுதான் புரிகிறது... நல்ல மக்களை (புளியம்பட்டி) மந்திரிகளாகக் கொண்ட நீங்களே ஒரு குறுநில மன்னன் எனும்போது அந்தப் பதவி உங்களுக்கு எதற்கு?

நீங்கள் இந்தப் பூமியில் உதித்தது இந்தப் புளியம்பட்டி மண்ணைப் புடம்போட்டுத் தங்கமாக்கவோ! உதித்த சூரியனை நம் ஊரிலேயே பதித்து வைக்கவோ...




...ளை இருந்தாலும் ஆயிரம் பொன்; இறந்தாலும் ஆயிரம் பொன்) என்பதை
...ர் மக்கள் நன்கு அறிந்து வைத்திருக்கிறார்கள் என்பதற்கு 2011 நகராட்சி
...தேர்தலின் முடிவே சான்று. "பெரியவர்" என்ற பட்டமும் ஊர் உலகை
...க்கு மட்டுமே!

நோயுற்று வந்த எத்தனையோ பேருக்கு உரிய மருத்துவ ஏற்பாடு செய்து ...களின் இறப்பைச் சிறிதாவது தள்ளி வைத்து, காலனின் (எமனின்) செயலுக்குத் ...விழித்து வந்ததாலே உங்களை அவன் துன்புறுத்திக் கவர்ந்து கொண்டானோ! சிறுவயதில் உங்களுடன் அதிகம் ஒட்டாத எனக்கு இறுதிக் கட்டத்தில் ...மையைத் தெரியவைத்து, 3 மாத காலமாக அனுதினமும் ...விருந்து, வாழ்க்கையில் உயில் பெரிதன்று, உயிரும், உணர்வுமே பெரிதென்று ...உணர்த்திய நீங்கள்தான் எங்களின் உண்மையான சொத்து! நீங்கள் இல்லாதது ...வாழ்க்கைக்கே பித்து!

கடவுள் நம்பிக்கை நிறைய உள்ள எனக்கு, மறுபிறப்பிலும் உறுதியான ...பிக்கை உள்ளது. உங்களிடம் வேண்டிக் கேட்பது, மறுபிறப்பில் உங்கள் ...னாகப் பிறக்க வேண்டும். இல்லையேல் நீங்கள் இந்தப் பிறப்பிலேயே எங்கள் ...கள் வயிற்றுப் பேரனாக வந்து பிறக்க வேண்டும். இஃது எனக்காக மட்டுமல்ல, ...களைப் பிரிந்து வாடும் நல் இதயங்களின் காயத்திற்கு நல்மருந்தாக இருக்கும் ...ற நம்பிக்கையின் வேண்டுகை.


தன்னலமற்ற தலைவர்களான காந்தியடிகள், **அண்ணா, பெரியார், காமராசர்,** எம்.ஜி.ஆர். வரிசையில் உங்களையும் என் மனதில் சேர்த்து வைத்து விட்டேன். வாழ்க உங்களின் பண்பு நலன்கள்!





அண்ணாவின் அழகுத் தமிழ் !

அண்ணாவின் அழகுத் தமிழ்! அடுக்குச் சொல்லாற்றல் நன்கு
கூர்தீட்டபட்ட அறிவாயுதமாக ஆரியத்தின் மீது பாய்ந்தது! புராணங்களின்
புரட்டுகளும் வேதங்களின் வண்டவாளங்களும் வெளிப்படுத்தப்பட்டன!
அண்ணாவின் சொல்லாற்றலால் அறிஞர் பெருமக்கள் அடிமைப்பட்டனர்.
திராவிட இயக்கம் மேற்கொண்ட பகுத்தறிவுப் பிரச்சாரத்தில் அண்ணாவின்
பேச்சைப் பழித்தும், இழித்தும் பேசி வந்தவர்களுக்குப் பதிலாகவே **சாக்ரடீசாக**
அண்ணா அவர்களை உருவகப்படுத்தி எழுதிய வசனமாகும். அதே போல
ஆயிரமாயிரம் பேச்சாளர்களை உருவாக்கி அரசியல் மேடையானாலும்,
இலக்கிய அரங்கமானாலும், மாநாடுகளானாலும் அழகுத் தமிழை
நர்த்தனமாடவிட்ட பெருமை **அண்ணா** அவர்களையே சாரும்!



புலவர் கிருட்டிணன்
தாராபுரம்

நினைவலைகள்...

உயர்வு தாழ்வு சொல்லி ஒரு சாதி உயர்ந்ததெனவும் மற்றதை தாழ்ந்ததெனத் தமிழினத்தைப் பிரித்து, ஒற்றுமையுடன் வாழ்ந்த இனத்தை 'வருணாசிரமம்' என்னும் பெயரால் பிரித்துச் சீரழித்துச் சாதி என்னும் தீயை வேதம், வேள்வி என்னும் சூதுவலை விரித்த சூதர்களின் வஞ்சகத்தைச் சிந்தனையெனும் தேர் ஏறித் தாக்கியழித்த தன்மானப் பெருந்தலைவன், மனித இனத்தின் மாண்பினை, மனித உள்ளம்தோறும் நிலைபெறச் செய்த உலக முதுபெரும் சிந்தனையாளர் ஈரோட்டு இங்கர்சால் பெரியார் அவர்களின் தளபதியாகிய பேரறிஞர் அண்ணா அவர்கள் கண்ட திராவிட முன்னேற்றக் கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு கடமையாற்றிய பெருந்தகையாளர் புளியம்பட்டி பி.ஏ. சாமிநாதன் அவர்கள்

அந்த நினைவுகளில் சில...

திராவிட முன்னேற்றக் கழகம் தோற்றுவிக்கப்பட்ட பின் மாவட்டச் செயலாளராகக் கோவைச் செழியன் நியமிக்கப்பட்டுச் செயலாற்றி வந்தார். அடுத்து நடைபெற்ற மாவட்டக் கழகத் தேர்தலில் அறிஞர் அண்ணாவால் 'உடுமலை தேசிங்கு' என்று பாராட்டப்பெற்ற உடுமலை நாராயணன் தேர்தலில், கன்னிவாடி கே.எஸ்.சிரங்கராயரை வென்று மாவட்டச் செயலாளராகப் பணியாற்றி வந்தார்.

அதன்பின் நடைபெற்ற மாவட்டக் கழகத் தேர்தலில் அன்புக்குரிய அண்ணன் கோவைச் செழியன், புளியம்பட்டி சாமிநாதன் போட்டியிட்டு அண்ணன் சாமிநாதன் வென்று மாவட்டச் செயலாளர் ஆனார். அப்பொழுது கழகச் செயல் மறவர்களாக விளங்கியவர்கள் தேவசகாயம், கோவை மு. ராமநாதன், சி.டி. தண்டபாணி, சானகிராமன், கோபி இராசு, குன்னத்தூர் க. அன்பரசு, புளியம்பட்டி சீத்தாராமன், பு.கா. ஆறுமுகம், கோபி ஜி.பி. வெங்கிடு, மேட்டுப்பாளையம் தூயமணி, ரசாக், உடுமலை பருவதக்கண்ணன், அப்பாஸ், எஸ்.ஜே. சாதிக்பாட்சா, காளியப்பன்.

சந்தி கண்ணப்பன், காங்கயம் தனிகாசலம், அப்பன் பழனிச்சாமி, கோவில் வீராசாமி, கே. ராமசாமி, திருப்பூர் இரா.முருகேசன், ...ழு கே.எம். சரபோசி, மூலனூர் சோமு, அழகிரிசாமி, முத்து, ...சாமி, ரங்கபாளையம் துரைசாமி, அவினாசி இராசு, கம்புளியம்பட்டி ... ப. கோபால், வே. கிருஷ்ணமூர்த்தி, சோதி பழனிச்சாமி, பவானி கண்ணன், ...ராமு, வால்பாறை இராமசாமி ஆகியோர் கழகப் படையின் விசயமங்கலம் ...யவர்கள் ஆவர்.

சேலம் அம்மாப்பேட்டையில் எழுச்சி மாநாடு. மாநாடு முடியும் முன் ...! என்னைக் கண்டதும், அறை எடுத்திருக்கிறாயா? என அண்ணன் ...டார். ஒரு அறைதான், அதில் அண்ணன் சீத்தாராமன், திருப்பூர் துரை, எம்.பி. ...ப்பன் மற்றும் இருவர். படுக்க இடமில்லை. ஈ.வி.கே. சம்பத்தும் ...தாசனும் பிரிந்த நேரம் "எட்டடுக்கு மாளிகையில் ஏற்றிவைத்த என் ...வன்" பாடலைக் கேட்டும் பேசியும் விடிந்தது பொழுது.

திராவிட முன்னேற்றக் கழகச் சிறப்புப் பொது மாநாடு கோவை சிதம்பரம் ...கா மைதானத்தில் ஊரும் உலகமும் போற்றத்தக்க மாநாடு. மாபெரும் பந்தல் அமைப்பு! நூற்றுக்கணக்கான தொலைக்காட்சிப் பெட்டிகள், புதிதாகத் தொலைக்காட்சிப் பெட்டி வந்தநேரம். வாணவேடிக்கையும், அலங்கார ...வுகளும், படை மறவர் அணிவகுப்பும் பார்த்தவர் வியக்க அமைந்தது. ...ண்டோர் வியக்கக் கவின்மிகு மாநாடு! அண்ணன் இரவு பகல் பாராது உணவு ...க்கம் பாராமல் உழைத்துப் பெருமை சேர்த்தார்! நண்பர்கள் துணைக்கொண்டு ...நாளில் ஆற்றிய அரும்பணியாகும்.

தாராபுரத்தில் சீரணி அரங்கைப் பேராசிரியர் அவர்களோடு வந்து ...றுவைத்த நிகழ்வும், நிதியளிப்புப் பொதுக்கூட்டத்திற்குத் தலைவர் கலைஞரோடு ...யைப் பெற்றுக்கொண்டு இராமச்சந்திராபுரம் செல்லத் தலைவரோடு என்னையும் ...வென்று அழைத்துச் செல்லும்போது, பூளவாடியில் உடுமலை நாராயண ...ளைக்கண்டு பேசிச்சென்ற நிகழ்வினையும் மறக்க முடியுமா?

தேர்தல் நிதி திரட்ட அறிஞர் அண்ணா அவர்கள் வந்தபோது எங்களூர் ...பாளையம் வந்து நிதி பெற்றுச்சென்ற நிகழ்வு வரலாற்றுச் சிறப்புமிகு ...லாகும்! மாநாட்டு நிதிக்காக எஸ்.ஏ. இராசமாணிக்கம், கோவை மு. ராமநாதன், திருப்பூர் துரைசாமி, உடுமலை நாராயணன், மு. கண்ணப்பன், தேவசகாயம் உடன்வர ...கள் வந்து சென்றது வரலாற்றுக் குறிப்பன்றோ!

நான் உடல் நலம் குன்றி இருந்தபோது செய்தியறிந்து வந்து, கோவைப் பொது மருத்துவமனைக்கு அனுப்பி வைத்து வேண்டிய உதவியைச் செய்து சென்றீர்கள். என் உயிர் உள்ளவரை மறக்கவொண்ணாப் பெருமைமிகு செயல் அல்லவா!

ஒருங்கிணைந்த கோவை மாவட்டம் பெருமைகொள்ளத் தக்க சிறப்பு... செயலாளராகக் கழகத்தை வளர்த்த கடமை வீரன்! இரண்டு ... நாடாளுமன்றத்திற்குத் தேர்ந்து எடுக்கப்பெற்று நாடும் ஏடும் போற்ற ... தோறும் பாசறைக் கூட்டம் நடத்தி. முன்னேற்றக் கழகத்தைச் சிங்க ஏறு... சிலிர்த்தெழச் செய்த செயல் மறவன்! உடுமலை நாராயணன் மறைவிற்குப் பி... அவர்களின் திருமகன் பவானிசிங் திருமணம் நடைபெற இயலாத நிலை... நீங்களும் மு.கண்ணப்பன் அவர்களும் பொறுப்பேற்றுத் திருமணத்தை நன்முறை... நடத்தி வைத்து. அந்தக் குடும்பத்திற்கு விளக்கேற்றி வைத்தமை தனிவரலாறாகும்.

நான் நேரில் கண்டவற்றில் சில:

வாடிவந்த முகத்தைக் கண்டு. தேடிய செல்வத்தைக் கொட்டிக் கொடுத்த... உங்கள் கரமல்லவா!

எளியோர்க்கும் இல்லாதவர்க்கும் கல்விக்குக் கொடுத்து உதவிய கருணை... மனமல்லவா!

இன்னலுக்கும், இடுக்கணுக்கும் ஆளானவரை நாடிச்சென்று இன்னல் தீர்... பெருந்தகையாளன் நீ!

புளிசையில் நீ வளர்த்த கழகத்திற்கு அரண்மனை போன்ற மாளிகையினை... தந்து மகிழ்ந்தவன் நீ!

'ஆலயம் தொழுவது சாலவும் நன்று' எனச் சான்றோர் சொல்லுவர். ஆ... அண்ணன் வாழ்ந்த இல்லமே நான் வணங்கும் ஆலயம்!

நானும் நண்பர் செந்தில் முத்துசாமியும் ஒருநாள்அல்ல எத்தனையோ நாள்க... எண்ணற்ற முறை கண்டவுடன் முகம் மலர்ந்து மணிக்கணக்கில் பேசிப்பெற்ற இன்பத்தைக் கண்ணீர்க் காவியம் ஆக்கிச் சென்ற உள்ளம் கவர்ந்த குணக்குன்றே உன்னை மண்ணுலகம் மறத்தலும் கூடுமோ!?



கட்டுப்பாடும் ஒழுங்கும்
சாதாரணமானவைதான்.
ஆனால் இந்த மாதிரி
சாதாரண விசயங்களைக்
கொண்டுதான் ஒரு சமூகத்தை
எடைபோட முடியும்!

- அண்ணா



செ. குமாரராஜா B.Sc.,
த/பெ. கோ.ப. வெங்கிடு Ex.M.L.A.,
தலைவர் - திருப்பூர் மாவட்டப் பகுத்தறிவாளர் கழகம்,
அவிநாசி - 4

பெரியார், அண்ணா வழியில் பெரியவர் பி.ஏ.எஸ்.

இலட்சக்கணக்கானோர் சரித்திரத்தைப் படிக்கிறார்கள். அவர்களில் ஒருவர் தான் சரித்திரத்தைப் படைக்கிறார். நினைவுமலர் வெளியிடப்படுகிற போதே, தெளிவாகத் தெரிகிறது - சரித்திரத்தைப் படைத்தவர் இவர்தான் என்பது. **'சாதனைச் செம்மல்'** என்றும், **'பெரியவர்'** என்றும் ஊர் மக்களாலும், **'சாமி'** என்று சக நண்பர்கள் மற்றும் தலைவர்களாலும் **'அண்ணன்'** என்று தி.மு.கழகத் தோழர்களாலும் அவரவர் விருப்பத்திற்கேற்ப அழைக்கப்பட்ட **'பெரியவர்' பி.ஏ.எஸ்.** அவர்கள்.

அவர்தம் வாழ்க்கை என்னும் வரலாற்றில் **நேற்று, இன்று, நாளை** என முக்காலத்திற்கும் மற்றவர்களுக்குப் பயன் தரும் சில செய்திகளை எடுத்துக் கூற எனக்கும் ஒரு வாய்ப்புக் கிடைத்திருப்பதை, என் வாழ்வில் மறக்க முடியாத தருணங்களில் ஒன்றாகவே கருதுகின்றேன். அதற்காக, **அக்கா சம்பூரணம்** அவர்களுக்கும், அவர்தம் திருமகன் **அன்பு** உள்ளிட்ட குடும்பத்தார்க்கும் என் மனமார்ந்த நன்றியை முதலில் தெரிவித்துக் கொள்கிறேன்.

பொதுவாக, மனமுவந்து பொருள் உதவியோ, அல்லது பிற உதவிகளோ செய்பவர்கள், பெரும்பாலும், கோயில் கட்டவும், கடவுள் காரியங்கள் செய்யவும் தான் பெரும் விருப்பத்தோடு முன்வருகிறார்கள். அவர்களே - பெரியார் பெயரைச் சொல்லிக் கொண்டும் பகுத்தறிவு, இன, மானப் பிரச்சாரம் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, அணுகும் போதும் முற்றிலும் மாறுபடுகிறார்கள். தன்னை நாடி வந்துள்ளார்கள் என்பதற்காக, விருப்பம் இருந்தோ, இல்லாமலோ நட்புக்காக உதவி செய்கிறார்கள்.

ஆனால், நமது பெரியவர் அவர்களோ, இதற்கு நேர்மாறானவர். அவரிடம் பெரியவர் என்றும் **அண்ணா** என்றும் சொல்லிக் கொண்டு உதவி கேட்டு வரும் தோழர்களிடம், **நான் இதற்காகத்தான் காத்துக்** கொண்டிருந்தேன் என்று சொல்லாமல்சொல்வதைப் போல நடந்து கொள்ளும் தந்தை **பெரியாரின் சீடன்** பேரறிஞர் **அண்ணாவின் தம்பி** அவர். கை நிறைய அள்ளிக் கொடுத்து வாய் நிறைய உற்சாகமூட்டி உற்றதுணையாக என்றும்

நான் இருக்கிறேன் என்று நம்பிக்கை ஊட்டி மற்றவர்களைப் பணியாற்ற வைப்பவர்.


அவர் தன் வாழ்நாளில் எந்த ஒரு கடவுளையும் நம்பிக்கையுடன் வேண்டிக்கொண்டு நம்பிட்டவர் அல்லர். அதே சமயம், கடவுள் நம்பிக்கையாளர்கள், அவரை நாடி வந்து ஏமாற்றதுடன் திரும்பிப் போனதும் கிடையாது. தனது கொள்கைக்கும் பங்கம் வாராமல், அதே நேரத்தில், சக நண்பர்களின் மனமும் நோகாமல் தன்னால் இயன்ற உதவிகள் செய்து தரும் பண்பாளர்.

பெரியவர் அவர்களின் இருகண்களில் ஒன்று பெரியார், மற்றொன்று அண்ணா. நாத்திகக் கொள்கைகள், பகுத்தறிவுச் சிந்தனைகள் தாய் மொழியாம் தமிழ் மொழியைக் காக்கவும், வளர்க்கவும், விழிப்புடன் இருந்து, வீரத்துடன் பணியாற்றிய திராவிட இயக்க வரலாறு அவர். தி.மு.க. என்னும் ஆலமரத்தைத் தமிழகத்தின் மேற்கு மண்டலத்தில் வேரூன்றச் செய்து தண்ணீர் ஊற்றியவர்களுக்குத் தலைவனாக இருந்து, கண்ணீரும் செந்நீரும் ஊற்றிக் கட்சியைக் கட்டிக் காத்தவர் என்பது உலகு அறிந்த உண்மையாகும்.

கழகத்தில் பலர், பொருளாதார நிலையில் துவண்டுபோய் நின்ற காலத்தில் **'இடுக்கண் களைவதாம் நட்பு'** என்ற தொடருக்கு இலக்கணமாக இருந்து, பலருக்கு கைகொடுத்தவர் - கை தூக்கிவிட்டவர் நமது 'பெரியவர்' ஆவர். வாழ்வின் இறுதிக் கட்டத்தில் ஆதரவற்று இருந்த பலருக்கு, அரசின் உதவித்தொகை வந்து சேர்வதற்கு முன்பாக, இவரது உதவித்தொகை சென்று சேர்ந்துவிடும். அது மட்டுமன்று, உதவி செய்யும் இவருக்கும், உதவியைக் கேட்டுப் பெறும் நண்பருக்கும் இடையில் நடைபெறும் இந்தச் செயல், இவர்கள் இருவருக்கும் மிகவும் நெருக்கமாக இருப்பவர்கள் ஒரு சிலருக்கு மட்டுமே தெரியும். அந்த அளவுக்கு உதவி பெறுவோர் தன்மானத்திற்கு எந்த விதத்திலும் ஊறு நேரா வகையில் அவர் உதவும் பாங்கு தனிச் சிறப்புடையது.

“உனக்கு மேலானவர் என்று யாரும் இல்லை, உனக்குக் கீழானவர்கள் என்று யாருமில்லை” என்ற தந்தை பெரியார் அவர்களின் தத்துவத்தையும், “ஆதிக்கமற்ற சமுதாயம், அமைத்தே தீருவோம்” என்ற அறிஞர் அண்ணா அவர்களின் கொள்கையையும், உணர்வுப்பூர்வமாக ஏற்றுக் கொண்ட காரணத்தால், சகமனிதர்கள் அனைவரிடமும் சாதி - மதம் பார்க்காமலும், உயர்வு - தாழ்வு கற்பிக்காமலும், ஏழை பணக்காரன் என்று எண்ணாமலும், சரிநிகர் சமானமாக வாழ்ந்து காட்டியவர்.

ஊரில் இருக்கும் மிகப் பெரிய செல்வந்தர் ஒருவரைச் சந்தித்து உரையாடி விட்டு ஊரில் இருக்கும் மிகவும் வறிய ஏழை ஒருவரைப் பார்த்தும் பேசிவிட்டு வந்தால் பெரியவர் எனது நெருங்கிய நண்பர் என்றும், எனது நலம் விரும்பி என்றும் ஒரே மாதிரி இருவரும் பேசுகிற காட்சியைச் சாதாரணமாகக் காணலாம்! இது கட்சிகளைக் கடந்து மாற்றுக் கட்சியில் உள்ளவர் கூறுவது கொண்டும் உணரலாம்.



[illegible]

[illegible]

[illegible] - கட்டிக்காக உழைத்த குடும்பம் ஒன்று பெரியவர் அவர்களை அணுகி எப்படியாவது தங்கள் மகளுக்கு ஆசிரியைப் பயிற்சி பள்ளியில் பயிற்சிக்கு இடம் வாங்கித் தர வேண்டும் என்று கூறுகிறார்கள். அவர்கள் பொருளாதார நிலையில் மிகவும் பின்தங்கி இருந்த காரணத்தால், நன்கொடை எதுவும் தர இயலாது என்றும் விளக்கிக் கூறி உதவி கேட்கிறார்கள்.

பெரியவர் அவர்கள் தீவிரமாக யோசித்துப் பார்த்துவிட்டு ஆசிரியர் கி. வீரமணி அண்ணனை சந்தித்து திருச்சியில் உள்ள பெரியார் நாகம்மை ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில் இடம் கேட்க முடிவு செய்கிறார். உடனே என்னை அனுப்பி அய்யா அண்ணனை சந்திக்க வேண்டும் என்று கூறினார்கள்.

அந்த சமயத்தில் - மானமிகு கி. வீரமணி அண்ணன் அவர்கள், ஒரு பெரிய சுற்றுப் பயணத்தை முடித்து விட்டு, குன்னூரில் உள்ள தி.க. துணைப் பொதுச் செயலாளர் டாக்டர், மருத்துவர் பிறைநுதற்செல்வி - கவுதமன் அவர்களின் இல்லத்தில் ஓய்வு எடுத்துக் கொண்டிருந்தார் என்கிற செய்தியைப் பெரியவர் அவர்களிடம் கூறினேன்.

உடனே, சற்றும் தாமதம் செய்யாமல், பெரியவர் என்னை அழைத்துக் கொண்டு குன்னூர் புறப்பட்டுச் சென்று, ஆசிரியர் கி. வீரமணி அய்யா அவர்களைச் சந்தித்து நிலைமைகள் அனைத்தையும் விளக்கிக்கூறி உதவி கேட்கிறார்கள். இத்தனைக்கும் அவர் நாங்கள் அணுகிய நேரம், தமிழகத்தில் உள்ள அனைத்து ஆசிரியப் பயிற்சி நிறுவனங்களிலும், சேர்க்கை முடிந்து வகுப்புகள் தொடங்கிய நேரம். திருச்சியிலும் அதே நிலை. வேறு வழியில்லை பள்ளிச் சேர்க்கை முடிந்துவிட்டது என்று கூறி என்னைத் திருப்பி அனுப்பி விடுவார் என்று மனதுக்குள் நினைக்கத் தொடங்கினோம். ஆனால் பெரியவர் மீது, ஆசிரியர். வீரமணி அவர்கள் எவ்வளவு தூரம் மதிப்பை வைத்திருந்திருந்தார் என்பதை அன்று நேரில் பார்க்க முடிந்தது.

பள்ளிச் சேர்க்கை முடிவடைந்துவிட்ட நிலையில் - நூற்றுக்கணக்கில் காத்திருப்போர் பட்டியலில் காத்திருக்கும் நிலையில் - மாணவர்கள் நன்கொடையைக் கொண்டு திருச்சிப் பள்ளி இயங்கிக் கொண்டிருந்த வளாகத்தில் அரசு அதிகாரிகளிடம் சிறப்பு அனுமதி பெற்றும் பெரியவர் மாணவியைச் சேர்த்துக் கொள்வதாகவும், எவ்வித நன்கொடையும் பெறாமல் சேர்த்துக் கொள்வதாகவும் மானமிகு ஆசிரியர் கி. வீரமணி அவர்கள் கூறியபோது சிறிது நேரம் நான் மலைத்துப் போனேன். இவர் மீது அவர் கொண்டிருந்த மரியாதைக்கு இந்த ஒன்றே போதும் என்று கருதுகிறேன்.

பெரியவர் அவர்களின் மணிவிழாவும், மகள் அன்பு அவர்களின் மணவிழாவும் மானமிகு ஆசிரியர் கி.வீரமணி அவர்களின் வாழ்த்துரை மற்றும் தலைமையுரையுடன் நடைபெற்றது? என்பதை வாசகர்கள் இந்த நேரத்தில் நினைத்துப் பார்க்க வேண்டுகிறேன்.


சமூகப் பணியிலும் கல்விப் பணியில் பெரியவர்

பெரியவர் அவர்கள் தம்வாழ்நாளில் இரண்டு பணிகளை ஒரு போதும் நிறுத்தியதில்லை. ஒன்று, அடிக்கடி முரசொலி, விடுதலை, தினகரன் போன்ற நாளேடுகளில் வெளிவரும் மிகச் சிறந்த கட்டுரைகளை அப்படியே அச்சிட்டு வழங்கிக் கொண்டிருந்தார்கள்.

மற்றொன்று, ஒவ்வொராண்டும் ஜூன் மாதத்தில், டாக்டர் கலைஞர் அவர்கள் பிறந்த நாளையொட்டி வசதி குறைவான நிலையில் கல்லூரிகளில் இடம் கிடைத்து சேர முடியாமல் அல்லல்பட்டு வந்த மாணவ, மாணவியர் ஐம்பது பேருக்கு குறைவில்லாமல், கல்வி உதவித்தொகை தரும் நற்செயலை, எப்பாடுபட்டாவது நிறைவேற்றி வந்தார்கள்.

இதன் விளைவாகப் புன்செய்ப் புளியம்பட்டிப் பகுதியை ஒட்டி கல்லூரி ஒன்றைத் துவங்கி, மற்ற குழந்தைகளுக்கும், குறைந்த கட்டணத்தில் கல்வி தர வேண்டும் என்கிற எண்ணம் அவர் மனதில் உதிக்கிறது. அதன் தொடர்ச்சியாகக் கோவை பாதையில், செல்லப்பம்பாளையம் கிராமத்தில் இடம் வாங்கப்படுகிறது.

அங்கே, கலைக் கல்லூரி ஒன்றைத் துவங்கும் நோக்கில், அய்யன் திருவள்ளுவர் கலை அறிவியல் கல்லூரிக்கு விண்ணப்பம் செய்து, அன்றைய கல்வி அமைச்சர் இனமானப் பேராசிரியர் அவர்களிடம் அனுமதி கேட்டு, உரிய கோப்பு வைக்கப்படுகிறது. அவற்றைப் பொறுமையாகப் படித்துவிட்டுப் பேராசிரியர் அவர்கள், பொதுவாக கல்லூரி என்றால் நகர்ப்புறத்தையே மக்கள் பெரிதும் விரும்புகிறார்கள். தற்போது, சத்தி வட்டத்தில், கலை, அறிவியல் கல்லூரி இல்லை என்பதால், உங்கள் கல்லூரியைப் புளியம்பட்டி நகரை ஒட்டி அமைப்பதை விட சத்தியமங்கலம் அருகில் அமைப்பதே சிறந்தது என்று அறிவுரை கூறுகிறார்கள்.



பெரியவர் அவர்களோ, எங்கள் ஊர் மிகவும் வறட்சியான, பின்தங்கிய எங்கள் பிள்ளைகள் பொருளாதார ரீதியாகத் தொலைவிலிருந்துப் பயண நேரத்தைக் குறைக்கவும் எனக்கு இந்த இடத்திலேயே அனுமதி என்று கேட்டு, அனுமதி வாங்கினார்கள்.

ஆனால் பின்னாளில், பேராசிரியர் அவர்கள் கூற்று தொலைநோக்குப் பார்வை டது என்பதை உணர்த்தியது. எஃது எப்படியோ, பெரியவர் அவர்கள் யைத் தொல்லைப்பட்டு நடத்தினாலும், அவர் எண்ணப்படி பல ஏழை மற்றும் மக்கள் வீட்டுக் குழந்தைகள் எளிதாகக் கற்க முடிந்தது என்பதே யாகும்.

பெரியவர் அவர்களின் வாழ்க்கையானது - திருக்குறளில் உள்ள 1330 களில் ஒரு குறளுக்கு மகத்தான வெற்றியையும், மற்றொரு குறளுக்கு சற்று வியையும் கொடுத்திருக்கிறது.

"அகழ்வாரைத் தாங்கும் நிலம் போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை"

என்கிற திருக்குறளுக்குப் பெரியவர் வாழ்ந்த வாழ்க்கை மிகப் பெரிய வெற்றியைக் த்து மெய்ப்பித்திருக்கிறது.

அதே சமயம்,

"தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினாற் சுட்ட வடு"

என்கிற குறள் பெரியவரிடம் தோற்றுவிட்டது. என்றே கூறலாம்.

பிறர் கூறும் கடுஞ்சொற்கள், அந்த நேரத்தில் அவரை வேதனைக்கு உள்ளாக்கி க்கலாம். அதனால் தோன்றிய வருத்தம் அவரிடம் நீண்ட நாள்களுக்கு த்ததில்லை. வெகு எளிதில் **மன்னித்து விடுவார் - மறந்தும் விடுவார்.** எனவே அவர் தில் தீயினாற் சுட்ட புண்ணும் இல்லை, அவர் மனதில் நாவினால் சுட்ட வடுவும் லை. அதனால்தான்,

"குணமென்னும் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயுங் காத்தல் அரிது"

என்று திருவள்ளுவர் கூறியுள்ளாரோ? என்னவோ?

மொத்தத்தில் நேரம் தவறாமை - உதவும் உள்ளம் - சலியாத உழைப்பு - வசீகரிக்கும் ப்பு - கண்ணோட்டமுள்ள கனிவான பார்வை - பாரபட்சமற்ற அன்பு - இலட்சியத்தில் ராத உறுதி எனப் பல பண்பு நலன்களின் நாயகர். அவர் மறைந்தும் மறையாத தர்! அவரை வாழ்க என்பதில் பெருமை கொள்கிறேன்.

பெரியவர் பி.ஏ.எஸ். புகழ் வாழ்க! வாழ்க!

வி. செந்தில்வேல்
[illegible]
[illegible]

உண்மைத் தொண்டன்

பெரியவர் [illegible] 'அரசுத்துறை' [illegible] இரண்டு பெரும் சோதனை. 50 ஆண்டுகளுக்கும் மேலாக அவரின் பாதையைத் தொடர்ந்த எண்ணற்ற [illegible] உண்மைத் தொண்டர்கள் அவரில்லாத வெறுமையை நாளுக்கு நாள் அதிகமாக உணர்கிறோம். என்னைப் பொறுத்தவரை இப்பகுதியில் அண்ணன் இல்லாத அரசியல் நிகழ்வுகள் - இறைவன் [illegible] கோவிலில் நடைபெறும் வெற்று விழாக்களாகத்தான் தோன்றுகின்றன.

தொண்டர்கள் பால் பற்றும் - பாசமும் - பரிவும் கொண்ட அண்ணனின் [illegible] உருவம் எங்களின் உள்ளத்தில், எங்கள் வாழ்நாள் உள்ளவரை அழிக்க இயலாத நினைவுச் சின்னமாகப் பதிந்திருக்கும்.

அக்கா சம்பூரணம் அவர்கள், அண்ணனின் பிரிவுத் துயரிலிருந்து - தங்கள் உள்ளத் திண்மையால் - ஓரளவாவது மீண்டு, கல்லூரி விழாக்களிலும், பொது நிகழ்வுகளிலும் கலந்து கொள்ளும் நிகழ்வுகளைச் செய்தித் தாள்களின் வழியாக அறிந்து ஆறுதலடைகிறேன்.

மாசற்ற அண்ணனின் தூய நல் எழுச்சி, - அடிபொற்றி வளரும் செல்வன் அன்புமணியின் பணிகளுக்கும் - எழுச்சிக்கும் வழிவகுக்கும்!

வாழ்க பெரியவரின் தூய அரசியல் பணிகள்!

தந்திரம்

சாதி - இன்று ஒழிய வேண்டுமா? வேண்டாமா? என்பது தான் இன்றுள்ள கேள்வி. பாழாய்ப்போன சாதிப் பேச்சு தொடங்கிவிட்டதா? இன்று அந்தக் கேள்விக்குரிய விடை அன்று. சாதியை நிலைநாட்டுவதற்குரிய தந்திரம்.

-அண்ணா

- அரசூர் - புதூரில் சாந்தாமணி என்ற பெண்ணுக்குக் நடவிறக்க அறுவை சிகிச்சை பெற அனைத்து உதவிகளையும் செய்து தந்தார்.
- அரசூர் - புதூரில் சிவகாமி என்ற பெண்ணுக்குச் செய்ய வேண்டிய பெரிய அறுவைச் சிகிச்சை ஒன்றுக்கு உண்டான அனைத்து உதவிகளையும் செய்துகொடுத்தார்கள்.
- அரசூர் கழகச் செயலாளர் ஏ. சுப்பிரமணியம் அவர்கள் நெசவாளர் சொசைட்டியில் தலைவராக இருந்தபோது நடந்த தவறுக்காகக் கைது செய்யப்பட்டுச் சிறையில் இருந்த சமயம், அவரின் ஜாமீனுக்காக ரூ 3,000/ செலுத்தி வெளிக்கொணர்ந்து, அவரின் கழகப்பணி மீண்டும் தொடர உதவினார்.
- அரசூர் அ.பெ.மாரியப்பன் கழக நண்பர். அவர் உடல்நலக் குறைவால் மருத்துவமனையில் இருந்தபோது நிதியுதவி செய்து உதவினார்.
- அரசூர் பஞ்சநாதன் என்பவர் பி.ஏ.எஸ். அவர்களால் பணி கிடைக்கப் பெற்று இன்று நல்ல நிலையில் உள்ளார்.
- அரசூர் அருள்மிகு காமாட்சியம்மன் திருக்கோயில் திருப்பணிக்குப் பி.ஏ.எஸ். அவர்கள் ரூ. 10,000/ கொடுத்து உதவினார்கள்.

இவ்வண்ணம்,

அரசூர்ப் பொதுமக்கள்

ஏ.வி. காளியப்பன்	ஏ.ஏ. முருகேசன்
ஏ. சுப்பிரமணியன்	ஏ.வி. முருகேசன்
ஏ.எம். நாகலிங்கம்	கே. பழனிச்சாமி
ஏ. கந்தசாமி	ஆர். சென்னியப்பன்



கருத்தரங்குகளின் பணி

சிந்தனைகளைச் சேகரித்துக் கோவைப்படுத்தி விடுவதே கருத்தரங்குகளின் பணியாகும். தங்களையொத்த அறிஞர்களின் முன்னிலையில் தாங்கள் அறிந்தவற்றை எடுத்துக்கூறி, எந்த அளவு தங்கள் கருத்து அவர்கள் கருத்தோடு ஒத்துப்போகிறது, எந்த அளவு வேறுபடுகிறது என்று அறிந்து, மேலும் அதுகுறித்த விவாதத்திற்கு வழி வகுத்து, இத்தகைய கருத்தரங்குகளிடமிருந்து நற்பலன்களை எதிர்பார்த்திடும் மக்கள்முன் கனிந்து உருவாகிய கருத்துக்களை வைத்திட வேண்டும்.

- அண்ணா




கே. சோமசுந்தரம்
எலத்தூர் - செட்டிபாளையம்

பொதுநலத் தொண்டர் பி.ஏ.எஸ்.

புன்செய்ப் புளியம்பட்டிப் பெரியவர் திரு. பி.ஏ.எஸ். அவர்கள் 1967-ஆம் ஆண்டு கோபித் தொகுதி நாடாளுமன்ற வேட்பாளராகப் போட்டியிட்டபோது, எலத்தூர் - செட்டிபாளையத்துக்குத் தேர்தல் பிரச்சாரத்திற்கு வந்தபோதுதான் எனக்கு அறிமுகம் ஆனார். அப்போது முதல் அவருடன் எனக்குத் தொடர்பு உண்டு. 1967-ஆம் ஆண்டு தேர்தலில் ஆள்பலம், பணபலம் கொண்ட வேட்பாளரைத் தோல்வியுறச் செய்து நாடாளுமன்ற உறுப்பினர் ஆனார்.

கோவை, ஈரோடு, திருப்பூர் மாவட்டங்களில் திராவிட முன்னேற்றக் கழகத்தை வளர்த்த பெருமை திரு. பி.ஏ.எஸ். அவர்களைச் சாரும் என்றால் அது மிகையாகாது. திரு. பி.ஏ.எஸ். அவர்கள் நாடாளுமன்ற உறுப்பினராகவும், கோவை மாவட்டச் செயலாளராகவும் இருந்த நேரத்தில் பொதுமக்கள் சொல்லும் குறைகளைக் கேட்டுச் சம்பந்தப்பட்ட அதிகாரிகளைச் சந்தித்து உடனடியாகக் குறைகளை நீக்கம் செய்துள்ளார். பொதுமக்கள் எந்தக் கட்சியைச் சேர்ந்தவராக இருந்தாலும் குறைகளைத் திரு. பி.ஏ.எஸ். அவர்களிடம் சொன்னால் உடனடியாக நீக்க ஆவன செய்வார். உதாரணத்திற்கு, எங்கள் ஊருக்குச் செய்த உதவியைக் கூறக் கடமைப்பட்டுள்ளேன். எங்கள் ஊரில் திரு. சி.பி. கந்தசாமி முதலியார் கட்டிடத்தில் வாடகை இல்லாமல் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வந்தது. ஆரம்ப சுகாதார நிலையம் கட்ட இலவச நிலமும் பொதுமக்கள் மூலம் ரூபாய் 25,000/ வசூல் செய்து அரசுக்குச் செலுத்தும்படி உத்திரவு பிறப்பித்தார்கள். எங்கள் கிராமப் பொதுமக்கள் மூலம் ரூபாய் 25,000/ வசூல் செய்து அரசுக்குச் செலுத்தினோம். எங்கள் எலத்தூர் ஊராட்சி, நிலத்தை வழங்கியது. ஆனால் அரசு எங்கள் ஊரில் சுகாதார நிலையம் கட்ட எந்த முயற்சியும் எடுக்கவில்லை. சுமார் [illegible] ஆண்டுகளுக்கு முன் நானும், எங்கள் ஊரைச் சேர்ந்த 4 நபர்களும் புன்செய்ப் புளியம்பட்டி சென்று, பெரியவர் திரு. பி.ஏ.எஸ். அவர்களிடம் எங்கள் ஊரில் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் கட்டப் பணம் வசூல்



... கட்டியும் சுமார் 30 ஆண்டுகளாகக் கட்டித் தரவில்லை என்று கூறி ...ப்பட்ட ஆவணங்களையும் காண்பித்தோம். சுமார் ஒரு மாதத்திற்குள் ...பட்ட அரசு அதிகாரிகளைச் சந்தித்து அரசு ஆரம்ப சுகாதார நிலையம் கட்ட அனுமதி வாங்கிக் கொடுத்து, மேற்படி ஆரம்ப சுகாதார நிலையம் கட்டும் பூமி பூஜைக்குத் தலைமை தாங்கி நடத்திக் கொடுத்தார். மேற்படி சுகாதார நிலையம் கடந்த 10 ஆண்டுகளாக நல்ல முறையில் செயல்பட்டுக் கொண்டுள்ளது. மேலும் ...ஊரில் மாரியம்மன் கோயில் திருப்பணி 1993-ஆம் ஆண்டு நடந்தது. மாரியம்மன் கோயில் குறிஞ்சி மண்டபம் கட்ட திரு. பி.ஏ.எஸ். அவர்கள் ரூபாய் 12,500/ நன்கொடை வழங்கியுள்ளார்கள். பெரியவர் திரு. பி.ஏ.எஸ். அவர்களின் மறைவு - கோவை, ஈரோடு, திருப்பூர் மாவட்ட மக்களுக்குப் பேரிழப்பாகும்.

அண்ணாவின் மாண்பு

அன்புள்ள தம்பிக்கு என்று அவர் எழுதிய கடிதம் வடிவிலான கட்டுரைகளும், தம்பி உடையான் படைக்கு அஞ்சான் என்று தனது மேடைப் பேச்சுக்களில் குறிப்பிடுவதன் மூலம் தனது கட்சித் தொண்டர்களை மனங்குலையாமல் உற்சாகத்தோடு அரவணைத்து அரசியல் வெற்றித் திக்கை நோக்கி அழைத்துச் சென்ற பாணியும் மகத்தானது.

அரசியலில் மாற்றுக் கருத்தை ஏற்பதிலும், நட்பிற்கு அரசியல் வேறுபாட்டை மறப்பதிலும் அறிஞர் அண்ணா இலக்கணமாய்த் திகழ்ந்தார். இந்தியத் திருநாடு விடுதலை பெற்றதை மகிழ்ச்சியோடு வரவேற்ற அவர், காங்கிரஸ் ஆட்சி மீது அன்றைய நாளில் சில கருத்து வேறுபாடுகளைக் கொண்டிருந்தாலும் தேசப்பிதா மகாத்மாகாந்தி அவர்களைப் போற்றி நூல் எழுதினார். அவரது திருவுருவச்சிலை திறந்தார். இவையெல்லாம் அண்ணாவின் உயர்ந்த அரசியல் பண்புகளாகும்.

பெருந்தலைவர் காமராஜர் இடைத் தேர்தலில் போட்டியிட்ட பொழுது, குணாளா, குலக்கொழுந்தே என்று வாழ்த்தியவர் அண்ணா. சென்னை மாநகராட்சி - தி.மு.க. வசமிருந்த நேரத்தில் பெருந்தலைவர் காமராஜருக்குப் பிரதமர் பண்டித நேருவின் திருக்கரத்தால் திருவுருவச் சிலை திறந்து வைக்க ஆவண செய்தவர்.

காங்கிரஸ் தலைவர்கள் குறித்தோ, ஆட்சி நிர்வாகத்தைக் குறித்தோ எதிர்க்கட்சித் தலைவர் என்ற நிலையிலிருந்து விமர்சனம் செய்கிற நேரங்களில் நாகரிகச் சொல்லையே பயன்படுத்திய பண்பிற்சிறந்த நாவுக்கரசர் அவர்.

இந்திய தேசியம்தான் மாநிலங்களின் வளத்திற்கும், நலத்திற்கும் பொதுக்காப்பு அரண் என்பதை ஏற்று, அதற்கேற்பத் தனது கட்சியின் கொள்கையை யொற்றி இந்திய ஒருமைப் பாட்டுணர்வோடு அரசியல் பணியை அமைத்துக் கொண்டவர் அண்ணா.

தமிழன்னை கல்வி அறக்கட்டளை

செல்லப்பம்பாளையம், பு. புளியம்பட்டி

புளிசை மாநகரின் விடிவெள்ளியாய், உதிக்கின்ற செங்கதிரவனாய், தித்திக்கின்ற தேன்கனியாய்த் திகழ்ந்த நம் கொங்கு நாட்டின் சிலர் திருவாளர் பெரியவர் பி.ஏ. சாமிநாதன் அவர்களின் கல்விப் பணிகள் குறித்துச் சிறு துளிகள்.


நம் கிராமத்துச் சிட்டுகளும், காளைகளும் பட்டங்கள் ஆளவும் சட்டங்கள் செய்யவும் கல்லூரியே இல்லாத கிராமப் பகுதியில் கல்லூரிக் கல்வியை அளித்தவர் நம் பெரியவர் அவர்கள்.

அய்யன் திருவள்ளுவர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியானது அரசாணை எண். 91/08.03.2001-இல் தொடங்கப்பட்டது.

B.Com (CA) - 32 மாணவர்கள், B.C.A. - 27 மாணவர்கள், B.Sc. (CS) - 22 மாணவர்கள் ஆக 81 மாணவர்களுடன் தொடங்கப்பட்டு இப்போது 2010-2011 ஆம் கல்வியாண்டில் 228 மாணவர்களாக உயர்ந்துள்ளது.

Salient Features :

- Well qualified faculty members.
- Well equipped lab for all departments.
- Internet facility.
- Excellent results in University Examinations.
- Training and Placement cell.
- Loan facility for all students.
- Government Scholarship facilities for BC/MBC/SC/ST students.
- Campus Interview arrangements.
- Regular weekly test and feedback to the parents.



பவானி மேனிலைப்பள்ளி

இப்பள்ளியானது பெரியவர் பி.ஏ. சாமிநாதன் அவர்களின் முயற்சியின் கீழ் 1-ஆம் வகுப்பு முதல் 12-ஆம் வகுப்பு வரை ஆங்கிலம் மற்றும் தமிழ் வழிக் கல்வியில் தொடங்கப்பட்டு இயங்கி வருகின்றது.

6-10 வரை அங்கீகார எண். ந.மு.எண். 108/94/2002 நாள் : 16.12.2002

11-12 வரை அங்கீகார எண். ந.மு.எண். 144854/12/2000 நாள் : 30.01.2001

மாணவர்களுக்கு வழங்கப்படும் சலுகைகள் :

மாநில அளவில் முதலிடம் பெறுபவருக்கு 12-ஆம் வகுப்பு - ரூ. 1 லட்சமும், 10-வகுப்பு - ரூ. 50,000 ம் வழங்கப்படும். மாவட்ட அளவில் முதலிடம் பெறுபவருக்கு 12-ஆம் வகுப்பு - 50,000 ரூபாயும், 10-வகுப்பு - 25,000 ரூபாயும் வழங்கப்படும். 12-ஆம் வகுப்பில் 90% மேல் மதிப்பெண் பெறும் மாணவர்களுக்கு ரூ.10,000 உதவித்தொகை பெற்றுத்தரப்படும்.

பெரியவரின் கல்விப் பணியால் எங்களுக்குக் கிடைத்த விருதுகள் :

Indian Human Right Vigilance Organisation (Regd.)

National Integrity Cultural Academy இன் சார்பாக *"Indian Citizen Achievement Award"* என்ற விருதினை எங்கள் தாளாளர் திருமதி. சம்பூர்ணம் சாமிநாதன் அவர்களுக்கு வழங்கிச் சிறப்புச் செய்தது.

சந்திராயன் திட்ட இயக்குநர் திரு. மயில்சாமி அண்ணாதுரை அவர்கள் 11.11.2010 அன்று எங்கள் தமிழன்னை கல்வி அறக்கட்டளை நிறுவனங்களுக்கு வருகைபுரிந்து, பெரியவர் ஆற்றிய கல்விப் பணிகள் பற்றிச் சிறப்புரை ஆற்றினார்கள். இதுவும் பெரியவர் வாழ்வில் மறக்கமுடியாத பசுமையான நினைவேயாகும்.

2003-2004இல் 10-ஆம் வகுப்புப் பொதுத் தேர்வில் 100% தேர்ச்சி - "விடியல் சாதனைப் பள்ளி விருது"

2006-2007இல் 12-ஆம் வகுப்புப் பொதுத் தேர்வில் 100% தேர்ச்சி - "விடியல் சாதனைப் பள்ளி விருது" வழங்கியோர் - விடியல் சமூகநல இயக்கம். இத்தகைய சிறப்புகளுக்கு ஆணிவேராய்த் திகழ்ந்தவர் பெரியவர் பி.ஏ. சாமிநாதன் அவர்களே. பெரியவர் பி.ஏ. சாமிநாதன் பல அல்லல் பட்டுச் சிகரங்களைத் தொட்டவர்.

வாலிபர் உள்ளம்

பகுத்தறிவு உன்னும் பகலவனால் எரிக்கப்பட்டு, தன்நலம் - தன்சுகம் ஆகிய நச்சுப்பூச்சிகளால் அழிக்கப்பட்ட தூய்மையானதோர் வட்டாரம், வாலிபர் உள்ளம்.

- அண்ணா

அன்னை காவேரி ஆசிரியர் பயிற்சி நிறுவனம்

நமது பகுதியில் நல்ல ஆசிரியர் உருவாக எங்கள் கல்வி அறக்கட்டளையின் தந்தை பெரியவர் பி.ஏ.எஸ். அவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சியால் அன்னை காவேரி ஆசிரியர் பயிற்சி நிறுவனம் சிறந்த ஆசிரியர் பயிற்சி நிறுவனமாக செயல்பட்டு வருகின்றது.

FSPO/NCTE/D.T.Ed./2006-2007-9676 CODE: APSO 3688

To be published in the gazette of India part III sec-4.

Were as terms of section 14(1) of the NCTE act 1993 Tamil Annai Educational & Charitable Trust, Coimbatore (Dt.), Tamilnadu has submitted an application to the southern regional committee NCTE for grant of recognition to Annai Kaveri Teacher Training Institute, Sellappampalayam (P.O.), P. Puliampatti (Via), Coimbatore (Dist.) - 638 459, Tamilnadu for Elementary (D.T.Ed.) Course of 2 Years duration with and annual intake of 50 (fifty) students.

நிறுவனர் பி.ஏ. சாமிநாதன் Ex.M.P., அவர்களால் தொடங்கப்பட்டது.

தொடக்க நாள் : 07.03.2007. DTERT Reg. No. RC3157/2007 - 832007

NCTE Reg. No.FSRO/NCE/DTED/200-07/9676

தேசிய ஆசிரியர் கல்விக் குழுமம் நாள் : 22.12.2006.


பி.ஏ. சாமிநாதன் அவர்களின் தனித்தன்மை :

பள்ளி, கல்லூரி மற்றும் ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில் பயிலும் மாணவர்களுக்குக் கட்டணச் சலுகை மற்றும் ஏழை எளிய மாணவர்களுக்கு பொருளுதவிகள் செய்தார். பல பொறியாளர்களையும், மருத்துவர்களையும் உருவாக்கிய செம்மல். புளிசை மாநகரின் மாணவர்களுக்குக் கல்விக்கண் திறந்தவர் **"தொண்டின் வடிவம் எங்கள் சாமி"** என்று திரு. **பண்ணன்** அவர்களால் போற்றப்பட்டவர். **வாழ்க அவர்தம் புகழ்!**



மக்களாட்சிக்கு வலிவு
மாணவர்கள்தான்.

- அண்ணா



[illegible]
[illegible] ராணி [illegible]
[illegible]



மனிதன் என்பவன் தெய்வமாகலாம்!

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்"

திருக்குறள் பள்ளி வாழ்க்கையில் நான் [illegible] இதுவரை தன் மரணத்திலும் வாழ்ந்துகாட்டிய என் தந்தை [illegible] உணர்த்திய குறள்.

புன்செய்ப் புளியம்பட்டி - கோவை வழிப்பாதை என் நினைவு தெரிந்த நாளில் நான் அறிந்தது. அன்று அப்பாதை எனக்குப் பழக்கமில்லாத [illegible] தோன்றியது. வாழ்க்கையில் உடன் நின்று வழிகாட்டிய என் [illegible] வழிப்பாதையிலும் உடன் நின்று வழி நடத்தி இருக்கிறார் என்ற உண்மை புலப்பட, அவரது அருமை கண்டு பெருமிதம் கொண்ட [illegible] வணங்கியது.


'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' என்னும் முதுமொழிக்குப் பொருள் உணரச் செய்து எங்களை அவைத்துள் முந்தியிருக்கச் செய்த உங்களுக்கு, மக்கள் தந்தைக்காற்றும் உதவியே எங்கள் வாழ்வு.

உங்களைத் தொலைத்துவிட்டு
உலகத்தில் தேட ஏதுமில்லை எங்களுக்கு.
நீர்காட்டிச் சென்ற வான்மழைபோல்
புன்செய்க்கு நீர்வார்த்து
நீர்காட்டிய இலக்கை அடைய
வழிகாட்டி மட்டுமே நாங்கள்.

என் முன் இரு எழுத்துக்களும், பின் இரு எழுத்துக்களும் நீங்களே பெற்றுத்தந்தது. 'அன்பு மகள் ராணிக்கு' என்கிற தங்களின் [illegible] நெஞ்சம் ஏந்திய கடிதமே எனக்கு வாழ்க்கை முறை சொல்லும் [illegible]

'கடமை, கண்ணியம், கட்டுப்பாடு' என்றுரைத்த பேரறிஞர் அண்ணாவின்பால் பேரன்பு கொண்ட நண்பர் நீங்கள் என்றும், அண்ணாவின் நெஞ்சில் மதிப்புமிகு இடம்பிடித்த நட்பின் இலக்கணம் நீங்கள் என்பதும் அனைவரும் அறிந்த ஒன்றே! காலத்திற்கும் [illegible] பண்பு என்று உணர்த்திய நும் வாழ்க்கையே எம் வழி.





அன்பு மகள்
மணிமேகலை முருகேசன்
பு. புளியம்பட்டி

அன்பின் உருவம் எங்கள் அப்பா!

அன்பே உருவான அப்பா, எங்கள் அப்பாரும் அப்பத்தாளும் எங்களுக்கென்று படைத்திட்ட அற்புதமான படைப்பப்பா நீங்கள்! பிள்ளைகளின் தேவையறிந்து கவனித்திட அம்மாவிற்கும் உங்களுக்கும் நேரமில்லாக் காரணத்தால் உடை, உணவு, பாதுகாப்பான உறைவிடம் நேரமறிந்து எங்களுக்குக் கிடைக்க மாணிக்கமான அத்தையை வழங்கிய அம்மை அப்பர் நீங்கள்!


இல்லையென்று உங்களை நாடி வந்தவர்க்கு இல்லையென்னாமல் கொடுத்த கர்ணன் நீங்கள்!

பகைவனுக்கும் அருளும் பண்பில் வள்ளலார்! நோயென்று வந்தவர்க்கு உதவிய தன்வந்திரி! உள்ளத்தில் ஒன்றையும் மறைத்து வைக்கத் தெரியாமல் உடைத்துப் போடுவதில் சிறு குழந்தை! பொதுத் தொண்டே பெரிதென்று இருந்த உங்களிடம் வீட்டிற்கு வந்திருந்த ஒருவர் (அரசியல்வாதி) யாரென்று நினைவில்லை, உங்களுக்கு எத்தனை குழந்தைகள்? என்று கேட்டதற்கு "இரண்டு பெண்கள் ஒரு பையன்" என்று சொன்னது மறந்திருக்கும்! குடும்பத்தின் உறுப்பினர்களைக்கூட மறந்துவிடும் அளவுக்குக் கழகத்திற்கு உறுப்பினர்களைச் சேர்த்த கடமை வீரர் நீங்கள்!

நீலகிரி, ஈரோடு, திருப்பூர், கோவை ஒருங்கிணைந்த மாவட்டத்தின் செயலாளராக இருந்து 1975-இல் மாபெரும் மாநாடு நடத்திக்காட்டி, தி.மு.க. கோட்டையாக்கி வைத்திருந்ததை யாரும் மறுக்க முடியாது.

இவ்வளவு நற்பண்புகள் கொண்ட உங்களுக்கு ஒருமுறையாவது மந்திரி பதவி வாய்க்கவில்லையே என்ற பெரிய ஆதங்கம் என் மனதில் இருந்தது. ஆனால், இப்போதுதான் புரிகிறது... நல்ல மக்களை (புளியம்பட்டி) மந்திரிகளாகக் கொண்ட நீங்களே ஒரு குறுநில மன்னன் எனும்போது அந்தப் பதவி உங்களுக்கு எதற்கு?

நீங்கள் இந்தப் பூமியில் உதித்தது இந்தப் புளியம்பட்டி மண்ணைப் புடம்போட்டுத் தங்கமாக்கவோ! உதித்த சூரியனை நம் ஊரிலேயே பதித்து வைக்கவோ...




யானை இருந்தாலும் ஆயிரம் பொன்; இறந்தாலும் ஆயிரம் பொன் என்பதை மக்கள் நன்கு அறிந்து வைத்திருக்கிறார்கள் என்பதற்கு 2011 தேர்தலின் முடிவே சான்று. "பெரியவர்" என்ற பட்டமும் ஊர் உலகை உங்களுக்கு மட்டுமே!

நோயுற்று வந்த எத்தனையோ பேருக்கு உரிய மருத்துவ ஏற்பாடு செய்து ...களின் இறப்பைச் சிறிதாவது தள்ளி வைத்து, காலனின் (எமனின்) செயலுக்குச் ...விழித்து வந்ததாலே உங்களை அவன் துன்புறுத்திக் கவர்ந்து கொண்டானோ? சிறுவயதில் உங்களுடன் அதிகம் ஒட்டாத எனக்கு இறுதிக் கட்டத்தில் ...அருமை தெரியவைத்து, 3 மாத காலமாக அனுதினமும், இருவேளையும் ...இருந்து, வாழ்க்கையில் உயில் பெரிதன்று, உயிரும், உணர்வுமே பெரிதென்று உணர்த்திய நீங்கள்தான் எங்களின் உண்மையான சொத்து! நீங்கள் இல்லாதது குடும்பத்திற்கே பித்து!

கடவுள் நம்பிக்கை நிறைய உள்ள எனக்கு, மறுபிறப்பிலும் உறுதியான நம்பிக்கை உள்ளது. உங்களிடம் வேண்டிக் கேட்பது, மறுபிறப்பில் உங்கள் ...னாகப் பிறக்க வேண்டும். இல்லையேல் நீங்கள் இந்தப் பிறப்பிலேயே எங்கள் ...வயிற்றுப் பேரனாக வந்து பிறக்க வேண்டும். இஃது எனக்காக மட்டுமல்ல, உங்களைப் பிரிந்து வாடும் நல் இதயங்களின் காயத்திற்கு நல்மருந்தாக இருக்கும் ...நம்பிக்கையின் வேண்டுகை.


தன்னலமற்ற தலைவர்களான காந்தியடிகள், அண்ணா, பெரியார், காமராசர், எம்.ஜி.ஆர். வரிசையில் உங்களையும் என் மனதில் சேர்த்து வைத்து விட்டேன். வாழ்க உங்களின் பண்பு நலன்கள்!





அண்ணாவின் அழகுத் தமிழ் !

அண்ணாவின் அழகுத் தமிழ்! அடுக்குச் சொல்லாற்றல் நன்கு கூர்தீட்டப்பட்ட அறிவாயுதமாக ஆரியத்தின் மீது பாய்ந்தது! புராணங்களின் புரட்டுகளும் வேதங்களின் வண்டவாளங்களும் வெளிப்படுத்தப்பட்டன! அண்ணாவின் சொல்லாற்றலால் அறிஞர் பெருமக்கள் அடிமைப்பட்டனர். திராவிட இயக்கம் மேற்கொண்ட பகுத்தறிவுப் பிரச்சாரத்தில் அண்ணாவின் பேச்சைப் பழித்தும், இழித்தும் பேசி வந்தவர்களுக்குப் பதிலாகவே **சாக்ரடீசாக அண்ணா** அவர்களை உருவகப்படுத்தி எழுதிய வசனமாகும். அதே போல ஆயிரமாயிரம் பேச்சாளர்களை உருவாக்கி அரசியல் மேடையானாலும், இலக்கிய அரங்கமானாலும், மாநாடுகளானாலும் அழகுத் தமிழை நர்த்தனமாடவிட்ட பெருமை **அண்ணா** அவர்களையே சாரும்!



புலவர் கிருட்டிணன்
தாராபுரம்

நினைவலைகள்...

உயர்வு தாழ்வு சொல்லி ஒரு சாதி உயர்ந்ததெனவும் மற்றதை தாழ்ந்ததெனத் தமிழினத்தைப் பிரித்து, ஒற்றுமையுடன் வாழ்ந்த இனத்தை 'வருணாசிரமம்' என்னும் பெயரால் பிரித்துச் சீரழித்துச் சாதி என்னும் தீயை வேதம், வேள்வி என்னும் சூதுவலை விரித்த சூதர்களின் வஞ்சகத்தைச் சிந்தனையெனும் தேர் ஏறித் தாக்கியழித்த தன்மானப் பெருந்தலைவன், மனித இனத்தின் மாண்பினை, மனித உள்ளந்தோறும் நிலைபெறச் செய்த உலக முதுபெரும் சிந்தனையாளர் ஈரோட்டு இங்கர்சால் பெரியார் அவர்களின் தளபதியாகிய பேரறிஞர் அண்ணா அவர்கள் கண்ட திராவிட முன்னேற்றக் கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு கடமையாற்றிய பெருந்தகையாளர் புளியம்பட்டி பி.ஏ. சாமிநாதன் அவர்கள்

அந்த நினைவுகளில் சில...

திராவிட முன்னேற்றக் கழகம் தோற்றுவிக்கப்பட்ட பின் மாவட்டச் செயலாளராகக் கோவைச் செழியன் நியமிக்கப்பட்டுச் செயலாற்றி வந்தார். அடுத்து நடைபெற்ற மாவட்டக் கழகத் தேர்தலில் அறிஞர் அண்ணாவால் 'உடுமலை தேசிங்கு' என்று பாராட்டப்பெற்ற உடுமலை நாராயணன் தேர்தலில், கன்னிவாடி கே.எஸ்.சீரங்கராயரை வென்று மாவட்டச் செயலாளராகப் பணியாற்றி வந்தார்.

அதன்பின் நடைபெற்ற மாவட்டக் கழகத் தேர்தலில் அன்புக்குரிய அண்ணன் கோவைச் செழியன், புளியம்பட்டி சாமிநாதன் போட்டியிட்டு அண்ணன் சாமிநாதன் வென்று மாவட்டச் செயலாளர் ஆனார். அப்பொழுது கழகச் செயல் மறவர்களாக விளங்கியவர்கள் தேவசகாயம், கோவை மு. ராமநாதன், சி.டி. தண்டபாணி, சானகிராமன், கோபி இராச, குன்னத்தூர் க. அன்பரசு, புளியம்பட்டி சீத்தாராமன், பு.கா. ஆறுமுகம், கோபி ஜி.பி. வெங்கிடு, மேட்டுப்பாளையம் தூயமணி, ரசாக், உடுமலை பருவதக்கண்ணன், அப்பாஸ், எஸ்.ஜே. சாதிக்பாட்சா, காளியப்பன்.

சந்தி கண்ணப்பன், காங்கயம் தணிகாசலம், அப்பன் பழனிச்சாமி, கோவில் வீராசாமி, கே. ராமசாமி, திருப்பூர் இரா.முருகேசன், முத்து, சூழு கே.எம். சரபோசி, மூலனூர் சோமு, அழகிரிசாமி, கம்புளியம்பட்டி சாமி, ரங்கபாளையம் துரைசாமி, அவினாசி இராசு, பவானி கண்ணன், ப. கோபால், வே. கிருஷ்ணமூர்த்தி, சோதி பழனிச்சாமி, விசயமங்கலம் ராமு, வால்பாறை இராமசாமி ஆகியோர் கழகப் படையின் தளபதியாய் வர்கள் ஆவர்.

சேலம் அம்மாப்பேட்டையில் எழுச்சி மாநாடு. மாநாடு முடியும் முன் ...! என்னைக் கண்டதும், அறை எடுத்திருக்கிறாயா? என அண்ணன் ...டார். ஒரு அறைதான், அதில் அண்ணன் சீத்தாராமன், திருப்பூர் துரை, எம்.பி. ...ப்பன் மற்றும் இருவர். படுக்க இடமில்லை. ஈ.வி.கே. சம்பத்தும் ...தாசனும் பிரிந்த நேரம் "எட்டடுக்கு மாளிகையில் ஏற்றிவைத்த என் ...வன்" பாடலைக் கேட்டும் பேசியும் விடிந்தது பொழுது.

திராவிட முன்னேற்றக் கழகச் சிறப்புப் பொது மாநாடு கோவை சிதம்பரம் ...கா மைதானத்தில் ஊரும் உலகமும் போற்றத்தக்க மாநாடு. மாபெரும் பந்தல் ...மைப்பு! நூற்றுக்கணக்கான தொலைக்காட்சிப் பெட்டிகள், புதிதாகத் தொலைக்காட்சிப் பெட்டி வந்தநேரம். வாணவேடிக்கையும், அலங்கார ...வுகளும், படை மறவர் அணிவகுப்பும் பார்த்தவர் வியக்க அமைந்தது. ...டோர் வியக்கக் கவின்மிகு மாநாடு! அண்ணன் இரவு பகல் பாராது உணவு ...க்கம் பாராமல் உழைத்துப் பெருமை சேர்த்தார்! நண்பர்கள் துணைக்கொண்டு ...நாளில் ஆற்றிய அரும்பணியாகும்.

தாராபுரத்தில் சிரணி அரங்கைப் பேராசிரியர் அவர்களோடு வந்து ...துவைத்த நிகழ்வும், நிதியளிப்புப் பொதுக்கூட்டத்திற்குத் தலைவர் கலைஞரோடு ...லைப் பெற்றுக்கொண்டு இராமச்சந்திராபுரம் செல்லத் தலைவரோடு என்னையும் ...வென்று அழைத்துச் செல்லும்போது, பூளவாடியில் உடுமலை நாராயண ...ணைக்கண்டு பேசிச்சென்ற நிகழ்வினையும் மறக்க முடியுமா?

தேர்தல் நிதி திரட்ட அறிஞர் அண்ணா அவர்கள் வந்தபோது எங்களூர் ...பாளையம் வந்து நிதி பெற்றுச்சென்ற நிகழ்வு வரலாற்றுச் சிறப்புமிகு ...லாகும்! மாநாட்டு நிதிக்காக எஸ்.ஏ. இராசமாணிக்கம், கோவை மு. ராமநாதன், திருப்பூர் துரைசாமி, உடுமலை நாராயணன், மு. கண்ணப்பன், தேவசகாயம் உடன்வர ...கள் வந்து சென்றது வரலாற்றுக் குறிப்பன்றோ!

நான் உடல் நலம் குன்றி இருந்தபோது செய்தியறிந்து வந்து, கோவைப் பொது ...த்துவமனைக்கு அனுப்பி வைத்து வேண்டிய உதவியைச் செய்து சென்றீர்கள். என் உயிர் உள்ளவரை மறக்கவொண்ணாப் பெருமைமிகு செயல் அல்லவா!

ஒருங்கிணைந்த கோவை மாவட்டம் பெருமைகொள்ளத் தக்க சிறப்புமி... செயலாளராகக் கழகத்தை வளர்த்த கடமை வீரன்! இரண்டு ... நாடாளுமன்றத்திற்குத் தேர்ந்து எடுக்கப்பெற்று நாடும் ஏடும் போற்ற ... தோறும் பாசறைக் கூட்டம் நடத்தி, முன்னேற்றக் கழகத்தைச் சிங்க ஏறு... சிலிர்த்தெழச் செய்த செயல் மறவன்! உடுமலை நாராயணன் மறைவிற்குப் பி... அவர்களின் திருமகன் பவானிசிங் திருமணம் நடைபெற இயலாத நிலையி... நீங்களும் மு.கண்ணப்பன் அவர்களும் பொறுப்பேற்றுத் திருமணத்தை நன்முறையி... நடத்தி வைத்து, அந்தக் குடும்பத்திற்கு விளக்கேற்றி வைத்தமை தனிவரலாறாகும்.

நான் நேரில் கண்டவற்றில் சில :

வாடிவந்த முகத்தைக் கண்டு, தேடிய செல்வத்தைக் கொட்டிக் கொடுத்த உங்கள் கரமல்லவா!

எளியோர்க்கும் இல்லாதவர்க்கும் கல்விக்குக் கொடுத்து உதவிய கருணை மனமல்லவா!

இன்னலுக்கும், இடுக்கணுக்கும் ஆளானவரை நாடிச்சென்று இன்னல் தீர்த்த பெருந்தகையாளன் நீ!

புளிசையில் நீ வளர்த்த கழகத்திற்கு அரண்மனை போன்ற மாளிகையினை தந்து மகிழ்ந்தவன் நீ!

'ஆலயம் தொழுவது சாலவும் நன்று' எனச் சான்றோர் சொல்லுவர். ஆ... அண்ணன் வாழ்ந்த இல்லமே நான் வணங்கும் ஆலயம்!

நானும் நண்பர் செந்தில் முத்துசாமியும் ஒருநாள்அல்ல எத்தனையோ நாட்கள் எண்ணற்ற முறை கண்டவுடன் முகம் மலர்ந்து மணிக்கணக்கில் பேசிப்பெற்ற இன்பத்தைக் கண்ணீர்க் காவியம் ஆக்கிச் சென்ற உள்ளம் கவர்ந்த குணக்குன்றே உன்னை மண்ணுலகம் மறத்தலும் கூடுமோ!?



கட்டுப்பாடும் ஒழுங்கும்
சாதாரணமானவைதான்.
ஆனால் இந்த மாதிரி
சாதாரண விசயங்களைக்
கொண்டுதான் ஒரு சமூகத்தை
எடைபோட முடியும்!

- அண்ணா



வே. குமாரராஜா B.Sc.,
பெ. கோ.ப. வெங்கிடு Ex.M.L.A.,
தலைவர் - திருப்பூர் மாவட்டப் பகுத்தறிவாளர் கழகம்,
அலிநாசி - 4

பெரியார், அண்ணா வழியில் பெரியவர் பி.ஏ.எஸ்.

இலட்சக்கணக்கானோர் சரித்திரத்தைப் படிக்கிறார்கள். அவர்களில் ஒருவர் தான் சரித்திரத்தைப் படைக்கிறார். நினைவுமலர் வெளியிடப்படுகிற இந்த போதே, தெளிவாகத் தெரிகிறது - சரித்திரத்தைப் படைத்தவர் சரித்திரநாதன் என்பது. 'சாதனைச் செம்மல்' என்றும், 'பெரியவர்' என்றும் ஊர் மக்களாலும், 'சாமி' என்று சக நண்பர்கள் மற்றும் தலைவர்களாலும் 'அண்ணன்' என்று தி.மு.கழகத் தோழர்களாலும் அவரவர் விருப்பத்திற்கேற்ப அழைக்கப்பட்ட 'பெரியவர்' பி.ஏ.எஸ். அவர்கள்.

அவர்தம் வாழ்க்கை என்னும் வரலாற்றில் நேற்று, இன்று, நாளை என முக்காலத்திற்கும் மற்றவர்களுக்குப் பயன் தரும் சில செய்திகளை எடுத்துக் கூற எனக்கும் ஒரு வாய்ப்புக் கிடைத்திருப்பதை, என் வாழ்வில் மறக்க முடியாத தருணங்களில் ஒன்றாகவே கருதுகின்றேன். அதற்காக, அக்கா சம்பூரணம் அவர்களுக்கும், அவர்தம் திருமகன் அன்பு உள்ளிட்ட குடும்பத்தார்க்கும் என் மனமார்ந்த நன்றியை முதலில் தெரிவித்துக் கொள்கிறேன்.

பொதுவாக, மனமுவந்து பொருள் உதவியோ, அல்லது பிற உதவிகளோ செய்பவர்கள், பெரும்பாலும், கோயில் கட்டவும், கடவுள் காரியங்கள் செய்யவும் தான் பெரும் விருப்பத்தோடு முன்வருகிறார்கள். அவர்களே - பெரியார் பெயரைச் சொல்லிக் கொண்டும் பகுத்தறிவு, இன, மானப் பிரச்சாரம் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, அணுகும் போதும் முற்றிலும் மாறுபடுகிறார்கள். தன்னை நாடி வந்துள்ளார்கள் என்பதற்காக, விருப்பம் இருந்தோ, இல்லாமலோ நட்புக்காக உதவி செய்கிறார்கள்.

ஆனால், நமது பெரியவர் அவர்களோ, இதற்கு நேர்மாறானவர். அவரிடம் பெரியவர் என்றும் அண்ணா என்றும் சொல்லிக் கொண்டு உதவி கேட்டு வரும் தோழர்களிடம், நான் இதற்காகத்தான் காத்துக் கொண்டிருந்தேன் என்று சொல்லாமல்சொல்வதைப் போல நடந்து கொள்ளும் தந்தை பெரியாரின் சீடன் பேரறிஞர் அண்ணாவின் தம்பி அவர். கை நிறைய அள்ளிக் கொடுத்து வாய் நிறைய உற்சாகமூட்டி உற்றதுணையாக என்றும்

நான் இருக்கிறேன் என்று நம்பிக்கை ஊட்டி, மற்றவர்களைப் பணியாற்ற வைப்பவர்.


அவர் தன் வாழ்நாளில் எந்த ஒரு கடவுளையும் நம்பிக்கையுடன் வணங்கியது, நம்பிட்டவர் அல்லர். அதே சமயம், கடவுள் நம்பிக்கையாளர்கள், அவரை நாடி வந்து ஏமாற்றத்துடன் திரும்பிப் போனதும் கிடையாது. தனது கொள்கைக்கும் பங்கம் வாராமல், அதே நேரத்தில், சக நண்பர்களின் மனமும் நோகாமல் தன்னால் இயன்ற உதவிகள் செய்து தரும் பண்பாளர்.

பெரியவர் அவர்களின் இருகண்களில் ஒன்று பெரியார், மற்றொன்று அண்ணா. நாத்திகக் கொள்கைகள், பகுத்தறிவுச் சிந்தனைகள் தாய் மொழியாம் தமிழ் மொழியைக் காக்கவும், வளர்க்கவும், விழிப்புடன் இருந்து, வீரத்துடன் பணியாற்றிய திராவிட இயக்க வரலாறு அவர். தி.மு.க. என்னும் ஆலமரத்தைத் தமிழகத்தின் மேற்கு மண்டலத்தில் வேரூன்றச் செய்து தண்ணீர் ஊற்றியவர்களுக்குத் தலைவனாக இருந்து, கண்ணீரும் செந்நீரும் ஊற்றிக் கட்சியைக் கட்டிக் காத்தவர் என்பது உலகு அறிந்த உண்மையாகும்.

கழகத்தில் பலர், பொருளாதார நிலையில் துவண்டுபோய் நின்ற காலத்தில் **'இடுக்கண் களைவதாம் நட்பு'** என்ற தொடருக்கு இலக்கணமாக இருந்து, பலருக்கு கைகொடுத்தவர் - கை தூக்கிவிட்டவர் நமது 'பெரியவர்' ஆவர். வாழ்வின் இறுதிக் கட்டத்தில் ஆதரவற்று இருந்த பலருக்கு, அரசின் உதவித்தொகை வந்து சேர்வதற்கு முன்பாக, இவரது உதவித்தொகை சென்று சேர்ந்துவிடும். அது மட்டுமன்று, உதவி செய்யும் இவருக்கும், உதவியைக் கேட்டுப் பெறும் நண்பருக்கும் இடையில் நடைபெறும் இந்தச் செயல், இவர்கள் இருவருக்கும் மிகவும் நெருக்கமாக இருப்பவர்கள் ஒரு சிலருக்கு மட்டுமே தெரியும். அந்த அளவுக்கு உதவி பெறுவோர் தன்மானத்திற்கு எந்த விதத்திலும் ஊறு நேரா வகையில் அவர் உதவும் பாங்கு தனிச் சிறப்புடையது.

“உனக்கு மேலானவர் என்று யாரும் இல்லை, உனக்குக் கீழானவர்கள் என்று யாருமில்லை” என்ற தந்தை பெரியார் அவர்களின் தத்துவத்தையும், “ஆதிக்கமற்ற சமுதாயம், அமைத்தே தீருவோம்” என்ற அறிஞர் அண்ணா அவர்களின் கொள்கையையும், உணர்வுப்பூர்வமாக ஏற்றுக் கொண்ட காரணத்தால், சகமனிதர்கள் அனைவரிடமும் சாதி - மதம் பார்க்காமலும், உயர்வு - தாழ்வு கற்பிக்காமலும், ஏழை பணக்காரன் என்று எண்ணாமலும், சரிநிகர் சமானமாக வாழ்ந்து காட்டியவர்.

ஊரில் இருக்கும் மிகப் பெரிய செல்வந்தர் ஒருவரைச் சந்தித்து உரையாடி விட்டு, ஊரில் இருக்கும் மிகவும் வறிய ஏழை ஒருவரைப் பார்த்தும் பேசிவிட்டு வந்தால், பெரியவர் எனது நெருங்கிய நண்பர் என்றும், எனது நலம் விரும்பி என்றும் ஒரே மாதிரி இருவரும் பேசுகிற காட்சியைச் சாதாரணமாகக் காணலாம்! இது கட்சிகளைக் கடந்து மாற்றுக் கட்சியில் உள்ளவர் கூறுவது கொண்டும் உணரலாம்.



[illegible]

[illegible]

அந்தக் காலகட்டத்தில் - [illegible] ஒரு பெரியவர் [illegible] அனுப்பி [illegible] தங்கள் மகளுக்கு ஆசிரியப் பயிற்சி [illegible] இடம் வாங்கித் தர வேண்டும் என்று [illegible] அவர்கள் பொருளாதார நிலையில் மிகவும் பின்தங்கி இருந்த காரணத்தால், [illegible] தர இயலாது என்றும் விளக்கிக் கூறி உதவி கேட்கிறார்கள்.

பெரியவர் அவர்கள் தீவிரமாக யோசித்துப் பார்த்துவிட்டு ஆசிரியர் கி. வீரமணி அய்யா அவர்களைச் சந்தித்து திருச்சியில் உள்ள பெரியார் நாகம்மை ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில் இடம் கேட்க முடிவு செய்கிறார். உடனே என்னை [illegible] அய்யா அவர்களைச் சந்திக்க வேண்டும் என்று கூறினார்கள்.

அந்தச் சமயத்தில் - மானமிகு கி. வீரமணி அண்ணா அவர்கள், ஒரு பெரிய சுற்றுப் பயணத்தை முடித்து விட்டு, குன்னூரில் உள்ள தி.க. துணைப் பொதுச் செயலாளர் [illegible] மருத்துவர் பிறைநுதற்செல்வி - கவுதமன் அவர்களின் இல்லத்தில் ஓய்வு எடுத்துக் கொண்டிருந்தார் என்கிற செய்தியைப் பெரியவர் அவர்களிடம் கூறினேன்.

உடனே, சற்றும் தாமதம் செய்யாமல், பெரியவர் என்னை அழைத்துக் கொண்டு குன்னூர் புறப்பட்டுச் சென்று, ஆசிரியர் கி. வீரமணி அய்யா அவர்களைச் சந்தித்து நிலைமைகள் அனைத்தையும் விளக்கிக்கூறி உதவி கேட்கிறார்கள். இத்தனைக்கும் அன்று நாங்கள் அணுகிய நேரம், தமிழகத்தில் உள்ள அனைத்து ஆசிரியப் பயிற்சி நிறுவனங்களிலும், சேர்க்கை முடித்து வகுப்புகள் தொடங்கிய நேரம். திருச்சியிலும் [illegible] நிலை. வேறு வழியில்லை பள்ளிச் சேர்க்கை முடிந்துவிட்டது என்று கூறி [illegible] திருப்பி அனுப்பி விடுவார் என்று மனதுக்குள் நினைக்கத் தொடங்கினோம். [illegible] பெரியவர் மீது, ஆசிரியர். வீரமணி அவர்கள் எவ்வளவு தூரம் [illegible] வைத்திருந்திருந்தார் என்பதை அன்று நேரில் பார்க்க முடிந்தது.

பள்ளிச் சேர்க்கை முடிவடைந்துவிட்ட நிலையில் - நூற்றுக்கணக்கில் காத்திருப்போர் பட்டியலில் காத்திருக்கும் நிலையில் - மாணவர்கள் நன்கொடையைக் கொண்டு திருச்சிப் பள்ளி இயங்கிக் கொண்டிருந்த அக் காலத்தில் அரசு அதிகாரிகளிடம் சிறப்பு அனுமதி பெற்றும் பெரியவர் கூறிய மாணவியைச் சேர்த்துக் கொள்வதாகவும், எவ்வித நன்கொடையும் பெறாமல் சேர்த்துக் கொள்வதாகவும் மானமிகு ஆசிரியர் கி. வீரமணி அவர்கள் கூறியபோது சிறிது நேரம் நான் மலைத்துப் போனேன். இவர் மீது அவர் கொண்டிருந்த மரியாதைக்கு இந்த ஒன்றே போதும் என்று கருதுகிறேன்.

பெரியவர் அவர்களின் மணிவிழாவும், மகள் அன்பு அவர்களின் மணவிழாவும் மானமிகு ஆசிரியர் கி.வீரமணி அவர்களின் வாழ்த்துரை மற்றும் தலைமையுரையுடன் நடைபெற்றது என்பதை வாசகர்கள் இந்த நேரத்தில் நினைத்துப் பார்க்க வேண்டுகிறேன்.


சமூகப் பணியிலும் கல்விப் பணியில் பெரியவர்

பெரியவர் அவர்கள் தம்வாழ்நாளில் இரண்டு பணிகளை ஒரு போதும் நிறுத்தியதில்லை. ஒன்று, அடிக்கடி முரசொலி, விடுதலை, தினகரன் போன்ற நாளேடுகளில் வெளிவரும் மிகச் சிறந்த கட்டுரைகளை அப்படியே அச்சிட்டு வழங்கிக் கொண்டிருந்தார்கள்.

மற்றொன்று, ஒவ்வொராண்டும் ஜூன் மாதத்தில், டாக்டர் கலைஞர் அவர்கள் பிறந்த நாளையொட்டி வசதி குறைவான நிலையில் கல்லூரிகளில் இடம் கிடைத்தும் சேர முடியாமல் அல்லல்பட்டு வந்த மாணவ, மாணவியர் ஐம்பது பேருக்கு குறைவில்லாமல், கல்வி உதவித்தொகை தரும் நற்செயலை, எப்பாடுபட்டாவது நிறைவேற்றி வந்தார்கள்.

இதன் விளைவாகப் புன்செய்ப் புளியம்பட்டிப் பகுதியை ஒட்டி கல்லூரி ஒன்றைத் துவங்கி, மற்ற குழந்தைகளுக்கும், குறைந்த கட்டணத்தில் கல்வி தர வேண்டும் என்கிற எண்ணம் அவர் மனதில் உதிக்கிறது. அதன் தொடர்ச்சியாகக் கோவை பாதையில், செல்லப்பம்பாளையம் கிராமத்தில் இடம் வாங்கப்படுகிறது.

அங்கே, கலைக் கல்லூரி ஒன்றைத் துவங்கும் நோக்கில், அய்யன் திருவள்ளுவர் கலை அறிவியல் கல்லூரிக்கு விண்ணப்பம் செய்து, அன்றைய கல்வி அமைச்சர் இனமானப் பேராசிரியர் அவர்களிடம் அனுமதி கேட்டு, உரிய கோப்புகள் வைக்கப்படுகிறது. அவற்றைப் பொறுமையாகப் படித்துவிட்டுப் பேராசிரியர் அவர்கள், பொதுவாக கல்லூரி என்றால் நகர்ப்புறத்தையே மக்கள் பெரிதும் விரும்புகிறார்கள். தற்போது, சத்தி வட்டத்தில், கலை, அறிவியல் கல்லூரி இல்லை என்பதால், உங்கள் கல்லூரியைப் புளியம்பட்டி நகரை ஒட்டி அமைப்பதை விட சத்தியமங்கலம் அருகில் அமைப்பதே சிறந்தது என்று அறிவுரை கூறுகிறார்கள்.



...பெரியவர் அவர்களோ, எங்கள் ஊர் மிகவும் வறட்சியான, பின்தங்கிய ...ம் எங்கள் பிள்ளைகள் பொருளாதார ரீதியாகத் தொலைவிலிருந்து ... பயண நேரத்தைக் குறைக்கவும் எனக்கு இந்த இடத்திலேயே அனுமதி ... என்று கேட்டு, அனுமதி வாங்கினார்கள்.

ஆனால் பின்னாளில், பேராசிரியர் அவர்கள் கூற்று தொலைநோக்குப் பார்வை ...டது என்பதை உணர்த்தியது. எஃது எப்படியோ, பெரியவர் அவர்கள் ...யைத் தொல்லைப்பட்டு நடத்தினாலும், அவர் எண்ணப்படி பல ஏழை மற்றும் ... மக்கள் வீட்டுக் குழந்தைகள் எளிதாகக் கற்க முடிந்தது என்பதே ...மையாகும்.

பெரியவர் அவர்களின் வாழ்க்கையானது - திருக்குறளில் உள்ள 1330 ...பாக்களில் ஒரு குறளுக்கு மகத்தான வெற்றியையும், மற்றொரு குறளுக்கு சற்று ...ல்வியையும் கொடுத்திருக்கிறது.

"அகழ்வாரைத் தாங்கும் நிலம் போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை"

என்கிற திருக்குறளுக்குப் பெரியவர் வாழ்ந்த வாழ்க்கை மிகப் பெரிய வெற்றியைக் ...த்து மெய்ப்பித்திருக்கிறது.

அதே சமயம்,

"தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினாற் சுட்ட வடு"

என்கிற குறள் பெரியவரிடம் தோற்றுவிட்டது. என்றே கூறலாம்.

பிறர் கூறும் கடுஞ்சொற்கள், அந்த நேரத்தில் அவரை வேதனைக்கு உள்ளாக்கி இருக்கலாம். அதனால் தோன்றிய வருத்தம் அவரிடம் நீண்ட நாள்களுக்கு நீடித்ததில்லை. வெகு எளிதில் மன்னித்து விடுவார் - மறந்தும் விடுவார். எனவே அவர் மனதில் தீயினாற் சுட்ட புண்ணும் இல்லை, அவர் மனதில் நாவினால் சுட்ட வடுவும் இல்லை. அதனால்தான்,

"குணமென்னும் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயுங் காத்தல் அரிது"

என்று திருவள்ளுவர் கூறியுள்ளாரோ? என்னவோ?

மொத்தத்தில் நேரம் தவறாமை - உதவும் உள்ளம் - சலியாத உழைப்பு - வசீகரிக்கும் சிரிப்பு - கண்ணோட்டமுள்ள கனிவான பார்வை - பாரபட்சமற்ற அன்பு - இலட்சியத்தில் தீராத உறுதி எனப் பல பண்பு நலன்களின் நாயகர். அவர் மறைந்தும் மறையாத மாமனிதர்! அவரை வாழ்க என்பதில் பெருமை கொள்கிறேன்.

பெரியவர் பி.ஏ.எஸ். புகழ் வாழ்க! வாழ்க!

வி. செந்தில்வேல்
ஆசிரியர் வேளாண்மை
தஞ்சாவூர்



உண்மைத் தொண்டன்


பெரியவர் பி.மு.மன் 'அமைச்சூரை' பெரியப்போதும் இன்று பெரும் சோகம். 50 ஆண்டுகளுக்கும் மேலாக அவரின் பாதம்பற்றி நடந்த எண்ணற்ற பேரைத் உண்மைத் தொண்டர்கள் அவரில்லாத வெறுமையை நாளுக்கு நாள் அதிகமாக உணர்கிறோம். எங்களைப் பொறுத்தவரை இப்பகுதியில் அண்ணன் இல்லாத அரசியல் நிகழ்வுகள் - இறைவழிபாடுகளும் உட்கோவிலில் நடைபெறும் வெற்று விழாக்களாகத்தான் தோன்றுகின்றன.

தொண்டர்கள்பால் பற்றும் - பாசமும் - பரிவும் கொண்ட அண்ணனின் மலர்ந்த சிரிப்பு உருவம் எங்களின் உள்ளத்தில், எங்கள் வாழ்நாள் உள்ளவரை அழிக்க இயலாத நினைவுச் சின்னமாகப் பதிந்திருக்கும்.

அக்கா சம்பூரணம் அவர்கள், அண்ணனின் பிரிவுத் துயரிலிருந்து - தங்கள் உள்ளத் திண்மையால் - ஓரளவாவது மீண்டு, கல்லூரி விழாக்களிலும், பொது நிகழ்வுகளிலும் கலந்து கொள்ளும் நிகழ்வுகளைச் செய்தித் தாள்களின் வழியாக அறிந்து ஆறுதலடைகிறேன்.

பாசத்து அண்ணனின் தூய நல் எழுச்சி, - அடிபொற்றி வளரும் செல்வன் அன்புமணியின் பணிகளுக்கும் - எழுச்சிக்கும் வழிவகுக்கும்!.


வாழ்க பெரியவரின் தூய அரசியல் பணிகள்!



தந்திரம்

சாதி - இந்து ஒழிய வேண்டுமா? வேண்டாமா? என்பது தான் இன்றுள்ள கேள்வி. பாழாய்ப்போன சாதிப் பேச்சு தொடங்கிவிட்டதா? இந்து அந்தக் கேள்விக்குரிய விடை அன்று. சாதியை நிலைநாட்டுவதற்குரிய தந்திரம்.

-அண்ணா




- அரசூர் - புதூரில் சாந்தாமணி என்ற பெண்ணுக்குக் குடலிறக்க அறுவைச் சிகிச்சை பெற அனைத்து உதவிகளையும் செய்து தந்தார்.
- அரசூர் - புதூரில் சிவகாமி என்ற பெண்ணுக்குச் செய்ய வேண்டிய பெரிய அறுவைச் சிகிச்சை ஒன்றுக்கு உண்டான அனைத்து உதவிகளையும் செய்துதந்தார்கள்.
- அரசூர் கழகச் செயலாளர் ஏ. சுப்பிரமணியம் அவர்கள் நெசவாளர் சொசைட்டியில் தலைவராக இருந்தபோது நடந்த தவறுக்காகக் கைது செய்யப்பட்டுச் சிறையில் இருந்த சமயம், அவரின் ஜாமீனுக்காக ரூ. 3,000/ செலுத்தி வெளிக்கொணர்ந்து, அவரின் கழகப்பணி மீண்டும் தொடர உதவினார்.
- அரசூர் அ.பெ.மாரியப்பன் கழக நண்பர். அவர் உடல்நலக் குறைவால் மருத்துவமனையில் இருந்தபோது நிதியுதவி செய்து உதவினார்.
- அரசூர் பஞ்சநாதன் என்பவர் பி.ஏ.எஸ். அவர்களால் பணி கிடைக்கப் பெற்று இன்று நல்ல நிலையில் உள்ளார்.
- அரசூர் அருள்மிகு காமாட்சியம்மன் திருக்கோயில் திருப்பணிக்குப் பி.ஏ.எஸ். அவர்கள் ரூ. 10,000/ கொடுத்து உதவினார்கள்.

இவ்வண்ணம்,

அரசூர்ப் பொதுமக்கள்

ஏ.வி. காளியப்பன்	ஏ.ஏ. முருகேசன்
ஏ. சுப்பிரமணியன்	ஏ.வி. முருகேசன்
ஏ.எம். நாகலிங்கம்	கே. பழனிச்சாமி
ஏ. கந்தசாமி	ஆர். சென்னியப்பன்



கருத்தரங்குகளின் பணி

சிந்தனைகளைச் சேகரித்துக் கோவைப்படுத்தி விடுவதே கருத்தரங்குகளின் பணியாகும். தங்களையொத்த அறிஞர்களின் முன்னிலையில் தங்கள் அறிந்தவற்றை எடுத்துக்கூறி, எந்த அளவு தங்கள் கருத்து அவர்கள் கருத்தோடு ஒத்துப்போகிறது, எந்த அளவு வேறுபடுகிறது என்று அறிந்து, மேலும் அதுகுறித்த விவாதத்திற்கு வழி வகுத்து, இத்தகைய கருத்தரங்குகளிடமிருந்து நற்பலன்களை எதிர்பார்த்திடும் மக்கள்முன் கனிந்து உருவாகிய கருத்துக்களை வைத்திட வேண்டும்.

- அண்ணா


கே. சோமசுந்தரம்
எலத்தூர் - செட்டிபாளையம்



பொதுநலத் தொண்டர் பி.ஏ.எஸ்.

புன்செய்ப் புளியம்பட்டிப் பெரியவர் திரு. பி.ஏ.எஸ். அவர்கள் 1967-ஆம் ஆண்டு கோபித் தொகுதி நாடாளுமன்ற வேட்பாளராகப் போட்டியிட்டபோது, எலத்தூர் - செட்டிபாளையத்துக்குத் தேர்தல் பிரச்சாரத்திற்கு வந்தபோதுதான் எனக்கு அறிமுகம் ஆனார். அப்போது முதல் அவருடன் எனக்குத் தொடர்பு உண்டு. 1967-ஆம் ஆண்டு தேர்தலில் ஆள்பலம், பணபலம் கொண்ட வேட்பாளரைத் தோல்வியுறச் செய்து நாடாளுமன்ற உறுப்பினர் ஆனார்.

கோவை, ஈரோடு, திருப்பூர் மாவட்டங்களில் திராவிட முன்னேற்றக் கழகத்தை வளர்த்த பெருமை திரு. பி.ஏ.எஸ். அவர்களைச் சாரும் என்றால் அது மிகையாகாது. திரு. பி.ஏ.எஸ். அவர்கள் நாடாளுமன்ற உறுப்பினராகவும், கோவை மாவட்டச் செயலாளராகவும் இருந்த நேரத்தில் பொதுமக்கள் சொல்லும் குறைகளைக் கேட்டுச் சம்பந்தப்பட்ட அதிகாரிகளைச் சந்தித்து உடனடியாகக் குறைகளை நீக்கம் செய்துள்ளார். பொதுமக்கள் எந்தக் கட்சியைச் சேர்ந்தவராக இருந்தாலும் குறைகளைத் திரு. பி.ஏ.எஸ். அவர்களிடம் சொன்னால் உடனடியாக நீக்க ஆவன செய்வார். உதாரணத்திற்கு, எங்கள் ஊருக்குச் செய்த உதவியைக் கூறக் கடமைப்பட்டுள்ளேன். எங்கள் ஊரில் திரு. சி.பி. கந்தசாமி முதலியார் கட்டிடத்தில் வாடகை இல்லாமல் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வந்தது. ஆரம்ப சுகாதார நிலையம் கட்ட இலவச நிலமும் பொதுமக்கள் மூலம் ரூபாய் 25,000/ வசூல் செய்து அரசுக்குச் செலுத்தும்படி உத்திரவு பிறப்பித்தார்கள். எங்கள் கிராமப் பொதுமக்கள் மூலம் ரூபாய் 25,000/ வசூல் செய்து அரசுக்குச் செலுத்தினோம். எங்கள் எலத்தூர் ஊராட்சி, நிலத்தை வழங்கியது. ஆனால் அரசு எங்கள் ஊரில் சுகாதார நிலையம் கட்ட எந்த முயற்சியும் எடுக்கவில்லை. சுமார் ஆண்டுகளுக்கு முன் நானும், எங்கள் ஊரைச் சேர்ந்த 4 நபர்களும் புன்செய்ப் புளியம்பட்டி சென்று, பெரியவர் திரு. பி.ஏ.எஸ். அவர்களிடம் எங்கள் ஊரில் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் கட்டப் பணம் வசூல்



கட்டியும் சுமார் 30 ஆண்டுகளாகக் கட்டித் தரவில்லை என்று கூறி சம்பந்தப்பட்ட ஆவணங்களையும் காண்பித்தோம். சுமார் ஒரு மாதத்திற்குள் சம்பந்தப்பட்ட அரசு அதிகாரிகளைச் சந்தித்து அரசு ஆரம்ப சுகாதார நிலையம் கட்ட அனுமதி வாங்கிக் கொடுத்து, மேற்படி ஆரம்ப சுகாதார நிலையம் கட்டும் பூமி பூஜைக்குத் தலைமை தாங்கி நடத்திக் கொடுத்தார். மேற்படி சுகாதார நிலையம் சுமார் 10 ஆண்டுகளாக நல்ல முறையில் செயல்பட்டுக் கொண்டுள்ளது. மேலும் ஊரில் மாரியம்மன் கோயில் திருப்பணி 1993-ஆம் ஆண்டு நடந்தது. மாரியம்மன் கோயில் குறிஞ்சி மண்டபம் கட்ட திரு. பி.ஏ.எஸ். அவர்கள் ரூபாய் 2,500/ நன்கொடை வழங்கியுள்ளார்கள். பெரியவர் திரு. பி.ஏ.எஸ். அவர்களின் இழப்பு - கோவை, ஈரோடு, திருப்பூர் மாவட்ட மக்களுக்குப் பேரிழப்பாகும்.

அண்ணாவின் மாண்பு

அன்புள்ள தம்பிக்கு என்று அவர் எழுதிய கடிதம் வடிவிலான கட்டுரைகளும், தம்பி உடையான் படைக்கு அஞ்சான் என்று தனது மேடைப் பேச்சுக்களில் குறிப்பிடுவதன் மூலம் தனது கட்சித் தொண்டர்களை மனங்குலையாமல் உற்சாகத்தோடு அரவணைத்து அரசியல் வெற்றித் திக்கை நோக்கி அழைத்துச் சென்ற பாணியும் மகத்தானது.

அரசியலில் மாற்றுக் கருத்தை ஏற்பதிலும், நட்பிற்கு அரசியல் வேறுபாட்டை மறப்பதிலும் அறிஞர் அண்ணா இலக்கணமாய்த் திகழ்ந்தார். இந்தியத் திருநாடு விடுதலை பெற்றதை மகிழ்ச்சியோடு வரவேற்ற அவர், காங்கிரஸ் ஆட்சி மீது அன்றைய நாளில் சில கருத்து வேறுபாடுகளைக் கொண்டிருந்தாலும் தேசப்பிதா மகாத்மாகாந்தி அவர்களைப் போற்றி நூல் எழுதினார். அவரது திருவுருவச்சிலை திறந்தார். இவையெல்லாம் அண்ணாவின் உயர்ந்த அரசியல் பண்புகளாகும்.

பெருந்தலைவர் காமராஜர் இடைத் தேர்தலில் போட்டியிட்ட பொழுது, குணாளா, குலக்கொழுந்தே என்று வாழ்த்தியவர் அண்ணா. சென்னை மாநகராட்சி - தி.மு.க. வசமிருந்த நேரத்தில் பெருந்தலைவர் காமராஜருக்குப் பிரதமர் பண்டித நேருவின் திருக்கரத்தால் திருவுருவச் சிலை திறந்து வைக்க ஆவண செய்தவர்.

காங்கிரஸ் தலைவர்கள் குறித்தோ, ஆட்சி நிர்வாகத்தைக் குறித்தோ எதிர்க்கட்சித் தலைவர் என்ற நிலையிலிருந்து விமர்சனம் செய்கிற நேரங்களில் நாகரிகச் சொல்லையே பயன்படுத்திய பண்பிற்சிறந்த நாவுக்கரசர் அவர்.

இந்திய தேசியம்தான் மாநிலங்களின் வளத்திற்கும், நலத்திற்கும் பொதுக்காப்பு அரண் என்பதை ஏற்று, அதற்கேற்பத் தனது கட்சியின் கொள்கையை யொற்றி இந்திய ஒருமைப் பாட்டுணர்வோடு அரசியல் பணியை அமைத்துக் கொண்டவர் அண்ணா.

தமிழன்னை கல்வி அறக்கட்டளை

செல்லப்பம்பாளையம், பு. புளியம்பட்டி

புளிசை மாநகரின் விடிவெள்ளியாய், உதிக்கின்ற செங்கதிரவனாய், தித்திக்கின்ற தேன்கனியாய்த் திகழ்ந்த நம் கொங்கு நாட்டின் சிலர் திருவாளர் பெரியவர் பி.ஏ. சாமிநாதன் அவர்களின் கல்விப் பணிகள் குறித்துச் சிறு துளிகள்.


நம் கிராமத்துச் சிட்டுகளும், காளைகளும் பட்டங்கள் ஆளவும் சட்டங்கள் செய்யவும் கல்லூரியே இல்லாத கிராமப் பகுதியில் கல்லூரிக் கல்வியை அளித்தவர் நம் பெரியவர் அவர்கள்.

அய்யன் திருவள்ளுவர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியானது அரசாணை எண். 91/08.03.2001-இல் தொடங்கப்பட்டது.

B.Com (CA) - 32 மாணவர்கள், B.C.A. - 27 மாணவர்கள், B.Sc. (CS) - 22 மாணவர்கள் ஆக 81 மாணவர்களுடன் தொடங்கப்பட்டு இப்போது 2010-2011 ஆம் கல்வியாண்டில் 228 மாணவர்களாக உயர்ந்துள்ளது.

Salient Features :

- Well qualified faculty members.
- Well equipped lab for all departments.
- Internet facility.
- Excellent results in University Examinations.
- Training and Placement cell.
- Loan facility for all students.
- Government Scholarship facilities for BC/MBC/SC/ST students.
- Campus Interview arrangements.
- Regular weekly test and feedback to the parents.



பவானி மேனிலைப்பள்ளி

இப்பள்ளியானது பெரியவர் பி.ஏ. சாமிநாதன் அவர்களின் முயற்சியின் பேரில் 1-ஆம் வகுப்பு முதல் 12-ஆம் வகுப்பு வரை ஆங்கிலம் மற்றும் தமிழ் வழிக் கல்வியில் தொடங்கப்பட்டு இயங்கி வருகின்றது.

1-10 வரை அங்கீகார எண். நி.மு.எண். 108/94/2002 நாள் : 16.12.2002

11-12 வரை அங்கீகார எண். நி.மு.எண். 144854/12/2000 நாள் : 30.01.2001

மாணவர்களுக்கு வழங்கப்படும் சலுகைகள் :

மாநில அளவில் முதலிடம் பெறுபவருக்கு 12-ஆம் வகுப்பு - ரூ. 1 லட்சமும், 10-ஆம் வகுப்பு - ரூ. 50,000 ம் வழங்கப்படும். மாவட்ட அளவில் முதலிடம் பெறுபவருக்கு 12-ஆம் வகுப்பு - 50,000 ரூபாயும், 10-வகுப்பு - 25,000 ரூபாயும் வழங்கப்படும். 12-ஆம் வகுப்பில் 90% மேல் மதிப்பெண் பெறும் மாணவர்களுக்கு ரூ.10,000 உதவித்தொகை பெற்றுத்தரப்படும்.

பெரியவரின் கல்விப் பணியால் எங்களுக்குக் கிடைத்த விருதுகள் :

Indian Human Right Vigilance Organisation (Regd.)

National Integrity Cultural Academy இன் சார்பாக *"Indian Citizen Achievement Award"* என்ற விருதினை எங்கள் தாளாளர் திருமதி. சம்பூர்ணம் சாமிநாதன் அவர்களுக்கு வழங்கிச் சிறப்புச் செய்தது.

சந்திராயன் திட்ட இயக்குநர் திரு. மயில்சாமி அண்ணாதுரை அவர்கள் 11.01.2010 அன்று எங்கள் தமிழன்னை கல்வி அறக்கட்டளை நிறுவனங்களுக்கு வருகைபுரிந்து, பெரியவர் ஆற்றிய கல்விப் பணிகள் பற்றிச் சிறப்புரை ஆற்றினார்கள். இதுவும் பெரியவர் வாழ்வில் மறக்கமுடியாத பசுமையான நினைவேயாகும்.

2003-2004இல் 10-ஆம் வகுப்புப் பொதுத் தேர்வில் 100% தேர்ச்சி - "விடியல் சாதனைப் பள்ளி விருது"

2006-2007இல் 12-ஆம் வகுப்புப் பொதுத் தேர்வில் 100% தேர்ச்சி - "விடியல் சாதனைப் பள்ளி விருது" வழங்கியோர் - விடியல் சமூகநல இயக்கம். இத்தகைய விருதுகளுக்கு ஆணிவேராய்த் திகழ்ந்தவர் பெரியவர் பி.ஏ. சாமிநாதன் அவர்களே. பெரியவர் பி.ஏ. சாமிநாதன் பல அல்லல் பட்டுச் சிகரங்களைத் தொட்டவர்.

வாலிபர் உள்ளம்

பகுத்தறிவு உன்னும் பகலவனால் எரிக்கப்பட்டு, தன்நலம் - தன்சுகம் ஆகிய நச்சுப்பூச்சிகளால் அழிக்கப்பட்ட தூய்மையானதோர் வட்டாரம், வாலிபர் உள்ளம்.

- அண்ணா

அன்னை காவேரி ஆசிரியர் பயிற்சி நிறுவனம்

நமது பகுதியில் நல்ல ஆசிரியர் உருவாக எங்கள் கல்வி அறக்கட்டளையின் தந்தை பெரியவர் பி.ஏ.எஸ். அவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சியால் அன்னை காவேரி ஆசிரியர் பயிற்சி நிறுவனம் சிறந்த ஆசிரியர் பயிற்சி நிறுவனமாக செயல்பட்டு வருகின்றது.

F SPO / NCTE / D.T.Ed. / 2006 - 2007 - 9676 CODE : APSO 3688

To be published in the gazette of India part III sec - 4.

Were as terms of section 14(1) of the NCTE act 1993 Tamil Annai Educational & Charitable Trust, Coimbatore (Dt.), Tamilnadu has submitted an application to the southern regional committee NCTE for grant of recognition to Annai Kaveri Teacher Training Institute, Sellappampalayam (P.O.), P. Puliampatti (Via), Coimbatore (Dist.) - 638 459, Tamilnadu for Elementary (D.T.Ed.) Course of 2 Years duration with and annual intake of 50 (fifty) students.

நிறுவனர் பி.ஏ. சாமிநாதன் Ex.M.P., அவர்களால் தொடங்கப்பட்டது.

தொடக்க நாள் : 07.03.2007. DTERT Reg. No. RC3157/2007 - 832007

NCTE Reg. No.FSRO / NCE / DTED / 200-07 / 9676

தேசிய ஆசிரியர் கல்விக் குழுமம் நாள் : 22.12.2006.


பி.ஏ. சாமிநாதன் அவர்களின் தனித்தன்மை :

பள்ளி, கல்லூரி மற்றும் ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில் பயிலும் மாணவர்களுக்குக் கட்டணச் சலுகை மற்றும் ஏழை எளிய மாணவர்களுக்கு பொருளுதவிகள் செய்தார். பல பொறியாளர்களையும், மருத்துவர்களையும் உருவாக்கிய செம்மல். புளிசை மாநகரின் மாணவர்களுக்குக் கல்விக்கண் திறந்தவர் **"தொண்டின் வடிவம் எங்கள் சாமி"** என்று திரு. **பண்ணன்** அவர்களால் போற்றப்பட்டவர். **வாழ்க அவர்தம் புகழ்!**



மக்களாட்சிக்கு வலிவு
மாணவர்கள்தான்.

- அண்ணா





மனிதன் என்பவன் தெய்வமாகலாம்!

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்"

திருக்குறள் பள்ளி வாழ்க்கையில் நான் கேட்டறிந்த இதனை தன் மரணத்திலும் வாழ்ந்துகாட்டிய என் தந்தை எனக்கு உணர்த்திய குறள்.

புன்செய்ப் புளியம்பட்டி - கோவை வழிப்பாதை என நினைவு தெரிந்த நாளில் நான் அறிந்தது. அன்று அப்பாதை எனக்குப் பழக்கமில்லாத பாதையாகத் தோன்றியது. வாழ்க்கையில் உடன் நின்று வழிகாட்டிய என் தந்தை வழிப்பாதையிலும் உடன் நின்று வழி நடத்தி இருக்கிறார் என்ற உண்மை புலப்பட, அவரது அருமை கண்டு பெருமிதம் கொண்டது மனது விளங்கியது.

'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' என்னும் முதுமொழிக்குப் பொருள் உணரச் செய்து எங்களை அவைத்துள் முந்தியிருக்கச் செய்த உங்களுக்கு, மக்கள் தந்தைக்காற்றும் உதவியே எங்கள் வாழ்வு.

உங்களைத் தொலைத்துவிட்டு
உலகத்தில் தேட ஏதுமில்லை எங்களுக்கு.
நீர் காட்டிச் சென்ற வான்மழைபோல்
புன்செய்க்கு நீர்வார்த்து
நீர் காட்டிய இலக்கை அடைய
வழிகாட்டி மட்டுமே நாங்கள்.

என் முன் இரு எழுத்துக்களும், பின் இரு எழுத்துக்களும் நீங்களே பெற்றுத்தந்தது. 'அன்பு மகள் ராணிக்கு' என்கிற தங்களின் மருந்து நெஞ்சம் ஏந்திய கடிதமே எனக்கு வாழ்க்கை முறை சொல்லும் மருந்து.

'கடமை, கண்ணியம், கட்டுப்பாடு' என்றுரைத்த பேரறிஞர் அண்ணாவின்பால் பேரன்பு கொண்ட நண்பர் நீங்கள் என்றும், அண்ணாவின் நெஞ்சில் மதிப்புமிகு இடம்பிடித்த நட்பில் இலக்கணம் நீங்கள் என்பதும் அனைவரும் அறிந்த ஒன்றே! காலத்திற்கும் செல்வமில்லை பண்பு என்று உணர்த்திய நும் வாழ்க்கையே எம் வழி.



அன்பு மகள்
மணிமேகலை முருகேசன்
பு. புளியம்பட்டி



அன்பின் உருவம் எங்கள் அப்பா!

அன்பே உருவான அப்பா, எங்கள் அப்பாரும் அப்பத்தாளும் எங்களுக்கென்று படைத்திட்ட அற்புதமான படைப்பப்பா நீங்கள்! பிள்ளைகளின் தேவையறிந்து கவனித்திட அம்மாவிற்கும் உங்களுக்கும் நேரமில்லாக் காரணத்தால் உடை, உணவு, பாதுகாப்பான உறைவிடம் நேரமறிந்து எங்களுக்குக் கிடைக்க மாணிக்கமான அத்தையை வழங்கிய **அம்மை அப்பர் நீங்கள்!**


இல்லையென்று உங்களை நாடி வந்தவர்க்கு இல்லையென்னாமல் கொடுத்த **கர்ணன் நீங்கள்!**

பகைவனுக்கும் அருளும் பண்பில் **வள்ளலார்!** நோயென்று வந்தவர்க்கு உதவிய **தன்வந்திரி!** உள்ளத்தில் ஒன்றையும் மறைத்து வைக்கத் தெரியாமல் உடைத்துப் போடுவதில் **சிறு குழந்தை!** பொதுத் தொண்டே பெரிதென்று இருந்த உங்களிடம் வீட்டிற்கு வந்திருந்த ஒருவர் (அரசியல்வாதி) யாரென்று நினைவில்லை, உங்களுக்கு எத்தனை குழந்தைகள்? என்று கேட்டதற்கு "இரண்டு பெண்கள் ஒரு பையன்" என்று சொன்னது மறந்திருக்கும்! குடும்பத்தின் உறுப்பினர்களைக்கூட மறந்துவிடும் அளவுக்குக் கழகத்திற்கு உறுப்பினர்களைச் சேர்த்த கடமை வீரர் நீங்கள்!

நீலகிரி, ஈரோடு, திருப்பூர், கோவை ஒருங்கிணைந்த மாவட்டத்தின் செயலாளராக இருந்து 1975-இல் மாபெரும் மாநாடு நடத்திக்காட்டி, தி.மு.க. கோட்டையாக்கி வைத்திருந்ததை யாரும் மறுக்க முடியாது.

இவ்வளவு நற்பண்புகள் கொண்ட உங்களுக்கு ஒருமுறையாவது மந்திரி பதவி வாய்க்கவில்லையே என்ற பெரிய ஆதங்கம் என் மனதில் இருந்தது. ஆனால், இப்போதுதான் புரிகிறது... நல்ல மக்களை (புளியம்பட்டி) மந்திரிகளாகக் கொண்ட நீங்களே ஒரு குறுநில மன்னன் எனும்போது அந்தப் பதவி உங்களுக்கு எதற்கு?

நீங்கள் இந்தப் பூமியில் உதித்தது இந்தப் புளியம்பட்டி மண்ணைப் புடம்போட்டுத் தங்கமாக்கவோ! உதித்த சூரியனை நம் ஊரிலேயே பதித்து வைக்கவோ...




[illegible] இருந்தாலும் ஆயிரம் பொன்; இறந்தாலும் ஆயிரம் பொன் என்பதை [illegible] மக்கள் நன்கு அறிந்து வைத்திருக்கிறார்கள் என்பதற்கு 2011 நகராட்சி [illegible] தேர்தலின் முடிவே சான்று. "பெரியவர்" என்றபட்டமும் [illegible] [illegible] மட்டுமே!

நோயுற்று வந்த எத்தனையோ பேருக்கு உரிய மருத்துவ ஏற்பாடு செய்து [illegible] இறப்பைச் சிறிதாவது தள்ளி வைத்து, காலனின் (எமனின்) செயலைத் [illegible] வந்ததாலே உங்களை அவன் துன்புறுத்திக் கவர்ந்து கொண்டானோ! [illegible] உங்களுடன் அதிகம் ஒட்டாத எனக்கு இறுதிக் கட்டத்தில் [illegible] தெரியவைத்து, 3 மாத காலமாக அழுதினமும், இருவேளையும் [illegible] வாழ்க்கையில் உயில் பெரிதன்று, உயிரும், உணர்வுமே பெரிதென்று [illegible] நீங்கள்தான் எங்களின் உண்மையான சொத்து! நீங்கள் இல்லாதது [illegible]ற்கே பித்து!

கடவுள் நம்பிக்கை நிறைய உள்ள எனக்கு, மறுபிறப்பிலும் உறுதியான [illegible] உள்ளது. உங்களிடம் வேண்டிக் கேட்பது, மறுபிறப்பில் உங்கள் [illegible] பிறக்க வேண்டும். இல்லையேல் நீங்கள் இந்தப் பிறப்பிலேயே எங்கள் [illegible] வயிற்றுப் பேரனாக வந்து பிறக்க வேண்டும். இஃது எனக்காக மட்டுமல்ல, [illegible] பிரிந்து வாடும் நல் இதயங்களின் காயத்திற்கு நல்மருந்தாக இருக்கும் [illegible] நம்பிக்கையின் வேண்டுகை.


தன்னலமற்ற தலைவர்களான காந்தியடிகள், அண்ணா, பெரியார், காமராசர், எம்.ஜி.ஆர். வரிசையில் உங்களையும் என் மனதில் சேர்த்து வைத்து விட்டேன். வாழ்க உங்களின் பண்பு நலன்கள்!





அண்ணாவின் அழகுத் தமிழ் !

அண்ணாவின் அழகுத் தமிழ்! அடுக்குச் சொல்லாற்றல் நன்கு கூர்தீட்டப்பட்ட அறிவாயுதமாக ஆரியத்தின் மீது பாய்ந்தது! புராணங்களின் புரட்டுகளும் வேதங்களின் வண்டவாளங்களும் வெளிப்படுத்தப்பட்டன! அண்ணாவின் சொல்லாற்றலால் அறிஞர் பெருமக்கள் அடிமைப்பட்டனர். திராவிட இயக்கம் மேற்கொண்ட பகுத்தறிவுப் பிரச்சாரத்தில் அண்ணாவின் பேச்சைப் பழித்தும், இழித்தும் பேசி வந்தவர்களுக்குப் பதிலாகவே சாக்ரடீசாக அண்ணா அவர்களை உருவகப்படுத்தி எழுதிய வசனமாகும். அதே போல ஆயிரமாயிரம் பேச்சாளர்களை உருவாக்கி அரசியல் மேடையானாலும், இலக்கிய அரங்கமானாலும், மாநாடுகளானாலும் அழகுத் தமிழை நர்த்தனமாடவிட்ட பெருமை அண்ணா அவர்களையே சாரும்!



புலவர் கிருட்டிணன்
தாராபுரம்


நினைவலைகள்...

உயர்வு தாழ்வு சொல்லி ஒரு சாதி உயர்ந்ததெனவும் மற்றதை தாழ்ந்ததெனத் தமிழினத்தைப் பிரித்து, ஒற்றுமையுடன் வாழ்ந்த இனத்தை 'வருணாசிரமம்' என்னும் பெயரால் பிரித்துச் சீரழித்துச் சாதி என்னும் தீயை வேதம், வேள்வி என்னும் சூதுவலை விரித்த சூதர்களின் வஞ்சகத்தைச் சிந்தனையெனும் தேர் ஏறித் தாக்கியழித்த தன்மான பெருந்தலைவன், மனித இனத்தின் மாண்பினை, மனித உள்ளம்தோறும் நிலைபெறச் செய்த உலக முதுபெரும் சிந்தனையாளர் ஈரோட்டு இங்கர்சால் பெரியார் அவர்களின் தளபதியாகிய பேரறிஞர் அண்ணா அவர்கள் கண்ட திராவிட முன்னேற்றக் கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு கடமையாற்றிய பெருந்தகையாளர் புளியம்பட்டி பி.ஏ. சாமிநாதன் அவர்கள்.

அந்த நினைவுகளில் சில...

திராவிட முன்னேற்றக் கழகம் தோற்றுவிக்கப்பட்ட பின் மாவட்டச் செயலாளராகக் கோவைச் செழியன் நியமிக்கப்பட்டுச் செயலாற்றி வந்தார். அடுத்து நடைபெற்ற மாவட்டக் கழகத் தேர்தலில் அறிஞர் அண்ணாவால் 'உடுமலை தேசிங்கு' என்று பாராட்டப்பெற்ற உடுமலை நாராயணன் தேர்தலில், கன்னிவாடி கே.எஸ்.சிரங்கராயரை வென்று மாவட்டச் செயலாளராகப் பணியாற்றி வந்தார்.

அதன்பின் நடைபெற்ற மாவட்டக் கழகத் தேர்தலில் அன்புக்குரிய அண்ணன் கோவைச் செழியன், புளியம்பட்டி சாமிநாதன் போட்டியிட்டு அண்ணன் சாமிநாதன் வென்று மாவட்டச் செயலாளர் ஆனார். அப்பொழுது கழகச் செயல் மறவர்களாக விளங்கியவர்கள் தேவசகாயம், கோவை மு. ராமநாதன், சி.டி. தண்டபாணி, சானகிராமன், கோபி இராசு, குன்னத்தூர் க. அன்பரசு, புளியம்பட்டி சீத்தாராமன், பு.கா. ஆறுமுகம், கோபி ஜி.பி. வெங்கிடு, மேட்டுப்பாளையம் தூயமணி, ரசாக், உடுமலை பருவதக்கண்ணன், அப்பாஸ், எஸ்.ஜே. சாதிக்பாட்சா, காளியப்பன்.



...சந்தி கண்ணப்பன், காங்கயம் தனிகாசலம், அப்பன் பழனிச்சாமி, ...கோவில் வீராசாமி, கே. ராமசாமி, திருப்பூர் இரா.முருகேசன், முத்து, ...சூர் கே.எம். சரபோசி, மூலனூர் சோமு, அழகிரிசாமி, கம்புளியம்பட்டி ...சாமி, ரங்கபாளையம் துரைசாமி, அவினாசி இராசு, பவானி கண்ணன், ...மலை ப. கோபால், வே. கிருஷ்ணமூர்த்தி, சோதி பழனிச்சாமி, விசயமங்கலம் ...ராமு, வால்பாறை இராமசாமி ஆகியோர் கழகப் படையின் தளபதியாய் ...யவர்கள் ஆவர்.

சேலம் அம்மாப்பேட்டையில் எழுச்சி மாநாடு. மாநாடு முடியும் முன் ...! என்னைக் கண்டதும், அறை எடுத்திருக்கிறாயா? என அண்ணன் ...டார். ஒரு அறைதான், அதில் அண்ணன் சித்தாராமன், திருப்பூர் துரை, எம்.பி. ...ப்பன் மற்றும் இருவர். படுக்க இடமில்லை. ஈ.வி.கே. சம்பத்தும் ...தாசனும் பிரிந்த நேரம் "எட்டடுக்கு மாளிகையில் ஏற்றிவைத்த என் ...வன்" பாடலைக் கேட்டும் பேசியும் விடிந்தது பொழுது.

திராவிட முன்னேற்றக் கழகச் சிறப்புப் பொது மாநாடு கோவை சிதம்பரம் ...கா மைதானத்தில் ஊரும் உலகமும் போற்றத்தக்க மாநாடு. மாபெரும் பந்தல் ...மைப்பு! நூற்றுக்கணக்கான தொலைக்காட்சிப் பெட்டிகள், புதிதாகத் ...தொலைக்காட்சிப் பெட்டி வந்தநேரம். வாணவேடிக்கையும், அலங்கார ...வுகளும், படை மறவர் அணிவகுப்பும் பார்த்தவர் வியக்க அமைந்தது. ...டோர் வியக்கக் கவின்மிகு மாநாடு! அண்ணன் இரவு பகல் பாராது உணவு ...க்கம் பாராமல் உழைத்துப் பெருமை சேர்த்தார்! நண்பர்கள் துணைக்கொண்டு ...நாளில் ஆற்றிய அரும்பணியாகும்.

தாராபுரத்தில் சீரணி அரங்கைப் பேராசிரியர் அவர்களோடு வந்து ...ந்துவைத்த நிகழ்வும், நிதியளிப்புப் பொதுக்கூட்டத்திற்குத் தலைவர் கலைஞரோடு ...லைப் பெற்றுக்கொண்டு இராமச்சந்திராபுரம் செல்லத் தலைவரோடு என்னையும் ...வென்று அழைத்துச் செல்லும்போது, பூளவாடியில் உடுமலை நாராயண ...ப்பைக்கண்டு பேசிச்சென்ற நிகழ்வினையும் மறக்க முடியுமா?

தேர்தல் நிதி திரட்ட அறிஞர் அண்ணா அவர்கள் வந்தபோது எங்களூர் ...பாளையம் வந்து நிதி பெற்றுச்சென்ற நிகழ்வு வரலாற்றுச் சிறப்புமிகு ...பலாகும்! மாநாட்டு நிதிக்காக எஸ்.ஏ. இராசமாணிக்கம், கோவை மு. ராமநாதன், திருப்பூர் துரைசாமி, உடுமலை நாராயணன், மு. கண்ணப்பன், தேவசகாயம் உடன்வர ...கள் வந்து சென்றது வரலாற்றுக் குறிப்பன்றோ!

நான் உடல் நலம் குன்றி இருந்தபோது செய்தியறிந்து வந்து, கோவைப் பொது மருத்துவமனைக்கு அனுப்பி வைத்து வேண்டிய உதவியைச் செய்து சென்றீர்கள். என் உயிர் உள்ளவரை மறக்கவொண்ணாப் பெருமைமிகு செயல் அல்லவா!

ஒருங்கிணைந்த கோவை மாவட்டம் பெருமைகொள்ளத் தக்க சிறப்புத் செயலாளராகக் கழகத்தை வளர்த்த கடமை வீரன்! இரண்டு முறை நாடாளுமன்றத்திற்குத் தேர்ந்து எடுக்கப்பெற்று நாடும் ஏடும் போற்ற வாழ்ந்த தோறும் பாசறைக் கூட்டம் நடத்தி, முன்னேற்றக் கழகத்தைச் சிங்க ஏறுபோல் சிலிர்த்தெழச் செய்த செயல் மறவன்! உடுமலை நாராயணன் மறைவிற்குப் பின் அவர்களின் திருமகன் பவானிசிங் திருமணம் நடைபெற இயலாத நிலையில் நீங்களும் மு.கண்ணப்பன் அவர்களும் பொறுப்பேற்றுத் திருமணத்தை நன்முறையில் நடத்தி வைத்து, அந்தக் குடும்பத்திற்கு விளக்கேற்றி வைத்தமை தனிவரலாறாகும்.

நான் நேரில் கண்டவற்றில் சில :

வாடிவந்த முகத்தைக் கண்டு, தேடிய செல்வத்தைக் கொட்டிக் கொடுத்தது உங்கள் கரமல்லவா!

எளியோர்க்கும் இல்லாதவர்க்கும் கல்விக்குக் கொடுத்து உதவிய கருணை மனமல்லவா!

இன்னலுக்கும், இடுக்கணுக்கும் ஆளானவரை நாடிச்சென்று இன்னல் தீர்த்த பெருந்தகையாளன் நீ!

புளிசையில் நீ வளர்த்த கழகத்திற்கு அரண்மனை போன்ற மாளிகையினைத் தந்து மகிழ்ந்தவன் நீ!

'ஆலயம் தொழுவது சாலவும் நன்று' எனச் சான்றோர் சொல்லுவர். ஆம் அண்ணன் வாழ்ந்த இல்லமே நான் வணங்கும் ஆலயம்!

நானும் நண்பர் செந்தில் முத்துசாமியும் ஒருநாள்அல்ல எத்தனையோ நாள்கள் எண்ணற்ற முறை கண்டவுடன் முகம் மலர்ந்து மணிக்கணக்கில் பேசிப்பெற்ற இன்பத்தைக் கண்ணீர்க் காவியம் ஆக்கிச் சென்ற உள்ளம் கவர்ந்த குணக்குன்றே உன்னை மண்ணுலகம் மறத்தலும் கூடுமோ!?



கட்டுப்பாடும் ஒழுங்கும்
சாதாரணமானவைதான்.
ஆனால் இந்த மாதிரி
சாதாரண விசயங்களைக்
கொண்டுதான் ஒரு சமூகத்தை
எடைபோட முடியும்!

\- அண்ணா



தெ. குமாரராஜா B.Sc.,
தபெ. கோ.ப. வெங்கிடு Ex.M.L.A.,
தலைவர் - திருப்பூர் மாவட்டப் பகுத்தறிவாளர் கழகம்.
அவிநாசி - 4

பெரியார், அண்ணா வழியில் பெரியவர் பி.ஏ.எஸ்.

இலட்சக்கணக்கானோர் சரித்திரத்தைப் படிக்கிறார்கள். அவர்களில் ஒருவர் தான் சரித்திரத்தைப் படைக்கிறார். நினைவுமலர் வெளியிடப்படுகின்ற போதே, தெளிவாகத் தெரிகிறது - சரித்திரத்தைப் படைத்தவர் சாதனையாளர் என்பது. **'சாதனைச் செம்மல்'** என்றும், **'பெரியவர்'** என்றும் ஊர் மக்களாலும், **'சாமி'** என்று சக நண்பர்கள் மற்றும் தலைவர்களாலும், **'அண்ணன்'** என்று தி.மு.கழகத் தோழர்களாலும் அவரவர் விருப்பத்திற்கேற்ப அழைக்கப்பட்ட **'பெரியவர்' பி.ஏ.எஸ்.** அவர்கள்.

அவர்தம் வாழ்க்கை என்னும் வரலாற்றில் நேற்று, இன்று, நாளை என முக்காலத்திற்கும் மற்றவர்களுக்குப் பயன் தரும் சில செய்திகளை எடுத்துக் கூற எனக்கும் ஒரு வாய்ப்புக் கிடைத்திருப்பதை, என் வாழ்வில் மறக்க முடியாத தருணங்களில் ஒன்றாகவே கருதுகின்றேன். அதற்காக, **அக்கா சம்பூரணம்** அவர்களுக்கும், அவர்தம் திருமகன் **அன்பு** உள்ளிட்ட குடும்பத்தார்க்கும் என் மனமார்ந்த நன்றியை முதலில் தெரிவித்துக் கொள்கிறேன்.

பொதுவாக, மனமுவந்து பொருள் உதவியோ, அல்லது பிற உதவிகளோ செய்பவர்கள், பெரும்பாலும், கோயில் கட்டவும், கடவுள் காரியங்கள் செய்யவும் தான் பெரும் விருப்பத்தோடு முன்வருகிறார்கள். அவர்களே - பெரியார் பெயரைச் சொல்லிக் கொண்டும் பகுத்தறிவு, இன, மானப் பிரச்சாரம் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, அணுகும் போதும் முற்றிலும் மாறுபடுகிறார்கள். தன்னை நாடி வந்துள்ளார்கள் என்பதற்காக, விருப்பம் இருந்தோ, இல்லாமலோ நட்புக்காக உதவி செய்கிறார்கள்.

ஆனால், நமது பெரியவர் அவர்களோ, இதற்கு நேர்மாறானவர். அவரிடம் பெரியவர் என்றும் **அண்ணா** என்றும் சொல்லிக் கொண்டு உதவி கேட்டு வரும் தோழர்களிடம், **நான் இதற்காகத்தான் காத்துக்** கொண்டிருந்தேன் என்று சொல்லாமல்சொல்வதைப் போல நடந்து கொள்ளும் தந்தை பெரியாரின் சீடன் பேரறிஞர் **அண்ணாவின் தம்பி** அவர். கை நிறைய அள்ளிக் கொடுத்து வாய் நிறைய உற்சாகமூட்டி உற்றதுணையாக என்றும்

நான் இருக்கிறேன் என்று நம்பிக்கை ஊட்டி மற்றவர்களைப் பணியாற்ற வைப்பவர்


அவர் தன் வாழ்நாளில் எந்த ஒரு கடவுளையும் நம்பிக்கையுடன் வணங்கியோ நம்பிட்டவர் அல்லர். அதே சமயம், கடவுள் நம்பிக்கையாளர்கள், அவரை நாடி வந்து ஏமாற்றத்துடன் திரும்பிப் போனதும் இடையாது. தனது கொள்கைக்கும் பங்கம் வாராமல், அதே நேரத்தில், சக நண்பர்களின் மனமும் நோகாமல் தன்னால் இயன்ற உதவிகள் செய்து தரும் பண்பாளர்.

பெரியவர் அவர்களின் இருகண்களில் ஒன்று பெரியார், மற்றொன்று அண்ணா. நாத்திகக் கொள்கைகள், பகுத்தறிவுச் சிந்தனைகள் தாய் மொழியாம் தமிழ் மொழியை காக்கவும், வளர்க்கவும், விழிப்புடன் இருந்து, வீரத்துடன் பணியாற்றிய திராவிட இயக்க வரலாறு அவர். தி.மு.க. என்னும் ஆலமரத்தைத் தமிழகத்தின் மேற்கு மண்டலத்தில் வேரூன்றச் செய்து தண்ணீர் ஊற்றியவர்களுக்குத் தலைவனாக இருந்து, கண்ணீரும் செந்நீரும் ஊற்றிக் கட்சியைக் கட்டிக் காத்தவர் என்பது உலகு அறிந்த உண்மையாகும்.

கழகத்தில் பலர், பொருளாதார நிலையில் துவண்டுபோய் நின்ற காலத்தில் 'இடுக்கண் களைவதாம் நட்பு' என்ற தொடருக்கு இலக்கணமாக இருந்து, பலருக்கு கைகொடுத்தவர் - கை தூக்கிவிட்டவர் நமது 'பெரியவர்' ஆவர். வாழ்வின் இறுதி கட்டத்தில் ஆதரவற்று இருந்த பலருக்கு, அரசின் உதவித்தொகை வந்து சேர்வதற்கு முன்பாக, இவரது உதவித்தொகை சென்று சேர்ந்துவிடும். அது மட்டுமன்று, உதவி செய்யும் இவருக்கும், உதவியைக் கேட்டுப் பெறும் நண்பருக்கும் இடையில் நடைபெறும் இந்தச் செயல், இவர்கள் இருவருக்கும் மிகவும் நெருக்கமாக இருப்பவர்கள் ஒரு சிலருக்கு மட்டுமே தெரியும். அந்த அளவுக்கு உதவி பெறுபவர் தன்மானத்திற்கு எந்த விதத்திலும் ஊறு நேரா வகையில் அவர் உதவும் பாங்கு தனிச் சிறப்புடையது.

"உனக்கு மேலானவர் என்று யாரும் இல்லை, உனக்குக் கீழானவர்கள் என்று யாருமில்லை" என்ற தந்தை பெரியார் அவர்களின் தத்துவத்தையும், "ஆதிக்கமற்ற சமுதாயம், அமைத்தே தீருவோம்" என்ற அறிஞர் அண்ணா அவர்களின் கொள்கையையும், உணர்வுப்பூர்வமாக ஏற்றுக் கொண்ட காரணத்தால், சகமனிதர்கள் அனைவரிடமும் சாதி - மதம் பார்க்காமலும், உயர்வு - தாழ்வு கற்பிக்காமலும், ஏழை பணக்காரன் என்று எண்ணாமலும், சரிநிகர் சமானமாக வாழ்ந்து காட்டியவர்.

ஊரில் இருக்கும் மிகப் பெரிய செல்வந்தர் ஒருவரைச் சந்தித்து உரையாடி விட்டு ஊரில் இருக்கும் மிகவும் வறிய ஏழை ஒருவரைப் பார்த்தும் பேசிவிட்டு வந்தால், பெரியவர் எனது நெருங்கிய நண்பர் என்றும், எனது நலம் விரும்பி என்றும் ஒரே மாதிரி இருவரும் பேசுகிற காட்சியைச் சாதாரணமாகக் காணலாம்! இது கட்சிகளைக் கடந்து மாற்றுக் கட்சியில் உள்ளவர் கூறுவது கொண்டும் உணரலாம்.



[illegible]

[illegible]

அந்த காலகட்டத்தில் - கட்டிக்காக உழைத்த குடும்பம் ஒன்று பெரியவரை அணுகி எப்படியாவது தங்கள் மகளுக்கு ஆசிரியைப் பயிற்சி பள்ளியில் ஒரு இடம் வாங்கித் தர வேண்டும் என்று வற்புறுத்துகிறார்கள். அவர்கள் பொருளாதார நிலையில் மிகவும் பின்தங்கி இருந்த காரணத்தால், நன்கொடை எதுவும் தர இயலாது என்றும் விளக்கிக் கூறி உதவி கேட்கிறார்கள்.

பெரியவர் அவர்கள் தீவிரமாக யோசித்துப் பார்த்துவிட்டு ஆசிரியர் கி. வீரமணி அவர்களை சந்தித்து திருச்சியில் உள்ள பெரியார் நாகம்மை ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில் இடம் கேட்க முடிவு செய்கிறார். உடனே என்னை அனுப்பி அய்யா அவர்களை சந்திக்க வேண்டும் என்று கூறினார்கள்.

அந்த சமயத்தில் - மானமிகு கி. வீரமணி அண்ணா அவர்கள், ஒரு பெரிய சுற்றுப் பயணத்தை முடித்து விட்டு, குன்னூரில் உள்ள தி.க. துணைப் பொதுச் செயலாளர் மருத்துவர் பிறைநுதல்செல்வி - கவுதமன் அவர்களின் இல்லத்தில் ஓய்வு எடுத்துக் கொண்டிருந்தார் என்கிற செய்தியைப் பெரியவர் அவர்களிடம் கூறினேன்.

உடனே, சற்றும் தாமதம் செய்யாமல், பெரியவர் என்னை அழைத்துக் கொண்டு ஊட்டி புறப்பட்டுச் சென்று, ஆசிரியர் கி. வீரமணி அய்யா அவர்களைச் சந்தித்து நிலைமைகள் அனைத்தையும் விளக்கிக்கூறி உதவி கேட்கிறார்கள். இத்தனைக்கும் வரை நாங்கள் அணுகிய நேரம், தமிழகத்தில் உள்ள அனைத்து ஆசிரியப் பயிற்சி நிறுவனங்களிலும், சேர்க்கை முடிந்து வகுப்புகள் தொடங்கிய நேரம். திருச்சியிலும் அந்த நிலை. வேறு வழியில்லை பள்ளிச் சேர்க்கை முடிந்துவிட்டது என்று கூறி எங்களைத் திருப்பி அனுப்பி விடுவார் என்று மனதுக்குள் நினைக்கத் தொடங்கினோம். ஆனால் பெரியவர் மீது, ஆசிரியர். வீரமணி அவர்கள் எவ்வளவு தூரம் மதிப்பு வைத்திருந்திருந்தார் என்பதை அன்று நேரில் பார்க்க முடிந்தது.

பள்ளிச் சேர்க்கை முடிவடைந்துவிட்ட நிலையில் - நூற்றுக்கணக்கில் [illegible] காத்திருப்போர் பட்டியலில் காத்திருக்கும் நிலையில் - மாணவர்கள் [illegible] நன்கொடையைக் கொண்டு திருச்சிப் பள்ளி இயங்கிக் கொண்டிருந்த [illegible] காலத்தில், அரசு அதிகாரிகளிடம் சிறப்பு அனுமதி பெற்றும் பெரியவர் [illegible] மாணவியைச் சேர்த்துக் கொள்வதாகவும், எவ்வித நன்கொடையும் பெறாமல் சேர்த்துக் கொள்வதாகவும் மானமிகு ஆசிரியர் கி. வீரமணி அவர்கள் கூறியபோது சிறிது நேரம் நான் மலைத்துப் போனேன். இவர் மீது அவர் கொண்டிருந்த மரியாதைக்கு இந்த ஒன்றே போதும் என்று கருதுகிறேன்.

பெரியவர் அவர்களின் மணிவிழாவும், மகள் அன்பு அவர்களின் மணவிழாவும் மானமிகு ஆசிரியர் கி.வீரமணி அவர்களின் வாழ்த்துரை மற்றும் தலைமையுரையுடன் [illegible] நடைபெற்றது? என்பதை வாசகர்கள் இந்த நேரத்தில் நினைத்துப் பார்க்க வேண்டுகிறேன்.


சமூகப் பணியிலும் கல்விப் பணியில் பெரியவர்

பெரியவர் அவர்கள் தம்வாழ்நாளில் இரண்டு பணிகளை ஒரு போதும் நிறுத்தியதில்லை. ஒன்று, அடிக்கடி முரசொலி, விடுதலை, தினகரன் போன்ற நாளேடுகளில் வெளிவரும் மிகச் சிறந்த கட்டுரைகளை அப்படியே அச்சிட்டு வழங்கிக் கொண்டிருந்தார்கள்.

மற்றொன்று, ஒவ்வொராண்டும் ஜூன் மாதத்தில், டாக்டர் கலைஞர் அவர்கள் பிறந்த நாளையொட்டி வசதி குறைவான நிலையில் கல்லூரிகளில் இடம் கிடைத்தும் சேர முடியாமல் அல்லல்பட்டு வந்த மாணவ, மாணவியர் ஐம்பது பேருக்கு குறைவில்லாமல், கல்வி உதவித்தொகை தரும் நற்செயலை, எப்பாடுபட்டாவது நிறைவேற்றி வந்தார்கள்.

இதன் விளைவாகப் புன்செய்ப் புளியம்பட்டிப் பகுதியை ஒட்டி கல்லூரி ஒன்றைத் துவங்கி, மற்ற குழந்தைகளுக்கும், குறைந்த கட்டணத்தில் கல்வி தர வேண்டும் என்கிற எண்ணம் அவர் மனதில் உதிக்கிறது. அதன் தொடர்ச்சியாகக் கோவை பாதையில், செல்லப்பம்பாளையம் கிராமத்தில் இடம் வாங்கப்படுகிறது.

அங்கே, கலைக் கல்லூரி ஒன்றைத் துவங்கும் நோக்கில், அய்யன் திருவள்ளுவர் கலை அறிவியல் கல்லூரிக்கு விண்ணப்பம் செய்து, அன்றைய கல்வி அமைச்சர் இனமானப் பேராசிரியர் அவர்களிடம் அனுமதி கேட்டு, உரிய கோப்பும் வைக்கப்படுகிறது. அவற்றைப் பொறுமையாகப் படித்துவிட்டுப் பேராசிரியர் அவர்கள், பொதுவாக கல்லூரி என்றால் நகர்ப்புறத்தையே மக்கள் பெரிதும் விரும்புகிறார்கள். தற்போது, சத்தி வட்டத்தில், கலை, அறிவியல் கல்லூரி இல்லை என்பதால், உங்கள் கல்லூரியைப் புளியம்பட்டி நகரை ஒட்டி அமைப்பதை விட சத்தியமங்கலம் அருகில் அமைப்பதே சிறந்தது என்று அறிவுரை கூறுகிறார்கள்.



...து பெரியவர் அவர்களோ, எங்கள் ஊர் மிகவும் வறட்சியான, பின்தங்கிய ...ம் எங்கள் பிள்ளைகள் பொருளாதார ரீதியாகத் தொல்லையின்றிப் ...ம் பயண நேரத்தைக் குறைக்கவும் எனக்கு இந்த இடத்திலேயே அனுமதி ... என்று கேட்டு, அனுமதி வாங்கினார்கள்.

ஆனால் பின்னாளில், பேராசிரியர் அவர்கள் கூற்று தொலைநோக்குப் பார்வை ...டது என்பதை உணர்த்தியது. எஃது எப்படியோ, பெரியவர் அவர்கள் ...யைத் தொல்லைப்பட்டு நடத்தினாலும், அவர் எண்ணப்படி பல ஏழை மற்றும் ... மக்கள் வீட்டுக் குழந்தைகள் எளிதாகக் கற்க முடிந்தது என்பதே ...மையாகும்.

பெரியவர் அவர்களின் வாழ்க்கையானது - திருக்குறளில் உள்ள 1330 ...பாக்களில் ஒரு குறளுக்கு மகத்தான வெற்றியையும், மற்றொரு குறளுக்கு சற்று ...வியையும் கொடுத்திருக்கிறது.

"அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை"

என்கிற திருக்குறளுக்குப் பெரியவர் வாழ்ந்த வாழ்க்கை மிகப் பெரிய வெற்றியைக் ...த்து மெய்ப்பித்திருக்கிறது.

அதே சமயம்,

"தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினாற் சுட்ட வடு"

என்கிற குறள் பெரியவரிடம் தோற்றுவிட்டது. என்றே கூறலாம்.

பிறர் கூறும் கடுஞ்சொற்கள், அந்த நேரத்தில் அவரை வேதனைக்கு உள்ளாக்கி ...க்கலாம். அதனால் தோன்றிய வருத்தம் அவரிடம் நீண்ட நாள்களுக்கு ...த்ததில்லை. வெகு எளிதில் மன்னித்து விடுவார் - மறந்தும் விடுவார். எனவே அவர் ...டல் தீயினாற் சுட்ட புண்ணும் இல்லை, அவர் மனதில் நாவினால் சுட்ட வடுவும் ...ல்லை. அதனால்தான்,

"குணமென்னும் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயுங் காத்தல் அரிது"

என்று திருவள்ளுவர் கூறியுள்ளாரோ? என்னவோ?

மொத்தத்தில் நேரம் தவறாமை - உதவும் உள்ளம் - சலியாத உழைப்பு - வசீகரிக்கும் ...ிப்பு - கண்ணோட்டமுள்ள கனிவான பார்வை - பாரபட்சமற்ற அன்பு - இலட்சியத்தில் ...றாத உறுதி எனப் பல பண்பு நலன்களின் நாயகர். அவர் மறைந்தும் மறையாத ...னிதர்! அவரை வாழ்க என்பதில் பெருமை கொள்கிறேன்.

பெரியவர் பி.ஏ.எஸ். புகழ் வாழ்க! வாழ்க!

[illegible]



உண்மைத் தொண்டன்


[illegible]

தொண்டர்கள் பால் பற்றும் - பாசமும் - பரிவும் கொண்ட அண்ணனின் [illegible] எங்களின் உள்ளத்தில், எங்கள் வாழ்நாள் உள்ளவரை அழிக்க இயலாத நினைவுச் சின்னமாகப் பதிந்திருக்கும்.

அக்கா சம்பூரணம் அவர்கள், அண்ணனின் பிரிவுத் துயரிலிருந்து - தங்கள் உள்ளத் திண்மையால் - ஓரளவாவது மீண்டு, கல்லூரி விழாக்களிலும், பொது நிகழ்வுகளிலும் கலந்து கொள்ளும் நிகழ்வுகளைச் செய்தித் தாள்களின் வழியாக அறிந்து ஆறுதலடைகிறேன்.

மாசற்ற அண்ணனின் தூய நல் எழுச்சி, - அடிபொற்றி வளரும் செல்வன் [illegible] பணிகளுக்கும் - எழுச்சிக்கும் வழிவகுக்கும்!


வாழ்க பெரியவரின் தூய அரசியல் பணிகள்!



தந்திரம்

சாதி - இந்து ஒழிய வேண்டுமா? வேண்டாமா? என்பது தான் இன்றுள்ள கேள்வி. பாழாய்ப்போன சாதிப் பேச்சு தொடங்கிவிட்டதா? இந்து அந்தக் கேள்விக்குரிய விடை அன்று. சாதியை நிலைநாட்டுவதற்குரிய தந்திரம்.

-அண்ணா



அரசூர் - புதூரில் சந்தாமணி என்ற பெண்ணுக்குக் நடவிருக்க அறுவை சிகிச்சை பெற அனைத்து உதவிகளையும் செய்து தந்தார்.

அரசூர் - புதூரில் சிவகாமி என்ற பெண்ணுக்குச் செய்ய வேண்டிய பெரிய அறுவைச் சிகிச்சை ஒன்றுக்கு உண்டான அனைத்து உதவிகளையும் செய்துதந்தார்கள்.

அரசூர் கழகச் செயலாளர் ஏ. சுப்பிரமணியம் அவர்கள் நெசவாளர் சொசைட்டியில் தலைவராக இருந்தபோது நடந்த தவறுக்காகக் கைது செய்யப்பட்டுச் சிறையில் இருந்த சமயம், அவரின் ஜாமீனுக்காக ரூ. 3,000/ செலுத்தி வெளிக்கொணர்ந்து, அவரின் கழகப்பணி மீண்டும் தொடர உதவினார்.

அரசூர் அ.பெ.மாரியப்பன் கழக நண்பர். அவர் உடல்நலக் குறைவால் மருத்துவமனையில் இருந்தபோது நிதியுதவி செய்து உதவினார்.

அரசூர் பஞ்சநாதன் என்பவர் பி.ஏ.எஸ். அவர்களால் பணி கிடைக்கப் பெற்று இன்று நல்ல நிலையில் உள்ளார்.

அரசூர் அருள்மிகு காமாட்சியம்மன் திருக்கோயில் திருப்பணிக்குப் பி.ஏ.எஸ். அவர்கள் ரூ. 10,000/ கொடுத்து உதவினார்கள்.

இன்னவண்ணம்,

அரசூர்ப் பொதுமக்கள்

ஏ.வி. காளியப்பன் — ஏ.ஏ. முருகேசன்
ஏ. சுப்பிரமணியன் — ஏ.வி. முருகேசன்
ஏ.எம். நாகலிங்கம் — கே. பழனிச்சாமி
ஏ. கந்தசாமி — ஆர். சென்னியப்பன்



கருத்தரங்குகளின் பணி

சிந்தனைகளைச் சேகரித்துக் கோவைப்படுத்தி விடுவதே கருத்தரங்குகளின் பணியாகும். தங்களையொத்த அறிஞர்களின் முன்னிலையில் தங்கள் அறிந்தவற்றை எடுத்துக்கூறி, எந்த அளவு தங்கள் கருத்து அவர்கள் கருத்தோடு ஒத்துப்போகிறது, எந்த அளவு வேறுபடுகிறது என்று அறிந்து, மேலும் அதுகுறித்த விவாதத்திற்கு வழி வகுத்து, இத்தகைய கருத்தரங்குகளிடமிருந்து நற்பலன்களை எதிர்பார்த்திடும் மக்கள்முன் கனிந்து உருவாகிய கருத்துக்களை வைத்திட வேண்டும்.

- அண்ணா


கே. சோமசுந்தரம்
எலத்தூர் - செட்டிபாளையம்



பொதுநலத் தொண்டர் பி.ஏ.எஸ்.

புன்செய்ப் புளியம்பட்டிப் பெரியவர் திரு. பி.ஏ.எஸ். அவர்கள் 1967-ஆம் ஆண்டு கோபித் தொகுதி நாடாளுமன்ற வேட்பாளராகப் போட்டியிட்டபோது, எலத்தூர் - செட்டிபாளையத்துக்குத் தேர்தல் பிரச்சாரத்திற்கு வந்தபோதுதான் எனக்கு அறிமுகம் ஆனார். அப்போது முதல் அவருடன் எனக்குத் தொடர்பு உண்டு. 1967-ஆம் ஆண்டு தேர்தலில் ஆள்பலம், பணபலம் கொண்ட வேட்பாளரைத் தோல்வியுறச் செய்து நாடாளுமன்ற உறுப்பினர் ஆனார்.

கோவை, ஈரோடு, திருப்பூர் மாவட்டங்களில் திராவிட முன்னேற்றக் கழகத்தை வளர்த்த பெருமை திரு. பி.ஏ.எஸ். அவர்களைச் சாரும் என்றால் அது மிகையாகாது. திரு. பி.ஏ.எஸ். அவர்கள் நாடாளுமன்ற உறுப்பினராகவும், கோவை மாவட்டச் செயலாளராகவும் இருந்த நேரத்தில் பொதுமக்கள் சொல்லும் குறைகளைக் கேட்டுச் சம்பந்தப்பட்ட அதிகாரிகளைச் சந்தித்து உடனடியாகக் குறைகளை நீக்கம் செய்துள்ளார். பொதுமக்கள் எந்தக் கட்சியைச் சேர்ந்தவராக இருந்தாலும் குறைகளைத் திரு. பி.ஏ.எஸ். அவர்களிடம் சொன்னால் உடனடியாக நீக்க ஆவன செய்வார். உதாரணத்திற்கு, எங்கள் ஊருக்குச் செய்த உதவியைக் கூறக் கடமைப்பட்டுள்ளேன். எங்கள் ஊரில் திரு. சி.பி. கந்தசாமி முதலியார் கட்டிடத்தில் வாடகை இல்லாமல் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வந்தது. ஆரம்ப சுகாதார நிலையம் கட்ட இலவச நிலமும் பொதுமக்கள் மூலம் ரூபாய் 25,000/ வசூல் செய்து அரசுக்குச் செலுத்தும்படி உத்திரவு பிறப்பித்தார்கள். எங்கள் கிராமப் பொதுமக்கள் மூலம் ரூபாய் 25,000/ வசூல் செய்து அரசுக்குச் செலுத்தினோம். எங்கள் எலத்தூர் ஊராட்சி, நிலத்தை வழங்கியது. ஆனால் அரசு எங்கள் ஊரில் சுகாதார நிலையம் கட்ட எந்த முயற்சியும் எடுக்கவில்லை. சுமார் ஆண்டுகளுக்கு முன் நானும், எங்கள் ஊரைச் சேர்ந்த 4 நபர்களும் புன்செய்ப் புளியம்பட்டி சென்று, பெரியவர் திரு. பி.ஏ.எஸ். அவர்களிடம் எங்கள் ஊரில் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் கட்டப் பணம் வந்து



கட்டியும் சுமார் 30 ஆண்டுகளாகக் கட்டித் தரவில்லை என்று கூறி சம்பந்தப்பட்ட ஆவணங்களையும் காண்பித்தோம். சுமார் ஒரு மாதத்திற்குள் சம்பந்தப்பட்ட அரசு அதிகாரிகளைச் சந்தித்து அரசு ஆரம்ப சுகாதார நிலையம் கட்ட அனுமதி வாங்கிக் கொடுத்து, மேற்படி ஆரம்ப சுகாதார நிலையம் கட்டும் பூமி பூஜைக்குத் தலைமை தாங்கி நடத்திக் கொடுத்தார். மேற்படி சுகாதார நிலையம் கடந்த 10 ஆண்டுகளாக நல்ல முறையில் செயல்பட்டுக் கொண்டுள்ளது. மேலும் ஊரில் மாரியம்மன் கோயில் திருப்பணி 1993-ஆம் ஆண்டு நடந்தது. மாரியம்மன் கோயில் குறிஞ்சி மண்டபம் கட்ட திரு. பி.ஏ.எஸ். அவர்கள் ரூபாய் 12,500/- நன்கொடை வழங்கியுள்ளார்கள். பெரியவர் திரு. பி.ஏ.எஸ். அவர்களின் மறைவு- கோவை, ஈரோடு, திருப்பூர் மாவட்ட மக்களுக்குப் பேரிழப்பாகும்.

அண்ணாவின் மாண்பு

அன்புள்ள தம்பிக்கு என்று அவர் எழுதிய கடிதம் வடிவிலான கட்டுரைகளும், தம்பி உடையான் படைக்கு அஞ்சான் என்று தனது மேடைப் பேச்சுக்களில் குறிப்பிடுவதன் மூலம் தனது கட்சித் தொண்டர்களை மனங்குலையாமல் உற்சாகத்தோடு அரவணைத்து அரசியல் வெற்றித் திக்கை நோக்கி அழைத்துச் சென்ற பாணியும் மகத்தானது.

அரசியலில் மாற்றுக் கருத்தை ஏற்பதிலும், நட்பிற்கு அரசியல் வேறுபாட்டை மறப்பதிலும் அறிஞர் அண்ணா இலக்கணமாய்த் திகழ்ந்தார். இந்தியத் திருநாடு விடுதலை பெற்றதை மகிழ்ச்சியோடு வரவேற்ற அவர், காங்கிரஸ் ஆட்சி மீது அன்றைய நாளில் சில கருத்து வேறுபாடுகளைக் கொண்டிருந்தாலும் தேசப்பிதா மகாத்மாகாந்தி அவர்களைப் போற்றி நூல் எழுதினார். அவரது திருவுருவச்சிலை திறந்தார். இவையெல்லாம் அண்ணாவின் உயர்ந்த அரசியல் பண்புகளாகும்.

பெருந்தலைவர் காமராஜர் இடைத் தேர்தலில் போட்டியிட்ட பொழுது, குணாளா, குலக்கொழுந்தே என்று வாழ்த்தியவர் அண்ணா. சென்னை மாநகராட்சி - தி.மு.க. வசமிருந்த நேரத்தில் பெருந்தலைவர் காமராஜருக்குப் பிரதமர் பண்டித நேருவின் திருக்கரத்தால் திருவுருவச் சிலை திறந்து வைக்க ஆவண செய்தவர்.

காங்கிரஸ் தலைவர்கள் குறித்தோ, ஆட்சி நிர்வாகத்தைக் குறித்தோ எதிர்க்கட்சித் தலைவர் என்ற நிலையிலிருந்து விமர்சனம் செய்கிற நேரங்களில் நாகரிகச் சொல்லையே பயன்படுத்திய பண்பிற்சிறந்த நாவுக்கரசர் அவர்.

இந்திய தேசியம்தான் மாநிலங்களின் வளத்திற்கும், நலத்திற்கும் பொதுக்காப்பு அரண் என்பதை ஏற்று, அதற்கேற்பத் தனது கட்சியின் கொள்கையை யொற்றி இந்திய ஒருமைப் பாட்டுணர்வோடு அரசியல் பணியை அமைத்துக் கொண்டவர் அண்ணா.

பி.ஏ. சாமிநாதன் அவர்களின் கல்விப் பணிகள்

தமிழன்னை கல்வி அறக்கட்டளை

செல்லப்பம்பாளையம், பு. புளியம்பட்டி

புளிசை மாநகரின் விடிவெள்ளியாய், உதிக்கின்ற செங்கதிரவனாய், தித்திக்கின்ற தேன்கனியாய்த் திகழ்ந்த நம் கொங்கு நாட்டின் சிலர் திருவாளர் பெரியவர் பி.ஏ. சாமிநாதன் அவர்களின் கல்விப் பணிகள் குறித்துச் சிறு துளிகள்.


நம் கிராமத்துச் சிட்டுகளும், காளைகளும் பட்டங்கள் ஆளவும் சட்டங்கள் செய்யவும் கல்லூரியே இல்லாத கிராமப் பகுதியில் கல்லூரிக் கல்வியை அளித்தவர் நம் பெரியவர் அவர்கள்.

அய்யன் திருவள்ளுவர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியானது அரசாணை எண். 91/08.03.2001-இல் தொடங்கப்பட்டது.

B.Com (CA) - 32 மாணவர்கள், B.C.A. - 27 மாணவர்கள், B.Sc. (CS) - 22 மாணவர்கள் ஆக 81 மாணவர்களுடன் தொடங்கப்பட்டு இப்போது 2010-2011 ஆம் கல்வியாண்டில் 228 மாணவர்களாக உயர்ந்துள்ளது.

Salient Features:

- Well qualified faculty members.
- Well equipped lab for all departments.
- Internet facility.
- Excellent results in University Examinations.
- Training and Placement cell.
- Loan facility for all students.
- Government Scholarship facilities for BC/MBC/SC/ST students.
- Campus Interview arrangements.
- Regular weekly test and feedback to the parents.



பவானி மேனிலைப்பள்ளி

இப்பள்ளியானது பெரியவர் பி.ஏ. சாமிநாதன் அவர்களின் முயற்சியின் கீழ் 1-ஆம் வகுப்பு முதல் 12-ஆம் வகுப்பு வரை ஆங்கிலம் மற்றும் தமிழ் வழிக் கல்வியில் தொடங்கப்பட்டு இயங்கி வருகின்றது.

1-10 வரை அங்கீகார எண். ந.மு.எண். 108/94/2002 நாள் : 16.12.2002

11-12 வரை அங்கீகார எண். ந.மு.எண். 144854/12/2000 நாள் : 30.01.2001

மாணவர்களுக்கு வழங்கப்படும் சலுகைகள் :

மாநில அளவில் முதலிடம் பெறுபவருக்கு 12-ஆம் வகுப்பு - ரூ. 1 லட்சமும் 10-வகுப்பு - ரூ. 50,000 ம் வழங்கப்படும். மாவட்ட அளவில் முதலிடம் பெறுபவருக்கு 12-ஆம் வகுப்பு - 50,000 ரூபாயும், 10-வகுப்பு - 25,000 ரூபாயும் வழங்கப்படும். 12-ஆம் வகுப்பில் 90% மேல் மதிப்பெண் பெறும் மாணவர்களுக்கு ரூ.10,000 உதவித்தொகை பெற்றுத்தரப்படும்.

பெரியவரின் கல்விப் பணியால் எங்களுக்குக் கிடைத்த விருதுகள் :

Indian Human Right Vigilance Organisation (Regd.)

National Integrity Cultural Academy இன் சார்பாக *"Indian Citizen Achievement Award"* என்ற விருதினை எங்கள் தாளாளர் திருமதி. சம்பூர்ணம் சாமிநாதன் அவர்களுக்கு வழங்கிச் சிறப்புச் செய்தது.

சந்திராயன் திட்ட இயக்குநர் திரு. **மயில்சாமி அண்ணாதுரை** அவர்கள் 11.11.2010 அன்று எங்கள் தமிழன்னை கல்வி அறக்கட்டளை நிறுவனங்களுக்கு வருகைபுரிந்து, பெரியவர் ஆற்றிய கல்விப் பணிகள் பற்றிச் சிறப்புரை ஆற்றினார்கள். இதுவும் பெரியவர் வாழ்வில் மறக்கமுடியாத பசுமையான நினைவேயாகும்.

2003-2004இல் 10-ஆம் வகுப்புப் பொதுத் தேர்வில் 100% தேர்ச்சி - "விடியல் சாதனைப் பள்ளி விருது"

2006-2007இல் 12-ஆம் வகுப்புப் பொதுத் தேர்வில் 100% தேர்ச்சி - "விடியல் சாதனைப் பள்ளி விருது" வழங்கியோர் - விடியல் சமூகநல இயக்கம். இத்தகைய விருதுகளுக்கு ஆணிவேராய்த் திகழ்ந்தவர் பெரியவர் பி.ஏ. சாமிநாதன் அவர்களே. பெரியவர் பி.ஏ. சாமிநாதன் பல அல்லல் பட்டுச் சிகரங்களைத் தொட்டவர்.

வாலிபர் உள்ளம்

பகுத்தறிவு உன்னும் பகலவனால் எரிக்கப்பட்டு, தன்நலம் - தன்சுகம் ஆகிய நச்சுப்பூச்சிகளால் அழிக்கப்பட்ட தூய்மையானதோர் வட்டாரம், வாலிபர் உள்ளம்.

- அண்ணா

அன்னை காவேரி ஆசிரியர் பயிற்சி நிறுவனம்

நமது பகுதியில் நல்ல ஆசிரியர் உருவாக எங்கள் கல்வி அறக்கட்டளையின் தந்தை பெரியவர் பி.ஏ.எஸ். அவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சியால் அன்னை காவேரி ஆசிரியர் பயிற்சி நிறுவனம் சிறந்த ஆசிரியர் பயிற்சி நிறுவனமாக செயல்பட்டு வருகின்றது.

F SPO/NCTE/D.T.Ed./2006-2007-9676 CODE:APSO 3688

To be published in the gazette of India part III sec-4.

Were as terms of section 14(1) of the NCTE act 1993 Tamil Annai Educational & Charitable Trust, Coimbatore (Dt.), Tamilnadu has submitted an application to the southern regional committee NCTE for grant of recognition to Annai Kaveri Teacher Training Institute, Sellappampalayam (P.O.), P. Puliampatti (Via), Coimbatore (Dist.) - 638 459, Tamilnadu for Elementary (D.T.Ed.) Course of 2 Years duration with and annual intake of 50 (fifty) students.

நிறுவனர் பி.ஏ. சாமிநாதன் Ex.M.P., அவர்களால் தொடங்கப்பட்டது.

தொடக்க நாள் : 07.03.2007. DTERT Reg. No. RC3157/2007-832007

NCTE Reg. No.FSRO/NCE/DTED/200-07/9676

தேசிய ஆசிரியர் கல்விக் குழுமம் நாள் : 22.12.2006.


பி.ஏ. சாமிநாதன் அவர்களின் தனித்தன்மை :

பள்ளி, கல்லூரி மற்றும் ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில் பயிலும் மாணவர்களுக்குக் கட்டணச் சலுகை மற்றும் ஏழை எளிய மாணவர்களுக்கு பொருளுதவிகள் செய்தார். பல பொறியாளர்களையும், மருத்துவர்களையும் உருவாக்கிய செம்மல். புளிசை மாநகரின் மாணவர்களுக்குக் கல்விக்கண் திறந்தவர் **"தொண்டின் வடிவம் எங்கள் சாமி"** என்று திரு. **பண்ணன்** அவர்களால் போற்றப்பட்டவர். **வாழ்க அவர்தம் புகழ்!**



மக்களாட்சிக்கு வலிவு
மாணவர்கள்தான்.

- அண்ணா



[illegible] ரவீந்திரநாதன் ராணி [illegible]
[illegible]



மனிதன் என்பவன் தெய்வமாகலாம்!

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்"

திருக்குறள் [illegible] வாழ்க்கையில் நான் கேட்டறிந்த [illegible] நெறிமுறை தன் மரணத்திலும் வாழ்ந்துகாட்டிய என் தந்தை [illegible] உணர்த்திய குறள்.

புன்செய்ப் புளியம்பட்டி - கோவை வழிப்பாதை என நினைவு தெரிந்த நாளில் நான் அறிந்தது. அன்று அப்பாதை [illegible] முறையாகத் தோன்றியது. வாழ்க்கையில் உடன் நின்று வழிகாட்டிய [illegible] எந்த வழிப்பாதையிலும் உடன் நின்று வழி நடத்தி இருக்கிறார் என்ற உண்மை புலப்பட, அவரது அருமை கண்டு பெருமிதம் கொண்ட மனது வணங்கியது.

'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' என்னும் முதுமொழிக்குப் பொருள் உணரச் செய்து எங்களை அவையத்துள் முந்தியிருக்கச் செய்த உங்களுக்கு, மக்கள் தந்தைக்காற்றும் உதவியே எங்கள் வாழ்வு.

உங்களைத் தொலைத்துவிட்டு
உலகத்தில் தேட ஏதுமில்லை எங்களுக்கு.
நீர் காட்டிச் சென்ற வான்மழைபோல்
புன்செய்க்கு நீர்வார்த்து
நீர் காட்டிய இலக்கை அடைய
வழிகாட்டி மட்டுமே நாங்கள்.

என் முன் இரு எழுத்துக்களும், பின் இரு எழுத்துக்களும் நீங்களே [illegible]. 'அன்பு மகள் ராணிக்கு' என்கிற தங்களின் [illegible] நெஞ்சம் ஏந்திய கடிதமே எனக்கு வாழ்க்கை முறை சொல்லும் [illegible]

'கடமை, கண்ணியம், கட்டுப்பாடு' என்றுரைத்த பேரறிஞர் அண்ணாவின்பால் பேரன்பு கொண்ட நண்பர் நீங்கள் என்பதும், அண்ணாவின் நெஞ்சில் மதிப்புமிகு இடம்பிடித்த நட்பின் இலக்கணம் நீங்கள் என்பதும் அனைவரும் அறிந்த ஒன்றே! காலத்திற்கும் [illegible] பண்பு என்று உணர்த்திய நும் வாழ்க்கையே எம் வழி.



அன்பு மகள்
மணிமேகலை முருகேசன்
பு. புளியம்பட்டி



அன்பின் உருவம் எங்கள் அப்பா!

அன்பே உருவான அப்பா, எங்கள் அப்பாரும், அப்பத்தாளும் எங்களுக்கென்று படைத்திட்ட அற்புதமான படைப்பப்பா நீங்கள்! பிள்ளைகளின் தேவையறிந்து கவனித்திட அம்மாவிற்கும் உங்களுக்கும் நேரமில்லாக் காரணத்தால் உடை, உணவு, பாதுகாப்பான உறைவிடம் நேரமறிந்து எங்களுக்குக் கிடைக்க மாணிக்கமான அத்தையை வழங்கிய அம்மை அப்பர் நீங்கள்!


இல்லையென்று உங்களை நாடி வந்தவர்க்கு இல்லையென்னாமல் கொடுத்த கர்ணன் நீங்கள்!

பகைவனுக்கும் அருளும் பண்பில் வள்ளலார்! நோயென்று வந்தவர்க்கு உதவிய தன்வந்திரி! உள்ளத்தில் ஒன்றையும் மறைத்து வைக்கத் தெரியாமல் உடைத்துப் போடுவதில் சிறு குழந்தை! பொதுத் தொண்டே பெரிதென்று இருந்த உங்களிடம் வீட்டிற்கு வந்திருந்த ஒருவர் (அரசியல்வாதி) யாரென்று நினைவில்லை, உங்களுக்கு எத்தனை குழந்தைகள்? என்று கேட்டதற்கு "இரண்டு பெண்கள் ஒரு பையன்" என்று சொன்னது மறந்திருக்கும்! குடும்பத்தின் உறுப்பினர்களைக்கூட மறந்துவிடும் அளவுக்குக் கழகத்திற்கு உறுப்பினர்களைச் சேர்த்த கடமை வீரர் நீங்கள்!

நீலகிரி, ஈரோடு, திருப்பூர், கோவை ஒருங்கிணைந்த மாவட்டத்தின் செயலாளராக இருந்து 1975-இல் மாபெரும் மாநாடு நடத்திக்காட்டி, தி.மு.க. கோட்டையாக்கி வைத்திருந்ததை யாரும் மறுக்க முடியாது.

இவ்வளவு நற்பண்புகள் கொண்ட உங்களுக்கு ஒருமுறையாவது மந்திரி பதவி வாய்க்கவில்லையே என்ற பெரிய ஆதங்கம் என் மனதில் இருந்தது. ஆனால், இப்போதுதான் புரிகிறது... நல்ல மக்களை (புளியம்பட்டி) மந்திரிகளாகக் கொண்ட நீங்களே ஒரு குறுநில மன்னன் எனும்போது அந்தப் பதவி உங்களுக்கு எதற்கு?

நீங்கள் இந்தப் பூமியில் உதித்தது இந்தப் புளியம்பட்டி மண்ணைப் புடம்போட்டுத் தங்கமாக்கவோ! உதித்த சூரியனை நம் ஊரிலேயே பதித்து வைக்கவோ...




...னை இருந்தாலும் ஆயிரம் பொன்; இறந்தாலும் ஆயிரம் பொன் என்பதை ...மக்கள் நன்கு அறிந்து வைத்திருக்கிறார்கள் என்பதற்கு 2011 நகராட்சி ...தேர்தலின் முடிவே சான்று. "பெரியவர்" என்ற பட்டமும் ஊர் உலகமே ...உங்களுக்கு மட்டுமே!

நோயுற்று வந்த எத்தனையோ பேருக்கு உரிய மருத்துவ ஏற்பாடு செய்து ...களின் இறப்பைச் சிறிதாவது தள்ளி வைத்து, காலனின் (எமனின்) செயலுக்குத் ...விழித்து வந்ததாலே உங்களை அவன் துன்புறுத்திக் கவர்ந்து கொண்டானோ! சிறுவயதில் உங்களுடன் அதிகம் ஒட்டாத எனக்கு இறுதிக் கட்டத்தில் ...மையைத் தெரியவைத்து, 3 மாத காலமாக அனுதினமும், இருவேளையும் ...உடனிருந்து, வாழ்க்கையில் உயில் பெரிதன்று, உயிரும், உணர்வுமே பெரிதென்று ...உணர்த்திய நீங்கள்தான் எங்களின் உண்மையான சொத்து! நீங்கள் இல்லாதது ...குடும்பத்திற்கே பித்து!

கடவுள் நம்பிக்கை நிறைய உள்ள எனக்கு, மறுபிறப்பிலும் உறுதியான நம்பிக்கை உள்ளது. உங்களிடம் வேண்டிக் கேட்பது, மறுபிறப்பில் உங்கள் மகனாகப் பிறக்க வேண்டும். இல்லையேல் நீங்கள் இந்தப் பிறப்பிலேயே எங்கள் ...வயிற்றுப் பேரனாக வந்து பிறக்க வேண்டும். இஃது எனக்காக மட்டுமல்ல, உங்களைப் பிரிந்து வாடும் நல் இதயங்களின் காயத்திற்கு நல்மருந்தாக இருக்கும் ...ற நம்பிக்கையின் வேண்டுகை.


தன்னலமற்ற தலைவர்களான **காந்தியடிகள், அண்ணா, பெரியார், காமராசர், எம்.ஜி.ஆர்.** வரிசையில் உங்களையும் என் மனதில் சேர்த்து வைத்து விட்டேன். வாழ்க உங்களின் பண்பு நலன்கள்!






அண்ணாவின் அழகுத் தமிழ்!

அண்ணாவின் அழகுத் தமிழ்! அடுக்குச் சொல்லாற்றல் நன்கு கூர்தீட்டப்பட்ட அறிவாயுதமாக ஆரியத்தின் மீது பாய்ந்தது! புராணங்களின் புரட்டுகளும் வேதங்களின் வண்டவாளங்களும் வெளிப்படுத்தப்பட்டன! அண்ணாவின் சொல்லாற்றலால் அறிஞர் பெருமக்கள் அடிமைப்பட்டனர். திராவிட இயக்கம் மேற்கொண்ட பகுத்தறிவுப் பிரச்சாரத்தில் அண்ணாவின் பேச்சைப் பழித்தும், இழித்தும் பேசி வந்தவர்களுக்குப் பதிலாகவே **சாக்ரடீசாக** அண்ணா அவர்களை உருவகப்படுத்தி எழுதிய வசனமாகும். அதே போல ஆயிரமாயிரம் பேச்சாளர்களை உருவாக்கி அரசியல் மேடையானாலும், இலக்கிய அரங்கமானாலும், மாநாடுகளானாலும் அழகுத் தமிழை நர்த்தனமாட விட்ட பெருமை **அண்ணா** அவர்களையே சாரும்!



புலவர் கிருட்டிணன்
தாராபுரம்




நினைவலைகள்...

உயர்வு தாழ்வு சொல்லி ஒரு சாதி உயர்ந்ததெனவும் மற்றதை தாழ்ந்ததெனத் தமிழினத்தைப் பிரித்து, ஒற்றுமையுடன் வாழ்ந்த இனத்தை 'வருணாசிரமம்' என்னும் பெயரால் பிரித்துச் சீரழித்துச் சாதி என்னும் தீயை வேதம், வேள்வி என்னும் சூதுவலை விரித்த சூதர்களின் வஞ்சகத்தைச் சிந்தனையெனும் தேர் ஏறித் தாக்கியழித்த தன்மானப் பெருந்தலைவன், மனித இனத்தின் மாண்பினை, மனித உள்ளந்தோறும் நிலைபெறச் செய்த உலக முதுபெரும் சிந்தனையாளர் ஈரோட்டு இங்கர்சால் பெரியார் அவர்களின் தளபதியாகிய பேரறிஞர் அண்ணா அவர்கள் கண்ட திராவிட முன்னேற்றக் கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு கடமையாற்றிய பெருந்தகையாளர் புளியம்பட்டி பி.ஏ. சாமிநாதன் அவர்கள்.

அந்த நினைவுகளில் சில...

திராவிட முன்னேற்றக் கழகம் தோற்றுவிக்கப்பட்ட பின் மாவட்டச் செயலாளராகக் கோவைச் செழியன் நியமிக்கப்பட்டுச் செயலாற்றி வந்தார். அடுத்து நடைபெற்ற மாவட்டக் கழகத் தேர்தலில் அறிஞர் அண்ணாவால் 'உடுமலை தேசிங்கு' என்று பாராட்டப்பெற்ற உடுமலை நாராயணன் தேர்தலில், கன்னிவாடி கே.எஸ்.சிரங்கராயரை வென்று மாவட்டச் செயலாளராகப் பணியாற்றி வந்தார்.

அதன்பின் நடைபெற்ற மாவட்டக் கழகத் தேர்தலில் அன்புக்குரிய அண்ணன் கோவைச் செழியன், புளியம்பட்டி சாமிநாதன் போட்டியிட்டு அண்ணன் சாமிநாதன் வென்று மாவட்டச் செயலாளர் ஆனார். அப்பொழுது கழகச் செயல் மறவர்களாக விளங்கியவர்கள் தேவசகாயம், கோவை மு. ராமநாதன், சி.டி. தண்டபாணி, சானகிராமன், கோபி இராசு, குன்னத்தூர் க. அன்பரசு, புளியம்பட்டி சீத்தாராமன், பு.கா. ஆறுமுகம், கோபி ஜி.பி. வெங்கிடு, மேட்டுப்பாளையம் தூயமணி, ரசாக், உடுமலை பருவதக்கண்ணன், அப்பாஸ், எஸ்.ஜே. சாதிக்பாட்சா, காளியப்பன்.



...மி, சந்தி கண்ணப்பன், காங்கயம் தணிகாசலம், அப்பன் பழனிச்சாமி, ...கோவில் வீராசாமி, கே. ராமசாமி, திருப்பூர் இரா.முருகேசன், ...த்தூர் கே.எம். சரபோசி, மூலனூர் சோமு, அழகிரிசாமி, முத்து, ...சாமி, ரங்கபாளையம் துரைசாமி, அவினாசி இராசு, கம்புளியம்பட்டி ...வை ப. கோபால், வே. கிருஷ்ணமூர்த்தி, சோதி பழனிச்சாமி, பவானி கண்ணன், ...ராமு, வால்பாறை இராமசாமி ஆகியோர் கழகப் படையின் விசயமங்கலம் ...கியவர்கள் ஆவர். தளபதியாய்

சேலம் அம்மாப்பேட்டையில் எழுச்சி மாநாடு. மாநாடு முடியும் முன் ...ழு! என்னைக் கண்டதும், அறை எடுத்திருக்கிறாயா? என அண்ணன் ...டார். ஒரு அறைதான், அதில் அண்ணன் சித்தாராமன், திருப்பூர் துரை, எம்.பி. ...ப்பன் மற்றும் இருவர். படுக்க இடமில்லை. ஈ.வி.கே. சம்பத்தும் ...தாசனும் பிரிந்த நேரம் "எட்டடுக்கு மாளிகையில் ஏற்றிவைத்த என் ...லவன்" பாடலைக் கேட்டும் பேசியும் விடிந்தது பொழுது.

திராவிட முன்னேற்றக் கழகச் சிறப்புப் பொது மாநாடு கோவை சிதம்பரம் ...கா மைதானத்தில் ஊரும் உலகமும் போற்றத்தக்க மாநாடு. மாபெரும் பந்தல் ...மைப்பு! நூற்றுக்கணக்கான தொலைக்காட்சிப் பெட்டிகள், புதிதாகத் தொலைக்காட்சிப் பெட்டி வந்தநேரம். வாணவேடிக்கையும், அலங்கார ...வுகளும், படை மறவர் அணிவகுப்பும் பார்த்தவர் வியக்க அமைந்தது. ...ண்டோர் வியக்கக் கவின்மிகு மாநாடு! அண்ணன் இரவு பகல் பாராது உணவு ...க்கம் பாராமல் உழைத்துப் பெருமை சேர்த்தார்! நண்பர்கள் துணைக்கொண்டு ...ந்நாளில் ஆற்றிய அரும்பணியாகும்.

தாராபுரத்தில் சீரணி அரங்கைப் பேராசிரியர் அவர்களோடு வந்து ...றந்துவைத்த நிகழ்வும், நிதியளிப்புப் பொதுக்கூட்டத்திற்குத் தலைவர் கலைஞரோடு ...தியைப் பெற்றுக்கொண்டு இராமச்சந்திராபுரம் செல்லத் தலைவரோடு என்னையும் ...வென்று அழைத்துச் செல்லும்போது, பூளவாடியில் உடுமலை நாராயண ...னைக்கண்டு பேசிச்சென்ற நிகழ்வினையும் மறக்க முடியுமா?

தேர்தல் நிதி திரட்ட அறிஞர் அண்ணா அவர்கள் வந்தபோது எங்களூர் ...பாளையம் வந்து நிதி பெற்றுச்சென்ற நிகழ்வு வரலாற்றுச் சிறப்புமிகு ...லாகும்! மாநாட்டு நிதிக்காக எஸ்.ஏ. இராசமாணிக்கம், கோவை மு. ராமநாதன், திருப்பூர் துரைசாமி, உடுமலை நாராயணன், மு. கண்ணப்பன், தேவசகாயம் உடன்வர ...ங்கள் வந்து சென்றது வரலாற்றுக் குறிப்பன்றோ!

நான் உடல் நலம் குன்றி இருந்தபோது செய்தியறிந்து வந்து, கோவைப் பொது மருத்துவமனைக்கு அனுப்பி வைத்து வேண்டிய உதவியைச் செய்து சென்றீர்கள். என் உயிர் உள்ளவரை மறக்கவொண்ணாப் பெருமைமிகு செயல் அல்லவா!

ஒருங்கிணைந்த கோவை மாவட்டம் பெருமைகொள்ளத் தக்க சிறப்புடன் செயலாளராகக் கழகத்தை வளர்த்த கடமை வீரன்! இரண்டு முறை நாடாளுமன்றத்திற்குத் தேர்ந்து எடுக்கப்பெற்று நாடும் ஏடும் போற்ற ஊர்கள் தோறும் பாசறைக் கூட்டம் நடத்தி, முன்னேற்றக் கழகத்தைச் சிங்க ஏறென சிலிர்த்தெழச் செய்த செயல் மறவன்! உடுமலை நாராயணன் மறைவிற்குப் பின் அவர்களின் திருமகன் பவானிசிங் திருமணம் நடைபெற இயலாத நிலையில் நீங்களும் மு.கண்ணப்பன் அவர்களும் பொறுப்பேற்றுத் திருமணத்தை நன்முறையில் நடத்தி வைத்து, அந்தக் குடும்பத்திற்கு விளக்கேற்றி வைத்தமை தனிவரலாறாகும்.

நான் நேரில் கண்டவற்றில் சில :

வாடிவந்த முகத்தைக் கண்டு, தேடிய செல்வத்தைக் கொட்டிக் கொடுத்தது உங்கள் கரமல்லவா!

எளியோர்க்கும் இல்லாதவர்க்கும் கல்விக்குக் கொடுத்து உதவிய கருணை மனமல்லவா!

இன்னலுக்கும், இடுக்கணுக்கும் ஆளானவரை நாடிச்சென்று இன்னல் தீர்த்த பெருந்தகையாளன் நீ!

புளிசையில் நீ வளர்த்த கழகத்திற்கு அரண்மனை போன்ற மாளிகையினை தந்து மகிழ்ந்தவன் நீ!

'ஆலயம் தொழுவது சாலவும் நன்று' எனச் சான்றோர் சொல்லுவர். ஆம் அண்ணன் வாழ்ந்த இல்லமே நான் வணங்கும் ஆலயம்!

நானும் நண்பர் செந்தில் முத்துசாமியும் ஒருநாள் அல்ல எத்தனையோ நாட்கள் எண்ணற்ற முறை கண்டவுடன் முகம் மலர்ந்து மணிக்கணக்கில் பேசிப்பெற்ற இன்பத்தைக் கண்ணீர்க் காவியம் ஆக்கிச் சென்ற உள்ளம் கவர்ந்த குணக்குன்றே உன்னை மண்ணுலகம் மறத்தலும் கூடுமோ!?



கட்டுப்பாடும் ஒழுங்கும்
சாதாரணமானவைதான்.
ஆனால் இந்த மாதிரி
சாதாரண விசயங்களைக்
கொண்டுதான் ஒரு சமூகத்தை
எடைபோட முடியும்!

- அண்ணா



செ. குமாரராஜா B.Sc.,
த/பெ. கோ.ப. வெங்கிடு Ex.M.L.A.,
தலைவர் - திருப்பூர் மாவட்டப் பகுத்தறிவாளர் கழகம்.
அவிநாசி - 4

பெரியார், அண்ணா வழியில் பெரியவர் பி.ஏ.எஸ்.

இலட்சக்கணக்கானோர் சரித்திரத்தைப் படிக்கிறார்கள். அவர்களில் ஒருவர் தான் சரித்திரத்தைப் படைக்கிறார். நினைவுமலர் வெளியிடப்படுகிறது என்கிற போதே, தெளிவாகத் தெரிகிறது - சரித்திரத்தைப் படைத்தவர் சுவாமிநாதன் என்பது. **'சாதனைச் செம்மல்'** என்றும், **'பெரியவர்'** என்றும் ஊர் மக்களாலும், **'சாமி'** என்று சக நண்பர்கள் மற்றும் தலைவர்களாலும் **'...அண்ணன்'** என்று தி.மு.கழகத் தோழர்களாலும் அவரவர் விருப்பத்திற்கேற்ப அழைக்கப்பட்ட **'பெரியவர்' பி.ஏ.எஸ்.** அவர்கள்.

அவர்தம் வாழ்க்கை என்னும் வரலாற்றில் நேற்று, இன்று, நாளை என முக்காலத்திற்கும் மற்றவர்களுக்குப் பயன் தரும் சில செய்திகளை எடுத்துக் கூற எனக்கும் ஒரு வாய்ப்புக் கிடைத்திருப்பதை, என் வாழ்வில் மறக்க முடியாத தருணங்களில் ஒன்றாகவே கருதுகின்றேன். அதற்காக, அக்கா சம்பூரணம் அவர்களுக்கும், அவர்தம் திருமகன் அன்பு உள்ளிட்ட குடும்பத்தார்க்கும் என் மனமார்ந்த நன்றியை முதலில் தெரிவித்துக் கொள்கிறேன்.

பொதுவாக, மனமுவந்து பொருள் உதவியோ, அல்லது பிற உதவிகளோ செய்பவர்கள், பெரும்பாலும், கோயில் கட்டவும், கடவுள் காரியங்கள் செய்யவும் தான் பெரும் விருப்பத்தோடு முன்வருகிறார்கள். அவர்களே - பெரியார் பெயரைச் சொல்லிக் கொண்டும் பகுத்தறிவு, இன, மானப் பிரச்சாரம் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, அணுகும் போதும் முற்றிலும் மாறுபடுகிறார்கள். தன்னை நாடி வந்துள்ளார்கள் என்பதற்காக, விருப்பம் இருந்தோ, இல்லாமலோ நட்புக்காக உதவி செய்கிறார்கள்.

ஆனால், நமது பெரியவர் அவர்களோ, இதற்கு நேர்மாறானவர். அவரிடம் பெரியவர் என்றும் அண்ணா என்றும் சொல்லிக் கொண்டு உதவி கேட்டு வரும் தோழர்களிடம், நான் இதற்காகத்தான் காத்துக் கொண்டிருந்தேன் என்று சொல்லாமல்சொல்வதைப் போல நடந்து கொள்ளும் தந்தை பெரியாரின் சீடன் பேரறிஞர் அண்ணாவின் தம்பி அவர். கை நிறைய அள்ளிக் கொடுத்து வாய் நிறைய உற்சாகமூட்டி உற்றதுணையாக என்றும்

நான் இருக்கிறேன் என்று நம்பிக்கை ஊட்டி, மற்றவர்களைப் பணியாற்ற வைப்பவர்.


அவர் தன் வாழ்நாளில் எந்த ஒரு கடவுளையும் நம்பிக்கையுடன் கைகூப்பிக் கும்பிட்டவர் அல்லர். அதே சமயம், கடவுள் நம்பிக்கையாளர்கள், அவரைத் தேடி வந்து ஏமாற்றத்துடன் திரும்பிப் போனதும் இடையாது. தனது கொள்கைக்கும் பங்கம் வாராமல், அதே நேரத்தில், சக நண்பர்களின் மனமும் நோகாமல் தன்னால் இயன்ற உதவிகள் செய்து தரும் பண்பாளர்.

பெரியவர் அவர்களின் இருகண்களில் ஒன்று பெரியார், மற்றொன்று அண்ணா. நாத்திகக் கொள்கைகள், பகுத்தறிவுச் சிந்தனைகள் தாய் மொழியாம் தமிழ் மொழியைக் காக்கவும், வளர்க்கவும், விழிப்புடன் இருந்து, வீரத்துடன் பணியாற்றிய திராவிட இயக்க வரலாறு அவர். தி.மு.க. என்னும் ஆலமரத்தைத் தமிழகத்தின் மேற்கு மண்டலத்தில் வேறூன்றச் செய்து தண்ணீர் ஊற்றியவர்களுக்குத் தலைவனாக இருந்து, கண்ணீரும் செந்நீரும் ஊற்றிக் கட்சியைக் கட்டிக் காத்தவர் என்பது உலகு அறிந்த உண்மையாகும்.

கழகத்தில் பலர், பொருளாதார நிலையில் துவண்டுபோய் நின்ற காலத்தில் **'இடுக்கண் களைவதாம் நட்பு'** என்ற தொடருக்கு இலக்கணமாக இருந்து, பலருக்கு கைகொடுத்தவர் - கை தூக்கிவிட்டவர் நமது 'பெரியவர்' ஆவர். வாழ்வின் இக்கட்டத்தில் ஆதரவற்று இருந்த பலருக்கு, அரசின் உதவித்தொகை வந்து சேர்வதற்கு முன்பாக, இவரது உதவித்தொகை சென்று சேர்ந்துவிடும். அது மட்டுமன்று. உதவி செய்யும் இவருக்கும், உதவியைக் கேட்டுப் பெறும் நண்பருக்கும் இடையில் நடைபெறும் இந்தச் செயல், இவர்கள் இருவருக்கும் மிகவும் நெருக்கமாக இருப்பவர்கள் ஒரு சிலருக்கு மட்டுமே தெரியும். அந்த அளவுக்கு உதவி பெறுபவர் தன்மானத்திற்கு எந்த விதத்திலும் ஊறு நேரா வகையில் அவர் உதவும் பாங்கு தனிச் சிறப்புடையது.

"உனக்கு மேலானவர் என்று யாரும் இல்லை, உனக்குக் கீழானவர்கள் என்று யாருமில்லை" என்ற தந்தை பெரியார் அவர்களின் தத்துவத்தையும், "ஆதிக்கமற்ற சமுதாயம், அமைத்தே தீருவோம்" என்ற அறிஞர் அண்ணா அவர்களின் கொள்கையையும், உணர்வுப்பூர்வமாக ஏற்றுக் கொண்ட காரணத்தால், சகமனிதர்கள் அனைவரிடமும் சாதி - மதம் பார்க்காமலும், உயர்வு - தாழ்வு கற்பிக்காமலும், ஏழை பணக்காரன் என்று எண்ணாமலும், சரிநிகர் சமானமாக வாழ்ந்து காட்டியவர்.

ஊரில் இருக்கும் மிகப் பெரிய செல்வந்தர் ஒருவரைச் சந்தித்து உரையாடி விட்டு ஊரில் இருக்கும் மிகவும் வறிய ஏழை ஒருவரைப் பார்த்தும் பேசிவிட்டு வந்தால் பெரியவர் எனது நெருங்கிய நண்பர் என்றும், எனது நலம் விரும்பி என்றும் ஒரே மாதிரி இருவரும் பேசுகிற காட்சியைச் சாதாரணமாகக் காணலாம்! இது கட்சிகளைக் கடந்து மாற்றுக் கட்சியில் உள்ளவர் கூறுவது கொண்டும் உணரலாம்.



[illegible]

[illegible] ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில் [illegible]

அந்தக் காலகட்டத்தில் - [illegible] ஒன்று பெரியவர் [illegible] அணுகி எப்படியாவது தங்கள் மகளுக்கு ஆசிரியப் பயிற்சி பள்ளியில் இடம் வாங்கித் தர வேண்டும் என்று வற்புறுத்துகிறார்கள். அவர்கள் பொருளாதார நிலையில் மிகவும் பின்தங்கி இருந்த காரணத்தால், [illegible] எதுவும் தர இயலாது என்றும் விளக்கிக் கூறி உதவி கேட்கிறார்கள்.

பெரியவர் அவர்கள் தீவிரமாக யோசித்துப் பார்த்துவிட்டு ஆசிரியர் கி. வீரமணி அய்யாவை சந்தித்து திருச்சியில் உள்ள பெரியார் நாகம்மை ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில் இடம் கேட்க முடிவு செய்கிறார். உடனே என்னை அணுகி அய்யாவைச் சந்திக்க வேண்டும் என்று கூறினார்கள்.

அந்தச் சமயத்தில் - மானமிகு கி. வீரமணி அண்ணா அவர்கள், ஒரு பெரிய சுற்றுப் பயணத்தை முடித்து விட்டு, குன்னூரில் உள்ள தி.க. துணைப் பொதுச் செயலாளர் [illegible] மருத்துவர் பிறைநுதற்செல்வி - கவுதமன் அவர்களின் இல்லத்தில் ஓய்வு எடுத்துக் கொண்டிருந்தார் என்கிற செய்தியைப் பெரியவர் அவர்களிடம் கூறினேன்.

உடனே, சற்றும் தாமதம் செய்யாமல், பெரியவர் என்னை அழைத்துக் கொண்டு குன்னூர் புறப்பட்டுச் சென்று, ஆசிரியர் கி. வீரமணி அய்யா அவர்களைச் சந்தித்து நிலைமைகள் அனைத்தையும் விளக்கிக்கூறி உதவி கேட்கிறார்கள். இத்தனைக்கும் நாங்கள் அணுகிய நேரம், தமிழகத்தில் உள்ள அனைத்து ஆசிரியப் பயிற்சி நிறுவனங்களிலும், சேர்க்கை முடிந்து வகுப்புகள் தொடங்கிய நேரம். திருச்சியிலும் [illegible] நிலை. வேறு வழியில்லை பள்ளிச் சேர்க்கை முடிந்துவிட்டது என்று கூறி [illegible] திருப்பி அனுப்பி விடுவார் என்று மனதுக்குள் நினைக்கத் தொடங்கினோம். [illegible] பெரியவர் மீது, ஆசிரியர். வீரமணி அவர்கள் எவ்வளவு தூரம் மதிப்பு [illegible] வைத்திருந்திருந்தார் என்பதை அன்று நேரில் பார்க்க முடிந்தது.

பள்ளிச் சேர்க்கை முடிவடைந்துவிட்ட நிலையில் - நூற்றுக்கணக்கில் [illegible] காத்திருப்போர் பட்டியலில் காத்திருக்கும் நிலையில் - மாணவர்கள் [illegible] நன்கொடையைக் கொண்டு திருச்சிப் பள்ளி இயங்கிக் கொண்டிருந்த [illegible] நேரத்தில் அரசு அதிகாரிகளிடம் சிறப்பு அனுமதி பெற்றும் பெரியவர் [illegible] மாணவியைச் சேர்த்துக் கொள்வதாகவும், எவ்வித நன்கொடையும் பெறாமல் சேர்த்துக் கொள்வதாகவும் மாண்புமிகு ஆசிரியர் கி. வீரமணி அவர்கள் கூறியபோது சிறிது நேரம் நான் மலைத்துப் போனேன். இவர் மீது அவர் கொண்டிருந்த மரியாதைக்கு இந்த ஒன்றே போதும் என்று கருதுகிறேன்.

பெரியவர் அவர்களின் மணிவிழாவும், மகள் அன்பு அவர்களின் மணவிழாவும் மாண்புமிகு ஆசிரியர் கி.வீரமணி அவர்களின் வாழ்த்துரை மற்றும் தலைமையுரையுடன் எப்படி நடைபெற்றது? என்பதை வாசகர்கள் இந்த நேரத்தில் நினைத்துப் பார்க்க வேண்டுகிறேன்.


சமூகப் பணி மற்றும் கல்விப் பணியில் பெரியவர்

பெரியவர் அவர்கள் தம்வாழ்நாளில் இரண்டு பணிகளை ஒரு போதும் நிறுத்தியதில்லை. ஒன்று, அடிக்கடி முரசொலி, விடுதலை, தினகரன் போன்ற நாளேடுகளில் வெளிவரும் மிகச் சிறந்த கட்டுரைகளை அப்படியே அச்சிட்டு வழங்கிக் கொண்டிருந்தார்கள்.

மற்றொன்று, ஒவ்வொராண்டும் ஜூன் மாதத்தில், டாக்டர் கலைஞர் அவர்கள் பிறந்த நாளையொட்டி வசதி குறைவான நிலையில் கல்லூரிகளில் இடம் கிடைத்தும் சேர முடியாமல் அல்லல்பட்டு வந்த மாணவ, மாணவியர் ஐம்பது பேருக்கு குறைவில்லாமல், கல்வி உதவித்தொகை தரும் நற்செயலை, எப்பாடுபட்டாவது நிறைவேற்றி வந்தார்கள்.

இதன் விளைவாகப் புன்செய்ப் புளியம்பட்டிப் பகுதியை ஒட்டி கல்லூரி ஒன்றைத் துவங்கி, மற்ற குழந்தைகளுக்கும், குறைந்த கட்டணத்தில் கல்வி தர வேண்டும் என்கிற எண்ணம் அவர் மனதில் உதிக்கிறது. அதன் தொடர்ச்சியாகக் கோவை பாதையில், செல்லப்பம்பாளையம் கிராமத்தில் இடம் வாங்கப்படுகிறது.

அங்கே, கலைக் கல்லூரி ஒன்றைத் துவங்கும் நோக்கில், அய்யன் திருவள்ளுவர் கலை அறிவியல் கல்லூரிக்கு விண்ணப்பம் செய்து, அன்றைய கல்வி அமைச்சர் இனமானப் பேராசிரியர் அவர்களிடம் அனுமதி கேட்டு, உரிய கோப்பு வைக்கப்படுகிறது. அவற்றைப் பொறுமையாகப் படித்துவிட்டுப் பேராசிரியர் அவர்கள், பொதுவாக கல்லூரி என்றால் நகர்ப்புறத்தையே மக்கள் பெரிதும் விரும்புகிறார்கள். தற்போது, சத்தி வட்டத்தில், கலை, அறிவியல் கல்லூரி இல்லை என்பதால், உங்கள் கல்லூரியைப் புளியம்பட்டி நகரை ஒட்டி அமைப்பதை விட சத்தியமங்கலம் அருகில் அமைப்பதே சிறந்தது என்று அறிவுரை கூறுகிறார்கள்.



...பெரியவர் அவர்களோ, எங்கள் ஊர் மிகவும் வறட்சியான, பின்தங்கிய ...ம் எங்கள் பிள்ளைகள் பொருளாதார ரீதியாகத் தொல்லையிலிருந்துப் ...ம் பயண நேரத்தைக் குறைக்கவும் எனக்கு இந்த இடத்திலேயே அனுமதி ...என்று கேட்டு, அனுமதி வாங்கினார்கள்.

ஆனால் பின்னாளில், பேராசிரியர் அவர்கள் கூற்று தொலைநோக்குப் பார்வை ...டது என்பதை உணர்த்தியது. எஃது எப்படியோ, பெரியவர் அவர்கள் ...யைத் தொல்லைப்பட்டு நடத்தினாலும், அவர் எண்ணப்படி பல ஏழை மற்றும் ...மக்கள் வீட்டுக் குழந்தைகள் எளிதாகக் கற்க முடிந்தது என்பதே ...மையாகும்.

பெரியவர் அவர்களின் வாழ்க்கையானது - திருக்குறளில் உள்ள 1330 ...பாக்களில் ஒரு குறளுக்கு மகத்தான வெற்றியையும், மற்றொரு குறளுக்கு சற்று ...வியையும் கொடுத்திருக்கிறது.

"அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை"

என்கிற திருக்குறளுக்குப் பெரியவர் வாழ்ந்த வாழ்க்கை மிகப் பெரிய வெற்றியைக் ...த்து மெய்ப்பித்திருக்கிறது.

அதே சமயம்,

"தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினாற் சுட்ட வடு"

என்கிற குறள் பெரியவரிடம் தோற்றுவிட்டது. என்றே கூறலாம்.

பிறர் கூறும் கடுஞ்சொற்கள், அந்த நேரத்தில் அவரை வேதனைக்கு உள்ளாக்கி இருக்கலாம். அதனால் தோன்றிய வருத்தம் அவரிடம் நீண்ட நாள்களுக்கு இருந்ததில்லை. வெகு எளிதில் மன்னித்து விடுவார் - மறந்தும் விடுவார். எனவே அவர் மனதில் தீயினாற் சுட்ட புண்ணும் இல்லை, அவர் மனதில் நாவினால் சுட்ட வடுவும் இல்லை. அதனால்தான்,

"குணமென்னும் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயுங் காத்தல் அரிது"

என்று திருவள்ளுவர் கூறியுள்ளாரோ? என்னவோ?

மொத்தத்தில் நேரம் தவறாமை - உதவும் உள்ளம் - சலியாத உழைப்பு - வசீகரிக்கும் சிரிப்பு - கண்ணோட்டமுள்ள கனிவான பார்வை - பாரபட்சமற்ற அன்பு - இலட்சியத்தில் தளராத உறுதி எனப் பல பண்பு நலன்களின் நாயகர். அவர் மறைந்தும் மறையாத மாமனிதர்! அவரை வாழ்க என்பதில் பெருமை கொள்கிறேன்.

பெரியவர் பி.ஏ.எஸ். புகழ் வாழ்க! வாழ்க!

வி. செந்தில்வேல்
[illegible]
[illegible]

உண்மைத் தொண்டன்

பெரியவர் [illegible] '[illegible]' [illegible] இரண்டு பெரும் சேவை. 50 ஆண்டுகளுக்கும் மேலாக அவரின் பாதயாத்தி [illegible] என்னைப் போன்ற உண்மைத் தொண்டர்கள் அவரின் [illegible] நாளுக்கு நாள் அதிகமாக உணர்கிறோம். என்னைப் பொறுத்தவரை இப்பகுதியில் அண்ணன் இல்லாத அரசியல் நிகழ்வுகள் - இறைவ அருள்பெறாதுபோல் உட் கோவிலில் நடைபெறும் வெற்று விழாக்களாகத்தான் தோன்றுகின்றன.

தொண்டர்கள் பால், பற்றும் - பாசமும் - பரிவும் கொண்ட அண்ணனின் மலர்ந்த சிரித்த முகம் எங்களின் உள்ளத்தில், எங்கள் வாழ்நாள் உள்ளவரை அழிக்க இயலாத நினைவுச் சின்னமாகப் பதிந்திருக்கும்.

அக்கா சம்பூரணம் அவர்கள், அண்ணனின் பிரிவுத் துயரிலிருந்து - தங்கள் உள்ளத் திண்மையால் - ஓரளவாவது மீண்டு, கல்லூரி விழாக்களிலும், பொது நிகழ்வுகளிலும் கலந்து கொள்ளும் நிகழ்வுகளைச் செய்தித் தாள்களின் வழியாக அறிந்து ஆறுதலடைகிறேன்.

மாசற்ற அண்ணனின் தூய நல் எழுச்சி, - அடிபொற்றி வளரும் செல்வன் அன்புமணியின் பணிகளுக்கும் - எழுச்சிக்கும் வழிவகுக்கும்!.

வாழ்க பெரியவரின் தூய அரசியல் பணிகள்!

தந்திரம்

சாதி - இந்து ஒழிய வேண்டுமா? வேண்டாமா? என்பது தான் இன்றுள்ள கேள்வி. பாழாய்ப்போன சாதிப் பேச்சு தொடங்கிவிட்டதா? இந்து அந்தக் கேள்விக்குரிய விடை அன்று. சாதியை நிலைநாட்டுவதற்குரிய தந்திரம்.

- அண்ணா

சண்முகசுந்தரம்
கோவை - 1

'புதிய பாதை'

மறைந்த அருமைக் கழகத் தோழர், ஒருங்கிணைந்த கோவை மாவட்டச் செயலாளராகப் பணியாற்றிய திரு. **பி.ஏ. சாமிநாதன்** அவர்கள் பற்றிய மலர் ஒன்றுக்குக் கட்டுரை வேண்டும் என்று முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு.ப. கோபால் அவர்களின் திருக்குமாரர் ப.கோ.குமார் அவர்கள் தொடர்ந்து நினைவுபடுத்திக் கொண்டிருந்தார். எழுதும் எண்ணம் இருந்தாலும், வயது மூப்பின் காரணமாகவும், நோயின் தாக்குதலாலும் எழுத இயலாமல் சோர்வாக இருந்தேன். 04-01-2012-ஆம் நாளைய கழக ஏடான முரசொலியில் கவிச்சுடர் கவிதைப்பித்தன் அவர்களின் **'நாடும், நடப்பும்'** தலைப்பில் வெளியாகிய கவிதையைப் பார்த்தவுடன் எழுச்சியுற்றேன். என் எண்ணங்கள் - நினைவுகள் கழகம் தோற்றுவித்த காலத்தை நோக்கிப் பறந்தது.

அந்த நாள்களில் "சிங்கிள் டீ" குடித்து விட்டுச் சோறில்லாமல் சைக்கிளில் மறைந்த கொள்கை வீரர் சே.அ.இராசாமணிக்கத்துடன் ஊர் ஊராக, வீதி வீதியாகச் சுற்றியது, சிற்றூர்களிலும் கழகக் கிளைகள் தொடங்கிட வேண்டுமென்ற வெறியுடன் கல்லடி, சொல்லடிபட்டாலும், கவலைப்படாமல் பணியாற்றியது, இப்பொழுது நினைத்தாலும் மகிழ்ச்சி அளிக்கிறது. அந்நாள்களில் **பி.ஏ.சாமிநாதன்** அவர்கள் புளியம்பட்டியிலிருந்து வருவார். தியாகராயர் படிப்பகத்தில் இயங்கிவந்த நகரக் கழகத்தில் தங்கி, **இராசமாணிக்கம், மு.இராமநாதன், வெ.கிருட்டிணமூர்த்தி, பஞ்சு, பாலசுந்தரம்,** இன்னும் பல தோழர்களுடன், மகிழ்வுடன் உறவாடிக் கட்சி தொடர்பான பணிகளில் ஈடுபட்டுப் பணியாற்றுவது குறித்துத்தான் பேசுவோம். கழகத் தலைவர்களை அழைத்துப் பொதுக்கூட்டங்களைச் சிறப்பாக நடத்துவதுபற்றிக் கலந்துரையாடுவோம்.

அந்நாளினை நினைத்து என்ன செய்வது? பெரியாரின் பகுத்தறிவுக் கொள்கைளை, பேரறிஞர் அண்ணாவின் அரசியல் நோக்கங்களை மீண்டும் மக்கள் மத்தியில் எடுத்துரைக்கும் காலம் வருமா? என்று ஏங்கிய எனக்குக் கவிச்சுடர். கவிதைப் பித்தனின்...



"அண்ணாச்சி ! அண்ணாச்சி!

அரசியல் என்னாச்சு

புண்ணாச்சு கலைஞர் மனம்

புதிர் ஆச்சு தேர்தல் களம்

அண்ணாவின் பெரியாரின்

அளப்பரிய உழைப்பெல்லாம்

மண்ணாச்சு மண்ணாச்சு

மறுபடியும் 'ஆரியமே'

கோலோச்ச வந்தாச்சு

கொடுமை நிகழ்ந்தாச்சு


என்ற வரிகள், என் சிந்தனைக்கு வெடிவைத்து. "புண்ணாச்சு கலைஞர் மனம்" என வரிகள் கண்ணீரை வரவழைத்தன. தண்டவாளத்தில் தலை வைத்துப்படுக்கும் பொழு பாளையங்கோட்டைத் தனிமைச் சிறையில் அடைக்கப்பட்ட பொழுது, 13 ஆண்டு ஆட்சியிழந்து, தேர்தல்களின் தோல்விமேல் தோல்வி கண்டபொழுது, துவள போகாத கலைஞரின் மனம் இந்தத் தேர்தல் முடிவு கண்டு புண்ணாகிப் போனதே கவிஞர் கவிதைப்பித்தன் எழுப்பிய "துன்பச் சொல்" என்னை மட்டும் அ இயக்கத்தின் இரத்த நாளத்தோடு இணைந்தவர்கள் கொள்கைக்காகத் தன்னை குடும்பத்தை இழந்த தியாகசீலர்கள் அனைவரையும் சிந்திக்கச் செய்யும் சொல்.

வெற்றியுடன் "பூணூல்" தன்

வேலையை முடிச்சாச்சு

என்கிறார் கவிஞர் கவிதைப்பித்தன். இத்தனை ஆண்டுகள் நம் இயக்கத்திற்கு வெளி நின்று கலைஞரை வீழ்த்தப் "பூணூல்" போராடியது. அப்போது வெற்றி இயலவில்லை. நமது இயக்கத்தின் உள்ளே நுழைந்து தன் சதித் திட்டங்களை நிறைவேற்றி இத்தேர்தலில் நம்மை வீழ்த்தியது இப்படித்தான். என்போன்ற ப தோழர்கள் வெளியே சொல்ல இயலாமல் குமுறிக் கொண்டிருக்கின்றனர். கலை மட்டுமே வெற்றிபெற்று, மற்ற தோழர்கள் தேர்தலில் தோல்வி அடைந்த போ கலங்காத கலைஞர் இப்போது "மனம் புண்ணாகியதற்கு" இதுவே காரண வெளிப்பகையை எதிர்கொள்வது எளிது. உட்பகையை வெல்ல இயலாது என்பதற் பல எடுத்துக்காட்டுகள் உள்ளன. பேரறிஞர் அண்ணாவால் பாராட்டப்பட்ட அறிவு என்று கூறப்பட்ட கலைஞர் தன் மனமாட்சி என்று கருதப்பட்ட திரு மாறனின் மக் நிலை இன்று எவ்வாறு உள்ளது? அவர்கள் பெரியாரின் கொள்கையை ஏற்றுள்ள அண்ணா வழியில் நடை போடுகின்றனரா? கலைஞர் சொல்லுக் கட்டுப்படுகின்றனரா? என்பன போன்ற வினாக்களுக்கு அவர்களது செ வைத்துத்தான் எடைபோட வேண்டும்.

கவிதைப் பித்தனின் கீழ்க்காணும் வரிகள்,



...றை வைக்கப்பட்டாச்சு
    செம்மொழித் தமிழ் நூல்கள்!
...றை யென்று சொன்னாச்சு
    கல்வியில் சமச்சீரை!
...வுக்குத் திரை கட்டி
    'மனுநீதி' உயிர் பெற்றே
அறிவிக்கப்படாத சட்டம்
    அமுலுக்கு வந்தாச்சு!

பெரியாரின் தொடர் போராட்டம், "மனுநீதி"யை எதிர்த்துத்தான். மனிதனை ...ாக மதிக்க வேண்டும். ஏற்றத்தாழ்வுகள் கூடாது என்று தன் வாழ்நாள் முழுவதும் போராடினார். 'வர்ணாஸ்திர தர்மம்' ஒழிய வேண்டும் என்றால், மதம் அவைசார்ந்த சமயம் பகுத்தறியாத பண்பு. இவைகளை அடியோடு ஒழிக்க வேண்டும் என்று போராடி வெற்றியும் கண்டார். ஆனால் இன்று விபரீத வேடிக்கை மாறனின் மக்கள் நடத்தும் பத்திரிக்கை "ஆன்மீகம்" பற்றி தனி இதழ் வெளியிடப் போவதாக விளம்பரம் செய்யப்படுகிறது. இஃது அப்பட்டமாகப் பெரியாரை எதிர்க்கும் கொள்கை அல்லவா? இதுவரை யாரும் கண்டு கொள்ளாமல் - யாராலும் கண்டிக்கப்படாமல் இருப்பதன் காரணம் என்ன? சிந்திக்க வேண்டாமா?

இப்படி இருந்ததன் விளைவுதான் கவிதைப்பித்தன் கூறும் 'நாட்டு நடப்பு'

படியேறிக் கோட்டைக்குள்
    "பார்ப்பனீயம்" நுழைஞ்சாச்சு !
கடிவாளம் கைமாறிக்
    "கட்சித்தேர்" நகர்ந்தாச்சு !
கொடியோடு அண்ணாவின்
    கொள்கையும் காற்றிலே !
அடியோடு பறந்தாச்சு
    "அவாள் குடுமி நிமிர்ந்தாச்சு !

இது உண்மையாகி விட்டது. திராவிட இயக்கத்தில் தன்னை ஒப்படைத்தவர்கள் ...து சிந்திக்க வேண்டும். பெரியாரும், அண்ணாவும் இருக்கும் வரை இருந்த கொள்கைப்பற்று இப்பொழுது இல்லாமல் போய்விட்டதா? தேய்ந்து விட்டதா? அல்லது ...விட்டதா? நாட்டில் எவ்வளவு பெரிய மாற்றங்கள் உருவாக்கி உள்ளது நமது கழக அரசு. ஏன் இதை நினைவில் கொள்ளவில்லை. பெரியாரின் கொள்கைகளை அண்ணாவின் வழியிலேயே நடத்தியதால்தான் இந்த மாற்றங்களை உருவாக்க முடிந்தது. இப்பொழுது நமது இயக்கத்தவர் பாசத்தோடு பழகுகின்றனரா? ஒருதாய் எவ்வளவு பேர்களைப் பெற முடியாத காரணத்தால்தான் நாம் அனைவரும் தனித்தனியே தாய் வயிற்றில் பிறந்தோம், என்றாலும் உடன்பிறந்த பாசத்தோடு

வேற்றுமையின்றிக் குடும்பப் பாசத்துடன் இயங்கிவோம். எனவேதான் கழகக் குடும்... என்று நமது தலைவர் நம்மைப் பற்றிக் குறிப்பிடுவார். ஒரு கட்சித் தோழர் நம்முடைய கட்சியைச் சேர்ந்த இன்னொரு தோழரைப் பார்க்கும்பொழுது, இப்பொழுது அந்த பாசம் உள்ளதா? இவன் அவனுடைய ஆள், அவன் நம்முடைய ஆள் என்று கூறி பிரித்துப் பேசும் பழக்கம் ஏன் வந்தது? அதன் விளைவுதான் "அவரவர் ... திமிர்த்தாச்ச" என்று கூறுகிறார் கவிதைப்பித்தன்.

1975-இல் மிசாக் காலம். கழகத் தோழர்கள் பெரும்பாலோர் கோவைச் சிறையில் அடைபட்டுக்கிடந்த தோழர்களில் பலர் ஏழைகள். அன்றாடம் வேலைக்குச் சென்றால்தான் வீட்டில் அடுப்பு எரியும் என்ற நிலை. ஆனால் கட்சிப்பற்றால், வெறியால் மிசாவில் அடைபட்டனர். அந்நேரம் சாமிநாதனும் சிறையில் இருந்தார். அதுசமயம், அருமைத் தோழர் சாமிநாதனின் துணைவியார் சம்பூரணம் அவர்கள் நாள்தோறும் எனது புத்தகக் கடைக்கு வருவார். இன்று விடுதலை ஆகக்கூடியவர் பட்டியல் தயாரிப்போம் என்பார். அதன்படி தயாரிப்பேன். சிறை வாயிலுக்குச் செல்லும் அவர்கள் வழிச்செலவிற்கும், குடும்பச் செலவிற்கும் பணம் கொடுப்பார். மாலை நேரத்தில் கோவை நகரில் உள்ள ஏழைக் கழகக் குடும்பங்களுக்குக் குடும்பச் செலவிற்கு பணம் கொடுப்பார். இன்று இப்படிப்பட்ட உணர்வு கட்சியில் உள்ளதா? தலைமை அணியில் - தனக்கு வேண்டுபவர்களில் முக்கியமானவர் தன்னுடைய ஏவலாள் போல இயங்குபவர்க்கு, ஏதோ செலவுக்குக் கொடுப்பர் - இயக்கத்தில் புதியதாக வந்து **செல்வவளம் சேர்த்தவர்கள். இதுவா பாச உணர்வு?**


அருமைத் தோழர்களே ! பெரியாரின் கொள்கைகள், பேரறிஞர் அண்ணாவின் வழிகாட்டும் நெறிமுறைகளின்படி கட்சியைச் சீரமைத்திட வேண்டும். இன்று **தானைத் தலைவர் கலைஞர், இனமானப் பேராசிரியர் ஆகிய இருவரும் இருக்கும் காலத்திலேயே கட்சியின் நடைமுறையில் "புதியபாதை" வகுக்கப்பட வேண்டும். அப்போதுதான் திராவிட இயக்கம் பீடுநடை போட இயலும்.**

என் எண்ணத்தை வெளியிட வாய்ப்பளித்த திருமதி. **சம்பூர்ணம் சாமிநாதன்** அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றி. **அண்ணன் பி.ஏ.எஸ். அவர்களின் தொண்டுநெறி நிலைபெறுக!**

○●○

எளிமைதான் தமிழனின் பண்பு -
அது மட்டுமல்ல,
நிலை உயர உயர
மிக மிக
எளிமையாயிருப்பதுதான்
அந்தப் பண்பின் சிகரம்

- அண்ணா



கோவை எம். வீரகோபால்
மாநகரச் செயலாளர்
கோவை மாநகர்

அண்ணன் சாமிநாதன் புகழ் ஓங்குக!

தமிழகத்தில் திராவிட இயக்கம் தோன்றியிராவிட்டால் அறியாமை ஒழிந்திருக்காது. பகுத்தறிவுச் சுடர்விட்டுப் பிரகாசித்திருக்காது. தீண்டாமை ஒழிக்கப்பட்டிருக்காது. சுயமரியாதை காப்பாற்றப்பட்டிருக்காது. சமூகநீதி கிடைத்திருக்காது. ஆரியர்களின் வஞ்சகம் வீழ்த்தப்பட்டிருக்காது.

திரு. பிட்டி சர்.பி. தியாகராயர், டாக்டர் திரு. டி.எம். நாயர், திரு நடேசனார் போன்றோர் ஆற்றிய பணிகள் எண்ணிலடங்கா. தொடர்ந்து பல தலைவர்கள் தோன்றித் தமிழரின் தலைக்குனிவை நிமிர்த்தினார்கள். நமது தலைமுறையில் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர், இனமானப் பேராசிரியர் ஆகியோர் பணிகள் அளப்பறியன. குறிப்பாகப் பேரறிஞர் அண்ணா அவர்கள் தமிழனுக்கு வாராது வந்த மாமணியாய் வாய்த்தவர். இன்னும் பல தலைமுறைகளுக்கு இந்தத் தமிழினத்தை வழிநடத்திச் சென்றிடத் தி.மு.கழகத்தை உருவாக்கினார். தனக்குப் பிறகு அடுத்தக்கட்டத் தலைவர்கள் உருவாகவும் வழிவகுத்தார். நமது இதய தெய்வம் பேரறிஞர் அண்ணாவின் மறைவிற்குப் பிறகு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தலைமையில் கழகம் வீறுகொண்டு செயல்படத் தொடங்கிற்று.

கழகம், படித்த இளைஞர்களின் பாசறை ஆகியது. பாமரர்களின் புகழிடமானது. இந்தக் கொள்கைக் கூடாரத்தில்தான் மறைந்த அண்ணன் பி.ஏ.சாமிநாதன் அவர்கள் தன்னையும் இணைத்துக் கொண்டு, கோவையில் உடுமலை ப.நாராயணன், சே.அ.இராசமாணிக்கம், மு.கண்ணப்பன், கோபி, ஜி.என். ராஜு, மு.இராமநாதன், ப.கோபால், சானகிராமன், சி.டி.தண்டபாணி காட்டூர் கோபால், மு.மா.சண்முகசுந்தரம், தேவசகாயம், வி.வி.ராமு, போன்றவர்களுடன் களப்பணி ஆற்றத் தொடங்கினார். காட்சிக்கு எளியராய் கடுஞ்சொல் இலராய், கேள்விக்கு இனியராய்த், தொண்டருக்குத் தொண்டராய், மக்கள் சேவகனாய்ப் பொது வாழ்விற்குப் புகழ் சேர்த்தார். நான் அவர் பணியாற்றும் காலத்தில் சின்னஞ்சிறுவனாக இருந்ததால் கழகப் பணிக்கு வரவில்லை. என்றாலும் அவரைப் பற்றிய பல்வேறு செய்திகளைக் கேட்டறிந்து

[illegible] கூட்டத்திலும் [illegible] பணியினை ஆற்ற வேண்டும் என்று உந்துதல் என் மனதில் ஏற்பட்டிருந்தது. [illegible] அண்ணன் பி.ஏ.எஸ். அவர்களின் எண்ணங்கள், செயல்பாடுகள், ஏற்றுக் [illegible] [illegible] பயணங்கள், இடைவிடாத உழைப்பு, இவரின் முக்கியமான செயல்பாடுகளை நாம் என்றும் மறக்க இயலாது.


பேராசிரியர் அன்னாரின் [illegible] தலைமைப் [illegible], தலைவர் கலைஞர் [illegible] தொகுதியில் இளையான்குடி பேராசிரியர் தன்னைக் கல்லூரியில் மாணவராக [illegible] மக்கள் பணியாற்றுவதில் சிறந்து விளங்கிய காரணத்தால்தான் [illegible] மக்களால் பேரூராட்சித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றிப் பெருமை சேர்த்தார். மக்களிடம் வெறுப்பை விதைக்காமல் அன்பை உணர்ந்து நின்றார். அப்பகுதி மக்கள் குடிநீர்த் தேவைக்கு அல்லல்படுவதை உணர்ந்து அன்னாரின் காலத்திலேயே வீட்டிற்கு தேவையை நிறைவு செய்து தாகம் தீர்க்க திட்டங்களைக் குடிநீர் தந்தவர்தான் அண்ணன் பி.ஏ.எஸ். அவர்கள்.

ஒருங்கிணைந்த கோவையின் மாவட்டச் செயலாளராகப் பணியாற்றிக் கழக வளர்ச்சிப் பெருமைபெற்றார். கடந்த 1975-இல் கோவையில் தி.மு.க. கழகத்தின் 8-வது மாநில பொது மாநாட்டை, அனைத்து அரசியல் கட்சிகளும் உற்றுப்பார்க்கும் வகையில் 5 நாள்கள் நடத்திக் காட்டினார். தலைவர் கலைஞரும், இனமான பேராசிரியரும் மற்றுமுள்ள கழகத் தலைவர்களும் வியந்து பாராட்டுத் தெரிவித்தனர்.

நாட்டில் நெருக்கடி நிலைப் பிரகடனப் படுத்தப்பட்ட போது தலைவர் கலைஞர் மக்கள் உரிமைக்காகப் போரிட்டார். அதன் விளைவாக நமது கழக ஆட்சி கலைக்கப்பட்டது. கழகத்தின் தலைவர்கள், தொண்டர்கள் அனைவரும் சிறையில் அடைக்கப்பட்டுச் சித்திரவதை செய்யப்பட்டனர். மிசாக் கொடுமையால் திரு. சி. சிட்டிபாபு அவர்களையும் திரு. சாத்தூர் பாலகிருஷ்ணன் அவர்களையும் இழந்தோம். கோவையில் அண்ணன் பி.ஏ.எஸ்., அண்ணன் மு. இராமநாதன், அண்ணன் மு.கண்ணப்பன் போன்றோரும் மற்றும் பலரும் ஓராண்டு சிறை கொட்டடியில் அடைக்கப்பட்டுத் தியாகத் தழும்புகளை ஏற்றுக் கொண்டனர்.

அண்ணன் பி.ஏ.எஸ். அவர்கள் காங்கிரஸ் பேரியக்கத்தின் முன்னணித் தலைவர்களில் ஒருவராக விளங்கிய மரியாதைக்குரிய சி. சுப்பிரமணியம் அவர்களை நாடாளுமன்றத் தேர்தலில் தோற்கடித்துக் கழகத்திற்கு வெற்றியினைத் தேடித்தந்து கோபி நாடாளுமன்ற உறுப்பினராகப் பணியாற்றினார்.

அண்ணன் சாமிநாதன் அவர்கள் தம் வாழ்நாளில் எண்ணற்ற சாதனைகளை அள்ளிக் குவித்தார். கழகம் வளர்ப்பதிலும், கழகம் காப்பதிலும் என்னைப் போன்றவர்களுக்கு வழிகாட்டியாகத் திகழ்ந்தவர். அவர்கள் எல்லாம் பாடுபட்டு அமைத்துக்கொடுத்த பாதையில் நாம் இன்று பீடு நடை போடுகின்றோம்.




அவர் இறந்த அன்று புளியம்பட்டிப் பொதுமக்கள் கட்சி வேறுபாடு பாராமல் [illegible] பெரியவரே" எங்களை விட்டுப் போய் விட்டீர்களே எனக் கதறித் துடித்ததை [illegible]ப் பார்க்கும் பொழுது, மக்கள் எந்த அளவிற்கு இவர் மீது பற்றும் பாசமும் [illegible]ர்கள் என்பதை அறிய முடிகிறது. அவரது மறைவு கழகத்திற்கு ஈடு செய்ய [illegible] பேரிழப்பாகும். அவர் தனக்காக வாழாமல் பிறருக்காகவே வாழ்ந்து [illegible]வர். அவர் ஏற்றுக் கொண்ட கோட்பாடுகளை மனதில் பதித்து எதிர்காலத்தில் [illegible] சமூகப்பணி ஆற்றிக் கழகத் தலைவர் அவர்களுக்கும், இனமானப் பேராசிரியர் [illegible]களுக்கும், தளபதியாருக்கும் உறுதுணையாக நிற்போம்.

"நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை யுடைத்திவ் வுலகு" (திருக்குறள் 336)

என்னும் குறட்பாவினை எண்ணி ஆறுதல் பெறுவோம். என்றும் அவர் வழி [illegible]போம்.

"வாழ்க அண்ணன் சாமிநாதனின் நீடுபுகழ்"

பெரியோர் கண்ட பெரியார்



"ஈ.வெ.ராமசாமி நாயக்கர் அவர்கள் வெகுவாக மதிக்கப்படுகின்ற ஒரு பார்ப்பனரல்லாத தலைவர். தமிழ்நாட்டைத் தனியாகப் பிரித்துவிட வேண்டுமென்று வெளிப்படையாகவே சொல்லி வருகிறார். பாகிஸ்தானத்தில் முதலமைச்சராக இருப்பதோடு ஜின்னாவிற்கு எவ்வளவு உரிமை உண்டோ அவ்வளவு உரிமை தமிழ்நாட்டின் தனி ஆட்சியில் இராமசாமி நாயக்கருக்கு உண்டு"

- சர் சி.பி. இராமசாமி அய்யர்
திருவாங்கூர் முன்னாள் திவான்

"பொதுமக்களுக்குப் பெரியார் செய்த தொண்டு மிகப் பெரியது. யாகத்தின் பெயரால் பசுக்கொலை முதலிய கேடுகளைச் செய்தவர்களை எதிர்க்கப் புத்தர் பெருமான் தோன்றினார். தமிழையும் தமிழரையும் அடிமைப்படுத்தி வரும் சுயநலக் கூட்டத்தை எதிர்க்கப் பெரியார் தோன்றினார். அவர் இல்லாவிடில் நாம் மிகக் கீழான நிலையில், நம்மை வெட்கமில்லாமல் 'சூத்திரன்' என்று அழைத்துக் கொள்வதில் பெருமை கொள்ளும் பேதைமையில் மிதப்போம்"

- முதுபெரும்புலவர் அ. வரதநஞ்சையாப்பிள்ளை

P.S. ஜெயராமன் M.I.H.,
தி.மு.கழகத் துணைச் செயலாளர்
பவானிசாகர் ஒன்றியம்

வளர்க பெரியவரின் நெடும்புகழ்!

பெரியவர் பி.ஏ.எஸ். அவர்களை யான் கடந்த 60 ஆண்டுகளாக நன்கறிவேன். 1952-இல் யான் 3-ஆம் வகுப்புப் படிக்கும்பொழுது தி.மு.கழகத்தின் மீது பற்றுக் கொண்டேன். தொடர்ந்து அறிஞர் அண்ணா நாவலர், பேராசிரியர், கலைஞர் ஆகியோருடைய கூட்டம் எங்கு நடைபெற்றாலும் நண்பர்களுடன் அங்குச் சென்று கலந்து கொள்வேன்.

கருப்பு சிவப்பு நிறமே எங்களின் எழுச்சியாகும். என் சொந்த ஊர் பனையம்பள்ளியாகும். எங்கள் பகுதியில் தி.மு.க.வை உருவாக்கி வளர்த்தவர் அண்ணன் பி.ஏ.எஸ் அவர்களே! அவர்தம் துடிக்கான செயல்பாட்டால் இளைஞர்கள் வெகுவாகக் கவரப் பெற்றோம். ஈரோடு கோவை, நீலகிரி ஆகிய 3 மாவட்டங்களும் சேர்ந்த ஒருங்கிணைந்த மாவட்டச் செயலாளராக இருந்து ஈடிணையில்லாமல் செயலாற்றினார் இருமுறை கோபி நாடாளுமன்ற உறுப்பினராக இருந்து நாடறியப் பணியாற்றியுள்ளார். அப்பொழுது குடிநீர்ப் பஞ்சத்தில் தத்தளித்த புளியம்பட்டிக்கு அண்ணா முதலமைச்சரான முதல் வாரத்திலேயே இசைவு பெற்றுப் பெரிய நகரின் அடிப்படைத் தேவையான குடிநீர்த் திட்டத்தினை பவானிசாகரிலிருந்து கொணர்ந்து நி·றைவேற்றினார். இப்பகுதி மக்கள் - ஊர் உள்ளவரை - நீருள்ளவரை - நெஞ்சிருக்கும்வரை நீங்கா இடம் பிடித்துள்ளார். பேரறிஞர் அண்ணாவிடம் இசைவு பெற்றுக் குடிநீர்த் திட்டத்தினை அன்றைய முதல்வர் கலைஞரைக் கொண்டு திறந்து வைத்தார்.

அதுமட்டுமன்று "நெல்லுக்கு இறைத்த நீர் வாய்க்கால் வழியோடிப் புல்லுக்கும் ஆங்கே பொசியுமாம்" போலே, பவானிசாகரிலிருந்து புளியம்பட்டி வரும் வழிகளில் உள்ள ஊர்களுக்கெல்லாம் ஆற்று நீர் வழங்க ஏற்பாடும் செய்தார். மேலும் பவானிசாகர் நீர்த்தேக்கப் பகுதியில் உள்ள நீர்ப்பிடிப்புப் பகுதியில் வேளாண்மை செய்ய வேளாண்கூலி வேலை செய்பவருக்குக் கோட்டாட்சித் தலைவர், சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள் அடங்கிய குழு அமைத்து, ஒவ்வொரு வேளாண் கூலியினர்க்கும் பகுதி பகுதியாக நிலப்பிரிப்புச் செய்து இன்றுவரை அதில் வேளாண்மை செய்ய வேண்டுவன செய்தார்.

[illegible] இலாக்காவுக்குரிய 900 ஏக்கர் நிலப்பரப்பை [illegible] ஒருவருக்கு 3 ஏக்கர் வீதம் 300 பேருக்கு வழங்கி அவர்கள் வாழ்வுக்கு [illegible] பேரும் சத்தியமங்கலம் பாதையில் [illegible] இல்லை' [illegible] வேண்டுகோள் செய்து [illegible] விழாவும் செய்தார். இதுபோன்ற பல வழிகளில் [illegible] ஏழை எளிய மக்களின் மகிழ்வே தம்மகிழ்வாகக் கருதிச் [illegible]

[illegible] 1975-இல் பேரறிஞர் அண்ணா நெசவாளர் கூட்டுறவுச் சங்கத் [illegible] பொறுப்பினையும், பவானிசாகர் ஒன்றியத் தி.மு.க. அவைத்தலைவர் [illegible] சத்தியமங்கலம் நிலவள வங்கியின் இயக்குநர் ஆகியவற்றுப் [illegible] பொறுப்பாளராக இருந்து, பிறர் மகிழ்வில் தான் மகிழ்ந்தவர் பி.ஏ.எஸ்.

[illegible] பவானிசாகர் பாதையில் உள்ள பணையம்பள்ளி என்றால், P.S. ஜெயராமனைக் [illegible] என்றுதான் சொல்லுவார். பணையம்பள்ளியில் கழகக் கூட்டங்கள் [illegible] அவ்வேளை உரிமையுடன் நன்கு பயன்படுத்திக் கொண்டவர் பெரியவர். [illegible] கோடம்பாக்கம் குமார், கோவை இராமநாதன், மு.கண்ணப்பன், [illegible] தண்டபாணி, வேளாண் அமைச்சர் கோவிந்தசாமி, பேராசிரியர், நாவலர், [illegible] கோவி வெங்கிடு, ஈரோடு அரங்கநாதன், சுப்புலட்சுமி ஜெகதீசன் மற்றும் பலர் [illegible] வருகை தந்துள்ளனர். அந்தக் கூட்டங்களில் இந்தப் [illegible] P.S. ஜெயராமன் குழுவினரையே சேரும் என்று மறவாமல் [illegible] உண்மை நிலையுரைப்பதில் இன்புறும் பண்பாளர் பி.ஏ.எஸ். [illegible]

1976-இல் மிசாவில் திரு. பி.ஏ.எஸ். அவர்களுடன் அடியேனும் கைது [illegible] அப்படிப் பண்பட்ட நனிநாகரிக அரசியல்வாதியாக உலாவந்த [illegible]' இன்று நம்முடன் இல்லை! என்பதை நீளநினையும் பொழுது கண்களில் [illegible]! நினையும் நெஞ்சம் கனக்கின்றது! எனவே அவர்தம் இடத்தில் [illegible] அக்கா சம்பூரணம் சாமிநாதன் அவர்கள் மிசாக் காலத்தில் செயல்பட்ட [illegible] கொண்டு, எங்கட்கு உறுதுணையாக இருப்பார்கள் என்பதே [illegible] ஆறுதல்!

[illegible] அவர்களின் தூய பணிகளால் அவர்தம் 'ஆன்மா' நிறைநிலையில் [illegible] என்பதில் ஐயமில்லை! வளர்க அவர்தம் நெடும் புகழ்!

> எல்லா மக்களுக்கும் எல்லா நலன்களும் கிடைக்க வேண்டும்;
> அதற்கு நாம் குறள் காட்டிய வழியில் நடந்து காட்ட வேண்டும்.
>
> \- அண்ணா

கி. சிவலிங்கம்
கல்நான் தெரு
புன்செய் புளியம்பட்டி


போற்றுதலுக்குரிய 'பெரியவர்'

சாதனைச் செம்மல் சாமிநாதன் அவர்களின் நினைவு மலர் வெளியீடு அறிந்து பேருவகையுற்றேன். நினைவு மண்டபத் திறப்பு விழா, சிறும் சிறப்புற அமைந்து பலரும் பயன்பெற என் இதயம் கனிந்த நல்வாழ்த்துக்கள்.

அவரது மணிவிழாவில்தான் நிறையப் பொறுப்புகளை ஏற்றுக் கொண்டு மனம் நிறைவுடன் பணியாற்றினேன். 'மூன்று எழுத்தில் என்மூச்சு இருக்கும்' என்ற வாக்கிற்கிணங்கக் கடைசிவரை வாழ்ந்து காட்டியவர் பெரியவர்!

நான் அவரைப் பற்றிக் கேட்டு வியப்பு அடைந்த செய்தியைக் கூறுகிறேன். நான் 1960-இல் என் அண்ணார் திரு. மாகாளிப்ப முதலியார் கடையில் பணியாற்றியபோது, காவிலிபாளையம் நெசவாளர்கள் 'பீஸ்' நெய்து வருவார்கள். அதில் ஒரு நெசவாளர் நான் பீஸ் கொண்டுவர, மர நிழலில் அமர்ந்திருந்தேன். அப்பொழுது சரியான வெய்யில். பெரியவரும் பு.கா.ஆறுமுகமும் சைக்கிளில் கொடி கட்டிக்கொண்டு கிராமங்களை சுற்றிவிட்டு வேர்த்து வியர்த்து வருகிறர்கள். மரத்தடியில் வந்து நின்றதும் ஆறுமுகா டீ குடிக்கலாம்' என்கிறார். அவர் தன்னிடம் காசு இல்லை என்கிறார். இவரும் என் வசமும் காசு இல்லையே என்கிறார். இதைக் கேட்டுக்கொண்டு இருந்த உள்ளூர் அன்பர் ஒருவர் சாமிநாதா! எங்கள் ஊருக்கு வந்து சாப்பிடாமல் போகலாமா? என்று அழைத்துச் சென்று டீ வாங்கிக் கொடுத்தார். இதைக் கேட்டு யான் கட்சிக்காக எப்படியெல்லாம் உழைத்திருக்கிறார் என்று வியந்தேன்.

மற்றொரு செய்தி. எனது அண்ணார் மகள் Dr.சரஸ்வதிக்கு அரசுப் பணி கிடைத்து ராமநாதபுரம் மாவட்டம் கல்லமநாயக்கன்பட்டிக்கு இரவு சென்று அடைந்தோம். காலையில் தேநீர் அருந்துவதற்காக ஊருக்குள் உள்ள ஒரு கடைக்குச் சென்றேன். அங்கு உள்ளவர்கள் நான் புதியவனாக இருப்பதால் நீங்கள் யார்? எந்த ஊர்? என்று கேட்டார்கள். நான் கோவை மாவட்டம் புன்செய் புளியம்பட்டியில் இருந்து வருகிறேன் என்ற விபரம் சொன்னேன். அதில் ஒருவர் சாமிநாதன் புளியம்பட்டியா? என்று கேட்டார். நான் மிக்க வியப்பு அடைந்தேன். பின் நலம் விசாரித்துவிட்டுக் கோவை 5-ஆம்



...மை மிகச் சிறப்பாக நடத்தினார் - கடின உழைப்பாளி என்று ...வரை வியந்து பாராட்டினார்கள். மேற்படி செய்திகள் இரண்டையும் ...வரிடம் பரிமாறியிருக்கிறேன், கேட்டு மிக்க மகிழ்ச்சியடைந்தார்.

நான் புன்செய் நகரவாசிகளுக்குக் கூறிக் கொள்வது. அவர் செய்த சாதனைகளில் ...சிறப்பானது - நாம் உயிர் உள்ளவரை நாளும் நினைக்க வேண்டியது. நமது ...தைகள், பேரன் - பேத்திகள் அனைவருக்கும் நினைந்து பெருமைப்பட ...டியது குடிநீர்ச் சாதனையே!. தமிழகத்தில் எத்தனையோ நகராட்சிகள் உள்ளன. ...ால் பல இடங்களில் 15 நாள்களுக்கு ஒரு முறைதான் குடிநீர் வரும். ஆனால் பல ...க்கு முன்பே நாம் நல்ல குடிநீர் தடையில்லாமல் குடித்து வருகிறோம். இதற்காக ...நாளும் நினைந்து கட்சி வேறுபாடின்றிப் போற்ற வேண்டும்! என்று வேண்டி ...றவு செய்கிறேன்.



மூட நம்பிக்கை



அறையில் இருந்தபடி ஆறாயிரம் மைலுக்கப்பாலிருக்கும் சீமையில் பாடப்படும் சங்கீதத்தைக் கேட்கிறோம் வானொலி மூலம். இஃது அதிசயமாகத் தெரியவில்லை நம்மவர்கட்கு, மாரிகோயில் பூசாரியின் மந்திரம்தான் அதிசயமாகத் தெரிகிறது. காரணம்? மூட நம்பிக்கை.

ஜனநாயகம்

ஜனநாயகம் வளர வளர, மேடைப்பேச்சின் முக்கியத்துவம் வளரும். இதன் முக்கியத்துவம் வளர வளர இதனைக் கொண்டு தன்னலம் வளர்க்கும் ஆபத்தும் வளரும். அந்த ஆபத்தைத் தடுக்க வேண்டுமானால் மக்களில் பெருவாரியானவர்கள் இந்தச் சக்தியைப் பெற்றாக வேண்டும்.

பஞ்சாங்கம்

கடிகாரத்தைக் கவனித்து நடக்கிற மேனாட்டினர் முன்னேற்றத்தின் உச்சியில் இருக்கின்றனர். பஞ்சாங்கத்தைப் பார்த்து வாழ்கிற நாம் பின்னேற்றத்தின் கடைக்கோடியில் இருக்கிறோம்.

- அண்ணா

பு.கா. அலாவுதீன்

நான் கண்ட 'பெரியவர்'

பெருவாழ்வுச் சாதனை மலர் வாடி ஓர் ஆண்டு நிறைவுற்றது.


எத்தனை அறிஞர்கள் - ஆன்றோர்கள் - தலைவர்கள் - வரலாற்று நாயகர்கள் - மக்கள் நலத் தொண்டர்கள் பிறந்திருந்தாலும் வாழ்ந்திருந்தாலும் புன்செய்ப் புளியம்பட்டிப் பெரியவர் பி.ஏ.எஸ். அவர்களின் சாதனைகளுக்கு ஈடாகா!

வாடிக்கையாளர்கள் எல்லாம் வந்து உதவி கேட்பார்கள் பெரியவரிடம் இல்லை என்ற சொல்லே அவரிடம் இருந்ததில்லை அவர்களின் தன்மையைக் கேட்டறிந்து உதவி புரிந்தவர் நமது பெரியவர் பி.ஏ.எஸ். ஆவார்.

30 ஆண்டுகாலம் அவருடன் உரையாடிப் பணியாற்றி வந்தவன் இந்த ஏழைத் தொண்டன் பு.கா.அலாவுதீன். எத்தனை சாதனைகள் - எத்தனை சரித்திரங்கள் படைத்துக் காட்டியவர் - பெரியாரின் பகுத்தறிவு பாசறையில் பயின்று திராவிட இயக்கத்திற்காக 60 ஆண்டுகாலம் உழைத்திட்ட உத்தமர் பெரியவர் பி.ஏ.எஸ்.

பேரறிஞர் அண்ணாவால் அடையாளம் காட்டப்பெற்றவர் அண்ணாவே "என் தம்பி சாமி பெரும் சாதனையாளர்" என்று சொல்லிப் பாராட்டி மகிழ்ந்ததுண்டு. கலைஞரோடு பழகியவர் - பேராசிரியரின் நேசத்தைப் பெற்றவர் - திராவிட இயக்கத்தின் பல தலைவர்களுடன் பழகி சமுதாயப்பணியும், மக்கள் நலப்பணியும் ஆற்றியவர் நமது பெரியவர் பி.ஏ.எஸ். 1958-இல் ஊராட்சித் தலைவர், 13/13-இல் வெற்றி கண்டவர் இத்திகழ்வினை அண்ணா அவர்கள் பாராட்டிச் சான்றிதழ் வழங்கினார். 10 ஆண்டுகாலம் மக்களவையில் பணியாற்றி மக்களால் இன்றும் பாராட்டும் - புகழும் - பெருமையும் பெற்றவர் நமது பெரியவர் பி.ஏ.எஸ்.

1975-இல் கோவை மாநில மாநாட்டைச் சிறப்பாக நடத்தி கலைஞராலும், கட்சியினராலும் தனிப் பாராட்டும் பெற்றவர். ஓராண்டு காலம் மிசாவில் கைதாகி விடுதலை ஆனவர்.



[illegible] திருப்பூர் [illegible] தலைவரானவர். பல தலைவர்களை உருவாக்கிய [illegible]

[illegible] புளியம்பட்டியில் பிறந்து 60 ஆண்டு காலமாகச் [illegible] பல்வேறு சாதனைகளை உருவாக்கிக் காட்டியவர். [illegible] பேருந்து நிலையம் - திருமண மண்டபம் [illegible]

[illegible] உருவாக்கிப் பல ஏழை [illegible] மருத்துவ உதவி எனப் பல்வேறு சாதனைகளை [illegible]

[illegible] நடந்துசெல்லும் வறியவர்களை முதியோர்களை [illegible] அப்படிப்பட்ட பெரியவர் பி.ஏ.என். [illegible] ஓர் ஆண்டு ஆகிவிட்டது. ஓர் ஆண்டு ஆனாலும் - ஓர் [illegible] அவருடைய புகழ் என்றும் அழியாது. புளியம்பட்டி [illegible] அவருடைய பெயரும் - புகழும் நிலைத்திருக்கும்!

மண்ணுலகில் செய்த சாதனைகள் போதும் - விண்ணுலகிலும் [illegible] என்று உம்மை அழைத்து விட்டனரோ!

அழுதுடிக்கிறேன் - அழமுடியவில்லை,

பார்த்த நினைவு - பார்க்க முடியவில்லை,

உணர்த்துடிக்கிறேன் - உண்ணமுடியவில்லை.

மக்களின் கைம்மாறில்லாத் தொண்டினால் உம்புகழ் [illegible] என்றும் நிலைபெறும்!


சிந்திக்க வேண்டியது அவசியம்

அறிவுள்ளவன் சிந்தித்துப் பார்க்க வேண்டியது அவசியம். ஆனால் நமது மக்கள் ஓய்வும் சிந்திக்க வாய்ப்பும் இல்லாமல் அல்லல்படுகிறார்கள். எனவே எப்பொழுதும் [illegible] மெய்ப்பொருளாகவே கொள்ள வேண்டும். இந்த [illegible] நமது கழகத் தோழர்கள் மனங்கொள்ள வேண்டும்.

— [illegible]



‘பி.ஏ.எஸ்.’ நினைவுக் கவிதைகள்





சிறப்புக் கருதி

'பெரியவர்' பி.ஏ. சாமிநாதன் - திருமதி. சம்பூர்ணம் சாமிநாதன்

அவர்களின் மணிவிழாவின்போது

திரு. **பண்ணன்** அவர்களால் எழுதி வெளியிடப்பெற்ற

'தொண்டின் வடிவம் எங்கள் சாமி'

எனும் நூலிலிருந்து தொகுக்கப்பெற்றவை.



[illegible] கட்சியில் ஈடுபாடு கொண்டோருள் அந்த [illegible] [illegible] எல்லாம் கட்சிப் பொறுப்புக்களைத் தவிர வேறு எந்தப் பதவிப் [illegible] யிலே தம் வாழ்நாளைக் கழிப்போர் பலராவர்.

[illegible] கட்சியிலும் பதவி கிடைக்கும். வேறு பதவிகளிலும் அமர வாய்ப்பு [illegible] இயக்கத்தில் கொண்டிருந்த ஈடுபாட்டின் பயனாகப் [illegible] மக்களிடையே செல்வாக்கும் பெற்றதன் விளைவாகப் பதவியில் அமர்வோர் [illegible] தொடர்ந்து இயக்கத்திலும், அதே அளவு பழையபடி ஈடுபாடு கொண்டு [illegible] காட்டுவது இல்லை.

[illegible] சிலருக்குச் சொந்தக் காரணங்கள் குறுக்கிடும். அதன் காரணமாக [illegible] பணிகளைத் தொடர முடியாமற் போய்விடும். சிலர் கிடைத்த பதவியைப் [illegible] கருதி அதன் மகிமையில் மயங்கி இயக்கத் தொடர்புகளைக் குறைத்துக் [illegible] - இயக்கத்திடமிருந்து விலகிப்போவது என்றும் தவறுகளைப் புரிவர். [illegible] பதவியோடு தங்கள் பொதுவாழ்வை முடித்துக் கொள்வர். அதன் பிறகு [illegible] தொழில்களில் ஆர்வங்காட்டி அதில் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் [illegible] உண்டு.

வெகு சிலரே பதவி மட்டுமன்று, பதவிகள் பலவும் தங்களை நாடி வந்த போதும் - [illegible] முயன்று பெற்றுக் கொண்ட பின்னரும் - பெற்ற பதவி, பொதுவாழ்வு என்னும் [illegible] பயணத்தில் ஒரு மைல் கல் எனக் கருதி, அதிலேயே அமிழ்ந்து போகாமல், [illegible] காத்துக் கொள்வதே தலையாய கடன் எனக் கொள்ளாமல் மேலும் மேலும் [illegible] வளர்க்கவும், இயக்கம் மேற்கொள்ளும் போராட்டங்களிலும் முழு [illegible] தமது பங்கினைச் செலுத்தி, இயக்கத்தவருடன் கொண்டிருந்த [illegible] சற்றும் வழுவாமல் வாழ்ந்து நிற்பார்கள். பதவிகள் போனாலும் - [illegible] பொது வாழ்வு - தொண்டுள்ளம் அவர்களை விட்டுவிலகாது. [illegible] கருதினாலும் மக்களின்று அவர்களை விலகாமற் செய்துவிடும்.


இத்தகையோரே இயக்க வரலாற்றில் - பொது வாழ்வுப் பொன்னேடுகளில் [illegible] உள்ளங்களில் நிலையான இடத்தைப் பெறுவர். கல்மேல் எழுத்தென மாந்தர் [illegible] நிலைத்தும் நிற்பர். இயக்கத்திலிருப்போர் தங்களைத் தலைவர்களாகவே [illegible] இருத்திக் கொள்ளும் வேட்கையால், தமக்குத் துணைநின்ற [illegible] புதிய வரவுக் கானல்நீரின் மயக்கத்தால், தூக்கி எறிந்த பொழுதும் பதவிகள் [illegible] எட்டிப் போனாலும், தேர்தல் முடிவுகள் திசை மாறினாலும் மக்களின் [illegible] நினைவில் நனைந்த வண்ணம் உலவி வருவர்.

அந்த நாளில் சாமி போன்ற சாதாரணக் குடும்பத்தில் தோன்றிய ஊராட்சித் தலைவர் பதவி கிடைத்தது. வாராது வந்த மாமணிதான். தி.மு.கழகத்தவர் ஒருவருக்குக் கிடைத்தது அரிதான ஒன்று. ஊராண்டோர் தலைவர் பதவியை அலங்காரப் பதுமையாகவே கருதியிருந்தனர். பிரச்சினையில் நாட்டம் செலுத்துவது அவர்களுக்கெல்லாம் தெரியாது. பேரூராட்சி மன்றத்திற்கு ஒரு நல்ல கட்டிடம் கட்ட வேண்டும் என்னும் நினைவு எழவில்லையென்றால் அவர்கள் தங்கள் பதவிக் காலத்தில் என்னதான் புரிந்திருப்பார்கள்?. அதனால் சாமி தலைவரானதும் எத்தனையோ பிரச்சனைகள் காத்துக் கிடந்தன. குடும்பச் சச்சரவுளிலிருந்து ஊரின் பொதுப் பிரச்சனைகள் அனைத்தையும் தீர்க்க வேண்டிய பொறுப்பு.

இவ்வளவு இருந்தும் ஊராட்சி மன்றத் தலைவர் ஆற்ற வேண்டிய பணிகள் பிரச்சனைகளைத் தீர்த்தல் என்னும் குறுகிய வட்டத்திற்குள்ளேயே அவர் புதைத்துக் கொள்ளவில்லை. தனக்கு அந்தப் பதவியைத் தந்ததே தி.மு.கழகம் அதனை அடைய உறுதுணை நின்றவர்கள் கழகத்தோழர்களே என்கிற நினைவு அவர் விடுபடவில்லை. நினைவை எப்போதும் ஒதுக்கி வைக்கவுமில்லை. என்னென்ன செய்ய வேண்டும் என்பது பற்றிய சிந்தனை ஒரு பக்கம். வளர்ச்சிக்கு ஆற்ற வேண்டிய பணிகள் பற்றிய நினைவுகள் இன்னொரு இவ்விரண்டையும் தம் இரு கண்களாகக் கருதித் தொண்டாற்றி வந்தார்.

தாமே அமைத்த புன்செய்ப் புளியம்பட்டி தி.மு.கழகக் கிளைச் செய இருந்துவந்த சாமி, கோபி வட்டச் செயலாளராக மூன்று முறை போட்டி தேர்ந்தெடுக்கப்பட்டார். இதுவே, அவர் ஊராட்சி மன்றத் தலைவராக அமர்ந்த போதும், இயக்கத்தோடு எந்த அளவுக்கு நெருக்கத்தோடிருந்தார் என புலப்படுத்தும். கோபி வட்டச் செயலாளரான பின், மெல்லமெல்ல மா அளவிலும் அறிமுகமானார் சாமி. இந்த அறிமுகத்திற்கும் மாவட்ட தோழர்களிடையே பிடிப்பு ஏற்படுவதற்கும் பெருமளவு காரணமாக இரு உடுமலை ப. நாராயணன். அவரையே தம் அரசியல் ஆசானாகவும் ஏற்று இன்றும் அந்த எண்ணத்திலிருந்து அவர் மாறவில்லை.

இந்த நிலையில் கோவை மாவட்டத் தி.மு.கழகம் மாவட்ட மாநாட்டினை முடிவெடுத்தது. எங்கு நடத்துவது என்ற வினா எழுந்த போது ஈ.வெ.கி. ப.நா.வுடன் கலந்து பேசிக் கோபியைத் தேர்ந்தெடுத்ததார். சம்பத் மாநா வரவேற்புக்குழுத் தலைவராகவும், சாமி மாநாட்டின் செயலாள பொறுப்பேற்றனர். கோபியில் மாவட்ட மாநாடு என்றதும் தோழர்களிடையே ஒரு வகையான தயக்கம். கோவை, பொள்ளாச்சி, உ தாராபுரம் என ஏதாவதொரு ஊரைத் தேர்ந்தெடுத்திருந்தால், எந்த ஊரில் என்



...குறைவுகள், என்னென்ன வசதிகள் உள்ளன என்ற கலந்துரையாடல் ...ந்திருக்கும். தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் இடமோ கோபி. கோபி, தி.மு. கழகம் ...வாகக் காலூன்றாத இடம். கழகக் கிளைகளோ மிகவும் குறைவு. கழகத் தோழர்களோ சாதாரணக் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள். வசதி படைத்த எவருடைய ...யும் அங்குக் கிடையாது. இத்தனைக்கும் மேலாக அது காங்கிரசாரின் கோட்டை. ...னைத்தும் கோவை மாவட்டக் கழகத் தோழர்களுக்கு நன்கு தெரியும். தெரிந்த ...த்தாலேதான் அவர்களிடம் அத்தகைய தயக்கம் தலை தூக்கியது.

இன்றைக்குப் பணமிருந்தால் போதும். சகாராப் பாலைவனத்திலும் மாநாடு நடத்தலாம். எல்லா வகையான சாதனங்களும் பெருகியுள்ள காலம். காசைச் செலவு செய்தால் எதையும் எங்கிருந்து வேண்டுமாயினும் பெறலாம். எங்கும் கொண்டு செல்லலாம்.

அன்றோ....

கொள்கை வைரம் பாய்ந்த உறுதிமிக்க கழகத் தோழர்களை ஆங்காங்கு பெற்றிருந்ததைத் தவிரக் கழகத்திற்கு வேறு எந்தச் செல்வமும் வந்துசேராத காலம். போக்குவரவு சாதனங்கள் உட்பட அனைத்துமே பெருகாத காலம். தொலைத் தொடர்புகொள்ளும் வசதியும் அவ்வளவாக இல்லை. இத்தனைக்கும் இடையில் கோபியில் மாநாடு. நகர மன்றத் தலைவரோ, இரண்டொரு நாடாளுமன்ற உறுப்பினர்களோ அந்த வட்டாரத்தில் இருந்திருந்தாலும் சில வசதிகளை எளிதாகப் பெற்றுக் கொள்ள முடியும். அதற்கும் வாய்ப்பில்லை.

வரவேற்புக் குழுத் தலைவர் சம்பத். அவர் மேல்மட்டத் தலைவராகவே இருப்பவர். மற்ற மாவட்டங்களில் மாநாட்டுப் பொறுப்பினை ஏற்போர் களப்பயிற்சி உடையோராக - கீழ் மட்டத்திலிருந்து படிப்படியாக வளர்ந்து இத்தகைய பொறுப்பினை ஏற்போராக உயர்ந்தவர். ஒரு மாநாட்டினை நடத்துவதற்கு என்னென்ன தேவை. அவற்றை எப்படியெப்படிப் பெறுவது என்பதையெல்லாம் அறிந்திருப்பர். தாங்களாகவே ஓடியலையா விட்டாலும் இருந்த இடத்தில் இருந்தபடியே தொண்டர்களை ஏவி விரைவில் முடிக்கச் செய்வர்.

சாமிக்கு அத்தகைய உதவியும் இல்லை. என்றாலும் தன்னுடைய துணிவு. கழகத் தோழர்களின் சோர்வற்ற உழைப்பு. உடுமலையாரின் வழிகாட்டுதல் ஆகிய இவற்றின் துணையுடன் கோபி மாநாட்டை இரு நாள்கள் சீரும் சிறப்புமாக நடத்திக் காட்டினார். அண்ணா முதல் அனைத்துக் கழக முன்னோடிகளின் பாராட்டுதலையும் பெற்றார். மாநாட்டில் கலந்து கொண்ட கழகத் தோழர்கள் எல்லாருடைய வாழ்த்துக்கும் உரியவரானார்.

மாநாட்டின் போது. கழகத் தலைவர்கள் தங்குவதற்குகேற்ற இடம் கிடைப்பது முதலில் சிக்கலாகவே பட்டது. நீதிக்கட்சியின்பால் நீங்காப் பற்றுடையவரும் காங்கிரசைச் சேர்ந்த பி.ஜி. கருத்திருமனை எதிர்த்துப் போட்டியிட்டவருமாகிய

தம்மாளிகையைத் தந்துதவியதன்
டி.கே. சுப்பிரமணிய கவுண்டர்
சிக்கலும் நேராதபடி செய்தார். சாமி, கோபி மாநாட்டில் செயலாளர்
அரும்பணியாற்றி அதனை வெற்றிகரமாக நடத்திக் காட்டினார். ஆனால்
மாநாடுகளிலும் பல்வேறு பொறுப்புக்களை ஏற்றிருந்தார். ஏற்ற
செவ்வனே செய்து மாநாட்டின் வெற்றிக்கு உதவியுள்ளார்.

கோவையில் நடைபெற்ற சிறப்பு மாநாடு. பொள்ளாச்சி, திருப்பூர்,
மேட்டுப்பாளையம் ஆகிய ஊர்களில் நடந்த மாநாடுகளிலும் தம்முடைய
செலுத்தியிருக்கிறார்.

சாமி எதைச் செய்ய முற்பட்டாலும் - கிளையின் உறுப்பினர் கூட்டம்
பெரிய மாநாடு ஆயினும் அதில் தம்முடைய தனி முத்திரையைப் பதிக்க
மாட்டார். பொறுப்பினை ஏற்ற நாளிலிருந்து அது நடந்து முடியும் வரை,
கண்ணுங் கருத்துமாக இருப்பார். அதைப் பற்றியே சிந்திப்பார். அதில் தமது
முத்திரையை எப்படிப்பதிப்பது என்பதில் முழுவதுமாகத் தம்மை ஈடுபடுத்திக்
கொள்வார்.

தி.மு.கழகம் 1953-இல் கைத்தறியாளர்களின் துயரைத் துடைக்க
பட்டினிச் சாவுக்கு இரையாகிக் கொடிருக்கும் அவர்களைக் காக்கத்
உதவியைச் செய்ய முன் வந்தது. விற்பனையாகாமல் தேங்கிக் கிடக்கும்
துணிகளை விற்பனை செய்யத் தமிழ்நாடு முழுவதும் கழகத்
தெருத்தெருவாக வருவர் என அறிவித்தது. குறித்த நாளில் அண்ணா முதல்
தொண்டர் வரை அதில் பங்கு கொண்டனர். கழகத்தவர் அனைவரும்
ஆடைகளையே அணிவது எனவும் உறுதி பூண்டனர்.

இதனையடுத்தே மேட்டுப்பாளையத்தில் தி.மு.க. மாநாடு. மேட்டுப்பாளையம்
மாநாட்டில் புதுமை எதையேனும் செய்தால் என்ன என்னும் சிந்தனைக்கு
சாமி. மாநாடுகளில் பொதுவாகத் தலைவர்கள் எழுதிய நூல்கள், அவர்கள்
ஆகியன விற்கப்படும். இவற்றுடன் தேநீர், சிற்றுண்டி முதலியன விற்கும்
இருக்கும். மேட்டுப்பாளையம் மாநாட்டில் இவற்றோடு கைத்தறி
விற்பனை நிலையம் ஒன்றை அமைத்தால் என்ன என்ற கேள்வி சாமியின்
எழுந்தது. அந்தக் கைத்தறி ஆடைகளும் பொதுவானவையாக இருக்கக் கூடாது.

வேட்டிகள், துண்டுகள், கைக்குட்டைகள் ஆகியவற்றில் கழகக் கொடியின்
கருப்பு, சிவப்பு நிறங்களைக் கரையாக நெய்து விற்பனைக்குக் கொணர்ந்தால்

அருமையான திட்டம். இதற்குமுன் யாரும் எங்கும் செயல்படுத்தாத
சாமி, திட்டத்தை நிறைவேற்ற முடிவெடுத்தார். வேட்டி, துண்டுகளுக்கு
போவது? நூல் வாங்கித் தந்து நெய்து கொடுக்கச் சொல்லலாம்.
பெருந்தொகை வேண்டும். இதற்கும் ஒரு திட்டம் வகுத்தார். கைத்தறி



...பொறுப்பாளர்களை அணுகினார். தம் திட்டத்தை வெளியிட்டார். பணத்தை ...தும் கணக்கை நேர் செய்வதாகவும் தெரிவித்தார். கூட்டுறவு சங்கத்தினர் ...வருமே காங்கிரசார்.

...என்றாலும் வணிகத்தைக் கருத்தில் கொண்டு அவ்வாறே செய்துதருவதாக ...ளித்தனர். ஆனால் ஒரு கட்டுப்பாட்டையும் விதித்தனர். நெய்து தரும் ...களை திரும்ப எடுத்துக் கொள்ள மாட்டோம். விற்பனையாகாத சரக்குக்கும் ...த் தொகை செலுத்தியாக வேண்டும். இதுவே அவர்கள் விதித்த கட்டுப்பாடு. சாமி அதைப்பற்றிக் கொஞ்சமும் கவலைப்படவில்லை. மாநாட்டில் ...யிரவர் கூடுவர். அனைவரும் கழகத்தவர். கைத்தறி ஆடைகளையே அணிவது ...து கழகத்தின் கொள்கை. அத்துடன் புதுவகையாகக் கழகக் கொடி பொறித்த ...களை விற்பனைக்கு வைக்கப் போகிறோம். இருநாள்களில் பறந்து போய் விடும். ...டு முடிந்த மறுநாளே கூட்டுறவுச் சங்கத்தாருக்குப் பணத்தை எண்ணிக் கொடுத்து ...லாம்; இப்படிக் கனவு கண்டார் சாமி.

மாநாடு தொடங்கியது. மாநாட்டில் கைத்தறி ஆடைவிற்பனை நிலையமும் ...பெற்றது. முதல்நாள் கழகத் தோழர்கள் பலரும் அங்கு வந்தனர். பார்த்தனர். ...ட்டினர். கைக்குட்டையும் வாங்காது பந்தலுக்குள் சென்றமர்ந்தனர். சாமிக்குப் ...த்த ஏமாற்றம். ஒரு நாளைக்கு ஆயிரம் ரூபாய்க்காவது விற்குமென ...ர்பார்த்தார். இருபது முப்பதுகூடத் தேறவில்லை.

மறுநாள் மாநாடு தொடங்குமுன் கலைஞரிடம் சென்றார். அப்போது ...ஞருக்குப் பேச்சாளர், எழுத்தாளர் என்பதுடன் திரைப்பட வசனகர்த்தா என்கிற ...யிலும் கழகத்தவரிடையே நல்ல அறிமுகம் இருந்தது. தான் மேற்கொண்டுள்ள ...யற்சியைக் கூறி, நீங்கள் கொஞ்ச நேரம் அந்தக் கைத்தறி ஆடை விற்பனை ...லையத்தில் வந்து உட்கார்ந்தால் கழகத் தோழர்கள் உங்களிடமிருந்து அவற்றை வாங்க ...ரும்புவர். அதையே பெருமையாகவும் கருதுவர் என வேண்டினார். கலைஞரோ, ...து என்னால் முடியாது, என ஒரேயடியாக மறுத்து விட்டார். என்றாலும் சாமி தனது ...யற்சியைக் கைவிடவில்லை. அண்ணாவை அணுகினார். கலைஞரைக் கைத்தறி ...ஆடை விற்பனை நிலையத்திற்கு அனுப்புமாறு கேட்டுக் கொண்டார்.

நீ முதலிலேயே என்னிடம் சொல்லியிருக்கக் கூடாதா? முதலில் அவரிடம் ...கேட்டிருக்கிறாய். அவர் மறுத்திருக்கிறார். மறுபடியும் நான் சொன்னால் ...அப்பூர்வமாக அதனை ஏற்கமாட்டார். எதற்கும் சொல்லிப் பார்க்கிறேன் என்றார் ...அண்ணா.

கலைஞர் அண்ணாவின் வேண்டுகோளை ஏற்றார். கைத்தறி ஆடை விற்பனை ...நிலையத்திற்கு வந்தார். அவர் எந்த அளவுக்கு வேண்டா வெறுப்போடு அங்கு ...ந்திறார் என்பதை அவருடைய முகமே காட்டியது. சற்று நேரம் இருந்தார். திரும்பிப்

போனார். அப்போதும் விற்பனை அதே அளவுதான்.

மாநாடு முடிந்ததும் விற்பனையாகாத சரக்குகளுடன் ஊர் திரும்பினா... கூட்டுறவுச் சங்கத்திற்குப் பணம் செலுத்தியாக வேண்டும். தாம் அணிந்திருந்த... சங்கிலியை விற்றார். ஒரு தொகையைச் சங்கத்திற்குச் செலுத்தினார். மீதியை... விளக்கிக் கூறிக் கொஞ்சம் கொஞ்சமாகப் பணத்தைச் செலுத்தித் தணிக்க... செய்வதாகத் தெரிவித்தார். அவர்களும் அதற்கு ஒப்புக் கொண்டனர். இந்த மு... சாமி கண்டது தோல்விதான். ஆனால் இன்றைய அரசியல் கட்சியினர் அ... தத்தமது கொடிகள் பொறித்த கரையமைந்த வேட்டி, துண்டுகளை அணிந்... அதற்குக் கால்கோள் இட்டவர் சாமியே. இந்த வகையில் அவர் பெற்றது ப... வெற்றியே.

வாழ்க்கைத் துணை நலம்

சாமியுடன் ஓரளவு நெருங்கிய தொடர்புடையோரும் இரு மருத்துவ... பெயர்களை நன்கு அறிந்திருப்பர்.

ஒருவர் டாக்டர் பஷீர் அகமது. இவர் சென்னை பொது மருத்துவம... இப்பொழுது பணியாற்றி வருகிறார். மதுரை மாவட்டத்தினர்.


இன்னொருவர் டாக்டர் செந்தில்.

செந்தில்நாதன் என்னும் முழுப்பெயருக்கு உரியவரான அவர் எம்.டி ப... பெற்றவர். அவர் துணைவியார் திருமதி. சுசீலாவும் மருத்துவரே.

டாக்டர். செந்தில்நாதன் தம் அழகிய தோற்றத்தாலும், எப்பொ... சிரிப்பினைச் சிந்திய வண்ணம், எவருடனும் பேசும் பண்பினாலும் பணிவா... செயலாலும் எவரையும் எளிதில் கவரக் கூடியவர்.

கணவனும் மனைவியும் தொழிலில் திறமைமிக்கவர். உள்ளார்ந்த ஆ... உடையவர். ஒருமுறை ஒரு நோயாளிக்கு சிகிச்சை அளிக்க முற்படும்போது ம... ரீதியாகச் சில சிக்கல்கள் எழுந்தன. அப்பொழுது தாம் பெற்றுள்ள எம்.பி... பட்டம் போதாது. எம்.டி. படிப்பதன் மூலம் மேலும் மருத்துவத் துறையில் அறி... முடியும் என எண்ணிக் கணவன் மனைவி ஆகிய இருவருமே உயர்கல்வி பெற... செய்தனர். அவ்வாறே படித்துப் பட்டமும் பெற்ற பின்னரே மீண்டும் தம் தொழி... தொடர்ந்தனர்.

இருவருமே தங்களிடம் சிகிச்சைக்காக வருவோரிடம் காசு பறிப்பதைக் கு... கொள்ளாதவர்கள் . ஒருமுறை அவர்களிடம் மருத்துவம் செய்து கொள்ள வ... வேறு எவரையும் நாடிப் போக மாட்டார்கள். அவர்களிடம் மருத்துவம் ப... கொள்வதைப் பெருமையாகவே கருதுவர். அதனால் எல்...



...படுகின்றனர்.

...க்டர் செந்தில்நாதன் எப்போதும் சாமியை மச்சான் என்று அழைப்பார். ...ரின் குடும்பத்துடன் நெருங்கிய தொடர்பு உடையோர் தவிர மற்றெல்லாருமே ...யும் அவரும் உறவு முறையில் மைத்துனர் என்றே நினைப்பர்.

ஆனால்...

இருவரும் இருவேறு இனத்தைச் சேர்ந்தவர்கள். உறவால் மைத்துனர் அல்லர். ...மையால் மைத்துனர்கள்.

...தையாரின் மறைவுக்குப் பின் சாமி இளமைமுதலே தமக்குத் தாயாக இருந்து ...வளர்த்து ஆளாக்கிய அத்தை, பார்வதி அம்மாளின் அரவணைப்பிலேயே இருந்து ...ர். மருமகன் ஊரின் போற்றுதலுக்கு ஆளாகியுள்ளதோடு மணப்பருவத்தையும் ...தி உள்ளான் என்பதை உணர்ந்தார். **அண்ணன் மகனை மணக்கோலத்தில் காணும்** ...வல் அவர் உள்ளத்தில் எழுந்தது.

வருவாய்க்கு கடை இருக்கிறது. தந்தை வாங்கி வைத்துள்ள நிலபுலன்கள் உள்ளன. தொழில் என்று சொல்லாவிடினும், முழுநேரமும் ஓடி ஓடிப் பணியாற்ற ஊராட்சி மன்றத் தலைவர் என்னும் உயர்பதவி இருக்கிறது. குடும்பத்திலே எவ்வகைச் சிக்கலும் இல்லை.

இந்நிலையில் **ஆறுமுகனார் வீட்டுச் சம்பந்தியாகச் சாமிக்கு பெண் கொடுத்து** ...மருமகனாக்கிக் கொள்ள எவர்தாம் தயங்குவர்? பலர் விரும்பினர். அத்தையின் ...ரையும் அணுகினர். சாமியோ தட்டிக் கழித்து வந்தார். மல்லே கவுண்டர் என்னும் ...மதிப்புக்குரிய பெருமகன் ஒருவர் புன்செய்ப் புளியம்பட்டியில் இருந்தார். அவர் ...த்திரைத்தாள விற்பனையாளர். ஆறுமுகனார் குடும்பத்துடன் ஓரளவு நெருங்கிய தொடர்புடையவர். சாமியைப் பற்றி நன்கு அறிந்தவர். ஊரின் மதிப்புக்கு உரியவராக ...எங்கும் சாமிக்குத் **தகுந்த குடும்பத்தில் இருந்து பெண் பார்ப்பதைவிடத் தகுந்த பெண்ணாகத் தேர்ந்தெடுப்பதிலே அவர் கருத்துச் செலுத்தி வந்தார்.**

அந்த வேளையில் அவருடைய கருத்தில் இடம் பெற்றாள் ஒரு பெண். அவளுடைய வீடும், மல்லே கவுண்டர் வீட்டுக்கு அருகிலேயே இருந்தது. அதனால் அவளுடைய நடவடிக்கைகள் முழுவதையும் அவரால் அறிந்து கொள்ள முடிந்தது.

அந்தப் பெண் சின்னஞ்சிறு பருவத்திலேயே தாயை இழந்தவள். அன்னையை இழந்த சாமியாவது ஒரே அக்காவை மட்டும் பெற்றிருந்தார். இந்தப் பெண்ணோ நால்வரை உடன்பிறப்பாகக் கொண்டிருந்தாள். அந்தக் குடும்பத்தில் அவளே மூத்தவள். உடன் பிறந்தோர் நால்வரையும் காத்து வளர்த்து ஆளாக்க வேண்டிய கடமையைப் பூண்டிருந்தாள். இந்த நால்வரில் கடைசித் தங்கையோ கைக்குழந்தை. அவர் பிறந்த சில நாள்களிலேயே அன்னையார் மறைந்து விட்டார்.

வீட்டிற்குச் சென்ற அந்தப் பெண்...? தமது பெரியப்பாவின் கடுஞ்சொற்களுக்கு - அர்ச்சனைக்கு ஆளானாள். சாமி, ... கவுண்டரின் இல்லத்துக்கு வந்ததை அவர் பார்த்திருப்பார் போலும்! ...ள்ளோர் எவரேனும் பார்த்து அவரிடம் தெரிவித்திருக்கலாம். அல்லது ...தம்பியின் மகள் அங்கு சென்றது அவருக்குப் பிடிக்கவில்லை. அந்தவேளை ...ருப்பதைத் தெரிந்தே அவள் சென்றதாகவும் கருதினார். அவ்வாறே அவள் மீது ...மும் சாட்டினார்.

என்?

வயது வந்த பெண், இளைஞர் ஒருவர் பக்கத்து வீட்டிற்கு வந்திருக்கும் பொழுது ...சென்றாளே, யாராவது பார்த்தால் வேறு வகையான பேச்சு எழுமே, அது தம் ...ம்பக் கவுரவத்துக்கு அடுக்காதே, இத்தகைய நல்லெண்ணத்தினாலா அவளைக் ...டித்தார்?

அவர் தம்முடைய மகளைச் சாமிக்குத் திருமணம் செய்து வைக்கும் ஆசையோடு இருந்தார். சாமி தம் தம்பியின் மகளைப் பார்த்து அவளை விரும்பும் நிலைமை ...வாதுமாயின் தமது ஆசையில் மண் விழுந்து விடுமே, இதனாலேயே அங்ஙனம் அந்தப் பெண் மீது கடுஞ்சொற்களை அவர் வீசினார். வீணான குற்றச் சாட்டுக்கும் ...ிய தகப்பனாரின் கடுஞ்சொற்களுக்கும் ஆளான அப்பெண், குமுறி அழுவதன் ...ம் தன்னையே தேற்றிக் கொண்டாள். இருப்பினும் மல்லே கவுண்டரின் ஆசை நிறைவேறியது.

மல்லே கவுண்டரின் ஆசை மட்டுமா? சாமிநாதன் - சம்பூர்ணம், ஆசைகளும் நிறைவேறின.


ஆம்.

அந்தப் பெண்தான் இன்றைய திருமதி. சம்பூர்ணம் சாமிநாதன்.

சம்பூர்ணம் என்றால் முழு நிறைவு என்று பொருள்.

சாமியின் இல்லத்திற்கு முழுநிறைவளிக்க வந்த சம்பூர்ணம், அவர்தம் வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும் நிறைந்திருக்கும் வாழ்க்கைத் துணைவியாக மாறிச் சிறந்து விளங்குகிறார்.

சம்பூர்ணத்தைச் சாமியின் வாழ்க்கைத் துணைவியாக்கிக் கண்டுகளித்த மல்லே கவுண்டரின் மகன்தான் டாக்டர் செந்தில்நாதன். தனக்கு இல்லற வாழ்க்கை அமையப் பெருந்துணையாக நின்ற மல்லே கவுண்டரையும் சம்பூர்ணம் தன் தந்தையாகவே ...ற்றார். இதனால் டாக்டர் செந்தில் சம்பூர்ணத்துக்கு அண்ணன் ஆனார். சாமியும் ...ட்டும் மைத்துனர் ஆயினர்.



ஒவ்வொரு ஆணின் வெற்றிக்குப் பின்னாலும் ஒரு பெண் இருப்பாள் என்ற பொதிந்த தொடர் வழக்கில் இருக்கிறது. அது பொருள் பொதிந்த நிகழ்வு என்பதைச் சாமியின் வாழ்க்கையை அறிந்தோர் மிக எளிதில் ஏற்றுக்

சம்பூர்ணம் மட்டும் சாமியின் வாழ்க்கைத் துணைவியாக போயிருப்பின் - மூன்று பெண்ணையும் ஓர் ஆணையும் மக்கட் பெற்றிருக்கும் சாமி குடும்ப வாழ்க்கையிலும் பொது வாழ்க்கையிலும் ஒரு ஈட்டியிருக்க முடியாது. வெற்றிகளை நாட்டியிருக்க முடியாது. நடை பயின்றிருக்க முடியாது. முழுநிறைவான வாழ்க்கையை எய்தியிருக்க ஏதாவதொன்றில் தொய்வு ஏற்பட்டிருக்கும். ஏதாவதொன்றிலிருந்து நேரிட்டிருக்கும். **சாமியின் இரு வெற்றிகளிலும் சம்பூர்ணத்தின் பங்கு** உண்டு.


சாமி இரு துறைகளிலும் வெற்றி பெற்று ஊராரின் உயர்மதிப்புக்கு **தொண்டின் வடிவமாக** இன்றும் திகழுவதற்குச் **சம்பூர்ணத்தின் அறிவுத் திறனும், உழைப்பும்,** எல்லாவற்றிலும் **அளித்த ஒத்துழைப்புமே முதற் காரணமாகும்.** பொதுவாழ்விலும் கணவனுக்குத் துணையாக நின்று சிறப்பீட்டித் தந்திருப்போர் சிலரே. இந்திய நாட்டிலேயே விரல் விட்டு எண்ணக் கூடியவர்களே வாழ்ந்தனர். வாழுகின்றனர் என்றாலும் மிகையில்லை.

சம்பூர்ணம் எதிர்காலத்தில் இங்ஙனம் திகழுவார் என்பதற்குக் கூறுவதுபோல் அமைந்ததே அவர் பயின்ற **உதகமண்டலம் பெத்லஹேம் ஆசிரியைப் பயிற்சித் தலைமையாசிரியை எம். செபஸ்டினா அளித்த** செபஸ்டினா அவர்கள், சம்பூர்ணத்தின் பயிற்சிப் பள்ளிச் சான்றிதழில் குறித்துள்ளார்.

"எந்தப் பொறுப்பையும் நம்பி இவளிடம் ஒப்படைக்கலாம். சமூக வாழ்க்கையில் அனைவரிடமும் மிகவும் ஒத்துப் போகக் கூடியவள். பிள்ளைகளுக்குப் பாடம் கற்பிக்கும் நல்ல திறனும் இவளிடம் உண்டு. (Can be entrusted with responsibility. Is very co-operative in community life. Has teaching capacity.)"

இதுவும் அவர்களாகவே எழுதவில்லை. **ஆசிரியைகள்** **கருத்துக்களைத் திரட்டியே இவ்வாறு எழுதியுள்ளார்கள்.**

சம்பூர்ணத்திற்கும் ஏழை, எளியோர்பால் ஏற்பட்டிருக்கும் அன்பும் அவர்களுக்கு உதவ வேண்டுமென்ற ஆர்வமும் சாமியின் வாழ்க்கைத் அமைந்த பின், கணவரின் செயல்பாடுகளைக் கண்டு பழகியதால் அவர் சிறுபிள்ளையாக இருக்கும்போதே **தனது தங்கையரையும்** பேணிக்காக்க வேண்டிய பொறுப்பினை ஏற்க நேரிட்டது.



வரியவர் பி.ஏ.எஸ். நினைவு மலர்

தான் ஆசிரியப் பயிற்சி பெற்ற பெத்லஹேம் பயிற்சிப் பள்ளியும் கிறித்தவப் பள்ளியும் அப்போதைக்கப்போது நன்கொடைகள் திரட்டி எளியோருக்கும் ஏழைகளுக்கும் உதவி வந்தது. சம்பூர்ணம் விடுமுறையில் ஊர் திரும்பும் போது தன் உடன் பிறந்தோரின் பழைய துணிகளையும் தன் சுற்றத்தார் வீடுகளில் இடைப்பனவற்றையும் மூட்டையாகக் கட்டிச் சுமந்து போவார். இடங்களில் இப்படிப் பழைய துணிகளை மூட்டை கட்டிச் சுமந்து செல்வதில் வழிகளிலேயே கொஞ்சமும் கூச்சப்பட மாட்டார். அவற்றைப் பள்ளியிடம் ஒப்படைத்து மகிழ்வார்.

சம்பூர்ணத்தின் ஒரே ஒரு திறமைமட்டும் யாருக்கும் பயன்படாமற் போயிற்று. அதுவே பிள்ளைகளுக்குப் பாடங் கற்பிக்கும் திறமை. ஆசிரியப் பயிற்சி முடித்து வெளி வந்ததும் அவர் பள்ளி ஆசிரியையாகப் பணியேற்றார். நான்கு நாள்கள் மட்டுமே ஆசிரியப் பணி. திருமணம் உறுதி செய்யப்பட்டதால், ஆசிரியப் பணியிலிருந்து விலக வேண்டியவரானார்.

சாமி எப்பொழுதுமே இயக்கத்தின் தலைவரே தமது குடும்பத் தலைவர் என ஏற்று நடக்கும் இயல்புடையவர். அதனால் அண்ணாவின் தலைமையில் திருமணம் செய்து கொள்ள ஆசைப்பட்டார். பெண் உறுதியானதும் - பெண்ணை உறுதியாக்கிக் கொண்டதும் சென்னை சென்று அண்ணாவைக் கண்டார். தன் விருப்பத்தையும் தெரிவித்தார். அண்ணாவும் எவ்வித மறுப்புமின்றி உடன்பட்டார். திருமணத்திற்கு நாளும் தந்தார்.

அந்த நேரத்தில் சென்னை மாநகராட்சித் தேர்தல் நடந்து முடிந்திருந்தது. முதன் முறையாகக் கழகத் தோழர்களில் கணிசமான எண்ணிக்கையினர் வெற்றி பெற்றிருந்தனர். கொஞ்சம் முயன்றால் கழகத்தவரை மேயராக அமரச் செய்யும் வாய்ப்பு இருந்தது. அண்ணா சென்னையில் இருந்து அப்பணியை மேற்கொள்ள வேண்டியவரானார்.

வேறு வழியின்றி, தம்மால் வர இயலவில்லை என்று ஒரே வரியில் தெரிவித்து விட்டுச் சென்னையில் தங்காமல், சம்பத் அவர்களிடம் தாம் வர இயலாத சூழ்நிலையை விளக்கிக் கடிதம் தந்து, திருமணத்தை நடத்தி வைக்குமாறு சொல்லி அனுப்பி வைத்தார். சம்பத் தலைமையில் சாமி - சம்பூர்ணம் இல்லறம் ஏற்கும் விழா 28-11-1960-இல் பள்ளியிலே நடைபெற்றது. கோவை மாவட்டத் தி.மு.கழக முன்னணியினர், சாமியின் அரசியல் ஆசான் உடுமலை ப.நா. உட்படப் பலரும் வாழ்த்துரை வழங்கித் தமது மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டனர். புளியம்பட்டியையும் அதன் சுற்று வட்டாரத்தையும் சேர்ந்த பொதுமக்கள் பலரும் அக்காட்சியைக் கண்டுகளித்துப் பேருவகை எய்தினர்.

சம்பூர்ணத்தின் பங்கு

செல்வி. சம்பூர்ணம், 28-11-1960-ஆம் நாள் திருமதி. சம்பூர்ணம் ஆனார். அன்றிலிருந்து இன்று வரை சாமியின் வரலாற்றின் ஒவ்வொரு பக்கத்திலும் சம்பூர்ணத்தின் பங்கு இருக்கும். நான் கூட நினைத்துப் பார்ப்பதுண்டு.

மணவிழா நிறைவெய்தியதும் முதன் முதலாகச் சம்பூர்ணம் தன் கணவரிடம் பேசிய முதற்பேச்சு - கேட்ட முதற்கேள்வி, ஏனுங்க நம்மதிருமணத்திற்கு வந்த எல்லாரும் சாப்பிட்டாங்களா? ஒழுங்கா உணவு பரிமாறப்பட்டதா? என்பதாகத்தான் இருக்க வேண்டும்.

"மங்கையராகப் பிறப்பதற்கே - நல்ல
மாதவம் செய்திட வேண்டுமம்மா
பங்கயக் கைநலம் பார்த்தலவோ - இந்தப்
பாரில் அறங்கள் வளருமம்மா"

என்று பாடினார் கவிமணி தேசிய விநாயகம்.

எல்லா அறங்களிலும் தலையாய அறம் பசித்து வருவோர்க்குப் பசி நீங்க உணவளிப்பதே என்கிற நம்பிக்கை நம் நாட்டில் நீண்ட காலமாகவே இருந்து வருகிறது. புரட்சிக் கவிஞரும்,

"பசியென்று வந்தோர்க்கு ஒருபிடி சோறு
புசியென்று தந்து பார் தம்பி"


எனப் பாடினார்.

"அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்
பெற்றான் பொருள்வைப் புழி"

என்பது தமிழ்மறை.

இந்த அரிய உண்மையை - எல்லா அறங்களிலும் தலையாய அறம்-பசித்தோர்க்கு உணவளித்தல் என்னும் உண்மையைச் சம்பூர்ணம் எவரிடமிருந்து எப்படித் தெரிந்து கொண்டாரோ? அவருடைய குடும்பப் பண்போ?

அன்று முதல் இன்று வரை சாமியின் இல்லம் நாடிச் செல்வோர் ... இருந்தாலும் இல்லாவிட்டாலும் வருவோர் கழகத் தோழராயினும் ... கட்சியினராயினும் குறைந்தது தேநீராவது அருந்தாமல் திரும்பியதில்லை; சம்பூர்ணமும் அனுப்பியதில்லை!. ஆகையால் **சாமியின்** இல்லம் செல்வோர் புதியவர்களாக இருப்பினும் எவ்வகைத் தயக்கமும் காட்ட வேண்டியதில்லை. வேண்டுமானால் சம்பூர்ணத்தின் பார்வையிற் படும்வரை தயக்கத்துடன் இருக்கலாம். பார்வையிற் பட்டால் போதும், தமது கனிவான சொற்களால் அந்தத் தயக்கத்தைப் பறந்தோடச் செய்வார். வந்த அலுவல் பற்றி எடுத்துக் கூறலாம்.



[illegible] முன்னேற்றக் கழகத்தைத் தோற்றுவித்து எண்ணற்ற இளைஞர்களின் [illegible] இந்தியத் துணைக் கண்டத்தில் மட்டுமின்றி உலகெங்கும் [illegible] அரசியல் மேதைகள் இருக்கிறார்களோ அவர்களெல்லாம் [illegible] தமிழ் நாடு போற்றும் [illegible] எல்லோருக்கும் காலை எடுத்து வைத்த வெளியூர் [illegible] அனைவருமே சம்பூர்ணத்தின் [illegible] - உபசரிப்பை [illegible] அவரே சமைத்த அல்லது அவருடைய [illegible] உணவை உண்டு களைக்காதவர் எவருமே இருக்க மாட்டார்.

[illegible] கொண்டே சாமியின் அரசியல் ஆசான் [illegible] சம்பூர்ணம் சாமியின் வீட்டில் காலடி எடுத்து வைத்ததும் அடுக்களை [illegible] அடுப்பு சம்பூர்ணம் வந்த பிறகு ஆறுபதில் 300 ஆண்டுகட்டு [illegible] அடுப்பாக எரிந்த வண்ணம் போலவும், [illegible] அடுப்பு இன்றும் வந்தோர்க்கெல்லாம் உணவிடுதல் போலவும் [illegible] என்று குறிப்பிட்டார்கள். இந்த உண்மை வெளியூரிலிருந்து சென்றோர் [illegible] காணும் வாய்ப்பினைப் பெற்றிருக்க மாட்டார்கள். உள்ளூரில் [illegible] அனைவருமே நன்கு அறிவர்.

[illegible] பகல் பதினோரு மணி, பன்னிரண்டு மணிக்கு வருவார். வாசலில் காரை [illegible] சம்பூர்ணம் மத்தியானம் ஒரு போல் சாப்பாட்டிற்கு வருவார்கள் [illegible] புறப்பட்டுப் போய் விடுவார். பிற்பகல் ஒன்றரை அல்லது இரண்டு மணிக்கு [illegible] வருவார் சாமி. அனைவருக்கும் உணவு தயாராக இருக்கும். [illegible] வீட்டிற்கு விருந்துண்ண வருவோர் பெரும்பாலோர் புலால் உணவு [illegible] இதுகூடப் பரவாயில்லை!

[illegible] பணியாகவோ வேறு அலுவலாகவோ வெளியூர் - கோபி வட்டத்தில் [illegible] பகுதிக்குச் சென்றிருப்பார். அங்கிருந்து ஒருவர் வருவார். பத்துப் பேருக்கு [illegible] சாப்பாடு செய்து வைக்கச் சொன்னார், என்ற செய்தியைத் [illegible] விட்டுப் போவார். நேரத்தைக் கூடக் குறிப்பிட்டுச் சொல்லமாட்டார் [illegible] சம்பூர்ணம் தகவல் வந்த நேரத்தையொட்டி உணவு வேலையைக் [illegible] கொள்வார். சில சமயங்களில் அவருடைய கணிப்பும் தவறாகப் [illegible] திடீரென சாமி விருந்தினருடன் வருவார். சமையல் ஆயிற்றா? என்று [illegible] நேரே வீட்டிற்குள் நுழைவார். எப்படியிருக்கும் சம்பூர்ணத்திற்கு? [illegible] அவர் சமாளிப்பார். தாம் இன்ன நேரத்திற்கு வருவோம் என்பதைச் [illegible] சாமி, வந்தவுடன் இலை போடவில்லையே என்று மட்டும் [illegible]. இவ்வளவையும் சமாளித்துப் பழகிக் கொண்டிருக்கிறார் சம்பூர்ணம்.

[illegible] - விருந்தினர் பேணுவதில் மட்டுமா அவர் கைதேர்ந்தவர்? சாமியின் [illegible] அந்தப் [illegible] - பனிக்கட்டை ஒன்றில் மட்டுமே அன்னை வெள்ளையங்கிரி

பொறுமையோடு ஏற்றுக்கொள்வதால் சம்பூர்ணத்தின் பங்கு கொஞ்சம் ... எல்லாவற்றிலுமே சம்பூர்ணத்தின் பங்கு உண்டு.


சாமி தேர்தலில் போட்டியிட்ட காலங்களில் அவர் வீட்டையும், ... கொள்வார். தேர்தல் பணிகளிலும் தன்னுடைய பங்கைச் செலுத்துவார் ... மட்டுமன்று தொகுதி முழுவதும் செல்வார். கொடியேற்றல், சொற்பொழி... ஆகியவற்றிலும் பங்கேற்பார். **1962-ஆம் ஆண்டில் சாமி சட்டமன்றத் தே...** நின்றபோது சம்பூர்ணமும் கணவனுக்காகத் தேர்தல் பணியிலே ஈடுபட்டார் ... புறங்களிலோ கழகத்திற்கு எந்தெந்த வகையிலெல்லாம் எதிர்ப்புக் காட்ட... அந்தந்த வகையிலெல்லாம் **அன்றைக்கிருந்த காங்கிரசார் எதிர்ப்புத் தெரிவித்தன...**

அந்த எதிர்ப்புக்கிடையேயும் சம்பூர்ணம் தேர்தல் பணியாற்றப் பல ... சென்றார். கடத்தூரில் கொடியேற்றும் நிகழ்ச்சி. **கொடியேற்றுபவர் சம்பூர்ண...** கொடியேற்றுவதற்காக அங்குச் சென்றார். எதிர்க் கட்சிக்காரரின் ... சம்பூர்ணம் கொடிக் கம்பத்தை நெருங்க முடியாதவாறு **சரமாரியாகக் கற்களை ...** தொடங்கினர். **திருமணமாகி மூன்றாண்டுகளும் நிரம்பப் பெறாத** அவர், ... இளம் வயதிலேயே கல்லெறிவதைக் கண்டு சற்றும் அஞ்சாது, ... கொடிக்கம்பத்தை நெருங்கினார். அப்பொழுது வீசப்பட்ட கல்... சம்பூர்ணத்தின் நெற்றியைப் பதம் பார்த்தது. நெற்றியிலிருந்து குருதி சொ... சொட்டக் கழகக் கொடியை ஏற்றிய பிறகே அவர் அங்கிருந்து திரும்பினார்.

பொது வாழ்வில் ஈடுபட்டிருக்கும் சிலருடைய குடும்பத்திற்கும் அவர்கள் ... பெற்றிருக்கும் இயக்கத்திற்கும் கொஞ்சமும் தொடர்பிருக்காது. இவர்கள் ... தொழிலுக்காக வெளியே போய்விட்டு வருவதுபோல வீட்டிற்குச் செ... இயக்கத்தினர் அவர்களைக் காண வீட்டிற்குச் சென்றால் முதலில் வர... கிடைக்காது. வாருங்கள் என்ன வேண்டும்? என்று கேட்கவும் அவர்கள் வீ... பெண்களுக்கு மனம் வராது. வாசலில் காத்திருந்துவிட்டுத் திரும்ப நேரிடும். த... தவறி அவர்களிடம் விசாரிக்க வாய்ப்புக் கிட்டினாலும் தெரியாது என்ற ஒரு சொ... மட்டுமே உதிர்ப்பார்கள். அடுத்த கேள்வி பிறப்பதற்குள் அவர்களின் ... மறைந்துவிடும். இவ்வளவுக்கும் குடும்பத் தலைவர் ஈடுபட்டிருக்கும் ... இயக்கத்தாலேயே அவரும் வாழ்வு பெற்றிருப்பார். குடும்பத்ினரும் ... வாழ்வை எய்தியிருப்பர்.

அவ்வை, அதியன்மீது பாடியுள்ள பாடல்களில் ஒன்று. அதில் இடம்பெற்... வரிகள் இவை.

"ஒருநாள் செல்லலாம் இருநாள் செல்லலாம்
பலநாள் பயின்று பலரொடு செல்லினும்
தலைநாள் போன்ற விருப்பினன் மாதோ"



அறிவனைக் காண நாங்கள் ஒருநாள் மட்டும் செல்லவில்லை. இருநாள்கள் ...இல்லை. பல நாள்கள் சென்றோம். அவனுடைய அரண்மனையில் தங்கி ...பழகினோம். அதுவும் தனியாகவன்று. பலருடன் சென்று பல நாள்கள் ...பழகினோம். அங்ஙனமிருந்தும் நாங்கள் செல்லும் ஒவ்வொரு முறையும் முதன் ...சென்ற பொழுது எங்ஙனம் விருப்பத்துடன் வரவேற்றானோ அங்ஙனமே ...றான் என்பது இதன் பொருள்.

...இல்லங்களுக்குச் செல்லும் பொழுதெல்லாம் எனக்கு இந்தப் பாடலின் ...நெஞ்சில் எழும். ஒன்று சாமியின் இல்லம்.

இன்னொன்று தருமபுரி கலைக்கல்லூரியில் தமிழ்த் துறைத் தலைவராக இருந்து ...பெற்றுள்ள பேராசிரியர் பே.சு. கோவிந்தராசனின் இல்லம்.

சாமியின் வீட்டுக் கதவுகள் நள்ளிரவு பன்னிரண்டு மணியிலிருந்து விடியற்காலை ...ந்து மணி வரைதான் மூடியிருக்கும். அவர் இல்லாத வேளையில் எவர் சென்றாலும் - ...பவர் காரில் வந்தவரானாலும் கால்நடையாக வந்தவரானாலும், சாமியோ ...ம்பூர்ணமோ அங்கு இல்லாவிடில் வீட்டிலிருப்போர் அக்கா என்ற குரலுடன் உள்ளே ...வார். அடுத்த சில நொடிகளில் சம்பூர்ணம், கைகூப்பிய வண்ணமே வாங்க என்ற ...ழைப்புடன் வெளியே வருவார். வரவேற்று இருக்கச் செய்வார்.

அண்ணனைப் பார்க்க வேண்டும் அல்லது எம்.பி.யைப் பார்க்க வேண்டும் என்று ...சொன்னாலே போதும், சாமி எங்கு எதற்காகப் போயிருக்கிறார். எப்பொழுது இல்லம் ...திரும்புவார் என்னும் தகவல்கள் அனைத்தும் கிடைக்கும். அத்துடன் இந்த நேரம் ...வந்தால் பார்க்கலாம் என்பதுடன் அவரிடம் தாம் சொல்ல வேண்டிய தகவல்களையும் ...கேட்டுக் கொள்வார். அங்ஙனமே கேட்பதும் வந்தவரைத் திருப்திப்படுத்தி ...அனுப்புவதிலும் வல்லவர். சாமி வந்தவுடன், முதல் வேலையாக இன்னார் வந்திருந்தார் ...இன்ன வேலையாக வந்திருந்தார், இன்ன நாளில் இந்த நேரத்தில் வரச் ...சொல்லியுள்ளேன் எனவும் கூறுவார். மறுபடியும் அவர் வந்தால் அவருக்குச் சொல்ல ...வேண்டிய தகவல்களையும் கேட்டு வைத்துக் கொள்வார். கடிதமோ வேறு குறிப்போ ...கொடுத்துச் சென்றிருந்தால் மறக்காமல் சாமியிடம் தருவார்.

குடும்ப நிர்வாகத்தைச் சம்பூர்ணத்திடம் ஒப்படைத்ததுடன் நின்றாரா சாமி. ...அவரையும் தேர்தல்களிலும் நிற்க வைத்தார். ஊராட்சி மன்றத் தேர்தலில் சம்பூர்ணம் ...போட்டியிட்டபோது அவர் நிறைமாத கர்ப்பிணி. தேர்தல் பிரசாரம் முடிந்த அன்று ...தேர்தலுக்கு முந்திய நாள் இரவு குழந்தையைப் பெற்றெடுத்தார். அப்படியானால் ...எத்தகைய உடல்நிலையுடன் சம்பூர்ணம் தேர்தல் பணிகளில் ஈடுபட்டிருக்க ...வேண்டும்? சம்பூர்ணம் சட்டமன்றத் தேர்தலிலும் போட்டியிட்டார். மிகக் குறைந்த ...வாக்குகளிலேயே வெற்றி வாய்ப்பினை இழந்தார்.

சிலர் நினைக்கலாம்.

சம்பூர்ணத்திற்கென்ன? கணவன் ஊராட்சி மன்றத் தலைவராக இரு... தி.மு.கழக மாவட்டச் செயலாளராகப் பொறுப்பேற்றிருந்தார். இரு... நாடாளுமன்ற உறுப்பினராக வீற்றிருந்தார். அவருடைய மனைவி இப்படிச் செய... நடந்து கொள்ளுவதிலே - செயலாற்றுவதிலே என்ன வியப்பு? இவ்வாறெ... நடந்து கொள்வது ஒருவகையில் பூரிப்புத்தானே.

இதே சாமி ஓராண்டுக் காலம் மிசாக் கைதியாகக் கோவை மத்திய சிறை... அடைக்கப்பட்டிருந்தார். அவருடைய கடையும், வீடும் பலமுறை வருமான வரி... துறையினராலும் காவல் துறையினராலும் சோதனை இடப்பட்டன. நெருக்கடி நிலை... பிரகடனப் படுத்தப்பட்டிருந்த காலத்தில் தமிழகக் காவல்துறையின... தி.மு.கழகத்தினரிடம் எப்படியெல்லாம் நடந்து கொண்டனர் என்பது நமக்கெல்... தெரியும். சம்பூர்ணத்திடம் மட்டும் தாராள மனப்பான்மையுடன் நடந்திருப்பார்க...

நெருக்கடி நிலைமை திரும்பப் பெற்றபின் நடந்த மாவட்டச் செயல... தேர்தலில் கழகத் தலைமையே சாமியின் வெற்றி வாய்ப்பைச் சிதைக்கும் வகையில்... ஜனநாயக விரோதச் செயல்களில் இறங்கியது. அதனால் சாமியும் அவ... அணியினரும் போட்டியிலிருந்து விலகிக் கொண்டனர்.

அடுத்து நடைபெற்ற பொதுத் தேர்தலில், முதலில் சாமி நாடாளுமன்ற... தொகுதியில் போட்டியிடுவார் என அறிவித்த தி.மு.கழகத் தலைமை, அவர் தேர்... பணிகளில் ஈடுபட்டுப் பெருந்தொகை செலவு செய்த நிலையில் கூட்டணிக்கு அ... தொகுதியை விட்டுக் கொடுக்குமாறு பணித்தது. செலவழித்த தொகை... தி.மு.கழகத் தலைவர்களிடம் கேட்க முடியுமா? அல்லது கூட்டணி வேட்பாளர்... கணக்கைக் காட்டித் திருப்பித் தருமாறு கேட்க முடியுமா?

அதன் பின்னரும் சட்டமன்றத் தேர்தலில் கழகத்தின் கட்டளைக்கிண... போட்டியிட்டார். வெற்றி பெற வாய்ப்பிருந்தும் சில வேண்டாத சக்திகள் காலை... விட்டதால் தோல்வியைச் சந்திக்க நேர்ந்தது.

தேர்தலில், மக்களிடையே செல்வாக்குப் பெற்றுள்ள கட்சியின் வேட்பாளரா... போட்டியிடுவோரில் பலர், தேர்தலின் முடிவு எதுவாயினும் கையில் கணிச... தொகையை வைத்திருப்பர். சிலருக்குப் பதவியும் பணமும் கிட்டும். வேறு சிலருக்... பணம் மட்டுமே மிஞ்சும்.

ஆனால் சாமி தேர்தலில் போட்டியிட்டால் எப்படிக் காசு கரையும் என்ப... தேர்தல் காலத்தில் அவருடன் நான்கு நாள்கள் இருந்தாலே தெரிந்துவிடும். இத்த... கட்டங்களில் சாமியின் குடும்பம் பெரும் பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாகி... ஆகையால் தந்தையார் தேடி வைத்துச் சென்ற நிலபுலன்கள் சிலவற்றை வி... அதிலிருந்து மீள வேண்டியதாயிற்று.

இத்தனையும் சம்பூர்ணத்திற்குத் தெரியும். அப்படியிருந்தும் இன்று வரை ...டமும் சலிப்பை வெளிப்படுத்தியதில்லை. தம் இல்லம் நாடி வருவோரை ...ப்பதில், இனிய சொற்களால் உரையாடுவதில் எள்ளளவும் மாறவில்லை! ...னைத் தேடி வருவோர் கொஞ்சமேனும் மனம் நோகுமாறு நடந்து ...வதில்லை.

இவை எதைக் காட்டுகின்றன? சம்பூர்ணமும் எந்த அளவு பண்பாடு மிக்கவர் ...ாடு பொதுவாழ்வில் பக்குவமும் பெற்றுள்ளார் என்பதைக் காட்டுகிறதன்றோ?

இப்படிச் சாமியின் பொது வாழ்வுக்குத் தோள் கொடுத்து நிற்கும் அவர், தமது ...த்துக் கடமைகளிலிருந்தும் வழுவவில்லை. மூன்று பெண்களையும் ஒரு ...னையும் வளர்த்து ஆளாக்குவதிலும் எந்தக் குறையும் வைக்கவில்லை. முதல் பெண் ...ணியை மருத்துவர் ஆக்கினார். மற்ற இருவரையும் குடும்பப் பாங்குமிக்கோராக ...த்தார். அவர்கள் சென்ற இடங்களிலும் தங்கள் பெற்றோரின் பெரும் பண்பகளை ...நாட்டுவோராகத் திகழுகின்றனர். மகன் அன்பு எம்.பி.ஏ. வரை படித்துள்ளார்.

...மல்லே கவுண்டரின் பெருமுயற்சியால் விளக்கேற்ற வந்த சம்பூர்ணம், அந்த ...லத்தைத் தசராவின்போது ஒளி வீசித்திகழும் மைசூர் அரண்மனையாகவே ...ற்றியுள்ளார். புகுந்த வீடுசிறக்க மட்டுமே பணிபுரிந்தாரா? பிறந்த வீட்டை ...ந்தாரா?

உடன்பிறந்தாரை உருவாக்கும் கடமையையும் செவ்வனே நிறைவேற்றினார். ...கைபரையும் தம்பியையும் எந்த அளவுக்கு முன்னேற்றினார் என்பதற்கு டாக்டர் ...யாணி இராமசாமியே சிறந்த எடுத்துக்காட்டு.

...கனகராணியை மருத்துவராக்கினார். திரு. டி.ஆர். இராமசாமியின் வாழ்க்கைத் ...ணைவருமாக்கினார். தங்கை இப்போது எம்.டி. பட்டம் பெற்றவர். தங்கையின் ...வர் ஐ.ஏ.எஸ். அதிகாரி. மற்ற தங்கையராகிய இராசாத்தி, விஜயலட்சுமி ...ஆகியோரும் தம்பி சந்திரனும் எவ்விதக் குறையுமின்றி வாழ்க்கையில் செழுமையுடன் ...வாழ்கின்றனர். சம்பூர்ணத்தின் ஒத்துழைப்பு அவர்களுக்குக் கிட்டியது.

இவையனைத்திற்கும் மேலாக நெருக்கடி நிலைக் காலத்தில் சம்பூர்ணம் ஆற்றிய ...ணிகள் அளவிட்டுக் கூற முடியாதன. அவரே மாவட்டத் தி.மு.கழகச் ...செயலாளராகிய தம்கணவர் மிசாக் கைதியாக இருந்தபொழுது மாவட்டச் ...செயலரினும் ஒருபடி மேலாகவே உழைத்தார். மாவட்டக் கழகத்தையே காத்து ...வந்தார்.

காலம் நேர்வழி செல்ல உதவும் கருவிபோல
சமுதாயம் ஒழுங்காக இருந்துவரத்
துணையாக நிற்பது சட்டம். -அண்ணா

கோபி - முத்துவேலப்ப கவுண்டருடன் மோதல்

1967-ஆம் ஆண்டிற்கு முந்தைய இந்தியா முழுவதையும் அரசிய கண்ணோட்டமுடன் நோக்கினால் காங்கிரசுப் பேரியக்கம் ஒன்றுதான் துணைக்கண்டம் முழுவதிலும் பதவியிலிருந்த இயக்கம். அதுவே செல்வாக்கு மிகுந்த இயக்கமாக இருந்ததெனவும் கூறலாம்.

பொதுவுடைமைக்கட்சிகள், சோசியலிஸ்ட், பிரஜா - சோசலியஸ்ட், பிற்காலத்தில் தோற்றுவிக்கப்பட்ட சுதந்தராக் கட்சி போன்றனவும் அனைத்திந்தியக் கட்சிகளே எனினும் இவை நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் மக்களிடையே பரவலான செல்வாக்குப் பெற்றிருக்கவில்லை. ஒவ்வொரு இயக்கமும் சிற்சில பகுதிகளில் மட்டுமே மக்களின் ஆதரவுக்குரியனவாக இயங்கிவந்தன. பெரிய நகரங்களில் வாழ்வோர்க்கு எல்லாக் கட்சிகளும் அறிமுகமாகியிருந்தன.

இதனால் நெடுங்காலமாகக் **காங்கிரசுப் பேரியக்கம்** ஒன்று மட்டுமே இந்தியாவை ஆளும் கட்சியாக இருந்து வந்தது. பெரும்பாலான மாநில அரசுகளையும் அது கைப்பற்றியிருந்தது. ஓரிரு மாநிலங்களில் மட்டும் பிற அனைத்திந்தியக் கட்சிகள் ஆட்சிப் பொறுப்பினை ஏற்கும் அளவுக்கு மக்களின் ஆதரவைப் பெற்றிருந்தன.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை...

'தமிழ்நாடு' என்னும் தொடர் பேச்சிலும் எழுத்திலுமே வழக்கில் இருந்து வந்தது. அரசியல் கட்சிகள் 'தமிழ்நாடு காங்கிரசு', 'தமிழ்நாடு பொதுவுடைமைக் கட்சி' 'தமிழ்நாடு பிரஜா - சோஷியலிஸ்ட் கட்சி' என்றெல்லாம் பெயர் வைத்துக் கொண்டு செயலாற்றிவந்த போதிலும் அரசியல் அடிப்படையில் **'சென்னை மாநிலம்'** என்றே அழைக்கப்பட்டு வந்தது. அதுவே சட்டபூர்வமான பெயர்.


மாநிலக் கட்சிகள் என வழங்கப்பட்ட அந்தந் ந மாநிலங்களின் உரிமைகள் நலன்கள் முதலியவற்றைப் பாதுகாக்கும் நோக்குடன் தோற்றுவிக்கப்பட்டு மக்களிடையே செல்வாக்குப் பெற்றுவந்த இயக்கங்களில் மிகக் குறுகிய காலத்தில் மக்களின் ஆதரவைப் பெற்று ஆட்சியைக் கைப்பற்றிய ஒரே இயக்கம் **திராவிட முன்னேற்றக் கழகம்தான். 1938-ஆம் ஆண்டு** முதல் ஆளும் கட்சியாகவே தனக்கு நிகர் **எவருமில்லை என மார்தட்டி நின்ற காங்கிரசு இயக்கம், 1967-ஆம் ஆண்டு** நடைபெற்ற **பொதுத் தேர்தலில்** பெருந்தோல்வியைச் சந்தித்தது. காங்கிரசுத் தலைவர்கள் மட்டுமல்லாது **இந்திய அரசியல்வாதிகள் எவருமே எதிர்பார்க்காத தோல்வி அது.**

அத்தகைய தோல்வியைத் தழுவ வைத்த இயக்கம் எது?

திராவிட முன்னேற்றக் கழகம்தான்.

அதற்காக அந்த இயக்கம் தந்த விலை?

"வீழ்ச்சியுறு தமிழகத்தில் எழுச்சி வேண்டும்
விசையொடிந்த தேகத்தில் வலிமைவேண்டும்



...வஞ்சகத்தைப் பொறாமைதன்னைத்
...தோகையாக எதிர்நிறுத்தித் தூள்தூளாக்கும்
...மறச்செயல்கள் மிகவும் வேண்டும்
...போலச் செந்தமிழைப் பெருக்கவேண்டும்"

என முழங்கினார் புரட்சிக் கவிஞர்.

...எழுச்சிமிக்க பாடல்கள் பிறப்பதற்குக் காரணமானவர் தந்தை ...அவர்களே. அவர்கள்தான் வீழ்ச்சியுற்றுக் கிடந்த திராவிடர் சமுதாயத்தில் ...விசையொடிந்து கிடந்த அவர்களுடைய உடலங்களில் வன்மையை ...கொள்கைகளைத் தந்து, தமது தளராத தொண்டினாலும் ...ஏற்றுத் துணை நின்று உழைத்தோரின் ஒத்துழைப்பினாலும் ...விழிப்புணர்ச்சியைத் தோற்றுவித்தார். அவர்தம் தொண்டுகளுக்கும் ...வெற்றிக்கும் துணையாக நின்றோருள் முதல்வராகத் திகழ்ந்தவர் ...அண்ணா. பெரியாரிடம் கொண்ட சில கருத்து வேறுபாடுகளின் ...தனியே ஒதுங்கித் திராவிட முன்னேற்றக் கழகம் என்னும் அமைப்பினை ...கினார்.

பெரியாரின் தன்னலமற்ற பணிகளால் பண்படுத்தப்பட்ட நிலத்தில் திராவிட ...ற்றக் கழகம் எனும் நாற்று மிக விரைவில் செழித்துக் கிளைத்து வளர்ந்ததில் ...புதுமில்லை. ஆனால் இந்த வளர்ச்சி எளிதாக ஏற்பட்டுவிடவில்லை. ...எப்போ அல்லல்கள், தொல்லைகள், அடக்கு முறைகள், இழப்புக்கள் ...வற்றைச் சந்தித்த பின்னரே ஏற்பட்டது.

தி.மு.கழகம் பிறக்கும் பொழுதே திராவிட நாட்டுப் பிரிவினையைத் தனது ...டைக் கொள்கையாகக் கொண்டதுதான். விடுதலை இயக்கமாக வளரவே உறுதி ...ருந்தது. விடுதலை இயக்கங்கள் எல்லாமே இறுதிவரை விடுதலை ...க்கங்களாகவே - விடுதலைப் போராட்டங்களில் மட்டுமே ஈடுபட்டிருப்பதில்லை. ...அரசியல் இயக்கங்களாகவும் மாறுவதுண்டு; நாட்டில் நடைபெறும் தேர்தல்களில் ...பெறுவதுமுண்டு. தி.மு.கழகமும் 1956-இல் திருச்சியில் கூடிய மாநில ...ட்டில் கழகத் தோழர்களின் தீர்ப்புக்கு இணங்கத் தன்னை அரசியல் இயக்கமாக ...க் கொண்டது; தேர்தலில் போட்டியிடவும் தயாராயிற்று.

இந்தியாவில் அரசியல் என்பது 'கொள்கைக்கு கொள்கை, கருத்துக்குக் கருத்து ... என்பதைவிட மாற்றுக் கட்சியை வளரவிடாமற் தடுப்பதுவே' என்கிற ...பாங்கு நெடுங்காலத்திற்கு முன்பே பழக்கத்தில் வந்துவிட்ட ஒன்று. மாற்றுக்கட்சி ...லே மாற்றான் கட்சி, எதிர்க்கட்சி என்றாலே எதிரிக்கட்சி; அதை வளர விடுவது ...களை அழித்துக் கொள்வதற்குச் சமம் என்ற எண்ணத்தை வளர்த்துக் ...டிருந்தனர். ஆட்சியிலிருப்போருக்கு அரணாக அமைந்தோர் - ஆளுங்கட்சியின்

காவலர்களெனத் தங்களைக் கருதிக்கொண்டிருப்போர், தலைவர்களால் எண்ணுவதற்கு ஆக்கப்பட்டோர் மறைமுகமாகவும் சில சமயங்களில் வெளிப்படையாகவும் தங்கள் கைவரிசையைக் காட்டி வந்தனர். தங்கள் ஊரில் கட்சியின் கொடி பறப்பதே தங்களுக்கு விடப்பட்ட சவால் எனக் கருதும் நிலைக்கு அந்தக் காவலர்கள் ஆளாயினர்.

தி.மு.கழகம் பிறந்த காலத்தில் திராவிடர் கழகம் உடைந்துவிட்டது; இனி தி.க., தி.மு.க. ஆகிய இரண்டுமே அழிந்துவிடும் எனக் கழக எதிரிகள் மனப்பால் குடிந்தனர். ஆனால் பெரியார் தலைமையில் திராவிடர் கழகம் தனது பணிகளை தொய்வின்றி ஆற்றி வந்தது. பிரிந்து - பிறந்த திராவிட முன்னேற்றக் கழகம் அண்ணாவின் தலைமையில் வளர்ந்து செழிக்கலாயிற்று. எதிரிகளின் எண்ணத்தை அறிந்த அண்ணா அவர்கள், அவர்களுக்கு உணர்த்தும் வகையில் திராவிடர் கழகமும் திராவிட முன்னேற்றக் கழகமும் 'இரட்டைக் குழல் துப்பாக்கிகள்' என அறிவித்தார்கள்.

திராவிட முன்னேற்றக் கழகம் ஆங்காங்குள்ள படித்த இளைஞர்களின் ஆதரவைப் பெற்று மெதுவாக வளர்ச்சிப் படிகளில் காலடி எடுத்து வைத்து போட்டிருக்குமானால் எதிரிகளின் கண்களையும் கருத்துக்களையும் உறுத்தியிருக்காது. அது நாடு முழுவதும் பரவலாகப் படித்த இளைஞர்களிடையே மாணவர்களிடையே செல்வாக்குப் பெற்று, நாளும் வளர்ந்தது. ஊர்தோறும் மலர்ந்தன. ஒரு நாளைக்குத் தமிழ்நாட்டில் அய்ம்பது அறுபதுக்கு மேற்பட்ட கூட்டங்கள். அதுவரை ஊர்ப் பஞ்சாயத்துக் கூடும்போதும் ஊர்த் திருவிழாவின் போதும் மட்டும் மக்கள் கூடி வந்த பட்டிதொட்டிகளிலெல்லாம் கழகக் கூட்டங்கள் எங்கும் கழகக் கொடிகள் பட்டொளி வீசிப் பறந்தன.

அடுத்தடுத்துச் சிறப்புக் கூட்டங்கள்; மாநாடுகள். தமிழ்நாடே இளைஞர்கள் எழுச்சியின் இருப்பிடமாக மாறியது. தி.க.வும், தி.மு.க.வும் ஒரே இயக்கமாக இருந்த காலத்தில் அது தேர்தலைப் பற்றிக் கவலைப்படவில்லை. தன்னுடைய சுயமரியாதைப் பிரச்சாரத்தை - அறிவுப் பிரச்சாரத்தையே மேற்கொண்டிருந்தது. ஆட்சியிலிருப்போர் தமிழருக்கும் தமிழ் மொழிக்கும் கேடுதரும் நடவடிக்கைகளில் இறங்கும் போதெல்லாம் கண்டிக்கவும், போராடவும் தயாராக இருந்து வந்தது. ஆட்சிச் சுகத்தை அனுபவித்துப் பழகிய காங்கிரசார், கழகத்தைப் பற்றி அவ்வளவாகக் கவலைப்படவில்லை. கழகத்தால் தங்களுக்குக் கேடு வாராது என்ற நம்பிக்கையால், திராவிடர் கழகமாக இருந்த போதும் சரி, தி.மு.கழகம் பிறந்த பிறகும் சரி கழகத் தோழர்கள் சிலர் ஊராட்சி நகராட்சி மன்றத் தேர்தல்களில் சுயேட்சையாகப் போட்டியிட்டனர். அங்கொருவர் இங்கொருவர் என வெற்றி பெற்றிருந்தனர். இதுவும் காங்கிரசுக்குப் பெரிய பாதிப்பு எதனையும் ஏற்படுத்தவில்லை.

... அரசியல் இயக்கமாக மாறியதும் அதன் தொண்டர்களின் ... சமூக வளர்ச்சிக்காக மேற்கொண்ட நடவடிக்கைகளும் காங்கிரசாரை ... மற்ற அனைத்திந்திய அரசியல் கட்சிக்காரர்களையும் கழகத்தின் பக்கம் ... திருப்பவைத்தன. தங்களின் வழக்கமான கைவரிசைகளைக் காட்ட ...னர்.

... சாதிச் செல்வாக்கு மிக்க காங்கிரசார் - ஊராரின் மீது ஆதிக்கம் செலுத்திக் ...ர், கழகத்தை வளர விடுவது தங்களின் பொது வாழ்வுக்கே பெரும்பள்ளம் ... சொல்வதாக முடியும், என்ற முடிவுக்கு வந்தனர். தங்களின் எல்லா ... செல்வாக்குகளையும் வலிமைகளையும் கழகத்தின் மீது கட்டவிழ்த்து ...ர், எந்தக் கொடி பறந்தாலும் பறக்கட்டும் கழகக் கொடி மட்டும் பறக்கக் ... வர் வேண்டுமாயினும் தங்கள் ஆதிக்க எல்லைக்குள் இருக்கலாம்; கழகத்தவர் ... நடமாடவே கூடாது; கூலிவேலை செய்தும் அரை வயிற்றுக் கஞ்சியும் குடிக்க ...கூடாது என்பனவற்றில் முழுக் கவனத்தையும் செலுத்துவதைத் தங்கள் ... கடமையாகவே கொண்டனர். இந்த மனப்பாங்கு "கெடுவான் கேடு ...ப்பான்" என்பதையே காட்டுகிறது.

... அரசினரின் அடக்குமுறைகள், தடியடி, துப்பாக்கிச் சூடு, சிறைச்சாலை ...வற்றைச் சந்திப்பதுடன் ஆட்சிக்குத் துணை நிற்கும் இவர்களின் எதிர்ப்புகளுக்கும் ...வர் ஈடுகொடுக்க வேண்டியவர்களாயினர்; எண்ணற்ற தியாகங்களையும் ... நேர்ந்தது. இத்தகைய கைங்கரியத்தில் ஆங்காங்குச் சில பெரிய மனிதர்கள் ...டுபட்டிருந்தனர்.

...பட்டுக்கோட்டை வட்டாரத்தில் நாடிமுத்துப்பிள்ளை. மதுரைப் பகுதியில் ...வைத்தியநாதன். தேனிப் பகுதியில் தியாகராசன் போன்றோர் அந்தக் கைங்கர்யத்தில் ...டுபட்டிருந்தோருள் சிலராவர். அந்தப் பட்டியலில் இடம் பெற்ற இன்னொருவர், ...க முத்துவேலப்ப கவுண்டர், கோபி வட்டாரத்தைத் தமது ஆதிக்க புரியாக ...வைத்திருந்தார்.

ஒரு சமயம் ஏனோ அவருக்குக் காங்கிரசு பிடிக்கவில்லை. அந்த வேளையில் ...ல் நகராட்சித் தேர்தல். தேர்தலைச் சந்திக்கத் தாமே ஒரு சுயேட்சையான ...மைப்பை உருவாக்கினார். காங்கிரசுக்கு எதிராக வேட்பாளர்களைத் ...ர்ந்தெடுத்தார். அவர்களை வேட்பு மனுத் தாக்கல் செய்ய வைத்தார். இருபது ...றுப்பினர்களைக் கொண்ட கோபி நகராட்சியின் எட்டு உறுப்பினர்கள் ...போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டனர்; இவர்கள் எல்லாரும் முத்துவேலப்பரின் ...வேட்பாளர்கள். மீதமுள்ள பன்னிரண்டு வட்டங்களுக்கான தேர்தல். அதில் வெற்றி ...பெற்ற அனைவருமே முத்துவேலப்பரின் ஆட்களே. ஆக, இருபது வட்டங்களிலும் ...காங்கிரசு தோற்றது. முத்துவேலப்ப கவுண்டரின் ஆட்கள் வென்றனர். இது ...முத்துவேலப்ப கவுண்டர் கோபியில் பெற்றிருந்த செல்வாக்கிற்கு ஒரு சிறு ...எடுத்துக்காட்டு.

முத்துவேலப்பரின் செல்வாக்கை உணர்ந்தவர்தான் சாமி. ஆனாலும் இப்பொழுது அவர் புன்செய்ப் புளியம்பட்டிப் பேரூராட்சி மன்றத்தின் தலைவர் மட்டுமல்ல. கோபி வட்ட தி.மு.க.கழகச் செயலாளர். அதனால் கோபி வட்டத்தில் நடக்கும் எல்லாவற்றிலும் பங்கேற்க வேண்டிய கடமையை உடையவராக இருந்தார்.

அடுத்த முறை அதே கோபி நகராட்சிக்குத் தேர்தல். இப்போது முத்துவேலப்ப கவுண்டர் காங்கிரசுக்காரர்.

வழக்கம்போலத் தமது ஆட்களை அழைத்து, 'நீ இந்த வட்டத்து உறுப்பினன், அந்த வட்டத்து உறுப்பினன்' எனப் பட்டங்கட்டி வைத்திருந்தார். தாம் நிறுத்தும் வேட்பாளர் வெற்றி பெற்றே தீருவர் என்ற உறுதியில் அங்ஙனம் உறுப்பினர் பட்டம் சூட்டினார்.

'புன்செய்ப் புளியம்பட்டியைச் சேர்ந்த யாரோ சாமிநாதனாம், கோபி வட்ட தி.மு.கழகச் செயலாளனாம், கோபியில் தி.மு.கழகத்தினரைப் போட்டியிடச் செய்யும் முயற்சியில் ஈடுபட்டுள்ளானாம்.' இப்படியொரு செய்தி அவருடைய செவியில் வந்து விழுந்தது. கேட்ட அவர் மெல்லச் சிரித்தார். 'பையனுக்கு ஆசை தன் கட்சிக்காரர்களை நிறுத்திப் பார்க்க. அந்த ஆசையைக் கெடுப்பானேன். நிறுத்திப் பார்க்கட்டும்' இவ்வாறு தம் ஆட்களிடம் கூறினார்.

ஆனால் அடுத்த சில நாள்களிலேயே மனத்திற்குக் காரமூட்டும் செய்தியொன்றைக் கொணர்ந்தனர் அவரது ஆட்கள்.

'கோபி நகராட்சி மன்றத் தேர்தலில் தி.மு.கழகம் இருபது வட்டங்களிலும் வேட்பாளர்களை நிறுத்த முடிவு செய்துள்ளது. முத்துவேலப்ப கவுண்டரை எதிர்த்து **'முரசொலி'த் தம்பி** என்ற எந்த வசதியுமற்ற கழகத் தொண்டரொருவர் போட்டியிடப் போகிறார்'. இந்தச் செய்தி செவியில் விழுந்தபோதும் முத்துவேலப்ப அலட்சியமாகவா இருந்திருப்பார்?

அந்த நாளில் கோபி வட்டத்தில் தி.மு.கழக்திற்கு இருந்த வலிமைகள் மூன்று. **ஒன்று** எண்ணிக்கையில் குறைவாக இருந்தாலும் கொள்கைப் பிடிப்பும் அஞ்சாமையும் துடிப்பும் மிக்க கழகத் தொண்டர்கள். **இரண்டாவது கோபி ஜி.என். இராசன் சொல் முழக்கம். மூன்றாவது சாமியின் துணிச்சல்.**

இந்த மூன்றையும் முன்வைத்து முத்துவேலப்ப கவுண்டருடன் மோதத் தயாராயிற்று தி.மு.கழகம். வேட்பாளர்கள் தேர்வு முடிந்தது. வேட்பாளர்கள் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்தனர். சாமி கோபியையே தமது தங்குமிடமாக மாற்றிக் கொண்டார். பிரச்சாரம் தொடங்கியது. தேர்தல் பணிகள் எவ்வாறு தொடர வேண்டும் என்பது பற்றித் தெளிவாகத் திட்டமிடப்பட்டது.



முத்துவேலப்பருக்குச் சாமியின் மீதும் தி.மு.கழகத்தின் மீதும் ஆத்திரம் ...யும் தமது செல்வாக்குக் குலையாது; குறையாது. காங்கிரசை மண் கவ்வச் ... போலவே கழகத்தையும் மண் கவ்வச் செய்ய முடியும் என்ற நம்பிக்கையுடன் ...ார். அவரிடம்தான் பணபலம், ஆள்பலம் ஆகிய இரண்டும் உண்டே ...டையும் தேர்தல் களத்தில் இறக்கினார்.

தேர்தல் நெருங்க நெருங்க முத்துவேலப்ப கவுண்டருக்கே கொஞ்சம் அச்சம் ...த் தொடங்கியது. சாமியின் சுறுசுறுப்பு, கழகத் தொண்டர்களின் சோர்வறியாத ...ப்பு, கழகக் கூட்டங்களுக்கு மக்கள் கூடுவது ஆகியன தேர்தல் மடுவுகளைத் திசை ... போகச் செய்துவிடுமோ என்ற ஆதங்கத்திற்கு ஆளானார்.

தி.மு.கழகத்தில் கழகக் காளையர் கணைகள், அந்தக் கணைகளைக் குறியை ...-இலக்கை நோக்கிச் செலுத்திக் கொண்டிருப்பவர் சாமி.

இந்த உண்மைகள் இருபது முப்பது ஆண்டுகளாகப் பொதுவாழ்வில் ஈடுபட்டுப் ...தேர்தல்களைச் சந்தித்த முத்துவேலப்பருக்கும் தெரியாமற் போகுமா?

நன்கு தெரிந்திருந்தார் என்பதற்குச் சான்றே இந்த நிகழ்ச்சி.

...க்குப்பதிவு நாள்.

கழகத் தோழர்கள் அந்தந்த வட்டத்தில் வாக்காளர்களை அழைத்து வந்து ...க்களிக்கச் செய்வதில் மும்முரமாக ஈடுபட்டிருந்தனர்.

சாமி ஒவ்வொரு வட்டத்திலும் உள்ள வாக்குப் பதிவு நடைபெறும் இடங்களுக்குச் ...ன்று பார்வையிட்டு வந்தார்.

வாக்குச் சாவடிகளைச் சாமி பார்வையிட்டு வருவது முத்துவேலப்ப கவுண்டருக்கு ...டாமலா போயிருக்கும்!

பல சாவடிகளைப் பார்வையிட்டு, அவ்விடங்களில் பணியாற்றும் கழகத் ...தோழர்களை ஊக்குவித்து விட்டு, தேவையானவற்றையும் செய்து தந்தபின் ...ப்பாளையம் வந்தார். புதுப்பாளையம் கோபி நகரின் ஒரு பகுதி. முத்துவேலப்ப ...வுண்டரின் பகுதியும் கூட.

சாமி, புதுப்பாளையத்திற்குள் நுழைகிறார். நேரே வாக்குச் சாவடி நோக்கி ...டக்கிறார். அந்தப் பகுதியில் கழக வேட்பாளராக நிற்கும் 'முரசொலி'த் தம்பிக்குப் ...ணியாற்றும் தோழர்கள் அவரை வரவேற்க ஓடி வருகின்றனர். "நீங்கள் உங்கள் ...வேலையைப் பாருங்கள்" என அவர்களைப் போகச் சொல்லியதும் தனியே நடந்து ...செல்கிறார். தெருவோரத்தில் வேடிக்கை பார்ப்பவர்களைப் போல நின்றிருந்த பத்துப் ...பதினைந்து பேர், சாமியை நோக்கிப் பாய்கின்றனர். அடுத்த கணம் அவரைச் சூழ்ந்து ...கொள்ளுகின்றனர். பின்னால் மறைத்து வைத்திருந்த தடியால் சிலரும் வெறுங்கையால் ...சிலரும் அவரைத் தாக்குகின்றனர். அங்கே இருந்த மற்றவர்கள் கலைந்தோடுகின்றனர்.

அவர்களுக்கு அடிப்பவர் யார் என்பது தெரியும்.

கூடி நின்று வேடிக்கை பார்த்திருந்தால் அடுத்த அடி அவர்களுக்கு...
நிற்பார்களா அவர்கள்?

அடித்தோர் முத்துவேலப்பரின் ஆட்கள்தான்.

அன்று சாமியின் உடம்பு நோஞ்சான் உடம்பு. அந்த முரடர்களின் அடி... தாங்குமா? அடி தாங்காமல் மயங்கிச் சட்டை கிழிக்கப்பட்ட நிலையில் கீழே... வீழ்ந்தார் சாமி. அந்த அடிகளே ஆளை முடித்திருக்கும் என்ற நம்பிக்கையில்... இடத்தை விட்டு ஓடிவிட்டனர் முரடர்கள்.

கழகத் தோழர்கள் தேர்தல் வேலையையும் தூக்கி எறிந்துவிட்டு, சாமி வி... கிடக்கும் இடத்திற்குப் பறந்து வந்தனர். தூக்கிச் சென்று தேர்தல் பணிம... கிடத்தினர். முகத்தில் நீர் தெளித்தனர். சற்று நேரத்தில் சாமிக்குக் கொஞ்சம் ம... தெளிந்தது. கண் விழித்ததும் அவர் வாயிலிருந்து வெளிவந்த சொற்கள், "வாக்குப் ப... **முடியும் வரை இந்த நிகழ்ச்சியை நம் தோழர்களுக்குத் தெரிவிக்காதீர்கள்!"** என்பன... கேட்ட தோழர்கள் தங்கள் ஆத்திரம் முழுவதையும் அப்படியே உள்ளத்தில் போ... அடக்கிக் கொண்டனர்.

செய்தி பரவினால் கழகத் தோழர்கள் தேர்தல் பணியைக் கைவிடுவர். உட... புதுப்பாளையம் நோக்கி வருவர். முத்து வேலப்பருடைய ஆட்களுடன் மோதலா... அவர்களிற் சிலரைப் பழிக்குப் பழியும் வாங்கலாம். **ஆனால் தேர்தல்...?** நோக்க... **சிதைந்து விடுமே?**

அவருடைய வேண்டுகோளினை மிகுந்த மனக்கணத்துடன் ஏற்றுக்கொண்ட... தோழர்கள். மூவர் மட்டுமே அவரருகில் இருந்தனர். மற்றவர்கள் வாக்காளர்களை... கொணரும் பணியில் ஈடுபட்டனர். அவர் வேண்டிக் கொண்டது போலவே வாக்கு... பதிவு முடிந்த பிறகே சாமி தாக்கப்பட்ட செய்தி மற்ற பகுதியில் தேர்தல் பணியில்... ஈடுபட்டிருந்த தோழர்களுக்கு எட்டியது.

இதற்குள் சாமி அடிபட்டுக் குருதி சிந்திக் கொண்டிருந்த புண்ணுக்குக் கட்... போட்டுக் கொண்டார். தோழர்களிடம், "பழிக்குப்பழி என்கிற உணர்வே வேண்ட... தேர்தலில் ஓரிரு வட்டங்களிலாவது வெற்றி பெறக் கூடிய வாய்ப்பு இருக்கிற... அத்துடன் என்னைத் தாக்கியதற்காக நீங்கள் முத்துவேலப்ப கவுண்டரின் ஆட்களோ... மோதத் தொடங்கினால் அது தொடர்கதை ஆகிவிடும். நாம் பெருந்தொல்லைகளை... சந்திக்க நேரிடலாம். நாம் பொதுவாழ்வில் ஈடுபட்டிருப்பவர்கள்... தனிப்பட்டவர்களுடன் மோதுவதில் நம் நேரத்தையும் வலிமையையும் வீணா... கூடாது" என வேண்டுகோள் விடுத்தார். அவருடைய நம்பிக்கை வீண் போகவில்லை.

சிங்கத்தின் குகைக்குள் புகுந்து அதனைச் சந்திப்பது என்பார்களே அதைப்... முத்துவேலப்ப கவுண்டரின் கோட்டையாகிய கோபிக்குள் நுழைந்து, கழகத்... சார்பில் மூன்று நகர மன்ற உறுப்பினர்களை வெற்றிபெற வைத்தார் சாமி.



...வேலப்ப கவுண்டரை எதிர்த்துப் போட்டியிட்ட கழகத் தொண்டராகிய ...தம்பிக்கு அப்போதைக்கப்போது சிறுசிறு உதவிகள் செய்து வந்தார் சாமி. ...ஆண்டு அவர் மறைந்த செய்தியறிந்து ஓடோடிச் சென்று அவரது ...ஆறுதல் கூறியதுடன், ரூ. 2,000 கொடுத்து உதவி அவரிடம் தொண்டு... ...ந்தார்.

அவருக்கே அழைப்பு

...கோபிக்குப் போய் முத்துவேலப்ப கவுண்டருடன் மோதி, அவருடைய ...க்குள்ளேயே மூன்று தி.மு.கழகத் தோழர்களை நகர மன்ற உறுப்பினர்களாக ...வைத்தது, எவ்வளவு பெரிய சாதனை என்பதை இன்றைய தலைமுறையினரால் ...து கொள்ள முடியாது. இன்று யாருடனும் பொதுவாழ்க்கையில் மோதலாம். ...ம் முத்துவேலப்ப கவுண்டர்களின் கோட்டைகள் இல்லை.

1967-ஆம் ஆண்டுத் தேர்தலுக்குப் பிறகு அத்தகைய கோட்டைகள் பலவும் ...ங்கிப் போயின. சாமி போன்ற தன்னலங்கருதாதத் தொண்டர்களின் சிரிய ...னால் மக்கள் ஆதிக்கப்புரியினரின் பிடியிலிருந்து விடுபட முன்வந்தனர். ...வரை ஆதிக்கத்தின் மீது பாறாங்கல் விழும்படியாகச் செய்தனர்.

அறுபத்தேழுக்கு முன்போ...

அந்த நாள்களில் கோபி நகரத்திலும் அதன் சுற்று வட்டாரத்திலும் ...ந்திருந்தோரே முத்துவேலப்பர்களின் செல்வாக்கு எத்தகையது என்பதை உணர்வர். ...லும் சாமி போன்ற சிறுபான்மைச் சமூகத்தினர் பெரும்பான்மைச் சமூகத்தினருடன் ...துவதென்பது நினைத்துப் பார்க்கவே முடியாத ஒன்று. அதற்கு உயிரைத் துச்சமாக ...த்து "இருப்பது ஒருயிர்; அஃது உயர்ந்த இலட்சியத்திற்காகப் போகட்டுமே", என ...ண்ணா கூறியதை அப்படியே ஏற்றுப் பொதுவாழ்வில் ஈடுபட்டோரால் மட்டுமே ...யக்கூடியதாகும்.

எத்தனை ஏக்கர் நிலம் சொந்தம் என்பது கணக்குப் பிள்ளையைக் கேட்டால்தான் ...யும் என்கிற அளவுக்கு நிலவுடைமை. இரும்புப் பெட்டியே சுமை தாங்காது ...க்கும் பண இருப்பு; அந்த இரும்புப் பெட்டிக்குச் சொந்தக்காரருக்கு மட்டுமே ...ந்து கொடுக்கும் இதயம் படைத்த அடி ஆட்கள், 'நம்மவர்' என்று சொல்லி ...ம்பூதெய்தும் ஜனக்கட்டு, இன்னார் இதில் தலையிட்டிருக்கிறார் என்று ...விப்பட்டதும் காதுகளை மட்டுமல்லாது கதவுகளையும் மூடிக்கொள்ளும் ...ல்துறை!. அமைச்சர் எவரேனும் மாவட்டத்துக்குள் நுழைந்தாலே திரும்பிப் ...தும்போது வீடுதேடி வந்து 'கும்பிடு போட்டு'ச் செல்லும் அரசியல் செல்வாக்கு - ...வளவும் உடையவர்களாகவல்லவா அவர்கள் அன்று இருந்தனர்! ...த்தகையோருடனல்லவா சாமி மோத வேண்டியிருந்தது.

சாமி மோதினார்; சிறிய வெற்றியையும் ஈட்டித் தந்தார். தி.மு.கழக [illegible] இத்துடன் நின்றாரா? வெற்றி பெற்ற தி.மு.கழக நகரமன்ற உறுப்பினர்களை [illegible] பாராட்டு; வாக்காளர்களுக்கு நன்றியறிவிப்புக் கூட்டம்.

எங்கே? கோபியில்தான். அந்த மூவர் வெற்றி பெற்றதையே [illegible] காங்கிரசைக் கலகலக்க வைத்துவிட்டோம் எனப் பூரித்து உவகை நிறைந்த [illegible] தோழர்கள். பாராட்டு - நன்றியறிவிப்புக் கூட்டத்தைப் பெரிய [illegible] கொண்டாடி மகிழத் தலைப்பட்டனர்.

அந்தக் கூட்டத்தில் வட்டச் செயலாளராகிய சாமியும் பேசுகிறார். வெற்றி பெற்ற கழகத் தோழர்களைப் பாராட்டுகிறார். எல்லாச் சக்திகளையும் [illegible] கழகத்திற்கு வாக்களித்த வாக்காளப் பெருமக்களுக்கு நன்றி கூறுகிறார்.


அதன்பின்,

"பெருமதிப்பிற்குரிய முத்துவேலப்பர் அவர்களே! நீங்கள் உங்கள் பழைய [illegible] மனோபாவத்திலிருந்து மாறமாட்டேன் என்பதன் அடையாளமாக [illegible] சாவடியைப் பார்க்க வந்த என்னை உங்களுக்கு எதிராக, எங்கள் இயக்கத்தின் [illegible] சாதாரணமான தொண்டனை நிற்க வைத்தேன் என்கிற ஆத்திரத்தை நெஞ்சில் [illegible] கொண்டு, உங்கள் ஆட்களை ஏவிக் கொலை செய்ய முயன்றீர்கள். உங்களின் [illegible] முயற்சி முற்றிலுமாக வெற்றி பெறவில்லை. என் உடம்பில் இரு இடங்களில் [illegible] ஏற்படுத்தும் அளவுக்குத்தான் வெற்றி பெற்றீர்கள்.

"உங்களுக்கு, இங்கே கூடியிருக்கும் பல்லாயிரக்கணக்கான மக்களைச் சா[illegible] வைத்துக் கொண்டு சொல்லுகிறேன், நன்றாகக் கேட்டுக் கொள்ளுங்கள்.

"விரைவில் என் ஊராகிய புன்செய்ப் புளியம்பட்டியிலும் ஊராட்சி மன்றத் தேர்தல் நடைபெற உள்ளது. நீங்கள் அங்கே வாருங்கள். உங்கள் செல்வாக்கு அனைத்தையும் பயன்படுத்தித் தி.மு.கழக வேட்பாளருக்கு எதிராக, காங்கிரசு வேட்பாளரை நிறுத்துங்கள். நீங்களும் உங்களுடன் வருவோரும் எங்கள் ஊரில் தங்கித் தேர்தல் பணிகளைச் செய்ய எல்லா வசதிகளையும் செய்து தருகிறேன். வேண்டிய [illegible] வகையான பாதுகாப்புகளையும் அளிக்கிறேன். உங்கள் தேர்தல் பணிகளுக்கு இம்மியளவும் இடையூறு நேராமல் எங்கள் தோழர்கள் உங்களைப் பாதுகாத்துத் தேர்தல் முடிந்ததும் ஊருக்கு அனுப்பி வைப்பார்கள்.

நான் இப்படிச் சொல்வதற்குக் காரணம்; நான் தி.மு.கழகத்தவன். அண்ணாவின் அரசியல் பண்பாட்டைப் பின்பற்றிப் பொதுவாழ்வில் ஈடுபட்டிருப்பவன்; [illegible] மரபுகளைப் பேணிக்காக்கக் கடமைப்பட்டிருப்பவன். வாருங்கள்! நல்லபடியாகத் திரும்பிச் செல்லுங்கள்!. உங்கள் மீது ஒரு சிறு துரும்பு விழுந்தாலும் [illegible] பொறுப்பையும் நான் ஏற்றுக் கொள்வேன். உங்கள் காலடியில் விழுந்து மன்னிப்புக் கேட்டுக் கொள்வேன்".



...யின் இந்த அழைப்பு நிச்சயம் முத்துவேலப்ப கவுண்டருக்கு எட்டியிருக்கும். ...ன் அழைப்பை ஏற்று அவர் புன்செய்ப் புளியம்பட்டிக்குச் செல்லத் ...ல்லை. அதற்கு முன்பே, கோபி நகராட்சித் தேர்தல் நடைபெறுவதற்கு ...புளியம்பட்டி செல்ல முடிவெடுத்திருக்கிறார்.

ஆம்!

...னுடைய ஊரில் வந்து தனக்கு எதிராக வேட்பாளரை நிறுத்தி வேடிக்கை ...ய சாமிக்கு, அவருடைய ஊருக்குப் போய்ப் பாடம் புகட்ட வாய்ப்பை ...ந்திருந்தார்.


...ராட்சி மன்றத் தேர்தல்களுக்கான அறிவிப்புகள் வெளியாயின. புன்செய்ப் ...பட்டி ஊராட்சி மன்றத் தேர்தலில் மீண்டும் பேட்டியிடச் சாமியும் கழகத் ...களும் தயாராயினர். 13 வட்டங்களையும் 15 உறுப்பினர்களையும் கொண்டது ...செய்ப் புளியம்பட்டி ஊராட்சி மன்றம். இரு வட்டங்கள் இரட்டை ...பினர்களைக் கொண்டவை.

சாமி, கோபி நிகழ்ச்சிகளை மறந்து வேட்பாளர்கள் தேர்வு செய்தல், சென்ற முறை ...ந்த வட்டங்களில் நமக்குக் குறைவான வாக்குகள் பதிவாயின; யார் யார் எதிர்த்து ...லை செய்தனர்; இப்பொழுது இவற்றை எங்ஙனம் சரி செய்வது போன்ற ...னைகள். அவற்றை ஒட்டிய செயல்பாடுகளில் முற்றிலுமாகத் தம்மை ...படுத்தியிருந்தார். இந்தக் கட்டத்தில் கோபி நிகழ்ச்சிகளை நினைவுக்குக் கொணர ...வேண்டியவரானார்.

ஆம்! முத்துவேலப்ப கவுண்டர் புன்செய்ப் புளியம்பட்டிக்கு வந்திருப்பதாகச் ...க்குச் செய்தி எட்டியது. கோபி வட்டம் முழுவதிலும் தமது செல்வாக்கைப் ...பியிருக்கும் ஒருவர் அங்கே வந்துள்ள செய்தி தெரியாமல் இருப்பதற்கு புன்செய்ப் ...யம்பட்டியும் அவ்வளவு பெரிய ஊரன்று; வந்திருப்பவரும் அந்த அளவுக்கு ...ரமில்லாதவரும் அல்லர். ஏன், எதற்காக அவர் அங்கு வந்துள்ளார் என்பதும் ...க்குத் தெளிவாகியது. சாமி உள்ளூரச் சிரித்துக் கொண்டார். முத்துவேலப்ப ...வுண்டரின் நினைவாற்றலைப் பாராட்டினார்.

ஊராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடும் கழக வேட்பாளர்களைத் தேர்வு ...ய்யும் பணி நிறைவு பெற்றது. இதற்குச் சாமி தலைமையேற்றிருந்தார். அதேபோல் ...ஹிரது வேட்பாளர்களும் தேர்வு செய்யப்பட்டனர். இந்தப் பணியை முத்துவேலப்ப ...வுண்டர் ஏற்றிருந்தார். அவர் புளியம்பட்டிக்கு வந்திருப்பது அதற்காகத்தானே!

வேட்பு மனுத்தாக்கல் செய்தல் முதலிய சடங்குகள் நிறைவெய்தின. 13 ...ட்டங்களிலும் தி.மு.கழகம் - காங்கிரஸ் நேரடிப் போட்டி. இரு சாரரும் தேர்தல் ...ணிகளில், தத்தமது ஆட்களுக்கு வெற்றி தேடுவதற்குரிய வழிவகைகளை ஆய்ந்து ...ஏற்கேற்பத் தொண்டர்களை முடுக்கி விட்டனர். ஊரே தேர்தல் திருவிழாவில் ...ழ்கியது.



இருபது இருபத்தைந்து ஆண்டுகளாகப் பற்பல தேர்தல்களைச் சந்தித்து முன்னின்று நடத்திய அய்ம்பது வயதைத் தாண்டிய மீ முத்துவேலப்ப கவுண்டர் ஒருபுறம், விரல்விட்டு எண்ணக்கூடிய அளவிலேயே தேர்தல்களைச் சந்தித்து முன்னின்று நடத்திய முப்பது ஆண்டுகளும் நிரம்பப் பெறாத சாமி இன்னொருபுறம். செல்வமும் செல்வாக்குடையோரின் அணி ஒருபுறம்; கொள்கைப் பிடிப்பும் பொது வாழ்வில் ஆர்வமும் கொண்ட இளைஞர் பட்டாளம் ஒருபுறம்.

முத்துவேலப்ப கவுண்டருக்கு இது கவுரவப் பிரச்சினை! கவுரவத்தைக் காப்பாற்றிக் கொள்ளக் காசை இறைப்பது நம்மவர்களின் வாடிக்கைதானே! முத்துவேலப்பரின் இரும்புப் பெட்டியின் ஒருபகுதி புளியம்பட்டியில் இறக்குமதியாயிற்று. எந்த அணி வெல்லும்; ஊராட்சி மன்றத்தைக் கைப்பற்றும் என ஊர் மக்களாலேயே கணிக்க முடியாத நிலை. கடுமையான போட்டி.


ஒருவழியாகத் தேர்தல் பிரச்சாரம் முடிந்தது. வாக்குப் பதிவும் நடந்தேறியது. மறுநாள் வாக்குகள் எண்ணப்பட்டன. தமது வேட்பாளர்கள் வெற்றி பெறுவார்கள்; வெற்றி ஊர்வம் நடத்திய பிறகே கோபி புறப்படுவது என்கிற முடிவுடன் புளியம்பட்டிக்கு வந்த முத்துவேலப்ப கவுண்டர், **பகல் பன்னிரெண்டு மணிக்கெல்லாம் கோபிக்குப் பயணமானார். ஏன்?**

வாக்குகள் எண்ணத் தொடங்கிய ஒரு மணி நேரத்திலேயே சாமியின் அணியினர் எல்லா வட்டங்களிலும் முன்னணியில் நிற்பது தெரிந்து விட்டது. ஒன்றிரண்டு வட்டங்களிலென்றால் பொறுத்துப் பார்த்திருப்பார். எல்லா வட்டங்களிலும் என்றால்... அவரால் தேர்தல் முடிவுகளைக் கணிக்க முடியாமற் போகுமா?

சாமியின் அணியினர், தி.மு.கழக வேட்பாளர்கள் எல்லா வட்டங்களிலும் வெற்றி பெற்றனர். **15 ஊராட்சி மன்ற உறுப்பினர்களும் கழகத்தவரே. சாமி மீண்டும் - இரண்டாவது முறையாக ஊராட்சித் தலைவராக அமர்ந்தார். 29-8-1958 இல் முதன் முதலாகப் புன்செய்ப் புளியம்பட்டிப் பேரூராட்சி மன்றத் தலைவராகப் பொறுப்பேற்ற அவர் 20-5-1968 வரை நாடாளுமன்ற உறுப்பினராகிய பின்னும் சில மாதங்கள் அந்தப் பதவியில் இருந்தார். அவரையடுத்து அவர்தம் தோன்றாத் துணைவர்களாகிய பி.எஸ்.சீதாராமனும், பு.கா.ஆறுமுகமும் அப்பதவியில் அமர்ந்து சாமியின் பணிகளைத் தொடர்ந்தனர்.**

(21-5-1968 முதல் 1-8-1970 வரை சீதாராமனும், 2-8-1970 முதல் 12-9-1979 வரையும் மீண்டும் 3-3-1986 முதல் 2-3-1991 வரையும் என அவர்கள் தலைவர்களாக இருந்தனர். ஆக 29-8-1958 முதல் தனி அலுவலர்களின் கீழ் இருந்த காலம் தவிர - ஊராட்சி மன்றங்கள் கலைக்கப்படும் வரை 2-3-1991 வரை புன்செய்ப் புளியம்பட்டிப் பேரூராட்சி மன்றம் கழகத்தவரிடமே இருந்தது என்பது குறிப்பிடத் தக்கதாகும்).

தேர்தலில் சாமியும் கழகத் தோழர்களும் வெற்றி பெற்ற செய்தி அண்ணாவுக்கு எட்டியது. 15 உறுப்பினர்களும் கழகத்தவர்களாகவே தேர்ந்தெடுக்கப்பட்டதைத்



குறிப்பிட்டு அந்த வெற்றிக்குக் காரணமான சாமியையும் பாராட்டித் 'திராவிட நாடு' இதழில் எழுதினார்.

தேர்தல் முடிந்த ஓராண்டுக்குள் கழக உறுப்பினர்கள் இருவர் இயற்கை எய்தினர். அந்த இடங்களுக்கான இடைத்தேர்தல் பற்றிய அறிவிப்பு வெளியானது. சாமி, கழக நண்பர்களை அழைத்தார்.

"நமது ஊராட்சி மன்றத்தில் நாம் மட்டுமே இருக்கிறோம். அடையாளத்திற்குக் கூட எதிர்க்கட்சியினர் எவருமில்லை. அதனால் நடைபெறவுள்ள இந்த இடைத் தேர்தலில் நாம் நமது வேட்பாளர்களை நிறுத்தாமல் இருப்போம். காங்கிரசார் இருவர் வரட்டும்". என்றார் சாமி. நண்பர்களும் இந்த முடிவை வரவேற்றனர். அங்ஙனமே காங்கிரசார் இருவர் ஊராட்சி மன்ற உறுப்பினராகி எதிர் வரிசையில் அமர்ந்தனர்.

இதுவும் அண்ணாவுக்குத் தெரிந்தது. இதற்காகவும் சாமிக்கு அண்ணாவிடமிருந்து பாராட்டுக் கிடைத்தது. இவையும் அண்ணாவின் பண்புகள்தாமே! "பாம்பறியும் பாம்பினகால்" என்பது பழமொழி. அண்ணா அறிந்தார், பாராட்டினார்.

எதிர்ப்புகளின் இடையே

இந்த நூலுக்கு வேண்டிய தகவல்களைத் திரட்டுவதற்காகச் சாமியிடம் உரையாடும் பொழுது, இப்படியும் ஒரு வினாவினைத் தொடுத்தேன்.

"ஏன், சாமி! நீங்களோ கோபி வட்டத்தில் சிறுபான்மைச் சமூகத்தைச் சார்ந்தவர். நடுத்தரக் குடும்பத்தில் பிறந்தவர். பணபலம், ஆள்பலம் ஆகிய இரண்டுமே உங்களிடம் இல்லை. அதே சமயம் முத்துவேலப்ப கவுண்டரின் செல்வாக்கும் அவரிடம் இருந்த வலிமைகளையும் நீங்கள் அறிவீர்கள். அப்படியிருந்தும் அவருடன் மோதும் துணிவு உங்களுக்கு எப்படி ஏற்பட்டது? உங்களிடம் நானறிந்த வரை முரட்டுக் குணமும் கிடையாதே!"

அவர் மெல்லச் சிரித்துக் கொண்டார்.

"இதற்கு இரு காரணங்களைத்தான் என்னால் குறிப்பிட முடியும். ஒன்று கழகத்தின் மேல் கொண்டிருந்த வெறி, அதன் வளர்ச்சிக்காக, வெற்றிக்காக உழைக்க வேண்டும் என்ற தணியாத ஆர்வம். இன்னொன்று பட்டறிவு (அனுபவம்). எதிர்ப்பு எப்படியிருக்கும்; எந்த அளவுக்கு இருக்கும் என்பதை அறிந்து தெளிந்ததால் அவருடன் மோதுவதை நான் பெரிதாகக் கருதவில்லை". அவர் கூறிய விளக்கம் இதுதான்.

1958-ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் இருபத்தொன்பதாம் நாள், தமது இருபத்தாறாம் வயதில் புன்செய்ப் புளியம்பட்டிப் பேரூராட்சி மன்றத் தலைவராக அமர்ந்த சாமி, தமது சொந்த ஊர் என்னும் சிறிய வட்டத்திற்குள் தம்மையும் தமது

பணிகளையும் இட்டு வைத்துக் கொள்ள விரும்பவில்லை. தமது பணிக்களத்தை இன்னும் விரிவுபடுத்திக் கொள்ள வேண்டும். தாம் சார்ந்துள்ள திராவிட முன்னேற்றக் கழகத்தையும் கோபி வட்டம் முழுவதிலும் வளர்த்துச் செழிக்கச் செய்ய வேண்டுமெனவும் விரும்பினார்.

சாமிக்கு எப்பொழுதுமே ஒரு நம்பிக்கை. 'ஒரு இயக்கம் தொண்டர்களின் பிரச்சாரத்தால் மட்டும், பொதுக் கூட்டங்கள், கொடியேற்றுதல் ஆகியவற்றால் மட்டும், மக்களிடையே காலூன்றி நிற்காது; மக்களின் மனத்தில் இடம் பெறாது. அந்த இயக்கத்தினர் நிருவாகங்களிலும் பங்கு பெற வேண்டும். அதன் மூலம் மக்களின் தேவைகளை நிறைவேற்ற முயல வேண்டும். அப்பொழுதுதான் எந்த இயக்கத்தால் தங்களின் சில தேவைகளாவது நிறைவு செய்யப்படுகிறதோ அந்த இயக்கத்தை அவர்கள் ஆதரிக்க முன் வருவார்கள்.

இந்த நம்பிக்கையைச் செயல்படுத்துவதன் அடையாளமாக ஊராட்சி மன்றத் தலைவராகிய சாமி, நம்பியூர் ஊராட்சி ஒன்றியத் தலைவருக்குப் போட்டியிடத் திட்டம் தீட்டினார். நம்பிக்கை நல்லதுதான்; ஒன்றியத் தலைவர் தேர்தலும் நடைபெறவுள்ளது. ஆனால் நம்பிக்கை நிறைவேற வேண்டுமே!

நம்பியூர் ஊராட்சி ஒன்றியம் இருபத்தோரு ஊராட்சி மன்றங்களைத் தன்னுள் அடக்கியது. அந்த ஊராட்சி மன்றத் தலைவர்கள் 21 பேரும் ஒன்றியத் தலைவர் தேர்தலில் வாக்களிக்க உரிமையுடையவர்கள். 21 ஊராட்சி மன்றத் தலைவர்களில் இருவர் மட்டுமே தி.மு.கழகச் சார்புடையோர். ஒருவர் புன்செய்ப் புளியம்பட்டி ஊராட்சி மன்றத் தலைவர் சாமி; இன்னொருவர் நொச்சிக்குட்டை ஊராட்சி மன்றத் தலைவர் நஞ்சப்பன். மற்ற பத்தொன்பது பேரும் காங்கிரசைச் சார்ந்தவர்கள் அவர்களின் கட்டுப்பாட்டை மீற முடியாதவர்களாகவே இருந்தனர்.

நேரடியாகவும் தக்கவர் மூலமாகவும் சாமி ஊராட்சி மன்றத் தலைவர்கள் சிலரை மெல்ல அணுகினார். அவர்களிற் சிலர், சில தனிப்பட்ட காரணங்களுக்காகக் காங்கிரசை ஆதரிக்க வேண்டிய கட்டாயத்தில் இருப்பதாகவும் மனதாரக் காங்கிரச வேட்பாளரை ஆதரிக்க விருப்பம் இல்லாதவராகவும் இருப்பதையும் அறிந்தார். இது போதாதா? போட்டியிட்டுப் பார்க்கலாம் என்று துணிவு பிறந்தது.

காங்கிரசின் சார்பில் போட்டியிடுபவர் குருமந்தூர், நடுப்பாளையம் பண்ணாடி என அழைக்கப்பட்ட சிதம்பர கவுண்டர். அக்காலத்தில் அந்த வட்டாரத்தில் இருக்கும் எல்லாக் காங்கிரசுக்காரர்களும் பெற்றிருந்த பணம், சாதி ஆகிய இரு செல்வாக்குகளையும் ஏராளமாக உடையவர் அவர். அவர் தம்முடைய பணபலம், ஆள் பலத்தைத் தேர்தல்களில் மட்டும் பயன்படுத்திக் கொண்டிருக்கவில்லை; எல்லாக் காலத்திலும் அவற்றைப் பயன்படுத்திக் கொண்டிருந்தார். சுருக்கமாகச் சொன்னால் அவர் ஓர் இடி அமீன்.

[illegible] பகுதியில் தங்களுக்குள் [illegible] [illegible] [illegible] அனுப்புவார். அதனைத் தீர்த்து வைப்பவர் [illegible] [illegible] தன்னிடம் வரும் வழக்கைத் தீர்ப்பது [illegible] [illegible] ஏற்றுக் கொண்ட அவ் அவரிடம் வந்த [illegible] [illegible] [illegible] தீர்த்து வைக்கிறார்.

எப்படி?

அவருடைய தீர்ப்பை எவராவது எதிர்த்துப் போனால் [illegible] அதாவது தன் தீர்ப்பை எதிர்த்துச் செல்வதற்கு அந்த தொகையான ரூ. 5,000/- ஐ [illegible] தன்னிடம் வாங்கியதாக எழுதிக் கொள்வார். அவ்வளவுதான்.

அவரிடம் நியாயம் கேட்டுப் போனோர், அவருடைய ஆணையிலிருந்து தப்பிவிடத்தான் முடியுமா?

அத்தகைய சிதம்பர கவுண்டரை எதிர்த்துப் போட்டியிடப் போகிறார் சாமி. [illegible] வலிமையை உணர்ந்த அவர் [illegible] போகத் துணியவில்லை. [illegible] எப்படியோ அப்படி சொல்லும் அனுபவிகள் [illegible] கண்டுபிடிப்பதாகவே இருந்தது.

இத்தனை செல்வாக்குகளுக்குச் சொந்தக்காரராகிய சிதம்பர கவுண்டருக்கு [illegible] தெரியாமல் போகுமா? அவரும் தக்க நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்தார்.

சாமியை ஆதரிக்க முன் வந்த ஊராட்சி மன்றத் தலைவருள் சிலர், தேர்தலுக்கு முந்திய நாளே புளியம்பட்டி வந்துவிட்டனர். வேறு சிலர், வெளிப்படையாகத் தங்கள் ஆதரவைத் தெரிவிக்க இயலாதோர் சிதம்பர கவுண்டரின் அழைப்பின் பேரில் (அவரின் பேரில்தான்) நடுப்பாளையத்திலுள்ள அவருடைய தோட்டம் போய்ச் சேர்ந்தனர்.

தேர்தல் நாளன்று...

சாமியும் சாமியை ஆதரிக்க முன்வந்த ஊராட்சி மன்றத் தலைவர்களும் மூன்று கார்களில் நம்பியூரை நோக்கிப் போய்க் கொண்டிருந்தனர். நடுவழியில் இரட்டை மாட்டு வண்டிகள் சில சாலையின் குறுக்கே நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதைக் காணுகின்றனர். இஃது எவருடைய கைவரிசை என்பதை உடனே எல்லாரும் புரிந்து கொள்ளுகின்றனர். சாமி, சற்றுத் தொலைவிலேயே கார்களை நிறுத்தச் சொல்கிறார். கார்கள் நின்றன.

அடுத்த கணம்.

சாலையை அடுத்திருந்த வேலிகளுக்குப் பின்னாலிருந்து சரமாரியாகக் கற்கள் கார்களை நோக்கிப் பறந்து வருகின்றன. முன்னால் நின்றிருந்த கார்களின் மீதும் சில கற்கள் விழுகின்றன.

சில நொடிகள் கழிவதற்குள்...

காருக்குப் பின்னால் இரு லாரிகள் வந்து நிற்கின்றன. அவற்றிலிருந்து தடிகளையும் கற்களையும் தாங்கிய ஆட்கள் இறங்கி வருகின்றனர். வேலிக்குப் பின்னாலிருந்து கற்கள் பறந்துவரும் இடங்களை நோக்கிக் கற்களை வீசிக்கொண்டே விரைகின்றனர். அங்கிருந்து கல்வீசியோர் சோளக் காட்டிற்குள் புகுந்து தங்களைக் காப்பாற்றிக் கொள்ள ஓடுகின்றனர். பத்துப் பதினைந்து நிமிடங்களுக்குப் பிறகு அங்கே அமைதி நிலவுகிறது.

சாமி கைக்கடி காரத்தைப் பார்க்கிறார்.

ஊராட்சி ஒன்றியத் தலைவர் தேர்தல் தொடங்க இன்னும் அரை மணி நேரமே இருக்கிறது. அதற்குள் தம்முடன் இருக்கும் ஊராட்சி மன்றத் தலைவர்களுடன் நம்பியூர் போய்ச் சேரவேண்டும்.

சில நிமிடங்களில் சாலையின் குறுக்கே நிறுத்தப்பட்டிருந்த மாட்டு வண்டிகள் ஓரமாக இழுத்து நிறுத்தப்படுகின்றன. கார்கள் நம்பியூரை நோக்கிப் பறக்கின்றன. லாரிகளும் பின் தொடருகின்றன.

சாமிக்குத் தெரியும்.

ஊராட்சி மன்றத் தலைவர்களில் சிலர் காணாமற் போனது சிதம்பர கவுண்டருக்குத் தெரிய வரும். எப்படியும் அவர்கள் வாக்களிக்க நம்பியூர் வந்தாக வேண்டும். அங்குதானே தேர்தல் நடைபெற உள்ளது. சாமியும் அவரை ஆதரிப்போரும் நம்பியூர் வந்து சேராமற் செய்துவிட்டால்... சிதம்பர கவுண்டர் எளிதாக ஒன்றியத் தலைவராகி விடுவார்.


இந்தச் சதியை முறியடிக்கச் சாமி தயாரானார். இதுபோல ஏதாவது நடக்குமென்று எதிர்பார்த்த அவர், பாதுகாப்புக்காக இருநூறு பேரை லாரியில் தம்மைப் பின் தொடர்ந்து வரச் செய்து, ஊராட்சி மன்றத் தலைவர்களுடன் காரில் சென்றார். சிதம்பர கவுண்டரின் சதி முறியடிக்கப்பட்டது.


தேர்தல் முடிவு!

இரு வாக்குகள் குறைவாகப் பெற்றுச் சாமி தோல்வியடைந்தார்.

இவ்வளவும் செய்தா தோல்வி?

பதினோரு வாக்குகள் பெற்றால் சாமி வெற்றி பெற முடியும். எதற்கும் இன்னும் ஓரிருவரைச் சரிப்படுத்தி வைத்துக் கொண்டால் நலம் என்று கருதி எண்ணத்தைச் செயல்படுத்தியும் வைத்திருந்தார். சிதம்பர கவுண்டர் தமக்கு வாக்களிக்க மாட்டார்கள் எனச் சந்தேகப்பட்ட இரு தலைவர்களைத் தனது தோட்டத்துச் சாளையில் கட்டி வைக்கச் செய்தார். சாமியுடன் வந்தோருள் இருவர் வழியில் சந்தித்த தாக்குதலைக் கண்டு சிதம்பர கவுண்டர் தோற்றால் இன்னும் என்னென்ன நேருமோ என அஞ்சி அவருக்கே வாக்களித்தனர். கட்டி வைக்கப்பட்டிருந்த இருவர், தேர்தல் முடிவு அறிவிக்கப்பட்ட பிறகே அவிழ்த்துவிடப்பட்டனர்.






நினைவு மலர்களில் :

"செல்வத்தார் எம்மையென்றே
வீராப்புப் பேசி நின்றோர்
செல்வமும் செல்வாக் குன்னோர்
செறிந்ததாம் கோபி வட்டம்
பல்வேறு வகையி னாலும்
பகைவரின் வலிய கோட்டம்
தோல்சிறப் பதனை யெல்லாம்
தொய்வுறச் செய்தே வென்றோன்".

என்று நான், சாமியைப் பற்றிக் குறிப்பிட்டிருப்பதில் சாரம் உண்டு என்பதை, எவரும் ஏற்பர்.

அறிஞர்களின் முடிவு



பல ஆராய்ச்சிகளால் செறிவூட்டப்பட்ட நவீன மொழிகள் எனப்படுகின்றவற்றோடு தொன்மைத் தமிழ் மொழி எந்த அளவுக்கும் மட்டமானதல்ல என்பதை இந்த அறிஞர் பெருமக்கள் கண்ட முடிவாகவுள்ளது.


திராவிட இயக்கம்

திராவிட வீரமக்கள், தம் பண்டைய நாட்டுப் பண்பை மறந்ததால் மனம் சுருங்கிப் போயிருக்கிறார்கள். வீரம் செறிந்த அந்த மக்கள் இன்று, துருப்பிடித்த கத்திபோல இருக்கிறார்கள். அந்தக் கத்தியைத் தட்டித் தீட்டிக் கூர்மையாக்கித் தருகின்ற மகத்தான இயக்கம்தான் திராவிட இயக்கம்.

பகுத்தறிவுப் பாதை

வைரம் ஜொலிக்க வேண்டுமானால் சாணைபிடிக்கத்தான் வேண்டும். தங்கம் ஒளிர வேண்டுமானால் தணலில் காய்ச்சத்தான் வேண்டும். ஆம் அதைப்போல், நல்வாழ்வு பெறவேண்டுமானால், நாம் பகுத்தறிவுப் பாதையில் செல்லத்தான் வேண்டும்.

- அண்ணா



போராட்டங்களில் பங்கும்...
பொதுப்பணிகளிற் செலவும்...

தமிழ்நாட்டில் எல்லாப் பெற்றோர்களும் தங்கள் பிள்ளைகளுக்காக வாழுவதாகக் கூறுவர். இது உண்மையும் கூட. ஆனால், அவர்களுடைய செயல்பாடுகள் அவர்களின் கூற்றுக்கு மாறாகப் போய்விடுவதும் உண்டு.

ஏழை எளியவர்கள் நூற்றுக்கு நூறு இதனைக் கடைப் பிடிக்கின்றனர். பிள்ளைகளெல்லாம் தங்களைச் சிறகு முளைக்கும்வரை, தாமாகத் தொழில் செய்து வயிற்றுப் பாட்டைத் தீர்த்துக் கொள்ள வருவாய் தேடும்வரை, தங்கள் அரவணைப்பிலேயே வைத்திருப்பர். அவர்களுக்காக விட்டுச்செல்ல அவர்களிடம் எதுவும் இருக்காது.

நடுத்தர - செல்வக் குடும்பங்களைச் சேர்ந்த பெற்றோர்களிற் சிலர், தங்கள் தொழிலுக்கும் பிள்ளைகளுக்கும் தொடர்பில்லாமலே அவர்களை வளர்ப்பர். தங்கள் பிள்ளை தாங்கள் மேற்கொண்டிருக்கும் தொழிலில் இறங்கிவிட்டால் தொழிலைக் கெடுத்து விடுவார்கள் என ஒதுக்கியே வைத்திருப்பர். வரவு-செலவுகள் பற்றியும் அவர்களுக்குத் தெரிவிக்க மாட்டார்கள்.

அதிலும் பையன் தன் விருப்பப்படி நடவாமல், அரசியல் பொதுவாழ்வு என்று போய் விடுவானாயின் 'தொழிலே தாங்கள்' - 'தாங்களே தொழில்' எனத் தங்களை மாற்றிக் கொள்வார்கள். எதிர்பாராத வகையில் அவர்களுக்கு ஏதேனும் நேர்ந்து விட்டால் வந்தது வந்ததுதான்; போனது போனதுதான். பிள்ளையும் திசை தெரியாமல் திண்டாடி நிற்பான். தட்டுத் தடுமாறியே பொருளாதாரத்தில் நிமிர்ந்து நிற்க முயல்வான்.

சாமியின் தந்தையாராகிய ஆறுமுகனார் அத்தகைய தவறைச் செய்யவில்லை. தன்னுடைய ஒரே பிள்ளை தமக்கு உதவாதவனாக மாறி, ஊராருக்கு உதவுவோனாக ஆகிவருவதை அவர் நன்கு உணர்ந்தார். அதற்காக மகன் மீது ஆத்திரம் கொள்ளவில்லை. எல்லாப் பொறுப்புக்களையும் தாமே சுமந்து, இறந்த வேளையில் எதை எப்படி வைத்தாரோ, இனிமேல் சாமிநாதன் எப்படிக் கடையை நிருவகிப்பானோ, ஈட்டி வைத்த நிலபுலன்களைக் கவனிப்பானோ என ஊராரும் உற்றாரும் கவலைப்படும் நிலைமையை அவர் உண்டாக்கவில்லை. தந்தையைப் பிரிந்த துயரம் மட்டுமே சாமியின் நெஞ்சில் நின்றது.

பிள்ளையின் போக்கை உணர்ந்த அவர் தமது அண்ணன் மகனாகிய வெள்ளியங்கிரியிடம் கடைப் பொறுப்பை முழுவதுமாக ஒப்படைத்தார். அவருடைய பார்வதி அம்மாள் வீட்டுப்பொறுப்புக்களை நிறைவேற்றி வந்தார். இதனால் ஆறுமுகனாரின் மறைவுக்குப் பின்னரும் அவர் உழைத்து உருவாக்கிய கடை, பாடுபட்டுத் தேடி வைத்த நிலபுலன்களும் சாமிக்குப் பயன்படுவனவாக அமைந்[illegible]

...ம் வந்த பிறகு எல்லாமே செம்மையாக இயங்கலாயின. இரு தோள்களும்
...தோள்களின வலிமையைப் பெற்றன.
கொஞ்சநஞ்ச மிருந்த குடும்பப் பொறுப்பும் உள்ளத்திலிருந்து இறங்கிவிட்டது.
...தாங்கிகளின் மீது சுமைகளை இறக்கி வைத்த உணர்வு பெற்றார் சாமி. கைவீசி நடக்க
...யென்ன அட்டி?

பொதுவாழ்வு என்றால் - அதிலும் அரசியல் - எதிர்க்கட்சி அரசியலில் தன்னை
...த்திருந்தால் போராட்டங்களில் பங்கு கொள்ளுவது தொண்டனின் தலையாய
...மையல்லவா? இயக்கம் வளர்ந்தபின், காற்று அதற்குச் சாதகமாக வீசுகிறது என்பதன்
...குறி தென்பட்டால், தேர்தல் காலங்களில் அரசியலுக்கு வருவோர் அதனைக்
...மையாகக் கருத மாட்டார்கள்; தவறிப்போய் வந்திருந்தாலும் சரியான நேரம்
...த்து ஒதுங்கிப் போய் விடுவர்; அல்லது விலகியே சென்று விடுவர்.

சாமியோ, கழகத்தின் வித்தினைப் புன்செய்ப் புளியம்பட்டியிலே விதைத்து
வளர்த்து, அது கோபி வட்டம் முழுவதும் கிளைகளைப் பரப்பி நிற்கச் செய்தவராயிற்றே.
அவர் போராட்ட மென்றால் ஒதுங்கி நின்றிருப்பாரா?

முதன் முதலாகச் சாமி பங்குகொண்ட போராட்டம், மும்முனைப் போராட்டம்.
அது 1953 சூலை 15-ஆம் நாள் நடைபெற்றது. அவர் சில தோழர்களுடன் சென்று
மேட்டுப்பாளையத்திற்கும் காரமடைக்கும் இடையே இரயிலை நிறுத்தினார்.
காவலர்கள் அந்தப் பெட்டியை நோக்கி விரைந்தனர். சங்கிலியைப் பிடித்து இழுத்து
நிறுத்தியது யார் எனக் கேட்டனர். நாங்கள்தான் என்றனர் சாமியும் தோழர்
அரங்கசாமியும். அப்போதே காவலர்கள் எட்டி உதைத்துப் பெட்டியிலிருந்து கீழே
தள்ளினர். எதற்கு? பெட்டிக்குள் வைத்து அடிக்க வசதியில்லாததால் தான்.

கீழே தள்ளியவுடன் இரண்டு மூன்று மிதி மிதித்தனர்; லத்தியால் நான்கைந்து
அடிகள் வழங்கினர். அவர்கள் இதே வேலையாக இருக்க முடியாதே! தொண்டர்களை...
அறப்போராட்ட வீரர்களைச் சிறைப்படுத்தியதும், வண்டி மீண்டும் புறப்பட்டது. வேறு
தோழர்கள், சாமியும் அவருடைய நண்பர் அரங்கசாமியும் இடையில் விட்ட பணியைத்
தொடர்ந்தனர். சாமிக்கும் அவருடன் சிறைப் படுத்தப்பட்ட தோழர்களுக்கும் இருமாத
சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுக் கோவை மத்திய சிறையில் அடைக்கப்பட்டனர்.

இதுவே சாமி பங்கேற்ற முதல் போராட்டம். முதல் சிறை வாசம். அப்பொழுது
வயது 21. அதன்பிறகு 'மிசா'வில் ஓராண்டுக் காலம் சிறையில் இருந்ததுவரை,
தி.மு.கழகம் நடத்திய அனைத்துப் போராட்டங்களிலும் அவர் பங்கேற்றுள்ளார்.
முப்பது முறை சிறைத் தண்டனைகளையும் அனுபவித்திருக்கிறார்.

நானும் சில ஆண்டுகள் அரசியலில் நேரடியாக ஈடுபட்டிருந்தவன். எனக்கும்
ஓரளவேனும் கடந்த நாற்பதாண்டுக்காலக் கோவை மாவட்ட வரலாறு தெரியும்.
நானறிந்தவரை போராட்டம் என்றதும் ஒன்றையே நினைவில் தாங்கிக் களம் நோக்கிக்
காலடியெடுத்து வைத்தோர் இருவர் மட்டுமே.

ஒருவர் கோவை மாவட்டத்தில் கொள்கை மணம் பரப்பிக் கோமான் போல் வாழ்ந்திருந்தவரும் சாமியின் அரசியல் ஆசானுமாகிய உடுமலை ப. நாராயணன், மற்றவர் சாமி.

ப.நா. அவர்கள் ஏதுமற்றவர், கொள்கையைத் தவிர. போராட்டம் அறிவிக்கப்பட்டால் எவரிடமும் அவர் விடை பெற்றுக்கொண்டதில்லை. "களம் நோக்கிப் போகிறேன்; மீண்டுவந்தால் வாழ்த்துங்கள். களப்பலியானால் என் கல்லறை மீது ஒருதுளி கண்ணீரைச் சிந்துங்கள்" என்று கவிதை பாடிப் புறப்பட்டதில்லை. தோழர்களைக் கூட்டி வைத்து, "உங்களில் யார் யார் இந்தப் போராட்டத்தில் பங்கு கொள்கிறீர்கள்? என்னைப் பின்பற்றி வரப் போகிறீர்கள்?" என்றும் கேட்டதில்லை. "நான் பங்கு கொள்கிறேன், உங்களில் எவராவது விரும்பினால் வாருங்கள்!" என்பார். அவரே களத்தில் முதலாவதாக இறங்குவார்.

ப.நா. வுக்கும் சாமிக்கும் ஒரே ஒரு வேறுபாடு.


ப.நா. களம் நோக்கிச் செல்லும்போதும், களங்கண்டு சிறையில் அடைக்கப்பட்டபோதும் கிடைத்ததை உண்பார்; கட்டாந்தரையிலும் கையை மடக்கித் தலைக்கு வைத்துப் படுத்துக் கொள்வார். உடன் வந்தோரின் நலன்களை உரிமைகளைப் பேணுவதில் மட்டுமே குறியாக இருப்பார். சொந்தப் பிரச்சினைகள் பற்றி அவ்வளவாகக் கவலைப்பட மாட்டார். பொதுவாழ்வில் இறங்கினால் சொந்த வாழ்க்கையைப் பொருட்படுத்தக் கூடாது என்பது அவருடைய கொள்கை. தம்மால் அவர்களுக்கு உதவ முடியாது என்பதும் அவருக்குத் தெரியும்.

சாமியோ அப்படியில்லை. இளமையிலிருந்தே சில அடிப்படை வசதிகளுடன் வாழ்ந்து பழகியதால், தாம் வசதிகளைப் பற்றியோ சொந்தப் பிரச்சினைகளைப் பற்றியோ கவலைப்படாவிடினும் உடனிருப்போரைப் பற்றிக் கவலைப்படுவார். அவர்களின் சொந்தப் பிரச்சினைகளுக்கும் தம்மால் உள்ளே இருக்கும் பொழுதும் வெளியே வந்த பிறகும் தம்மாலான உதவிகளைச் செய்வார்; அவர்களின் குடும்ப வாழ்க்கை குலைந்து போகாமல் பார்த்துக் கொள்வார்.

மக்களாட்சியை ஏற்றுக்கொண்ட நாடுகளில் பொதுவாக ஆளுங்கட்சியை எதிர்த்து, எதிர்க் கட்சியினர் போராட்டம் நடத்துவர். மிகச் சில சமயங்களிலேயே ஆளுங் கட்சியினர் தங்களுடைய அரசுக்கு ஆதரவு காட்டும் வகையில் போராட்டத்தில் ஈடுபடுவர். அத்தகைய வாய்ப்பும் சாமிக்குக் கிட்டியது.

தி.மு.கழகம் ஆட்சியில் இருந்த நேரம்...

கன்னட மொழி வெறியன் வாட்டாள் நாகராஜ் தமிழ் நாட்டிற்குச் சொந்தமான தாளவாடிப் பகுதியைக் கருநாடகத்துடன் இணைக்க வேண்டுமென்ற கோரிக்கையை முன் வைத்துப் போராட்டம் ஒன்றைத் தொடங்கினான். அதன் முதற்கட்டமாக நாட்டு எல்லைக்குள் நுழையப் போவதாக அறிவித்தான். இதையறிந்த சாமி, தமிழ்நாடு அரசு பார்த்துக் கொள்ளட்டும் என வாளா இருக்கவில்லை.



தமிழ்நாட்டின் எல்லைக்குள், தமிழ்நாட்டுக்குச் சொந்தமான பகுதியைத் தனது ...லத்துடன் இணைக்கும் நோக்கத்துடன் அவர்கள் புகுங்கால் தமிழர்கள் தாங்கிக் ...ண்டிருந்தார்கள் என்னும் பழி தமிழ் மக்களுக்கு நேரக் கூடாது; தமிழர்களும் ...வர்; நுழைவோரைத் தடுத்து நிறுத்துவர்; உள்ளே புகாதவாறு விரட்டியடிப்பர் ...பதைக் காட்ட வேண்டுமென்று துணிந்தார்.

கோபி வட்டத்திலுள்ள கழகத் தோழர்கள் ஆயிரவரைத் திரட்டினார். பத்துக்கு மேற்பட்ட சுமையுந்துகளை ஏற்பாடு செய்தார். தொண்டர்களுடன் தமிழ்நாட்டின் எல்லையை அடைந்தார். அதற்கு முன்பே தமிழ்நாட்டுக் காவலர்களும் அங்கு சென்றிருந்தனர். வாட்டாள் நாகராஜ் தனது ஆட்களுடன் தமிழ்நாட்டு எல்லைக்குள் காலடி எடுத்து வைக்க முயன்றான். சாமியும் தொண்டர்களுடன் அவர்களைத் தடுத்து முன்னே சென்றனர். காவல்துறை அதிகாரிகள் குறுக்கிட்டனர்.

உடனே சாமி அவர்களை நோக்கி, "கன்னட வெறியர்கள் நம் மண்ணில் காலடி எடுத்து வைப்பதைப் பார்த்துக் கொண்டு நாங்கள் வாளா இருக்க மாட்டோம். ஒன்று **உடனடியாக நீங்கள் நடவடிக்கை எடுங்கள். அல்லது விரட்டியடிக்க எங்களை அனுமதியுங்கள். இல்லையேல் உங்களையும் மீறி நாங்களே சென்று தடுத்து நிறுத்தி விரட்ட நேரிடும்"** என்றார். தொண்டர்களும் அவ்வாறே முழங்கினர்.

இந்த வேளையில் வாட்டாள் நாகராஜனின் ஆட்கள் நம் காவலர்களையே கல் வீசித் தாக்கத் தொடங்கினர். அதிகாரிகள் அவர்களைச் சூழ்ந்து வாட்டாள் நாகராஜனையும் அவனுடன் வந்த சிலரையும் கைது செய்தனர். மற்றவர்கள் விரட்டியடிக்கப்பட்டனர். சாமியும் கழகத் தோழர்களும் அரசுக்கு ஆதரவாகத் தமிழர்களின் எழுச்சியைக் கன்னட வெறியர்களுக்குக் காட்ட எடுத்த நடவடிக்கை வெற்றி பெற்றது. **அதன் பிறகு அந்தக் கன்னட வெறியன் இது போன்ற போராட்டம் எதிலும் ஈடுபடவில்லை.**

சாமி இவ்வாறு தேர்தல்கள், போராட்டங்கள் என்ற முறையிலேதான் தமது நாற்பதாண்டுக் காலப் பொது வாழ்க்கையைக் கழித்தாரா? காலமெல்லாம் தொண்டனாகவே வாழ்ந்தாரா? இல்லையே! இயக்கத்திலும் பல பொறுப்புக்களை ஏற்றிருந்தார். **கிளைக் கழகச் செயலாளர், வட்டக் கழகச் செயலாளர், பொதுக்குழு உறுப்பினர், மாவட்டக் கழகச் செயலாளர், கழகச் சொத்துப் பாதுகாப்புக்குழு உறுப்பினர் எனப் படிப்படியாகப் பல்வேறு பொறுப்புக்களிலும் இருந்து இயக்கத்தை வளர்த்தார்; தாமும் வளர்ந்தார். அதே போல் 1958 முதல் 1968 வரை பேரூராட்சி மன்றத் தலைவர், மாவட்ட வளர்ச்சிக் குழு உறுப்பினர் எனப் பதவிகளை ஏற்று, 1967 முதல் 1976 வரை நாடாளுமன்ற உறுப்பினராகவும் வீற்றிருந்தார். இதில் ஓராண்டுக்காலம் 1967 - 68 இல் ஊராட்சி மன்றத் தலைவர், நாடாளுமன்ற உறுப்பினர் ஆகிய இரு பதவிகளையும் உடையவராக இருந்தார். பின்னர் தம் அருமைத் தோழர்களில் ஒருவரான பி.எஸ். சேதுராமனை, ஊராட்சி மன்றத் தலைவராக்கினார்.**

மக்களால் அளிக்கப்பட்ட இப்பதவிகளில் இருந்த காலங்களில் அவர்களாற் ஆற்றிய பணிகள் என்னென்ன? இப்படிக் கேட்பதில் தவறேதுமில்லை. பொ... புன்செய்ப் புளியம்பட்டிப் பேரூராட்சி மன்றத் தலைவராக வீற்றிருந்த ... பத்தாண்டுகளில், 1958-ல் ரூ. 47,000 வருவாயுடன் செயல்பட்டு வந்த ... மன்றத்தை ஆண்டுதோறும் ரூ. 4,00,000 வருவாய் பெறக்கூடியதாக உயர்த்தினார்.

அவர் பதவியேற்ற பொழுது கோவை மாவட்டத்திலுள்ள இரண்டாவது பெரிய சந்தை என விளங்கிய புளியம்பட்டிச் சந்தையிலிருந்து ஆண்டொன்றுக்கு ரூ ... மட்டுமே ஏலப் பங்குத் தொகையாக வந்து கொண்டிருந்தது. ஏலத் தொகையில் ... விழுக்காடு பெற்றுத் தந்து அதனை 30 விழுக்காடாக உயரவும் வழி செய்தார். இதனால் ஆண்டொன்றுக்கு ரூ. 1,50,000 கிடைக்கலாயிற்று.

பேருந்து நிலையத்திற்குள் அரை வட்ட வடிவில் பூங்கா, நடுவில் காந்தி சிலை நிறுவப்பட்டது. அஃது அண்ணா அவர்களாலே திறந்து வைக்கப்பட்டது.

ரூ. 22,000 செலவில் 2.50 ஏக்கர் நிலப்பரப்பில் கிணறு, நீர் இறைவைப் பொறி ஆகியவற்றுடன் பொதுச் சுடுகாடு ஒன்று ஏற்படுத்தப்பட்டது. மின்சங்கு, நான்கு இடங்களில் வானொலிப் பெட்டி, ஊருக்குள் 10 கி.மீ. தொலைவு தார்ச்சாலைகள், ... கி.மீ. தொலைவுக்குச் சாக்கடை வசதி. ஆகிய இவை குறிப்பிட்டுச் சொல்லத்தக்க பணிகளாகும்.

நாடாளு மன்ற உறுப்பினரானதும், ரூ. 82,000 செலவில் ஊராட்சி மன்றத்திற்கு புதிய அலுவலகம் உருவாக்கப் பெற்றது. சாமியின் மீது மக்கள் கொண்டிருந்த அன்பின் அடையாளமாக ஊராட்சி மன்றம் அக்கட்டிடத்திற்கு **'பி.ஏ.சாமிநாதன் மன்றம்'** என் பெயர் சூட்டி மகிழ்ந்தது.

பொதுமக்களிடமிருந்து திரட்டப்பட்ட நன்கொடையின் மூலம் 'பொதுமறையாம்' திருக்குறளைக் கையில் ஏந்திய நிலையில் 7 அடி உயரமுள்ள அண்ணா சிலை அந்த அலுவலகத்தின் முன்பு நிறுவப்பட்டது.

வாடகைக் கட்டிடத்திலும், சத்திரத்திலும், சந்தைக்குள்ளும் நடைபெற்று வந்த தொடக்கப் பள்ளிக்கு, 1350 பிள்ளைகள் பயிலும் வகையில் ரூ. 2,00,000 செலவில் புதிய கட்டிடங்கள் கட்டப் பெற்றன.

இருபாலரும் பயின்றுவந்த உயர்நிலைப் பள்ளி 1968 இல் ஆண்கள், பெண்கள் தனித்தனியே பயிலும் இரு உயர்நிலைப் பள்ளிகளாக உருவாக்கப்பட்டன. மகளிர் பள்ளி, தொடங்க அரசுக்குச் செலுத்த வேண்டிய தொகை ரூ. 10,000-மும் செலுத்தப்பட்டது.

கோவில்புதூர் அருகிலுள்ள பள்ளத்தின் குறுக்கே ரூ. 6,98,000 செலவில் குளமொன்று அமைக்கப்பட்டதால் நூற்றுக்கு மேற்பட்ட ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெற்றன.

வாடகைக் கட்டிடத்தில் இயங்கி வந்த கால்நடை மருத்துவமனைக்குச் சொந்தக் கட்டிடம்.

பேரூராட்சி மன்றத் துப்புரவுப் பணியாளர்களுக்குக் குடியிருப்பு.

அறிஞர் அண்ணா நினைவுச் சிரணிக் கலை அரங்கம்.

பவானிசாகர் நீர்த்தேக்கப் பகுதியில் விவசாயம் செய்து கொள்ள இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட நிலமற்ற ஏழைகளுக்கு நிலமளிக்கச் செய்தல்.

பவானிசாகர் நகரியத்துக்கு உட்பட்ட கல்லாங்குத்து என்னும் ஊரில் வாழ்வோர் பட்டா இல்லாத காரணத்தால் அரசு அவர்களை வெளியேற்ற ஆணை பிறப்பித்தபோது, அதை எதிர்த்துப் போராடி அவர்களுக்குப் பட்டா வாங்கித் தந்ததால், ஊரார் அந்தப் பகுதிக்குச் 'சாமிநாதபுரம்' எனப் பெயரிட்டுத் தங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொண்டனர். இவையும் சாமியின் சாதனைகளில் சில.

இங்ஙனம் எண்ணற்ற பணிகளை ஆற்றியதன் காரணமாகவே கோபி நாடாளுமன்றத் தொகுதி மக்கள் அவரைச் "சாதனைச் செம்மல்" எனப் போற்றிப் பாராட்டி மகிழ்ந்தனர். இவை எடுத்துக்காட்டுகளே, இவைதான் அவர் ஆற்றிய பணிகள் எனக் கருதிவிடாதீர்கள்.

அந்நாளில் கழக அமைச்சரவையில் வீற்றிருந்த கலைஞர், பேராசிரியர், நாவலர், கண்ணப்பன், மாதவன், ஏ. கோவிந்தசாமி, என்.வி. நடராசன், ப.உ. சண்முகம், மன்னை நாராயணசாமி, சாதிக், க. இராசாராம், ஆதித்தனார், ஓ.பி. இராமன், கே.வி. சுப்பையா ஆகிய அனைவரும் புன்செய்ப் புளியம்பட்டிக்கும் கோபி வட்டாரத்திற்கும் வருகை புரிந்துள்ளனர். சாமியின் அழைப்பை ஏற்று அவர்கள் போகவில்லை. கழகக் கூட்டங்களில் சொற்பொழிவாற்றச் சென்று வரவில்லை. மக்களுக்குப் பயன்படும் ஏதாவதொரு திட்டத்திற்கு அடிக்கல் நாட்டவோ நிறைவு செய்யப்பட்ட திட்டத்தைத் தொடங்கி வைக்கவோ சென்றுள்ளனர். அடிக்கல் நாட்டிய திட்டம் எதுவும் கல்லளவில் நில்லாது நிறைவெய்திக் காட்சி தருவதாகவே அமைந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

இப்படித் தமிழ்நாட்டில் 1967-இல் இருந்து 1976 வரை முதல்வர்களாகவும் அமைச்சர்களாகவும் இருந்த அனைவரும் வருகைதந்தபேரூர் புன்செய்ப் புளியம்பட்டியாகத்தானிருக்கும் என்று நம்புகிறேன். இதுவும் சாமியின் சாதனைகளில் ஒன்றுதானே!



மாலைக்கு மலர் தேவை, மலருக்குத் தோட்டம் தேவை;
அதுபோலவேதான்
அரசுக்கு அழகுதர மக்களின் ஒழுக்கம் தேவை!
- அண்ணா

நாடாளுமன்ற உறுப்பினர்

1962-ஆம் ஆண்டில் நடந்த பொதுத் தேர்தலே தமிழ்நாட்டில் அரசியல் காற்று காங்கிரசுக்கு எதிராக வீசத் தொடங்கியுள்ளதைப் புலப்படுத்தியது. 1957-இல் பதினைந்து சட்டமன்ற உறுப்பினர்களையும் இரு நாடாளுமன்ற உறுப்பினர்களையும் பெற்ற தி.மு.கழகம் 62-இல் 50 சட்டமன்ற உறுப்பினர்களையும் பல நாடாளுமன்ற உறுப்பினர்களையும் பெற்றது.


அதன் பிறகு நாட்டில் ஏற்பட்ட விலைவாசி உயர்வுகள், உணவுப் பொருள்கள் பற்றாக்குறை ஆகியவை மக்களிடையே காங்கிரசின் மீது வெறுப்பை வளர்த்திருந்தன. 1965-இல் கழகம் தொடங்கிய இந்தித்திணிப்பு எதிர்ப்புக் கிளர்ச்சி, பெரும் போராட்டமாகவே உருவெடுத்தது. நாடு முழுவதும் கிளர்ந்தெழுந்தது. கழகத் தலைவர்கள் கைது செய்யப்பட்ட பின், மாணவர்களே முன்னின்று இந்தப் போராட்டத்தை நடத்தினர். கழகத்தவர் மீது மட்டுமல்லாமல் போராட்டத்தை ஆதரித்த பிற இயக்கங்களின் மீதும் காங்கிரசு அரசு அடக்குமுறையைக் கட்டவிழ்த்து விட்டது. இராணுவத்தை அழைக்க வேண்டிய அளவுக்குச் சட்டம், ஒழுங்கு சீர் குலைந்தது.

பல்லாயிரவர் சிறைப்படுத்தப்பட்டனர். பலர் துப்பாக்கிக் குண்டுகளுக்குப் பலியாயினர். மத்திய அமைச்சரவையிலிருந்த சி. சுப்பிரமணியம் அவர்களும் ஓ.வி. அழகேசன் அவர்களும் விலக வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

ஒரு வழியாகப் போராட்டம் ஓய்ந்தது. அடுத்த பொதுத் தேர்தலுக்கு இன்னும் ஓராண்டே இருந்தது. நாட்டிலே தோன்றியுள்ள எழுச்சிக்குச் சரியான வடிவம் கொடுக்கத் திட்டமிட்டார் அண்ணா. முன்னைய தேர்தல்களைக் காட்டிலும் இந்தத் தேர்தலை மிகவும் எச்சரிக்கையுடன் சந்திக்க விரும்பினார்.

தேர்தலுக்கு ஆறு மாதங்கள் இருக்கையில்... அப்போதைய கோவை மாவட்டக் கழகச் செயலாளர் ப.நா. வுடன் அண்ணாவைக் காணச் சென்றார் சாமி. அதுவரை அண்ணாவும் சரி, பிற கழக முன்னணியினரும் சரி, சுற்றுப்பயணம் என்றால் இரண்டு நாள் மூன்று நாள் என்றே நிகழ்ச்சிகள் வகுக்கப்பட்டிருக்கும். அதுவே பெரிய சாதனையாகவும் கருதப்பட்டது. இம்முறை கோவை மாவட்டத்தில் அண்ணாவைப் பன்னிரண்டு நாள்கள், ஒரு வட்டத்திற்கு ஒரு நாள், எனச் சுற்றுப்பயணம் மேற்கொள்ளச் செய்வது; அப்பொழுதே தேர்தல் நிதியும் அளிப்பது என்கிற திட்டத்துடனேயே அவர்கள் அண்ணாவைக் காணச் சென்றனர்; கண்டனர்.

அண்ணாவிடம் இருவரும் தங்கள் திட்டத்தை விளக்கினர். கேட்ட அண்ணா வியந்து போனார். "சரி, நான் பன்னிரண்டு நாள்களை ஒதுக்குகிறேன். முழுவதுமாக உங்களால் என்னைப் பயன்படுத்திக் கொள்ள முடியுமா?" என்று கேட்டார். இருவரும் உறுதியளித்தனர். அப்பொழுதே தேதியும் தந்தார் அண்ணா.



னர் திரும்பியதும் கழகத் தோழர்களைக் கலந்து பேசி, ஒவ்வொரு வட்டத்திலும் நிகழ்ச்சிகளுக்குக் குறைவில்லாமல் வைத்துக் கொள்வது; எல்லா இடங்களிலும் பொதுக்கூட்டங்களுக்கு ஏற்பாடு செய்ய முடியாது. அதனால் வழியில் உள்ள ஊர்களில் கொடியேற்றச் செய்வது எனத் திட்டம் வகுத்தனர் சாமியும், ப.தா.வும்.

அண்ணா, கோவை வந்தார். அவரைக் கழகத் தொண்டர்களுடன் மாவட்டச் செயலாளராகிய ப.தா.வும் பொதுக்குழு உறுப்பினராகிய சாமியும் வரவேற்றனர். அன்றே அண்ணாவின் சுற்றுப்பயணம் தொடங்கியது. கழகக் கொடியேற்றல், கழகக் கூட்டம் என்ற மட்டுமில்லாமல் கோபி, ஈரோடு ஆகிய நகரங்களில் வழக்கறிஞர் சங்கக் கட்டடங்களிலும் உரை நிகழ்த்துவதற்குச் சாமி ஏற்பாடு செய்திருந்தார். அத்துடன் நகராட்சி மன்றங்களின் சார்பில் அண்ணாவுக்கு வரவேற்புக்களும் அளிக்கப்பட்டன.

இந்தச் சுற்றுப் பயணத்தின் போது சென்னை மாநகரத் தந்தையாகவும் நாடாளுமன்ற உறுப்பினராகவும் இருந்து மிசாவில் சிறைப்படுத்தப்பட்டு, சென்னை மத்திய சிறையில் வீர மரணமடைந்த தோழர் எஸ்.வி.சிட்டிபாபு, கோவை இராமநாதன், சட்டமன்ற உறுப்பினராக இருந்த கோவை கோவிந்தராசன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

ப.தா. அவர்கள் கழகத் தலைவர்கள் அனைவருக்கும் நன்கு அறிமுகமானவரென்றாலும் அவருக்கே உரிய கூச்ச இயல்பால் பெரும்பாலும் தலைவர்களுடன் பயணம் செய்ய விரும்பமாட்டார். அவர்களுக்கு முன்போ பின்போ கழகத் தோழர்களுடனேயே பயணம் செய்வார்.

இம்முறையும் அவ்வாறே அண்ணா பயணம் செய்த சாமிக்குச் சொந்தமான எம்.எஸ்.எக்ஸ். **9811** இல் பயணம் செய்யாமல் வேறொரு வண்டியில் கோவை இராமநாதன், கோவிந்தராசன் ஆகியோருடன் பயணம் செய்தார். சாமி, அண்ணா, சிட்டிபாபு ஆகியோருடன் பயணம் மேற்கொண்டார். **1958** முதல் முப்பது ஆண்டுகள் சாமியிடம் ஓட்டுநராகவும் மெய்க்காவலராகவும் இருந்த சுப்பையனே அவர்கள் பயணம் செய்த காரினை ஓட்டினார்.

ஒரு நிகழ்ச்சியை முடித்துக் கொண்டு இன்னொரு நிகழ்ச்சிக்குச் செல்லுங்கால், அந்த இடைவெளிகளில் அண்ணா, சாமியிடம் மனந்திறந்து பல கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டார். அவற்றுள் ஒன்று இயக்க முன்னணியினருள் ஒருவரைப் பற்றியது.

"இந்த இயக்கத்தில் ஏறத்தாழ எல்லாருமே கழகப்பணி, சொந்தக் கடமைகள் - கழகம் எடுக்கும் முடிவை நிறைவேற்றுவது என்கிற அளவிலேயே இருக்கின்றனர். அதனால் ஒருவகையில் எனக்கும் பிரச்சினைகள் எதுவும் எழுவதில்லை. கடுகளவும் குழப்பமோ தயக்கமோ இன்றி இயக்கத்தை நடத்திச் செல்ல உதவுகிறேன். நாவலர், என்.வி.என்., பேராசிரியர், மதி போன்றோரிடம் இன்னும் நிறைய எதிர்பார்க்கிறேன்.

அண்ணா எதனையும் எளிதில் வெளியிடமாட்டார். அதே வேளையில் பிறருடைய குறை - நிறைகளை உள்ளத்தில் எடை போட்டு வைத்துக் கொள்வார். வெளியிட்டுத் தீர வேண்டிய கட்டாயம் ஏற்பட்டால் மட்டுமே நம்பகமானவர்களிடம் சொல்லி ஆறுதல் பெறுவார்.

இந்தச் சுற்றுப் பயணத்தின் பொழுது கோவை மாவட்டத்து மக்களிடையே ஏற்பட்டுள்ள எழுச்சியைக் கண்டு அண்ணா பெரிதும் மகிழ்ந்தார். அந்த மகிழ்ச்சியின் விளைவு! ஒவ்வொரு நாளும் திட்டமிட்டபடி நிகழ்ச்சிகளை நடத்த முடியவில்லை. சில ஊர்களில் அய்ந்து நிமிடமோ பத்து நிமிடமோ பேசுவார் என எதிர்பார்த்த அங்கெல்லாம் அரைமணி நேரத்திற்கு மேல் பேசினார்; மக்களை மன நிறைவு பெறச் செய்தார். ஒரு முறை கோபி வட்டத்தில் காலை ஒன்பது மணிக்கு அண்ணாவின் நிகழ்ச்சி தொடங்கியது. விடியற்காலை மூன்று மணிக்கெல்லாம் நிறைவுபெறும் என்பது அவர்களின் எதிர்பார்ப்பு. ஆனால் மறுநாள் காலை ஆறு மணிக்கு ஊராட்சி மன்ற சங்கு ஒலிக்கும் பொழுதும் அவர் பேசினார்.

அண்ணா மொத்தம் 186 நிகழ்ச்சிகளில் பங்கு கொண்டார். தேர்தல் நிதியாக அவரிடம் ரூ. 86,000 வழங்கப்பட்டது. இந்தச் சுற்றுப் பயணத்தின் போது சிறியூர், பேரூர் எனக் கருதாது கூட்டத்தின் அளவைப் பற்றிக் கவலைப்படாது; செய்திருந்த ஏற்பாட்டின் சிறப்புக்களை எடை போடாது சொற்பொழிவாற்றியதும் கொடியேற்று விழாக்களில் பங்கு கொண்டதுமாகிய அண்ணாவின் உயர்ந்த பண்புகள் சாமியையும் மற்ற தோழர்களையும் புல்லரிக்கச் செய்தன.

அண்ணாவைப் பற்றி நினைக்கும் பொழுதெல்லாம் அவருடைய மேலான பண்புகளை எண்ணி, '*அண்ணா ஒருவரே தலைவர், மற்றவர்கள் தலைமைப் பொறுப்பில் இருப்பவர்கள்*' என்கிறார். இந்தச் சுற்றுப் பயணத்தின் போது சாமியின் நெஞ்சை நெகிழ வைத்த நிகழ்ச்சியொன்றும் நடந்தது. அண்ணா தொடர்ந்து ஆறு நாள்கள் திட்டமிட்டிருந்த எல்லா நிகழ்ச்சிகளிலும் கலந்து கொண்டே வந்தார்.

6 நாள் நிகழ்ச்சிகள் முடிந்ததும், அண்ணா சாமியிடம், "*சாமிநாதன் எல்லா* ஏற்பாடுகளையும் மிகச் சிறப்பாகவே செய்திருக்கிறீர்கள். மக்களும் என் பேச்சை விரும்பிக் கேட்கின்றனர். எனக்கு மிகுந்த மன நிறைவை அளிக்கின்றது. ஆனால் நீங்களெல்லாரும் என் சுற்றுப் பயணம் சிறப்பாக அமைய வேண்டும் என்பதிலேயே கருத்தாக இருக்கிறீர்கள். *என் வயதையும் உடல் நலத்தையும் மறந்து விட்டீர்கள்*" என்று சிரித்துக் கொண்டே கூறினார்.

இதைக் கேட்டதும் *சாமியின் நெஞ்சம் நெகிழ்ந்து போயிற்று*. கண்கள் பனித்தன. "நாம் எதையெதையோ பற்றிச் சிந்திக்கிறோம். அண்ணா குறிப்பிட்ட இவ்விரண்டையும் பற்றி நினைக்கவில்லையே". எனப் பெரிதும் வருந்தினார். அப்பொழுதும் அண்ணாவிடம், "அண்ணா! ஒருநாள் ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள். அதன் பின் நிகழ்ச்சியைத் தொடங்குவோம்' என்று சொல்லி, அவ்வாறே மேலைய



[illegible] கொண்டார். [illegible] அண்ணாவின் 12 நாள் சுற்றுப் பயணம் 19 நாள்களாக [illegible] நிகழ்ச்சிகளைக் [illegible] சுற்றுப் பயணம் அண்ணாவுக்கு [illegible] இது.

கழக வேட்பாளர்களை தேர்வுக்கான ஆய்வுக் குழுவைக் கலைக்காமலே தலைமைக் கழகத்தின் ஒப்புதலைப் பெறாமலே அவர், பொள்ளாச்சி நாடாளுமன்றத் தொகுதியில் நாராயணனும், கோபி நாடாளுமன்றத் தொகுதியில் சாமிநாதனும் கழக வேட்பாளர்களாகப் போட்டியிடுவார்கள் என அறிவித்தார். அப்பொழுதே மற்றவர்கள் [illegible] கூடாது என்பதற்காகப் பவானி சட்டமன்றத் தொகுதியிலும் [illegible] சட்டமன்றத் தொகுதியிலும் முறையே இராசாவும் குட்டப்பனையும் போட்டியிடுவர் எனவும் அறிவித்தார்.

அண்ணாவின் சுற்றுப் பயணம் வெற்றிப் பயணமாக நிறைவுற்றது. பத்து நாள்கள் கழித்து சாமி சென்னை சென்றார். கலைஞரைக் கண்டார். சாமியைக் கண்டதும் கலைஞர் "என்ன சாமிநாதன்! அண்ணாவை அழைத்துப் போய் நீயும் நாராயணனும் வேட்பாளர்களை அறிவிக்கச் சொல்லியிருக்கிறீர்களே!" என்றார். உண்மையைச் சொன்னால் கலைஞர் ஏற்க மாட்டார் என்பது தெரியும். இதுபோன்ற குறும்பு பேச்சுகள் அவர் வாயிலிருந்து வருவது இயல்புதானே! இதைப் போய்ப் பெரிதுபடுத்தி அவருடன் விவாதிக்கக் கூடாது என அமைதியாக இருந்துவிட்டார் சாமி.

இந்தக் குறும்புப் பேச்சுக்கு விளக்கமளிக்க விரும்பவில்லையாயினும், உடனே அவரிடம் "நீங்களும் எங்கள் மாவட்டத்தில் பத்து நாள்களுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொள்ளுங்களேன். அதற்காக உங்களை அழைக்கவே வந்தேன்" என்றார். மற்ற மாவட்டங்களில் அப்படிக் கேட்டிருந்தால் பத்து நாள்களா? என வியப்பை வெளியிட்டிருப்பார். என்ன ஓய்வெடுக்கக் கூப்பிடுகிறாயா? அல்லது கழக நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளக் கூப்பிடுகிறாயா? என்று கேட்டிருப்பார். அண்ணாவின் சுற்றுப்பயண நிகழ்ச்சிகளை 'நம்நாடு ஏட்டில்' பார்த்திருப்பார். கழகத் தோழர்களிடம் கேட்டுத் தெரிந்திருப்பார். அதனால் எந்த மறுப்பும் கூறாது நாள் கொடுத்தார்.

கலைஞர் தமக்கே உரிய இயல்புகளுடன் சுற்றுப் பயணத்தின் போது நடந்து கொண்டாலும் அதையும் மாவட்டக் கழக நிருவாகிகளுடன் இணைந்து வெற்றியுடன் நிறைவு பெறச் செய்தார் சாமி. ஓர் ஊரில் அரை மணி நேரமாவது பேசுவார் என எதிர்பார்க்க ஐந்து நிமிடங்களில் முடித்துக் கொள்ளுதல்; சில இடங்களில் காரை விட்டு இறங்கிக் கொடியேற்ற மறுத்தல் போன்றவற்றால் சாமியும் கழக முன்னோடிகளும் கொஞ்சம் மனவருத்தமடையவே செய்தனர். கேட்டால் கோபித்துக் கொள்வாரோ என அஞ்சி வாளாவிருந்தனர்.

அந்தச் சுற்றுப் பயணத்தின்போது கோவை மாவட்டத்தின் சார்பில் ரூ. 73,[illegible] தேர்தல் நிதியாக அவரிடம் அளிக்கப்பட்டது. பணத்திலே குறியாக இருக்கும் அவர் மகிழ்ச்சியுடன் அந்த நிதியை ஏற்றுக் கொண்டார்.

தேர்தல்கள் அறிவிக்கப்பட்டன. அண்ணா அறிவித்தது போலவே பொள்ளாச்சி நாடாளுமன்றத் தொகுதியில் ப.நா.வும், கோபி நாடாளுமன்றத் தொகுதியில் சாமியும் கழகத்தின் சார்பில் போட்டியிடுவதாக முடிவாயிற்று. தாராபுரம் தனித் தொகுதியில் சி.டி.தண்டபாணியும் மற்றும் சட்டமன்றத் தொகுதிகளுக்கும் வேட்பாளர் பட்டியல் வெளியிடப்பட்டது. பொள்ளாச்சித் தொகுதியில் சி. சுப்பிரமணியம் அவர்கள் நிற்கப் போவதாகச் செய்தி. செய்தியாளர்கள் அவரைச் சந்தித்து "உங்களை எதிர்த்து தி.மு.கழகத்தின் சார்பில் உடுமலை நாராயணன் போட்டியிடப் போவதாக அறிவிக்கப்பட்டுள்ளதே!" என்றனர்.

சி.சு. அவர்கள் சிரித்துக் கொண்டே, "ஒரு வேளை அந்த வைகுந்தத்தில் இருக்கும் ஸ்ரீ நாராயணன் வந்து போட்டியிட்டால் என்னை வெற்றி பெறலாம். இந்த உடுமலை நாராயணனால் என்னை வெல்ல முடியாது" என்று வீராப்பாகப் பேசினார்.

வேட்பு மனுக்கள் அளிக்க வேண்டும்! சி. சுப்பிரமணியம் பொள்ளாச்சித் தொகுதிக்கு வேட்புமனு தாக்கல் செய்யவில்லை. நேரே கோபி சென்றார். அங்கே தமது வேட்பு மனுவைத் தாக்கல் செய்தார். **ஆசானை வெல்வேன் என வீர முழக்கமிட்டவன் மாணவனுடன் மோதச் சென்றார்.** தேர்தலில் சி.சு. தோற்றார். **ப.நா. வின் அரசியல் மாணவன் சாமி வென்றார்.** சாமி, கோபித் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினரானார்.

கோவை மாவட்ட அளவில் அரசியலில் முன்னோடியாகி, தி.மு.க. தலைமைக்கும் அறிமுகமாகி இருந்த சாமி, சி.சு. அவர்களை வென்றதன் மூலம் டில்லிக்கும், டில்லியின் வாயிலாக உலகத்திற்கும் அறிமுகமானார்.

அவரது பணிகள் பன்மடங்கு பெருகின. வாரத்தில் மூன்று நாள்கள் வீட்டில் தங்கியவர் மாதத்தில் மூன்று நாள்கள் தங்குவதே அரிதாயிற்று. புளியம்பட்டியில் வீட்டில் அவரைக் காண வரும் கூட்டத்தில் பாதி அவரைக்காணச் சென்னைக்கும் வந்தது. உணவுண்டு வாருங்கள் எனப் பணங் கொடுப்பதுடன் வேலை முடிந்து ஊருக்குப் புறப்படுபவரைப் பார்த்து இரயிலுக்குப் பணமிருக்கிறதா? என்று கேட்டு கொஞ்சம் தயங்கினால் 'இந்தாங்க' என்று அம்பது ரூபாயை எடுத்து நீட்டும் நாடாளுமன்ற உறுப்பினரைக் காணும் பேறு எனக்கும் கிட்டியது.

சம்பூர்ணத்தின் பொறுப்புக்களும் பணிகளும் நாளும் வளர்ந்தன. **1970 இறுதியில் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டது.** தேர்தலும் அறிவிக்கப்பட்டது. அப்போது தமிழ் நாட்டில் முதலமைச்சராக இருந்த கலைஞர் சட்டமன்றத் தேர்தலையும் நாடாளுமன்றத் தேர்தலையும் நடத்த முடிவெடுத்தார். தேர்தல் பணிகள் தொடங்கின. கோவை மாவட்டத்தில் நாடாளுமன்றத் தொகுதிகளில் போட்டியிட்டு வென்ற ப.நா., **சாமி, சி.டி. தண்டபாணி ஆகிய மூவரும் தத்தம் தொகுதிகளிலேயே நிறுத்தப்பட்டனர்.**

இம்முறை தேர்தலில் எம்.ஜி.ஆர். சற்றுக் கூடுதலாக ஈடுபட முன்வந்தார். அதுவரை கோவை மாவட்டக் கழகத்தைப் பொறுத்தவரை யார் தலைமைப் பொறுப்பில் இருக்கிறார்களோ அவர்களையே மதித்து வந்தது. தலைமைக்கு எதிராகத் தான் கொடுத்துக் கூட்டஞ்சேர்ப்போரின் பக்கம் சாயாமலே இருந்து வந்தது. கோவை மாவட்டத்தைச் சேர்ந்த சம்பத். சொல்லின் செல்வர் என அனைவராலும் போற்றப்பட்டவரே கழகத் தலைமைக்கு எதிராகக் குரலெழுப்பிய போது தலைமையின் பக்கமே- அண்ணாவின் பக்கமே நின்றது கோவை மாவட்டக் கழகம்.

71 தேர்தல் பணிகள் தொடங்கியதும் எம்.ஜி.ஆர்., ப.நா.வையும், சாமியையும் புதிய படப்பிடிப்பு நிலையத்திற்கு வருமாறு அழைப்பு விடுத்தார். அவரும் இயக்க முன்னணியினர் பட்டியலில் இருக்கிறார். அவருடைய பிரச்சார உதவியும் தேவைப்படுகிறது என்பதால், இருவரும் அவரைக் காணச் சென்றனர். இதற்கு முன் எப்போதும் இல்லாத அளவுக்கு மிகுந்த பாசத்தைச் சொரிந்தார் எம்.ஜி.ஆர். தேர்தலில் வெற்றி பெற எல்லா ஒத்துழைப்பையும் அளிப்பதாகத் தெரிவித்தார். 1967-ஆம் ஆண்டில் நடைபெற்ற தேர்தலின்போது மாவட்டக் கழகத்திற்குப் பிரச்சாரத்துக்கென புதிய ஜீப் ஒன்றை வழங்கியிருந்தார். அதை இப்பொழுது நினைவுபடுத்தினார்.

இதற்கும் மேலாக, "உங்களை எதிர்த்துச் சம்பத் போட்டியிடுவதாகத் தெரிகிறது. நீங்கள் எப்படியும் அவரைத் தோற்கடித்தாக வேண்டும். ஆகையால் நானே உங்கள் தொகுதியில் மூன்று நாள்கள் பிரச்சாரத்திற்கு வருகிறேன்" என்றார்.

வெளியில் வந்தவுடன உரையாடலின் போது அவர் வாயிலிருந்து வெளிவந்த சில கருத்துக்களைக் குறிப்பிட்டு "இவரால்தான் இந்த இயக்கம் பிளவுபடப் போகிறது" என்று ஒரே வரியில் கூறிவிட்டுக் காரில் அமர்ந்தார் ப.நா. கலைஞருக்கும் எம்.ஜி.ஆருக்கும் மோதல் உச்ச கட்டத்தை அடைந்திருப்பதும் அவர்களுக்கு ஓரளவு புரிந்தது.

எம்.ஜி.ஆர். கழகத்தில் இருக்கும்வரை அவரைப் பயன்படுத்திக் கொள்ளுவதில் தவறில்லை என்ற அடிப்படையில் அவர் கொடுத்த தேதிகளில் கோபி நாடாளுமன்றத் தொகுதிச் சுற்றுப் பயணத்திற்கு ஏற்பாடு செய்தார் சாமி. எம்.ஜி.ஆரும் வந்தார். புளியம்பட்டி, சத்தியமங்கலம், கோபி ஆகிய மூன்று தொகுதிகளில் கூட்டம் நடைபெற்றது. கோபிக் கூட்டம் முடிந்ததும் நேரே கோபி விருந்தினர் மாளிகைக்குக் காரை ஓட்டச் சொன்னார். அங்கே சென்றதும் தமக்குத் தலைவலி என்று கூறிப் படுக்கையில் படுத்துக் கொண்டார்.

அவர் மூன்று சட்டமன்றத் தொகுதிகளில் பத்துக் கூட்டங்களில் பேச வேண்டும். சாமியும் கழக முன்னணித் தோழர்களான எஸ்.ஏ. இராசமாணிக்கம் போன்றோர் என்ன செய்வதென்றறியாமல் தவித்தனர். கடைசியில் அவரிடம் போய், "நாங்கள் தேர்தல் பிரச்சாரத்திற்கு வருமாறு வற்புறுத்தி அழைக்கவில்லை. நீங்களேதான் சம்பத்தைத் தோற்கடிக்க வேண்டும். நானே வருகிறேன் என்றீர்கள். அதன்படிதான் நாங்கள்

கூட்டங்களுக்கு ஏற்பாடு செய்தோம். இப்படிப் பாதியில் நிறுத்திக் கொண் தேர்தலின் போக்கே மாறிவிடலாம்" எனச் சற்றுக் கடுமையாகவும் பணிவுட தெரிவித்தனர்.

உண்மையில் எம்.ஜி.ஆருக்குத் தலை வலியில்லை. கலைஞருக்குத் தலைவ உண்டாக்கத் திட்டமிட்டிருந்த அவர் தம் சதிக்கு ஆள் சேர்க்க இப்படியொரு நாடகத்தை நடத்தினார் என்பது அப்பொழுதே தெரிந்து விட்டது.

"கலைஞர் போக்கே சரியில்லை" எனத் தொடங்கி அவர் மீது குற்றச்சாட்டுகளை அடுக்கிவிட்டு, "தேர்தல் முடிந்ததும் இந்தப் பிரச்சினைகளை நீங்கள் கிளப்ப வேண்டும் கிளப்புவதாக உறுதியளித்தால் பிரச்சாரத்தைத் தொடருவேன்" என்று சொல் முடித்தார். இந்த நெருக்கடியான கட்டத்தில் எம்.ஜி.ஆருடன் வாதிட்டு கொண்டிருக்க முடியுமா? அண்ணாவுக்குப்பின் கலைஞரையே தலைவராக ஏற்றிருக்கும் சாமியும் வேறு வழியின்றி அப்போதைக்குக் காரியம் நடக்கட்டுமென்பதற்காக அவ்வாறே செய்வதாக உறுதியளித்தார். எம்.ஜி.ஆர் பிரச்சாரம் தொடர்ந்தது.

இந்த நிகழ்ச்சி நடைபெற்ற இரண்டாவது நாளே சாமியும், என்.வி. இராசமாணிக்கம் போன்றோரும் கலைஞரைச் சந்தித்து எம்.ஜி.ஆர். போக்கினை சுட்டிக் காட்டினர்.

இந்தத் தேர்தலிலும் சாமியே வெற்றி பெற்றார்.

தேர்தல் முடிந்த சில மாதங்களிலேயே தமிழ்நாட்டில் அரசியல் சூறாவளி ப.நா.வின் கூற்று உண்மையாயிற்று. சாமி இறுதிவரை கலைஞர் பக்கமேநின்றார்.

ஆயினும் கழகத்தை ஒருவகையான நோய் பற்றிக் கொண்டது.

1971-ஆம் ஆண்டு தேர்தல் வரையிலும் கூடக் கழகம் தமிழ்நாடு முழுவதிலும் சிறுபான்மைச் சமுதாயத்தைச் சேர்ந்தோரிடமே இருந்தது. மாவட்ட செயலாளர்களிலிருந்து தலைமைச் செயற்குழு வரை அவர்களே இடம் பெற்றிருந்தனர். சிறுபான்மை, பெரும்பான்மை என்கிற வேறுபாட்டுணர்ச்சியே எழவில்லை. தேர்தலில் வெற்றிபெறக் காங்கிரசு ஒரு காலத்தில் கையாண்ட பெரும்பான்மைச் சமூகத்தினரை தேர்தலில் நிறுத்தும் கொள்கை கழகத்திலும் தலையெடுத்து நாளடைவில் கழகப் பொறுப்புகளையும் அவர்களே கைப்பற்றும் நிலைமை உருவாகிவிட்டது. சிறுபான்மைச் சமுதாயத்தினரின் உழைப்பால், தியாகத்தால் வளர்ந்த திராவிட முன்னேற்றக் கழகத்தில் இன்று நியமன உறுப்பினர் என்ற மரியாதையைப் பெறுவோராக இவர்கள் பிற்படுத்தப்பட்டோராக - ஒதுக்கப்பட்டோராக ஆக்கப்பட்டு வருகின்றனர். இஃது எங்கு போய் முடியுமோ?



சிதம்பரம் பூங்காவிலிருந்து மாநாட்டிற்குப் பயன்பட்ட பொருள்களிற் பெரும்பகுதி இன்னமும் அப்புறப் படுத்தப்படவில்லை. அப்புறப்படுத்தப்படும் பணி சிறிது சிறிதாக நடைபெற்று வந்தது.

இதற்குள் ஒருமாதம் கடந்து விட்டது.

1976-ஆம் ஆண்டு சனவரி இறுதி வாரத்தில் சாமி ஈரோட்டுக்கு வந்திருந்தார். அங்கு நடைபெறும் கழக நிகழ்ச்சியொன்றில் பங்கு கொள்ளவே அங்கு வந்தார். அங்கே அவர் பேசிக் கொண்டிருக்கையில் மயக்கமுற்றார்; நண்பர்களின் உதவியால் மெதுவாக நாற்காலியில் உட்கார்ந்தார்.

நீண்ட காலமகவே சாமி நீரிழிவு நோய் என்னும் சர்க்கரை வியாதியைச் சுமந்து வருகிறார். மருத்துவ நண்பர்களின் அறிவுரைப்படியே உணவு, மருந்து ஆகியவற்றை உரிய காலத்தில் முறையாக உண்டு வருபவர் அவர். மாநில மாநாட்டின் பொழுது தமது உடலைப் பேணிக் கொள்ளத் தவறி விட்டார். பேணிக்கொள்ளவும் முடியாதே! ஆயிரம் வேலைகள் இருந்தாலும் தம்மையும் தமது குடும்பத்தையும் அப்போதைக்கப்போது கவனித்துக் கொள்ளும் கலையை அவர் என்றும் கற்றுக் கொண்டதில்லை. பணிகள் முழுவதும் முடிக்கப்பட்ட பிறகு, அது தொடர்பான வேலைகள் அனைத்தும் நிறைவேறிய பிறகே உணவு உண்பார்; உடலையும் பேணுவார்.

ஒரு மாதத்திற்கு மேலாக மாநாட்டுப் பணிகள், அதன்பின் அது தொடர்பான அலுவல்கள் தொடர்ந்தன. எனவே உடல்நலம் மிகுதியும் பாதிக்கப்பட்டது. பேசிக் கொண்டிருக்கும் பொழுதே மயக்க மடைந்தார். உடனே மருத்துவர் வரவழைக்கப்பட்டார். சர்க்கரை உடலில் மிகுதியாகியுள்ளது; உடனடியாக மருத்துவம் மேற்கொண்டாக வேண்டுமென மருத்துவர் வற்புறுத்தினார். மருத்துவரிடம் முதலுதவி பெற்றதும் ஊருக்குச் சென்றார்.

சென்னை இராயபுரத்தில் இயங்கிவரும் நோய்க்கான ஆராய்ச்சி மற்றும் சிகிச்சையளிக்கும் நிறுவனத்திற்குப் போய் உடற் பரிசோதனையும் சிகிச்சையும் செய்து கொள்ளுவதெனத் தீர்மானித்தார். அதன்படியே கோவை வந்து 30-1-1976 ஆம் நாளன்று விமான நிலையத்திலிருந்து இராயபுரம் சென்றார். அங்கு உடல் பரிசோதனையும் சிகிச்சையும் தொடங்கின.

அடுத்தநாள் கழக ஆட்சி கலைக்கப்பட்டது. கழகத் தோழர்கள் சிறைப்படுத்தப்படும் செய்தியும் அவருக்கு எட்டியது. எப்படியும் தன்னையும் சிறைப்படுத்துவார்கள் என எதிர்பார்த்தார். பிப்ரவரி முதல் நாளன்றே மருத்துவமனையிலிருந்து வெளியேறினார். தான் தங்கியிருந்த இடத்திலோ, பயணத்தின் போதோ, தன்னைச் சிறைப்படுத்துவதை அவர் விரும்பவில்லை. அண்ணா நினைவகம் சென்று மலர் வளையம் வைப்போம். தனது வருகையை அறிந்து கைது

[illegible] விடுதிக்கு வருமாறு சொன்னார்.

பிப்ரவரி இரண்டாம் நாள் காலையில் தோழர் [illegible] காரில் வைத்திருந்த மலர் [illegible] அண்ணா நினைவகம் வந்தார். [illegible] அண்ணா நினைவகத்துக்குள் சென்றார். கல்லறையின் மீது மலர் [illegible] வைத்து வணங்கிவிட்டு வெளியே வந்தார்.

நுழைவாயிலில் நின்றிருந்த காவல்துறை அலுவலர் ஒருவர் சாமியின் அருகில் வந்தார். "நீங்கள் தானே பி.எ. சாமிநாதன்?" "ஆமாம்!"

"உங்களோடு கொஞ்சம் பேச வேண்டும். உங்கள் காரைக் [illegible] ஏறுங்கள், வழியில் பேசுவோம்."


"ஓ! தாராளமாக"

சாமி எதிர்பார்த்ததுதானே, சொல்லியதும் அந்த அலுவலருடன் காரில் சென்று அமர்ந்தார். கார் புறப்பட்டதும் அவர், "நீங்கள் கைது செய்யப்பட்டிருக்கிறீர்கள். சென்னை மாநகரக் காவல் துறை ஆணையர் அலுவலகத்திற்கு உங்களைக் கொண்டு போகிறேன்" என்றார்.

"மகிழ்ச்சி" என்ற சாமி, "நான் அமைச்சர் கண்ணப்பன் இல்லம் செல்ல வேண்டும். அங்கு அரைமணி நேரம் இருந்து சில அலுவல்களை முடிக்க வேண்டும். அனுமதிப்பீர்களா?" என வினவினார். அலுவலர் சாமியின் வேண்டுகோளை ஏற்றார். கார் கண்ணப்பனின் இல்லம் நோக்கிச் சென்றது.

அங்குச் சென்றதும் கலைஞருக்கு ஒரு கடிதமும், சம்பூர்ணத்திற்கு ஒரு கடிதமும் எழுதினார். அவற்றைக் கண்ணப்பனிடம் தந்துவிட்டு அவரிடமிருந்து விடை பெற்றதும், நேரே காவல்துறை ஆணையர் அலுவலகம் அழைத்துச் செல்லப்பட்டார். அன்று இரவு நீலகிரி விரைவு வண்டியில் கோவைக்குக் கொண்டு செல்லப்பட்டார். 03-02-1976 ஆம் நாள் காலையில் தனது வருகைக்காகக் காத்திருந்த குடும்பத்தினரைக் கண்டு அவர்களிடமும் விடை பெற்றார். அங்கிருந்து கோவை மத்திய சிறைச்சாலையில் 04-02-1976 ஆம் நாள் முதல் மிசாக் கைதியானார். 23-01-1977 ஆம் நாள் விடுதலை பெற்று வெளியே வந்தார். அந்த ஓராண்டுக்கால நினைவுகளையும் செயல்களையும் தொகுத்தளிப்பின் தனி நூலாகவே அமையும். சான்றுக்காகச் சிலவற்றை மட்டும் இங்குக் குறிப்பிடுகின்றேன்.

"24 ஆண்டுகளுக்கு முன்பு மும்முனைப் போராட்டக் காலத்தில் இருமாதங்கள் சிறையில் இருந்துள்ளேன். அதன்பின் சிலமுறை குறுகிய நாள்கள் அல்லது சில வாரங்கள் கைது செய்யப்பட்டுச் சிறையில் இருந்திருக்கிறேன்.



...அனுபவமும் பல்வேறு சூழ்நிலைகளும் கால ஒட்டங்களும் பொது நலப் ... தொடக்கமும் பின்னர் வேகமாகக் கழகம் வளர வளர நாங்களும் வளர்ந்த ...ளும் இப்போதுள்ள புதிய அரசியல் சூழ்நிலையில் தீதான ஒரு மிசா சட்டப்படிக் ...ற்றி இப்போது சிறையிலிருந்துகொண்டிருப்பதும் 46 வயதுக்குள் ஒரு ...மான அனுபவம் - பக்குவமான அரசியல்வாதி என்ற தகுதியை அடைந்து ...தாகவே எண்ணிக் கொண்டிருக்கிறேன்.

"குறைந்தளவு இன்னும் 6 மாதம் சிறையில் இருந்தாக வேண்டும் என்று ...கிறேன்; நான் குடும்பத்தின் தலைவன் என்கிற முறையில் குடும்பக் கடமைக்காக ...வெளியே இருக்க வேண்டுமேதவிர - அரசியல்வாதி என்கிற முறையில் - பொது ...யில் ஜனநாயக மரபுப்படி மக்களுக்குப் பணியாற்றிடும் ஊழியன் என்கிற ...முறையில் பார்த்தால் வெளியே ஊமையாக இருப்பதைவிடச் சிறையில் இருப்பதையே ...மன நிம்மதியாகக் கருதுகிறேன்.

"வெளியில் வந்தாலும் இத்தனை ஆண்டுகளாக இல்லாது இனிமேல் புதிதாகக் ...டும்பத்தைமட்டும் கவனித்துக் கொள்ளும் மனிதனாக மட்டுமே இருந்துவிட ...னால் முடியாது. என் மனசாட்சியும் இடந்தராது... என் நண்பர்களுக்கும் கட்சி ...ப் பிறப்புக்களுக்கும் என் நன்றி சொல். வறுமையால் வாடும் கட்சித் தோழர்களுக்கு ...ன் உதவுவது போலவே சக்தி உள்ளவரை தொடர்ந்து உதவி செய்துவா? 'விஸ்கோஸ்' ...நிர்வாகத்திடம் கேட்டுத் தொழிற்சாலை மூடிக் கிடப்பது உட்பட தற்போதுள்ள நிலை ...விவரமும் ஓர் கடிதமாகவே வாங்கி அனுப்பி வைக்கவும்.

பவானிசாகர், நம்பியூர் இரு ஒன்றியங்களின் கழகக் காவலர் கூட்டம் ஒன்றைக் ...வைஞர் அரங்கில் நடத்திக் கழகத்தவர் மத்தியில் உணர்ச்சி மங்காது பார்த்துக் ...கொள்ளுமாறு பன்னீர் செல்வம், முருகேசிடம் கூறவும். அதேபோல் வெங்கிடு, கோபி, ...பு.ம. பழனியப்பன், ஒன்னமாரண்ணன் ஆகியோரிடமும் கூறவும். வீட்டில் கழகக் ...கொடியை அடிக்கடி கவனித்துப் புதுப்புதுக் கொடியாகவே பறக்க விடவும். ...நம்பூரிசியிடம் மூன்று நாள் தேதி கேட்டு, நீயே கைப்பட ஒரு கடிதம் எழுதி தேதி ...கிடைத்தவுடன் கூட்டங்கள் ஏற்பாடு செய்யவும்.

"எனக்கு மதத்திலும் உருவ வழிபாட்டிலும் துளிகூட நம்பிக்கை இல்லை. மேலும் ...டவுளை வணங்குவோர் அனைவரும் தானும் தன் மனைவியும் தன் மக்களும் நோய் ...நொடியின்றி வசதிகள் பல பெற்று வளமாக வாழவேண்டும் என்றுதான்- ஒவ்வொரு ...வரினரும் - உலகம் முழுவதுமே இப்படித்தான் வேண்டி இறை வழிபாடு ...செய்கிறார்கள். இதில் அடிப்படையே தவறானது. ஆரம்பமே குடும்ப நலன் என்ற ...சுயநலத்தோடு முடிந்து விடுகிறது". இவை **'மிசா' சாமிநாதன்**, வெளியில் இருந்த ...பூர்ணம் சாமிநாதனுக்கு எழுதிய கடிதங்களில் உள்ள சில வரிகள். ஒவ்வொன்றும் ...எத்தனை பொருள் பொதிந்தவை? அவர்தம் எண்ணங்கள் எப்படியிருந்தன என்பதைத் ...தெள்ளவாகக் காட்டுகின்றன அல்லவா?

கணவன் 'மிசா'க் கைதியாகச் சிறையில். மனைவி வெளியே இருந்தார் எப்படியிருந்தாரோ?

மூன்று பெண்கள் ஒரு பையன் ஆகிய நால்வருடைய எல்லா நலன்களையும் பாதுகாக்க வேண்டிய மிகப் பெரிய பொறுப்பு. இத்துடன், அவர் செயலாளர் பொறுப்பினை ஏற்றிருந்தார் என்று கூறினாலும் தகும்.

கோவை மாவட்டத்தில் கழகத் தோழர்களின் இல்லங்களில் நடைபெறும் எதுவாயினும் அழைப்பிதழ் - தகவல் கிடைத்தால் போதும் கட்டாயம் இருப்பார். மாவட்டச் செயலாளர் ஆற்ற வேண்டிய கடமையை ஆற்றுவார்.

நெருக்கடிநிலைக் காலத்தில் தி.மு.கழகம், தி.கழகம், மார்க்சிஸ்ட் பொதுவுடைமைக் கட்சி ஆகிய இயக்கங்கள் மிகுந்த கெடுபிடிக்கு ஆளாயின. குறிப்பாக தி.மு. கழகச் செயல்பாடுகள் பற்றி மிகத் தீவிரமாகக் கண்காணித்து வந்தது 'ஆளுநர்' ஆட்சி. பொதுக்கூட்டங்கள் நடத்தவே முடியாது. மண்டபங்களில் நடத்துவதென்றும் மிகுந்த கெடுபிடி. ஒலிபெருக்கி வைக்கக் கூடாது. இ நிலையிலும் சம்பூர்ணம் அவர்கள் மாதம் ஒருமுறையாவது சென்னை வருவார். கழக தலைவர்களைச் சந்திப்பார். கோவை மத்திய சிறைக்குச் செல்வார். கணவனை காண்பார். சாமிக்கும் உடனிருப்போருக்கும் தேவையான பொருள்களைக் கொண்டு போய்க் கொடுப்பார்.

எப்படியும் கலைஞரைப் புளியம்பட்டிக்கு வரச் செய்ய வேண்டும்; கழக தோழர்கள் அவரைக் காணும் வாய்ப்பினை ஏற்படுத்தித் தர வேண்டுமென திட்டமிட்டார் சம்பூர்ணம். சாமியின் ஒன்றுவிட்ட அக்காள் மகன் திருமணத்திற்கு ஏற்பாடு செய்தார். கலைஞரும் வந்தார். திருமண நிகழ்ச்சியிலும் கலந்து கொண்டார். சம்பூர்ணத்தின் திட்டம் வெற்றி பெற்றது. அந்த வேளையில் விஸ்கோசில் பணியாற்றிய உடுமலை ஆறுமுகம், பழனிவேலு ஆகிய தோழர்கள் பெரிதும் உதவினர்.

சாமி சிறையில் இருந்தபோது அவருடன் மிசாவில் சிறைப்படுத்தப்பட்டிருந்த சிலரைப் பற்றியும் இங்கே குறிப்பிட்டாக வேண்டும்.

திருவாளர்கள் எஸ்.ஏ. இராசமாணிக்கம், கோவை இராமநாதன், குட்டப்பாளை சாமிநாதன், தாயமணி, ஜானகிராமன், கோவை மணியன், மோகன், ஈரோடு ம மணியன், சக்தி இராசமாணிக்கம், கரட்டுப்பாளையம் குழந்தா கவுண்டர் வெங்கிடுசாமிக் கவுண்டர் முதலிய கழகத் தோழர்களுடன் பிற கட்சியினரும் இருந்தனர். இவர்களுள் கரட்டுப்பாளையம் குழந்தாக் கவுண்டர் 1962-ஆம் ஆண்டு பொதுத் தேர்தலின் போது சாமியை எவ்வளவு முரட்டுத்தனமாக எதிர்க்க முடியுமோ அவ்வளவு முரட்டுத்தனமாக எதிர்த்தவர். பின்னர் அவருடைய மகன் செல்வம் நம்பியூர் ஊராட்சி ஒன்றியத் தேர்தலில் போட்டியிட்ட காலை எம்மாப்பூர் வெங்கிடுசாமி (க்கவுண்டர்) தமது வாக்கினை அளித்ததால் வெற்றி பெற முடிந்தது.




அவரை வாக்களிக்கச் செய்தவர் சாமியே. இதனால் தந்தையும் மகனும் கழகத்தில் இணைந்தனர். குழந்தாக் கவுண்டர் மிசாவிலும் கைது செய்யப்பட்டார்.

சிறையில் இருந்த காலத்தில் தோழர்கள் மா.சு. மணியனும், கோவை மணியனும் ...த் செய்த பணிவிடைகளை இன்னமும் பசுமையாக நினைவில் வைத்துள்ளார்.

23-1-1977 ஆம் நாள் தமிழ்நாட்டில் 'மிசா'வின் கீழ்ச் சிறைப்பட்டிருந்த அனைத்து அரசியல் கைதிகளும் விடுதலை செய்யப்பட்டனர். சாமியும் விடுதலை செய்யப்பட்டார்.

பெரியோர் கண்ட பெரியார்...



"நாயக்கர் பேச்சில் கருத்துச் செலுத்திய பின்னர் அவர் தமிழ்நாட்டுக் காளமேகமானார். நாயக்கர் பேச்சு, மழையாகும்; கனமழையாகும்; கல்மழையாகும்; மழை மூன்று மணி நேரம், நான்கு மணி நேரம் பொழியும்" தனக்கென வாழாப் பிறர்க்குரியாளன் - கருத்து வேற்றுமைக்கு மதிப்பளிப்பவர்".

- திரு.வி.க.

"எங்கெல்லாம் தமிழ் உணர்ச்சி தவழ்கின்றதோ, எங்கெங்கே சமுதாயச் சீர்திருத்தம் பேசப்படுகின்றதோ, எந்தெந்த இடத்தில் புரட்சி வாடை வீசுகின்றதோ - அங்கெல்லாம் ஈ.வெ.ரா.வின் பெயர் ஒளி வீசித் திகழ்கின்றது".

- சர் ஏ. இராமசாமி முதலியார்

"செய்கையில் உண்மை - நீதியை நிலை நாட்டுவதில் அடங்கா ஆர்வம் - சிறிதும் தன்னலம் என்பதே இல்லாத வாழ்க்கை - இவையே ஒரு மனிதனைச் சிறந்தவனாக ஆக்கக் கூடியவை. இவையனைத்தும் உருண்டு திரண்டு திகழும் ஒரு மாமனிதரே ஈ.வெ.ரா."

- சர் ஆர்.கே. சண்முகம் செட்டியார்

"சமூக சீர்திருத்தத் துறையில் பலர் அநேக ஆண்டு பாடுபட்டுப் பயன்பெறாமற்போன வேலையை இவர் (ஈ.வெ.ரா.) சில ஆண்டுகளில் பயன் அளிக்குமாறு செய்துவிட்டார்".

- பனகல் அரசர்

"திரு. நாயக்கரிடத்திலுள்ள சிறப்பான குணம் மனத்திற்படும் உண்மையை ஒளிக்காமல் சொல்லுவதுதான். தமிழ்நாட்டின் எல்லாத் தலைவர்களையும் விட பெரிய தியாகி ஆவார்".

- வ.உ. சிதம்பரம்பிள்ளை

"என்னை முனநில்லன் மின்தெவ்விர் பலரென்னை
முன்நின்று கல் நின்றவர்"

இது குறள். படைச் செருக்கு அதிகாரத்தில் முதலாம் குறளாக (771) இடம் பெற்றுள்ளது.


வீரனொருவன் ஏந்திய படைக்கலத்துடன் நிற்கிறான். எதிரே பகைவர் அவனை நோக்கி வருகின்றனர்; நெருங்கியும் விட்டனர். அந்த நிலையில் அவர்களைப் பார்த்து அவன் பேசுகிறான். ஏ ! பகைவர்களே ! என் தலைவன் முன்னே சென்று நில்லாதீர்கள் நின்றால்... ? இதற்கு முன்பு பகைவர் பலர் என் தலைவனுக்கு எதிரே சென்றனர். அவர்கள் என்ன ஆயினர் தெரியுமா ! அவர்கள் மாண்டு மடிந்தனர். நடுகற்கள் ஆயினர். அனைவருமே என் தலைவனால் வீழ்த்தப்பட்டனர்; வீர உலகுக்கு அனுப்பட்டனர். வீரனின் குறிக்கோள் தன் தலைவனின் கட்டளையை ஏற்றுக் களப்பணியாற்றுவது அதுவும் தனக்குப் புகழ் தேடிக் கொள்ளுவதற்காக அன்று. தன் தலைவனுக்குப் பெருமை சேர்க்க வேண்டும்; தனது அரிய செயல்களால் அவன் புகழ் பெற வேண்டும். இந்த உண்மையைத்தான் அந்தவீரன் வாயிலாகத் திருவள்ளுவர் நமக்கு உணர்த்துகிறார்.

பகைவர்களே! எங்களோடு போரிட வருகிறீர்களா? வாருங்கள். வந்து போரிட்டுப் பாருங்கள். உங்கள் அத்தனைபேரையும் என்வாளுக்கு இரையாக்குவேன், வாகை புனைந்து களிப்பேன் என்று அவன் கூறுரைக்கவில்லை. அங்ஙனம் உரைத்திருந்தால் அவன் தன்னையே நினைத்துக் களத்தில் நிற்கிறான் என்றாகிவிடும்!

அங்கும் போர்க் களத்திலும் அவனுடைய நினைவு தன் தலைவன் மீது பதிந்திருந்தது. தலைவனுக்குப் பெருமை சேர்ப்பதிலேயே - மாண்பு சேர்ப்பதிலேயே பதிந்திருந்தது. எனவேதான் ஆற்றிய பணியைத் தன்தலைவன் மீது ஏற்றிச் சொல்லுகிறான். இத்தகைய வீரர்கள் - தொண்டர்கள் எல்லா இயக்கத்திலும் இருக்கச் செய்கின்றனர். ஆனால் தி.மு. கழகத்தில் மிகுதியாக இருந்தனர்.

கழகத்தின் கட்டளை எதுவாயினும் அதனை ஏற்று, எத்தகைய எதிர்ப்பு இன்னல் நேரிடினும் சற்றும் மனந்தளராது - பின்வாங்காது ஆற்றி முடிப்பதன் மூலம் அண்ணாவுக்கு மகிழ்ச்சியூட்ட வேண்டும். தமது பேனாவின் வாயிலாகத் திராவிட நாடு இதழுக்கு விடும் அறிக்கையில் பாராட்டுப் பெற வேண்டும்; தங்கள் ஊர்ப்பக்கம் வரும் பொழுது நாவால் நான்கு சொற்கள் பாராட்டிப் பேச வேண்டும் என்னும் இலட்சிய வெறியுடையோர் பலரைப் பெற்றிருந்தது இந்த இயக்கம்.

அண்ணாவுக்கு அவன் யார் என்பது தெரியாது; எந்த ஊர்? என்ன பெயர் என்பதும் தெரியாது. அந்த அளவுக்கு அவரிடம் அறிமுகம் இல்லைதான். இதனை அவனும் அறிவான். தான் பேசும் பொழுது, எனது தம்பிமார்கள் என்று குறிப்பிடுவார். அந்தத் தம்பிகளுள் தானும் ஒருவன்; தன்னையும் சேர்த்தே அவ்வாறு கூறுகிறார் என



நினைவு அவனைப் பூரிப்பில் ஆழ்த்தும். ஒவ்வொருவரும் தன்னையும் தெரிந்து இவ்வாறு குறிப்பிடுகிறார் என உளங்களிப்பான்.

அண்ணா, தம்பிக்குக் கடிதம் எழுதியிருப்பார். அதிலேயும் தம்பி! என விளித்திருப்பார், கடிதம் வெளிவந்த 'திராவிட நாட்டையோ' 'காஞ்சியையோ' வாங்கிப் படிக்கும் பொழுது அண்ணா தன்னுடன் நேரில் பேசுவதாகக் கருதுவான். அந்த இதழைக் கையில் பிடித்துக் கொண்டு பெருமிதத்தோடு நடைபயில்வான்.

தன் உழைப்பு, தொண்டு, பணி ஆகிய அனைத்தும் அண்ணாவுக்கே, அண்ணாவின் மகிழ்ச்சிக்கே; அண்ணாவுக்குப் பெருமை சேர்ப்பதற்கே என எண்ணி வாழ்ந்திருக்கும் ஒரு தொண்டனுக்கு, அண்ணாவின் அருகிலிருந்து உரையாடும் வாய்ப்பு, அவருக்குத் தன் வீட்டிலே விருந்தளிக்கும் பேறு, அவரருகில் அமர்ந்து உணவுண்ணும் சிறப்பு, இவற்றோடு,

அவர் அழைக்காமலே, முன்னறிவிப்பு இன்றி அவருடைய வீட்டிற்கு வந்து, "நான் இரு நாள்கள் இங்குத் தங்கப் போகிறேன் என்று சொன்னதுடன், அங்ஙனம் சொல்லியவாறே தங்கி, அவருடைய மனைவியின் கையால் பரிமாறிய உணவு உண்டு, அம்மா! உன் கணவனின் பொது வாழ்க்கைக்கு நீயும் துணை நிற்கவேண்டும்" என வேண்டுகோளும் விடுத்தால் ... அந்தத் தொண்டன் எத்தகைய பெருமிதத்தில் மூழ்கு வான்! இவை மட்டுமா?


பிற்காலத்தில் நாடாளுமன்ற உறுப்பினராகிறார் அந்தத் தொண்டர் அண்ணா முதலமைச்சர். முதலமைச்சரானதும் டெல்லி செல்லுகிறார். வழக்கப்படி தமிழ்நாடு இல்லத்தில் மத்திய அமைச்சர்களுக்கு விருந்தளிக்கிறார். விருந்தில் அவரும் கலந்து கொள்ளுகிறார். அந்தச் சமயத்தில் மற்ற நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் ஒதுங்கி நின்று கொண்டிருந்த அவரை அண்ணா அருகில் அழைக்கிறார். அவரருகில் ஒய்.பி. சவான், துணைப் பிரதம மந்திரி மொரார்ஜி தேசாய் முதலியோர் உள்ளனர். அவர்களுக்கு அண்ணா, நம் சாமியை இவ்வாறு அறிமுகம் செய்து வைக்கிறார்.

இவர் நடுத்தரக் குடும்பத்தைச் சேர்ந்தவர். எங்கள் இயக்கத்திலுள்ள கொள்கைப் பிடிப்புமிக்கோருள் இவரும் ஒருவர். அரசியலையே முழுநேரப் பணியாகக் கொண்டிருப்பவர். தன் கடும் உழைப்பால் இயக்கத்தை வளர்த்து மக்களிடையே செல்வாக்குப் பெற்று வருபவர். இவ்வாறு கூறி அண்ணா அறிமுகம் செய்கிறாரென்றால் அவருடைய உள்ளத்தில் அவருக்கு எத்தகைய இடத்தை அளித்திருப்பார்!

அந்தத் தொண்டர் யார்?

நம் சாமி தான்.

இதனை அறியும் சிலர், பிறரைக் கேலி செய்தே நாவில் தழும்பினை ஏற்றிக் கொண்டிருப்போர், இம்... இவர் ஒருவருக்குத் தான் வாய்ப்புக்கள் கிட்டினவா? இத்தகைய சிறப்புக்கள் அமைந்தனவா? என்னிடமும் என் குடும்பத்தின்பாலும்



இதைவிடப் பன்மடங்கு அன்பு வைத்திருந்தார். இதை விட மிக நெருக்கமாக இருந்தார் என முறுமுறுக்கலாம். பார்த்தீர்களா இவனை! வைக்காட்டி ஏதோ அண்ணா இவரிடம் மட்டும்தான் அன்பு வைத்திருந்ததாகப் பீற்றிக் கொள்ளுகிறார் என கேலியும் பண்ணலாம். அவர்கள் ஒன்றை நினைவிற் கொள்ளட்டும்.

மற்றவர்களுக்கு அண்ணாவுடன் தொடர்பு கொள்ளக் கிடைத்திருந்த வாய்ப்புகள் எவ்வளவு? ஈரோட்டில் அண்ணா பெரியாருடன் இருந்த காலத்திலேயே நெருங்கி இருந்தவர்கள். தி.மு. கழகம் தோற்றுவிக்கப்பட்டபோதே அவருக்கு நன்கு அறிமுகமாகியிருந்தவர்கள்; ஓய்வு கிட்டும் போதெல்லாம் உரையாடும் வாய்ப்பினைப் பெற்றவர்கள்.

ஆனால் சாமியோ...


இயக்கம் பிறந்த வேளையில் கோவையில் உயர்நிலைப் பள்ளி மாணவன். அதன் பிறகு புன்செய்ப் புளியம்பட்டியிலேயே கழகப் பணிகள், பொதுப் பணிகள், நாடறிந்த பேச்சாளரோ, எழுத்தாளரோ, நடிகரோ அன்று. எந்தவகையிலும் பெரும்புள்ளி என்று சொல்ல முடியாது. அப்படியிருந்தும் அண்ணாவின் அன்பு கிடைத்ததே! அந்த அவருக்குக் கிடைத்த சிறப்பல்லவா? பெருமையல்லவா? அவர் நினைந்து நினைந்து மகிழும் உரிமைக்கு உரியவரல்லவா? அண்ணாவுக்கு அவ்வளவு நெருக்கத்தை உண்டாக்கித் தந்தது சாமியின் உழைப்புத்தானே! தொண்டுதானே! அத்தகைய சாமியைத் தொண்டின் வடிவம் எனப் போற்றுவதிலே, பாராட்டுவதிலே என்ன தவறு இருக்க முடியும்?

சாமி உயர்நிலைப்பள்ளி மாணவராக இருக்கும் பொழுதே பெரியார், அண்ணா ஆகிய இருவரின் சொற்பொழிவுகளையும் கேட்டிருக்கிறார். பெரியாரை மட்டுமே அவர் தங்கியிருந்த இடத்திற்குச் சென்று காணும் வாய்ப்புக் கிடைத்தது. அண்ணாவின் மீதும் அவருக்குப்பற்று வளர்ந்தது. தி.மு. கழகம் தோற்றுவிக்கப்பட்டபோது, தன் வீட்டில் இயங்கி வந்த தமிழ் மன்றத்தைத் தி.மு.கழகக் கிளையாகவே மாற்றினார்.

கழகப் பணியில் ஈடுபடத் தொடங்கியதும் நாளாவட்டத்தில் உடுமலை ப.நாராயணனின் தொடர்பு ஏற்பட்டது. அவருடன் சென்னை சென்று அண்ணாவைப் பார்த்தார். அண்ணாவுடன் உரையாடும் வாய்ப்பு கிடைத்தது.

சாமி, புன்செய்ப் புளியம்பட்டிப் பேரூராட்சி மன்றத் தலைவரானார்.

உடனே அவருடைய உள்ளத்தில் அண்ணாவின் நினைவு எழுந்தது. அவரை அழைத்து ஊராட்சி மன்றத்தின் சார்பில் வரவேற்பளித்து மகிழ ஆசைப்பட்டார். அதற்கென ஒரு திட்டமும் வகுத்தார். சாமி ஊராட்சி மன்றத் தலைவர். எனினும் புன்செய்ப் புளியம்பட்டியிலும் காங்கிரசார் பலர் இருக்கவே செய்தனர். அவர்களெல்லாம் வயதில் மூத்தவர்கள். அவர்களுடைய உணர்வை மதிக்கும் வகையில் காந்தியடிகளின் உருவச் சிலையைப் பேருந்து நிலையத்தில் அமைத்து, அண்ணாவைக் கொண்டே அதனைத் திறக்கச் செய்வது என முடிவு செய்தார். இவ்வாறு செய்யும்



பொழுது சாமிநாதன் தி.மு.கழகத்தவன். அவன் தன் தலைவனை அழைத்து ஊராட்சி மன்றத்தின் சார்பில் வரவேற்பளிக்கிறான்.

இத்திட்டத்தைக் கழக நண்பர்களும் ஊராட்சி மன்ற உறுப்பினர்களும் வரவேற்றனர். அண்ணா, சம்பத் ஆகிய இருவருக்கும் ஊராட்சிமன்றத்தின் சார்பில் வரவேற்பளிப்பதெனவும், சம்பத் தலைமையில் அண்ணா காந்தியடிகளின் சிலையைத் திறப்பதெனவும் முடிவு செய்யப்பட்டது.

கோவை மாவட்டத் தி.மு. கழக முன்னணியினர் மூலம் அண்ணா அவர்கள் சாமியின் பணிகள் பற்றி ஓரளவு அறிந்திருந்தார். ஆகவே புளியம்பட்டி ஊராட்சி மன்ற வரவேற்பு, காந்தியடிகளின் சிலைத் திறப்பு விழா ஆகிய இரு நிகழ்ச்சிகளுக்குமான அழைப்பினை அவர் எவ்வகைத் தயக்கமுமின்றி ஏற்றுக் கொண்டார்.

அண்ணா, சம்பத் ஆகிய இருவரின் ஒப்புதல் கிடைத்ததும் கழகத் தோழர்கள் பெருவகை எய்தினர். அண்ணாவின் வருகையை ஒட்டிப் புன்செய்ப் புளியம்பட்டியே விழாக் கோலம் பூண்டு நின்றது. அண்ணாவும், சம்பத்தும் வந்தனர். ஊராட்சி மன்ற வரவேற்பை ஏற்றனர். சம்பத் தலைமையில் அண்ணா காந்தியடிகளின் சிலையைத் திறந்து வைத்துச் சொற்பொழிவாற்றினார்.

அவர் தமது சொற்பொழிவில் சாமியின் கொள்கைப் பிடிப்பு, அயராத உழைப்பு; மக்களிடையே பெற்றுள்ள செல்வாக்கு ஆகியவற்றையும் குறிப்பிட்டுத் தமது பாராட்டுதலையும் தெரிவித்துக் கொண்டார். அண்ணாவின் வருகையாலும் அவருடைய பாராட்டு உரையாலும் பொதுமக்களிடம் சாமிக்கு இருந்த மதிப்பு மேலும் உயர்ந்தது.

பயணச் செலவுக்குரிய தொகை முழுவதும் வந்து சேர்ந்ததா? சுவரொட்டியின் அளவு என்ன? எத்தனை சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன? கூடியிருந்த மக்கள் எத்தனை பேர்? ஏன் கூட்டம் குறைவாக இருக்கிறது? இவற்றைப் பற்றியெல்லம் அவர் கவலைப்படவில்லை. அந்த ஊரில் கழகத் தொண்டனொருவன், அதிலும் நடுத்தரக் குடும்பத்தைச் சேர்ந்தவன், இருபத்தெட்டு வயதே நிரம்பப்பெற்றவன், ஊராட்சி மன்றத் தலைவராக வீற்றிருந்த ஒன்றே அவருக்குப் பெருமகிழ்வை அளித்தது. அந்த மகிழ்ச்சியுடன் அனைவரிடமும் விடைபெற்றுப் புறப்பட்டார்; சம்பத்தும் அவருடன் சென்றார்.

சென்னை சென்ற அண்ணாவுக்கு ஆயிரம் வேலைகள் அவ்வளவு வேலைகளுக்குமிடையே சம்பத் போன்றோரைக் கண்டால், சாமியின் நலம், பணி குறித்து அப்போதைக்கப்போது வினவுவார். சாமியை அவர்கள் சந்திக்கும் போது அண்ணாவின் விசாரிப்பைச் சாமியிடம் தெரிவிப்பார்கள். ஒருமுறை சம்பத் புளியம்பட்டி வந்திருந்தார். அப்பொழுது அவரையே வியப்பில் ஆழ்த்தக் கூடிய பணியொன்று அங்கு நடைபெற்று வருவதைக் கண்டார்; பெரிதும் மகிழ்ந்து போனார்.

நாட்டிலும் கழகத் தோழர்கள் உறுப்பினர் சேர்ப்பர்; கழகக் கிளைகள் அமைப்பர்; கொடியேற்றுவர்; பொதுக்கூட்டங்கள் நடத்துவர். மாநாடுகளில் கலந்து கொள்வர்; போராட்டங்களில் பங்கு பெறுவர்; இவையே அன்று கழகப் பணிகளாக இருந்து வந்தன. புளியம்பட்டியிலும் அதன் சுற்று வட்டாரத்திலும் இத்தகைய பணிகள் நடைபெற்று வந்தன. அத்துடன்...


1950 - 60 ஆம் ஆண்டுகளிடையே புன்செய்ப் புளியம்பட்டி இப்போதுள்ள அளவில் பாதிகூடத் தேறாது. போக்குவரத்து வசதிகளும் அவ்வளவாகப் பெருகவில்லை. ஊரில் ஒழுங்கான மருத்துவமனையும் கிடையாது. பிள்ளைப் பேற்றுக்கோ கேட்கவே வேண்டாம். வசதி படைத்தவர்களுக்கு மிக அருகிலுள்ள இடங்கள் கோபியும், கோவையும் தான். அடுத்தது ஈரோடு...

ஏழை எளியோருக்கு... இயற்கையாக உள்ளூர் மருந்துவச்சியின் கைப்பாங்கில் பிள்ளை பெற்றால் உண்டு. இல்லையெனில் பிள்ளைக்கோ தாய்க்கோ கண்டம். சில சமயங்களில் இரு உயிர்களுமே இயக்கமற்றுப் போய்விடும்.

சாமி எப்போதுமே எந்தப் பிரச்சனையையும் மேலோட்டமாகப் பார்க்கும் இயல்பு இல்லாதவர். தம் கவனத்துக்கு வரும் எதையும் ஆழமாகச் சிந்தித்துப் பழகியவர். சமுதாயப் பிரச்சனையை, ஏழை, எளியவரின் பிரச்சனையை மேலும் தீவிரமாகச் சிந்திப்பார். ஏனெனில் பிறர் செய்யும் உதவியை அவ்வளவு விரைவில் அவர்கள் மறந்து விடமாட்டார்கள். அதனால் ஓர் இயக்கத்தில் ஈடுபாடு கொண்டவர் என்பதால் எந்தப் பிரச்சனைக்கும் விரைவில் தீர்வு காணும்வரை ஓய்வும் கொள்ளார்.

ஊராட்சி மன்றத் தலைவராக இருக்கும் அவருடைய கவனத்தில் மகப்பேறு மருத்துவமனை இல்லாமல் ஏழை, எளியோர் படுந்துன்பம் அவர் மனத்தில் பதிந்தது. ஊராட்சி மன்றத்தின் சார்பில் அமைக்கலாமென்றாலோ போதுமான நிதி வசதி கிடையாது. அரசாங்கத்தை வற்புறுத்தலாம். ஆட்சியோ காங்கிரசார் கையில்; இவரோ தி.மு. கழகத்தவர். ஆக அந்தனை விரைவில் வேண்டுகோளை ஏற்றுச் செயலாற்றுமா? ஏற்றுச் செயலாற்றுவதாயினும் இரண்டு மூன்று ஆண்டுகள் கழிந்து விடும்.

ஆகவே இப்பிரச்சனை குறித்துக் கழகத் தோழர்களுடன் கலந்து பேசினார். அப்பொழுது சாமியின் நண்பரும், கழகத்தில் ஈடுபாடு உடையவரும் இனிய பண்பு மிக்கவருமாகிய டாக்டர் பழனிச்சாமி உள்ளூரிலேயே மருத்துவமனை ஒன்றை நடத்தி வந்தார். நோயாளிகள் வந்தால் பரிசோதித்து மருந்தளிப்பார், அல்லது மருந்து வாங்கிக் கொள்ளச் சொல்வார். படுக்கை எதுவும் இல்லை. அவருடனும் சாமி பேசினார். எல்லாருமே வினாக்குறியைச் சொல்லிலும் விழியிலும் வெளிப்படுத்தினர். சாமியே ஒரு திட்டம் தந்தார்.




இம்முறை கடமையாக அமைந்து வருவம் செய்து மருத்துவமனைக்கு நிலையான வருமானம் என்கிற கனவு நெஞ்சில் வளர்ந்தது.

எம்.ஜி.ஆர் அப்பொழுது இலாயிட்ஸ் சாலையிலுள்ள வீட்டில் குடியிருந்தார். அது வழக்கறிஞர் வி.பி. இராமனின் வீட்டிற்கு அடுத்த வீடு. இருவரும் வழக்கறிஞர் இல்லத்தை அடைந்தனர். காரை விட்டு இறங்கி, வி.பி. இராமன் வரவேற்க இருவரும் மாடிக்குச் சென்றனர். சென்றதும் சம்பத் எம்.ஜி.ஆருடன் தொலைபேசியின் வாயிலாகத் தொடர்பு கொண்டார். அவரைச் சந்திக்க விரும்புவதாகவும் சந்திப்பதன் நோக்கம் குறித்தும் சுருக்கமாகத் தெரிவித்தார்.

எம்.ஜி.ஆர் அவர்களோ சற்று நேரத்தில் தாமே வி.பி. இராமன் வீட்டிற்கு வருவதாகக் கூறினார். சம்பத்தும் சாமியும் அவருடைய வருகைக்காகக் காத்திருந்தனர். ஒரு மணி நேரம் கழித்து எம்.ஜி.ஆர். அங்கு வந்தார். வந்ததும் சம்பத் சாமியை எம்.ஜி.ஆருக்கு அறிமுகப்படுத்தினார். எனக்கு முன்பே இவரைத் தெரியுமே! என எம்.ஜி.ஆர். சொன்னதும், சம்பத் புன்செய்ப் புளியம்பட்டியில் சாமியின் முயற்சியால் ஒரு மகப்பேறு மருத்துவமனை தொடங்கப்பெற்றுள்ளதாகவும், அஃது அவ்வூர் தி.மு.கழகத்தின் சார்பில் நடத்தப்பெறும் இலவச மருத்துவமனை; தமிழ்நாட்டில் தி.மு.கழகத்தினர் எவரும் இதுவரை நினைத்தும் பாராத ஒன்று என்று சொன்னார். இதனை அண்ணா அறிந்து பெரிதும் மகிழ்ந்தார். அத்துடன் அம்மருத்துவமனை தொடர்ந்து நடைபெற நாம் ஏதேனும் செய்யவேண்டுமென அண்ணா விரும்புகிறார் என விளக்கமாக எடுத்துக்கூறிச் சிறப்புக் கூட்டத்திற்குத் தேதி கொடுக்குமாறும் கேட்டுக் கொண்டார். அனைத்தையும் பொறுமையாகக் கேட்டுக் கொண்டிருந்த எம்.ஜி.ஆர். "எனக்குத் திரைப்பட வேலைகள் மிகுதியாக உள்ளன. இப்போதைக்கு நான் வெளியூர் வர முடியாது" என்றார். "இப்பொழுது வேண்டாம். இரண்டு மூன்று மாதங்களுக்குப் பிறகு தேதி கொடுத்தால் போதும்" என வேண்டினார் சம்பத்.

அப்பொழுது சம்பத் கோவை மாவட்டக் கழக முன்னணித் தலைவராக இருந்தார். தமது மாவட்டத்தில் இப்படியொரு பணி கழகத்தின் சார்பில் நடைபெற்று வருவது தமக்கும் பெருமை என்ற எண்ணம் அவர் அந்த அளவுக்கு அவரிடம் வேண்டினார்.

எம்.ஜி.ஆரோ, "எனக்கு அதற்கெல்லாம் நேரமில்லை! என்னால் வர முடியாது" என ஒரேயடியாக மறுத்தார். இதைக் கேட்டதும் சம்பத் பொறுமையிழந்தார். உடனே இருக்கையிலிருந்து எழுந்தார். "சாமிநாதன்! வாருங்கள்" என்றதும் மாடிப்படியை நோக்கி விரைந்தார். படிக்கட்டுகளில் விரைவாக இறங்கத் தொடங்கினார். சாமியும் அவரைப் பின் தொடர்ந்தார். படிக்கட்டுகளின் வழியே இறங்கி வரும்போதே, **"இதைத் தான் நான் அன்றைக்கே அண்ணாவிடம் அடித்தடித்துச் சொன்னேன். சினிமாக்காரன்களைத் தலையில் தூக்கி வைக்காதீர்கள் தலையில் தூக்கி வைக்காதீர்கள் என்று** கேட்டுக் கொண்டேன். அவர் என் பேச்சை எங்கே கேட்கிறார்"? என்று உரத்த குரலில் மாடியில் இருக்கும் எம்.ஜி.ஆர் காதில் விழுமாறு சொல்லிக் கொண்டே அடியெடுத்து வைத்தார். சம்பத்தின் சொற்கள் எம்.ஜி.ஆரின் காதில்



இருக்கும் என்பதில் எவ்வகை ஐயமும் இல்லை. இப்படிப்பட்ட நல்ல பணிக்கு எம்.ஜி.ஆர் ஒத்துழைப்புத் தர மறுத்தமைக்கு ஏதேனும் காரணம் இருக்க வேண்டுமே! அண்ணா சொல்லியனுப்பியும் அவர் மறுத்தாரென்றால்... எண்ணிப் பார்க்க வேண்டிய பிற.

இலவச மகப்பேறு மருத்துவமனை நடத்துவது அவருக்குப் பிடிக்கவில்லை என்று கூறமுடியாது. ஏனெனில் இதுபோன்றே இலவச மருத்துவமனையைச் சில ஆண்டுகளுக்குப் பிறகு அவரே கோடம்பாக்கத்தில் தமது சொந்தச் செலவில் தொடங்கினார்.


தி.மு.கழகத்தில் நடிகரின் செல்வாக்குப் பெருகி வருவதையும் கழக முன்னணித் தலைவர்களின் பேச்சுகளைக் கேட்பதை விட நடிகர்களைப் பார்க்கவும் அவர்களுடைய பேச்சுக்களைக் கேட்கவும் மக்கள் பெருந்திரளாகக் கூடுவதைச் சம்பத் போன்றோர் விரும்பவில்லை. இதனால் பொதுமக்களும் சரி, கழகத் தோழர்களும் சரி, கருத்து நிரம்பிய சொற்பொழிவுகளைக் கேட்பதைக் காட்டிலும் கவர்ச்சி அரசியலையே விரும்பும் நிலை மெல்ல மெல்ல வளர்ந்தது. இதனை இப்படியே விட்டு விட்டால் நாளைக்குக் கழகத்தின் கட்டுக்கோப்பே சிதைந்து விடும்; கவர்ச்சி அரசியலையே மக்கள் விரும்பும் சூழ்நிலை உருவாகிவிடும் என எச்சரித்தனர். இதில் சம்பத் முன்னணியில் நின்றார்; இதனை எம்.ஜி.ஆர் எங்ஙனம் ஏற்பார்? ஆகவேதான் பணி சிறந்தது என்றாலும் அண்ணாவே உதவ முன்வந்த போதும் சம்பத் மூலம் அதற்கு ஏற்பாடு செய்தது எம்.ஜி.ஆருக்குப் பிடிக்கவில்லை, வேறு எவர் மூலமாவது அண்ணா இந்த ஏற்பாட்டைச் செய்திருந்தால் ஒருவேளை எம்.ஜி.ஆர் தேதி கொடுத்திருக்கலாம்!

அண்ணா அவர்கள் ஜனநாயகம் பேசியவரல்லர்; பொது வாழ்க்கையில் அரசியலைக் கடைப்பிடித்தவர், சம்பத் கோவை மாவட்டத்தவர். அதனால் அவர் மூலம் அந்த ஏற்பாட்டைச் செய்வதுதான் முறை என எண்ணினார்கள். சம்பத்திடம் பொறுப்பை ஒப்படைத்தார்கள். அது நடைபெறாமற் போயிற்று.

மகப்பேறு மருத்துவமனை தொடர்ந்து செயல்பட எம்.ஜி.ஆரின் உதவி கிடைக்காமற் போனது அப்போதைக்குச் சாமிக்குக் கொஞ்சம் வருத்தத்தையே அளித்தது. எனினும் அண்ணா தன்பால் வைத்திருந்த அன்பை, தான் மேற்கொண்டிருந்த பணிக்கு உதவ முன்வந்ததை எண்ணும் போதெல்லாம் அவர் மீது வைத்திருந்த அன்பு, பாசம், மதிப்பு ஆகியவை பல மடங்கு பெருகிற்று.

திரும்பவும் போய் அண்ணாவைக் கண்டு நடந்தவற்றை அவரிடம் தெரிவிக்கச் சாமி விரும்பவில்லை. அண்ணா இவற்றைக் கேட்டால் மனம் வருந்துவார்; அத்துடன் தலைவர்களிடையே மனக்கசப்பு உண்டாகலாம் என்கிற எண்ணத்தால் அவராகவே தெரிந்து கொள்ளட்டுமென மற்ற அலுவல்களைப் பார்த்துவிட்டு நனிநாகரிகமாக ஊர் திரும்பினார்.

அண்ணா, நாவலர் போன்றோர் பேசிக் கொண்டிருக்கையில், நடிகர்கள்



அண்ணாவின் தனி அன்பு



...காக அங்கெல்லாம் குறிப்பிடவில்லை. உடன் பிறந்த தம்பியராகவே அனைவரையும் ...திருந்தார். அதேபோல் தொண்டர்களும் தங்களின் உடன்பிறந்த அண்ணனாகவே ...வைப் போற்றினர். சாமியும் அத்தகைய தொண்டர்களுள் ஒருவரே. எங்ஙனம் ...ணா மற்றவர்களிடம் பாசத்தோடு நடந்து கொண்டாரோ அங்ஙனமே ...டமும் நடந்துள்ளார். இதிலே தனியாகப் பெருமைப்பட்டுக்கொள்ள என்ன ...கிறது? பலருக்கு அண்ணாவின் அரவணைப்பைப் பெற வாய்ப்புக் கிட்டாமற் ...யிருக்கும். சாமி போன்ற சிலருக்கு அந்த வாய்ப்புக் கிட்டியிருக்கும். ...வளவுதானே தவிர சாமியிடம் மட்டும் தனியன்பு வைத்திருந்தார்; காட்டினார் ...பது பெருமைப்பட்டுக் கொள்ளப் பயன்படுமேயன்றி உண்மையாக இருக்க ...யாது. இப்படியும் சிலர் வாதிடலாம்; மறுத்துரைக்கலாம். ஆனால் கீழே காணும் ...ழ்ச்சி எதைக் காட்டுகிறது?

சாமி அப்பொழுது பழைய வீட்டில் குடியிருக்கிறார். ஒரு சமையலறை, ஒரு ...க்கை அறை, ஒரு சிறிய கூடம் இவற்றைக் கொண்டது அந்த வீடு. சாமியின் ...ற்பெண்ணாகிய இராணி பிறந்து சில நாட்களே ஆகியிருந்தன. அதைத் தொட்டிலில் இட்டுத் தூங்க வைத்திருக்கிறார் சம்பூரணம். குழந்தையும் தூங்குகிறது. சாமியும் சம்பூர்ணமும் உறக்கத்தில் ஆழ்ந்துள்ளனர். நடுநிசி கடந்து நேரம் ...ருக்கும். வாசற்கதவு தட்டும் ஓசை கேட்டு உறக்கத்தில் ஆழ்ந்திருந்த சாமி கண் ...க்கிறார். இந்நேரத்தில் கதவைத் தட்டுவது யாராக இருக்கும் என்ற வினாவை ...களில் தேக்கிய வண்ணம் வெளிக் கதவைத் திறக்கிறார். மின் விளக்கின் ஒளியில் ...ள உருவமொன்று நிற்பதைக் காணுகிறார். அது கொஞ்சம் சதைப்பிடிப்பு உடையதாகவும் இருக்கிறது. ஒரு முறை இமைகளை மூடித் திறந்து கூர்ந்து நோக்குகிறார். அங்கே நின்றிருப்பது யாரெனத் தெளிவாகிறது.

நின்றிருப்பது தோழர் கே.ஏ. மதியழகன்.


வியப்பு விழிகளில் பளிச்சிட, **அண்ணா! நீங்களா? என்கிறார் சாமி.** ஆமாங்க சாமிநாதன், **'அண்ணாவும் வந்திருக்கிறார்'** என்று மதியழகன் சொல்லுகிறார். சாமிக்குத் திகைப்பு.

என்ன சொல்லுகிறீர்கள்? அண்ணாவும் வந்திருக்கிறார் என்கிறேன்.

உண்மையாகவா? அதோ காரில் **அண்ணாவும்** அமர்ந்துள்ளார்.

இந்தச் சொற்கள் காதில் விழுந்ததோ இல்லையோ, சாமி ஒரே பாய்ச்சலில் தெருவை அடைகிறார். மதி சொன்னது போலக் கார் ஒன்று அங்கே நிற்கிறது. உள்ளே கூர்ந்து பார்க்கிறார். பின் இருக்கையில் இருவர் அமர்ந்துள்ளது தெரிகிறது. அவர்களில் ஒருவர் அண்ணா. தாளாத வியப்புடன் காரின் கதவைத் திறந்து கொண்டு காரிலிருந்து இறங்குகிறார்.

வாங்கண்ணா.



உள்ளே பொன்னம்பலனார் இருக்கிறார் முதலில் அவரை வரவேற்பாய் என சொல்லுகிறார். வணக்கம்! வாங்க! சாமி பொன்னம்பலனாரை வரவேற்கிறார்.

வரவேற்றதும் மூவருக்கும் முன்னால் வாயிற்படியை நோக்கி விரைகிறார் சாமி. அங்கே சம்பூர்ணம் நின்றிருக்கிறார். காரின் கதவு மூடிய ஓசையால் தூக்கம் கலைந்து எழுந்து பார்க்க, கணவன் படுக்கையில் இல்லாமை, முன் வாயிற் கதவு திறந்திருத்தல், வெளியே வர அங்கே அண்ணா, மதி, பொன்னம்பலனார், சாமி ஆகிய நால்வரும் இருப்பதைக் காணுகிறார். சற்றே குழப்பத்துடன், வந்திருக்கும் பெரியவர்கள் யார் என்பதைப் புரிந்து கொள்ள இயலாதவராய் நின்றிருக்கிறார்.

சம்பூர்ணத்தின் அருகில் வந்ததும் சாமி, அண்ணா வந்திருக்கிறார் என்று சொல்லி வாயிற் கதவை நன்றாகத் திறந்து வைக்க முயல்கிறார். அந்தப் பணியைச் சம்பூர்ணம் நிறைவேற்றி விட்டுக் கூடத்திற்குள் சென்று ஒரு புறம் ஒதுங்கி நிற்கிறார்.

சாமி, அண்ணா, மதி, பொன்னம்பலனார் நால்வரும் கூடத்திற்குள் நுழைகின்றனர். அண்ணா நாற்காலியில் அமருகிறார்; மற்ற இருவரும் பெஞ்சில் உட்காருகின்றனர். சாமி இன்னமும் வியப்பிலிருந்து முழுமையாக விடுபடவில்லை. அதற்குள் அண்ணாவே, சாமிநாதன் எங்களுக்கு எதுவும் வேண்டாம். வரும்போதே இரவு உணவை முடித்துக் கொண்டோம். படுக்க வேண்டும். அவ்வளவு தான். மற்றவற்றைக் காலையில் பேசிக் கொள்வோம் என்கிறார்.

சாமி வியப்பிலிருந்து ஒரளவு விடுதலை பெறுகிறார்.

மூவருக்கும் சம்பூர்ணத்தை அறிமுகம் செய்து வைக்கிறார்.


வீட்டிலே ஒரு மெத்தை மட்டுமே இருக்கிறது. அதில் அண்ணா படுத்துக் கொள்கிறார். மதியும், பொன்னம்பலனாரும் பாயில் படுத்துக் கொள்ளுகின்றனர்.

சாமிநாதன்! நீங்களும் போய்ப் படுத்துக் கொள்ளுங்கள் என்றார் அண்ணா.

சாமியும் சம்பூர்ணமும் அவ்வாறே செய்கின்றனர். சம்பூர்ணத்திற்கு, இந்த வேளையில் திடீரென இவர்கள் எதற்காக வந்திருக்கிறார்கள்? என்பதைத் தெரிந்து கொள்ளும் ஆவல். கணவனிடம் கேட்க மனம் வரவில்லை. கேட்டால் கூடத்தில் படுத்திருக்கும் அண்ணாவின் காதில் விழுமே! அவர் தவறாக நினைத்துக் கொண்டால்?...

சாமியின் உள்ளத்திலும் அதே வினா. அவர் எவரிடம் வினவி விடை காண முயல்வார்? சாமியின் நெஞ்சில் களிப்பு நிரம்பிய குழப்பம். நெடுநேரத்திற்குப் பின்னரே கண்ணயர்ந்தார்.

காலையில் எழுந்து வெளியே வந்தார். மதி மட்டும் பற்ற வைத்த சிகரெட்டைக் கையில் பிடித்தவாறு இங்குமங்குமாக நடைபயின்று கொண்டிருந்தார். அண்ணாவும் பொன்னம்பலனாரும் உறக்கத்தில் ஆழ்ந்திருந்தனர்.



அண்ணா கண் விழிக்குமுன் மதி இருமுறை தேநீர் அருந்தினார். ...க்கு மேல் புகைத்துத் தள்ளினார். வேலைக்காரப் பெண் வாங்கி வந்திருந்த ...நாளிதழ்களைப் புரட்டுவதன் மூலம் நேரத்தைக் கழித்தார். அவரிடமும் ...வின் எதிர்பாராத வருகை குறித்துச் சாமி எதுவும் கேட்கவில்லை. மதியும் ...வில்லை.

அண்ணா கண் விழித்தார். பொன்னம்பலனாரும் துயில் நீத்தார். இருவருக்கும் ...ர் வழங்கப்பட்டது. அன்றைய நாளிதழ்கள் அண்ணாவின் முன்னே ...கப்பட்டன. சம்பூர்ணம் சமையல் கட்டில் சிற்றுண்டி தயாரிப்பதில் ...பட்டிருந்தார். அண்ணா தேநீர் பருகியவாறு நாளிதழில் பார்வையைச் ...துவதைப் பார்த்த வண்ணமே சற்று நேரம் நின்றிருந்த சாமி, தொட்டிலில் இருந்த ...தையின் சிணுங்கல் ஒலி கேட்டு உள்ளே செல்லக் காலடி எடுத்து வைத்தார்.

சாமிநாதன்! எனக்கு மனசே சரியில்லை. இரண்டு நாள்கள் உன் வீட்டில் தங்கப் போகிறேன். மதியும் பொன்னம்பலனாரும் மட்டும் சென்னை புறப்படுவார்கள்.

இச்சொற்கள் செவியில் புகுந்தனவோ இல்லையோ சாமி அப்படியே காற்றில் ...க்கத் தொடங்கினார். அண்ணா நம் வீட்டில் தங்கப் போகிறார்... ஒரு நொடிக்குள் ...ல முறை இந்தச் சொற்கள் மீண்டும் மீண்டும் ஒலித்தன.

தங்குங்க அண்ணா! எத்தனை நாள் வேண்டுமாயினும் தங்குங்கள்! என முறைக்காகக் ...டச் சொல்ல வேண்டும் என்ற எண்ணமும் மனதில் எழவில்லை. அடுத்த கணம் சமையற்கட்டில் இருந்தார்.

சம்பூரணம்! அண்ணா இரண்டு நாள்கள் நம் வீட்டில் தங்கப் போகிறார்!

கேட்ட சம்பூரணம் பூரிப்பின் எல்லைக்கே போய் விட்டார். சில நொடிகள் சிலையாகவே நின்று போனார். சாமி மீண்டும் கூடத்திற்கு வந்தார்.

ஏதாவது செய்ய வேண்டுமா, அண்ணா? இரு நாள்கள் அங்கே இருப்பதற்கு ஏதேனும் வசதிகள் செய்து தர வேண்டுமா எனத் தெரிந்து கொள்ளவே இவ்வாறு வினவினார் சாமி.

அண்ணாவோ அப்போதைக்குத் தனக்கு ஏதேனும் செய்ய வேண்டுமா? எனக் கேட்பதாகக் கருதி, ஒன்றும் வேண்டாம்... சற்றே பொறு. காலைக் கடன்களை முடித்துக் குளித்ததும் சிற்றுண்டி அருந்தலாம் என்றார். சாமிக்கு மறுபடியும் விளக்கமாகக் கேட்க மனம் வரவில்லை.

இதன் பிறகு அண்ணா அவர்கள் இரண்டு மூன்று முறை புன்செய்ப் புளியம்பட்டி வந்திருக்கிறார்கள். 67 பொதுத் தேர்தலுக்குச் சற்று முன்பு பத்து நாள்கள் சுற்றுப்பயணம் மேற்கொண்டார்கள். அப்பொழுதெல்லாம் நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ள, சொற்பொழிவாற்ற வந்துள்ளார்கள். கழக வளர்ச்சி, தேர்தலில் வெற்றி வாய்ப்பு போன்றவற்றைப் பற்றிக் கலந்துரையாடவே அந்த நாள்கள் பயன்பட்டன.

இம்முறையோ அழைப்பின்றி அவராகவே வந்துள்ளார். முன்னறிப்பும் எதுவும் இல்லை. இவ்வளவுக்கும் மேலாக 'மனம் சரியில்லை', 'இரு நாள்கள் தங்கப் போகிறேன்' என்றும் சொல்லியுள்ளார். சாமியின் மன நிலை எப்படியிருக்கும்?

அண்ணா குளித்துக் கொண்டிருக்கும் போது தான் சாமி, மதியிடம், அண்ணாவின் எதிர்பாராத இந்த வருகை பற்றி வினவினார். குமாரபாளையத்தில் திராவிட முன்னேற்றக் கழகப் பொதுக்குழுக் கூட்டம். அதில் கழக முன்னணியினரிடையே சில கருத்து வேறுபாடுகள். அண்ணாவின் முன்னிலையிலேயே காரசாரமான விவாதங்கள். அண்ணாவின் மென்மையான நெஞ்சம் அதனைத் தாங்குமா? நொந்தார். பொதுக்குழுக் கூட்டம் முடிந்ததும் மதியை அழைத்துக் கொண்டு புளியம்பட்டிக்கு வந்திருக்கிறார்.

சரி, குமாரபாளையம் பொதுக்குழுவில் நடைபெற்ற நிகழ்ச்சிகள் அண்ணாவின் மனதைப் புண்படுத்தின. மனம் நொந்த அவர் தனிமையை விரும்பினார். அதற்காகப் புளியம்பட்டியைத் தேர்ந்தெடுத்ததேன்? அந்த வேளையிலும் சாமியின் நினைவு எங்ஙனம் எழுந்தது?

குமாரபாளையத்திலிருந்து இரண்டு மணி நேரம் பயணம்செய்தால் சேலத்தை அடையலாம். மேற்கே மிக அருகிலேயே பவானி இருக்கிறது. அரை மணி நேரப் பயணத்தில் ஈரோடு வந்து சேரலாம். இங்கெல்லாம் கழகத் தோழர்களின் இல்லங்கள் இல்லையா? திராவிடர் கழகத்தில் அண்ணா இருந்த காலத்திலிருந்தே அவருடன் நெருங்கிப் பழகியோர் பலர் இந்த ஊர்களில் இருக்கத்தானே செய்கின்றனர். அந்த ஊர்களைப் பற்றியோ அந்தத் தோழர்களைப் பற்றியோ நினைவு எழாமற் போனது ஏன்?


இன்னும் சொல்லப் போனால் இந்த ஊர்களைச் சேர்ந்தோர் சிலர் பொதுக்குழு உறுப்பினர்களாகக் குமாரபாளையத்திற்கு வந்திருப்பார்களே! அவர்களில் எவரையாவது அழைத்து, நான் உங்கள் ஊருக்கு வர விரும்புகிறேன்; உங்கள் வீட்டில் தங்க விரும்புகிறேன் என்றால் எவராவது மறுப்பாரா? சாமியின் வீட்டைவிட வசதியான வீடுகளாக இருக்குமே அவை! இத்தகைய வினாக்கள் சாமியின் உள்ளத்திலும் எழவே செய்தன.

இவற்றிற்கெல்லாம் விடை....

காலைச் சிற்றுண்டி முடிந்ததும் மதியும் பொன்னம்பலனாரும் அவர்கள் வந்த காரிலேயே சென்னை புறப்பட்டனர். அண்ணா மட்டும் அங்கேயே தங்கினார். அந்தப் பத்தடிக்குப் பத்தடிப் பரப்பளவுள்ள கூடத்திலேயே இரு நாள்களையும் கழித்தார்.

சாமியின் மூத்த பெண் பிறந்து சில நாள்கள் ஆகியிருந்ததால் அண்ணாவையே பெயர் சூட்டுமாறு கேட்டுக்கொண்டனர். அண்ணா மகிழ்வுடன், இராணி எனப் பெயர் சூட்டினார்.

மூன்றாம் நாள் ஊருக்குப் புறப்படத் தயாரானார் அண்ணா. சாமி ஏற்பாடு செய்திருந்த கார் காத்திருந்தது. அண்ணா சம்பூர்ணத்தை அழைத்தார், சம்பூர்ணம்



[illegible] இருவரின் உபசரிப்பால் நான் எல்லாக் கவலைகளையும் மறந்து [illegible] மகிழ்வுடன் இரு நாள்களைக் கழித்தேன். உன் கணவன் நிரந்தரமாக [illegible] பொதுத்தொண்டுக்காகத் தன்னை ஒப்படைத்துக் கொண்டிருப்பவன். [illegible] எத்தனையோ சோதனைகள் வரும். நீ தான் அவனுக்கு [illegible] துணையாக இருக்கவேண்டும். நீ தரும் ஊக்கமும் [illegible] பொதுவாழ்வில் வெற்றி வீரனாக உலாவரச்செய்யும். [illegible] நன்கு கவனித்துக்கொள். நான் போய் வருகிறேன். [illegible] விடைபெற்றுப் புறப்பட்டார் அண்ணா.

இதன் பிறகும், அண்ணா சாமியிடம் வைத்திருந்தது தனியன்பு [illegible] அன்பு கொண்டிருந்தது போலவே சாமியிடமும் கொண்டிருந்தார் [illegible] பெருமைப்பட்டுக் கொள்ளுவதில் நியாயமில்லை என எவரேனும் [illegible] களாயினும் அதனை நான் மறுக்க மாட்டேன். அந்த [illegible] என்றே ஏற்பேன்.

1962-ஆம் ஆண்டு பொதுத் தேர்தலுக்குப் பிறகும் ஒரு முறை அண்ணா [illegible] பட்டிக்கு வந்தார். அவர் சொற்பொழிவாற்றிக் கொண்டிருக்கையில் திருவண்ணாமலையில் நடைபெற்ற சட்டமன்ற இடைத்தேர்தலில் ப.உ. சண்முகம் அவர்கள் வெற்றி பெற்ற செய்தி வந்தது. அந்த வெற்றியின் நினைவாகவே சாமியின் இரண்டாவது மகளுக்கு வெற்றிச்செல்வி எனப் பெயர் சூட்டினார் அண்ணா. மூன்றாவது பெண்ணாகிய மணிமேகலைக்கும் அப்பெயர் சூட்டியவர் அண்ணாவே.

அண்ணா வந்து பெயர் சூட்டட்டும் என்பதற்காகவே சாமியும் சம்பூர்ணமும் [illegible] மூன்று பெண் மக்களைப் பெற்றனரோ? என்று எவரும் கேட்டு [illegible] நீர்கள்! அண்ணா அவர்கள் சாமியின்பால் தனியன்பு பூண்டிருந்தார் என்பதற்கு [illegible] சான்றுகள் தேவையா?

○●○



பேதம்


[illegible] - பாட்டாளி என்ற பேதம் இருப்பதால் எப்படி உழைப்பின் பலனை உழைப்பவனே முழுவதும் அனுபவிக்க [illegible] போய்விடுகிறதோ, அப்படித்தான் ஆரிய திராவிட பேதமிருப்பதால் உழைக்க நாமும், அனுபவிக்க அவர்களும், கோவில் கட்ட நாமும், குருக்களாக வர அவர்களும், [illegible] நாமும், தர்ம சாஸ்திரப் பண்டிதர்களாக அவர்களும், ஓட்டுப்போட நாமும், ஊரான அவர்களும், [illegible] நாமும் பூசுரராக அவர்களும் நாட்டிலே இருக்கிறோம். இல்லையா?

சாதனைச் செம்மல் - 'பெரியவர்'

பி.ஏ. எஸ். வாழ்க்கைக் குறிப்பு



பிறந்த நாள்	:	15-01-1932
பெற்றோர்	:	மா. ஆறுமுக (முதலியார்) அரங்காத்தாள்
வளர்ப்புத்தாய்	:	அத்தை பார்வதியம்மாள்
பிள்ளைப் பெயர்	:	பு.ஆ சாமிநாதன்
நிலைத்த பெயர்	:	பெரியவர், எம்.பி., பி.ஏ.எஸ்.
பள்ளிப் படிப்பு	:	புன்செய்ப் புளியம்பட்டி, இடிகரை சர்வஜன உயர்நிலைப்பள்ளி, கோவை செயின்ட் மைக்கேல் பள்ளி, கோவை
அண்ணாவின் சந்திப்பு	:	எஸ்.எஸ்.எல்.சி. முடித்துக் கோவைக் கல்லூரியில் படிக்கும் பொழுது அறிஞர் அண்ணாவின் பேச்சினைக் கேட்டது முதல் - கல்லூரிப் படிப்பினை விட்டு கட்சிப் பணியாற்றல்.
திருமணம்	:	28-11-1960-இல் புளியம்பட்டி 'வி.ஆர்.டி.' நூற்பாலை வளாகம்.
நடாத்தி வைத்தவர்	:	அண்ணாவின் வேண்டுகையினை ஏற்று ஈ.வி.கே.சம்பத் அவர்கள்.
1950 - 51-இல்	:	கோ-ஆப் டெக்ஸ் வேலை. கட்சிப் பணிக்கு இடையூறு எனக் கருதி 3 மாதங்களில் அப் பணியை விடுதல்.
1952	:	நற்பணி மன்றம் அமைத்தல், எளியவர்க்கு எல்லா நிலைகளிலும் உதவுதல்.
1953-இல்	:	கோவை மாவட்டம் மேட்டுப்பாளையத்தில் நடைபெற்ற கழக மாநாட்டில் தம் கட்சிக் குறியிட்ட கைத்தறி வேட்டி, துண்டுகளை உருவாக்குதல். தமிழ்நாட்டிலேயே முதன்முதலில் இங்குதான் இத்திட்டம் செயற்படுத்தியது.



1958-இல்	:	மாவட்டக் கழகத் தேர்தலில் வெற்றி பெறல்.
1958-இல்	:	திருவுளச் சீட்டில் புளியம்பட்டி ஊராட்சி மன்றத் தலைவராக 29-08-1958-இல் பொறுப்பேற்றல்.
1958-இல்	:	மாவட்டக் கழகத் தேர்தலில் வெற்றி பெறல்.
1963-இல் (13/13)	:	புளியம்பட்டி ஊராட்சித் தேர்தலில் 13 வார்டுகளிலும் காங்கிரச நேரடிப் போட்டியில் 13 வார்டுகளிலும் தி.மு.க.வே பெற்றிபெறல்.
1965-66-இல்	:	அடுத்து நடந்த மிகப்பெரிய வேளாண் போராட்டத்தில் இருதரப்பினரையும் களத்திலேயே சந்தித்து அமைதியுண்டாக்கியது.
1975-இல்	:	ஒருங்கிணைந்த கோவை மாவட்டச் செயலராய் இருந்த பொழுது கோவையில் 5-ஆம் மாநில மாநாடு வரவேற்புக் குழுத் தலைவராயிருந்து சிறந்த வரவேற்புரையாற்றியமை.

ஏற்ற பொறுப்புகள் :

1) கோபி வட்டச் செயலர் + கோபியில் மாநாடு.
2) நீண்ட நாளைய பொதுக்குழு உறுப்பினர்.
3) தலைமைக் கழகச் சட்டதிட்டத் திருத்தக்குழு உறுப்பினர்.

கலந்துகொண்ட போராட்டங்கள் :

1) 1955-இல் தமிழர்களை அறிவற்றவர்கள் என்றதை எதிர்த்து அண்ணாவின் ஆணையை ஏற்று நேருவுக்குக் கருப்புக் கொடி காட்டுதல்.
2) விலைவாசி உயர்வுப் போராட்டம்.
3) மும்முனைப் போராட்டம்.
4) இந்தி எதிர்ப்புப் போராட்டம்.
5) இரயில் நிறுத்தப் போராட்டம்.
6) கட்சி அறிவித்த அனைத்துப் போராட்டங்கள், மறியல்கள், சட்ட நகல் எரிப்பு.
7) 1975-இல் மிசா சட்டத்தில் கோவைச் சிறையில் ஓராண்டு இருத்தல்.
8) ஈழத் தமிழர் ஆதரவுப் போராட்டம்.
9) கைத்தறி நெசவாளர் ஆதரவுப் போராட்டம்.

மாநாடுகளில் பங்கேற்றமை


கோபி வட்டச் செயலாளர், கோபியில் நடைபெற்ற மாநாடு.

1975 டிசம்பர் 25, 26, 27, 28-இல் ஒருங்கிணைந்த 5-ஆம் மாநில மாநாடு - வரவேற்புக்குழுத் தலைவர் + வரவேற்புரையாற்றியது.

1965-இல்	:	கோபி நாடாளுமன்றத் தேர்தலில் மத்திய அமைச்சர் சி.சுப்பிரமணியம் அவர்களை மிக அதிக வாக்கில் வென்றார்.
1971-இல்	:	அதே கோபி நாடாளுமன்றத் தேர்தலில் ஈ.வி.கே. சம்பத் அவர்களை மிக அதிக வாக்குகள் பெற்று வெற்றி பெறல்.
1967-இல்	:	புளியம்பட்டிக் குடிநீர்த் திட்டம் அண்ணாவால் அறிவிக்கப் பெறல்.
குடிநீர்த் திட்டம்	:	15-09-1970-இல் தொடங்கி 04-09-1973-இல் குடிநீர் வழங்கும் விழா.
இரண்டாவது குடிநீர்த் திட்டம்	:	இரண்டாம் குடிநீர்த் திட்டம் கலைஞர் அவர்களால் அறிவிக்கப் பெற்று செயல்படுத்தியது.
கால் முறிவு	:	1995 உள்ளாட்சித் தேர்தலின் பொழுது அக்பரின் வெற்றிக்காக வீடுவீடாய்ச் சென்று வாக்குத் திரட்டும்பொழுது குழியில் இடறிவிழுந்து கால் எலும்பு முறிவு ஏற்படல்.
1995-இல்	:	சென்னை மருத்துவமனையில் விஜயா ஹெல்த் சென்டரில் டாக்டர். மோகனதாஸ் அறுவை மூலம் ஓரளவு சீராகி மக்கள் பணியினைத் தொடர்தல்.
1996-இல்	:	சென்னை - மருத்துவர் மோகன்தாஸ் மருத்துவத்தால் ஓரளவு சீராகி மக்கள் பணி தொடர்தல்.

வளர்த்த கடா மார்பில் பாய்ந்து துன்புறல்

: இந்த நிலையிலும் மக்கள் பணி ஆற்றும் பொழுது, வளர்த்த கடாவே மார்பில் பாய்வது போல உடனிருப்போரில் சில சிற்றறிவினர் மனம் மாறுபட்டுச் செயல்படுதல்.



மனம் நலிவும் அதனால் உடல் மெலிவும்

: இப்படி உடனிருப்போரே துன்பு செய்வது - மனவமைதியிழந்து அதனால் உடல் நலிவும் ஏற்படல்.

2010-இல் : பல மருத்துவமனைகளில் மருத்துவம் பெறல். எம் மருத்துவமும் ஏற்கவில்லை.

மறைவு : 22-01-2011-ஆம் நாளில் பகல் 1-00 மணிக்கு தன இன்னுயிர் நீத்தல்.

இழப்பினைத் தாங்காத மக்களின் நிலை

: மறைவுச் செய்தி கேட்ட ஊர்மக்கள் எல்லாரும் - கட்சி வேறுபாடின்றி - தம் இல்லத்தில் நேர்ந்த மறைவாகவே கருதி பி.ஏ.எஸ். இல்லம் அடைந்து மலர் அஞ்சலி செலுத்தினர்.

ஊரின் நிலை : இறுதி ஊர்வலத்தன்று எல்லாக் கடைகளும் அடைத்து வீடுமுதல் காடுவரை சென்ற கூட்டம், அண்ணாவின் இறுதி ஊர்வலத்தை நினைவு சூட்டியது.

அடக்கமும், மணிமண்டபமும்

: ஏற்கனவே தாம் கருதியபடி தம் தோட்டத்தில் நல்லடக்கம் செய்யப்பெற்ற இடத்தில் ரூ. 18 இலட்சம் மதிப்பில் மணிமண்டபம் நிறைவு பெற்றுள்ளது.

மணிமண்டபத் திறப்பும், நினைவு மலர் வெளியீடும்

: இம் மணிமண்டபத் திறப்பும் - நினைவு மலர் சுமார் 50 கட்டுரைகளும், இரங்கட்பாக்களும் அடங்கிய விளம்பரமில்லா மலர்.

●●●

P.A.S. அறக்கட்டளை சார்பில்
கல்வி நிதி உதவி பெற்றவர்கள்


1999 - 2000

பெயர், முகவரி	பயின்ற கல்லூரி	தொகை ரூ.	இனம்
1. மு. மலர்விழி த/பெ. முத்துசாமி கடைச்சென்னிபாளையம் நம்பியூர்	கோவை மருத்துவக் கல்லூரி M.B.B.S. - I Year	3,000-00	கொங்கு வேளாளர்
2. சி. தேன்மொழி த/பெ. கே. சிதம்பரம் கடைச்சென்னிபாளையம் நம்பியூர்	பண்ணாரியம்மன் பொறியியல் கல்லூரி சத்தி B.E. (C.S.)	3,000-00	கொங்கு வேளாளர்
3. ஆ. ரேகா த/பெ. என். ஆறுமுகம் தேவாங்கபுரம் தொட்டம்பாளையம்	பண்ணாரியம்மன் பொறியியல் கல்லூரி சத்தி Computer Science	3,000-00	தேவாங்கர்
4. த. காயத்ரிதேவி த/பெ. எல். தருமன் 137, தங்கசாலை வீதி பு. புளியம்பட்டி	கோவை மருத்துவக் கல்லூரி M.B.B.S. - I Year	3,000-00	தேவாங்கர்
5. ச. தேன்மொழி த/பெ. சம்பத் 9/12, வினோபா தெரு தொட்டம்பாளையம்	பண்ணாரியம்மன் பொறியியல் கல்லூரி சத்தி B.E. (ECE)	3,000-00	தேவாங்கர்
6. க. முருகேசன் த/பெ. கந்தன் உத்தண்டியூர்	அரசு கலைக் கல்லூரி M.C.A. - I Year	3,000-00	அரிஜன்
7. ஆ. செந்தில்குமார் த/பெ. கே.பி. ஆறுமுகம் 6, நாச்சியம்மன் வீதி ஈரோடு	M.C.A. - I Year	3,000-00	செங்குந்தர்
8. மா. பிரபா த/பெ. மாதேஸ்வரன் சப்-போஸ்ட் மாஸ்டர் நம்பியூர்	M.M.C. கல்லூரி சென்னை மருத்துவம்	3,000-00	கொங்கு வேளாளர்



பெயர், முகவரி	பயின்ற கல்லூரி	தொகை ரூ.	இனம்
9. இ. சரவணக்குமார் அன்னூர்	B.E. - Final Year	3,000-00	செங்குந்தர்
10. பி. பாலகிருஷ்ணன் த/பெ. கே. சிவஞானம் வடச்சென்னிபாளையம் நம்பியூர்	செங்குந்தர் பொறியியல் கல்லூரி ஈரோடு B.E. - 3rd Year	3,000-00	செங்குந்தர்
11. ம. பழனிச்சாமி சத்தியமங்கலம்	மஹாராஜ் பொறியியல் கல்லூரி B.E. - I Year	3,000-00	வேட்டுவக் கவுண்டர்
12. ஏ. ஆனந்தகுமார் கோணமூலை சத்தியமங்கலம்	அரசு பொறியியல் கல்லூரி M.B.B.S. - I Year	3,000-00	கொங்கு வேளாளர்
13. கா. ஆண்டமுத்து த/பெ. காளியண்ணன் கோட்டுப்புள்ளாம்பாளையம்	அரசு கலைக் கல்லூரி கோவை M.C.A. - II Year	3,000-00	கொங்கு வேளாளர்
2002 - 2003			
1. க. புவராணி த/பெ. சுப்பையன் பு. புளியம்பட்டி	கோவை அரசு கலைக் கல்லூரி M.Sc. - II Year	1,500-00	ஒக்கலிகா
2. க. மேனகா த/பெ. சுப்பையன் பு. புளியம்பட்டி	மஹாராஜா பொறியியல் கல்லூரி B.E. - III Year	1,500-00	ஒக்கலிகா
3. ர. கார்த்திக் த/பெ. ரங்கசாமி காந்திநகர் பு. புளியம்பட்டி	B.E. Computer Science	1,500-00	அரிஜன்
4. மா. சதீஸ்வரன் த/பெ. மாரிமுத்து சத்தியமங்கலம்	ரீஜனல் பொறியியல் கல்லூரி தஞ்சை B.E. - I Year	1,500-00	தெலுங்கு செட்டியார்
5. வெ. வெங்கடாசலம் த/பெ. வெற்றிவேல் சத்தியமங்கலம்	அரசு பொறியியல் கல்லூரி தஞ்சை B.E.(ECE) - I Year	1,500-00	ஆசாரி

பெயர், முகவரி	பயின்ற கல்லூரி	தொகை ரூ.	இனம்
6. க. விக்னேஷ் த/பெ. சந்திரன் சத்தியமங்கலம்	மண்டல பொறியியல் கல்லூரி திருச்சி B.E.(Mech) - I Year	1,500-00	அகமுடையார்
7. செ. சந்திரசேகரன் த/பெ. செல்வக்குமார் தொட்டம்பாளையம்	பண்ணாரியம்மன் பொறியியல் கல்லூரி சத்தி B.Tech.(Textile) - 3rd Year	1,500-00	தேவாங்கர்
8. ப. திருப்பதிசாமி த/பெ. பழனிச்சாமி இராமநாதபுரம்	திருச்சி மண்டல பொறியியல் கல்லூரி B.E. (EEE)	1,500-00	கொங்கு செட்டியார்
9. ஏ.டி. சத்யவினோதா த/பெ. தங்கவேல் நல்லகவுண்டம்பாளையம் கோபி	அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி M.B.B.S. - I Year	1,500-00	செங்குந்தர்
10. த. சுப்புராஜ் த/பெ. தங்கவேல் நல்லகவுண்டம்பாளையம் கோபி	சென்னை மருத்துவக் கல்லூரி M.B.B.S - II Year	1,500-00	செங்குந்தர்
11. ஆ. சாமியப்பன் த/பெ. ஆறுமுகம் கரட்டடிபாளையம் கோபி	தமிழ்நாடு பொறியியல் கல்லூரி கோவை B.E. - II Year	1,500-00	நாடார்
12. மு. மாரிமுத்து த/பெ. கே. முருகன் கரட்டடிபாளையம் கோபி	செங்குந்தர் பொறியியல் கல்லூரி B.E.(ECE) - II Year	1,500-00	நாடார்
13. ஜெ. பூபாலன் த/பெ. ஜெயபாண்டியன் இராமகிருஷ்ணாபுரம் கோவை	அமிர்தா பொறியியல் கல்லூரி எட்டிமடை B.E.(ECE) - II Year	1,500-00	நாடார்
14. உ. உதயகலைவாணி த/பெ. உதயகிரி வடவள்ளி	ரீஜனல் பொறியியல் கல்லூரி தஞ்சை B.E. - I Year	1,500-00	தெலுங்கு செட்டியார்



பெயர் முகவரி	பயின்ற கல்லூரி	தொகை ரூ.	இனம்
15. க. ரவிச்சந்திரன் த/பெ. சுப்பிரமணியம் அத்திபூர் தட்டுப்பாளையம்	நாமக்கல் அரசு கால்நடை மருத்துவக் கல்லூரி B.V.S.C. - IV Year	1,500-00	வன்னியர்
16. தி. சரவணன் த/பெ. கிருஷ்ணன் பழைய அய்யம்பாளையம் நம்பியூர்	அழகப்பா பொறியியல் கல்லூரி காரைக்குடி B.E.(ECE) - I Year	1,500-00	செங்குந்தர்
17. ச. தனசேகர் த/பெ. டி.ஏ. சண்முகம் துடுப்பதி	கல்லூரி திருச்செங்கோடு B.Sc.(CT) - II Year	1,500-00	செங்குந்தர்
2004 - 2005			
1. மு. லட்சுமிநாராயணன் த/பெ. டி.ஆர். முருகன் பு. புளியம்பட்டி	விநாயகா மருத்துவக் கல்லூரி சேலம் B.D.S. - Final Year	3,000-00	ஒக்கலிகர்
2. வ. வீரபாகு த/பெ. மாரிமுத்து பு. புளியம்பட்டி	செங்குந்தர் பொறியியல் கல்லூரி B.E.(ECE) - II Year	3,000-00	செங்குந்தர்
3. ஆர். அக்கீம் த/பெ. ரஹீம் முல்லை நகர்	அய்யன் திருவள்ளுவர் கலை-அறிவியல் கல்லூரி செல்லப்பம்பாளையம் B.B.M.(CA)	3,000-00	முஸ்லீம்
4. ச. கோபிநாத் த/பெ. சந்திரசேகரன் பு. புளியம்பட்டி	கருமத்தம்பட்டி இன்ஸ்டிடியூட் ஆப் டெக்னாலஜி B.C.A. - I Year	1,500-00	செங்குந்தர்
5. ரா. மூர்த்தி த/பெ. ராமசாமி S.R.T. பின்புறம் பு. புளியம்பட்டி	ராகவேந்திரா ஆசிரியர் பயிற்சிப்பள்ளி சத்தி	1,500-00	ஆசாரியார்
6. பரத்குமார் தா/பெ. வாணி தங்கசாலை வீதி பு. புளியம்பட்டி	சத்யநாராயணா பாலிடெக்னிக் தர்மபுரி D.C.E. - I Year	1,500-00	செங்குந்தர்

பெயர், முகவரி	பயின்ற கல்லூரி	தொகை ரூ.	இனம்
7. ர. சிவக்குமார் த/பெ. ரங்கன் இந்திராநகர் புளியம்பட்டி	அரசு கலைக் கல்லூரி கோவை B.Sc.(CS)	1,500-00	அரிஜன்
8. ம. விஜயன் த/பெ. மணியன் இந்திராநகர் புளியம்பட்டி	கோபி கலை - அறிவியல் கல்லூரி B.Sc.(Maths)	1,500-00	அரிஜன்
9. த. இராஜேஸ்வரி த/பெ. தங்கராசு காந்திநகர் புளியம்பட்டி	ஆசிரியர் பயிற்சிப் பள்ளி கோத்தகிரி	2,000-00	அரிஜன்
10. ரா. சரண்யா த/பெ. ராமதுரை பு. புளியம்பட்டி	ஆசிரியர் பயிற்சிப் பள்ளி கோத்தகிரி	2,000-00	நாட்டுக் கொட்டை செட்டியார்
11. ரா. காயத்திரி த/பெ. ராமசாமி பு. புளியம்பட்டி	அரசு ஆசிரியர் பயிற்சிப் பள்ளி ஊட்டி	2,000-00	ஒக்கலிகர்
12. க. ராம்குமார் த/பெ. கணேசன் காந்திநகர் பு. புளியம்பட்டி	ஆசிரியர் பயிற்சிப் பள்ளி கோத்தகிரி	2,000-00	அரிஜன்
13. த. கோபாலகிருஷ்ணன் த/பெ. தண்டபாணி பு. புளியம்பட்டி	ஆசிரியர் பயிற்சிப் பள்ளி கோத்தகிரி	2,000-00	செங்குந்தர்
14. சு. நஞ்சுண்டமூர்த்தி த/பெ. சுப்பையன் வடுகபாளையம் பு. புளியம்பட்டி	ஆசிரியர் பயிற்சிப்பள்ளி இராணிப்பேட்டை	2,000-00	ஒக்கலிகர்
15. மு. ஜீவா த/பெ. முருகன் தேசிபாளையம்	ஆசிரியர் பயிற்சிப் பள்ளி கோத்தகிரி	2,000-00	ஒக்கலிகர்
16. ராஜூ த/பெ. சரவணன் பு. புளியம்பட்டி	இருதய அறுவை சிகிச்சை உதவி	2,000-00	தேவாங்க செட்டியார்




பெயர். முகவரி	பயின்ற கல்லூரி	தொகை ரூ.	இனம்
17. செ. மனோகரன் த/பெ. செல்வராசு நேருநகர் புளியம்பட்டி	இருதய அறுவை சிகிச்சை உதவி	2,000-00	பொற் கொல்லர்
18. சி. வீராபினசி த/பெ. சின்னத்தம்பி காராப்பாடி	ஆதிபராசக்தி வேளாண்மைக் கல்லூரி	2,000-00	திருத்தவர்
19. ச. ஆனந்தி த/பெ. சண்முகம் புளியம்பட்டி	அரசு பாலிடெக்னிக் கல்லூரி, கோவை டிப்ளமா	2,000-00	செங்குந்தர்
20. நா. மிதுன்சக்ரவர்த்தி த/பெ. நாகராஜ் பு. புளியம்பட்டி	செங்குந்தர் பொறியியல் கல்லூரி B.E.	3,000-00	செங்குந்தர்
21. து. நந்தகுமார் த/பெ. துரைசாமி தொட்டம்பாளையம்	D.E.C.E. - II Year	1,500-00	ஒக்கலிகர்
22. ப. திருப்பதிசாமி த/பெ. பழனிச்சாமி உத்தண்டியூர்	திருச்சி பொறியியல் கல்லூரி B.E.(ECE) - II Year	1,500-00	
23. ச. கதிர்வேலு த/பெ. சவுண்டப்பன் சதுமுகை, சத்தி	அரசு மருத்துவக் கல்லூரி, கோவை M.B.B.S. - II Year	1,500-00	தேவாங்க செட்டியார்
24. யரீஷ்குமார் த/பெ. ஜானகிராமன் மூலக்கடை, சத்தி	அண்ணா பல்கலைக்கழகம் சென்னை B.E.(CS) - IV Year	1,500-00	கவுண்டர்
25. வெ. வெங்கடாசலம் த/பெ. வெற்றிவேல் ரங்கசமுத்திரம், சத்தி	தந்தை பெரியார் பொறியியல் கல்லூரி B.E.(CS) - III Year	1,500-00	தச்சு ஆசாரியார்
26. க. தங்கவேலு த/பெ. கரியகாளி கொண்டப்பநாயக்கன்பாளையம்	வலது கால் ஊனம் அறுவை சிகிச்சை	1,000-00	நாயக்கர்
27. ஜ. முருகன் த/பெ. ஜடையப்பன் ஆசனூர், சத்தி	B.E.(CS) - I Year	2,000-00	மலைவாழ் மக்கள்

பெயர் முகவரி	பயின்ற கல்லூரி	தொகை ரூ.	இனம்
28. சி. அழகேசன் த/பெ. சின்னத்தம்பி காமநகர், உக்கரம்	பாரதியார் பல்கலை கழகம், கோவை M.A.(Tamil) - II Year	3,000-00	ஒக்கலிகர் (பார்வை இழந்தவர்)
29. செ. சரஸ்வதி த/பெ. சென்னியப்பன் காமநகர், உக்கரம்	பாரதியார் பல்கலை கழகம், கோவை M.A.(Tamil) - II Year	2,000-00	பண்ணாடி
30. க. கார்த்திக் முத்துராம் த/பெ. சுப்பிரமணியன் நம்பியூர்	அரசு மருத்துவக் கல்லூரி M.B.B.S. - II Year	2,000-00	தெலுங்கு செட்டியார்
31. சு. மேனகா த/பெ. சுப்பிரமணியம் நம்பியூர்	P.K.R. மகளிர் கல்லூரி கோபி M.C.A. - II Year	1,500-00	தெலுங்கு செட்டியார்
32. ரேவதி த/பெ. விஸ்வநாதன்	செங்குந்தர் ஆசிரியர் பயிற்சிப் பள்ளி	1,500-00	நாயுடு
33. மு. விஜயலட்சுமி த/பெ. முருகேசன் [illegible]ப்பாளையம்	நாகம்மை ஆசிரியர் பயிற்சிப் பள்ளி, திருச்சி II Year	1,500-00	கொங்கு வேளாளர்
34. மு. நந்தகுமார் த/பெ. முத்துமாணிக்கம் கடத்தூர்	செங்குந்தர் பொறியியல் கல்லூரி ஈரோடு B.E.(ECE) - III Year	1,500-00	செங்குந்தர்
35. வெங்கடாசலமூர்த்தி த/பெ. குமாரசாமி கன்னாங்காட்டுப்பாளையம்	ஊட்டி கலை, அறிவியல் கல்லூரி M.I.B. - II Year	1,500-00	கொங்கு வேளாளர்
36. அ. விஷ்ணுவர்த்தன் த/பெ. அருணகிரி புதுப்பாளையம், கோபி	D.M.L.E. - II Year	1,500-00	செங்குந்தர்
37. ஆர். ரஞ்சித் த/பெ. சி.கே. ராஜேந்திரன் சின்னலட்சுமிபுரம், கோபி	ஈரோடு தொழில் நுட்பக் கல்லூரி B.E. (ECE)	1,500-00	தெலுங்கு செட்டியார்
38. க. ராஜேஷ்கண்ணா த/பெ. டி. சுப்பிரமணியம் புதுப்பாளையம், கோபி	கோபி கலை, அறிவியல் கல்லூரி B.Sc.(CS)	1,500-00	வன்னியர்



[illegible]	[illegible]	[illegible]	[illegible]
[illegible]	[illegible] பொறியியல் கல்லூரி [illegible] B.E.(CS)	1,000-00	[illegible]
[illegible]	[illegible] மருத்துவக் கல்லூரி M.B.B.S. I Year	1,000-00	[illegible]
[illegible]	[illegible] மருத்துவக் கல்லூரி M.B.B.S.-II Year	1,000-00	[illegible]
[illegible]	[illegible] மருத்துவக் கல்லூரி, கோவை M.B.B.S. I Year	1,000-00	[illegible]
[illegible]	[illegible] பொறியியல் கல்லூரி [illegible] B.E.	2,000-00	[illegible]
14. [illegible] த/பெ. [illegible] [illegible]	[illegible] பொறியியல் கல்லூரி B.E.-I Year	1,000-00	[illegible]
[illegible] த/பெ. நல்லசாமி [illegible], பவானி	[illegible] மருத்துவக் கல்லூரி சென்னை B.V.S.C.-I Year	2,000-00	
[illegible] த/பெ. முருகேசன் [illegible], பவானி	[illegible] B.E.(IT)-II Year	2,000-00	
17. [illegible] த/பெ. மாணிக்கம் அந்தியூர்	கோவை பொறியியல் கல்லூரி B.E.(ECE)	1,000-00	[illegible]
[illegible] த/பெ. மாணிக்கம் [illegible], கோவை	S.N.S. கலைக்கல்லூரி கோவை B.B.M.-Final Year	2,000-00	[illegible]

பெயர், முகவரி	பயின்ற கல்லூரி	தொகை ரூ.	இனம்
49. ஆ. சுரேஷ் த/பெ. ஆறுமுகம் நாடிபதூர், கோவை	S.N.R. ராஜலட்சுமி கலைக் கல்லூரி M.C.A. - Final Year	2,000-00	செங்குந்தர்
50. கோமதி த/பெ. தம்புராசி பெரியநாயக்கன்பாளையம் கோவை	கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி கோவை B.Sc. - Final Year	2,000-00	செங்குந்தர்
51. க. திவ்யரேகா த/பெ. கிருஷ்ணசாமி தளவாய்பட்டினம் தாராபுரம்	செவிலியர் பயிற்சி First Year M.B.B.S. - II Year	2,000-00	படுக நாயக்கர்
52. பா. சக்திவேல் த/பெ. பாலசுப்பிரமணியம் தளவாய்பட்டினம்	திருச்சி பொறியியல் கல்லூரி M.I.E. - III Year	1,500-00	கொங்கு வேளாளர்
53. க. [illegible] த/பெ. சுப்பிரமணியம் தளவாய்பட்டினம்	ஆசிரியர் பயிற்சிப் பள்ளி பழனி	2,000-00	வண்ணார்
2005 - 2006			
1. க. ராம்குமார் த/பெ. கணேசன் காந்திநகர், புளியம்பட்டி	ஆசிரியர் பயிற்சிப் பள்ளி, கோத்தகிரி II Year	2,000-00	அரிஜன்
2. த. ராஜேஸ்வரி த/பெ. தங்கராஜ் காந்திநகர், புளியம்பட்டி	ஆசிரியர் பயிற்சிப் பள்ளி, கோத்தகிரி II Year	2,000-00	அரிஜன்
3. ரா. சரண்யா த/பெ. ராமதுரை புளியம்பட்டி	ஆசிரியர் பயிற்சிப் பள்ளி, கோத்தகிரி II Year	2,000-00	தாசபளஞ்சிக செட்டியார்
4. மு. சந்திரன் த/பெ. முருகன் காந்திநகர், புளியம்பட்டி	இராமகிருஷ்ணா ஆசிரியர் பயிற்சிப் பள்ளி, கோவை I Year	2,000-00	அரிஜன்
5. கு. பத்மநாபன் த/பெ. குணசேகரன் காந்திபுரம், புளியம்பட்டி	ஆசிரியர் பயிற்சிப் பள்ளி, கோத்தகிரி I Year	2,000-00	அரிஜன்



பெயர் முகவரி	படிக்கும் கல்லூரி	தொகை ரூ.	தொழில்
[illegible]	[illegible] ஆசிரியர் பயிற்சிப் பள்ளி, [illegible] I Year	2,000-00	[illegible]
[illegible]	ஆசிரியர் பயிற்சிப் பள்ளி, [illegible] I Year	2,000-00	[illegible]
[illegible]	T.T.C. ஆசிரியர் பயிற்சிப் பள்ளி, [illegible] I Year	2,000-00	[illegible]
[illegible]	ஆசிரியர் பயிற்சிப் பள்ளி, [illegible] I Year	2,000-00	[illegible]
10. [illegible]	அரசு மருத்துவக் கல்லூரி, கோவை I Year	2,000-00	[illegible]
11. [illegible]	அரசு மருத்துவக் கல்லூரி, கோவை II Year	2,000-00	[illegible]
12. [illegible]	கால்நடை மருத்துவக் கல்லூரி, சென்னை I Year	2,000-00	[illegible]
13. [illegible]	[illegible] பொறியியல் கல்லூரி B.E.-I Year	2,000-00	[illegible]
14. [illegible]	அரசு வேளாண்மைக் கல்லூரி, கிள்ளிகுளம் B.Sc.(Agri)-I Year	2,000-00	[illegible]
15. [illegible]	திருச்செங்கோடு பொறியியல் கல்லூரி I.T.I.-II Year	2,000-00	[illegible]
16. [illegible]	திருச்செங்கோடு பொறியியல் கல்லூரி I.T.I.-I Year	2,000-00	[illegible]


பெயர், முகவரி	பயின்ற கல்லூரி	தொகை ரூ.	இனம்
17. கோ. பாலகுமார் த/பெ. கோபாலகிருஷ்ணன் உடுமலை	மகாலிங்கம் பொறியியல் கல்லூரி B.E. - I Year	2,000-00	செங்குந்தர்
18. த. முகமதலி ஜின்னா த/பெ. தமீம் வின்சென்ட் ரோடு, கோவை	கோவை சங்கரா கலைக் கல்லூரி M.C.A. - Final Year	5,000-00	முஸ்லிம்
19. நந்தகுமார் செங்காளிபாளையம் கடத்தூர்	செங்குந்தர் பொறியியல் கல்லூரி E.C.E.	2,000-00	செங்குந்தர்
20. சி. ஷீபாமெர்சி த/பெ. சின்னத்தம்பி காராப்பாடி	கோபி மகளிர் கலைக் கல்லூரி M.B.A.	2,000-00	கிருத்தவர்
21. வெ. வெங்கடாசலம் த/பெ. வெற்றிவேல் சத்தியமங்கலம்	பொறியியல் கல்லூரி வேலூர் C.I. - I Year	2,000-00	தச்சு ஆசாரியார்
22. ந. ஜானகி த/பெ. நஞ்சுண்டன் காவிரியூர், உக்கரம்	இருதய அறுவை சிகிச்சை உதவி	2,000-00	ராஜகம்பள தொட்டி நாயக்கர்
23. கோ. குமரேசன் த/பெ. கோபால் சத்தியமங்கலம்	இருதய அறுவை சிகிச்சை உதவி	2,000-00	தேவாங்க செட்டியார்
24. சு. ராகவி (1 வயது குழந்தை) த/பெ. சுப்பிரமணியம் காவிலிபாளையம்	இருதய அறுவை சிகிச்சை உதவி	2,000-00	வேட்டுவக் கவுண்டர்
2007 - 2008			
1. ச. கலைச்செல்வி த/பெ. சந்திரன் சிறுமுகை	S.N.S. பொறியியல் கல்லூரி, கோவை B.E. - II Year	5,000-00	தேவாங்கர்
2. ரா. ஜெய்பிரியதர்ஷினி த/பெ. ராமசாமி தண்ணீர்ப்பந்தல்	திண்டுக்கல் R.V.S. கல்லூரி M.B.A. - I Year	5,000-00	கொங்கு வேளாளர்
3. மு. பாலகணபதி த/பெ. முருகேஸ் கவுந்தப்பாடி, ஈரோடு	சென்னை பல்கலைக்கழகம் B.Tech.(IT) - Final Year	2,000-00	செங்குந்தர்



பெயர், முகவரி	பயின்ற கல்லூரி	தொகை ரூ.	இனம்
4. ம. மதியழகன் த/பெ. மகாலிங்கம் பாலக்கோடு நாகப்பட்டினம்	கோபி ஆண்டவர் பாலிடெக்னிக் D.M.E. - III Year	3,000-00	தேவாங்கர்
5. ப. கோவிந்தசாமி த/பெ. பழனிச்சாமி வள்ளிபாளையம் காஞ்சிகோயில்	டான்பாஸ்கோ ஆசிரியர் பயிற்சிப் பள்ளி	2,000-00	கொங்கு வேளாளர்
6. ஜானகிராமன் மூலக்கடை சத்தியமங்கலம்	அண்ணா பல்கலைக்கழகம் B.E. - IV Year	2,000-00	
7. கி. ஷீபாமெர்சி த/பெ. சின்னத்தம்பி காராப்பாடி	கோபி மகளிர் கலைக் கல்லூரி M.B.A. - II Year	2,000-00	கிருத்தவர்
8. சா. நாகமணி த/பெ. சாமிநாதன் காந்திநகர், புளியம்பட்டி	ஆசிரியர் பயிற்சிப் பள்ளி, பெருந்துறை I Year	2,000-00	அரிஜன்
9. சா. மேகலா த/பெ. சாமிநாதன் காந்திநகர், புளியம்பட்டி	ராகவேந்திரா ஆசிரியர் பயிற்சிப் பள்ளி, சத்தி	2,000-00	அரிஜன்
10. பேபி சித்ரா த/பெ. ரங்கசாமி காந்திநகர், புளியம்பட்டி	T.T.I. ஆசிரியர் பயிற்சிப் பள்ளி மங்கலம், அந்தியூர்	2,000-00	அரிஜன்
11. பா. தமிழரசன் த/பெ. பாலன் மேல்முடுதுறை	அய்யன் திருவள்ளுவர் கலை, அறிவியல் கல்லூரி B.Com.(CA) - III Year	2,000-00	வேட்டுவக் கவுண்டர்
12. மா. ரேவதி தா/பெ. ஜமுனா தவிட்டுப்பாளையம்	செயின்ட் மேரீஸ் ஆசிரியர் பயிற்சிப்பள்ளி அந்தியூர்	2,000-00	வன்னியர்
13. கார்த்திகா முருகன் நகர் N.G.O. காலனி, கோவை	கோவை ராஜலட்சுமி அறிவியல் கல்லூரி B.Com.(CA)	2,000-00	

பெயர், முகவரி	பயின்ற கல்லூரி	தொகை ரூ.	இனம்
14. ம. திவ்யப்பிரியா த/பெ. மணி விநோபா வீதி புளியம்பட்டி.	அதியமான் பொறியியல் கல்லூரி B.E. - II Year	4,000-00	செங்குந்தர்
15. ஜ. சங்கீதா த/பெ. ஜான் ஆதிதிராவிடர் தெரு நம்பியூர்	P.K.R. மகளிர் கலைக் கல்லூரி M.Sc. - I Year	2,000-00	அரிஜன்
16. ஜானகிராமன் மூலக்கடை சத்தியமங்கலம்	அண்ணா பல்கலைக்கழகம் B.E. - IV Year	2,000-00	
17. கார்த்திக் முத்துராம் த/பெ. சுப்பிரமணியம் நம்பியூர்	C.M.C. மருத்துவக் கல்லூரி, கோவை M.B.B.S. - IV Year	2,000-00	தெலுங்கு செட்டியார்
18. மா. தமிழ்ச்செல்வி த/பெ. டி.ஜி. மாணிக்கம் தவிட்டுப்பாளையம்	R.V.S. நர்ஸிங் காலேஜ்	2,000-00	தேவாங்க செட்டியார்
19. செ. அசோக்குமார் த/பெ. செல்வராஜ் நாடார் காலனி மேட்டுப்பாளையம்	ஈரோடு செங்குந்தர் பொறியியல் கல்லூரி B.E.	2,000-00	இந்து நாடார்
20. கோ. கலைவாணி த/பெ. கோவிந்தராஜன் புதுப்பாளையம் கோபி	கோபி கலை, அறிவியல் கல்லூரி B.Com. - III Year	2,000-00	செங்குந்தர்
21. க. சதீஸ்குமார் த/பெ. சுப்பையன் வடுகபாளையம் புளியம்பட்டி.	திண்டுக்கல் ஆசிரியர் பயிற்சிப் பள்ளி I Year	2,000-00	ஒக்கலிகர்





நிழற்படங்கள்



மேட்டுப்பாளையம் 'தூயமணி - சாந்தி' இணையரின் திருமணத்தில் கலைஞருடன் சாதனைச் செம்மல் பி.ஏ.எஸ்., அருகில் தூயமணி



புதுதில்லி நாடாளுமன்றத்தில் - ஒய்.பி. சவான் - ஜெகஜீவன்ராம் மற்றும் நாராயணனுடன் பெரியவர் பி.ஏ.எஸ்.



தலைநகரில் - பிரதமர்
இந்திராகாந்தி இல்லத்தில்
அம்மையாருடன்
ஈரோடு எஸ். பழனியப்பன்,
பாப்பக்கா அத்தை,
அம்மணி, மகன் அன்பு,
சம்பூரணம், வெற்றிச்செல்வி,
வில்வவனம் ஆகியோருடன்
பெரியவர் பி.ஏ.எஸ்.



தலைநகரில் பேரறிஞர் அண்ணா அவர்களுடன்
சாதனைச் செம்மல் பி.ஏ.எஸ். அவர்கள்



[illegible]



[illegible]



1975 - கோவை மாநில மாநாட்டு மேடையில்
கலைஞர், நாவலர், செ. கந்தப்பன், ப.உ.சண்முகம், சத்தி S.G. [illegible]
ஆகியோருடன் பெரியவர் பி.ஏ.எஸ்.



1975 - கோவை மாநில மாநாட்டிற்கு வருகைதந்த
கலைஞர் அவர்களுக்கு பி.ஏ.எஸ். அவர்கள்
மாலை அணிவித்து வரவேற்றல்



கழக நிகழ்ச்சி ஒன்றில் கலைஞர், மு.கண்ணப்பன், சுப்புலட்சுமி ஜெகதீசன்,
பி.எ.எஸ்., மு.க. ஆறுமுகம், பி.எஸ். சீதாராமன்



1975 - கோவை மாநில மாநாட்டு மேடையில்
கலைஞர் மற்றும் பேராசிரியருடன் பி.ஏ.எஸ்.



1975 - கோவை மாநில மாநாட்டின் முகப்பில்
தி.மு.கழக அன்பர்கள்



புன்செய்ப் புளியம்பட்டியில் அண்ணல் காந்தியடிகள் சிலைத் திறப்பு விழா
நிகழ்ச்சியில் பேரறிஞர் அண்ணாவுடன் பி.எஸ். சீத்தாராமன்,
ஈரோடு Dr. சேது பாஸ்கரன், ஈ.வி.கே. சம்பத், சென்னை பொன்னம்பலனார்
ஆகியோருடன் பெரியவர் பி.எ.எஸ். அவர்கள்

293



பி.ஏ.எஸ். அறக்கட்டளை சார்பில் வசதியற்ற மகளிர்க்கு
தையல் இயந்திரம் வழங்கும் விழாவில் பி.ஏ.எஸ்.



தன் இல்லத் திருமண விழாவில்
பி.ஏ.எஸ். தன் உறவினர்களுடன்

294



1975 - கோவை மாநில மாநாட்டின்போது எடுத்தபடம்.
கலைஞர், எஸ்.ஜெ. சாதிக்பாட்சா, பா.கோ குமாருடன் பி.ஏ.எஸ்.



கோவையில் நடைபெற்ற கழக நிகழ்ச்சியில் பேராசிரியர் அன்பழகன், தலைமைக்கழகப் பேச்சாளர் ப.கோ. குமாருடன் பி.ஏ.எஸ். அவர்கள்



28-11-1960 -இல் பி.ஏ.எஸ். திருமணத்தில்
வாழ்க்கைத் துணை சம்பூரணம்



1992-இல் 'மணிவிழா'வின்பொழுது
பி.ஏ.எஸ். அறக்கட்டளை சார்பில் கல்வி உதவித் தொகை வழங்குதல்



பி.ஏ.எஸ். - சம்பூரணம் இணையருடன் மாணிக்கம் மகள் கலைச்செல்வி, மகள்கள் வெற்றிச்செல்வி, மணிமேகலை, மகன் அன்பு ஆகியோர்



பி.ஏ.எஸ். - சம்பூரணம் இணையருடன் மகள் இராணி, தங்கை மாணிக்கம் மகள் கலைச்செல்வி



மதுரை மகளிர் மாநாட்டில்
மணியம்மையாரின்
திருவுருவப் படத்தினைப்
பெரியவரின் துணைவியார்
சம்பூரணம் சாமிநாதன்
அவர்கள் திறந்து வைத்துச்
சிறப்பித்தல்

2010-இல் புளியம்பட்டி
நகரத்
தி.மு.கழகத்திற்காகப்
பெரியவர் பி.ஏ.எஸ்.
அவர்கள் தன் சொந்தப்
பொறுப்பில் வாங்கித்
தி.மு.கழகத்தின் பொதுச்
செயலாளர்
பேராசிரியரிடம்
ஒப்படைக்கப் பெற்ற
கட்டடம்



298



அன்றைய இந்தியக்
குடியரசுத் தலைவர்
வி.வி.கிரி அவர்களுடன்
நாடாளுமன்ற உறுப்பினர்
பெரியவர் பி.ஏ.எஸ்.
அவர்கள்.



அண்ணா அறிவாலயத்தில் கலைஞர், பேராசிரியர், ஆற்காடு வீராசாமி,
தளபதி மு.க.ஸ்டாலின், என்.கே.கே.பெரியசாமி
ஆகியோருடன் பி.ஏ.எஸ்.

299



மிசாக் காலத்தில் கலைஞர் அவர்களிடம் ஒன்றியப் பொறுப்பிலிருந்த
சம்பூரணம் சாமிநாதன் அவர்கள் தேர்தல் நிதி வழங்குதல்.
அருகில் மேனாள் அமைச்சர் மு. கண்ணப்பன், சி.டி. தண்டபாணி



மணிவிழாவின்பொழுது மணிவிழா நாயகர்களுடன்
அறிஞர் அண்ணாவின் துணைவியார் இராணியம்மையார்



மணிவிழாவில் திராவிடர் கழகத் தலைவர்
ஆசிரியர் கி. வீரமணி அவர்கள்



மொழிப்போரின்
பொழுது சட்ட எரிப்பு
நிகழ்ச்சியில் திரு.வி.க.
திடலில் **சம்பூரணம்**
சாமிநாதன்
அவர்களுடன் நெருநகர்
தங்கம்மாள் விசுவநாதன்
அவர்களும்
பங்கு பெற்றவரும்.



புன்செய்ப் புளியம்பட்டி கெ.ஒ.ம. அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி நிகழ்ச்சியில் - புரவலர் பி.ஏ.எஸ். அவர்களுக்குப் பேராசிரியர் சால்வை அணிவித்துச் சிறப்பித்தல்



புன்செய்ப் புளியம்பட்டி அண்ணா சிரணிக் கலை அரங்கத்தில் நடைபெற்ற கழக நிகழ்ச்சியில் தளபதி ஸ்டாலினுடன் பெரியவர் பி.ஏ.எஸ்.



பேரூராட்சி மன்ற நிகழ்ச்சியில் அன்றைய தலைவர் பு.கா. ஆறுமுகம்
அன்றைய அமைச்சர் எஸ்.ஜெ. சாதிக்பாட்சா அவர்களுடன் பி.ஏ.எஸ்.



பேரூராட்சி மன்ற நிகழ்ச்சியில், அன்றைய தலைவர் பி.எஸ்.சீத்தாராமன்
கோவை மு. இராமநாதன், சாதிக்பாட்சா, கோபி வழக்குரைஞர் கு.ச. ஆனந்தன்
மணிவிலாஸ் சுப்பிரமணியம் ஆகியோருடன் பி.ஏ.எஸ்.



பேராட்சி மன்ற நிகழ்ச்சியில் கோபி கு.ச. ஆனந்தன்,
கோவை மு. இராமநாதன், சாதிக்பாட்சா ஆகியோருடன் பி.ஏ.எஸ்.



பேராட்சி மன்ற நிகழ்ச்சியில் கோவை மு. இராமநாதன்,
சென்னிமலை இலட்சுமியம்மாள், சாதிக்பாட்சா மற்றும் கழக வழக்கறிஞர்
மு.வரதராஜன் ஆகியோருடன் பி.ஏ.எஸ்.



கே.வி.கே. அரசு ஆண்கள் மேனிலைப்பள்ளி விழாவில் பெரியவர் பி.ஏ.எஸ். அவர்களுக்கு வரவேற்பு அளித்தல். அருகில் ஆசிரியர் செ.கி. இளங்கோவன், குருசாமி, தலைமையாசிரியர் வேலுச்சாமி மற்றும் கி.தங்கவேலு உள்ளனர்.



கே.வி.கே. அரசு ஆண்கள் மேனிலைப்பள்ளியில் பயிலும் ஏழை மாணவர்களுக்கு இலவச நோட்டுப் புத்தகங்கள் வழங்கிச் சிறப்பித்த பெரியவர் பி.ஏ.எஸ். அவர்களுடன் கி. தங்கவேலு மற்றும் ஏனைய ஆசிரியர்கள்

கல்வி உதவித்தொகை வழங்குதல்



கல்வி உதவித்தொகை வழங்குதல்





மணிவிழாவில் கலந்துகொண்ட முக்கிய பிரமுகர்கள்



புளியம்பட்டி தி.மு.கழக அலுவலகத் திறப்பு விழாவன்று
கல்வி உதவித்தொகை வழங்குதல்



புளியம்பட்டி தி.மு.கழக அலுவலகத் திறப்பு விழாவன்று
ஊனமுற்றோருக்கு நிதியுதவி



புளியம்பட்டி தி.மு.கழக அலுவலகத் திறப்பு விழா நிகழ்ச்சியில்
பேராசிரியருடன் பெரியவர் பி.ஏ.எஸ். - டாக்டர். எம். செந்தில்நாதன்

308







AYYAN THIRUVALLUVAR COLLEGE OF ARTS & SCIENCE

SELLAPPAMPALAYAM, P. PULIAMPATTI - 638 459, COIMBATORE (DT.)

✆ 04295 - 269292. 98429 35922, 99658 10000

Course Offered

BBM, BCA, B.Com.(CA), B.Sc.(CS), M.Com.(CA)





BAVANI HIGHER SECONDARY SCHOOL

(Approved by Tamilnadu Govt.)

SELLAPPAMPALAYAM, P. PULIAMPATTI - 638 459, COIMBATORE (DT.)

✆ 04295 - 269390. 99658 10000

6th to 12th Std. Tamil & English Medium



ZEENO. 99650 47082